வெள்ளலூர் நாடு

வரலாறு

கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன்

வெளியீடு
வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம்
வெள்ளலூர் நாடு

நூல் விபரம்

நூல் பெயர்	:	வெள்ளலூர் நாடு வரலாறு
ஆசிரியர்	:	கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு 2018 (இணையம்)
பக்கங்கள்	:	300
அளவு	:	24 X 19 செமீ.
உரிமை	:	நூல் ஆசிரியருக்கே

அச்சிட்டோர் : ஆப்பிள் பிரிண்டர்ஸ்

எண் : 18, வைத்தியநாதன் ஐயர் முதல் தெரு,

செனாய் நகர், மதுரை - 600 020.

தொலைபேசி எண் : +91 452-4500 977

அலைபேசி எண் : +91 9488 460 977

பதிப்புரிமை மற்றும்

தொடர்புக்கு : மு.ராதாகிருஷ்ணன்



ஆசிரியர்

1/436, உறங்கான்பட்டி அஞ்சல்,

மேலூர் வட்டம்,

மதுரை மாவட்டம் - 625 109

அலைபேசி எண் : +91 94860 61394

ஆசிரியர் உரை

வெள்ளலூர் நாடு, சுற்றி கள்ளர் நாடுகள் மையத்தில் அமைந்த ஒரு குறுநில நாடு. இந்நாட்டு மக்களின் கலாச்சாரம் பண்பாடு ஆன்மீகம் பல தரப்பினரால் பாராட்டப்பட்டு வருகிறது. சோழநாட்டிலிருந்து எவ்வாறு இங்கு வந்தார்கள்? எப்படி இந்த குறுநில பகுதியை உருவாக்கினார்கள்? இந்த மக்களின் வாழ்க்கை முறை, ஆட்சியாளர்கள் மக்களாட்சி தத்துவத்தில் சுழற்சி முறையில் தேர்வு செய்தல், நீதிக்கு முதலிடம் கொடுப்பது. சிறுபான்மையினரின் பாதுகாப்பு, ஆன்மீக உணர்வுகள், நிர்வாக முறை ஆகியவைகளைப்பற்றி ஆய்வு செய்து இவ்வுலகுக்கு அறிய வைப்பதே இந்நூலின் தலையாய நோக்கம். கிடைத்த செய்திகள் ஆதாரங்களை வைத்து ஆய்வு செய்து கூறுகின்ற ஆய்வுக்கோர்வைதான் இந்த நூல். இதில் மாற்றுக்கருத்தோ முரண்பாடோ ஏற்படுமாயின், ஆதாரங்களுடன் தெரிவித்தாலோ, வெளியிட்டாலோ சான்றோர்களுடன் கலந்தாலோசித்து ஏற்புடையாதாயிருப்பின், வரும் பதிப்புகளில் வெளியிடப்படும். இது ஆரம்ப முயற்சிதான். இறுதி முடிவல்ல.........

நான் சிறுவயதினராக இருக்கும்போது வெள்ளலூர் நாடு என்று கூறுகிறார்களே, அந்த நாட்டில் நாம் வாழ்கிறோமே, அப்படியென்றால் தமிழ்நாடு வேறு, வெள்ளலூர் நாடு வேறு என எண்ணத் தோன்றியது. நான் வளர வளரத்தான் எனது மண்ணின் வாசனையையும், பண்பாட்டின் இலக்கணத்தையும் உணர ஆரம்பித்தேன். சிறந்த கலாச்சாரம் கொண்ட வெள்ளலூர் நாட்டிற்கு ஏன் வரலாறு இல்லை என யோசனை செய்தேன் புரியவில்லை. ஏன்? எனக் கேட்டால் என் கேள்விக்கு பதிலில்லை. அந்த கேள்விதான், என்னை வரலாற்றைப்பற்றி கதை கேட்க ஆரம்பிக்க வைத்தது.

எனது அய்யா கட்டக்காளை உறங்கான்பட்டி தெய்வத்திரு.க.சோ.வேலாயுதம் இளங்கச்சி அம்பலம் அவர்கள் வயலுக்கு செல்லும்போதும், வரும்போதும் நான் கேட்க, கதைகளை கூற ஆரம்பித்தார். எங்களது வண்ணாத்தி வயல் ஊரிலிருந்து சுமார் 3 கி.மீ. அவருடைய வார்த்தைகள்தான் வரலாற்றிக்கு அடிப்படைக்கட்டமைப்பு ஆனது.

இக்காலக்கட்டத்தில் மத்திய அரசுப்பணி கிடைத்து, பணிக்கு சென்றுவிட்டேன். அவ்வப்போது சரித்திர சம்பந்தமான சான்றுகள் கிடைக்கும்போது குறித்தும் எடுத்தும் வைத்துக்கொண்டேன்.

பணி ஓய்வுக்கு பின் ஊருக்கு வந்திருக்கும்போது எதார்த்தமாக, வெள்ளலூர் நாட்டு இளைஞர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது, ஏன் நீங்கள் வெள்ளலூர் நாட்டு சரித்திரத்தை எழுதக்கூடாது? என இளைஞர்கள் கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையை நாட்டுதெய்வங்களின் உத்தரவாகவும், ஆசியாகவும் எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தேன். இதில் ஆச்சரியம் என்னவென்றால் கடந்த 38 வருடமாக ஆங்கிலத்தில்தான் அலுவலகப்பணி. தமிழ் இலக்கியத்திலும் பெரிய ஈடுபாடு இருந்தது இல்லை. படிக்கும் காலத்திலும் சராசரி மாணவன்தான்.

மதுரையில் உள்ள வீட்டிலிருக்கும்போது, ஓர் இரவு தூக்கமே வர மறுக்க, சரி குறித்து வைத்த வரலாற்றுக் குறிப்புக்களைப் பார்ப்போம் என்றுதான் ஆரம்பித்தேன். எப்படி, எப்பொழுது, எழுத ஆரம்பித்தேன் என்றே எனக்கு தெரியவில்லை. என் காதில் யாரோ தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பது போன்ற உணர்வு. வரலாற்றின் ஆரம்ப கட்டத்திலிருந்து இன்றைய வரை மேலோட்டமாக

எழுதியிருந்தேன். அப்போழுது என் மனைவி எழுந்து வந்து, நீங்கள் இன்னும் தூங்க வில்லையா? என கேட்டவுடன் நான் சாதாரண நிலைக்கு வந்தேன். சுவர்க் கடிகாரத்தைப் பார்க்கிறேன். நேரம் காலை 7 மணி. சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவன், இதயநோய் உள்ளவன். கிட்டத்தட்ட 8 மணி நேரமாய், சிறுநீர் கழிக்கவில்லை ஆனால் இரண்டு லிட்டர் தண்ணீர் குடித்துள்ளேன். உட்கார்ந்து கொண்டே எழுதியதால் இரண்டு காலும் வீங்கி அடையாளம் தெரியாமல் போய்விட்டது.

இத்தனையும் எதற்கு சொல்கிறேனென்றால், சரித்திர ஆசிரியர்கள் ஆதாரங்களை தேடிக்கண்டு பிடித்து விட்டு அதை கோர்வையாக கொண்டு வந்து எழுதுவார்கள் என்றே கேள்விப்பட்டுள்ளேன். நான் வரலாற்றை எழுதிவிட்டு ஆதாரங்களை தேடினேன். வெள்ளலூர் நாட்டின் சரித்திரத்திற் கேற்றவாறு கிடைத்த சரித்திர நூல்கள், கிடைத்த ஓலை முறிகள், செவி வழிச்செய்திகள், இன்றைய நடைமுறைப்பழக்க வழக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளதை என மிகத்தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் எனது பங்கு பெரிதும் இல்லை. இந்த வரலாற்றைப் படிக்கும் வாசகர்களுக்கு பாடமாக இருப்பதை எண்ணி பெருமகிழ்வடைகிறேன்.

அண்டி வந்தோரை ஆதரித்தும், அவர்களுக்கு நிலையான இடம் கிடைக்க காரணமாயிருந்தவருமானவரும், வெள்ளலூர் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் முக்கிய பொறுப்பு ஏற்றவரும், நீதியின் பெருமையை நிலை நாட்டியும், சிறுபான்மையினர் நலத்தில் எப்பொழுதுமே தனது எண்ணமாய்க் கொண்டு செயலாற்றி வந்தவரும், ஒரு வழக்கில் சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்காவிடில், ஆறுபேர் மக்களாலும் நாலுபேர் மக்களாலும் கொண்ட இந்நாடு உடைந்து இரண்டாகிவிடும் என்ற எண்ணத்தில், ஆறு ஆறுதான் நாலு நாலுதான் என கர்ஜித்த, எனது பாட்டனான மாவீரன் கட்டக்காளை அம்பலகாரர் அவர்கட்டும். இந்நாளில் எங்களது கட்டக்காளை வகையறாவின் பெருமையை தெரியவைத்தவரும், தன் மூத்த மகனாகவே பாவித்து என் வளர்ச்சியில் பெருமிதம் கொண்ட எனது அய்யா கட்டக்காளை தெய்வத்திரு.க.சோ.வேலாயுதம் இளங்கச்சி அம்பலம், உறங்கான்பட்டி அவர்களுக்கும் எனது பாசமிகு மைத்துனர் தெய்வத்திரு.மு.சண்முகம் அம்பலகாரர் உறங்கான்பட்டி அவர்களுக்கும் எனது தந்தை க.பெரி முத்தையா அம்பலம், தாய் கண்ணம்மாள் அம்மாளுக்கும், எனது மூத்த புதல்வன் என்றும் நினைவில் வாழும் ராஜேஸ் கண்ணன், (கணிணி வல்லுனர், விரிவுரையாளர்) அவர்களுக்கும் இந்த நூலை சமர்ப்பிக்கிறேன்.

வெள்ளலூர் நாட்டு வரலாற்று நூலை சமர்ப்பித்து, இந்நாட்டின் புகழினை பெருமைகளை நினைவு கூர்ந்து இந்நாட்டின் வாழும் பிரஜையில் ஒருவனாக்கிய எனது நாட்டின் தெய்வங்களை வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வாழ்வில் உறுதுணையாக இருந்து, இந்நூல் எழுதும் போது அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய என் மனைவி சற்குணத்திற்கும், இளையபுதல்வன் விஜய் ஆனந்திற்கும் வழக்கறிஞர் அவர்களுக்கும், மகளில்லா குறையை தீர்க்க வந்த மருமகள் சுதந்திரா தேவி M.A., M.Phill, Sub Inspector of Police அவர்களுக்கும், எனது பேரன்கள் செல்வன்.ருத்ரவேலன் மற்றும் மணிபாரதிக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சோர்ந்து போன நேரத்தில் எல்லாம், எனக்கு தைரியம் சொல்லி, இந்நூலை தொடர்ந்து எழுத எனக்கு உற்சாக மூட்டிய திரு.ம.ராமையா (சூறாவளி, வேங்கைப்புலி கரை) உறங்கான்பட்டி, திரு.கி.கதிரவன் (சிட்டன், சாயும்படைதாங்கி கரை) புலிமலைப்பட்டி, திரு.சுப.கிட்டு (எ) கிருஷ்ணன் அம்பலம் (நரியன் வகை, செம்புலி கரை) குப்பச்சிப்பட்டி, திரு.நாட்டார். செ.வீ.ராஜ்குமார் அம்பலம் (நண்டன் கரை), அமைப்பாளர், வெள்ளலூர் நாட்டு இளைஞர் நற்பணி இயக்கம், கூட்டுறவுபட்டி மற்றும் இவர்களோடு இணைந்து இந்நூலை சிறப்பாக அச்சிட்டு, நூலாக்கி வெளியிட எனக்கு பேருதவி செய்த, எனது உறவினரும், நண்பருமான திரு.இரா.மணிகண்டன் அம்பலம் ஆப்பிள் பிரிண்டர்ஸ் (மதுரை மற்றும் சிவகங்கை) அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவ்வப்போது அரிய ஆலோசனைகளை வழங்கி ஊக்கமளித்த திரு.க.கருப்பையா அம்பலகாரர் (கோப்பன் கரை) பழையூர்பட்டி மற்றும் திரு.க.பாண்டி அம்பலம் (தலைமை, நிர்வாக அதிகாரி, ஓய்வு) திருமான் கரை, கன்னிமார்பட்டி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துகொள்கிறேன்.

மேலும் இந்நூலில் அலங்கரித்துள்ள அம்பலகாரர்கள், கோவில்கள், மற்ற நிகழ்ச்சிகள் போட்டோக்கள் மற்றும் இதர அனைத்து போட்டோக்களும் தந்து உதவிய திரு.ஆ.சிவராமன், சுமங்கலி வீடியோஸ் உறங்கான்பட்டி அவர்களுக்கு நன்றியை தெரிவிக்கிறேன். மேலும் நான் கேட்டவுடன் .இது எனது கடமை, தொண்டு, என மகிழ்ச்சியுடன் கூறிய மாப்பிள்ளை சிவராமனின் நல்ல உள்ளத்துக்கு மீண்டும் ஒரு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

வெள்ளலூர் நாடு என்ற பகுதி மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வெள்ளலூர் உள்வட்டம், சிவகங்கை வட்டம் இடையேமேலூர் உட்வட்டத்திற்குட்பட்ட மலம்பட்டியை சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சிவகங்கை வட்டம் ஒக்கூர் பிரிக்காவிற்கு உட்பட்டு கள்ளராதினிப்பட்டி கிராமம் உள்ளடக்கிய பகுதிகளேயாகும்.

இந்நூல் மூலம் வரும் நிதிகள் யாவும் கல்வி மேம்பாடு மற்றும் பொது நோக்கம் கொண்ட சேவைகளுக்கு மட்டுமே பயன் படுத்தப்படும்.

கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன்

- ஆசிரியர் -

ஊக்கம் அளித்தவர்கள்

1. திரு.ம.ராமையா அம்பலம் (சூறாவளிவகையரா) வேங்கைப்புலி, உறங்கான்பட்டி
2. திரு.கி.கதிரவன் அம்பலம் (சிட்டன் வகையறா) சாயும்படைதாங்கி, புலிமலைப்பட்டி
3. திரு.சுப.கிட்டு(எ)கிருஷ்ணன் அம்பலம், (நரியன் வகையறா) செம்புலி, குப்பச்சிப்பட்டி
4. திரு.பெ.மு. நாராயணன் அம்பலம் (திருமான்கரை), கள்ளராதினிப்பட்டி
5. திரு.கா.ம.கருப்பையா அம்பலம் (சலுப்புலி உறங்கான்) பூசாரி, உறங்கான்பட்டி
6. திரு.மு.நீலமேகம் (எ) பாண்டி அம்பலம் (கட்டக்காளை வகையறா) நய்க்கான் கரை, உறங்கான்பட்டி
7. திரு.வே.பார்த்திபன் அம்பலம் B.Sc., (கட்டக்காளை வகையறா) நய்க்கான் கரை, உறங்கான்பட்டி
   (K.S.V. Constructions & Contractors) துபாய்
8. திரு. சொ.பத்மநாபன் அம்பலம் M.A., M.Ed., (சலுப்புலி கரை) உதவி கல்வி அலுவலர் (ஓய்வு), பழையூர்பட்டி (இ) கோட்டநத்தம்பட்டி
9. திரு.K.கந்தசாமி அம்பலம் BE., (Mech.,) உறங்கான்பட்டி
10. திரு.சிவ.திருநாவுக்கரசு அம்பலம் (வேங்கைப்புலி கரை), அய்யமுத்தன்பட்டி
11. திரு.இரா.மணிகண்டன் அம்பலம் (வெக்காலி கரை) அல்லூர், (ஆப்பிள் பிரிண்டர்ஸ், மதுரை)
12. திரு.K.நீதிதயாளன் அம்பலம் (எ) ராஜா அம்பலம் (மூண்டவாசி கரை),தலைமைக்காவலர் (ஓய்வு) காவல்துறை V.மலம்பட்டி
13. திரு.M.ராமையா அம்பலம் Ex.கவுன்சிலர், அம்பலகாரன்பட்டி
14. திரு.M.வல்லப்பன் அம்பலம் B.Com., குப்பச்சிப்பட்டி, (இ) மதுரை
15. திரு.ரா.ரவிச்சந்திரன் அம்பலம் (நய்க்கான் கரை) ரைஸ்மில், கோட்டநத்தம்பட்டி
16. திரு.நாட்டார்.செ.வீ.ராஜ்குமார் அம்பலம் (நண்டன் கரை), கூட்டுறவுப்பட்டி
17. திரு.M.தனபாலன் அம்பலம் (வேங்கைப்புலி கரை), பெ.ஒக்கப்பட்டி
18. திரு.M.திருமுருகன் அம்பலம் (சாயும்படை தாங்கி கரை), முத்தம்பட்டி
19. திரு.R.சிவராமன் அம்பலம் B.E., (நண்டன் கரை), குறிச்சிப்பட்டி
20. திரு.M.அழகுபாண்டி அம்பலம் (மூண்டவாசி கரை), V.மலம்பட்டி
21. திரு.P.செல்லபாண்டி அம்பலம் (சமட்டி கரை), கோட்டநத்தம்பட்டி
22. திரு.ப.பழனிக்குமார் அம்பலம் (சலுப்புலி கரை), பழையூர்பட்டி (இ) கோட்டநத்தம்பட்டி
23. திரு.ஆ.மகாலிங்கம் அம்பலம் (திருமான் கரை) அன்பு டிராவல்ஸ், வெள்ளலூர்
24. திரு.மு.முத்துலிங்கம் அம்பலம் (வெக்காலி கரை), வெள்ளலூர்
25. திரு.B.நாகராஜன் அம்பலம் (வெக்காலி கரை) சோனைபட்டி
26. திரு.R.வெங்கடேசுவரன் அம்பலம், (மூண்டவாசி கரை) மேலவளசை.
27. திரு.B.செல்வம் அம்பலம் (சமட்டி கரை) பழையூர்பட்டி வெல்கம் பேக்கரி, கோட்டநத்தம்பட்டி

வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம்

நிர்வாகிகள், உறுப்பினர்கள்.

பொறுப்புரை

வெள்ளலூர் நாடு, நாட்டுக்குள்ளே ஒரு நல்ல நாடு என சான்றோர்கள் கூறியதை அறிந்திருந்தேன். மற்ற கள்ளர் நாடுகளைப்பற்றி எழுதப்பட்டு வருகிறதே, நமது நாட்டைப்பற்றி ஏன் யாரும் வரலாறு எழுதவில்லை என்ற ஆதங்கம் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. அந்நாட்டைச் சார்ந்த நான் ஏன் முயற்சி செய்யக்கூடாது என்ற எண்ணம் தோன்றிது.

நான் மத்திய அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் அதற்கான காலம் கனிந்து வந்தது போல் உணர்ந்தேன். உடனடியாக வெள்ளலூர் நாட்டு வரலாற்றுப் பாதையில் பயணிக்க ஆரம்பித்தேன்.

திருவாளர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் கள்ளர் சரித்திரம் என்ற நூல்தான் எனது பயணத்திற்கு வழி காண்பிக்க ஆரம்பித்தது. கல்வெட்டுக்களை ஆராயும் இந்திய அரசு அதிகாரி திரு. வெங்கல்ராவ் என்பவரின் குறிப்பில் தஞ்சைக்கு கிழக்கே வழுத்தூரிலிருந்து தெற்கே ஒரு கள்ளர்குழு புறப்பட்டதாக ஒரு வரலாறு உண்டு என்று குறிப்பிடுகிறார். இது 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதி. இந்த ஒரு நூலைப்பிடித்து கொண்டுதான் பிரயாணத்தைத் தொடங்கினேன்.

மற்ற மக்களை விட வெள்ளலூர் நாட்டு மக்கள் வாழ்க்கை சற்று வித்தியாசமான முறையாக இருப்பதைக் கவனிக்கும் போது, இவர்கள் அரசப்பரம்பரையின் ரத்த மரபு இருப்பதற்கான எண்ணம் மேலோங்கியது. வெள்ளலூர் நாட்டை நிர்வகிக்கும் முறையே நமக்கு புரியவும் வைக்கிறது.

எந்தவொரு சூழ்நிலையிலும் முரட்டுத்தனமான கோபம் கொள்வதில்லை. கொலை, கொள்ளை நடப்பதே அரிதாக இருந்தது. வழக்குகளில் வழக்கின் தன்மையை ஆராய்வது, வாய்தா தருவது, தீர்ப்பு சொல்வது ஆகியவை இவர்களின் உயர்ந்த பண்பை காண்பிக்கிறது. சத்தியம், நேர்மை, நீதி இவர்களின் உயிர் மூச்சாக இருந்து வந்துள்ளது. எந்தவொரு பிரச்சினையாயிருந்தாலும் காவல் நிலையத்துக்கு செல்லாமல், இவர்களுக்குள்ளே பங்காளி கூட்டம், கிராமக்கூட்டம் நாட்டுக்கூட்டம் என்ற வகையில் கேட்டு தீர்த்துக்கொள்வதே மரபாக இருந்து வந்துள்ளது.

பெரியவர்கள் தங்களைப்பற்றி, கதைகளை கூறும்போது, நமது முன்னோர்கள் சோழ நாட்டிலிருந்து இங்கு வந்தவர்கள். அரண்மனைகளில் வாழ்ந்து வந்ததாகவும், அரச பட்டத்துக்கான போட்டியில் அதிகாரம் நிறைந்தவர்களால் விரட்டியடிக்கப்பட்டு, தனது தாய் வழி நாடான பாண்டிய நாட்டிற்கு வந்ததாகவும் வரலாறு இருக்கிறது. சோழ நாட்டில் வாழ்ந்து வந்த கள்ளர்களுக்குள் ஆதிக்கப்போட்டியில் முரண்பட்டு வெளியேறி சிலர் வந்ததாகவும் பாண்டிய நாட்டைசோழர்கள் ஆளும்போது அரசுக்கு உதவி-யாக இங்கு வந்து தங்கி விட்டதாகவும், சிலர் விரட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சோழநாட்டில் தொடர்ந்து பஞ்சம் ஏற்பட்டதால், சிலர் வெளியேறி பிழைக்க பாண்டிய நாட்டிற்கும் புலம் பெயர்ந்ததாக கூறப்படுகிறது. வான்பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரியாறு என கவிஞர்கள் பாடியுள்ளார்கள். அதனால் பஞ்சம் என்ற கூற்றை ஏற்பதாக இல்லை.

வெள்ளலூர் நாட்டுக்கள்ளர்கள் சத்தியம் நீதி, நேர்மைக்கு உழைப்பவர்கள் என்பதை காலம் காலமாக பேசப்பட்டு வருவதால், இம்மக்கள் அரச வம்சாவளி என்பதை எடுத்துக்கொள்வதே சரியாக இருக்கும் என்று எண்ணியே இந்த வரலாற்றை எழுத முயற்சித்தேன். எந்தவொரு பெரிய ஆவணங்கள் கிடைக்காததாலும், கிடைத்த ஆவணங்கள், செவி வழிச்செய்திகள், நடைமுறைப்பழக்க வழக்கங்கள், ஆன்மீக வழிபாட்டுமுறை இவைகளைப் பின்பற்றியும், சில வரலாற்று நூல்கள், சில செய்தித்தாள்களில் வந்த செய்திகள், கட்டுரைகள் இவைகளிலிருந்து விஷயங்களை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த வரலாற்று நூல் எழுத முயற்சிக்கப்பட்டது.

எந்தவொரு செயலும் வெற்றிபெற வேண்டுமானால் இறைவனின் ஆசியும் துணையும் வேண்டும். எனவே நாட்டுத்தெய்வங்களான ஸ்ரீ ஏழைகாத்த அம்மன், ஸ்ரீ வல்லடிகார சுவாமி, ஸ்ரீ கருங்கல் மந்தைச்சாமி எனது குலதெய்வங்களான, ஸ்ரீ முத்துப்பிடாரி அம்மன், ஸ்ரீ நாட்டார் மூர்த்தி அய்யனார் மற்றும் எனது தாயின் குலதெய்வமாகிய ஸ்ரீ காளமேகப்பெருமாளையும் மற்ற நாட்டுத் தெய்வங்களையும், ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பனசாமி, ஸ்ரீ மாயாவுதாரர் அவர்களையும் வணங்கி துணைக்கு அழைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தேன். எழுத ஆரம்பித்தவுடன் இக்கதைக்கு என்னோடு இத்தெய்வங்களுக்கும் பொறுப்பும், உரிமையும் உண்டு. ஏனென்றால் அவர்களும் என்னோடு இந்த நாட்டு வரலாறுக்காக எனக்கு வழி காண்பித்து, என் முன்னே செல்கிறார்கள். என்பது என் நம்பிக்கை.

வெள்ளலூர் நாட்டின் வரலாற்றைச் சுற்றி ஒரு எல்லைக்கோடு உருவாக்கப்பட்டது. இப்பொழுது எங்கேயிருந்து ஆரம்பித்து, எவ்வழியாக வந்து, எதை சேர்ப்பது, எவ்வாறு முடிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. ஒரு சில பாத்திரங்களும் பெயர்களும் நிகழ்வுகளும் உண்மைச்செவி வழிச் செய்தியின் மூலமே படைக்கப்பட்டுள்ளது. சில வரலாற்று நூல்கள் கட்டுரைகளை ஆதாரமாக வைத்து எழுதும் போது அவ்வாசிரியர்களின் நோக்கமும் எழுத்தின் தன்மையும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அவர்களின் கருத்துக்கள் அப்படியே மாறாமல் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் வரலாற்றின் பெருமை சேரும். அவர்களுக்கு சிரம் தாழ்ந்து திறந்த மனத்துடன் மகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவிக்கிறோன்.

இவ்வரலாற்று நூலில் ஏதேனும் விடுபட்டிருந்தாலோ, தவறாக இருந்தாலோ, பிழை ஏற்பட்டிருந்தாலோ, கவனத்துக்கு கொண்டுவந்தால் ஏற்புடையதாக இருப்பின் வரும் பதிப்புக்களில் இணைக்க முயற்சிக்கிறோம்.

- ஆசிரியர் -

ஆதாரங்கள்

1. திரு.ந.மு.வேங்கடசாமிநாட்டார் - கள்ளர் சரித்திரம்

2. திரு.சு.வெங்கடேசன் - காவல் கோட்டம் (சாத்திய அகாடமி பரிசு பெற்ற நூல்)

3. திரு.வெ.வேதாச்சலம் - பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள் (தொல்லியல் அறிஞர்)

4. திரு.சாந்தலிங்கம் - கட்டுரை, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வுமையம் மதுரை

5. திரு.இரா.சுந்தரவைத்தியதேவன் - பிறமலைக்கள்ளர் வாழ்வும் வாழ்வியலும்

6. தி இந்து மற்றும் தினமலர் தமிழ் நாளிதழ்களின் செய்திகள் மற்றும் கட்டுரைகள்.

7. திரு.P.ரத்தினசாமி - ஆண்ட வம்சம், வரலாறு (பிறமலைக்கள்ளர்)

8. திரு.சி.மருதுசாமியின் - நாட்டுக்கோவில் ஆய்வுக்கட்டுரை.

அணிந்துரை

கடந்தகால வரலாறு தெரிந்தால்தான், நிகழ்கால சிக்கல்களுக்கு தீர்வு கண்டு எதிர்காலத்தை சிறப்பாக்கி கொள்ள முடியும். வளம் என்பது பூமியால் வருவது அன்று, அது பண்பட்ட மக்களால் வருவது வரலாறு தெரிந்தால் தான் பண்பட்டவர்களாக உருவாக முடியும். அதனால் தான் புரட்சிக்கவி பாரதி கூட புதிய ஆத்திச்சூடியில் **சரித்திரத் தேர்ச்சி கொள்** என்கிறார்.

வரலாறு எவ்வளவுக்கு நீளமாகவும், ஆழமாகவும் வளத்துடனும் ஓடுகிறதோ, அவ்வளவுக்கு அது பாயும் நாட்டிலே கலை வளரும், பண்பு செழிக்கும், அறிவு ஓங்கும், வலிமை பிறக்கும் என்பது உறுதி.

மக்கள் அறிந்ததே சரித்திரம், அவர்கள் ரத்தத்தோடு ரத்தமாக கலந்து விட்ட நினைவுகளே சரித்திரம். நாம் நீர்க்குமிழிகள் அல்ல, வடியாத பெருவெள்ளத்தின் துளிகள் நாம். அற்ப வாழ்வுடைய தனிமனிதர் அல்லர். அழிவற்றதோர் பரம்பரையின் உறுப்பினர் நாம். நேற்று இருந்தோம். இன்று இருக்கிறோம். நாளைக்கும் இருப்போம் என்று தோள் தட்ட தூண்டுவதே சரித்திரம்.

நமது சரித்திரத்தை காலங்காலமாகக் கட்டி காத்து வருபவர்களே நமது ஞான பரம்பரையினர் ஞானம் என்ற சொல்லுக்கே கட்டிக்காத்தல் என்று தான் பொருள். பரம்பரையில் பெறுவதைத்தான் நாம் சிறப்பாக ‘ஞானம்‘ என்று கொள்கிறோம். ஞானத்தை இறையருள் பெற்ற சான்றோர்கள். தம் அனுபவத்தை தங்கள் பிள்ளைகளுக்குச் சொன்னார்கள். அந்தப்பிள்ளைகளும், அந்த அனுபவத்தை பெற்று தம் பரம்பனையினருக்கு ஞானத்தை பெற கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை எடுத்துச்சொல்லி காப்பாற்றி வந்தார்கள். இந்தப்பரம்பரையில் வந்தவர்களில் பலர் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளை உருவாக்கி கோவில்களை அமைத்து ஆன்மீகத்துக்கு வழி காட்டினார்கள். கலாச்சாரம், பண்பாட்டுடன் திருவிழாக்களை இணைத்து சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி நல்ல முற்போக்கு சிந்தனைகளை தந்து சமுதாய மாற்றம் செய்தார்கள். இத்தகைய சான்றோர்களின் வரலாற்றுப் பெருமையினையும், அவர் தம் வாழ்வின் சிறப்புக்கள் கடைபிடித்த நெறிகள், அருளிய கருத்துக்கள், சீரிய சிந்தனைகள் ஆகிய அனைத்தையும் நாம் அறிந்து போற்றும் வகையில் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

அறநெறியில் நின்று பூமிதனில் தர்மம் தழைக்கப் பாடுபட்டு முடிவில்லாக் கீர்த்தி பெற்று, புவிக்குள்ளே முதன்மையுற்ற வெள்ளலூர் நாட்டின் தர்மத்தின் தவப்புதல்வர்களைப் பற்றியும் முன்னிலைப்படுத்தி பேசப்படுகிறது. இந்நூல் ஒவ்வொரு இல்லத்திலும் படித்து, பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாக கருதப்படவேண்டும். இந்நூலை எழுதிய திரு.மு.இராதாகிருஷ்ணன் அவர்களை வாழ்த்தி, மேலும் இந்நூல் நல்லமுறையில் அடுத்த தலைமுறையை வழி நடத்தும் என்பதில் எவ்வித ஐயமில்லை. மேலும் இந்நூலை படித்து நாட்டின் நடைமுறைகளை தெரிந்து ஒற்றுமையுடனும், வலிமையுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி,

இரா.மணிகண்டன் M.A., D.P.T.,
அல்லூர்

வாழ்த்துரை

மிகவும் தொன்மையான நாட்டின் வரலாற்றை நூலாக பதிவு செய்ய வேண்டும் என்கிற இந்நூலின் ஆசிரியரின் எண்ணத்திற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்களின் முயற்சியில் இந்து திருமணச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, சீர்த்திருத்த திருமணச் சட்டம் அங்கீகாரம் பெற்றது. ஆனால் அதற்கு முன்பாக பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, அதே திருமண முறையை வழக்கமாக வெள்ளலூர் நாட்டு மக்கள் நடைமுறைபடுத்தி வருகிறார்கள். உடன்கட்டை ஏறும் பழக்கம் இந்தியாவில் இருந்த காலத்திலேயே, கணவனை இழந்த பெண்ணை, அக்கணவரின் சகோதரர் திருமணம் செய்து கொள்வது என்கிற வழக்கம், வெள்ளலூர் நாட்டு கள்ளரிடம் அன்றே இருந்து வந்துள்ளது. வரதட்சனை என்பதும் இச்சமுதாயத்தில் இன்று வரை இருந்ததில்லை. இவ்வாறாக சமூக சீர்திருத்த சிந்தனைகளுக்கு முன்னோடியாக திகழ்ந்து வருகின்ற வெள்ளலூர் நாட்டின் வரலாற்றை ஆதாரங்களுடன் இந்நூலின் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளது அனைவரையும் பெருமை கொள்ள செய்கிறது. சொந்த மைத்துனர் ஆனாலும் அவரிடம் உள்ள தவறை சுட்டிக்காட்டி, நியாயத்தை பேசும் திரு.கட்டக்காளை அம்பலகாரரும், தம் உயிரையும் துறந்து நீதிக்கு தலை வணங்கிய திரு.வீரணன் அம்பலகாரர் மற்றும் திரு.அழகு அம்பலகாரர் ஆகியோரும் இந்நூலை படிக்கும் வாசகர்களின் நெஞ்சத்தில் இடம் பெறுவர். அரிய மற்றும் பெரிய முயற்சியில் அதுவும் முதல் முயற்சியிலேயே வெற்றி கண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் திரு. கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,

க.பாண்டி

நீதித்துறை, தலைமை நிர்வாக அதிகாரி (ஓய்வு)

திருமான் கரை, கன்னிமார் பட்டி, மலம்பட்டி மாகாணம், வெள்ளலூர் நாடு

வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன்

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய அடையாளம் என்பது மிகவும் முக்கியமான ஒன்று நம்முடைய அடையாளங்களில் ஒன்று தான் நம் “வெள்ளலூர் நாடு“ கால மாற்றத்தினால் முன்பு இருந்த பல விஷயங்கள் இப்போது முழுவதுமாக மாறிப் போய்விட்டது. என்ன மாற்றங்கள் வந்தாலும் நம் தெிர்கால சந்ததியினருக்கு நம்மால் இயன்ற அளவு நம் முன்னோர்களின் பண்புகளையும், அவர்கள் செய்த நற்செயல்களையும், அவர்கள் கடைபிடித்த நடைமுறைகளையும் எடுத்துக் கூற வேண்டும் இது நம் நாட்டைச் சேர்ந்த அனைவரது கடமையாகும்.

நமக்கும், நம் இளைய தலைமுறைக்கும் இந்த புத்தகம் மாபெரும் பொக்கிஷமாகும். நம்முடைய வரலாற்றை நம் எதிர்கால சந்ததிகள் அறியச்செய்வோம். ‘நம்முடைய அடையாளத்தை பெருமையோடு போற்றிக்காப்போம்‘

S.சுடர்விழிசேதுபதி BE., MBA.,

கன்னிமார்பட்டி (இ) அபுதாபி (U.A.E)

ஸ்ரீ கணபதி

தொந்திக் கணபதியே உனைத்தொழுதேன்
தொடரவிடு நான் எழுதும் கதையை
முந்திப் பிறந்தவனே, மூத்தவனே கணேசா!
அவைமுந்தி இருக்க அருள்புரிவாய் விநாயகனே!
நந்திகள் பல என்னாற்றலை குறைத்தாலும்,
பிந்திஅதை தள்ள உன்பிரகாரம் சுற்றுகிறேன்
வேலவனின் அண்ணனே விவேகத்தை தந்திடு!
மகாசக்தியின் மகனே வீரத்தை தந்திடு!
வெல்ல முடியாத வெள்ளலூர் நாட்டின் வரலாறை
இக்கணமே இப்போதே இயல்பாக கொடுத்திடு!
வற்றாத என் தாகத்திற்கு வரலாற்றை எழுத
வழுவான நினைவையும் அறிவாற்றலையும் கொடு!
நீ கொடுப்பாய் என உனைநினைத்து நித்தம்
நித்தம் நானறிந்த சேதிகளை நாட்டிற்குதருகிறேன்

ஸ்ரீ கருங்கல் தெய்வம்

கருப்பரே கருங்கல் தெய்வமே!

கண்ணுக்கு கண்ணாக காத்தவனே!

நித்தம் நித்தம் நீதியைக் காத்தவனே!

எங்களது சொத்தும், பத்தும் நீயே!

தவறுக்கு தண்டனை தருபவனே!

தவறுணர்ந்தால் தன்னை மறந்து மன்னிப்பவனே!

ஏழைகளின் இலவச நீதிமன்றமே!

எப்போதும் நீதிக்கு இலக்கணம் கற்பிப்பவனே!

மன வியாதிகளுக்கு அருமருந்தானவனே!

நல்லமனம் கொண்டவர்களுக்கு முன்னே செல்பவனே!

செய்வினையையும் நல்வினையாக்கியவனே!

செயல்வீரனை தேனியாய் மாற்றுபவனே!

இத்திருநாட்டின் இல்லங்களை காப்பவனே!

உன்பிள்ளைகளை என்றென்றும் ஆதரிப்பவனே!

சரணம், சரணம், உன்னடி சரணம்

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன்

வளமான இந்நாட்டில் வசந்தத்தை ஏற்றியவளே!
வாழ்ந்து வரும் மக்களின் ஏழ்மையை விரட்டியவளே
எங்கள் ஏழைகாத்த அம்மனே!
பார்போற்றும் பாரத நாட்டில்,
பாங்கான நாட்டை எங்களுக்கு தந்தவளே!
ஏழைகளின் தெய்வமே எங்களது இதயம் நிறைந்தவளே!
வீரபாண்டி நல்லூர் என்ற வெள்ளலூர் நாட்டிற்கு
வீரமும் விவேகமும் வித்திட்ட தாயே!
சீர்மிகு நாட்டின் சிறப்பான வரலாறை
தீந்தமிழில் செதுக்க எனக்ஆசி தந்தவளே!
இலக்கணமும் தெரியாது இலக்கியமும் தெரியாது
எவ்வாறு எழுதுவது ஏக்கமுடன் நின்றவனை
தறிகெட்டு ஓடிய என்மனக் குதிரைக்கு
சரியான வழிகாட்டியவளே!
என்மகனை இழந்த ஈடில்லாதுயரத்தை என்னுடன் இருக்கான்
தவிக்காதே மகனே என்று சஞ்சலத்தை நீக்கியவளே!
எழுதுவது வரலாறு எப்படி? என ஏங்கித்தவிக்கையில்,
எப்போதும் என்காதில் மந்திரத்தை நிறுத்தியவளே!
எழுதுகிறேன் எழுதிவிட்டேன் எழுதிக்கொண்டேயிருப்பேன்,
என் தாயே! உன் காலடி சரணம்
வாழ்த்து வாக்குப்படி வரலாற்றுப்பால் பாடு
வரலாற்றில் பிழையானால் வாக்குப்படி உன் பொறுப்பு.
என் தாயே, சரணம், சரணம், சரணம்.

ஸ்ரீ வல்லவன்

வலுத்தாடி வல்லவனே எங்களது

வாழ்வைச் சிறக்க வைத்தவனே !

வாடி நின்ற மக்களை தேடி வந்து

சீரோடும் சிறப்போடும் வாழ வைத்தவனே !

ஈசனே உன் மக்களுக்கு

ஈகை குணம் தந்தவனே !

வரலாறு செழித்தோங்க எங்களது

வாழ்க்கையையே வரலாறு ஆக்கியவனே !

பண்பாடு தலைத்தோங்க வழிகாட்டி

எங்களை பார்புகழ் வைத்தவனே !

எந்நாட்டில் வாழ்ந்தாலும் இந்நாட்டு மக்களை

என்றென்றும் ஏற்றத்துடன் காப்பவனே !

சும்மாஇருந்த என்னை நாநிலம் போற்றும்

நற்கதை எழுத நாட்டம் தந்தவனே !

இக்கதையில் எப்பிழை வந்தாலும்

அப்பிழை சரிசெய்ய இக்கணமே ஆற்றல் கொடு

வல்லவனே ! நல்லவனே ! நாயகனே !

என்றென்றும் உன்காலடியில் வாழ்கிறேன்.

சரணம், சரணம், சரணம்.

பொருளடக்கம்

பொருளடக்கம்

தமிழர்கள்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - குறள்-03

அன்பர் நெஞ்சமாகிய மலரின்மேல் சென்று வீற்றிருப்பவனது சிறந்த திருவடிகளைச் சேர்ந்தவர்களே, உலகில் நிலையாக வாழ்வார்கள்.

மனித குலம் தோன்றிய காலம் முதல் பல இடங்களில் புலம் பெயர்ந்து பல நாடு, இனம், மொழி என்றவைகளை உருவாக்கி, பல புதிய படைப்புகளுடன் காலத்திற்கேற்ற நாகரிகமும் அடைந்தான்.

ஆப்ரிக்காவிலிருந்து புறப்பட்டு உலகின் பல பகுதிகளுக்கு புலம் பெயர்ந்தவர்களில் தமிழர்களும் அடக்கம். இன்றைய இந்தியாவில் ஆரியர் வருவதற்கு முன் திராவிடர்களின் கலாசாரமே கோலோச்சி வந்துள்ளது. ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற மண்ணில் புதைந்த நகரங்களே இதற்கு சாட்சியாகும். காலப்போக்கில் திராவிடர்கள் இந்தியாவில் தெற்குப்பகுதிக்கு ஆரியர்களின் வருகையால் தள்ளப்பட்டார்கள்.

அவர்கள்தான் திராவிடக்கலாச்சாரத்தில் வந்த தமிழர்கள் தென்னாட்டின் பல பகுதிகளை ஆட்சி செய்து பின் வேங்கடம் முதல் குமரி வரை ஆட்சி செய்து வந்ததாக வரலாறு. அம்மன்னர்களுக்கு களப்படை, மறப்படை, அகப்படை என்று மூன்று படைகள் இருந்துள்ளது.

பண்டைய தமிழகமும், சாதி அமைப்புகளும்

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருகைக்கு முன்பு திராவிடர்கள் இந்தியா முழுவதும் பரவி இருந்தனர். ஆரியர்களது வேதங்கள், திராவிடர்களை தஸ்யுக்கள் என அழைக்கின்றனர். இவர்களே அவ்வேதங்களில் தஸ்யுக்கல் என்றும் ராட்சஸர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இத்தஸ்யூக்கள் வலிமையான அரண்மனைகளைக் கொண்ட நகரங்களை உருவாக்கி, உயர்ந்த நாகரீக நிலையில் வாழ்ந்து வந்தனர். நாகரீகமற்ற அரை காட்டுமிராண்டிகளாக இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் இவர்களை மூர்க்கதனமாகத் தாக்கி, அவர்களின் நாகரீகத்தை அழித்ததோடு, திராவிடர்களை தெற்கு நோக்கி விரட்டினார்கள். திராவிடர்களின் நாகரீகத்தின் எடுத்துக்காட்டு மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நாகரீகம். ஆரியர்கள் திராவிடர்களை விரட்டிய பிறகு தங்களது ஆதிக்கத்தை நிறுவினர் என்றும் எஸ்.கே.என். பிஸ்வாஸ் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்.

திராவிடர்கள் ஆரியர்களுக்கு முன்பே இந்தியா முழுவதும் பரவி இருந்தாலும், இவர்களும் இந்தியாவிற்கு வெளியில் இருந்து வந்தே குடி அமர்ந்தனர். என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். திராவிடர்களின் முன்னோர்கள் மத்திய தரைக்கடல் பகுதியைச்சேர்ந்தவர்கள். ஆதிமனிதன் ஆப்ரிக்காவில் தோன்றி பின் பல பிரிவுகளாக உலகின் பல பகுதிகளுக்கு, புலம் பெயர்கிறார்கள். அப்படி புலம் பெயர்ந்தவர்கள் மத்தியதரைக்கடல் பகுதியில் திரேத்தாத்தீவில் 'தெர்மிலை' என்றும், சின்ன ஆசியாவில் தர்ம்மிலி என்றும் இதர கிளை வகுப்பினரைச் சேர்ந்தவர்களால் 'திரமிட' அல்லது 'திரமிளா' என்னும் அழைக்கப்பட்டனர். அதுவே பின்பு திராவிடர் எனத்திரிந்தது. அம்மக்கள் மத்திய தரைக்கடல்

பகுதியை விட்டு வெளியேறி, இந்தியாவில் குடியேறி, ஆரியர் வருகைக்குப்பின் தென்னிந்தியாவில் வந்து குடியேறிய பின்பு, அப்பெயர் தமிழ் என மருவியது, என்று வங்காள அறிஞர் பட்டாச்சார்யாரும், ராகவ அய்யங்காரும் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் கருமையான நிறம், நடுத்தர உயரமுடைய கட்டையான உருவம். சிறிய புருவங்கள் நீண்ட உருண்டையான முகத்தோற்றம் போன்ற உருவ அமைப்பை வைத்துப்பார்க்கும் போது இவர்கள் மத்திய தரைக்கடல் பகுதியைச்சேர்ந்தவர்களே எனவும், இதற்கு தெலுங்கு பிராமணர்களது உருவ அமைப்பும் கள்ளர் சமூகத்தவர் உருவ அமைப்பும் இன்றும் சான்றாக உள்ளது. எனவும் வரலாற்றாசிரியர் திரு.க.அ.நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார். மேலும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் இந்தியாவில் வந்து குடியேறியிருக்கலாம் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். அறிஞர் ரைஸ்லி என்பவர் திராவிடர்களே, இந்தியாவின் பூர்விகக்குடிகள் என்றும் அவர்கள் தற்போது ஆரிய சிந்தி மங்கோலிய இனக்கலப்புற்று வேறுபட்டுள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றார்.

எது எப்படி இருப்பினும் சுமார் 5000 ஆண்டுகளுக்கு மேலாய் இந்த மண்ணில் நிலைத்து வாழ்கின்ற திராவிடர்களை, இந்தியாவின் பூர்வீகக்குடிகள் என அழைப்பதில் எந்த இடர்பாடும் இல்லை.

பண்டைத்தமிழ் மக்கள்

திராவிட இனக்குழுமத்தின் பிரதான இனம் தமிழ் இனம் ஆகும். இவர்கள் வடவேங்கடம் முதல் தென்குமரி வரை பரவி வாழ்ந்தனர். இயற்கைச்சூழலுக்கேற்ப வாழ்வியல் முறையை அமைத்து வாழ்ந்து வந்தனர். இப்புவியானது மலையும், காடும், பள்ளத்தாக்கும், கடற்கரையாகப் பகுக்கப்பட்டு நானிலமாக பிரிக்கப்படுகிறது. இதில் மலையும் காடும் பருவநிலை மாற்றங்களால் வறண்டு போகும் பொழுது வறண்ட நிலங்களும் உருவாகின்றன. இந்த இயற்கைப்பிரிவுகளையே பழந்தமிழர்கள் முறையே குறிஞ்சி, முல்லை , மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலங்களாகவும் வகைப்படுத்தினர்.

ஐந்து வகை நிலங்கள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலங்களின் பூகோள தட்ப வெப்ப இயற்கைச்சூழலுக்கேற்ப அதில் வாழக்கூடிய மக்கள் பல இனக் குழுக்களாய் பிரிந்து வாழ்ந்தனர்.

குறிஞ்சி நிலம் :

மலையும், மலை சார்ந்த பகுதி குறிஞ்சி. இதில் வாழ்பவர்கள் குன்றவர் அல்லது குறவர் எனவும் மலைப்பகுதிகளில் வேட்டையாடி பிழைப்பு நடத்துவதனால் வேட்டுவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

முல்லை நிலம் :

காடும், காடு சார்ந்த இடம் மலைப்பகுதியான குறிஞ்சிக்கு அடுத்தாற்போல் அமைந்துள்ளது. இதில் வாழக்கூடிய மக்கள் ஆயர் அல்லது இடையர் எனப்பட்டனர். மலை சார்ந்த குறிஞ்சிக்கும் பள்ளத் தாக்குச்சார்ந்த மருதத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்ததனால், இதில் வாழ்ந்தவர்கள் இடையர் எனப்பட்டனர்.

மருதநிலம் :

நீர்வளம் நிறைந்த செழிப்பான நிலம் மருதநிலம் எனப்பட்டது. இதில் வாழ்ந்தவர்கள் உழுதுண்டு வாழ்ந்ததனால் உழவர் என அழைக்கப் பெற்றனர். அந்நிலத்தின் தலைவரான வேந்தைனையே தெய்வமாய் வழிபட்டனர்.

நெய்தல் நிலம் :

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். மீன்பிடித்தொழில் செய்து வந்த காரணத்தினால் இந்த மீனவர்கள் நுளையர், பரதவர் எனப்பட்டனர்.

பாலை நிலம்:

மழைப்பொழிவு குறைந்த பகுதிகளில் நிலம் வறண்டு காணப்படும். அவ்வகை நிலங்களில் பாலுடைய இலைகளைக் கொண்ட கள்ளி, கற்றாழை, பனை, வேம்பு போன்ற செடி கொடிகள் விளையுமாதலால், அவ்வகை நிலம் பாலை நிலம் எனப்பட்டது. அந்நிலத்தின் வாழ்வோர் எயினர் எயிற்றியர், மறவர், குரும்பர், கள்ளர் எனப்பட்டனர். இவர்கள் போர் வீரர்களாக, போரில் வெற்றி தருபவர்களாக கருதப்பட்டனர். இவர்கள் பெண் தெய்வமானவரை கொற்றவை எனப் பெயரிட்டு வணங்கினர்.

தமிழகத்து சாதிகள்

சங்க காலத்திலேயே நிலைபெற்றிருந்தாலும் பிற்காலச்சோழர்களது ஆட்சிக் காலத்தில் தான் சாதி அமைப்பு வேரூன்றி இறுகத்துவங்கியது. இதில் முக்குலத்தோர் என்ற கள்ளர், மறவர், அகமுடையோர் இவர்களுக்குத்தான் அரசியல் கலை, நீதி, கோயில்கள், அரண்மனைகள், ஆற்று நீர்ப்பாசனம் மற்றும் சமூக வளர்ச்சியில் அதிக இடமுண்டு என்றால் மிகையாகாது.

முக்குலத்தோர்

தமிழர்களின் வரலாற்றில் முக்குலத்துக்கு முக்கிய இடமுண்டு. மூன்று என்பதிலேயே தமிழர்களுக்கு தனியாத தாகமுண்டு, முத்தமிழ், முக்கனி, முப்புரம் என்பது போலவே முக்குலம் என்பதுவும்,

சேரர் - அகமுடையார் (சேர்வை)

சோழர் - கள்ளர் (நாட்டார்கள்)

பாண்டியர் - மறவர் (சேதுபதிகள்)

கௌதம முனிவரின் மனைவிக்கும் இந்திரன் என்ற தேவனுக்கும் பிறந்த மூவரே கள்ளன், மறவன், அகம்படியன் என்று தனித்தும் தேவனுக்கு பிறந்ததால் தேவர் என்றழைக்கப்பட்டனர்.

தேவர் என்றால் தெய்வமனைவர், கடவுள் தன்மையர், இனியவர், உயர்ந்தவர், வீரம் செறிந்தவர் என்று பொருள்.

அகநானூற்றிலே :

கள்வர் பெருமகன் - தென்னன். என மதுரைக் கணக்காயனார் ஒரு பாண்டியனை குறித்துள்ளதாக கூறப்படுகிறது. சங்ககாலத்திலேயே கள்வர் என்ற பெயர் இருந்ததாகவும், கள்வர் குலத்தவர் அரசராயிருந்தன என்பதும் தெரியவருகிறது. கி.பி.14ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்கபூர் முதலிய முகம்மதியர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்தபோது கோயில்களை இடித்து பல கொடுமைகள் செய்தனர். அப்பொழுது மக்கள் அனைவரும் கள்ளர்களிடம் சரண் புகுந்து ஊர்க்காவலை கள்ளர்களிடம் ஒப்படைக்கவே, மக்களனைவரையும் பாதுகாத்தனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. நமது அழகர் கோவிலும் அப்படித்தான் காப்பாற்றப்பட்டது. ஆயிரக்கணக்கான கள்ளர் பெருமக்கள் அழகர் கோவிலை காப்பாற்ற வீரமரணமடைந்ததாக வரலாறு கூறுகிறது. அதனால் தான் அழகர் - கள்ளழகர் ஆனார் என்றும் கூறப்படுகிறது.

“**கள்வனென் கிளவி கரியோனென்ப**” எனத் திவாகரமும், “**கடகரிப் பெயரும் கருநிற மகனும், கர்க்கடக விராசியும் ஞெண்டும் கள்வன்**” எனப் பிங்கலத்தை கூறுவதிலிருந்து கள்வன் எனுஞ்சொல் கருநிறமுடையோன் என்னும் பொருளில் தொன்று தொட்டு வழங்கியுள்ளன என்பது புலனாகிறது. ஆரியர் தமிழரைக் கரியவரென்று “**இருக்கு**” வேதமந்திரத்தில் கூறுகின்றனர். இந்திரனுக்கும் **கரியோன்** எனப்பெயரிருக்கிறது. சோழனும் கருநிறம் பற்றியே மால் என அழைக்கப்படுகின்றான். இவற்றால் இந்திர குலத்தவர் எனினும் கள்வர் குலத்தவர் எனினும் இந்திய பழங்குடியினரான தமிழ் என்பதே பொருள் எனத் தெரியப்படுகிறது. ஆரிய வடமொழி அமரகோசத்தில் சத்திரிய வர்க்கத்தில் பகைவன் எனும் பொருளில் கூறப்படுகிறது. இங்ஙனம் ஆரியர்கள் தமக்குப் பகைவர் என்று அழைக்கப்பட்ட பழந்தமிழரே கள்வர் என்னும் சொல்லுக்கு பொருளாய் நிற்றல் என அறியப்படுகிறது.

சீவக சிந்தாமணி 741-ம் செய்யுளில் **கள்ளராற்புலியை வேறு காணிய** என்னுந் தொடருக்கு அரசரைக்கொண்டு **சீவகனைப் போர்க்கானவேண்ட** என புலவர் நச்சினார்கினியர் பொருள் கூறியிருக்கிறார். கள்ளர் என்னும் சொல்லுக்கு **அரசர்** என்னும் பொருள் கருதப்படுகிறது. சீவகனப்புலியென்று கூறியதால்கேற்ப அரசரைக் கள்ளர் என்றார் எனின் அப்பொழுதும் வீரத்தின் மேம்பட்டார் என்னும் பொருள் பற்றியே கள்வர் அல்லது கள்ளர் என்னும் குலப்பெயர் தோன்றியதென்பது பழைய ஆதரவுகட்கும் யூக அனுபவங்கட்கு ஒத்தாயிருக்கின்றது. இதனை மறுப்பதற்கு எவ்வகையான காரணமும் இல்லை.

கள்ளர்கள் தொண்டை நாட்டினின்றும் சோழ, பாண்டி நாடுகளில் குடியேறி அரையர் என்னும் பெயருடன் தன்னரசாக ஆட்சி புரிந்து வந்தனர். பல்லவராயர், தொண்டைமான் கள்ளர் என்னும் பெயர்கள் ஒரே வகுப்பினராவர். நடுவுநிலையுடைய அறிஞர் எவரும் கள்ளர், பல்லவர் வகுப்பினரே.

ஒரு காலத்தில் தொண்டை மண்டலத்தோடு, சோழ மண்டலத்தையும் ஆட்சிபுரிந்து வந்த பல்லவ சக்கரவர்த்திகள் பின்பு பேரரசாட்சியை இழந்து சிற்றரசர்களாகவும், சோழர்களிடம் அமைச்சர்களாகவும் தண்டத்தலைவர்களாகவும் இருந்து சோழர்களோடு ஒன்றாக கலந்து விட்டனர். இவர்களுடன் பிறந்த அஞ்சாமையும், வீரமும் ஒழிந்து விடவில்லை என்பது வரலாறு. குறிப்புகளாலும், கருணாகரத் தொண்டைமானது வரலாறும் இதனை வலியுறுத்திகிறது. (தென்னிந்திய சாசன புத்தகம் இரண்டாவது தொகுதி, முதற்பகுதி 22 வது சாசனத்தில்) சோழர்கள் கிபி 12-ம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்து வந்திருக்கின்றனர், பின்பு அவர்களது ஆட்சி நிலைகுலைந்ததால் சிறிது சிறிதாக கள்ளர்களோடு ஒன்றறக் கலந்துவிட்டனர். எனவே தான் கள்ளர்களைச் சோழ மரபினர் என்று கூறுகின்றனர். இதுவரை கூறியதிலிருந்து பல்லவ வழியினராகிய கள்ளரோடு சோழரும் கலந்து விட்டனர் என தெரியவருகிறது.

சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, கள்ளர்கள் சிற்றரசர்களாகவும், ஜமீன்தாரிகளாகவும் இருந்துவந்து பின் காலச்சக்கர ஓட்டத்தில் மற்றவர்களுடன் முரண்பாட்டால் வெளியேறி, ஒருசில சிறிய குழுக்களாக பாண்டிய நாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். தங்களுடைய அபரிதமான வளர்ச்சியாலும், விவேகத்தாலும் கள்ளர்கள் தாங்கள் அதிகமுள்ள பகுதிகளில் சிறுசிறு நாடுகளாக எல்லைகளை வரையறுத்து கள்ளர்கள் நாடு என வழங்குகின்றன. இந்நாடுகளுக்கெல்லாம் கள்ளர் வகுப்பினரே தலைவராயினர். கள்ளர்களுக்கு நாட்டார், அம்பலகாரர், தேவர் என்னும் பெயர்கள் பொதுவாக வழங்கப்படுகிறது.

ஈ.தர்ஷ்டன் என்பார் எழுதிய **தென்னிந்திய சாதி வகுப்பு வரலாறு** என்னும் புத்தகத்தில் மதுரை கள்ளர் நாடுகளைப்பற்றி காணப்படுகின்றன. பாண்டி நாட்டில் உள்ள கள்ளர்களைப்பற்றி கல்லல் ஸ்ரீமத் மணிவாசக சரணாலய சாமிகளும், சிவகங்கை சிரஞ்சீவி எஸ்.சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் நன்கு ஆராய்ந்து, பழக்கவழக்கம், கலாசாரம், பண்பாடு, திருவிழாக்கள், கிராமசபை ஆட்சி (நாடு) ஆகியவைகளை பற்றி தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

(கலிங்கத்துப்பரணியில் சொல்லப்பட்ட கருணாகரத் தொண்டைமான்பற்றி கூறும்போது (1278-1200) பல்லவர்கள் ஆட்சிகள் முடிவுக்கு வந்த பின் சோழர்களிடம் குறுநில மன்னர்கள், மந்திரிகள் மற்றும் படைத்தலைவராக பல பல்லவரின் கிளைகள் இருந்ததாக வரலாறு.)

களப்படை:

எதிரி நாட்டில் ஊடுருவி வேவு பார்ப்பதும், கலகம் ஏற்படுத்துவதும், எதிரியின் பொருளாதாரத்தைத் தகற்பதற்காக திடீர் திடீர் என தாக்கி யாரும் எதிர்பாராத நேரங்களில் செல்வங்களை கொள்ளையடிப்பது, பாதுகாப்பு அரண்களை தாக்கி வெற்றியை எளிதாக்குவது. இவர்களுக்கு களப்படை என்ற பெயரமைத்து நாளடைவில் கள்ளர் படையாகியது. கள்ளர் இனமாக கருதப்படுகின்றனர்.

மறப்படை:

நாட்டின் எல்லைகளை காப்பது, உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை காப்பது, போர்காலங்களில் போரில் கலந்து போரில் வெற்றியை ஈட்டுவது. இவர்களை மறப்படை என அழைத்து மறவர் இனமாக அழைக்கப்படுகின்றனர்.

அகப்படை:

கோட்டையின் உட்பகுதி, அரண்மனை பின் உட்பகுதிகளை பாதுகாப்பது, அரண்மனை உயர் அதிகாரிகளுக்கு உதவியாக இருக்கும் படை அகப்படை என்றும், பின் அகம்படியார் என்ற சேர்வை இனமாக அழைக்கப்படுகின்றனர்.

இந்த மூன்று பிரிவினரும் பின்னர் சேர, சோழ, பாண்டியர் என்ற பெயரில் தமிழகத்தை 3-ஆக பிரித்து ஆட்சி செய்தனர். அகம்படியர் சேரர்களாகவும் சேர நாட்டையும், கள்ளர்கள் சோழர்களாக சோழநாட்டையும், மறவர்கள் பாண்டியர்களாக பாண்டிய நாட்டையும் பரந்து கிடந்த அகண்ட தமிழகத்தை சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்து வந்துள்ளனர். இவர்களுக்கு மணவினை போன்றவைகளும் நடைபெற்று தமிழகம் தழைத்தோங்கியது. விவசாயம் தொழில் அயல் தேச வணிகம் ஆகியவை செழித்திருந்துள்ளது. பல படையெடுப்புக்கள் நடத்தி வடக்கே இமயம் வரையும், கடல் கடந்து பல கீழை நாடுகளையும் வென்று ஆட்சி செய்து வந்ததாக வரலாறு தெளிவாக கூறுகிறது. அந்த நாடுகளில் தமிழக கலாச்சாரம் பரவ காரணமாக இருந்தனர். மேலை நாடுகளில் ரோமாபுரி வரை வணிகங்கள் செழிப்புடன் நடைபெற்று வந்துள்ளது. உள் நாட்டில் நீதி, நிர்வாகம், உட்கட்டமைப்பு, உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு வந்துள்ளது. உலகம் புகழும் அளவுக்கு கோயில்கள் கட்டி உரிய பூஜைகளும் முறையாக நடைபெற்று மானியங்களும் கொடுக்கப்பட்டன அனைத்து வகுப்பினர்களையும் அரவணைத்து அவரவர்களுக்கு உரிய அந்தஸ்து, பதவி, மரியாதைகள் கொடுத்து வந்துள்ளனர்,

கள்ளர்பிரிவினர்

பின் இப்பிரிவினர் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் ஓர் பெருங்குழுவினராக சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர். கள்ளர் நாடு எனவும் கள்ளகம் என வழங்கப்பெறுகின்றது. (மெக்காலேயின் இந்திய சரித்திர நூலில் இது குறிப்பிடப்படுகிறது.)

இப்பகுதியில் 93 கள்ளர் நாடுகள் இருந்ததாக தெரிய வருகிறது. குறிப்பாக பாண்டி மண்டலத்தில் 14 கள்ளர் நாடுகள் இருந்து வருகிறது.

கள்ளர்கள்

சோழ மண்டலத்தில் கள்ளர்கள், நீதிமன்றங்கள் பலவும் அமைத்து தமது நாட்டினை ஆட்சி புரிந்து வருகின்ற ஓர் மன்னரும் குறுநில மன்னராய் பலரும், பெரும் நில உரிமையாளர்களாய் பலரும் இருந்து வந்திருக்கின்றனர்.

பாண்டிய மண்டல கள்ளர் நாடுகள்

1. மேல நாடு
2. நடுவு நாடு
3. சிறுகுடி நாடு
4. வெள்ளலூர் நாடு
5. அஞ்சூர் நாடு
6. ஆறூர் நாடு
7. மல்லாக்கோட்டை நாடு (மயில்ராயின்கோட்டை நாடு)
8. பட்டமங்களம் நாடு
9. பாகனேரி நாடு
10. கண்டர் மாணிக்க நாடு
11. குன்னங்கோட்டை நாடு
12. திருவாதவூர் நாடு (சேது நாடு)
13. கீழக்குடி நாடு (கற்பக நாடு பிற மலைக்கள்ளர்)
14. பதினாலு நாடு

திருவாளர் S.குமாரசாமி மேல்கொண்டார் அவர்கள் ஓர் செப்பு பட்டயத்திலிருந்து எழுதிய கள்ளர் நாடுகள். இப்பட்டயம் கலியபதம் 4434, சாலி வாகன சகாப்தம் 1255 விக்ரம் ஸ்ரீ தை மாதம் 15-ம் தேதி திங்கட்கிழமை, பூச நட்சத்திரமும், பிரதமை திதியில் எழுதப்பட்டதாக அதிலிருந்து தெரிய வருகிறது.

தேவர்

தேவர் - இனியர் கல்வியல் உயர்ந்தவர் தெய்வத்தன்மை உடையவர்.

தே - கடவுள் என்று பொருள்

தேவாரம் - தே+ஆரம் கடவுளுக்கு சூட்டும் பாமாலை என்று பொருள் இதை போலவே தே+ஆர் தேவர் என்பர்.

தே - தெய்வம் + அர் = விகுதி

(வகர உடம்பட மெய் தோன்றித் தேவர் எனவாயிற்று)

தேவர் - தெய்வத்தன்மை பெற்றவர், ஒளி உடம்பு பெற்றவர், வானுலகத் தேவர்க்குத் தெய்வத்தன்மையும் ஒளியுடம்பும், மண்ணுலகத்தேவர்க்குத் தெய்வ நாட்டமும், புகழுடம்பும் உடையவர் என்று பொருள் பொருந்தும்.

'ஒளி ஒருவருக்கு உற்ற வெறுக்கை' என்பதால் ஒளி என்பது புகழாகும் அன்றோ?

தமிழகத்தின் பொற்காலமாக விளங்கி வந்தது சங்ககாலம் அதன் இறுதிகாலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் அதன் தொடக்க காலம் இது தான் என்று வரையறுத்துக் கூற இயலாது. சங்க காலத்தில் சங்கம் கூடி தமிழாராய்ந்தும் தமிழைப் போற்றி வளர்த்தவர்கள் புலவர்கள் மற்றும் மன்னர்களும் மக்களுமாவர். தங்களது விழிக்கு நிகராகவும், உயிருக்கு மேலாகவும் மொழியைக் காத்து வளர்த்தவர்கள். பரத கண்டம் முழுவதும் பரவி இருந்த தமிழ் மொழி, ஆரியர் வரவால் சிதைவுற்று, வடவேங்கடம் தென்குமரி என்ற குறுகிய எல்லைக்குள்ளாகிவிட்டது. இது 7- ம் நூற்றாண்டாகும். தொல்காப்பியர் காலத்திலேயே ஏற்பட்டு விட்டது என்றும் கூறலாம். அக்காலத்தில் இடம் பண்பு, தொழில் காரணமாக ஏற்பட்ட பெயர்கள் பின்னால் ஆயிரக்கணக்கான சாதிப்பெயர்களாகிவிட்டன.

சங்க காலத்தில் நாகரீக மக்களாய், பொற்புரிமிக்க கோயில் கண்ட முடியுடைய மன்னராகவும், அற்புத கவிப்பொழில் அருள் மணக்கும் தமிழ்புலவர்கள் அறிவினுக்கும் பஞ்சமில்லாத நாட்டில், உரிமையை நிலை நாட்டியவர்கள், ஊனோம்பும் வாழ்க்கையை பெரிதென மதியாதவர்கள், ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பி உயர்ந்தவர்கள்தான் தேவர் என அழைக்கப்பட்டனர்.

அறிவுத்தெய்வமாக விளங்கி வந்த புலவர்கள் இனிமை தழுவிய இலக்கியங்களைப் படைத்தும், இலக்கண வரம்பும் ஏற்றம் பெறச்செய்தவர்கள் தேவர்கள் அவர்களுக்கு இனியவர் என்று சிறப்புப்பெயர்.

எனவே ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர், ஈரடியால் உலகையெல்லாம் வலம் வரும் தமிழ்மறை தந்த திருவள்ளுவர் போன்றவர்கள் தேவர் என்றும் கபில தேவர் நக்கீரத்தேவர், திருத்தக்கத் தேவர், தோலாமொழித்தேவர் முதலிய சங்கப்புலவர்களும் தமிழ் வளர்த்த புலமை சான்ற பெரியயோர்களும் தேவராகவே இருந்தனர்.

தெய்வத்தன்மையுடையவர்களான அரசர்களும் மக்களால் மதிக்கப்பட்டு உயர்ந்த பெரியோர்களும் தேவர் என்ற சிறப்புப் பெயரையே சூட்டிக்கொண்டனர்.

மதுரை சோமசுந்தரக்கடவுள் - சோமசுந்தரத்தேவராவர்.

குலசேகரப்பாண்டியத்தேவர் வரகுணப்பாண்டியத்தேவர், பராக்கிரம பாண்டியத்தேவர், இராஜாராஜதேவர், இராசேந்திரத்தேவர், அருள்மொழித்தேவர், வந்தியத் தேவன் அதிவீரராம பாண்டியத் தேவர், முதலிய பெயர்கள் சிந்திக்கத்தக்கவையாகும். இத்தகு உயர் பெயர் ஏற்றைப்போல் தலை நிமிர்ந்து, எண்ணத்தால் உயர்ந்து, ஊக்கம் நாடிய உழைப்பால் ஆக்கமோங்கிய, வாழ்வை மேற்கொண்ட கள்ளர், மறவர் அகமுடையோர் மக்களுக்கு மட்டுமே உரித்தான உயர் தனியொரு பட்டம், பெயராகவே அமைந்து விட்டது.

என்று தோன்றியது? என்று வரையறுத்துக்கூற இயலாத தொன்மைச்சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியை வையகத்திற்குக் காட்டி, உயிரினும் இனியதாக ஓம்பிய நமது முன்னோர் வழியில் வந்தவர்கள் என்று பெருமைக்குரியவர்கள் வீர வாழ்வின் அறச்செயல் புரிந்து வந்த கள்ளர், மறவர், அகமுடையோர் மக்களுக்கு மட்டுமே உரித்தானதுதான் தேவர் என்ற பொதுப்பெயர். தேவர் என்ற பெயர் கள்ளர், மறவர் அகமுடையோர்களுக்குப் பொதுவான பெயர் என்றும் இம்மூவருக்கும் பொதுவானப் பெயராக அழைக்கப்படுகிறது. இதிலிருந்து இம்மூவரும் பிரித்துக்காட்ட இயலாத ஒரு குலமாகவே காணப்படுகின்றனர்.

கள்ளர் நாடுகள்

கள்ளர் நாடுகள் நான்கு மண்டலமாக அழைக்கப்பட்டது அவை :

1. சோழ மண்டலம்
2. பாண்டிய மண்டலம்
3. சேர மண்டலம்
4. தொண்டை மண்டலம்

கள்ளர்கள்

சோழர் சாதியில் கள்ளர் எனவும் பாண்டிய சாதியில் மறவர் எனவும் சேரர் சாதியில் சேர்வை என்றழைக்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

கள்ளர் என்னும் வீரர்கள் அரசரால் களவு மற்றும் உளவு வேலைகளில் அமர்த்தப்பட்டவராவர் போரின் தொடக்கத்தில் எதிரியின் பொருளாதார ஆதாரங்களை கவர்ந்து வந்தவர்கள் கள்ளர்களே என்று தொல்காப்பியம் கூறுகிறது.

வின்சென்ட் ஸ்மித் என்ற வரலாற்று ஆய்வாளர் தனது நூலான புராதன இந்திய சரித்திரம் என்னும் நூலில் கள்ளரைப் பல்லவரோடு இணைத்துக் கூறுகிறார்.

கி.பி.11-ம் நூற்றாண்டில் சோழர்கள் பாண்டிய நாட்டை ஆட்சிக்கு கொண்டு வந்ததன் பின்னர் மதுரை, பாகனேரி, மேலூர், திருப்பத்தூர், ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து கள்ளர்கள் நிறைந்து வாழ்ந்த பகுதிகள் கள்ளர் நாடு, கள்ளர்அகம் என்று அழைக்கப்பட்டன.

உலகமே தொழுது பின் செல்லும் உழவர்கள் தொழிலான விவசாயத்தில் பழுதிலாப் பணிபுரிந்து நாட்டின் பொருளாதார உயர்வுக்கு வழிவகுத்த நெற்களமும், பகைவரிடமிருந்த காக்கப்போர்க்களமும் கண்ட வீர மரபினரைச் சங்க இலக்கியம் களமர் எனச் சுட்டிக்காட்டியது.

மதுரை நாட்டுக்கள்ளர்கள்

மதுரை நாட்டுக்கள்ளர்கள் தங்களது ராணுவத்தன்மை காரணமாக, தங்களது நாடுகள் அமைப்பைத் தற்காத்துக் கொண்டனர். அக்கள்ளர் நாடுகள் அரசியல் ரீதியாக எந்த ஒரு மேல் ஆதிக்கத்திற்கும் கட்டுப்படாத தன்னரசு நாடுகளாய்த் திகழ்ந்தன. அவை மதுரையிலிருந்த மைய அரசிற்கு எந்த ஒரு வகையிலும் வரியோ, கிஸ்தியோ செலுத்தவில்லை என கிறிஸ்துவ மதப்பிரசாரத்திற்காக தமிழகத்துக்கு வந்த இயேசு சபைப் பாதிரியார்கள் குறிப்பிடுகின்றனர்.

யாராவது வரிக்கேட்டு வந்தால், வானம் பொழிகிறது. பூமி விளைகிறது. நாங்களும், எருதுகளும் உழைத்து அறுவடை செய்கிறோம். அப்படி இருக்கையில் அதன் முழுப்பயனையும் நாங்கள் தான் அனுபவிக்க வேண்டும். எங்களுக்கு இணையான உங்களுக்கு (மன்னர்களுக்கு) ஏன் கட்டுப்படவேண்டும்? ஏன் வரி கொடுக்க வேண்டும்? என மறுத்தனர் இவ்வாறு கள்ளர் நாடுகளின் அரசியல் தனித்தன்மையாக திகழ்ந்ததால், பிற்காலத்தில் நாடுகள் அமைப்பு என்பது கள்ளர்களுக்கு மட்டும் உரித்தான சமூக அரசியல் மற்றும் புவியல் அமைப்பாக நிலைபெற்றுவிட்டது.

அதனால் தான் 17-18ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலிருந்து சமயப்பணி செய்வதற்காக தமிழகம் வந்த இயேசு சபைப்பாதிரியார்கள் தாங்கள் வாழுகின்ற பகுதிகளைப் பல நாடுகளாய்ப் பிரித்து வாழ்வது கள்ளர்களுக்கு மட்டும் உரிய வழிமுறை எனத் தங்களது குறிப்புகளில் பதிவு செய்து விட்டனர். மார்டின் பாதிரியார் அவர்கள் டீ - வில்லட்டி பாதிரியார் அவர்களுக்கு 08.11.1709-ல் எழுதிய கடிதத்தை மேற்கோள்காட்டி திரு. சத்தியானந்த ஐயர் மதுரை நாயக்கர் சரித்திரம் (இணைப்பு) அனெக்சர் 304-305-ல் குறிப்பிடுகிறார். மேலும் திருவாளர் தாஸ்டன் என்ற வரலாற்று ஆசிரியர் தனது தென்னிந்திய சாதித் தொகுப்பு நூலில் பிரிவு 1909-லும் குறிப்பிடுகிறார்.

தமிழகம் முழுவதும் 93 வகை கள்ளர் நாடுகள் இருப்பதாக திரு.குமாரசாமி அவர்கள் தனது செப்புப்பட்டயத்தில் குறிப்பிடுகின்றார்.

மதுரை மண்டலம் :

மதுரை நகருக்கு கிழக்குப்பகுதியில் அழகர் கோவில் மலையிலிருந்து புதுக்கோட்டை கடற்கரை அமைந்துள்ள பகுதி வரை மதுரை மண்டலம் என அழைக்கப்பட்டது. இப்பகுதியில் சுமார் 15-க்கு மேற்பட்ட கள்ளர் நாடுகள் இருந்து வந்ததாக தெரியபடுகிறது. கி.பி.11.-ம் நூற்றாண்டில் சோழர்கள் பாண்டிய நாட்டை கைப்பற்றிய பொழுது மேற்படி பகுதியைக்காப்பதற்காக சோழநாட்டிலிருந்து ஒரு சிலர் கள்ளர் வகுப்பினரை குடியேற்றினர். அவர்கள் வம்சத்தவர்களே இப்பாண்டிய நாட்டுக்கள்ளர்கள் என, தனது மக்கள் தொகை கணக்கெடுப்புப் பதிவேட்டில் பிரான்சிஸ் என்ற ஆங்கில அதிகாரி கூறுகிறார். ஆனால் கள்ளர்களது குடியேற்றம், எந்த மன்னர்களாளோ அல்லது எந்த மன்னர்களுக்காகவோ ஏற்பட்டது அல்ல. அவர்கள் ஒரு சுதந்திரமான இனக்குழுக்களாவர்கள். அதனால் அவர்கள் தன்னெழுச்சியாகவோ அல்லது சுயமாகவோ வந்து பாண்டிய மண்டலத்தில் குடியேறினர் என பிளாக்பென் என்ற ஆங்கில வரலாற்றாசிரியர் கூற்று ஏற்கத்தக்கதாக உள்ளது.

மேல நாடு :

இது ஐந்து தெருவாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. மேலைத்தெரு நரசிங்கம்பட்டி முதலிய 8 ஊர்களையும், தெற்குத்தெரு முதலிய 8-ஊர்களையும், வடக்குத்தெரு வல்லாளப்பட்டி முதலிய 27 ஊர்களையும், பத்துக்கட்டு தெருவானது சிட்டம்பட்டி முதலிய 10 ஊர்களையும், பறப்பு நாட்டுத்தெருவானது திருவாதவூர் முதலிய 8 ஊர்களையும் கொண்டது. மேல நாட்டுக்கள்ளர்கள் அழகர் கோயில் திருவிழாக்களில் பெரும்பங்கு வகிக்கின்றனர். மேலநாடு முழுவதும் ஆறு பகுதிகளாகவும், ஒவ்வொரு பகுதியும் பல கிராமங்களாகவும் ஒவ்வொரு கிராமமும் பல மந்தைகளாகவும், ஒவ்வொரு கரைக்கு ஒரு அம்பலமும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பெரிய அம்பலகாரரும் நியமிக்கப்படுகின்றனர். வடக்குத்தெருவின் பெரிய அம்பலகாரர் மேல நாட்டிற்கே பெரிய அம்பலகாரராய் கருதப்படுகிறார். இவர்கள் தந்தை வழியில் பல கரைகளாக உள்ளனர். ஒவ்வொரு கரையும், ஒரு பங்காளிகளாய் கருதப்படுகின்றனர். அக்கரைகளின் அடிப்படையில் திருமண உறவுகள் செய்கின்றனர்.

நடுவி நாடு (அ) பழைய நாடு :

கள்ள நாடுகளில் மையப்பகுதிகளில் அமைந்துள்ளதால் இது நடுவி நாடு எனவும் சுமார்,1000 வருடங்களுக்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து வந்த கள்ளர்கள் முதன் முதலில் குடியேறிய நாடு என்பதால், இது பழைய நாடு எனவும் அழைக்கப்படுகிறது. இந்நாடு 18 ஊர்களைக்கொண்டது. மேலூர் இதன் தலைநகரமாகும். இந்தப்பூர்விக 18 பட்டிகள் இன்று பல கிராமங்களாகப் பெருகி உள்ளன. இவர்கள் மத்தியில் தந்தை வழியில் 12 கரைகள் உள்ளன. இந்த 12 கரைகளும் 7 கரை 5 கரைகளாகப் பிரிக்கப்பட்டு இரு தொகுதிகளாக இருக்கின்றன. இந்த ஏழு கரைகளில் சொக்கன் கரையைச்சார்ந்த அம்பலகாரர், பெரிய அம்பலகாரராக தேர்வு செய்யப்படுகின்றார். மீதி ஒரு தொகுதியிலுள்ள இளமண்கரை சார்ந்தவர் பெரிய அம்பலகாரர் ஆவார்.

மேலூர் நகரில் உள்ள காஞ்சிவனம் கோயில் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும்.

வெள்ளலூர் நாடு:

சிறுகுடி நாட்டை வடக்கு எல்லையாகவும் அஞ்சூர் நாட்டை தெற்கு எல்லையாகவும், மல்லாக்கோட்டை நாட்டை கிழக்கு எல்லையாகவும், நடுவி நாட்டை மேற்கு எல்லையாகவும் கொண்டுஅமைந்திருப்பது வெள்ளலூர் நாடாகும். இந்நாடு தற்போதைய மேலூர் வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியிலும், சிவகங்கை வட்டம் இடையமேலூர் உள்வட்டத்திற்குள்ளும் பரவி அமைந்திருக்கின்றது. இதன் விபரங்களை பின்னால் பார்ப்போம்.

சிறுகுடி நாடு (சேருங்குடி நாடு)

இந்நாடு பாண்டிய நாட்டின் வடபகுதியிலும் பிரான்மலை எனப்படும். பறம்பு நாட்டிற்குத்தெற்கேயும், மல்லாக்கோட்டை நாட்டிற்கு மேற்கேயும், பழைய நாட்டிற்கு கிழக்கேயும் அமைந்திருக்கின்றது. சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் தொண்டைமண்டலத்திலிருந்து வந்த கள்ளர் குலத்தைச்சார்ந்த மூன்று பிரிவினர் சேர்ந்து வாழ்ந்ததால் சேருங்குடி நாடு என அழைக்கப்பட்டது. இவர்கள் தாங்கள் வணங்கும் குலதெய்வங்களில் அடிப்படையில் திருமண உறவு வைத்துக்கொள்கின்றனர். முன்பு வெள்ளலூர் நாட்டின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டனர். வெள்ளலூர் மன்னான் சின்னாண்டித்தேவனால் சிறுகுடியார்கள் துரத்தப்பட்டு மீட்கப்பட்டது. இதனுடைய ஒரு பகுதி வெள்ளலூர் நாட்டிற்கு மேற்கே எல்லையாக அமைந்துள்ளது.

மயில்ராயன் கோட்டை நாடு (மல்லாக்கோட்டை)

நாடு வடக்கே பறம்பு நாடு என்ற ஐந்து நாட்டையும், மேற்கே சிறுகுடி நாட்டையும், கிழக்கே பட்டமங்கலம் நாட்டையும் எல்லைகளாக கொண்டு அமைந்திருக்கின்ற கள்ளர் நாடு மல்லாக்கோட்டை நாடு எனப்படும் மயில்ராயன் கோட்டை நாடு.

சுமார் 1000 வருடங்களுக்கு முன்பு தமிழகத்தின் வடக்குப்பகுதியிலிருந்த வள நாட்டிலிருந்து நரசிங்கத்தேவன், மண்ணத்தேவன், பொன்னத்தேவன், வல்லாளத்தேவன் சீறும்புலித்தேவன் என்ற ஐந்து பேர் தலைமையில் கள்ளர்கள் கூட்டம் தெற்கு நோக்கி வந்தது. இப்பகுதிக்கு வரும்போது மயில் ஒன்று இவர்களது வேட்டை நாய்களை எதிர்த்து சண்டையிட்டது. அதனால் இப்பகுதி வீரமிக்கது எனக்கருதி இங்கு குடியமர்ந்தனர். அதனால் மயில் ஆட்சி செய்கின்ற பகுதி எனப் பொருள் படுகின்ற வகையில் இப்பகுதிக்கு மயில்ராயன் கோட்டை நாடு எனப்பெயரிட்டனர். அப்பெயர் மல்லாக்கோட்டை என மருவியது. இப்பகுதியில் ஏற்கனவே பெருமளவு வாழ்ந்து வந்தவர்கள் கார்காத்த வெள்ளாளர், இவர்களுக்குள் நடந்த சிறு சிறு மோதலில் கார்காத்த வெள்ளாளர்கள் தாக்குப்பிடிக்காமல் வெளியேறினர். அதற்கு பிறகு கள்ளர்கள் தங்களது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தன்னரசு நாட்டை உருவாக்கினர்.

இம்மயில்ராயன்கோட்டை நாடு எட்டுத்தலைமைக்கிராமங்களாகவும் இரண்டு வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைமைக்கிராமத்திற்கும் பல துணை கிராமங்களும், ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் பல கிராமங்களும் உள்ளன.

இந்த 10 தலைமைக்கிராமங்களுக்கும், ஒவ்வொரு பெரிய அம்பலகாரர் உள்ளார். அவர்கள் வம்சாவளி அடிப்படையில் அப்பொறுப்பினை ஏற்கின்றனர். இந்த 10 பெரிய அம்பலகாரர்களும் ஒன்று கூடி வடவன்பட்டியில் நாட்டு விவகாரங்களை கலந்து ஆலோசித்து நல்ல முடிவுகளை எடுப்பர். வடவன் பட்டியிலுள்ள திருவிடை அய்யனார் கோவிலும் மல்லாக்கோட்டையிலுள்ள சந்திவீரன் கோவிலும் நாட்டின் பொதுக்கோவில்களாக கருதப்படுகின்றன. அவற்றை முறையே மாசி மாதம், ஆனி மாதம் 10 நாட்கள் விழா எடுத்து வழிபடுகின்றனர். புவியியல் அடிப்படையில் 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதோடு மயில்ராயன்கோட்டை கள்ளர்கள், தந்தை வழியில் பல கூட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் பங்காளிகள் ஆவார். அதனால் ஒரே கூட்டத்தில் திருமண உறவு கொள்வதில்லை. இவர்கள் மத்தியில் அறுபதிற்கும் மேற்பட்ட கூட்டங்கள் உள்ளன.

நாலூர் நாடு

இந்நாடு கிழக்கே ஆறூர் வட்டவகை நாட்டினையும், மேற்கேயும், தெற்கேயும் அஞ்சூர் நாட்டினையும் வடக்கே வெள்ளலூர் நாட்டினையும் எல்லைகளாக உள்ளன. இன்றைய சிவகங்கை ஒன்றியத்தில் பரவி அமைந்திருக்கிறது, இவர்கள் மயில்ராயன்கோட்டை நாட்டிலிருந்து பிரிந்து வந்தவர்கள் எனக்கூறப்படுகிறது. இந்நாடு தமறாக்கி, அரசனூர், கிளாதிரி, இலுப்பக்குடி என நான்கு கிராமங்களைக்கொண்ட நாடு ஆகையால் நாலூர் நாடு என அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு தலைமைக்கிராமங்களுக்கும் பல உட்கிராமங்களைக் கொண்டிருக்கின்றன. தமறாக்கி இந்நாட்டின் தலைமைக் கிராமமாகும் இங்குள்ள அய்யனார் கோயிலும் நாட்டின் பொதுவான கோயிலாக கருதப்படுகின்றன. இவற்றிற்குக் கார்த்திகை மாதம் மது எடுப்புத்திருவிழா நடத்தப்படுகின்றது. இந்நாலூர் நாட்டுக்கள்ளர்கள் தந்தை வழியில் பல கூட்டங்களாகப்பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தை சேர்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். நான்கு தலைமைக்கிராமங்களுக்கும் நான்கு பெரிய அம்பலகாரர்கள் உள்ளனர். தமறாக்கியின் பெரிய அம்பலகாரர் நாட்டின் பெரிய அம்பலகாரர் ஆக கருதப்படுகிறார். இவர்கள் வம்சாவளி அடிப்படையில் பெரிய அம்பலகாரர் பொறுப்பினை பெறுகின்றனர்.

அஞ்சூர் நாடு

தெற்குப்பகுதியிலுள்ள கடைசி கள்ளர் நாடாகும். ஐந்து தலைமைக்கிராமங்களை உள்ளடக்கிய நாடாகையால் அஞ்சூர் நாடு எனப்படுகின்றது. இதில் ஏனாதி, பூவந்தி, கீரனூர், சுண்ணாம்பூர் ஆகிய மூன்று ஊர்களிலும் கள்ளர்கள் வாழ்கின்றனர். செம்பூரில் கோனார்களும், மடப்புரத்தில் நாடார்களும் மிகுதியாக வாழ்கின்றனர். அதனால் முதல் மூன்று ஊர்களில் உள்ள அம்பலங்கள் கள்ளர்களும், செம்பூரில் கோனார்களும், மடப்புரத்தில் நாடார்களும் அம்பலங்களாக உள்ளனர். திருப்புவனத்தில் உள்ள சௌந்திர நாயகி புஷ்பனேஸ்வரர் ஆலயத்தில் இந்த அம்பலங்களுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது.ஏனாதி இந்நாட்டின் தலைமைக் கிராமமாகும். ஏனாதி அம்பலகாரர் நாட்டின் பெரிய அம்பலகாரராய் கருதப்படுகிறார். இங்குள்ள ஸ்ரீ தன்னாயிர மூர்த்தி அய்யனார் கோவில் அஞ்சூர் நாட்டிற்கு பொதுக்கோவிலாகும். இந்த அஞ்சூர் நாட்டுக்கள்ளர்கள் தந்தை வழியில் பல கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்காளிகளாவர்.

ஆறூர் வட்டவகை நாடு

இந்நாடு தெற்கே பனங்குடி நாட்டையும், வடக்கே மயில்ராயன்கோட்டை நாட்டையும், கிழக்கே பாகனேரி நாட்டையும், மேற்கே வெள்ளலூர் நாட்டையும், நாலூர் நாட்டையும் எல்லைகளாகக்கொண்டு அமைந்தள்ளது. இன்றைய சிவகங்கை வட்டத்தில் அமைந்தள்ளது.

ஆறூர் நாடு வடக்கு வட்டவகை, தெற்கு வட்டவகை என இரண்டு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது. நாலுகோட்டை கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்ட 11 கிராமங்கள் வடக்கு வட்டவகை, என்றும் ஒக்கூர் கிராமத்தை தலைமைக் கிராமமாகக்கொண்ட 11 கிராமங்கள் தெற்கு வட்டவகை என்று அழைக்கப்படுகின்றது. நாலுகோட்டை கிராமத்தின் பெரிய அம்பலகாரர் வடக்கு வட்ட வகையின் நாட்டு அம்பலகாரராகவும், ஒக்கூர் கிராமத்தின் பெரிய அம்பலகாரர் தெற்கு வட்டவகையின் நாட்டு அம்பலகாரராகவும் கருதப்படுகின்றனர். இந்நாட்டுக் கள்ளர்கள் தந்தை வழியில் பல வகையறாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரே வகையைச்சார்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். சோழபுரம் சிவன்கேவில் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும்.

பட்டமங்கலம் நாடு

இந்நாடு பாகனேரி நாட்டை தெற்கேயும், மேற்கே மயில்ராயன்கோட்டை நாட்டையும், வடக்கே பூங்குன்ற நாட்டையும், கிழக்கே கண்டர மாணிக்க நாட்டையும் எல்லைகளாகக் கொண்டு பரவியுள்ளது. இப்பகுதி சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ளது. இந்நாடு ஆறு, தெருக்களாகப் பிரிக்கப்பட்டு ஆறு தெருவிற்கும் 22.5 உட்கடை கிராமங்கள் உள்ளன. ஒரே கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் பங்காளிகளாக கருதப்படுகின்றனர். சில கூட்டங்கள் பங்காளி கூட்டம் எனவும் மாமன், மைத்துனன் கூட்டம் எனவும் அழைக்கப்படுகின்றனர். பட்டமங்கலத்தில் உள்ள ஸ்ரீ மதிகண்ட விநாயகர், ஸ்ரீ அழகுசுந்தரி அம்பாள் இந்நாட்டின் பொதுக்கோவிலாகும். திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமியநாராயண பெருமாள் கோயில் தேர்த்திருவிழாவில் இப்பட்ட மங்கலம் நாட்டாருக்கும், மல்லாக்கோட்டை நாட்டாருக்கும் முதன்மை அளிக்கப்படுகிறது. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழாவின் போது தேர் நிலைக்கு இழுத்துச்செல்ல முடியாமல் போனதால், பல கள்ளர் நாடுகளுக்கு பறை சாற்றி, தேரை இழுக்க அழைப்பு விடப்பட்டது. அப்பொழுது வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த நாய்க்கான் தேவன் வகையறா, கட்டகாளை அம்பலகாரர் தனது படையுடன் சென்று தேரை இழுத்து நிலைக்கு கொண்டு வந்து நிலையத்தில் அமர்த்தியதால், கட்டக்காளை அம்பலகாரர் பெயரால் ஒரு வடமும், ஒரு காரணமும் உண்டு என்று கூறப்படுகிறது.

பாகனேரி நாடு

இந்நாடு தற்போதைய சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காளையார்கோவில், கல்லல், திருப்பத்தூர் சிவகங்கை ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியது. இந்நாடு இங்கு வாழும் மக்களால் ஒரு வகை தன்னாட்சி முறையில் பேணிக் காக்கப்பட்டுவருகிறது.

இந்நாடு 22.5 தலைமைக்கிராமம் உள்ளடக்கியதாகும் ஸ்ரீ புல்வநாயகி அம்மன் இந்நாட்டின் பொதுத்தெய்வமாகும். நாட்டின் தலைவர் நாட்டார் எனப்படுகின்றனர். பாகனேரிக் கள்ளர்கள் இவர்களது திருமண உறவுகள் தாய் வழியில் வருகின்ற கிளைகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. தாய் மாமனும், சகோதரி மகளும் ஒரே கிளையைச் சேர்ந்தவர்களாய் கருதப்படுகின்றனர். அதனால் தாய்மாமன் சகோதரி மகள் திருமணம் இவர்கள் மத்தியில் கடுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கண்டர் மாணிக்கம் நாடு

'கண்டு கொண்ட மாணிக்கம்' என்ற சொல்லே 'கண்டர் மாணிக்கம்' என மருவியது. மேற்கே பட்டமங்கலம், நாட்டையும் கிழக்கே பாளைய நாட்டையும், வடக்கே ஏழுர்-பத்து நாட்டையும், தெற்கே குண்ணங்கோட்டை மற்றும் பாகனேரி நாட்டையும் எல்லைகளாக கொண்டு கண்டர் மாணிக்கம் நாடு அமைந்திருக்கிறது. இந்நாடு சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி பகுதிகளில் பரவி அமைந்திருக்கின்றது.

இந்நாடு 13.5 தாய்க்கிராமங்களை உள்ளடக்கியது. இப்போது 30க்கு மேற்பட்ட கிராமங்களாகப் பெருகி இருக்கின்றன. இவர்கள் தந்தை வழியில் பல வகைகளாகப் பிரிந்துள்ளனர். ஒரே வகையைச்சார்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியைச் சார்ந்த சில கள்ளர்கள், சிட்டன் மற்றும் கிழவன் மகன் ஆண்டி தலைமையில் இங்கிருக்கிறவர்களிடம் ஏதோ முரண்பாடு ஏற்பட்டு வெளியேறி, தென் மேற்கு நோக்கி வெள்ளலூர் நாட்டில் உள்ள புலிமலைப்பட்டிக்கு அருகில் புலிமலையோரம் வந்து தங்கியதாகவும் கூறப்படுகிறது. இவர்களை புலிமலைப்பட்டியில் வாழ்ந்து வந்த சாயும் படைதாங்கி வகையறாவைச் சார்ந்தவர்கள் தங்களுடன் பங்காளிகளாக இணைத்துக்கொண்டதாகவும் தெரிய வருகிறது. அவர்களுக்குரிய அம்பலத்தனமும், பூஜாரித்தனமும் கொடுத்து வெள்ளலூர் நாட்டுக்கள்ளர் என்ற அந்தஸ்தை கொடுத்ததாக அறியப்படுகிறது. இன்று வரை இப்பிரிவினர்கள் உடன்பிறப்புகள் போல் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது வந்தாரை வாழ வைக்கும் பண்பு வெள்ளலூர் நாட்டினரிடம் உயர்ந்தோங்கி இருப்பதாக கருதப்படுகிறது.

சிட்டன் வகையறா மற்றும் கிழவன் மகன் ஆண்டி வகையறாவைச்சார்ந்த பங்காளிகள் அனைவரும் வருடத்திற்கு ஒரு முறை தங்கள் முன்னோர்கள் வணங்கிய தெய்வங்களை கண்டரமாணிக்கத்திற்கு அருகில் உள்ள பெருச்சிகோயில் ஸ்ரீ சுகந்தவன ஈஸ்வரனையும், ஸ்ரீ பைரவசாமியையும், ஸ்ரீ ஒற்றைச்சனீஸ்வரையும் கோயிலுக்கு வெளியில் அமைந்தள்ள ஸ்ரீ கருப்பணசுவாமி தெய்வத்துக்கும் முறைப்படி, பூஜை செய்து பொங்கல் வைத்து, காலாஞ்சி மரியாதைகள் அடைந்து வருகிறார்கள். மறு நாள் அவ்வூருக்கு அருகில் உள்ள ஸ்ரீ கலிதீர்த்த அய்யனார் தெய்வத்திற்கு கிடாய் வெட்டி, சமையல் செய்து அவ்வூரில் உள்ளவர்களை அழைத்தும், வெள்ளலூர் நாட்டிலுள்ள தமது உறவினர்களையும் அழைத்தும் பெரிய விருந்து உபசாரம் செய்கிறார்கள். குலதெய்வ வழிபாட்டுக்கு எந்த அளவுக்கு உயர்ந்த மரியாதை இடம் கொடுக்கிறார்கள் என்பது வருடா வருடம் இந்தச் சிட்டன் மற்றும் கிழவன் மகன் ஆண்டி வகையறாக்கள் தங்கள் குலதெய்வங்களை (சாயும் படைதாங்கி கரை, வெள்ளலூர் நாடு) வணங்கி வருவது என்பதே மிகச் சிறப்பாக பேசப்படுகின்றது.

பதினாலு நாடு

சிவகங்கை நகரத்திலிருந்து கிழக்குப் பக்கமாக புதுக்கோட்டை கடற்கரை வரை பரவியுள்ள கள்ளர் நாடுகள். பதினாலு நாடுகள் என அழைக்கப்படுகின்றன. இது இன்றுள்ள சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம், திருப்பத்தூர் வட்டம், ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் வட்டம். திருமயம் வடடம், அறந்தாங்கி வட்டம் போன்ற பகுதிகளில் பரவி அமைந்துள்ளது. இந்நாடு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உஞ்சனை நாடு, செம்பொன் மாரிநாடு, தென்னிலை நாடு இரவு சேரி நாடு என அமைந்துள்ளது. பிற்காலத்தில் தங்களது பூர்வீகக்குடிப் பகுதியிலிருந்து பாசிக்குடி நத்தம் வளநாட்டிலிருந்து உறவினர்கள் பலர்வந்து தங்கியதால் அவர்களுக்கும் நாடுகளைப்பகிர்ந்து கொடுத்ததில் 14 நாடுகள் உருவாயின. மேற்கூறிய நான்கு நாடுகள் மையநாடாக இருந்த போதிலும், ஒவ்வொரு நாட்டிற்கும், சில உள்நாடுகளும், சில சேர்க்கை நாடுகளும் உள்ளன. இந்த நான்கு மைய நாடுகளுக்கும், ஒவ்வொரு பெரிய அம்பலகாரர்கள் உள்ளனர். இந்த நான்கு பெரிய அம்பலகாரர்களும் 14 நாடுகளுக்கும் தலைமை அம்பலகாரர்களாகக் கருதப்படுகின்றனர். இதுபோக ஒவ்வொரு கிராமத்திற்கும் பெரிய அம்பலங்கள் உள்ளனர்.

மேற்கூறிய நாடுகள் மட்டுமில்லாமல், பூங்குன்றம் நாடு, ஏழுர்பத்து நாடு, பனங்குடி நாடு போன்ற கள்ளர் நாடுகளும் உள்ளன. அவைமட்டுமில்லாமல் கொட்டகுடி, பதினெட்டான்குடி, சூரக்குண்டு, ஆட்டுக்குளம், நாவினிப்பட்டி வண்ணாம்பாறைப்பட்டி போன்றவை நாட்டு அந்தஸ்தினை பெறாமல் தங்களுக்குள் தனி அம்பலங்களை உருவாக்கிக்கொண்டு, தனிக்குழுக்களாக இருக்கின்றனர். மதுரை நகரத்தின் கிழக்கு நுழைவு வாயிலிருந்து புதுக்கோட்டை கடற்கரை வரை பரவி வாழ்கின்ற மதுரை மண்டலத்துக் கள்ளர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளைத் தங்களுக்குள் பல நாடுகளாகப் பிரித்து அவற்றில் அம்பலம் என்ற அதிகாரம் உருவாக்கி, தங்களைத் தாங்களே நிர்வாகித்துக்கொண்டு, வாழ்ந்து வந்ததால், நாட்டுக் கள்ளார்கள் அல்லது நாட்டார்கள், அம்பலகாரர்கள் எனப் பொதுவாக அறியபடுகின்றனர்.

ஆதாரம்: பிறமலைக்கள்ளர் வாழ்வும் வரலாறும் என்ற நூலில் குறிப்பிடப்படுகிறது. ஆசிரியர் இரா. சுந்தரவைத்தியத்தேவன் வழக்குறஞர், உசிலம்பட்டி.

பிறமலைக்கள்ளர்

மதுரை நகரத்து மேற்குப் பகுதியில் வாழ்கின்ற பிறமலைக்கள்ளர்கள் மேல்நாட்டுக் கள்ளர்கள் என்றும் ஆணையூர்க் கள்ளர்கள் என்றும் ஆய்வாளர்களால் அறியப்படுகின்றனர். இன்றைய மதுரைமாவட்டம் உசிலம்பட்டி வட்டம், சேடப்பட்டி, திருமங்கலம் வட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், சோழவந்தான் வட்டம், ஆகிய பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதி பூர்வீகமானாலும், மதுரை புற மாவட்டம், தேனி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ஆகிய பகுதிகளில் பரவி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பிறமலைக்கள்ளர் என அழைக்கப்படுகின்றனர்.

மதுரைக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள கள்ளர் நாடுகளிலிருந்து பல கள்ளர் குழுக்களுக்குள் ஏற்பட்ட அம்பல அந்தஸ்து, இவைகளினால் ஏற்பட்ட முரண்பாட்டால் வெளியேறி மேற்கு நோக்கி புலம் பெயர்ந்து, பல புதிய பகுதிகளை உருவாக்கி அதை 8 ஆகப்பிரித்து 8 நாடுகளாக கொண்டு பிறமலை கள்ளர் நாடு என்ற நாட்டை தோற்றுவித்தனர். இந்நாடு எட்டு நாடுகளாகவும் இருபத்திநான்கு உபகிராமங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. எட்டு நாடுகள் 1. திடியன், 2. வாலாந்தூர், 3. புத்தூர், 4. கருமாத்தூர், 5. பாப்பாப்பட்டி, 6. கொக்குளம், 7. வேப்பனூத்து, 8. தும்மக்குண்டு.

இக்கள்ளர்கள் பொதுவாக விவசாயம், காவல்காரர், படைவீரர் போன்ற தொழில்களில் ஈடுபாடு கொண்டு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டனர். தான் வாழுகின்ற பகுதிகளில் உள்ள நிலங்களை உழுது பண்படுத்தி பயிரிட்டு வாழ்கிறார்கள் வணிகர்கள், பெரும் விவசாயிகள் ஆகியவர்களுக்கு சிறந்த காவல்காரர்களாக இருந்தார்கள் அரண்மனைக் காவல்காரராகவும் நகரக்காவல்காரராகவும், கிராமக் காவல்காரர்களாகவும் நாட்டின் எல்கைக்காவல்காரனாகவும் காவல் தொழில் செய்து, கண்ணும் கருத்துமாக காத்து வந்தார்கள். அதனால் தான் காவல் தெய்வங்களாக கருப்புச்சாமி, அய்யனார்சுவாமி, அம்மன் சுவாமிகள், கிராமத்தேவதைகளை தனது குலத்தெய்வங்களாக வணங்கி வருகிறார்கள்.

தன் நாட்டிற்கு சிறந்த போர் வீரனாக சிறந்து விளங்கி, படைகளில் பல உயர்ந்த பதவிகளில் பணியாற்றியுள்ளனர். கள்ளன் என்பவனே காப்பவனே. தனக்குக்காவலில் கொடுக்க வேண்டிய கூலியை கொடுக்காமலோ, ஏமாற்றினாலோ, அது தனக்குரியது என்றே எடுத்துச்செல்வான். அதை மற்றவர்கள் கொள்ளையடிப்பது என்றும் கள்ளனுக்குரிய தொழில் எனவும் கூற ஆரம்பித்தனர். ஒரு பேரரசனுக்கு தனக்குத்தரவேண்டிய கப்பமோ, வரியோ மற்ற சிற்றரசன் தராவிடில், தராத நாட்டின் மீது படையெடுத்து மக்களைத் துன்பப்படுத்துவது, கொள்ளையடிப்பது சரி என்று கூறும் போது கள்ளர்கள் தங்களுக்குள் தரவேண்டிய கூலியை அதிகாரவர்க்கத்தினர் தரமறுக்கும்போது வேறு வழியின்றி, இரவில் கொள்ளையடித்தார்கள் அது சரி என அவர்களுக்குப்பட்டது.

பிரிட்டிசார் நம்மைச் சட்டப்படி சுரண்டவில்லையா? நம்மை வென்று இந்நாட்டை ஆட்சி செய்து, நம்மை அடிமையாக்கி, கொள்ளையடித்து, மக்களைத் துன்புறுத்தியவர்களையெல்லாம் இந்த நாட்டின் வரலாறு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இம்மண்ணின் மைந்தன் செய்தால் மட்டும் அவனை கள்வன், திருடன், கொலைகாரன், கொள்ளைக்காரன் என்று ஆதிக்க சக்திகள் அழைப்பது எவ்வகையில் சரி? உலகில் எங்கெங்கு வெள்ளையருக்கு எதிராக சுதந்திரப்போராட்டம் நடந்தாலோ, அந்த நாட்டில் ஏதாவ தொரு வகையில் மக்களை குற்றவாளி என்று அடையாளப்படுத்துவது ஐரோப்பியருக்கு கைவந்த கலை.

அதுபோல் 1918-ல் பிரிட்டிஷ் அரசு தமிழகத்தில் பிறமலைக் கள்ளர்களை குற்றப் பரம்பரையாக சர்வாதிகாரமாக உத்தரவிட்டது. என்னகொடுமை? ஒரு நாட்டில் ஒரு சாதியினர் முழுவதும் குற்றப்பரம்பரையினர் என அறிவிக்க பிரிட்டிஷாருக்கு உதவியாக இருந்தது யார்? ஆதிக்க சக்திகள் தான். இப்பிறமலைக்கள்ளர்களை அடக்கிவிட்டால் ஆங்கிலேயரிடம் நாம் நினைத்ததையெல்லாம் சாதிக்கலாம் என்று எண்ணத்துடன் தூண்டியவர்கள் யார்? ஆதிக்க சக்திகள்தான்.

1920-ல் கைரேகைச்சட்டத்தை எதிர்த்த பிறமலைக்கள்ளர்களை பெருங்காமநல்லூரில் குருவியை சுடுவது போல் வெள்ளையர்கள் சுட்டுக்கொன்றார்கள் சுமார் 19 பிறமலைக் கள்ளர்களான விடுதலை வீரச்சிங்கங்களை சுட்டுக்கொன்றது. ஜாலியன்வாலாபாக் படுகொலை போன்றது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். தண்ணீர் கொடுக்க வந்த மாயக்காள் வீர மறத்தியையும் இரக்க மில்லாமல் சுட்டுக்கொன்றார்கள். இப்பகுதியில் சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக நடந்த போர் என்றே கூறலாம். அதன்பின்பு நூற்றுக்கணக்கானோர் கை கால்களில் விலங்கிடப்பட்டு அடித்தே பல மைல் தூரம் இழுத்துச்செல்லப்பட்டனர், பலருக்கு ஆயுள் தண்டனையும், சில வருடம் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது. தேவர் பெருமகனார் கடும் முயற்சியின் விளைவாக 1947-மே 30-ம் தேதியன்று அரசு குற்றப்பரம்பரைச் சட்டத்தை ரத்துசெய்தது. இதன்மூலம் சுமார் 36 ஆண்டுகாலம் இம்மக்கள் தாங்கள் வாழ்கின்ற கிராமங்களையே திறந்த-வெளி சிறைச்சாலையாக அனுபவித்த கொடிய சட்டம் முடிவுக்கு வந்தது. பின் இவர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புத்துறை, கள்ளர் நல பொது நிதி துவக்கப்பட்டு கள்ளர் வளர்ச்சிக்கு கல்விச்சாலைகள் முழுமையாக செயல்பட ஆரம்பிக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப்பின் அரசு பிறமலைக்கள்ளர்களுக்கு கல்வி மற்றும் பொருளாதார சலுகைகள் அளிக்கப்பட்டன. அதன் விளைவாக நன்கு படித்து ஆசிரியர்களாகவும் பல துறைகளிலும் உயர்ந்த இடத்தை அடைய ஆரம்பித்துள்ளார்கள். வீரமும், விவேகமும் கொண்ட பிறமலைக்கள்ளர்கள் குற்றப்பரம்பரைச்சட்டத்தால் மற்ற இனத்தால் பின்தள்ளப்பட்டிருந்தாலும், இம்மக்கள் மன உறுதியோடு மற்ற இனத்தார் அளவுக்கு உயர்ந்து. இன்று தமிழகத்தில் எத்துறையிலும் தவிர்க்க முடியாத சக்தி ஆக உருவாகி வருகிறது இவ்வினம் என்றால் மிகையாகாது.

வெள்ளலூர்

பழங்காலை மேவாதே, புதுக்காலை வெட்டாதே என்ற கொள்கையுடைய நம் மக்களிடையே குலச்சரித்திரம் என்று ஒன்று இதுவரை இல்லை. பல பேருடைய குலசரித்திரங்களும் ஒரே அச்சில் வார்த்தெடுப்பாற்போல், படித்ததாகத்தான் தானே இருந்து வருகின்றன. எவர் குலத்தைக் குறித்தேனும் சில சரிதைப் பகுதி முதலியன வெளிவந்திருக்குமாயின் அவை கர்ண பரம்பரையில் வந்ததாயிருக்கின்றதேயொழிய ஆராய்ச்சியாளர் தன் ஆராய்ச்சியின் பயனை அறுதியிட்டு கூறிய முடிவுகளாக இல்லை. இவர்கள் எந்த நிலையினர், ஏனையோர் பழக்க வழக்கங்களும், இவர்கள் பழக்க வழக்கங்கங்களுள் எத்தகைய என என்பதை அறிந்து கொள்ள இந்த முயற்சி உதவுமானால், அதுவே யாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு கைகூடியதாகும் என்று கருதுவோம். உலகிலேயே மிகப்பெரிய அறிவு தன்னைப்பற்றி தெரிந்து வைத்திருப்பது தான். அதாவது தன்னையும் தன் குடும்பம், தன் சமூகம், தன் பண்பாடு, தன் நாடு போன்றவற்றையும் தெரிந்து வைத்திருப்பது தான். நமது நாட்டார்கள் பல நூறு வருட வாழ்க்கையை தங்கள் மூளையில் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். என்பதைப் பார்க்கும் பொழுது வியப்பாக இருக்கிறது. சமூகத்தின் அங்கம் தான் சாதி. அது ஒரு தனித்த அமைப்பல்ல. ஒவ்வொரு சாதிக்கும் சில தனித்தன்மைகள் இருந்தாலும், அந்த சாதி மட்டும் சமூகத்தில் தனித்து இயங்க இயலாது. அதனால் தமிழ்ச் சமூகத்தைப்பற்றி ஒரு பொதுவான யாராலும் அவர்களின் சொந்த சாதியைப்பற்றி புரிந்து கொள்ள இயலாது என்பதை உணர்ந்து தமிழ்ச் சமூகத்தின் பொது வரலாற்றிலிருந்து தனது இனவரைவுகளுக்குள் உள்ளே செல்ல முடியும்.

ஒரு சமூகத்தின் அரசியல் வரலாற்றை எழுதாமல், அதன் பண்பாட்டை மட்டும் விளக்குவதென்பது அடித்தளம் இல்லாமல் கட்டுவது போலாகும். நமது இனத்திற்கும், நமது வெள்ளலூர் நாட்டிற்கும் ஒரு தனித்தன்மை அரசியல் கொண்டதாகும். இம்மக்கள் தனித் தன்மை கொண்ட சாதியாக இருப்பதால் இவர்களுக்கென்று ஒரு நெடிய அரசியல் வரலாறு உள்ளது.

சமுதாயம்

தனி மனிதர்களின் கூட்டமைப்பே சமுதாயம். ஒவ்வொரு இனத்தைச்சார்ந்தவர்களும் சமுதாயத்தின் ஓர் உறுப்பேயாவர். அவர்களும் சமுதாயத்தில் பல நிலையில் இருந்தவர்களுடன் பழக நேரிட்டது. அவர்களுடன் நிலவிய உறவை தெளிவாக ஆராயும்போது வெள்ளலூர் நாட்டுக்கள்ளர்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த உயரிய நிலை தெரிய வருகிறது. அக்காலத் தாயார் வீரமகனைப் பெற்றெடுக்கவே விரும்பினர். தான் ஈன்றும் புறந்தரும் காளை போர்க்களம் சென்று பகைவரை வென்று நாடுகாக்கும் மன்னவனுக்கு துணை புரிய வேண்டும் என விரும்பினர்.

ஒரு குடும்பத்தில் தலைமைப் பொறுப்பினை ஆண்மகன் ஏற்றுச்செயல்பட்டாலும், பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய மதிப்பும் நிலையும் குறைக்கப்படவில்லை. மனையின் விளக்காகவும், வளமாகவும் அவர்கள் கருதப்பட்டனர். ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் நாட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமைகளை மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். நல்ல ஆண்மகனைப்பெற்று நாட்டுக்கு அளிப்பதை தனது முதன்மை கடனாக கருதினர் மறக்குடிப்பெண். தான் பெற்றெடுத்து பேணி வளர்த்த மகனுக்கு உரிய படைக் கலப்பயிற்சியளித்தும், கல்வி, சமுதாயத்தில் உள்ள நல்ல கதைகள், ஆன்மீகக்கதைகள், கேள்விகணைக்கற்று கொடுத்தும், அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை எனக் கருதப்பட்டது. இங்ஙனம் இவர்கள் தத்தம் கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயலாற்றி வாழ்ந்து வந்துள்ளனர்.

வழுத்தூர்

வடக்கு வேள்விநாடு வீரபாண்டிய நல்லூர் ஆகிய வெள்ளலூர் நாடு என்பதாகும். இந்திய நாட்டின் அரசியல் சட்டத்திற்கு வெள்ளலூர் நாட்டின் வாய்மொழிச் சட்டங்கள் முன்னோடியாக இருந்தது என்றால் மிகையாது. கி.பி.1278-ப்பின் தஞ்சைக்கு கிழக்கே வழுத்தூரிலிருந்து பல்லவராயர்கள் தெற்கே புறப்பட்டதாக வரலாறு கூறுகிறது. (பழங்கல்வெட்டுக்களை ஆராய்ந்த இந்திய அதிகாரி திரு.வெங்கையா கூறுகிறார்). சிவந்தெழுந்த திருமலைராய பல்லவராயர் என்பவர் பாண்டியர்களைப் பாதுகாத்தவரென்று திருநாரண குளத்தில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. மூன்று அல்லது நான்கு பல்லவராயர் அரசர்கள் காலத்தில் இருந்ததாக சான்றுகள் கூறுகின்றது. (கள்ளர் சரித்திரம்-பக்கம் 45)

பாண்டிய நாட்டரசரான உக்கிர வீரபாண்டி மன்னன் ஏழு ஆண்டுகள் தொண்டை மண்டலத்தில் வேங்கடாசலப் பல்லவராயரை அழைத்து வருதற்பொருட்டு காத்திருந்ததாகவும், பின் அவருதவியைக் கொண்டு சேதுபதி நந்திமறவனை வென்றதாகவும், அதன்பொருட்டு பாண்டியன் பொன்னமராவதி பக்கத்தில் நிலங்கள் கொடுத்தானென்றும், அரசனின் மருமகன் என்ற பட்டமும், ஒரு அரண்மனையும் தந்ததாகவும் செப்புபட்டயத்தில் சொல்லியிருக்கிறது. கி.பி.1287-ல் வழுத்தூர் பல்லவராயர்கள் திருக்

கோகரணம் என்னுமிடத்தில் தருமம் செய்திருப்பது தெரியவருகிறது.

கல்வெட்டில் இராஜ்யம் பண்ணியாளுகையில் என்று வருவதால் இவர்கள் அரசரென்றே சொல்லப்பட்டரென்பது விளங்கும். கி.பி. 1212-ல் ஒரு பல்லவராயன் ஆரணிப்பட்டியிலுள்ள கடவுளுக்கு நிலங்கள் விட்டமை புலனாகின்றது. வழுத்தூர் பல்லவராயர்கள் தங்கள் அடையாளமாக பல்லவன் குளம் என்ற வாவியும் பல்லவன்படி என்ற அளவுக் கருவியும் உண்டாக்கியிருக்கிருக்கின்றனர். இப்பொழுதும் தசரா விழாவில் அரிசி அளப்பதற்கு இப்படி கருவியாக விளங்குகின்றது. பல்லவன்குளம் என ஒன்று புதுக்கோட்டைக்கு அருகே பெரியூர் என்னுமிடத்தில் இருக்கிறது. வழுத்தூரில் அழிந்துபோன கோட்டைகள் உள்ளன.

புலிக்கொடியும், மீன், கொடியும், வெண்குடையையும், ஆறுகாற்சிங்காதன மும், ஆத்திமாலையும், பல்லவராயர்கள் கொண்டுள்ளனர். புலிக்கொடி தாங்கியது பல்லவர் சோழர்கள் தொடர்பைக் காட்டுகிறது. மீன்கொடி பாண்டியர்களைத் தோல்வியிலிருந்து காப்பாற்றிய பின் தரித் திருக்கலாம். சோழருக்குரிய ஆத்திமாலை சூடியிருப்பது இவர்கள் சோழர்களின் சார்பு பெற்றிருக்கலாம் என்பதனைக் காட்டுகிறது. வழுத்தூரில் அரசாண்ட அருண்மொழி தேவன் என்ற பல்லவராயர் குறுநில மன்னனாக நல்லாட்சி புரிந்து வந்தார். அவருக்கு இருமனைவிகள் மூத்த மனைவி பாண்டிய மன்னனின் மகள் இளைய மனைவி சேரநாடு (கொங்குநாடு) மன்னனின் மகள். இருமனைவிக்கும் தலா ஒரு மகன். இளைய ராணி தன் மகன்தான் பின்னாளில் பட்டத்து இளவரசான வேண்டுமென்று எண்ணி, படைத்தளபதியோடு மன்னர் நாட்டில் இல்லாதபோது சேர்ந்து சதி செய்து முதல் மனைவியையும், மகனையும் அரண்மனையிலேயே தீவைத்து கொல்வதற்கு முடிவு செய்கிறார்கள்.

சதியும் ரகசியமும் இருள்

இருளைக்காணும் போது எவருக்கும் ஒரு வித அச்சமும் திகிலும் ஏற்படுவது இயல்பு. அழகை மறைத்து, தெளிவை ஒழித்து மயக்கத்தை உண்டாக்குவதுதானே இருளின் வன்மை. சூழ்ச்சிக்கும், சூதுக்கும், தந்திரத்துக்கும், தகாத கொடுமைக்கும், தகாத நடத்தைக்கும் அது உடந்தையாக உடனிருந்து அவற்றை இயக்கி செயல்பட வைக்கின்றது. இருளில் தனி வழி நடக்க யார்தான் விரும்புவார்கள்? பள்ளமும், மேடும் பார்த்து பாதை தெரிந்து செல்ல இயலாதல்லவா? பாம்பு, தேள், நட்டுவாக்கலி போன்ற நச்சு உயிரினங்களும் பிற கொடிய விலங்குகளும் தம் தம் வேட்டைக்கு எழுதல், இந்த இருளைப் பயன்படுத்திக்கொண்டுதானே? எனவே தான் இந்த இருளிடம் நல் மனம் படைத்தவர்களுக்கு வெறுப்பும் பீதியும் தோன்றுகின்றன.

இந்த இருளைக்கொடியவர்களின் உள்ளத்துக்கு உவமைப்படுத்திப்பேசுதல் அறிஞர்கள் வழக்கம். தெளிவற்ற தன்மை மயக்கம் நரகம் ஆகியவற்றோடு இருளை ஒப்புமைப் படுத்தி கூறிகின்றார் திருவள்ளுவர். கொடியவர்களின் மனம் நல்லவை செய்யும் தன்மையை இழந்து மற்றவர்களுக்கு நரகம் போன்ற வேதனையை அளிப்பதிலேயே முனைந்து கொண்டிருக்கும். இவர்களது இதய வானில் தாய்மையின் ஒளி உதயத்தைக் காண்பதே அரிதன்றோ. இத்தகைய இருள் உள்ளம் படைத்த ஐந்து பேர் வழுத்தூர் கோட்டைக்குள்ளிருந்த ஒரு மாளிகையின் மாடியில் நடு இரவு பொழுதில் ஒன்றாகக்கூடி,

எதைப்பற்றயோ ஆலோசனைகள் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இது தளபதி கரியோன் என்றழைக்கப்படும் கருத்தராயன் மாளிகையில். மனிதச்சந்தடி ஒய்ந்து உலகமே கடும் துயிலில் ஆழ்ந்திருந்த இந்நேரத்தில் எங்கும் அமைதி குடி கொண்டிருந்தது. தெரு விளக்குகள் எண்ணெய் தீர்ந்து, மங்கிய மினுமினுப்போடு துலங்கின. வெளியுலக இருளின் ஆட்சிக்கு அரண் செய்வது போல் அந்த மாடியிலும் மற்ற விளக்கெல்லாம் அணைக்கப்பட்டு ஒரு சிறு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளி ஐவர் முகங்களிலும் பட்டு அவர்களை இன்னார் எனக்காட்டிக் கொடுத்தது. ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருந்த ஐவரில் ஒருவன் தளபதி கரியோன் ஒருவன் துணைத்தளபதி நாராயணன், அரண்மனை பொக்கிஷதாரர் முத்துப்பிள்ளை மற்றுமுள்ள இருவரில் ஒருவர் மன்னனின் இளையராணி பொன்னுமணி மற்றொருவன் இவர்களுக்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பு கொண்டவனுமான குட்டிப்பிள்ளை.

ஏன் இவர்கள் இந்நேரத்தில் இப்படி அடக்கமாக ஆலோசனைகள் நடத்துகின்றார்கள்? நாட்டின் ஆட்சியில் பொறுப்புடையவர்களாயிற்றே இவர்கள். அச்சுமை மனத்தை உறுத்தியதால் அதை சுலபமாக்கி கொள்ள இப்படி கூடியிருக்கிறார்களோ? இல்லவே இல்லை. இவர்கள் உரையாடலிலிருந்து அவர்கள் மனத்தை மட்டுமல்ல இவர்களது திட்டத்தையும் புரிந்து கொள்ளலாம்.

இளையராணி மற்றவர்களைப்பார்த்து மெதுவாகப் பேசத்தொடங்கினார். நல்ல வாய்ப்பு நம்மை நோக்கி இப்போது வந்துள்ளது. மன்னர் நாட்டில் இப்போது இல்லை ஆலயதரிசனத்திற்காக தீர்த்தயாத்திரை பல ஊர்களுக்கு சென்றுள்ளார். அமைச்சர் கேசவரும் அரசுப்பணி நிமித்தமாக வெளியூர் சென்றுள்ளார். இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு முன்னமே முடிவு செய்தபடி பட்டத்து ராணி மாளிகையை தீ வைத்து எரித்து விடலாம். அதில் ராணியும் பட்டத்து இளவரசனும் இறந்து விடுவார்கள். பிற்காலத்தில் எனது மகன், மன்னருக்குப்பின் நாட்டை ஆளும் நிலைக்கு வந்து மன்னராகி விடுவான். நாம் நினைத்தபடி நடந்தவுடன் உங்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் சொந்த நிதிக்களஞ்சியம் நிரப்பப்படும். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று வினவியபடி, அங்கிருந்தவர் முகங்களில் தனது பார்வையைச்செலுத்தினார்.

ஏனைய நால்வரும் ஆமோதிக்கும் விதமாக தலையை அசைத்தார்கள். இரவின் ஆயுள்குறைந்து வருவதால், அவரவர்கள் திருப்தியுடன் கரியோனிடம் விடைபெற்று வெளியேறினர். இந்தக்கொடியவர்கள் அடக்கமாய்ப்பேசிய இச்செய்தி முடிவைக்கேட்டு அங்குள்ள சுவர்கள் நடுங்கின. கதவுகள் துடித்தன, மற்றுமுள்ள ஒவ்வொரு பொருளும் திகைப்புற்றுக்குமுறின, அப்படிப்பட்ட ஒரு பயங்கரக்குரூரத்தையல்லவா இவர்கள் செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்.

சிலந்தி வலை

அந்த வீட்டின் முன்கூடத்திலுள்ள ஒரு மூலையில் சிலந்தி வலையொன்று தொங்கிக்கொண்டிருக்கிறது. தனது நுண்ணிய இயல்திறனால் பளபளக்கச் செப்பமுடன் வலையை இழைத்து முடித்திருந்த சிலந்தி தனது பசி வேட்கையின் இரைக்கு வேட்டையாக வந்து விழும் பூச்சி பிராணியை எதிர்பார்த்தபடி வலையில் ஒரு கோண அற்றத்தில் ஆடாது அசையாது பதுங்கிக்கொண்டிருந்தது. பொன் வண்ணக்கோலம்

படிந்து திரட்சிபெற்ற வண்டொன்று அவ்வலையின் பக்கம் பறந்து வந்தது. சிலந்தியைக் காண்கின்றது. அதன் நய வஞ்சகத்தை உணர்ந்து கொள்கின்றது.

பூந்தேனை அருந்திய பூரிப்பில் அது அவ்வலையைப்பார்த்துக்கேலி ஆட்டம் ஆடியது. ஒரு சுற்று இறங்கிச்சுழன்று வேககதியில் அவ்வலையில் வந்து மோதிற்று, ஆகா சுவையான உணவுப்பண்டம் கிடைத்தது என அச்சிலந்தியும் எண்ணுகிறது. ஆனால் அடுத்த நொடி நடந்த தென்ன? வலையின் ஒரு பகுதி அறுந்து தொலைந்ததைத் தவிர வண்டு அதிலே பின்னப்படவில்லை. இரண்டு மூன்று முறை இவ்விதம் நடைபெற்றது. வலையின் பெரும்பகுதி அழிந்துதான் கண்ட பலன். வண்டுக்கு எதுவும் நேரவில்லை. அதன் உடலும் சிறகின் வலுவும் அவ்வளவு வன்மை கொண்டதாயிற்றே.

சிலந்தியோ தனது இழப்புக்கும் தோல்விக்கும் எரிந்து துடித்தது. பெருவண்டு மோதிய இடத்தில் சிறு வண்டோ ஈயோ வேறு சிற்றுயிரோ சிக்கியிருந்தால் சிலந்தியின் வயிறு புடைத்திருக்குமல்லவா? கரும்புக்காட்டில் புகுந்த யானையைப்போல் வண்டு சிலந்தியின் பின்னலைச்சிதைத்தபின் அப்பக்கம் எட்டிப்பார்க்கவில்லை சிலந்தியின் வேலை என்ன? மீண்டும் வலையை இழைக்கத்தொடங்கிற்று.

இப்படி நயவஞ்சகர்கள் சூழ்ச்சி வலையைப் பின்னி வலுவற்றவர்களை தங்களுக்கு இறையாக்கிக் கொள்கிறார்கள். வலுவான மதியுகியுடன் மோதும் போது அவ்வலைகள் அறுக்கப்பட்டு நாசமடைகிறார்கள், இருந்தாலும் தன் எண்ணத்தை அவர்கள் மாற்றிக்கொள்வதில்லை தான் அழியும் வரை.

அமைச்சரின் அறிவார்ந்த திட்டம்

இந்த நடவடிக்கையை அமைதியாக அந்த மாளிகையின் ஜன்னலோரத்தில் இருட்டில் அமைதியாக இருவிழிகள் கவனித்துக்கொண்டிருந்தது. சதிகாரர்கள் வெளியேறிய பின் மெதுவாக பூனைபோல் மாளிகையிலிருந்து மறைந்தது.

மறுநாள் காலை அந்த உருவம் அமைச்சர் கேசவர் இல்லத்திற்குள் சென்றது. சிறிது நேரம் கழித்து வெளியூர் சென்றிருந்த அமைச்சர் இல்லத்திற்குள் வந்தவுடன் அமைச்சரை அவருடைய தனியறையில் சந்தித்தது. அந்த உருவம் அமைச்சரின் நம்பத்தகுந்த முதன்மை ஒற்றன். முன்தின இரவு தளபதி மாளிகையில் நடந்த நிகழ்வுகளை தெரிவித்தான். ஒற்றன் சென்றவுடன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான வெள்ளையப்பனை வரவழைத்து, பட்டத்து ராணியையும் இளவரசனையும் இன்றிரவே ரகசியமாக பாண்டிய நாட்டிற்கு அழைத்துச் சென்று விடவேண்டும் என உத்தரவிடுகிறார். துணைக்கு பணியாளர்கள், பாதுகாப்புக்கும் சிறந்த படை வீரர்கள் சிலரையும் ஏற்பாடு செய்கிறார். திட்டத்தின்படி அன்றிரவே வழுத்தூரிலிருந்து ரகசியமாக தென் மேற்கே பாண்டிய நாட்டை நோக்கி புறப்படுகிறார்கள்.

வையத்தேவியின் மேனியில் ஒளிச்சுடர் ஏற்றிய வண்ணம் வான வீதியில் பவனிவந்து கொண்டிருந்தான் வெண்மதிச்செல்வன். அவன் எழிற்கோலத்தில் சொக்கிய தாரகைப் பெண்கள் ஒவ்வொருவரும் அவனைத் தம் தம் பக்கத்தில் வந்து கொள்ள கண் சிமிட்டி அழைத்துக்கொண்டிருந்தனர். முழு மதியோ இதை வகை செய்யாது, தன் போக்கில் சென்று வெண்முகிலாம் திரைத்துகிலில் தனது முகத்தை மறைத்து விளையாடிக்கொண்டிருந்தான். இந்த ஒளியால் குளிர்ந்த பூங்காவினது புதிய அரும்புகள் பொதியவிழ்ந்து மூச்சு உயிர்த்தன. அவற்றினின்றும் கமழ்ந்த நறுமணம் நெடுந்

தொலைக்கெல்லாம் காற்றில் பரவியது.

கூடுகளில் அடைந்திருந்த பறவைகளில் சில பரவி வருகின்ற ஒளி வெள்ளத்தை தமது அறியாமையின் காரணமாக வெள்ளி நீர்ப்பெருக்கெனத் திகைத்து மயங்கிப் பீதியால் அலறிக்கொள்கின்றன. இயற்கையின் இந்த மோகனப்பேரழகை அனுபவித்த வண்ணம் சிலர் நடந்து கொண்டிருந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக பட்டத்துராணியையும், இளவரசனுக்கும் உதவியாக அவர்களுக்கு உதவியாக பல வகுப்பினரையும் கூடவே அமைச்சர் கேசவர் அனுப்பி வைக்கிறார். அவர்கள் தனது தந்தை நாடான பாண்டிய நாட்டுக்கு தெற்கு நோக்கி தப்பித்து வருகிறார்கள். ராணியும், தனது மகனும் கூட வந்தவர்களும் தென்மேற்கே பயணம் செய்து பாண்டிய நாட்டில் மதுரைக்கு வடக்கே அழகர் மலைக்கு வந்து சேருகிறார்கள்.

அழகர் மலை

உலகத்து உயிர்களை எல்லாம் தன் ஒளி கிரணங்களால் வாழ்விக்க வேண்டிய கடலிலிருந்து வெளிப்பட்ட ஆதவன். 'ஓ! கரிய மேகங்களே, இது கார்காலம்! நீங்கள் உங்கள் கடமையைச்செய்பவனே செய்யுங்கள்' என உத்தரவு கொடுத்து விட்டு அருகிலிருந்த சில கரிய மேகங்களை எடுத்து தன்மேல் போர்த்திக் கொண்டு மீண்டும் தூங்கப்போய் விட்டான்.

ஒரு மாலை நேரம், மேகங்கள் வானத்தில் இருந்த காட்சி, அழகை வெளிப்படுத்தாமல் ஏதோ ஒரு பயங்கரமான காட்சியாகத் தோற்றமளித்தது. ஆதவன் மேற்கே மறையும் நேரம் கூட ஆகவில்லை. அதற்கு முன்னதாகவே ஆகாயத்தில் திரண்டிருந்த கரிய மேகங்கள் ஒளியை மறைத்த காரணத்தால் கையில் உள்ள ரேகைகளைக்கூட காணமுடியாத அளவு இருள் பரவ ஆரம்பித்தது.

அருகில் இருந்த சமவெளிகள், ஆறுகள், பூந்தோட்டங்கள், மலைகள், குகைகள் எங்கும் இருள் மூட ஆரம்பித்தது. ஆனாலும் மலையிலிருந்து விழும் அருவி வெள்ளியை உருக்கி வார்த்தார் போல் கண்களுக்குத் தெரிந்து கொண்டிருந்தன. பறவைகள் சில சில இடங்களில் அவைகள் எழுப்பும் ஓசைகள் மட்டும் நாங்கள் இங்கே தான் இருக்கிறோம் என கூறிக்கொண்டிருந்தன. அந்த மலையடிவாரத்திலுள்ள பாதையில் சுமார் இருபது பேர் கொண்ட ஒரு சிறு குழு குதிரைப்படையுடன், இரு பல்லக்குடன் அமைந்துள்ள குதிரை பூட்டிய ரதம் போன்ற வாகனமும் வந்து கொண்டிருந்தன. குதிரைகள் முழுவதும் வியர்வை தோன்றி பக்கவாட்டில் ஒழுகிக்கொண்டிருந்தது. குதிரையில் உட்கார்ந்திருந்தவர்கள் கூட உடல் முழுவதும் புழுதியுடன் காணப்பட்டனர். அதன் மூலம் அவர்கள் வெகு தொலைவிலிருந்து தங்களுடைய பயணத்தை தொடர்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

நீண்ட பயணத்தின் காரணமாக களைப்புற்ற அவர்கள், கீழே இறங்கி அருகிலிருந்த தோப்பிலிருந்த மரங்களில் குதிரைகள் லகான்களை கட்டிவிட்டு, பல்லக்கு வண்டியிலிருந்த ஒரு பெண்ணையும் சுமார் ஐந்து வயதுள்ள பையனையும் மெதுவாக இறங்க உதவினார்கள். அந்த வண்டியிலிருந்த பெண்களும் இறங்கி தங்களை ஆசுவாசப்படுத்திகொண்டார்கள். வானத்தின் தோற்றம் மிகவும் பயங்கரமாக இருந்தது. அதன் தோற்றம் இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் பயங்கரமான புயற்காற்று வீசக்கூடும் என்பதைத்தெளிவாக அறிவுறுத்தியது. காற்று மெல்ல மெல்ல வேகம் கொள்

ளத்தொடங்கியதால், மலைகளிலும் மலைகளிடையேயும் பெரிய அளவில் ஓசை உண்டாகத் தொடங்கியது.

கிடுகிடுவென மேகங்கள் கர்ஜிக்கத் தொடங்கிவிட்டன. இப்படிப்பட்ட இயற்கை சீற்றம் மிக்க நேரத்தில் எங்கேயும் செல்வது என்பது ஆகாத காரியம். வானம் மழையைப்பொழிந்து முடியும் வரை ஏதாவது ஒரு இடத்தில் தங்கியிருப்பதே நல்லது.

சற்றுத்தொலைவில் ஒரு குடிசையில் இருந்து சிறிய வெளிச்சம் தெரிந்தது. அக்குழுவிலிருந்த ஒரு நடுத்தர வயது நபர் அங்கு சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்து குழுவினரை அழைத்துக் கொண்டு அக்குடிசையின் அருகிலிருந்த ஒரு வீட்டுக்கு அழைத்துச்சென்றார். அங்கு ஒரு பெரியவர் அவர்களை வரவேற்று அவர்கள் தங்க இடமளித்தார். வெளிச்சத்திற்கு இரண்டு சிறு விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தன. அங்கே குழுவினர் சாப்பிட பழங்களும் ஒரு பாத்திரத்தில் சுட வைத்து பாலும் இருந்தன. உணவருந்திவிட்டு இரவு ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு தனது இல்லத்துக்கு சென்றார். அவர்கள் யார்? வழுத்தூரிலிருந்து இரவில் கிளம்பிய பட்டத்து ராணியும், இளவரசனும், வெள்ளையப்பனும் பணியாளர்களும் மற்றும் படை வீரர்களும் தான். பயணக்களைப்பினால் அனைவரும் அயர்ந்து நித்திரை கொண்டனர். ஆனால் வெள்ளையப்பன் மட்டும் கண்ணயராமல், ‘முயற்சியும் செயல்பாடுகளும் மனிதன் பொறுப்பில் தான் இருக்கின்றன. ஆனால் அதன் பலனும், வெற்றியும், தோல்வியும் இறைவனின் கையில் இருக்கின்றன‘ என நினைத்துக்கொண்டு நாளைக்காலை என்ன செய்வது என்ற சிந்தனையிலேயே ஆழ்ந்துவிட்டார்.

வெள்ளையப்பன்

வெள்ளையப்பனுக்கு நாற்பது வயது தாண்டிய நடுத்தரவயது. நல்ல உடல் அமைப்பு, நல்ல உயரம், மாநிறம், அகன்ற மார்பு, நீண்ட கைகள் கம்பீரமான பார்வை நன்றாக ஆலோசிக்கும் தன்மை பெற்றவர் என்பதும் தெரிந்தது. அவருடைய சிந்தனையின் எல்லையே ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கியிருந்தது. ராணியையும், இளவரசர்களையும், மற்றவர்களையும் பத்திரமாக பாதுகாத்துச்செல்ல வேண்டும் என்பதே அவருடைய தலையாய எண்ணம். மனிதர்களில் சிலர் இம்மாதிரியான சாதிக்க, மிகவும் காரியத்தை செய்து முடித்துவிட துடிக்கும் போது அவர்கள் தங்களின் உயிர் மூச்சு அடங்கும் வரை அதனின்றும் விலக மாட்டார்கள் ஒரு சமயம் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெறுமேயானால், அவர்கள் பெருமை பெற்ற வீரர்களாகி நிம்மதியாக தங்கள் வாழ்நாளை கழிப்பார்கள்.

ஆனால் தங்கள் எண்ணப்படி அவர்களால் வெற்றியை அடைய முடியாமற்போய்விட்டபோது, வாழ்நாள் முழுவதும் தங்கள் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றிபெறாமல் போய்விட்டது பற்றியே சிந்தித்துப் பைத்தியம் பிடித்தவர்கள் போல் ஆகி விடுவார்கள். இளமையில் மிகவும் வீரமிக்க தைரியசாலியாக இருந்து விட்டவர்கள் கூட குறிப்பிட்ட வயதில் இந்த நிலையை அடையும் போது எடுத்துக்கொண்ட காரியத்தினால் ஏற்படும் எதிர்பாராத விபத்திலிருந்து சிலர் தப்ப முடியாதவராகி விடுகிறார்கள்.

இவைபோன்ற தத்துவ விதிகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர்கள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள் அவர்களில் ஒருவராக வெள்ளையப்பனும் உள்ளார். காலையில் மழை நின்றிருந்தது.

சூரியன் பகல் பொழுது முழுமைக்கும் தான் ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்ய வேக வேகமாக கீழ்வானிலிருந்த மேலெழும்பலானான். மேற்குபுறத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே மலைக்கூட்டம். அந்த மலை முகடுகளுக்கு இடையே சூரியனின் ஒளிக்கதிர்கள்.

அந்த மலை முகடுகள் வெள்ளி நிறமாகத்தெரிந்து. அங்கு வளர்ந்திருந்த பெரிய பெரிய மரங்கள் கிழக்கே இருந்த அகன்ற பூமியும் பச்சை பசேலென்றிருந்தது. பசுமையின் காரணமாக அங்கு நிலவிய இயற்கை காட்சி காணக்கிடைக்காத ஒன்றாக இருந்தது.

அனைவரும் அங்கு நின்று, தங்களை மறந்து இயற்கை காட்சியில் லயித்திருந்தார்கள் அப்பொழுது அங்கு வந்த பெரியவர் தன்னைத் திருமலைக்கோனார் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு இரவு, நேரம் என்பதாலும் அனைவரும் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? என வினவ இல்லை என்றார். வெள்ளையப்பன் நாங்கள் பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறோமென்று சொல்லும் போது, குதிரைகளின் குளம்படி சத்தம் என்று கேட்க ஆரம்பித்தது. திருமலைக்கோனார் சற்று சந்தேகச்சாயலுடன் திரும்பிப்பார்த்துவிட்டு எதற்கும் அனைவரும் மறைவாக இருந்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு பாதையை நோக்கிச்சென்றார்.

அங்கு ஒரு சிறு குதிரைப்படை ஒன்று வந்து நின்றது. அவர்களின் தலைவன் திருமலையிடம் பத்து, இருபது பேர் இந்தப்பக்கமாக நேற்று வந்தார்களா? எந்தப்பக்கம் சென்றார்கள்? என அதிகாரத் தோரணையுடன் விசாரித்தான்.

அவன் தான் வழுத்தூர் தளபதி கரியோன், பட்டத்து ராணியும் இளவரசன் பாலகன் விஜயனும் மற்றவர்களும் இரவோடிரவாக யாருக்கும் தெரியாமல் வெளியேறியது தெரிந்து இளையராணி பொன்னுமணி, கரியோனியிடம் அவர்களை விரட்டிப்பிடித்து அனைவரையும் கொன்றுவிடு என்று உத்தரவிட்டிருந்தாள். தங்களது ரகசிய சதி வெளியே தெரிந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் அவர்களை பின் தொடர்ந்தே இங்கு வந்துள்ளான்.

திருமலைகோனார்

அழகர் மலையில் ஆடுமாடுகள் மேய்த்துக்கொண்டு கோனார் ஒருவர் வாழ்ந்து வருகிறார். அவரிடம் இரவில் தஞ்சமடைகிறார்கள். அங்கே வழுத்தூரில் இவர்கள் தப்பியதையறிந்து, அவர்களை தேடிப்பிடித்து கொன்றுவிடுமாறு படைத்தளபதிக்கு இளையராணி உத்தர விடுகிறார்கள்.

தளபதி வழிநெடுக விசாரித்துக் கொண்டே வந்து அழகர்மலைக்கு வந்து சேருகிறான். அப்பொழுது அங்கிருந்த கோனாரிடம் விசாரிக்கிறான். கோனாருக்கு அப்பொழுதுதான் விஷயம் புரிகிறது. தம்மிடம் தஞ்சமடைந்தவர்கள் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அக்காலத்தில் தஞ்சமடைந்தவர்களை காப்பது மரபு. கோனார் அவர்கள் தளபதியிடம், தாங்கள் தேடி வந்தவர்கள் என்னிடம் தான் தஞ்சமடைந்து உள்ளனர். அவர்களை காப்பது என் கடமை.

ஆனால் அவர்களை உன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றால், இங்கே உயரமான மரத்தில் இருக்கும் கனியை ஒரே அம்பில் எய்து உடைக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார். சரி என்று

கூறி நிபந்தனை விதிகளுக்குட்பட்டு, தளபதி அம்பை எய்தான். கனி விழுகவும் இல்லை, உடையவும் இல்லை. ஆனால் அக்கனி பதினெட்டு வருடத்திற்கு ஒரு முறை தானாகவே உடையும்.

தளபதி சவாலில் தோல்வியடைந்து தன்நாட்டுக்கே திரும்பி சென்று அனைவரையும் கொன்று விட்டதாக ராணியிடம் கூறி, மன்னன் திரும்பி வருவதற்குள் பட்டத்துராணியின் அரண்மனையையும் தீவைத்து கொழுத்தி விட்டு, தானாக அரண்மனை எரிந்து விட்டதாகவும் அதில், ராணி, இளவரசன் மற்றும் சேவகன், வேலையாட்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்று மன்னன் நம்பும்படி கூறிவிட்டார்கள்.

கனிந்த உள்ளம்

அது இளவேனிற்காலம் வசந்தம் எங்கும் முகம் காட்டிக்கொண்டிருந்தது. மாமரங்கள் செந்தளிர் கொழுந்தும் பூங்கொத்துக்கள் தாங்கிப்பிஞ்சு பிடித்தும் பருவத்தின் இயல்பைகாட்டின. பூபாகத்தின் ஆழ அடியிலுள்ள பொற்குவியல் அனைத்தையும் வேர்களின் வழியே இழுத்து அழகுக்காக மேனியெல்லாம் பரத்திக்கொண்டதுபோல், கொன்றை மரங்கள் கோடிக் கோடி மஞ்சள் மலர்கள் தாங்கி அசைந்தன. முல்லைக்கொடிகளும், பவள மல்லிகை மரங்களும் அருள் நிரம்பியவர் இதயக்கனியைப்போல் வாச மலர்களை வாரிச்சொரிந்து கொடைத்திறம் காட்டின.

இயற்கை தேவி வித விதமாக மலரணிகளைப் பூண்டு ஏனோ இப்படி வையகத்தை மயக்குகின்றனர். அவளது பருவ மலர்ச்சியில் மயங்கித்தான் குயில்கள் இப்படி கூவுகின்றனவா? அவள் அளித்த மதுவை அருந்தி இந்த வண்டுகள் பண் இசைக்கின்றனவா? அல்லது மலர்க்காதலின் மோகனத்தில் மயக்கம் கொண்டு சுழன்று ஆடி அசைந்து இப்படி நாதம் பாடுகின்றனவா? யாரோ அறிவார்?

காலை புலர்ந்து சற்றுப்பொழுது ஆயிற்று, ஆதவன் தன் பொன்னொளிப் போர்வையை வீசி மாயா விநோதங்களைப் புரிந்து கொண்டிருக்கின்றான். அவனது ஒளியமுது சோலைகளையும் அவற்றுக்கு அப்பாலுள்ள ஓடை நீர்ப்பெருக்கையும் அடர் வனாந்திரங்களையும் எழிலாக்கிப் புதுமையின் மெருகை ஏற்றிக்கொண்டிருந்தது. விந்தை நிறைந்த இக்காட்சியில் உள்ளம் சொக்கிப்பறவைகள் சோலைகளை இசையரங்காக ஆக்கிய இன்ப வேளை இது.

மறுநாள் அழகர்மலைக் கோனார் தன்னிடம் தஞ்சமடைந்தது அரசகுடும்பம் என்றறிந்ததாலும், மேலும் அன்றைய நாளில் பாண்டிய நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருந்தது. இந்த சூழ்நிலைகளில் அவர்களை அழைத்து நீங்கள் இப்படியே கிழக்குநோக்கி சென்றால் வளமான பகுதி உள்ளது. அங்கு சென்று பிழைத்து கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பி வைக்கிறார். தங்களது குலதெய்வங்களை வணங்கி மேற்கே அழகர் மலையானையும், அவரை காவல் புரியும் காவல் தெய்வம் பதினெட்டாம்படி கருப்பனையும் நினைத்து வணங்கி அடுத்து வாழ வேண்டிய வழிமுறையைக்காண முயற்சிக்க ஆரம்பிக்கிறார்கள். பட்டத்துராணி இளவரசர் மற்றும் வந்தவர்களுடன் ஒரு வலையர் தலைமையில் கிழக்கு நோக்கி புறப்படுகிறார்கள். அந்த இளவரசன்தான் வெள்ளலூர் நாடு என்ற பகுதியை ஆட்சி செய்யப்போகிறான் என்று அழகர்மலைத் தெய்வங்கள் வாழ்த்தியனுப்புகிறார்கள்.

அந்த இளவரசன்தான் நமது கதாநாயகன் சுந்தரத்தேவன் என்ற விஜயத்தேவன்.

பழையூர்பட்டி

அழகர்மலையிலிருந்து கோனார் பெருமகன் வழியனுப்பிவைக்க விஜயதேவன் தனது தாயாருடனும், தன்னுடன் சோழ மண்டலத்திலிருந்த தனக்கு பாதுகாப்பாக வந்த குழுவினருடன் கிழக்கு நோக்கி காலைக் கதிரவனை தொழுது புறப்பட்டு வருகிறான்.

வீரமும் விவேகமும் உள்ளடக்கிய புதிய தொரு சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கப் போகும் தலைவனை கதிரவன் தனது ஒளியால் தக தகவென்று மின்ன வைத்து தங்க மகனை வரவேற்று வழிகாண்பிக்கிறான். வழியெங்கும் கரடு முரடான பாதைகளை மலர்கள் காற்றின் அரவணைப்பில் விழுந்து மென்மையாக்குகின்றன. சூரியனும், தனது மகனான சூரிய குலத் தோனுக்காக தனது வெக்கையைக் குறைத்து வீரத்தாலாட்டுடன் தான் மறையும் வேளைக்குள் பழையூர் என்ற புனிதமான இடத்திற்கு வந்து சேர உதவுகிறது. அங்கேயே தங்களது குழுவினருடன் இரவு தங்கமுடிவு செய்கிறார்கள். சந்திரனும் எனது பங்குக்கு பிரகாசமான ஒளி கொடுத்து இதமான காற்றுடன் தலைமகனை ஓய்வெடுக்க வைக்கிறது. குழந்தை தனது தாயின் சேலைத்தொட்டியில் தூங்குவது போல நிம்மதியாக விஜயதேவன் தூங்குகின்றான்.

பறவைகள் இனிய குரல்களால் கீதங்களை எழுப்புகின்றன. தலைவன் எழுகின்றான். தனது தாயைத் வணங்கிவிட்டு, தனது குழுவினருடன் கிழக்கே செல்ல எத்தனிக்கிறார்கள். தங்களது குடும்பச் சந்ததி பேழைப் பெட்டியைத் தூக்கும்போது பேழைப்பட்டி அசையவில்லை எவ்வளவோ முயன்றும் தூக்க முடியவில்லை. அப்பொழுதுதான் விஜயதேவன் தாயாருக்கு அழகர்மலை கோனார் பெருமகன் கூறிய சொல் ஞாபகம் வருகிறது. எங்கு பேழைப்பட்டி கிளம்பவில்லையோ அதுதான் தாங்கள் வசிக்கவேண்டிய இடம்.

மக்களின் ஆவணம் வரலாறு இல்லையா?

நம்முடைய பெரும்பாலான வரலாறுகள் களத்தில் தலைநகரங்களில் சௌகரியமான இடங்களில் உட்கார்ந்திருப்பவர்களால் உருவாக்கப்படுகின்றன. அரசின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பதிவுகளைத்தொகுப்பவர்கள் மக்களிடம் உள்ள பதிவுகளைச்சீந்துவதில்லை பதிவு செய்யப்படாத எவ்வளவு பெரிய உண்மையும் வரலாறு ஆவதில்லை இது மாற்றப்படவேண்டும். கிராமங்களில் வயதானவர்கள் விபரம் தெரிந்தவர்கள் அவர்கள் மூலம் செவிவழிச்செய்திகளையும், பழக்க வழக்கங்களையும் உண்மை நிலையை உலகுக்குத்தெரிய வைக்கவேண்டும்.

குலக்கொழுந்து

ஆண்டுகள் பல கடக்கின்றன. விஜயதேவனுடன் வந்த குழுவினர்கள் பழையூரை பண்படுத்தி வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். வலையர் பெருமகன், விஜயதேவனை நன்கு வளர்த்து, இளவரசனுக்குரிய வாள்வித்தை, வில் வித்தை, வேட்டையிலும் தேர்ச்சி பெற வைக்கிறார். தனது தாயாரிடமிருந்து நல் வழிக்கதைகள், போதனைகளை பெற்று சிறந்த பண்பும், அறிவும் விஜயதேவனின் புகழ் கள்ளர் நாடுகளெல்லாம் பரவ ஆரம்பித்தது.

பழையூர்பட்டியிலும் அதன் சுற்று வட்டார பகுதியிலும் சிலர் கள்ளர்கள் வாழ்ந்து வருகிறார்கள் அவர்கள் புதியதாய், கூட்டமாய் கண்டதும் எந்த பிரச்சனையும் செய்யாமல் நமது இனத்தவர்தான் எனக்கருதி இணக்கமாக வாழ ஆரம்பிக்கின்றனர். இவர்கள் ஆதிக்கள்ளர்கள் என்று அறியப்படுகின்றனர். இவர்கள் முறையே செம்புலிதேவன், சலுப்புலி தேவன், நண்டன் தேவன் ஆகியோர் ஆவார். இவர்கள் மேலூர் பகுதியை சேர்ந்த கள்ளர்கள் ஆவார்கள்.

விஜயதேவன் திருமண வயது வந்தவுடன் மயில்ராயன் கோட்டை நாட்டைச்சார்ந்த சிற்றரசன் தனது மகளை திருமணம் செய்து வைத்து சீதனமாய் இன்றைய வெள்ளலூர் நாட்டின் வடக்கு வடகிழக்குப் பகுதிகளை வழங்கினான். சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும்போது ஒருநாள் தமறாக்கி நாட்டில் வேட்டைக்குச் செல்லும்போது விஜயதேவனுடைய அழகு, வீரம், அறிவு கூர்மையை அறிந்து அந்நாட்டின் மன்னன் தனது மகளை விஜய தேவனுக்கு மணமுடித்து வைக்கிறார். தமறாக்கி மன்னன் தன்மகளுக்கு சீதனமாக இன்றைய வெள்ளலூர் நாட்டின் தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளை அளித்துள்ளான். இருமனைவிக்கும் தலா 6, 4 என்ற வகையில் குழந்தைகள் பிறந்து வம்சத்தை விருத்தியடைய செய்கின்றனர். பல ஆண்டுகள் உருண்டோடிய பின் இன்றைய வெள்ளலூரை தலைமையிடமாக அமைத்து பலவகுப்பினரை, ஒன்றினைத்து சிற்றரசு ஒன்று நிறுவி தன்னாட்சி புரிகிறான். விஜயதேவனுடைய புகழ் எட்டுத்திக்கிலும் பரவ ஆரம்பிக்கிறது. பின் அவனுடைய வாரிசுகள், பூங்குடிநாடு, தனியாமங்கலம் நாடு, கீழவளவு நாடு, கொட்டகுடி நாடுகளில், சம்பந்தம் செய்து பல பகுதிகளை சீதனமாக பெற்று வளத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. - குறள் -61

பெறுகின்ற செல்வங்களாகிய அவற்றுள், அறிவறிந்த மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்ததாக, பிற எதனையும் யாம் கருதுவதில்லை.

கிரேக்க மன்னன் செல்யூகஸ் தன் மகளை இந்திய மன்னன் மௌரியப்பேரரசர், சந்திர குப்த மௌரியருக்கு தன் மகளை மணம் செய்து திருமணம் உறவு ஏற்படுத்தி கொண்டார். ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் ஆதித்ய சோழன் கர்நாடக பகுதியை ஆண்ட ராஷ்டிரகூடர் மன்னன் மகளை மணந்துள்ளார். சோழ மாமன்னன் ராஜ ராஜ சோழன் தன் மகளை வேங்கி மன்னனுக்கு மணம் செய்து கொடுத்து வடக்கு எல்லையை நிலை நிறுத்த முடிந்தது. தாய் வழி பாட்டன் பெயர் கொண்ட ராஜேந்திர சோழன், பிற்காலத்தில் முதலாம் குலோத்துங்கன் என்ற பெயரில் சோழ பேரரசை ஆண்டார். சோழ பேரரசு முடியும் வரை வேங்கி நாட்டு வாரிசான ராஜேந்திரனின் வம்சமே ஆட்சி புரிந்தது. இத்தகைய திருமணங்கள் நாட்டின் பரப்பை விரிவு படுத்தவும், அண்டை நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தின. அரசியல் ஆதாயமும், ராஜதந்திரமும் இதில் ஒளிந்திருக்கின்றன. அவ்வாறு தான் விஜயதேவனின் வாரிசுகள் திருமண உறவை ஏற்படுத்தி கொண்டார்கள்.

முதல் இந்தியன்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த குடி மரபு ஆராய்ச்சியாளர் திரு.பிச்சைப்பெருமாள் பேராசிரியர் (Genealogist) அவர்களுடைய ஆராய்ச்சி முடிவில் கள்ளர் பிரிவில் உசிலம்பட்டிக்கு அருகில் உள்ள ஜோதிமாணிக்கம் என்ற ஊரில் வாழும் பிறமலைக்கள்ளர் திரு.விருமாண்டி என்பவருக்கு M130Y என்ற ரத்த மரபு இருந்ததாக அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதன் முதன் முதலில் தோன்றிய இடம் ஆப்பிரிக்கா கண்டம், அங்கிருந்துதான் அவன் உலகின் பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து வந்துள்ளான். சுமார் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக மனிதன் தோன்றியதாக அறிய வருகிறது.

முதன் முதலில் தோன்றிய மனிதனின் ரத்த மரபும் (Blood Gen) நமது உசிலம்பட்டிக்கு அருகிலுள்ள ஜோதிமாணிக்கம் ஊரில் வாழும் திரு.விருமாண்டி என்பவருடைய ரத்த மரபும் DNA கட்டமைப்பு M130Y ஒன்றாக உள்ளதாக ஆராய்ச்சியின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் திரு.மெக்காலே எழுதிய (Histiry of India) இந்திய வரலாற்றில் முதல் இந்தியன் (First Indian) நமது விருமாண்டி எனக்கூறுகிறார். அவரை மட்டுமில்லாமல் மேலும் 12 பேருக்கு ரத்த மரபு சோதனை செய்ததில் M130Y என்ற உலகில் முதல் மனிதனின் ரத்த மரபு இருந்ததாக உறுதி செய்யபபட்டுள்ளது. திருவாளர் லூயிஸ் டோமன்ட் என்ற நூலாசிரியரும் தன்னுடைய South Indian Sub Caste (தென்னிந்திய ஜாதி வரலாறு) லும் குறிப்பிடுகிறார்.

அண்மையில் ஸ்டார் விஜய் தமிழ் தொலைக்காட்சியில், சரித்திர ஆராய்ச்சியாளர் திரு.ராஜநாராயணன் அவர்கள் திரு.விருமாண்டி மற்றும் ஆராய்ச்சியாளர் திரு.பிச்சைப்பெருமாள் (Genealogist) அவர்களையும் பேட்டி கண்டு ஒளிபரப்பியாகியுள்ளது. இங்கிலாந்தில் உள்ள லண்டன் BBC யும் இதை உறுதிப்படுத்துகிறது. இவை யாவும் பிறமலைக்கள்ளர் வம்சாவளியும் வழிபாட்டு முறையும் என்ற ஆண்ட வம்சம் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது. ஆவணப்பட இயக்குநர் திரு.ஞ.ரத்தினசாமி MA., அவர்கள்.

இதை எதற்கு இங்கு குறிப்பிடுகிறோம் என்றால் பிறமலைக்கள்ளர் நாடு உருவாக்கும் போது மதுரை கிழக்குப்பகுதியிலிருந்து பல கள்ளர் பிரிவுகள் புலம் பெயர்ந்து பிறமலைக் கள்ளர்களோடு ஒன்றறக்கலந்து பிறமலைக் கள்ளர் நாடுகளை உருவாக்கியுள்ளனர். அதில் வெள்ளலூரிலிருந்து திரு.தூங்காததேவர் மற்றும் பலர் புலம் பெயர்ந்த கள்ளர்களால் பிறமலைக் கள்ளர்களின் முதல் நாடான திடியன் நாடு உருவாக்கப்பட்டது. பின் இவர்கள் பிறமலைக் கள்ளர்களுடன் ஒன்றாகக் கலந்து பிற கள்ள நாடுகளை உருவாக்கினர் என அறியப்படுகிறது. எனவே உலகின் முதல் மனிதனின் ரத்த மரபு வெள்ளலூர் நாட்டுக் கள்ளர்களுக்கும் உண்டு என்பதற்காகவே கூறுகிறோம்.

நீதியின் பார்வை

பழையூர்ப்பட்டி ஊரில் சோலைகளின் நடுவே இருந்தது ஒரு சிறுமாளிகை. சிறுமாளிகையாயிருந்தாலும் சற்று விரிவாகவும், கவர்ச்சியாகவும் காண்கின்றது. இதன் முன் பகுதி ஏக காலத்தில் பலர் ஒருங்கிருந்து உரையாடிக்கொள்ள வாய்ப்பாக பல ஆசனங்கள் இடப்பட்டிருந்தன.

இந்த ஆசனங்களில் ஒன்றில் காலை நேரம் புலரும் நேரத்தில், ஏறக்குறைய இருபது ஆண்டுப் பருவம் கொண்ட ஒருவர் அமர்ந்து ஏதோ ஏட்டுச்சுவடியைப் பிரித்துக் கையில் பரத்தி வைத்தபடி அதில் தனது கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

இவரது முகத்தில் ஆண்மையும், அஞ்சாமையும் விளையாடிக்கொண்டிருந்தன. கோடுகள் சுழித்துப் பரந்த இவரது நெற்றி அறிவுத்தெய்வம் இவரிடம் குடிகொண்டுள்ளது என்பதை முகம் தெளிவு படுத்தியது. தீர்க்கமான கண்ணோட்டத்துக்கு தக்கபடி இவரது சிவந்த விழிகள் உருக்கின வன்மை ஏற்றுப்பெரிதாய் அமைந்திருந்தன. முறுக்கிய மீசை, இவரது இதயத்திண்மைக்கு, எடுத்துக்காட்டாகவும் உடற்பயிற்சி செய்து திரண்டு விரிவான தோள்களும் அகன்ற மார்பும் கல்லில் கடைந்தெடுத்துபோல் திரட்சிபெற்று நீண்ட கரங்களும் வடிவமைந்த பிற உறுப்புக்களும் இவர் உடலில் நிரம்பியிருந்த வலுவதைத் தெரிவித்ததோடு மட்டுமல்ல, ஒழுக்கத்திலும் இவர் வரம்பு தவறாது உத்தமர் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. எளிய ஆனால் வெண்மையான உடையை இவர் இடுப்பில் கட்டியிருந்தார். கழுத்தைச் சுற்றித் தங்க விளிம்பு இழைத்த மேல்துணி எழில் செய்துகொண்டிருந்தது. மேனியில் திருநீற்றுப்பூச்சிட்டு நெற்றியில் சந்தனம் திலகம் தீட்டி அதன் மீது செந்தூரம் ஒட்டியிருப்பதைப் பார்த்தால் இவர் இறைவனிடம் மிக்க பக்தி கொண்டவர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஏட்டுச்சுவடியில் சிந்தையைச் செலுத்திக்கொண்டிருந்த இவர் முன்னே சற்று வயது நிரம்பிய ஒருவர் தோன்றி விஜயத்தம்பி அவர்களே, வணக்கம் என்று சொல்லி மரியாதை செலுத்தி நின்றார், கவனம் கலைந்த விஜயனின் முகம் இவரை ஏறிட்டுப்பார்த்தது. முதியவரின் முகத்தில் வேதனை படர்ந்திருப்பதைக்கண்டதும் இவருக்கு ஏதோ பெருங்குறை நேர்ந்திருக்க வேண்டும். அதைச்சொல்லவே தன்னிடம் வந்துள்ளார் என்பதை நொடியில் ஊகித்துக்கொண்டார்.

குறை நேர்ந்தவர்கள் விஜயனிடம் வந்து தங்கள் தொல்லைகள், பிரச்சனைகளைத் தெரிவித்து அவற்றுக்குறிய பரிகாரம் தேடுவது சாதராண வழக்கம். இந்த வட்டாரம் முழுமைக்கும் அறிமுகமான செய்திதான். எனவே விஜயன் அந்த மனிதரைப் பற்றியும் இவ்விதம் நினைத்துக் கொண்டார். விஜயன் அந்த முதியவரை அமர சொல்லி, யார் நீங்கள்? என்ன தங்களுக்கு வேண்டும்? என வினவினார். அதற்கு என் பெயர் பாண்டி. இப்போது நடந்த ஒரு திருட்டை பற்றி தெரிவிக்கவே உங்களிடம் வந்து உள்ளேன். குறையை கேட்டருளுமாறு வேண்டுகிறார். இங்கிருந்து மூன்று கல் தொலைவில் எனது ஊர் உள்ளது. நேற்று இரவு எனது தோட்டத்தில் இருந்து காய், கனிகளை யாரோ திருடிச்சென்றுவிட்டார்கள், என் மனம் தீப்பிடித்தது போலிருக்கிறது. இந்த அநியாயத்தை உங்களிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.

உங்கள் உடமையை நீங்கள் கருத்தாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டாமா? உண்மைதான் இத்தனை நாளும் இரவில், நான் தோட்டத்தில்தான் படுத்துவந்தேன். நேற்று என் மகளுக்கு உடல்நலம் சரி இல்லாதிருந்த காரணத்தால் வீட்டில் தங்கினேன். அந்நேரம் இந்த அட்டூழியம் நடந்திருக்கிறது. கெட்டவர்கள் காலம் பார்த்துத்தானே கபடவேலை செய்வார்கள். மெய்யாகச்சொல்கிறேன் தம்பி ஒவ்வொரு நாளும் திரட்சி பெற்று காய் கனிகளைப்பார்த்து என் மனம் பூரித்த பூரிப்பு. இதோ பாருங்கள் தம்பி, என் தோள் பட்டைகளின் காய்ப்பை இந்த அளவுக்கு, அதற்கு நான் தண்ணீர் சுமந்து ஊற்றியிருக்கிறேன். என் மனம் வெந்து போகாமல் என்ன செய்யும்.

பெரியவரே,தோட்டத்துக்கு சரியான வேலி இல்லையா? எல்லாந்தான் செய்திருக்கிறேன் தம்பி. திருட்டுக்கயவர்களுக்கு நீங்கள் சொன்னது போல் இதெல்லாம் ஒரு பொருட்டா? பாருங்கள் நான் இந்தக்காய்க்கனிகளை விற்று எனது சிறு சிறு செலவுகளையும் சரிக்கட்ட எண்ணியிருந்தேன். அத்தனையும் மண்ணாச்சு. இதைச்சொல்லியபோது, அந்த முதியவரின் முகத்தில் சோகம் திரையிட்டது. குரலில் ஏக்கம் இழைந்து ஒலித்தது. விஜயன் பெரியவரிடம், ஆமாம், இந்தக்களவைப்பற்றி யார் மீதும் உங்களுக்குச் சந்தேகம் உண்டா? என்று வினவினார். உண்டு, ஆனால் அதை எப்படி வெளியில் சொல்வது? என்று பதிலளித்தார் பாண்டி. என்னிடம் மறைக்காமல் நேர் முகமாய்ச் சொல்லுங்கள் யார் அந்த கயவன்? எங்கள் ஊரில் ஆண்டி என்ற ஒருவன், எனது வீட்டருகே இருக்கிறான். எனது தோட்டம் பக்கமாக வந்து, கண்ணோட்டம் செலுத்திப் போவதை நான் பார்த்திருக்கிறேன். இவன்தான் திருடியிருக்க வேணடும். என எனது உள்ளம் சொல்கிறது. கண்ணால் காணாத ஒன்றை நான் எப்படி உறுதியாய்ச் சொல்லக்கூடும் என்றார்.

நீங்கள் சொன்னது அவனே திருடியிருக்கலாம், எனவே விசாரித்து நல்ல முடிவு காணலாம் என்று கூறி, வீட்டிற்குள் சென்று திரும்பி மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சற்று நேரத்தில் வயது முதிர்ந்த ஒரு அம்மையார் ஆம், இவர்தான் விஜயத்தேவனை ஈன்றெடுத்த அன்னை மீனாட்சி அம்மாள் வந்து தன் புதல்வன் கையில் ஒரு சிறு துணிப்பொதியைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார்.

அப்பொதியை பெரியவர் பாண்டியிடம் நீட்டினான் விஜயத்தேவன். இதில் கொஞ்சம் பணம் இருக்கிறது. உங்கள் களவுப் பொருளுக்குத் துப்பு விரைவில் கண்டுபிடிக்கப்படும். அதைப்பற்றி கவலை கொள்ளவேண்டாம். உங்கள் சிறு சிறு செலவுகளை இந்தப் பணத்தை வைத்துத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று மொழிந்தார்.

விஜயத்தேவனின் கருணை உள்ளம் பாண்டியை மெய் சிலிர்க்க வைத்தது. இக்களவைக் கண்டுபிடித்துத் தர முன் வந்ததே அரிய செயல். அத்துடன் தனது தற்போதைய நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளப் பணமும் உதவுகிறாரென்றால் அவர் உள்ளம் எத்தனைக் கனிவு நிரம்பியது, இவ்வாறெண்ணி வியப்பு மேலோங்க நின்றார். இப்பணத்தை நாம் எவ்விதம் பெற்றுக்கொள்வது? என்று தயங்கிய வண்ணம் அதை வாங்காது நின்று கொண்டிருந்தார். இதைப்புரிந்து கொண்ட விஜயத்தேவன் ஏன் தயங்குகின்றீர்கள்? இம்மாதிரியான சந்தர்ப்பம் எல்லோருக்கும் தான் ஏற்படுகின்றது. பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்தார்.

வேறு வழியின்றி வாங்கிக்கொண்டார். இவ்வேளை அங்கே ஒரு வாலிபன் வந்து விஜயத்தேவனை

வணங்கி நின்றான். இவன் அன்பும், பணிவும் இவன் நின்று கொண்டிருந்த நிலையே, யார் இவன் என தெளிவுபடுத்தியது. அவன்தான் விஜயத்தேவனின் காவலனும் அந்தரங்கச் செயலனான குமரன்.

குமரா, இந்தப் பெரியவருக்கு ஏற்பட்ட இன்னலைத்தீர்க்க. வேண்டியது நமது கடமை. குமரன் பாண்டிப் பெரியவரை நிமிர்ந்துப்பார்க்கவே, தனக்கு நேர்ந்த இன்னலைத் துயரக்குரலில் விளக்கினார் பாண்டி. ஐயா, அந்த ஆண்டியை எனக்கு ஏற்கனவே நன்றாகத் தெரியும். இறுமாப்பும், திமிரும் கொண்டு தலைக்கணம். ஏறி நடப்பவன், ஏழை எளியவர், கதியற்றவர் உடமைகளைத் தனதாக்கிக் கொள்வதுதான் இவன் வேலை. இப்பொழுது பக்கத்து வீட்டிலேயே கை வைத்து விட்டான். அவனது கொட்டத்தை அடக்க இதுவே நல்ல தருனம் என்று கூறினான் குமரன். குமரன் தனது தலைவனிடம் இருந்த உதிரும் வாய் மொழிகளையும், அவர் இடுகின்ற ஏவலைக் கேட்க தனது செவிகளைக் கூர்மையுடன் வைத்துக்கொண்டிருந்தான். விஜயத்தேவன் குமரனிடம் இந்தக் களவைச் சரியான துப்புத்தெளிவோடு எப்படியும் நாம் கண்டுபிடிக்கவேண்டும். இல்லாவிட்டால் நம் போன்றவர்கள் இங்கு மனிதர்களாக இருப்பதில் பலனே இல்லை என்றார்

சரி, நீ இப்போதே இதற்கு வேண்டியதைச் செய், என்று கட்டளை இட்டார். விஜயத்தேவனின் ஆணையைத் தலைமேல் தாங்கி வெளியேறினான் குமரன். நன்றியுணர்ச்சி குமுழியிட விஜயத்தேவனிடம் விடைபெற்றுக்கொண்டு பாண்டிப்பெரியவரும் பின் தொடர்ந்து சொல்லலானார். அன்று விஜயத்தேவன் நடுப்பகலுக்கு கொஞ்சம் முன் நேரம் வெளியே சென்று விட்டு அப்போதுதான் வீட்டுக்குள் வந்து சேர்ந்தார். அங்கே குமரனுடன் இன்னொருவர் இருப்பதைக்கண்டு குமரனை ஏறிட்டுப்பார்த்தார். அருகில் வந்து விபரம் கூறியதும் புரிந்து கொண்டார். நீதான் ஆண்டியா? என்று கம்பீரக்குரலில் வினவினார். இந்தக் கேள்வியிலேயே திகைப்படைந்த ஆண்டி, தான் யார் என்று சற்றுப்பயந்து கொண்டே, தன்னைப் பற்றிக்கூறினான். தெரிகிறது நன்றாக, அது தான் எளியவர்களின் குடலைச் துணிச்சலாக அறுத்துக் கொண்டிருக்கறீர் அப்படித்தானே? என்று வினவினார் விஜயத்தேவன். இம்மொழி, அவனை அதிர்ச்சிக் கொள்ள வைத்தது. நிலை குன்றிய அவன் முகத்தில் இருள் வந்து திரையிடடது. அவன் விஜயத்தேவனை நிமிர்ந்து பார்த்தான். தணலாகச் சிவந்திருந்த அவரின் முகம் ஆண்டியின் அத்தனை நாடி, நரம்புகளையும் 'குழ, குழ' என ஆக்கிச் சோர்வு கொள்ள வைத்தது. அவனது உடலில் வியர்வை தண்ணீராய்ப் பெருகி ஓடிற்று.

விஜயத்தேவன் மேலும், நீர்தானே பாண்டி தோட்டத்திலுள்ள காய், கனிகளை திருடினாய் என சிம்மக்குரலில் அதிரகேட்டார். நடுங்கிக்கொண்டிருந்த ஆண்டி சிறிது தெம்பை வரவழைத்துக் கொண்டு யார் சொன்னது? என்று எதிர்மறை கேள்வியை விடுத்தான். யார் சொல்லவேணடும்? நீர் என்னிடம் மறைப்பதில் பயன் இல்லை சரியான துப்புத் தெளிவோடு தான் கேட்கிறேன். இல்லை என்று விஜயனிடம் நான் திருடவில்லை, என்று பதிலெளித்தான் ஆண்டி. யாரிடம் பேசுகின்றீர் இப்படி? நீர் எடுத்துக் கொண்டதை உமது வீடு சொல்கின்றது. அங்கேயுள்ள உரக்கிடங்கு சொல்கின்றது?

அங்கிருந்து கிடைத்த காய் கழிவுகளும், பழத்தோல்களும் இவை உண்மையைக் காட்டித் தந்துள்ளன. என்ன சொல்கின்றீர்?

ஆண்டிக்கு இதன்பிறகு எதையும் மறைப்பதில் பயனில்லை என்று பட்டது. தனது தைரியம்

அவ்வளவும் அழிந்து, புலி முன் நிற்கும் மானைப்போல் வெருட்சி மயக்கத்தில் நின்று கொண்டிருந்தான். உம்மைப் போன்றவர்களுக்கு இது பேன்ற வேலைகள் அழகல்ல. உமக்குப்பெரிய இடத்து தூரத்து உறவு என்று சொல்கின்றீர் அந்த உறவை இனி இம்மாதிரி இழிந்த செயல்களுக்குப் பயன்படுத்துவதில் பெருமை இல்லை. இனி இம்மாதிரி செயல்களில் ஈடுபடாதீர். அந்த காய் கனிகளின் விலையை இப்போதே பாண்டிக்குக் கொடுத்து விடவும். அவர் தன் பிழைப்புக்கு இதை நம்பியிருப்பவர் என்பது அண்டை வீட்டராகிய உமக்குத்தெரியமல்லவா?

அமைதியாக நின்ற ஆண்டியிடம் ஏன் வாய் திறக்காது நிற்கின்றீர்? உமது விருப்பம் எது என்பதை இப்போதே சொல்லிவிடும் என்று இடி முழங்கியது போல் மறுபடியும் வினவினார். வேறு வழியின்றி மெதுவான குரலில், விலையைக்கொடுத்து விடுகிறேன் என்று பதில் கூறினான். உன்னுடன் ஆள் அனுப்புகிறேன் பணம் கொடுத்துவிடு, என்று எச்சரித்தும் அனுப்பினர். தன் உள்ளத்தில் புகைந்த எரிச்சலை அடக்கியபடி வணங்கி விடைபெற்றான். இறுமாப்போடு வந்த ஆண்டி இப்போது விஜயத்தேவன் அனுப்பிய ஆளுடன், பூனை போல் சென்றான். நீதி தேவதை விஜயத்தேவனின் உத்தரவை எண்ணி அக மகிழ்ந்தாள்.

இரட்டை அரசர் ஆட்சியா?

துவை ராஜ்யம் என்றமுறை இரட்டை முறையைக் குறிக்கிறது. ஒரு ராஜ்யத்தை இரண்டு பிரிவாகப் பிரித்துக்கொண்டு ஒரு பிரிவை ஒரு அரசனும் மற்றொரு பிரிவை ஒரு அரசனும், ஒரே சமயத்தில் ஆட்சியை நடத்தினால், இரண்டு அரசர்களுக்குள்ளோ, அவரது வாரிசுகளிலாளோ போட்டியும், பொறாமையும், பகைமையும் ஏற்பட்டு இரண்டு வகைப் பேருமே அழிந்துவிடுவர். இதனால் தீமையே விளையுமென்பது கருத்து என்று கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. அதைவிட சிறந்த ஆட்சிமுறை என வெள்ளலூர் நாடு ஆட்சி ஆய்வின் மூலம் தெரியவருகிறது. ஆகையால் சோழநாட்டில் வந்த இரண்டு பேராக இருக்க முடியாது. பின் நாளிலும் இதற்கு வாய்ப்பில்லை.

சுழற்சி முறையில் நடைபெறும் ஆட்சியில், அந்நாடு காலத்தினால்தான் மறைந்து படாமலும், சூழ்நிலைக்கு இறையாகிவிடாமலும், நெடுகிலும் தொடர்ந்தாற்போல் ஒரே மாதிரியாக சுழற்சி முறையில் தழுவி நடைபெற்று வந்திருப்பதேயாகும்.

தெளிவான அரசியல்

தனி மனிதன் எவனிடமும் நாம் அடைந்த பணத்தையோ, தெரிந்த உண்மைகளையோ கொடுத்து வைக்கக்கூடாது. அப்படிச்செய்வோமானால் நம்மால் தரப்பட்டதை நம் பெயரிலேயே, பிரயோகிக்க ஆலோசனை செய்வான். மேலும் அவனிடம் இருக்கும் பலத்தை எந்த நேரத்திலும் குறைக்கும் சக்தி நமக்கே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் நமது நடைமுறை செயல்களுக்கே தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிடுவான். நம்பிக்கையானவரிடம் கூட அதிக வசதி இருக்கும்படி விடக்கூடாது. அவன் எப்போதும் நம்மையே நம்பி இருக்க வேண்டும்.

குதிரை மீது ஏறியவன் அதன் லகானைத்தானே பிடித்தக்கொண்டு தன்னுடைய கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, குதிரையை அதன் வேகத்திற்கு ஓட அனுமதிக்கக்கூடாது. இது போன்றது தான் அரசியலும். தலைவனாக தொடர்ந்து இருக்கிறவன், எவன் தனது தொண்டர்களில் எவனுக்கும் செல்வாக்கு பெருகுவதை அனுமதிக்கக்கூடாது. அப்படி எவனையாவது நம்பிக்கையோடு, வளரவிட்டால் நிச்சயம் ஒரு நாள் அவன், தனது தலைவனைக் கீழே தள்ளிவிட்டு அந்தப்பதவியில் தான் போய் உட்கார்ந்து விடுவான்.

உன்னால் நியமிக்கப்படக் கூடியவர்கள் அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று விஜய தேவனின் ஆசிரியர் முத்தையா அவர்கள் விஜய தேவனுக்கு எப்படி? உன் பகுதியை நிர்வாகம் செய்ய வேண்டும் நிதி ஆதாரங்கள் எவ்வாறு பெருக்க வேண்டும். சத்தியம், நீதி, நேர்மை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்? என்று பல அரசர்களின் சரித்திரங்களை உதாரணமாகச் சொல்கின்றார். மேலும் மனிதன் குதிரையைப்போல அடங்கி நடக்கமாட்டான். அவன் சொந்தமாக சிந்திக்க தெரிந்தவன் கையில் சவுக்கை வைத்துக்கொண்டு. வேலை வாங்க முடியாது. ஆனால் தவறு செய்தால் தண்டனை கிடைக்கும். நல்லது செய்தால் பரிசு கிடைக்கும். என்பதை உன் கீழ் பணிபுரியவர்களை உணர வைக்க வேண்டும். இப்படி நீ உணர வைக்காவிடில், அவர்கள் மிருகத்தைப்போல எதை நினைக்கிறார்களோ அதைச்செய்து கொண்டிருப்பார்கள். தண்டனைக்குப் பயந்து வேலை செய்பவன், எப்பொழுதாவது தன்னுடைய எஜமானனுக்கு எதிராக திரும்ப வாய்ப்புள்ளது. ஆனால் அன்பு என்ற ஆயுதத்தை கையிலே எடுத்துக்கொண்டால் ஆயுள் முழுவதும் நமக்குக்கட்டுப்பட்டே நடப்பான். மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்தப்படும் ஊழியன் உண்மையாகவும் சலிப்பு இல்லாமலும் வேலை செய்வான் என்றார் விஜயத்தேவனின் ஆசிரியர் முத்தையா.

எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் எவ்வாறு நடந்து கொள்வது. விஜயதேவனின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை எப்படி நிர்வாகிப்பது என்பதை, ஒரு அறிவார்ந்த அமைச்சருக்குள்ள பொறுப்பினைப் போல் கற்பித்தார். கவனமாக கேட்டுக்கொண்டு சூழ்நிலைக்குத்தக்கவாறு சத்தியம், நேர்மை, நீதி தவறாமல் நடக்க வேண்டுமென்று மனதில் நினைத்துக் கொண்டான் விஜய தேவன்.

வெள்ளலூர் நாட்டின் முதல் அரசன்

வெள்ளிலையூர், வீரபாண்டிய நல்லூர் என்று அழைக்கப்பட்டு நாளடைவில் வெள்ளலூர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால் பிற்காலச்சோழர்களின் வெற்றியும், தியாகமும் நிகழ்த்திய போர்களங்களில் வெள்ளூர் என்ற பெயர் கொண்ட போர்க்களமும் இருந்ததாக கீழ்க்கண்டவாறு காவிரி மைந்தன் நூலில் கூறப்படுகிறது. தெள்ளாறு தஞ்சை, குடமுக்கு, அரிசிலாறு, திருப்புறம்பயம், வெள்ளூர், தக்கோலம், சேவூர் முதலிய போர்க்களங்களிலும் சோழர்களும் அவர்கள் உடன் பிறப்புகளும் உயிர் விட்டுத்தியாகம் செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. மேலும் அவர்கள் செய்த தியாகமும் நிகழ்த்திய அற்புதப் பராக்கிரமச்செயல்களும் தான் சோழ சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் என மேற்படி போர்க்களங்களைப்பற்றி பெருமையுடன் குறிப்பிடப்படுகிறது.

வெள்ளலூர் நாடு அமையக் காரணமாயிருந்த முன்னோர்கள் சிறந்த ராஜ்ஜியம் அமைவதற்கு, வெள்ளுர் சரியாக இருக்கும் என முடிவு செய்து வெள்ளலூரை மையப்பகுதியாகவும் தலைநகராகவும் உருவாக்கி அப்பெயரே வெள்ளலூர் நாடு என்ற பெயரும் நிலைத்து பல பகுதிகளை, பல வழிமுறைகளில் ஒருங்கிணைத்து, குறு நில நாடு உருவாக்கி, இந்த நாட்டினை அரசர்கள் பலர் ஆண்டு வந்தனர்.

குறிப்பாக மன்னான் சின்னாண்டித்தேவன் வரலாற்றை எடுத்துக்கொள்ளலாம். வெள்ளலூர் நாட்டை முதற்சோணை என்ற அரசன் ஆண்டு வந்ததாகவும் அவன் சிறுகுடி நாட்டு அரசபரம்பரையில் மூளி நல்ல வீரப்பன், முனைபாளி அம்பலம், முளிச்சக்குட்டி அம்பலம், மூத்தண்ண வாகனம், பெரியட வாகனம் சிண்டை வாகனம் மற்றும் சின்னன் அம்பலம் என்னும் எழுவரோடு பிறந்த ‘எழுவக்கா நாச்சியா‘ என்பவரை மணந்து கொள்கிறான். திருமணத்தின் போது தங்களது தங்கைக்கு அந்த எழுவரும் சில பகுதிகளை சீதனமாக அளிக்கின்றனர்.

பின்னர் அத்தம்பதியினர் காராளபுறந்தகருத்தவனம் என்ற பெண் குழந்தையையும், பேப்பெருமாள் மன்னான் சின்னாண்டி என்ற இரட்டை ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். இந்தச்சூழ்நிலையில் தமது மைத்துனர்கள் தனது மனைவிக்கு தந்த சீதனப்பகுதிகளின் நிலத்தில் விவசாயம் செய்வதற்கு முயற்சிக்கிறான். ஆனால் மைத்துனர்கள் எழுவரின் மனைவியரும் அந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்கு எதிர்க்கவே பிரட்சினை ஏற்பட்டு, அந்த சூழ்நிலையில் தனது இளைய மைத்துனரால் முதற் சோணை அரசன் கொலை செய்யப்படுகிறான். அதனையறிந்த அரசனின் மனைவியும் கணவரோடு உயிர்விடுகிறார். இந்தச்சூழ்நிலையில் மூத்த மகளான காராளபுறந்தகருத்தவனத்தின் தலையில் அரசச்சுமையும், குடும்பச்சுமையும் முழுமையாக விழுகிறது. மற்ற பெரியவர்களின் உதவியோடு நாடு பாதுகாக்கப்படுகிறது. அக்காள் தமது உடன் பிறந்த தம்பியர் இருவரையும் வளர்த்து வருகிறாள். தங்கள் தாய் தந்தையர் அழிவதற்கு காரணமாயிருந்த மாமன் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்பதை மனதில் பதிய வைக்கிறாள்.

பின் மன்னான் சின்னாண்டித் தேவன் படைகளைத் திரட்டி பலதடவை போரிடுகிறான். இதற்காக படைகளை தமது நாட்டிலும் பக்கத்து பகுதிகளிலும் படை திரட்டுகிறான். இதற்கு பயந்தே சிலர் வெள்ளலூர் நாட்டை விட்டு வெளியேறினர். இருந்தாலும் மற்ற பகுதிகளில் திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, தமது படைகளில் இணைத்து, இறுதியில் சிறுகுடி நாட்டை, வென்று தந்தை இறப்பிற்கு காரணமான மாமன் குடும்பத்தையே அழித்து விடுகிறான். இதைக்கருத்தில் கொண்டுதான் ஒரு நாட்டுப்பாடல் இவ்வாறு பாடப்படுகிறது.

‘மன்னான் சின்னாண்டி மாங்காத் தலையாண்டி, வெள்ளலூர் நாட்டின் வினை தீர்க்க வந்தாண்டி‘ என்ற பழமொழியும் வெள்ளலூர் நாட்டில் நினைவு கொள்ளத் தக்கது. இந்தப் போரில் பாளையக்கார சிலர், சிறுகுடி நாட்டிற்கு துணையாக நின்றனர். அப்பாளையக்காரர்களையும் தோற்கடித்தான், தன் படைகளுடன் இணைந்து போரிட்ட மற்ற பகுதி வீரர்களை வெள்ளலூர் நாட்டுப்பகுதியில் இணைத்துக் கொண்டான்.

வீரர்களை படைக்கு கோர்ப்பவன் பிற பகுதி மக்களை நாட்டிற்குள் கோர்ப்பவன் (இணைப்பவன்) என்பதாலேயே, கோர்ப்பவன் என்பதே கோப்பனாகியது. எனவே மன்னான் சின்னாண்டி தேவன் கோப்பன் கரைப்பிரிவைச் சேர்ந்தவன் என அறியப்படுகிறது.

உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது - குறள் - 762

போரில் ஏற்பட்ட அழிவுக்கு அஞ்சாமல் பகைவர் மேற்செல்லும் ஆண்மை, வழிவழிப் புகழோடு விளங்கும் தொல்படைக்கே இயல்வதேயாகும்.

வெற்றி பெற்ற பிறகு மன்னான் சின்னாண்டித் தேவன், பேப்பெருமாள் தேவன் இருவரும் தனது அக்காள் காராள புறந்தவனத்துடன் அழகர் கோவில் சென்று கள்ளழகரையும் பதினெட்டாம்படி கருப்பணசுவாமியும் வழிபட்டார்கள் என்றும் மூவரும் கோவிலிலே சிலைகளாய் சமைந்ததாகவும், பின்னர் அழகர் கோவிலில், சிலைகள் அவர்களுக்காக அமைத்ததாகவும், கோவில் புனரமைக்கும் போது எங்கு மாற்றி வைக்கப்பட்டதோ, மறைந்து விட்டதோ என்பது புதிராக இருந்து வருகிறது. இந்தக்கதைப்பாடல் 1986-ம் ஆண்டு 18-வது இந்திய பல்கலைகழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தரங்கில் முனைவர் திரு.அ.ம.சத்தியமூர்த்தி அவர்கள் சின்னாண்டித் தேவன் பற்றி கதைப்பாடலை அறிமுகம் செய்யும் வகையில் கட்டுரை படித்தார்.

மன்னான் சின்னாண்டி, அவன் வைராக்கியம் கொண்டவன் கோப்படுபவன் என்றும் கோபப்படுவனே கோப்பானக மருவியது என்றும் கூறுகிறார்கள் எதுவாயினும் நமது வரலாற்றில் வீரத்தை வெளிப்படுத்தி மிகச் சிறந்த வெற்றியை பதிவு செய்து நமது நாட்டைப் பெருமைப் படுத்தியவனை நன்றி மறவாது வணங்குவோம். நினைவு கொள்வோம். அதன்பின் 1997-ல் திரு.முருகானந்தம் அவர்களால் மிக சுருங்கிய அளவில் சமர்ப்பிக்கப்பட்டு மன்னான் சின்னாண்டித்தேவன் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை - யில் வெளியிடப்பட்டது.

மன்னான் சின்னாண்டித் தேவனின் கட்டுரையானது உலகத்தமிழாசிரியர் மன்றக்கருத்தரங்கில் மன்னான் சின்னாண்டி தேவன் கதை - ஓர் அறிமுகம் என்று 18-வது கருத்தரங்க ஆய்வுக் கோவை தொகுதி - 3 (1986) - ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே வெள்ளலூர் நாடு அரச மரபுகளால் உருவாக்கப்பட்டது. வீரம், விவேகம் நிறைந்தவர்கள் வாழ்ந்து சிறப்பித்த நாடு எனத் தெள்ளத் தெளிவாகிறது. முன்னோர்கள் செய்த தியாகமும், அற்புத பராக்கிரமச் செயல்களும் தான் இந்நாட்டின் அஸ்திவாரம், ஆணிவேரும் என்றைக்கும் மறையாது என்ற நிலையை நாம் பிற்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு வேண்டியவைகளை செய்யவேண்டும்.

'வேரில் ஈரம் இருந்தால் தான் மரத்தின் கிளைகளும், இலைகளும் விழாது' என்பதை சரி என்று அந்நிலையில் வாழ முயற்சிப்போம்.

பிற்கால பாண்டியர்கள்

மதுரையை முகமதியர் ஆண்ட காலத்தில் பாண்டிய நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆங்காங்கே யிருந்து

1. மாறவர்மன் குல சேகர பாண்டியன் கி.பி.1314 - 1316
2. சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் கி.பி.1315 - 1347
3. மாறவர்மன் வீரபாண்டியன் கி.பி. 1334 - 1380
4. மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் கி.பி. 1335 - 1352

ஆகியோர் ஆட்சிப் புரிந்திருக்கின்றனர்.

இக்காலத்தில் உள்நாட்டுக் கலகங்கள் நடந்து இருந்திருக்கின்றன. மக்கள் வாழ்க்கை நிலையற்றதாக இருந்து வந்திருந்தது. திருக்கோவில்கள், கொள்ளையிடப்பட்டு, நாள் வழிபாடும், ஆண்டு விழாவுமற்று இருந்தன. என்பதை பல கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. மதுரைக்கோவில் சொக்கரது கருவறையும் அர்த்த மண்டபமும் மகா மண்டபமும் தவிர மற்ற கோபுரங்களும் மண்டபங்களும் சுவர்களும் இடிக்கப்பட்டன என்று மதுரைத்தலவரலாறு கூறுகின்றது. (நூல். பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள், ஆசிரியர் வே.வேதாசலம், ப.60, 61)

விஜய நகர வேந்தர் காலம்

நாம் எடுத்துக் கொண்ட காலப்பகுதி

1. கம்பணர் - 1378 - 1533
2. இரண்டாம் தேவராயர் கி.பி.1422 - 1446
3. இரண்டாம் விசயராயர் கி.பி. 1446 - 47
4. மல்லிகார்க்கனர் கி.பி. 1446 - 1465
5. இரண்டாம் விருகபாக்சர் கி.பி. 1465 - 1485
6. சாளுவநரசிம்மர் கி.பி.1485 - 1490
7. நாசநாயக்கர் கி.பி. 1490 - 1503
8. வீரநரசிம்மர் கி.பி. 1503 - 1509
9. கிருஷ்ண தேவராயர் கி.பி. 1509 - 1529 முதலிய விஜய நகர வேந்தர்கள் ஹம்பியிலிருந்து ஆட்சி நடத்தி வந்திருக்கின்றனர்.

இக்காலத்தைச் சார்ந்த சடாவர்மன் விக்கிரம பாண்டியன், கி.பி. 1402 - 1422 கல்வெட்டு ஒன்று சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் உள்ளதால், இவனும் பாண்டிய நாட்டின் வடபகுதிக்கு வந்திருப்பது என தெரிகிறது. மாறவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1443 - 1497) என்ற பாண்டியன், இக்காலத்தில் புதுக்கோட்டை பகுதியில் இருந்திருக்கின்றான் என்பதற்கு சான்றாக அப்பகுதியிலிருந்து சில கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இவனது கல்வெட்டுக்கள் பழைய முகவை மாவட்டத்தில் சில இடங்களிலும் காணப்படுகிறது. மேலும் இக்காலத்தில் பாண்டிய நாட்டுப்பகுதியை நோக்கி கி.பி. 1438 லிலும் கி.பி. 1453 லும் கிருஷ்ண தேவராயர் காலத்திலுமாக, விஜய நகர வேந்தரின் மூன்று பெரும் படையெடுப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன.

கி.பி.1378-ல் கம்பணர் படையெடுப்பு, மதுரையில் முகமதியர் ஆட்சியை நிலைகுலையச் செய்து முற்றுப்புள்ளி வைக்க வைத்த செய்தி. அதே நேரத்தில் பாண்டிய ஆட்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்றது. விஜய நகர ஆட்சியில் இரண்டாம் தேவராயரின் (கி.பி. 1422 - 1446) அமைச்சர், லக்கணநாயக்கர் காளையார்கோவிலில் இருந்த, பாண்டிய அரசனுடைய வைப்பாட்டி வயிற்றில் பிறந்த பிள்ளைகளான

1. சுந்தரத்தோள் மாவலி வாணாதிராயர்
2. காளையார் சோமனார்
3. அஞ்சாத பெருமான்
4. முத்தரசன்
5. திருமலை மாவலி வாணாதிராயர்

முதலியோரைக் கொண்டு வந்து அவர்களை பாண்டியனுக்கு பிறந்த பிள்ளைகளென்று பாண்டிய நாட்டை ஆட்சி புரிய வைத்தான் என்கிறது மதுரைத் தலவரலாறு. இவர்கள் நால்வரும் பாண்டிய மன்னனுடைய வைப்பாட்டி காளையார்கோவில் அபிராமி வயிற்றுப்பிள்ளைகள் தான் என்று கூறி லக்கண நாயக்கர் கொண்டு வந்து பட்டங்கட்டி வைத்து, கையெழுத்து கும்பிட்டு ராஜ்ஜியத்தையும் அவர்கள் கைவசப்படுத்திக் கொடுத்து ராஜ்யம் ஆளவைத்துள்ளார்கள்.

பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்த விஜயநகர வேந்தர்கள் அதைவென்ற பிறகு. யாரிடம் அதன் ஆட்சிப் பொறுப்பை அளித்தனர்? யாரை தமக்கு கீழ் ஆட்சிபுரிந்து வரும்படி அனுமதியளித்தனர்? என்ற வினாவிற்கு இது விடையாகின்றது. விஜயநகர வேந்தர் இவ்வாணதிராயர்-களையே பாண்டியர்களின் வழி முறையினர் என நினைத்து மதுரையின் ஆட்சிப்பொறுப்பை அவர்களிடம் அளித்திருக்கின்றனர். அரை நூற்றாண்டிற்கு மேல் அவர்களைத்தங்களின் மேல் சிற்றரசர்களாக இருந்து வர அனுமதியும் அளித்து வந்திருக்கின்றனர் என்பதற்கு மதுரைத் தலவரலாற்றால் தெளிவாகிறது. பாண்டியருக்கும் வாணாதிராயர்க்கும் 13-ம் நூற்றாண்டில் பல மண வினைகள் நடந்திருக்கின்றன என்பதையும் அவற்றால் பிறந்த பிள்ளைகள் பலர் இளவரசர்களாக விளங்கியதை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகிறது.

பாண்டிய நாட்டின் வாணாதிராயர்கள்

இக்காலத்தில் வாழ்ந்த வாணாதிராயர்களைக் காளையார்கோவிலுள்ள வைப்பாட்டி பிள்ளைகள் என்று கொள்வதை விட வாணாதிராயர்க்கும் பாண்டியர்க்கும் ஏற்பட்ட உறவால் பிறந்த பிள்ளை என்று கொள்வதே பொருத்தமாகப் படுகின்றது, மதுரைத் தலவரலாற்றில் குறிப்பிடப்படும் வாணாதிராயர் பெயர்கள்.

1. பாணவன் சுந்தரன்
2. திருமாலிருஞ்சோலை நின்ற மாவலி வாணாதிராயர்
3. இறந்தகாலம் எடுத்த சுந்தரத்தோளுடையார் மாவலி வாணாதிராயர்

திருமாலிருஞ்சோலை நின்றான் வாணாதிராயன் (கி.பி. 1428 - 1477)

இவனது முழுப்பெயர் திருமாலிருஞ்சோலை நின்றான் அழகருக்கு இவர்களால் அளிக்கப்பட்ட அம்மிக்கல் ஒன்றில் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லி தாசன் ஆன சமரகோலாகலன் என்று குறிப்பிட்டுள்ளது. இவனும் இவனது வழியினரும் அழகர் மீது அதிக அன்பு பூண்டு அழகர்கோவிலைத் தலைநகராக கொண்டு ஆட்சி நடத்தினார்கள் என்று தெரிய வருகிறது. இவர்களின் வழி வந்தவர்கள் விஜயநகரவேந்தருக்குக் கீழ் பாண்டிய நாட்டின் வட பகுதியை ஆண்டிருக்க வேண்டும். பூவாலைக்குடி கல்வெட்டில், வாணாதிராயர்கள் படிப்படியாக வளர்ந்து நிலையான ஆட்சிப் பொறுப்பைப் பெற்று சற்று வலிமைவாய்ந்த அரசர்களாக விளங்கி வந்தார்கள். அக்கால கட்டத்தில் அரசியல் தலைவர்கள், குறுநில மன்னர்கள் இவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளை தீர்த்து வைத்துள்ளார்கள்,பஞ்சவராயர் நரசிங்கத்தேவர், சோழக்கோனார், பல்லவராயர் முதலிய அரசியல் அதிகாரிகளுக்கிடையே. வலங்கை, இடங்கை தனத்தைப் பகிர்ந்து, கொள்வதில் தகராறு ஏற்பட்டது. பின்னர் அந்தத் தகராறினை அரசனது ஆணைப்படி சில தலைவர்களும் சில கிராமச்சபையாரும் சேர்ந்து தீர்த்து வைத்ததை மேற்படி கல்வெட்டு காட்டுகின்றது.

இவர்களது ஆட்சியின் கீழ் வீரகஞ்சு நல்லூர் என்னும் ஊர். வாணாதிராயர் பட்டப்பெயரைக் கொண்டு விளங்கியதாக தெரியவருகிறது. அந்த பெயரே வீரபாண்டிய நல்லூர் ஆகி காலப்போக்கில் மருவி வெள்ளலூர் நாடாயிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

வாணாதிராயர்கள் ஆட்சி செய்து மறைந்ததை நினைவூட்டும் வகையில் பாண்டியநாட்டில் சில ஊர்கள் அவர்களது பெயராகக் கொண்டுள்ளன, வாணத்துராயன்பட்டி, வானக்கருப்பு மாவிலிக்கோட்டை, உறங்கான்பட்டி, உறங்காபுரி, திருமாலிருஞ்சோலை என்ற ஊர்கள் இருக்கின்றன, (திருமாலிஞ்சோலை நின்றான் மாவிலி வாணாதிராயர் உறங்காவில்லிதாசன் கி.பி. 1464, உறங்காவில்லிதாசனான மாவிலி வாணாதிராயர் கி.பி.1453. நூல் : பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள், ஆசிரியர். வெ.வேதாசலம் ப.112)

வெளியீடு : தொல்பொருள் தொழில் நுட்பம் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை வருடம் 1987.

மைசூராருடன் போர்

மதுரையை விஜய நகர மன்னர்கள் (நாயக்கர்கள் ஆட்சி) ஆளும் காலத்தில் மதுரையை பிடிக்க மூன்று போர்கள் நடந்ததாக இதில் நாயக்கர்களுக்கு ஆதரவாக வாணாதியராயர்கள் மைசூர் படையுடன் போர் புரிந்தனர். நீண்டு நடந்த போரில் வெற்றியாருக்கு என்பது கேள்விக்குறியாக உள்ளது. இச்சூழ் நிலையில் மதுரை மன்னன் தனது மண்டலத்தில் தன்னாட்சி புரிந்துவரும் சிற்றரசுகளுக்கும் வாணாதி ராயருக்கும் பாண்டிய நாட்டை காக்க தங்களது படை மற்றும் வீரம் நிறைந்த மக்களையும் அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறான். அப்பொழுது ரகுநாதத்தேவர் தலைமையில் வெள்ளலூர் நாட்டை ஆட்சி செய்து வந்தார். தனது படை மற்றும் குடிமக்களை போருக்கு அழைத்துக்கொண்டு, வாணாதிராயப் பாண்டியப்படைகளுடன் இணைந்து போர்க்களத்துக்கு சென்றுள்ளார்.

போரில் வெற்றிபெற வேண்டுமானால் மூன்று புறம் அஜாக்கிரதையாக இருப்பது போல் இருக்க வேண்டும். எதிர்பாராத நேரத்தில் நான்காவது புறத்திலிருந்து தந்திரத்துடன் கூடிய பலத்தை பயன்படுத்த வேண்டும். தக்க சமயத்தில் எதிரியின் படையை சுற்றி பின்புறம் தாக்கி எதிரியை திக்குமுக்காடச் செய்ய வேண்டும். இதற்கு மூண்டு வந்து தாக்குவது என்பதாகும். வெற்றி பலத்தில் இருந்தாலும் சூழ்நிலைக்கேற்றவாறு விவேகத்துடன் செயல்படக்கூடிய செயலினால் வெற்றிக்கு வித்திடப்படுவதாக போர் தந்திரங்களில் சிறந்ததாக கருதப்படுகிறது.

எனவே வெள்ளலூர் நாட்டுப்படைகள், தங்கள் தனித்துவத்துடன் முறையாக போர் செய்து வெற்றி பெற்று நாயக்கர் மன்னனுக்கு வெற்றியைக் காணிக்கையாக்குகிறார்கள். அந்தப்போரில் முறையான போர்ப்பயிற்சி இல்லாவிட்டாலும் தங்களது அறிவுக்கூர்மை, முன்யோசனையுடன் கூடிய வீரத்துடனும், விவேகத்தையும் வைத்தே வெள்ளலூர் நாட்டு வீரர்கள் வெற்றியை நமக்கு பெற்றுத்தந்தனர் என நாயக்கர் மன்னரே பாராட்டியதாகவும் கூறப்படுகிறது.

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும் - குறள் - 768

போரிடுகின்ற தறுகண்மையும் அதற்கு வேண்டிய ஆற்றலும் இல்லாதிருந்தாலும் ஒரு படை தனது அணி வகுப்பினாலேயே பகைவரை வெற்றி அடைந்துவிடும்.

வெற்றியிலும் சோகம்

மரங்களின் உச்சானிக்கிளைகள் அந்த வானத்தையே தொட்டுவிடும் போலிருந்தன. அவ்வளவு உயர்ந்த தாவரங்கள் கொண்ட அடர்ந்த காடு. அது ஜனசஞ்சாரமில்லாத அந்தக்காட்டுக்குள் மரங்களுக்கு இடையே ஒரு பாதை சர்ப்பம் நெளிவதைப்போல் வளைந்து வளைந்து சென்றது. நல்ல அகலமான பாதைதான். இலையுதிர் காலமாதலால் காட்டுத் தரை நெடுகிலும் கருகிக்கிடந்த இலைகள் பாதையின் பெரும்பங்கை மறைத்துவிட்டன.

அதனால் காட்டில் வீசிய காற்றுக்கோ ஆனந்தம் இங்கிருக்கும் இலைகளை எடுத்துச் சென்று அங்கு குவிப்பது இல்லை, ஒரே இடத்தில் அவற்றைச் சுற்றிச் சுற்றி வேடிக்கை பார்ப்பது என்று வாயுபகவான் கானகத்தில் பொழுதைப்போக்கிக் கொண்டிருந்தார். சரத்காலச் சந்திரனின் வெளிச்சமோ ஒளிமயமாக்கப்போவதில்லை எனினும் கண்களைக்கசக்கி உற்றுப்பார்த்தோமேயானால் அது காட்டும் பாதையில் வெள்ளலூர் நாட்டுப் படைவீரர்கள், தளபதி ரெகுநாதத்தேவர் தலைமையில் நீண்ட ஊர்வலமாக சென்று கொண்டிருந்தது. அந்தப்படை ஆரவாரமில்லாமல் எதையோ, இழக்கக்கூடாததை இழந்த குழந்தை போல் முகங்களில் சோக உணர்ச்சியுடன் சென்று கொண்டிருந்தார்கள் வெள்ளலூர் நாட்டை நோக்கி. ஆம், அவர்கள் மனதில் சோகம் குடி கொண்டிருந்தது, என்னவாயிருக்கும், மதுரையைக் கைப்பற்றுவதற்காக மைசூரார் ஒரு பெரும்படையுடன் பாண்டிய நாட்டை நோக்கி வருவதாக விஜய நகர ஆட்சியின் கீழ் மதுரையை ஆண்டு கொண்டிருந்த நாயக்கர் மன்னர் ஒற்றர்கள் மூலம் அறிந்தார். அவர் உடனே தன்னரசு ஆட்சி செய்யும், பாண்டிய மண்டலத்தில் அமைந்துள்ள கள்ளர்களின் நாடுகள், போரில் உதவி செய்தால், மதுரை நாயக்கர் படை வென்று விடுவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசம் என்று எண்ணினார்.

கள்ளர்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்து அழகர்கோவிலை தலைமையிடமாக அமைத்து வடபாண்டிய பகுதிகளை ஆட்சி செய்யும் வாணாதிராயர் அரசருக்கு ஓர் அவசர ஓலை அனுப்பினார். தங்களது கட்டுப்பாட்டில் தன்னரசு ஆட்சி செய்யும் கிழக்குப்பகுதி கள்ளர்களை போருக்கு உதவ அழைக்க வேண்டும் என ஓலையில் குறிப்பிடுகிறார். வாணாதிராயர் வேண்டுகோளின் படி வெள்ளலூர் நாட்டுப்படை ரெகுநாதத்தேவர் தலைமையில் கிளம்புகிறது. அதில் முறையான பயிற்சி பெற்ற வீரர்கள் தவிர அவர்களுக்கு உதவியாக தங்களுக்கு கிடைத்த ஆயுதங்களை எடுத்து நாயக்கர் ஆட்சியை காக்க பலரும் கிளம்புகிறார்கள். நடந்த நீண்ட நாள் போரில் வாணாதிராயர் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட கள்ளர் நாட்டுப்படைகளில், வெள்ளலூர் நாட்டுப்டைகள் சாதுரியமாக போரிட்டு, மதுரை நாயக்கர் ஆட்சி வெற்றிக்கு பெரும் பங்கு ஆற்றியதாக அறியப்படுகிறது. வெற்றியை ஈட்டிய படைகளுக்கு, மதுரை நாயக்கர் அரசர் சார்பில் வாணாதிராயர் மன்னன் பல பரிசுகளை வழங்கினார். அந்த நிகழ்ச்சியில் உரையாடிய வாணாதிராயர் மன்னன் குறிப்பாக வெள்ளலூர் நாட்டுப்படைகளின் வீர தீரத்தையும் சமயோதித்த அறிவையும் வெகுவாகப் புகழ்ந்தார். சரியான போர்பயிற்சி இல்லாவிட்டாலும், படைகளுக்கு உதவ வந்த வீரர்கள், உண்மையான வீரர்களைப்போல் தங்களுக்கு கிடைத்த பல வித ஆயுதங்களை கையாண்டு, வெற்றிக் கனியைப் பறித்தனர் என்றால் மிகையாகாது என்றார். எவ்விதம் போரிட்டு வென்றார்கள் என்பதை பிறகு பார்க்கலாம்.

மன்னர் வாணாதிராயர் வீரர்களுக்கு பலவித பரிசுகளை அளித்ததோடு இல்லாமல், வெள்ளலூர் நாட்டுத்தளபதி ரெகுநாதத்தேவரிடம் அழகர் கோவில் திருவிழாவின்போது வெள்ளளூர் நாட்டுக்கு என்ன என்ன உரிமை, பங்கு கொள்ளும் போது காரணம் மரியாதைகள் பற்றி அறிவித்ததோடு இல்லாமல், அதற்கான பட்டயங்களும் ஓலை முறிகளும் கொடுக்கப்பட்டன. அதில் குறிப்பாக தேர் வடம் பிடிப்பது சம்பந்தமானது. இப்பொழுது அழகர்கோவில் தேரில் பின்பக்கம் சுற்றி கட்டியிருப்பது வெள்ளலூர் நாட்டுவடம் என்றுதான் பல செவிவலிச்செய்தி மூலம் அறியப்படுகிறது.

எந்தப்போரிலும் வெள்ளலூர் நாட்டுப்படைகள் வெனறாலும் படைகள் அழகர்கோவிலுக்கு வந்து பெருமாளையும், பதினெட்டாம்படி கருப்பணையும் வணங்கி வெற்றியை கள்ளழகர் தெய்வத்திற்கு காணிக்கையாக அளிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டதாக அறியப்படுகிறது.

அதன் பிரகாரம்தான் வெள்ளலூர் நாட்டு மன்னனான சின்னாண்டித் தேவன் சிறு குடி நாட்டை வென்று கள்ளழகருக்கு வெற்றிக் காணிக்கையை செலுத்தி அதன் பின் அங்கே கல்லானதாக தெரியவருகிறது. சின்னாண்டித்தேவன் அவரது அக்காள் சகோதரர் பேப்பெருமாள் தேவன் ஆகியோர் சிலைகள் இருந்தன என்றும், கோவில் சீரமைப்பின் போது எங்கே சென்றது என்றே தெரியவில்லை. மன்னன் சின்னாண்டித்தேவன் வெள்ளலூர் நாட்டின் கோப்பன் கரைப்பிரிவை சேர்ந்தவர் குறிப்பிடத்தக்கது. மைசூராருடன் நடந்த போரில் வெற்றிபெற்று வெள்ளலூர் நாட்டுப்படைகள் அழகர் கோவிலிருந்து வானதிராயரிடம் விடைபெற்றுக்கொண்டு தமது நாட்டுக்கு வரும்பொழுது வழுக்குப்பாறை என்ற இடத்தில் சிவனாண்டி துணைத்தளபதியை எதிரியின் ஒற்றர்கள் மறைந்திருந்து குத்திக்கொன்று விடுகிறார்கள். அந்தச்சோகத்தில் தான் படைவீரர்கள் சோகத்துடன் மனதில் பெரும்பாரத்துடன் நடந்து கொண்டிருந்தார்கள்.

ஆடித்திருவிழாவிற்கு வெள்ளலூர் நாட்டினர் அழகர்கோவிலுக்கு சென்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இறைவனை தரிசித்து, பின்னர் அழகர்கோவில் கோட்டைக்குள் முன்னோர்கள் நினைவாக ஆடு வெட்டி புள்ளி கொடுத்து சுற்றத்தார்கள் விழாவிற்கு வந்தவர்கள் அனைவருக்கும் கோவில் விருந்து கொடுப்பது மரபு. பின் நாளில், எதிரிகளால் குத்திக் கொல்லப்பட்ட படைத்துணைத்தளபதி சிவனாண்டியை நினைவு கொள்ளும் பொருட்டுதான் ஆட்டுக்குட்டி கோவில் கோட்டைக்குள் வெட்டாமல், அழகர்கோவிலிலிருந்து சுமார் 7.கிமீ கிழக்கு பகுதியில் அமைந்துள் அ.வல்லாளபட்டி தெற்கே அமைந்துள்ள வழுக்குப்பாறையில் குட்டி வெட்டி, புள்ளி கொடுத்து காணிக்கையாக்குவார்கள். புள்ளி கொடுத்த கறியில், வெள்ளலூர் நாட்டிலிருந்து வந்த அனைத்து வண்டிகளையும் கணக்கில் வைத்து புள்ளி என்ற அடிப்படையில் ஒரு துண்டுக் கறியானாலும் பிரித்து சமமாகத் தருவர். அதைக் கொண்டு வந்து தாங்கள் உறிக்கும் குட்டிக்கறியுடன் சேர்த்து சமைத்து பட்ட தெய்வமான துணைத் தளபதி சிவனாண்டிக்கு படையல் செய்து அதன் பின் அவர் நினைவைப்போற்றும் வகையில் பெரியோர்கள் நடந்த கதைகளை நினைவு படுத்தி பாட்டனை வணங்கி பிரசாதம் படையல்களையும் உணவும் உண்டு விட்டு தங்களது ஊர்களுக்கு திரும்புவார்கள்.

நன்றி மறவா மக்கள்

இந்தக்காரியம் நிறைவேறினால், நம் நாடு உலகில் அடையக்கூடிய மகத்தான அந்தஸ்து பற்றி நான் இங்கு பேசவில்லை. போர்த்திறனிலும், வீரத்திலும் நமது வெள்ளலூர் நாடு மிகச்சிறந்து விளங்குவது பற்றி நம்முடைய பிறமைகள் மிக்க பெருமை கொண்டிருக்கிறார்கள். சந்தேகமில்லை. நமதுகுலமும் அதற்கு ஏற்றாற்போல் நடந்து வந்துள்ளது.

ஆனால், எல்லாக் குணங்களும் இருக்க வேண்டும் நம்மிடம். தவறைக் கண்டால் பொங்கி எழவேண்டும், கஷ்டத்தைக் கண்டால் கருணை வரவேண்டும். அதுபோலவே நமக்கு இணையில்லாத உதவி செய்தவர்களை நினைத்தாலே நன்றி வரவேண்டும்.

இல்லையென்றால் நம்மைப்பற்றிச் சரித்திரம் வீரர்களென்றும், நல்லவர்களென்றும் குறிப்பிடும்போது நன்றி கெட்டவர்களென்றும் குறிப்பிட்டு விடும் என்று சிறுமலைப்போரில் மைசூராருடன் நடந்த போரில் நமது வெள்ளலூர் நாட்டுப் படையை வழி நடத்தி சென்று வந்த வெற்றி வாகை சூடிய ரெகுநாத தேவர் ஒரே மூச்சில் பேசினார்.

அப்போரின்போது, மற்ற பிற வகுப்பினர், நமது படைக்கு எவ்வாறு உதவி புரிந்தார்கள் என்பதை, வெற்றிக்குப்பின் வெள்ளலூர் நாட்டு மக்களால் படையினரை பாராட்டிய அப்பெருங்கூட்டத்தில் தமது நியாயத்தை எடுத்துரைத்தார். மேலும் உரிய மரியாதைகள் அளிக்கப்படவேண்டும். நாட்டுக்கும் நமது மக்களுக்குள்ள மதிப்புக்கும், எந்தவித பங்கம் வராமல் உகந்தாயிருக்குமாறு அச்செயல் இருக்கவேண்டுமென்று மக்களிடம் வேண்டினார்.

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்தெரி வார். -குறள் - 104

உதவியின் பயனைத் தெரிந்தவர்கள் தினையளவே ஒருவன் நன்மை செய்தாலும் அதனைப் பனையளவாக உளங்கொண்டு போற்றுவார்கள்.

அனைவரும், அவரின் உரையைக் கேட்டு ஆமோதித்தனர். சபையிலிருந்த பெரியவர்களும், நம் முன்னோரின் செய்நன்றி மறவாத குணம் நமக்குள்ளது என்பதை உணர்த்தும் வகையில் உங்களது ஆசை நிறைவேற்றப்படும் என்றனர். பின் அதன் வெளிப்பாடே, பிற சிறுபான்மை வகுப்பினரை பாதுகாக்கும் பொருட்டு, பெரும்பான்மை வகுப்பினரான வெள்ளலூர் நாட்டு மக்கள், சிறுபான்மையினரை பாதுகாப்பவர்கள் என்ற அர்த்தத்தில் பாடியப்பன் என்ற பெயர் ஏற்பட காரணமானது. மக்களின் ஒற்றுமைக்கும், பாதுகாப்புக்கும் வெள்ளலூர் நாட்டின் கள்ளர்கள், மற்றவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறார்கள் என சான்றோர்களால் இன்றளவும் பாராட்டப்படுகிறார்கள்.

கரைகள்

போரில் கலந்து கொண்ட வீரர்களின் போர் நடவடிக்கையை வைத்தே வெள்ளலூர் நாட்டில் கள்ளர்களில் பிரிவுகள் ஏற்பட்டதாக வரலாறு.

1. மூண்டவாசிகரை

மூண்டுவந்து (சுற்றி வளைத்து) எதிரியின் படையினரை மூண்டு வந்து தாக்கியதால் மூண்டு வாசி. மூண்டவாசி குதிரை - முண்டுதல் சுற்றி வருதல், போரில் மூண்டு மூண்டு சண்டை செய்வது.

2. வேங்கைப்புலி - தற்கொலைப்படை

புலி பாய்வதுபோல், நேருக்குநேர் போர்புரிவது எதிரியின் கால்களை துணிந்து குனிந்து வெட்டியதால் கால்களை வெட்டியவர்களே, கால், கால் வெட்டியவர்களே, காக்கா வெட்டி என்ற பெயர் உருவாக காரணமாக இருந்தது.

3. சமட்டி கரை - சமட்டி என்ற ஆயுதத்தை (சுத்தியல்)

ஆயுதத்தை பயன்படுத்தி எதிரியை வென்றதால்

4. நய்க்கான்கரை

நடுநிலையாக நின்று படையை நடத்தி சென்றதால், நாயகன் என்ற பெயரே மருவி நய்க்கான் கரையானது.

பழக்க வழக்கத்தில் உயர்ந்தவர்களாக வாழ்ந்தவன், உயரியமான பண்பாட்டுக் கூறுகளை கொண்டவர்கள் சமுதாய ஒழுங்கைப் பேணியவர்கள்.

5. சாயும்படைதாங்கி

போரில் காயப்படும் வீரரை தாங்கி மருத்துவம் மற்றும் உதவிகள் செய்வது - சாயும் படை தாங்கி எதிரிகள் அடிக்க வந்ததைக் கண்டு படைகள் பயந்து, புறமுதுகிட்டு ஓடும்போதும், படைகள் தோல்வியுடன் சாய்ந்து போகும்போதும், சோர்வு அடையாமல், மீண்டும் படைகளைத்திரட்டி வெற்றி வாகை சூடியவர்கள்.

6. வெக்காலி புலி - இவர்கள் படைபலத்தைப் பெருக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள். கூர்மையான கனமான போர் வாளால் எதிரியை இரண்டாக வெட்டுபவர்கள். வெள்ளலூர் நாட்டில் கிடாய் வெட்டி என்ற பட்டமும் இவர்களுக்கு உள்ளது.

7. சலுப்புலி - சாமிப்புலி - சலிப்புத்தட்டாமல் போர் செய்யக்கூடியவர்கள்.

8. திருமான் - திருமகன் - அழகு பொருந்திய தோற்றம் உடையவர்கள்.

9. செம்புலி - பார்த்தால் பயப்படக்கூடிய செம்மை நிறப்புலி தோற்றமுடைவர்கள்.

10. நண்டன் கோப்பன் - போரில் சண்டையிடும் பொழுது நண்டுப் பிடியாக அமுக்கி அவர்களுடைய கழுத்தை நெறிப்பார்கள்.

11. பூலான் மழவராயன் - போர்க்களத்தில் எங்குநோக்கினாலும் இவர்கள் தனித்தன்மையுடைவர்கள், மனப்பிராயம் என்ற பெயர் திரிந்து மலைபிராயன் என்றாயிற்று எனக்கூறுவர், மழவராயன் என்றும் கூறுவர். (மூவேந்தர் குல தேவர் வரலாறு ப.141)

தங்களது பெரும்பாலான கரைகளுக்கு புலி என்று சேர்த்து வைத்ததைப் பார்க்கும் போது சோழர்களின் புலிக்கொடி பெயர் வருவதால், இவர்கள் சோழர்களின் பின் தோன்றல் என்று தெள்ளத்தெளிவாகிறது. மழவராயன் என்ற பெயர் சோழ மண்டலத்தில் பல இடங்களில் பயன்படுகிறது.

கரை பிரித்தல்

இன்னமும் நாம் ஊர்பொது இருந்தால் திகைக்குமென்று
மன்றில் இருந்து வாகாய் கரை பிரித்தார்

மைசூராருடன் நடைபெற்ற போரில் வென்ற வெள்ளலூர் படைகள் மதுரை மன்னனிடம் இருந்து வாழ்த்துகளும், பரிசுகளும் பெற்று திரும்புகையில் அழகர் மலைக்கு கிழக்கே வழுக்குப் பாறை என்ற இடத்தில் எதிரிகளால், படைகளின் தளபதி ஒருவன் கொல்லப்படுகிறான். அவனது நினைவாக இன்று வரை ஆடிமாதம் கள்ளழகரை தரிசித்துவிட்டு அங்கு எந்தவித உயிர்பலியும் செலுத்தாமல் வல்லாளபட்டிக்கு தெற்கே உள்ள வழுக்குப்பாறையில் தான் வெள்ளலூர் நாட்டைச் சார்ந்த அனைவரும் ஆடுவெட்டி (பலி) படையல் கொடுத்து தளபதியின் நினைவாக பட்டசாமி கும்பிட்டு அந்த ஆட்டின் கறி. வெள்ளலூர் நாட்டிலிருந்து வந்திருக்கும் அனைத்து கிராமத்துக்கும் கூறுபோட்டு பகிர்ந்து கொடுப்பது இன்றளவும் வழக்கமாக இருந்து வருகிறது.

போரிலோ போர்க்காலங்களிலோ வீழ்ந்து பட்டவரை வணங்கும் வழக்கம் காலகதியில் சிறு தெய்வமாக மாறியது. (க.கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். ப-59) தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் நிலவிய வீர வழிபாடு அல்லது நடுகல் நடுதல் என்னும் மரபுசார்ந்த மக்களுடைய வழக்கமே இறைவழிபாட்டிற்கும் இறை நம்பிக்கைக்கும் வித்திட்டது என கருதலாம்.

கரைகள் பற்றிய மைந்தான பாடல்

வெள்ளலூரைச் சேர்ந்திருக்கும் விதமுடைய அம்பலங்கள் மண்டலத்தில் மூண்டவாசி மகிழ்ந்திருக்கும் வேங்கைப்புலி அன்புடைய சம்மட்டியுடன் அடுத்திருக்க நய்க்கானும் நாட்டிலுள்ள சாவடங்கி நல்லதொரு வெக்காலியும், தேட்டமுடன் சலுப்புலியும் திருமானும் செம்புலியும் நண்டனுடன் கோப்பனுமே நல்லதொரு பூலான் மழவராயன் மகன் மனமகிழ்ந்து தெள்ளுதமிழ் இளங்கட்சிகள் சேர்ந்ததொரு பலகுடிகள் என கரைகளைப் பற்றிய மைந்தானப் பாடல் மூலம் அறியமுடிகிறது.

ஆரம்ப காலத்தில் வெள்ளலூர் நாட்டில் ஆதிக் கள்ளர்களாக சலுப்புலி, செம்புலி, நண்டன் ஆகிய பிரிவினர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் பல்லவர் காலத்தில் (சோழமண்டலத்தில்) காஞ்சியிலிருந்து வந்த மேலூர்க் கள்ளரைச் சார்ந்தவர்கள். நாளடைவில் இம்மூன்று பிரிவினரும் புதிதாக சோழநாட்டிலிருந்து வந்த பிரிவினருடன் ஒன்றறக் கலந்து வெள்ளலூர் நாடு என்ற புதிய கள்ளர் நாடு உருவாக காரணமாயிருந்தனர் எனத் தெரியவருகிறது.

பலங்கொண்ட அஸ்திவாரம்

ஆற்றல் கொண்டு தன் பதவியால், தானும் தன்னைச்சார்ந்தவர்களையும் பெருமைபடச் செய்து உயர்பவனே, தனக்கு தான் வகிக்கின்ற பதவிக்கும் தன்னுடைய குலத்திற்கும் பெருமையைச் சேர்ப்பான். ஆடி மாதம் முதலில் வருகிறது, ஆவணி மாதம் ஆடி மாதத்திற்கு பின்னால் வந்தாலும், பின்னால் வந்த மாதத்தில் தான் நாம் சுபகாரியங்கள் செய்து, சுபிட்சமடைகிறோம்.

திறனற்றவர்களால் நிறைவான ஆட்சி அமையாது. மூத்தவர், இளையோர் என்ற பேச்சுக்கு இடமில்லை. வாரிசு முறை பகுதியில் தொடரக்கூடாது. எல்லோரையும் பொறுப்புக்கு கொண்டு வரும் வகையில் சுழற்சி முறையில் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். அதில் குறையற்றவர்கள், நிறையுள்ளவர்கள் மற்றும் பதவிக்கு ஏற்ப பொருத்தமானவர்களாக கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தனைத்தகுதிகள் உடைய பண்பாளர்களை நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்கச்செய்ய வேண்டும். அத்திறமையாளர்கள் தலைவனுக்கு நல்ல ஆலோசனை, நல்ல வழி நல்ல முடிவு எடுக்க உதவ முடியும். வெற்றிகரமாக நாட்டை நிர்வாகம் செய்ய இவர்களை தலைமைப்பொறுப்பில் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுப்பது மைய நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் பண்பாளர்களால் முறையாக, அதுவும் சுழற்சி முறையில் எந்தப்பிரிவின் முறை வருகிறதோ, அந்தப்பிரிவில் அவர்களால் இனங்கண்டு ஏகோபித்த ஆதரவுடன் தலைமை நிர்வாகியை தேர்ந்தெடுக்க வேண்டும். அனைவருக்கும் வாய்ப்பு என்பதே மக்களாட்சி தத்துவம். இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே வெள்ளலூர் நாட்டு கள்ளர் நடைமுறை வாய்மொழிச்சட்டம் உருவாகியது. இம்மக்களின் அறிவாற்றல், நுனுக்கம், ஆழ்ந்த அனுபவம், அகன்ற, பார்வை தீர்க்க தரிசனம் ஆகிய அனைத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்வதுதான் இந்நாட்டின் வாய்மொழிச்சட்டங்கள்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க்கு அணி. - குறள்-118

தன்னைச் சமனாகச் செய்து கொண்டு, பொருளைச்சீர்தூக்கி காட்டும் தூலாக்கோல்போல் அமைந்து ,ஒரு பக்கம் சாயாதிருத்தல் சான்றோர்க்கு அழகாகும்.

இந்நாட்டின் வரலாறு பின்னனி, சமுதாயச்சூழல், ஏற்றத்தாழ்வுகள், பன்முகத்தன்மை ஆகிய அனைத்தையும் புரிந்துகொண்ட நமது முன்னோர்கள் பிற பகுதி வல்லுனர்கள் உதவி இன்றி வெள்ளலூர் நாட்டுக்கள்ளர்களுக்காக எழுதப்படாத வாய்மொழிச்சட்டங்களை உருவாக்கினர். இந்த அற்புதமான எழுதப்படாத சட்டங்களை உருவாக்கியதில் அனைவருக்கும் பங்கு உண்டு. ஆனால் அவர்களில் ஒரு சில மேதைகளின் பங்களிப்பு சட்ட வரைவுக்கு வடிவமும் வண்ணமும் ஏன் உயிரும் கொடுப்பதில் அதிகமாக இருந்ததாக அறியப்படுகிறது. உணர்வுப் பூர்வமாக பேசியும் அனைவரையும் ஒருங்கிணைத்து சண்டையிடும் பிரிவினரை சமாதானம் செய்து சிறுபான்மை பிரிவினரை அரவணைத்து அவர்களது உரிமைகளை காக்கவும் கட்டுப்பாடு கண்ணியத்தையும் நிலை நாட்டியும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைத்தந்த பல மேதைகள் இருந்தாலும், பின் அவர்களின் சிந்தனைச்சிதறல்களுக்கு வடிவம் கொடுத்து அதனை வழிகாட்டும் நெறியாக ஆக்கித் தந்தவர் வெள்ளலூர் நாட்டின் சிற்பி என போற்றப்படும் வீரணனன் அம்பலகாரரும் அவர் காலத்தில் அவருக்கு உதவிய இதர அம்பலகாரப் பெருமக்களும் இளங்கச்சி அம்பலங்களும், வழக்காளிகளும், பொதுமக்களுமேயாவர்கள் மாறுபாடுகளும், வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த, அந்த காலத்தில் நமக்காக ஒரு லட்சியத்தை வகுத்துக்கொடுத்து, அதற்கு ஒரு வடிவம் கொடுத்து, அதனைச் சாதிக்க பெரிய அம்பலகாரர் தலைமையில் அமைப்பு ஒன்று உருவாக்கியது. ஒரு மாபெரும் சாதனை இச்சாதனைக்குரிய பெருமை யாரைச்சாரும்? அப்பெருமை வெள்ளலூர் நாட்டு மக்களுக்கே!

விடிவெள்ளி

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு - குறள்-27

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படுகின்ற ஐந்தின் வகைகளையும் தெரிந்து நடப்பவனிடமே உலகம் உள்ளது.

சரித்திரம் என்றால் என்ன?

கூட்டாக மனிதர்களின் அனுபவங்கள்தான் சரித்திரம். தனிமனித அனுபவங்கள் கூட சரித்திரம்தான். சில தனி மனிதர்களின் வரலாறு. அவர்களின் நாட்டின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து தேசத்தின் போக்கையே மாற்றி அமைத்ததும் உண்டு. நூறு பேர்கள் ஒரு பெரிய மாளிகையை உருவாக்கலாம். ஆனால் வீரம் விவேகம் மதி நுட்பம் கொண்ட ஒரு சிறந்த புதல்வனால்தான் ஒரு ராஜ்ஜியத்தை உருவாக்கமுடியும்.

வீரமும் சாமார்த்தியமும் கொண்டவர்கள் தம் மக்களின் சுகமான எதிர்கால வாழ்விற்கு நிகழ்காலத்தில் அதற்கான சிறந்த வழிகளை கண்டறிந்து அதன்படி நடக்க சீரிய விதிகளை உருவாக்கி மக்கள் தாங்களாகவே ஐக்கியமாகும் வகையில் நடத்திக்காட்டுவர். அந்தப்பலத்தின் மூலமாகவே அக்குலம் தழைத்தோங்கி பார் புகழும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கும். இலக்கு நோக்கிச்செல்பவன் பாதையில் சறுக்கல் ஏற்படலாம், சில நேரங்களில் நதி கரைபுரண்டு ஓடுவதால், வண்டல் மண்ணை தந்து நிலத்தை செழிப்பாக்கும். மிதமிஞ்சிய செய்கைகளால் தீமை ஏற்படுவது போல் இருந்தாலும், முடிவில் நன்மைதான் உண்டு. பார்வை உள்ளவர்கள் அனைத்தையும் பார்த்தாலும், பார்ப்பவர்கள் பார்க்கும் தன்மையைப்பொறுத்துத்தான் அதன் பொருள்.

விதையொன்று முளை விடுமேயானால், அதை விதைத்தவன் பேர் சொல்பவனாக இருக்க வேணடும். அது நாளை விருட்சமாகி, விரிந்து கிடக்குமேயானால் வேருக்கு நீரூற்றியது அவனாகத்தான் இருக்க வேண்டும். அவன் அந்த விருட்சத்துக்கு முகவரியாக விடிவெள்ளியாக இருக்க வேண்டும்.

அந்த விடிவெள்ளி, வெள்ளலூர் நாட்டு சிற்பி என போற்றப்படும் வீரணனம்பலகாரர் ஆவார். துயரங்கள் தொடரும்போது சுமை தாங்கியாகவும், நன்மை தரும் நாற்றங்காலை கண்டவனாகவும் சரித்திரத்தை துவக்கி நம்மை சாதிக்க வைத்தவனாகவும், மரணமொன்று நடக்குமேயானால் அந்த மரணத்தில் மரண மாலை சுமந்து, அம்மரணத்தை எக்காலத்திலும் பேசப்படவேண்டமென்று தம் மரணத்தையே சரித்திரம் ஆக்கியவராகவும் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியவரும் அவரே.

தன்னிடம் உள்ள பலம் எது, பலவீனம் எது அறிந்தவன்தான் மக்களை வழி நடத்தி செல்லமுடியும் குழம்பின குட்டையில் மீன் பிடிப்பவர்களுக்கு எப்போதும் குழப்பம் வராது. குழப்பம் வந்தால் அவர்களால் எளிதில் தீர்வு காண முடியாது. குழுப்பிக்கொண்டிருப்பவர்கள் எதிர் மறையான எண்ணத்தோடுதான் ஓடுவார்கள். நேர் மறையான வைப்பாடு எடுக்க அவர்கள் மனநிலை ஏற்றுக் கொள்வதில்லை. தாங்களும் கெட்டு ஊரையும், நாட்டையும் கெடுத்துக்கொண்டிருப்பார்கள்.

யார் யார் என இனங்கண்டு அவர்களை தவிர்த்து, நாட்டை வீரணனம்பலகாரார் அவர்கள் தனது சகாக்களுடன் வழி நடத்தி நாளை புதுயுகம் பூக்கும் என்ற நம்பிக்கை கொண்ட நாயகனாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால் நமக்கு கிடைத்த புதுப்பொலிவுடன் நிறைந்த புதுயுகத்தை போற்றிக்காப்போம் அவரது நம்பிக்கை தவறாமல்!

வீரணன் அம்பலகாரர்



வீரனே சூரனே வெற்றித்திருமகனே!
வெள்ளலூர் நாடு கண்ட விலை மதிப்பில்லா தங்கமே!
வெளிச்சமான விஷயங்களை வெளிஉலகுக்கு அறிய வைத்தவரே!
விவேகம் நிறை மதிநுட்பியே வீரணன் அம்பலகாரரே!
எல்லோருக்கும் ஏற்கின்ற இயல்பான விதிகளை
யாமிருக்க பயமேன்என எங்களுக்குவழி வகுத்தவரே!
வல்லவன் சக்தியை அவன் வாகனம் மூலம் வெள்ளையனுக்குணர்த்தியவரே!
விண்ணவரும். மண்ணவரும் போற்றிடும் வீரத்தாய்மகனே!

நவீன சிற்பி

வெள்ளலூர் நாடு 5 மாகாணமாகவும் ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஊரின் தலைமையில் இயங்கி வந்ததாகவும், அதற்குண்டான எல்லைகள் வரையறுக்கப்பட்டன. நாட்டிலுள்ள 11 கரைக்கும் 1 வீதம் 11 அம்பலகாரர்களும், அவர்களுக்கு உதவியாக 11 இளங்கச்சிகளும் இருக்கவேண்டுமென்று விதிகள் கொண்டு வரப்பட்டன. பின்னர் 2 அம்பகாரர் மற்றும் 2 இளங்கச்சி என்று விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி 22 அம்பலகாரர்கள், இளங்கட்சிகள் என்று ஏற்பட்டது. மாகாணக்கூட்டங்களும், நாட்டுக்கூட்டங்களும் கூட்டுவதற்கு முறையான விதிகள் வகுக்கப்பட்டன. மாகாணக்கூட்டம் என்பது அந்த மாகாணத்தில் தலைமை ஊரில் அம்பலம் தலைமையில் குடிகள் கூடுவது. நாட்டுக்கூட்டம் என்பது நாட்டுத் தலைவராகிய பெரிய அம்பலகாரர் தலைமையில் 22 அம்பலகாரர்கள், இளங்கட்சிகள் மற்றும் குடிமக்களும் கூடுவதுண்டு, சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளும் நாட்டுசட்டத் திட்டங்கள் படி (பழக்கப்படி) தீர்வு காண்பது பழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்த வழக்கம் இன்றைய இந்திய அரசியல் சட்டத்திற்கு முன்னோடியாக இருந்தது என்பது மிகையாகாது. இந்த பழக்க வழக்கங்கள் மற்றும் சட்டத்திருத்தங்களும் உருவாக மூலக் காரணமாயிருந்தவரும் வெள்ளலூர் நாட்டு சிற்பி என்றழைக்கப்படும் சாயும் படைதாங்கி வீரணனம்பலாகாரர் என்ற பெருமகனார்தான் என்பது வரலாறு.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்- குறள்-959

நிலத்தின் இயல்பினை அதனிடம் முளைத்த முளை காட்டும், அவ்வாறே நல்ல குலத்தில் பிறந்தவர் களது இயல்பினை அவர் வாய்ச்சொற்கள் எடுத்துக்காட்டும். வெள்ளலூர் நாடு மற்றும் அதன் மக்கள் இருக்கும் வரை அவரது பெயர் இருக்கும் என்பதை இன்று வரை நிலை நிறுத்தப்படுகிறது.

வெள்ளலூர் நாட்டு எல்கை

வாகண்ட நாடு, கொண கொண்டாடு பிரதப்ப சாரியான சோழ மண்டல பிரப்பசாயா சத்திய முத்திரம், சாலிய வாகனம், சாகரத்தினம் 1676-க்கு மேல் (1676 + 78 = 1754) செவ்வாய் நின்ற குரோதன வருஷம், சித்திரை மாதம் உயருந் (25) தேதி எழுதிய ஆவணம் தமறாக்கி நாட்டார், எங்களுடைய சொத்து வெள்ளக் கண்மாய் மேற்படி வயல் கடுகுடி கக்குளம் மேற்படி மண்டயங்குடி வயல் இவைகள் யாவும் எங்களுடைய சொத்து என்று தொடர்ந்தார்கள். ஆறுபேர் மக்களிடம் மல்லாக்கோட்டை நாட்டார்கள் நாங்கள் சீதனம் (ஸ்ரீதனம்) விட்ட பூமி வேப்பங்குளத்துக் கண்மாய் மேற்படி வெள்ளலூரைச் சேர்ந்த பூமி நாங்கள் கொடுத்த சீதனம் என்று இவர்கள் தொடர்ந்தார்கள். ஆரூர் வட்டத்தைச் சேர்ந்த பூங்குடி நாட்டார்கள், எங்களுடைய பூமி செய்யா முத்துக்கண்மாய்க் கரைக்கும் கிழக்கு உச்சரிச்சான்பட்டிக்கும் வடக்கு ஆலம்பட்டி தெற்கு குறிச்சிக் கண்மாய் வடகாலுக்கும், தெற்கே ஆதினிக்கண்மாய் வடகாலுக்கும் தெற்கு, எங்களுடைய பூமி என்று பூங்குடி நாட்டார்கள் தொடர்ந்தார்கள்.

தனியாமங்கலம் நாட்டார்கள், வாய்க்குளத்து கண்மாய்க்கு மேல் கரடிக்கொம்புக்கும், மேற்கு மண்டைக் கண்மாய வடகாலுக்கும், பெருங்கரையான் கண்மாய் மேலக்கூடக்கொம்புக்கும், குத்துக்கல்லுக்கும் வடக்கு எங்களுடைய சொத்து என்று தொடர்ந்தார்கள். கீழவளவு நாட்டார்கள் எங்களுடைய பூமி வலையங்குளத்து கண்மாய்க்கும், வடக்கு வெண்ணி வயல் மேற்படி பூமியைச் சேர்ந்ததெல்லாம் எங்களைச் சேர்ந்தது என்று கூறுகிறார்கள்.

கொட்டகுடி நாட்டார்கள், பெருங்கரையான் கண்மாய் மேல்க்கடக்கொம்புக்கும், தெற்கு உண்ணுக்குடி கண்மாய், மடையங்குடி வயல் வடகரை எங்களுடைய பூமி என்று தொடர்ந்தார்கள். ஆறுபேர் மக்களும், நாலுபேர் மக்களும், சாயும்படை தாங்கி வீரணன் அம்பலமும் (வழக்கு) தொடர்ந்து வந்த பிற நாட்டார்கள் முன் கூட கலகம் ஏற்பட, பின் கூட்டத்தில் கலந்து கொண்ட கள்ளர் நாட்டார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பேசி நமக்குள் ஒருவருக்கொருவர் கலகம் வேண்டாம் என்று ஒரு முடிவு எடுத்தார்கள். மதுரை ஜில்லாவைச் சேர்ந்த கவரியங் கண்மாய்க்கு கிழக்கு புண்ணிய அரசில் எல்லா நாட்டாரும், எல்லா நாட்டு ஆதி திராவிடரும் வந்து கூடி, வெள்ளைச்சேவலை அறுத்து ரத்தப்பொட்டு வைத்து குடலை உருவி மாலை போட்டு கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, வழுதாடி கையில் பிடித்து, எல்கை ஓடி எடுத்து பூமியை ஆளுகிறதென்று தீர்மானம் செய்தார்கள்.

அதன்படி எல்லா நாட்டாரும், எல்லா ஆதி திராவிடரும் புண்ணிய அரசில் வந்து கூடினார்கள். அப்போது நாங்கள் தான் எல்கை ஓடுவோம், நீங்கள் தான் எல்கை ஓடுகிறதென்று மறுபடியும் கலகம் ஏற்பட்டது. கலகத்தை நிறுத்தி ஆறு நாட்டாரும், ஆறு சீட்டு எழுதிப்போடுவோம். எந்த நாட்டாருக்கு சீட்டு விழுகிறதோ அந்த நாட்டு ஆதிதிராவிடர், இந்த கூட்டம் கலையும் முன் எல்கை ஓடி வருகிறதென்று பேசி முடிவெடுத்து ஆறுநாட்டாரும் சீட்டு எழுதிப்போட்டார்கள். அந்த திருவலச்சீட்டு வெள்ளலூர் நாட்டுக்கு விழுந்தது. அதன்படி தமறாக்கி நாட்டார், பூங்குடி நாட்டார், கீழவளவு நாட்டார் தனியமங்கலம் நாட்டார், கொட்டகுடி நாட்டாரும் மேற்படி ஐந்து நாட்டு ஆதிதிராவிடர்களும் சேர்ந்து, வெள்ளலூர் நாட்டு ஆதிதிராவிடர் எல்கை ஓடி, பூமியை எடுத்துக் கொள்ளட்டும் என்று பேசி வெள்ளலூர் நாட்டார்களைக் கேட்டார்கள்.

வெள்ளலூர் நாட்டு ஊர் ஆண்டியைக் கூப்பிட்டு, வெள்ளைச் சேவலை அறுத்து குடலை உருவி மாலைபோட்டு கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, வழுதாடி கையில் பிடித்து இந்தக்கூட்டம் கலையுமுன் எல்கை ஓடிவரும்படி கேட்டார்கள். அதற்கு பதில் ஊர் ஆண்டி எனக்கு அருளும் வராது என்னால் எல்கை ஓட முடியாது என்று சொல்லிவிட்டார். இரண்டாவது மொக்கடம்மனை கூப்பிட்டு எல்கை ஓடி வரும்படி கேட்டார்கள். அதற்கு பதில் சொன்னது. எனக்கு அருள் வராது நானும் எல்கை ஓட முடியாது என்று சொல்லிவிட்டார். மறுபடி மூன்றாவது முனியன் மகன் கட்டழகனும், தம்பி தோட்டி கடம்பனும் நாட்டை வணங்கிக் கேட்டார்கள். நாங்கள் எல்கை ஓடிவரத் தயாராயிருக்கிறோம். நாங்கள் எல்கை ஓடுவதற்கு நாட்டிற்கு உட்பட்ட கோவில் குளம் திட்டு, திடல், மண்ணு, மனை, கொட்டுக்குலவை, ஆடல்பாடல், மாடு செத்தால் தோளுவாரு தீர்த்தம், திருநீறு, களத்தில் கைப்பிச்சை தோட்டிக்கு வயலில் கருதுகதிர் அறுக்கும் போது. கும்பிட்டால், குடங்கை கருது விதை இடல் மற்றும் கைப்பிச்சை, இவ்வகைப் பொருள் எல்லாம் நாட்டில் கொடுத்தால் நாங்கள் எல்கை ஓடுவோம் இல்லை என்றால் எல்கை ஓட முடியாது என்று மீண்டும் நாட்டை வணங்கி கூறினார்கள்.

சொன்னபடி தருகிறோம் என்று நாட்டார்கள் உறுதி கூறி ஓடச் சொன்னார்கள். அதன்படி வெள்ளைச் சேவலை அறுத்து குடலை உருவி, மாலை போட்டு ரத்தப்பொட்டு வைத்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி வலுதாடி கையில் பிடித்து, அருள்வந்து இறங்கவும் சிலர் நாட்டிலுள்ள இளவட்டம் இளங்கச்சிகளை நாட்டுக்கு மூன்று பேர் வீதம் சாட்சியாக போகச் சொன்னார்கள் புண்ணிய அரசில் இருந்து கிழக்கு நக்க முத்திக்கண்மாய் பாதி, கிழக்கு சின்னவயல் உட்கடை முத்தம்பட்டி உட்கடை குறிச்சிவயல், உட்கடை குள்ளரக்கண்மாய் தென்கடக் கொம்புக்கு கிழக்கு உட்கடை தலைமறை ஊத்து ஊரணிக்கும் கிழக்கு வெள்ளமலை உச்சிக்கல்லுக்கும் வடக்கு வெள்ளமலை உச்சிக்கல்லுக்கும் வடக்கு உட்கடை கிழக்கு கிடங்கு முனியன் கோவிலுக்கும் வடக்கு உட்கடை முத்தம்பட்டி உட்கடை, குறிச்சிவயல் கொடிக்குளத்துக் கண்மாய் உட்கடை வழிக்கண்மாய் மேற்படி வயல் தருமாசனப்பட்டி, புதுப்பட்டி காடமுத்தான்பட்டி, உட்கடை பெரியகோட்டை, மலைக்குத் தெற்கு பிராமணத்திக்காடு மொட்டப்பறை மேட்டாம்பள்ளம் போட்டான் கண்மாய் உட்கடை கிழக்கசின்னப் பறையன் கண்மாய் வயலுக்கும் கிழக்கு கண்மாய் கிழக்கு உட்கடை பெருங்கரையான் கண்மாய் நீர்ப்பிடிப்புக்கு மேல் கண்டங்கல்லுக்கும் தெற்கு மாரணிக்கண்மாய மேலக்கடக்கொம்பு கண்டங்கல் மேற்படிவயல் உண்ணுக்குடி கண்மாய் வயல் உட்கடை கண்ட மொட்டக்காஞ்சிரை கம்பரக்கண்மாய் கீழக்கடக்கொம்புசாலக் கண்மாய் வயல் கவரியங்கண்மாய் வடகால் கிழக்கு தெற்கு புண்ணிய அரசில் அனைத்து நாட்டார்கள் கூட்டம் கலையும்முன் முனியன்மகன் கட்டழகனும் அருளோடு வந்து சேர்ந்தார்கள்.

அதை ஏற்றுக் கொண்டு மற்றநாட்டார்களும், ஆதிதிராவிடர்களும் எழுந்து கலைந்து போய் விட்டார்கள்.

சாயும்படை தாங்கி வீரணன் அம்பலகாரரும் மற்ற அம்பலகாரரும் இளங்கச்சிகளும் எல்கை ஓடி எடுத்த முனியன் மகன் கட்டழகனுக்கும் தம்பி தோட்டி ராமனுக்கும் வெள்ளலூர் நாட்டார்கள் கொடுத்த ஆவணம் என்னவென்றால்.. நான்கு எல்கைக்கு உட்பட்ட கிராமங்களில், ஊர்களில் உள்ள கோவில்களில் தீர்த்தம், திருநீறு, கிராமங்களுக்கு கொட்டுக்குலவை, ஆடல்பாடல், மண்ணுமனை, திட்டுத்திடல் மாடு செத்தால் வாரு. விதை இடும்போது கைப்பிச்சை, கும்பிட்டால் குடங்கை கருது இவ்வகைப் பொருள்களெல்லாம் கொடுக்கிறது. தவறினால் காராம் பசுவை கழுத்தறுத்தப் பாவத்தில் சேர்வார்கள். வெள்ளலூர் நாட்டில் எல்கைகளை காண்பித்ததால் கடம்பூர் அய்யனார் திருவிழா கொண்டாடப்படுகிறது என்பது நினைவு கூறல். வருடமுதலில் வைகாசி மாதம் கொண்டாடப்படுகிறது. இதன்படி இன்றளவும் நாட்டு எருதுகட்டில் காரணங்கள் கரைப்பிரிவினர்க்கு கொடுப்பதற்கு முன் இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதிலிருந்து நமக்கு உணர்த்துவது நமது நாட்டுத் தெய்வங்கள் எல்கை ஓடி எடுத்த ஆதிதிராவிடர்கள் மூலமாக, நமக்கு நாட்டை அளித்ததே என்றே கூறலாம். அதைவிட நமது வெள்ளலூர் நாட்டுக்கே திருவலச்சீட்டு விழுந்தது என்பதே, நமது தெய்வங்கள் நம்மை வழி நடத்திச் செல்கிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

தெய்வங்களால் உருவான நாடு வெள்ளலூர் நாடு. இதில் நீதி, நேர்மை நாட்டுப் பழக்க வழக்கங்களை மதித்து, பிற வகுப்பினரையும் அரவணைத்து செல்லவேண்டும் என்பது முன்னோர்களின் வாக்கு மற்றும் ஆசிகள். வருடம் முழுவதும் 12 மாதமும் மக்களின் ஒற்றுமைக்காக திருவிழாக்கள் நடந்து வருகிறது. ஒவ்வொரு திருவிழாவும் நடத்துவதற்கு ஒரு காரணம் உண்டு.

அதன்படி இன்றளவும் சீரும் சிறப்பாக விழாக்கள் நடந்து வருகிறது. விழாக்களை மாற்றியமைக்கவோ, நடந்த இடங்களை, அந்த புண்ணிய மண்ணை, இடமாற்றம் செய்வது தெய்வக்குற்றமாகும். தெய்வக் குற்றம் செய்தவர்கள் நாட்டுத் தெய்வங்களால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதே ஐதீகம்.

இன்றைய சந்ததியினர் தாங்கள் பொறுப்பிற்கு வந்தவுடன், தான் என்ற அகந்தையைத் தவிர்த்து பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், கோவில்கள் சார்ந்த சொத்துக்கள், நாட்டு விழாக்களுக்கு பயன்படும் பொது இடங்களை அனுபவிக்கவோ, மாற்றியமைக்கவோ முயற்சி செய்யக்கூடாது. நாட்டுக்கே சட்டம் வகுத்த வெள்ளலூர் நாட்டு சிற்பி சாயும்படை தாங்கி வீரணன் அம்பலகாரர் அவர்கள் தம் மக்களுக்கு நிறைய அறிவுரைகள், நீதிகள் கூறிச்சென்றுள்ளார். அதன்படி வாழ முயற்சிசெய்து, வாழ்ந்து வருவோம் என நல்லுறுதி எடுப்போம்!

நாட்டுக்கட்டமைப்பு

வளவு (பகுதி)

கிராமங்களில் பல வளவுகள் (பகுதி) பிரிக்கபட்டுள்ளன. ஒவ்வொரு வளவுக்கும், அந்த வளவில் வாழ்ந்து வரும் வயதில் மூத்தவரை வளவுத் தலைசியாக (தலைவர்) அவர்களுக்குள்ளாகவே நியமித்து அவர் அந்த வளவை நிர்வாகம் செய்கிறார். இது ஒரு கௌரவமான பணி.

புள்ளிவரி (தலை கட்டுவரி) முறையாக வசூலித்து கிராமக் கணக்குப்பிள்ளையிடம் ஒப்படைப்பது, மேற்படி வளவுக்குள் (பிரிவுக்குள்) சச்சரவு ஏற்பட்டால் வளவுக்கூட்டம் கூட்டி தீர்த்துவைப்பது. தெருப்பொங்கல் வைத்து பொங்கலையும், காலாஞ்சி (வெற்றிலை) பாக்கு, தேங்காய், பழம், பூ தெருப்பொங்கலில் வெட்டப்படும் ஆட்டுக்கறியை சரிசமமாக அனைவருக்கும் கூறுபோட்டு கொடுப்பது, அதற்குண்டான செலவுகளை புள்ளிகளிடம் பெற்றுக் கொள்வதும், கிராமத்தில் எடுக்கப்படும் முடிவுகளை தங்களது வளவு மக்களிடம் தெரிவிப்பது, கிராம மரியாதைப் பெற்று, அதை சரிசமமாக அந்த காலாஞ்சியை அந்த வளவைச் சார்ந்தவர்களிடம் அளிப்பது இவருடைய தலையாய கடமை. அந்த வளவின் சட்டமும், ஒழுங்கும் காப்பது இவருடைய பொறுப்பாக கருதப்பட்டது.

தெருப்பொங்கல்

ஒரு வளவில் வாழும் அனைத்துத்தர மக்களும் ஒன்றினைத்து 6 மாதங்களுக்கு ஒரு தெருப்பொங்கல் வைத்து கிடாய்வெட்டி அந்தக்கறியை அனைத்து புள்ளிகளுக்கும் சரிசமமாக கூறுபோட்டு வளவுத்தலைசி பிரித்துக்கொடுப்பார். இது விழாவாகவோ சாமிகும்பிட்டு பூஜையோ செய்வதில்லை. அந்தக்குறிப்பிட்ட மாத இடைவெளியில். சண்டை சச்சரவோ, மனவருத்தம் ஏற்பட்டிருந்தாலோ அதையெல்லாம் மறந்து செயல்பட வைப்பதற்கான நிகழ்ச்சி இது. மேலும் அனைத்து குடும்பங்களிலும் சீராக கறி எடுத்து உண்ண முடியாத சூழ்நிலை இருக்கும். எனவே அனைத்துப்புள்ளிகளுக்கும் ஆட்டுக்கறியைப் பகிர்ந்து, அதற்குண்டான செலவுகளை பகிர்ந்து கொள்வது வழக்கம்.

கிராமம்

பல வளவுகள் (பிரிவுகள்) சேர்ந்தது ஒரு கிராமம். அந்த கிராமத்தில் இருக்கும் அம்பலகாரர்களும், வயதில் மூத்தவர்களும் அந்த கிராமத்தை கவனிக்கிறார்கள். சுழற்சி முறையில் வருடம் தோறும் கிராம கணக்குப்பிள்ளை நியமிக்கப்படுகிறார். கிராம பண்டாரம் ஒருவரும் இருப்பார். கிராமத்தில் ஏற்படும் குடும்ப பிரச்சினை, பங்காளிகள் பிரச்சினை, ஊர்க்காவல் கண்மாய், நீர்ப்பாசனம், சாலைப்பராமரிப்பு, காடுகள் வளர்த்தல், பராமரித்தல், திருவிழாக்களை முறையாக நடத்துவது, அதற்குண்டான வரிவசூல் செய்வது, சிவில் வழக்குகளை தீர்த்து வைப்பது, கிரிமினல் குற்ற வழக்குகளை விசாரித்து குற்றத்தின் தன்மைக்கேற்ப சிறு சிறு அபராதம், பெரிய குற்றமாக இருந்தால் அரசு காவல் நிலையத்திற்கு தெரிவிப்பது. சிவில் வழக்கு முடிவில் திருப்தி ஏற்படாவிட்டால் வளவுக்கூட்டங்களில் முடிவுகளில் திருப்தியடையாமல் மேல்முறையீட்டு செய்தால் அந்த வழக்கினை கிராமசபை தீர்த்து வைப்பதும் இவர்களுடைய தலையாய சேவை, மற்றும் மேல்முறையீடு என்ற வகையில் மாகாணம் மற்றும் நாட்டுக்கு அவரவர்கள் கொண்டு செல்வது.

திருவிழாக்காலங்களில் நாள் குறித்து நாள் வைத்து காப்புகட்டி புள்ளிவரிகள் போட்டு முறையாக திருவிழாவை நடத்துவதும் நாடகம் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதும், திருவிழாவில் காரணமரியாதைகள் முறையாக கொடுப்பதும் இவர்களுடைய கிராமப் பொதுப்பணி.

ஊரை முதன் முதலில் உருவாக்கியவர் வகையறாவுக்கு ஊர்கட்டி என்ற பட்டமும் காரண மரியாதையும் உண்டு. கிராமக் கூட்டங்கள் தண்டோரா மூலம் குடிமக்களுக்கு தெரிவிக்கப்படும். சில முக்கியமான முடிவுகளும் தெரிவிக்கப்படும். பண்டாரம் மூலம் பிரதான தலைவர்களுக்கு தெரிவிக்கப்படும். கிராமங்களில் கோவில் வீடு என்ற பொதுவீடு இருந்துவருகிறது. கோவில் சம்பந்தப்பட்ட, நகைகள், ஆவணங்கள் அதில் இருந்து வந்துள்ளன. குறிப்பிட்ட அந்த வீட்டில் பொதுநெல், விதைநெல். தானியங்கள் பாதுகாக்கப்பட்டு பஞ்சகாலங்களில் விநியோகிக்கப்பட்டும், விதை நெல் தானியங்கள் அடுத்து வரும் வருடங்களில் விவசாயிகளுக்கு விநியோகித்ததாக தெரிய வருகிறது.

மாகாணம்

பல கிராமங்கள் சேர்ந்தது மாகாணம் ஆகும். மாகாணக் கூட்டங்களில் தீர்க்க முடியாத பிரச்சினை, கிராமத்திலிருந்து வரும் மேல் முறையீட்டு வழக்குகளை தீர்த்து வைப்பது, சமூகங்களை கட்டுப்பாட்டுடன் ஒருங்கிணைத்து வைத்திருப்பது. மாகாணங்களை அந்தந்தப்பகுதியைச் சார்ந்த அம்பலகாரர் தலைமையில் நிர்வாகிக்கப்படுகிறது. கிராமங்களில் இருந்து பெறப்படும் புள்ளி வரிகளை நாட்டுக்கு அனுப்பி வைப்பது, மாகாணத்திற்குட்பட்ட பிரச்சினைகளை முறையாக தீர்த்து வைப்பது மாகாண நிர்வாகிகளின் பணி. கிராமங்களின் பொதுப்பிரச்சினைகளை நாட்டுக்கோ, நாடு மூலம் மன்னனுக்கோ எடுத்துச்செல்வது. கிராமங்களில் பள்ளி வாசகசாலைகள் நிறுவி அடிப்படைக்கல்விக்கு வித்திட்டார்கள்.

மாகாணங்கள் (இன்றைய நிலவரப்படி)

வெள்ளலூர் மாகாணம்

1. வெள்ளலூர்
2. கட்டசோலைப்பட்டி
3. ம.ஒத்தப்பட்டி
4. மட்டங்கிபட்டி
5. இடையன் கோவில்பட்டி
6. கண்ணபுரம்
7. இடையவலசை
8. வெள்ள நாயகம்பட்டி
9. ஒத்தப்பட்டி,சி.
10. மேலவலசை

அம்பலகாரன்பட்டி மாகானம்

1. அம்பலகாரன்பட்டி
2. நாயத்தான்பட்டி
3. வல்லவன் காலனி
4. அ.புதுப்பட்டி
5. கோட்டநத்தம்பட்டி
6. பழையூர்பட்டி
7. முருகன்பட்டி
8. சுப்பிரமணியபுரம்
9. சின்ன ஒக்குப்பட்டி
10. தேவன்பெருமாள் பட்டி
11. கட்டக்காளைப்பட்டி
12. ஏழைகாத்த அம்மன் நகர்.

உறங்கான்பட்டி மாகாணம்

1. உறங்கான்பட்டி
2. புலிமலைப்பட்டி
3. கல்லம்பட்டி
4. சூரத்தூர்பட்டி
5. குப்பச்சிப்பட்டி
6. அய்யமுத்தான்பட்டி
7. கொட்டாணிபட்டி
8. அழகிச்சிப்பட்டி
9. உ.புதுப்பட்டி
10. தர்மாசனப்பட்டி
11. முத்தாயி ஊரணிபட்டி
12. தம்பட்டமலைப்பட்டி

குறிச்சிப்பட்டி மாகாணம்

1. குறிச்சிப்பட்டி
2. முத்தம்பட்டி
3. கள்ளராதினிப்பட்டி
4. கூலிபட்டி
5. அம்மன் கோவில்பட்டி
6 கோவில்பட்டி ஒத்தப்பட்டி
7. ஆலம்பட்டி
8 உச்சரிச்சான்பட்டி
9. கண்மாய்பட்டி

மலம்பட்டி மாகாணம்

1. வெ.மலம்பட்டி
2. சோணைபட்டி
3. மலை அழகிச்சிபட்டி
4. தேவன்கோட்டை
5. மேட்டுப்பட்டி
6. கன்னிமார்ப்பட்டி
7. பெரிய ஒக்குப்பட்டி
8. மாணிக்கம்பட்டி (ஆவாரம் பட்டி)
9. வெ.புதுப்பட்டி (அரதம் பட்டி)
10. கூட்டுறவுப்பட்டி
11. சிவல்பட்டி
12. உசிலம்பட்டி
13. கண்டாங்கிபட்டி
14. முனியாண்டிபட்டி
15. சாணிபட்டி
16. பனையூர்ப்பட்டி (நல்லாண்டிப் பட்டி)

நாடு

குற்றவழக்குகளை அதனதன் தன்மையை ஆராய்ந்து சிறு சிறு தண்டனைகளை அளித்து அதை நிறைவேற்றியுள்ளார்கள். பெரிய குற்ற வழக்குகளை வெள்ளலூர் நாட்டிலிருந்து (குறு நிலநாடு) பாண்டிய மன்னனுக்கு அனுப்பிவைப்பார்கள். மன்னன் மற்றும் அமைச்சரவையால் நீதி பரிபாலனம் செய்யப்படும். பெரிய தண்டனை அளிக்க மன்னருக்குத்தான் அதிகாரமுண்டு. அங்குதான் சீர்திருத்தப்பள்ளி, சிறைகள் உள்ளன. நாட்டிற்கு ஒரு பண்டாரம் வழி வழியாக நியமிக்கப்பட்டு வருகிறார்.

நாட்டுக் கணக்குப்பிள்ளை வருடந்தோறும் மாகாணவாரியாக சுழற்சி முறையில் நியமிக்கப்படுகிறார். நாட்டுக் கூட்டங்களை நடத்த நிர்வாகம் அளிக்கும் ஓலைகள் (சுற்றறிக்கை) மூலம் மாகாணத்திற்கும், கரை அம்பலகாரர்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது. கூட்டங்கள் பற்றியும், அதன் முடிவுகள் பற்றியும் சுற்றறிக்கைகளை எடுத்துச் சென்று கொடுப்பது, பண்டாரத்தின் பணி. நாட்டுக்கூட்டம் நடக்கும் போது, அம்பலகாரர்களுக்கும், இளங்கட்சிகளுக்கும், குடிகளுக்கும் உதவியாய் இருப்பதும் இவர் வேலை. இவருக்குச் சம்பளமும், மானியமும் உண்டு. இதைப் பெரிய கௌரவம் என்று அப்பிரிவினர் எண்ணுவர்.

நாட்டுக்குக் கணக்குப்பிள்ளை மாகாணவாரியாக வரும் வரிகளை வசூல் செய்வது, பாதுகாப்பது,மற்றும் நாட்டுக்கோவில்களுக்குண்டான திருவிழாச்செலவு, பராமரிப்பு செலவுகளைக் கவனிப்பது இவருடைய பணி. வசூலாகும் வரியில் ஒரு தொகையை பல குறுநிலநாடுகளை ஆட்சி செய்யும் மன்னனுக்கு வரி (நிலவரி) கப்பம், கட்டுவதும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. காடுகளை வளர்ப்பதும், மரங்களை நடுவதும் நாட்டுச்சாலைகளை பராமரிப்பதும், ஊருணி, கண்மாய்கள் பராமரிப்பதும் இவர்களுடைய பணி. இதற்காக நாட்டுக்கூட்டத்தில் சிறு சிறு குழுக்கள் நியமிக்கப்படுவர். (சுழற்சி முறையில்)

அதே வேளையில் இந்த குறுநில நாட்டை பாதுகாப்பதற்கு என்று பயிற்சிபெற்ற சிறு படையினர் இருந்ததாக அறியப்படுகிறது. ஊர், மாகாணக் காவலர்களை ஒன்றினைத்து திருட்டு, கொள்ளை போன்ற சம்பவங்கள் ஏற்படாதவாறு கவனிப்பதும், தங்கள் பகுதிகளை பிறர் பகுதிகளைச் சார்ந்தவர்கள் ஆக்ரமிக்காமல் தடுப்பதற்கு எல்லைக் காவலர்களும், ஒற்றர்களும் இருந்ததாக அறியப்படுகிறது. போர்க்காலங்களில் தங்களை அதிகாரம் செய்யும் மன்னருக்கு ஆதரவாக படையினரும், ஊர்க்காவலர்களும், குடிகளும் போரில் கலந்து கொண்டதை அறியமுடிகிறது.

நாட்டுக்கூட்டம்

பெரிய அம்பலகாரர் அவர்கள் தான் நாடு முழுவதற்கும் தலைவராவர், மாகாணக்கூட்டம், நாட்டுக்கூட்டம் என இருவகைக்கூட்டங்கள் உண்டு. ஒரு அம்பலமும், குடிகளும் கூடுவது மாகாணக்கூட்டம். நாட்டுக்கூட்டம் என்பது நாட்டுத்தலைவரும் இருபத்திரண்டு அம்பலகாரர்களும், இளங்கச்சிகளும், வழக்காளிகளும், குடிகளும் கூடுவதாகும். நீதி (சிவில்) வழக்குகளைத் தீர்ப்பது.

இன்றைய சூழ்நிலைப் பிரகாரம்

கீழ்க்கோர்ட் தீர்ப்பில் திருப்தி ஏற்படாவிட்டால், மேல்கோர்ட்டில் மேல் மனுத்தாக்கல் (அப்பீல்) செய்யலாம். இந்தக்கால சட்டத்தை வெள்ளலூர் நாடு அன்றே சட்டமாக கொண்டு வந்துள்ளார்கள். வழக்கு தீர்ப்பு ஆணை ஏற்புடையதாய் இல்லாவிட்டால், மாகாணக்கூட்டத்தில் மேல்முறையீடு செய்யலாம் - மாகாண கூட்ட முடிவு - ஏற்புடையதாக இல்லாவிட்டால் - நாட்டுக்கூட்டத்தில் மேல்முறையீடு செய்யலாம் அதன் முடிவும் ஏற்புடையதாய் இல்லாவிடில் பிற கள்ள நாட்டுத்தலைவர்கள் (அம்பலகாரர்கள்) அவ்வழக்கினை தீர்த்து வைப்பார்கள். அதே போல் பங்காளி - பெரும்பங்காளி - கரை அம்பலகாரர்கள் - நாட்டு கூட்டத்தில் இறுதிமுடிவு எடுக்கப்படும். அம்பலகாரர்கள் தேர்வு செய்யும் முறை

நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு - குறள்-994

நீதியையும், அறத்தையும் விரும்புதலால் பிறருக்கும் தமக்கும் பயன்படுதலை உடையவரது பண்பினை உலகத்தார் அனைவரும் போற்றிக்கொண்டாடிப் புகழ்வார்கள்

சுழற்சி முறையில் ஒவ்வொரு பிரிவிலும் (கரை) அம்பலகாரர்கள் அந்தக் கரையைச் சார்ந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் நல் ஒழுக்கம், நேர்மை, நாட்டுப்பழக்க வழக்கம் தெரிந்து வைத்தவர்களாய் இருக்கவேண்டும். குறிப்பாக உடல் குறைபாடுகள் இல்லாமை மிகவும் முக்கியம். தேர்ந்தெடுக்கப்பட்ட அம்பலகாரர்களில் ஏற்கனேவே மொத்தகரைகளும் இருபிரிவாக பிரிக்கப்பட்டிருப்பதால் எல்லா வகையினர்க்கு வாய்ப்பு கிடைக்க வேண்டி சுழற்சி முறையில் பெரிய அம்பலகாரர் தேர்வு செய்வது நாட்டுப்பழக்கம்.

இன்றைய கால அரசியல் நிலவரப்படி.

குடி மக்கள் எம்.எல்.ஏ மற்றும் எம்.பி. க்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்

மாநிலங்களுக்கு - MLA.

முதல் மந்திரி - மந்திரிகளை நியமனம் செய்கிறார்.

இந்தியநாட்டுக்கு - பிரதமர் - மந்திரிகளை நியமனம் செய்கிறார்.

இந்தப் பழக்கத்தில் ஜனநாயகம் சற்றுத்தடுமாருகிறது. ஏனென்றால் முதல் மந்திரியோ, பிரதமரோ தனக்கு வேண்டியவர்களைத்தான் நியமிப்பது வழக்கம். தேவையில்லை என்றாலோ நிர்வாகத்திறமை இல்லை என்றாலோ நீக்கிவிடலாம்.

ஆனால், வெள்ளலூர் நாட்டு சட்டப்படி அம்பலகாரர்கள் தான் பெரிய அம்பலகாரர்களைத் தேர்வு செய்கிறார்கள். தனக்கும் பிடிக்கவில்லையென்றால் எந்த அம்பலகாரரையும் நீக்கும் அதிகாரம் பெரிய அம்பலகாரர்களுக்கோ, நாட்டுக்கோ இல்லை.

அவர் சார்ந்த கரையைச் சார்ந்தவர்கள் அந்த முடிவு எடுக்கமுடியும். இல்லாவிடில் அவரது கரையில் (பிரிவு) அந்த அம்பலகாரர் மறைவிற்குப் பின் சுழற்சி முறையில் தான் புதிய அம்பலகாரர் தேர்வு செய்யமுடியும். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் நீக்கவோ. தேர்வு செய்வதோ குடிமக்களிடம்தான் உள்ளது. இன்றைய நாகரீக காலத்தில் இந்தப் பழக்கவழக்கம், சட்டங்கள் மிகவும் பண்பட்டதாக அறியப்படுகிறது. அதனால்தான் 'நாட்டுக்குள்ளே ஒரு நல்லநாடு' வெள்ளலூர் நாடு என சான்றோர்கள் கூறுகின்றனர்.

நமது இந்திய அரசியல் சாசனம், பல நாடுகளின் அரசியல் அமைப்புகளிலிருந்து பலவற்றை சுவீகரித்துக் கொண்ட சாசனமாகும். மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் நீதிமன்ற மேல்முறையீட்டை அமெரிக்க அரசியல் சட்டத்திலிருந்து பெற்றோம். இங்கிலாந்திலிருந்து பார்லிமெண்ட் முறையை ஏற்படுத்தினோம். அரசின் நெறிபடுத்தும் ஆணைகளை அயர்லாந்திடம் பெற்றுக்கொண்டோம். சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதை நாம் கனடாவிலிருந்து சுவீகரித்துக்கொண்டோம்.

இப்படியாக இந்தியாவில் பயன்படுத்தப்படும் சட்டங்கள், அரசியல் சாசனங்கள் பிறநாடுகளில் இருந்து பெற்றதை நினைக்கும்போது வெள்ளலூர் நாட்டு நடைமுறைச்சட்டங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர்களால் பிறர் உதவியின்றி உருவாக்கியதை எண்ணி நம்மைப் பெருமைப்பட வைக்கிறது. இது நமது முன்னோர்களின் அறிவுக்கூர்மையை உலகுக்கு பறைசாற்றுகிறது.

உயரிய நடைமுறை பழக்கம்

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து - குறள்-136

மன வலிமை உடையவர், ஒழுக்கம் குன்றுதலால் குற்றம் நேரிடுதலை அறிந்து, ஒழுக்கத்திலிருந்து ஒரு போதுமே பிறழமாட்டார்கள். நாடு என்பது மக்களின் உயிர்நாடி. ஒரு நாட்டிற்கு நல்ல குடிமக்கள் மிக முக்கியமானவர்கள். அந்த மக்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும்? உயிரோடு உலவுகின்ற பிண்டங்களாயிருக்கலாமா? அப்படியிருந்தால் அந்த நாடும் அசையாத பிண்டமாய்த்தானிருக்கும். எனவே மக்கள் உழைப்பாளிகளாகவும், அறிவிற்சிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அந்த நாடு ஜீவ சக்தியோடு கூடியதாயிருக்கும். இந்த இரண்டு பண்புகளையும் கொண்ட மக்கள் வாழும் நாடு காலம் முழுவதும் புகழோடு பிரகாசிக்கும். இவ்விரண்டிலிருந்து அவர்கள் இழிந்துவிடாதபடியிருக்க நாடு என்னென்ன செய்ய வேணடுமென்று அறிஞர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள். தற்காலத்திற்கு இந்த இரண்டு பண்புகளும் எவ்வளவு அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

ஒரு நாட்டு மக்கள் பக்தியுடையவர்களாயிருக்க வேண்டுமென்று சாஸ்திரம் அறிந்த அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எதனிடத்தில் யாரிடத்தில் பக்தி? நாட்டினிடத்தில் ஆளுங்கடமையைச் செய்து கொண்டிருப்போரிடத்தில். தேச பக்தியும் ராஜபக்தியம் வேறு வேறாகப் பிரிந்திருக்கவில்லை. இவ்விரண்டுக்கும் மேலாகத் தர்மத்திடம் பக்தியுடையவர்களாயிருக்க வேண்டும். அதாவது சுய தர்மத்தை அனுஷ்டிக்கிறவர்களாகவும் பிறர் தர்மத்தை மதிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

இங்ஙனம் சில லட்சணங்களோடு கூடியதைத்தான் நாடு என்கின்றனர் தமிழ் அறிஞர்கள். இந்த லட்சணங்களுள்ள இடத்தில் தான் அரசு நிலவும். நிலைக்கும். அதில் தான் நாடு உருக்கொள்ளும். ஒரு நாட்டிற்கு அரசும் மக்களும் முக்கிய உறுப்பினர்கள். இவையிரண்டு மில்லையேல் ஒரு நாடு உருவாவதற்கு ஏதுவுண்டாகாது. எந்த இடத்தில் சிறந்த ஆளுகையென்பது இல்லையோ அந்த இடம் நாடாகாது. இவ்விரண்டு மட்டுமே ஆளுகையும் இடமும் நாடும் ஆகிவிடாது. தலையும், கால்களும் முக்கியமான உறுப்புக்கள் தான். ஆனால் இவை மட்டுமே உடம்பாகிவிடாதல்லவா?

உறுப்பு என்ற வார்த்தையை ஏன் இங்கே உபயோகிக்கிறோமென்றால் நாட்டை சில உறுப்புகளோடு கூடிய உருவமாக உடலாக நமது முன்னோர்கள் வர்ணித்தது மட்டுமல்ல இதை ஒரு கோட்பாடாகவே வைத்திருக்கின்றனர். சில கிராமங்கள் இணைந்து ஒரு மாகாணமாகவும், பல மாகாணம் இணைந்தது ஒரு நாடு என்றழைக்கப்பட்டது. உடலுக்கு பல அங்கங்கள் இருப்பதைப்போல் நாட்டிற்கு பல கிராமங்கள் மாகாணங்கள் இருந்து வருகின்றன பல அங்கங்களாக. 1. தெய்வங்கள் 2. பெரிய அம்பலகாரர் 3. அம்பலகாரர்கள் 4. இளங்கச்சி அம்பலங்கள் 5. குடிமக்கள் 6. தலைநகரம் 7.மாகாணத் தலைநகர்கள். வெள்ளலூர் நாட்டிற்கு இந்த ஏழு அங்கங்கள் உண்டு. இதுவே நமக்கு முக்கியம்.

முடியாட்சியை மையமாக வைத்துத்தான் பல நாடுகள் அரசியல் சித்தாந்தங்களை வகுத்துள்ளன. ஆனால் வெள்ளலூர் நாடு முடியாட்சி இல்லாத மக்களாட்சி முறை அரசியல் சித்தாந்தங்களை பின்பற்ற இந்நாட்டு முன்னோர்கள் வகுத்துள்ளனர். தங்களது பொது நோக்கை அன்றே கொள்கைகளாக்கியுள்ளனர்.மேலே குறிப்பிட்டுள்ள ஏழு பிரிவுகளில் ஏதேனும் ஒன்றிற்கு ஊறு ஏற்பட்டால் கூட மற்றவை பாதிக்கப்படும். ஆதலின் எந்த ஒன்றுக்கும் ஊறு நேரிடாமலும், அதனதன் ஸ்தானத்தில் அதனை இருத்தியும் அனைத்தையும் ஒன்றுபடுத்தியும் கொண்டு செலுத்த வேண்டும். கொண்டு செலுத்துகிறவனை தலைவன் என்றார்கள். அந்தத் தலைவன்தான் பெரிய அம்பலகாரர். அதனால் தான் அம்பலகாரர்கள் சுவாமிக்கு அடுத்த இடத்தில் வைக்கப்பட்டதாக கருதப்பட்டார்கள். எவ்வளவு மகத்தான பொறுப்பு இவர்களுடையது? அதனால் தான் தெய்வத்திற்கு அடுத்து வைத்துப் பேசினர் முன்னோர்கள். நாடு என்பது எல்லா லட்சணங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும். நாடானது பல பின்னங்களுடையதன்று. அது முழுசாகவே இருக்கிறது. ஒன்றாகவே இருக்கிறது என்று தன் அடையாளமாக நாட்டின் மொத்தப் பிரதிநிதியாக பெரிய அம்பலகாரர். நாடு ஒழுங்கான நிர்வாகத்திற்குட்பட்டிருக்கிறதென்பதற்கு அடையாளம் 22 அம்பலகாரர்கள். நாடு வளமுடையதாயிருக்கிறது என்பதற்கு மக்களின் அமைதியான வாழ்க்கைமுறை. புள்ளி வரி மூலம் வரும் நிதி, நாடு ஒழுங்கான வருமான முடையதாயிருக்கிறது. நாடு சிறந்த ஆன்மீக நாடாக இருப்பதற்கு அடையாளம் ஆலயங்களின் வளர்ச்சி திருவிழாக்கள். நாடு பிற நாடுகளோடு நல்லுறவில் இருப்பதற்கு அடையாளம் பரஸ்பர உதவி சிநேகிதம். இதில் தான் வெள்ளலூர் நாட்டு முன்னோர்களின் பரந்த மனப்பான்மையும், அனுபவத்தோடு ஒட்டிய அறிவும் நன்கு புலப்படுகின்றன.

ஒரு நாட்டை பரமசாதுவான ஒரு பசுவுக்கு ஒப்பிட்டுச் சொல்கிறான் காளிதாச மகாகவி தனது ரகுவம்சம் என்னும் காவியத்தில். பசுவுக்கு ஒரு புனிதத்தன்மை கொடுத்து அதனை எப்போழுதுமே போற்றி வந்திருக்கின்றனர் நமது பெரியோர்கள்.

இந்த வெள்ளலூர் நாட்டை கொண்டு செலுத்துபவர்கள் பெரிய அம்பலகாரர் மற்றும் அம்பலகாரர்கள் இந்த ராஜ்ய பசுவை பாதுகாக்கிறவர்கள். அம்பலகாரர்கள் இந்தப்பசுவை (நாட்டை) நன்கு பாதுகாத்து வரவேண்டும். எனவே அம்பலகாரர்கள் இந்தப் பசுவை நன்கு பாதுகாத்து தனக்குப் பின்னால் வரும் சந்ததியிடம் அப்படியே, இல்லை இல்லை அதிகப்பொலிவுடன் ஒப்படைக்க வேண்டும். ஒரு பொருளுக்கு சொந்தக்காரனாயிருப்பது சுலபம். தர்மகர்த்தாவுக்கோ கடமைகள் அதிகம், அப்படிப்பட்ட தர்மகர்த்தாக்கள் அம்பலகாரர்கள், கடமையில் தவறிய அம்பலகாரர்கள் காலத்தால் தண்டிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. சரி நாட்டின் நோக்கமென்ன? எதுவாயிருக்கவேண்டும். மக்களுக்கு நன்மை செய்வதுதான், மக்களைச்சந்தோசப்படுத்துவதல்ல. சந்தோசப்படுத்த வேண்டியதுதான்.

ஆனால் அந்தச்சந்தோசம் நன்மையில் விளைவதாயிருக்க வேண்டுமே தவிர வேறும் சந்தோசமாயிருத்தல் கூடாது. எந்த நாடு மக்களுடைய கவனத்தை நாட்டு விவகாரங்களினின்று திருப்பி வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அற்ப சந்தோசத்தை அவ்வப்பொழுது ஊட்டி வருகிறதோ அந்த நாடு காலக்கிரமத்தில் சீரழிந்து போகிறதா? இல்லை, எந்த மக்களைச்சந்தோசப்படுத்தி வந்ததோ, அந்த மக்களாலே அழிக்கப்பட்டுவிடும். இந்த விஷயங்களில் அம்பலகரர்கள் மிகக் கவனத்துடன் கையாள வேண்டும். இப்படியெல்லாம் நிகழ்தல் கூடாதென்று வெள்ளலூர் நாட்டு அரசியல் பண்டிதர்கள் மக்களுக்கு நன்மை செய்வதே அம்பலகாரர்களின் நோக்கமாயிருக்க வேண்டுமென்று அறிவுரைகளுடன் கூடிய நீதி, நேர்மை, சத்தியம் உயிர் மூச்சாக இருக்க வேண்டுமென்று வழி வழியாகக் கூறி வந்துள்ளனர். இன்னும் ஒரு நாடு, தனது மக்களின் புற வாழ்க்கை செம்மையாக நடைபெறுவதற்கு ஏதுவாயிருக்க வேண்டும். அப்பொழுது தான் அகவாழ்க்கை மலர்ச்சி தந்து மணம் வீசும். எந்தவொரு பிரஜையும் தன்னுடைய உயிருக்கும் பொருளுக்கும் ஆபத்தில்லையென்று உணர்கின்ற நிலையில் தான் மன நிம்மதியடைகிறான். நிம்மதியான மனந்தான் உயர் குணங்களுக்கும், உயர் சிருஷ்டிகளுக்கும் விளை புலனாகிறது. இத்தகைய விளைபுலனாக ஒவ்வொரு பிரஜையினுடைய மனமும் இருக்கப்பாடுபடுவதே நாட்டின் நோக்கமாயிருக்க வேண்டும். இதை எதற்கு இங்கே குறிப்பிடப்படுகிறதென்றால் வெள்ளலூர் நாட்டின் எல்கைக்குள் அரசின் காவல் நிலையங்கள் இன்றளவும் இல்லை என்பதே!

வெள்ளலூர் நாட்டு மக்கள், அவர்களுக்குள் ஏற்படும் பிரட்சனைகளை இவர்களுக்குள்ளாகவே கிராமத்திலோ நாட்டுக்கூட்டத்திலோ அம்பலகாரர்கள் மூலமாக தீர்வு காணப்படுகிறது. ஒரு சில பிரட்சனைகள் தான் தவிர்க்க முடியாமல் இன்றைய அரசின் நிர்வாகத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. அதுவும் எளிதாகவே முடிக்கப்பட்டு விடுகிறது. ஏனென்றால் பெரும்பாலான மக்களின் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தான்!

இந்நிலையினை இன்றைய அரசாங்கம் இப்படியே நல்லபடியாக எடுத்துச்சென்றால், இம்மக்களை நல்லபடியாக கையாள முடியும். இதை அரசு அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இப்பகுதி மக்களுக்கு வெற்றிகரமான வாழ்க்கை அமைய உதவ வேண்டும்.

மக்கள் அவரவருக்குரிய தர்மத்தை அவரவரும் உணர்ந்து செயல்பட்டு வரச்செய்வது தலைவர்களின் கடமையாகும். தன்னுடைய சொந்தக்கடமை இன்னதென்று உணர்ந்து செய்யாதவன் மற்றவர்களுக்கு கடமையை உணர்த்த முடியாது.

சமுதாயத்திற்குச்செய்ய வேண்டிய கடமைகளையும் செய்ய முடியாது. சுருக்கமாக, அவனால் சமுதாயத்திற்கு எவ்வித பிரயோஜனம் இராது. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்குப் பிரயோஜனமுள்ளவனாயிருக்க வேண்டுமென்பதற்காகவே சுயதர்மத்தை அதிகமாக வலியுறுத்திருக்கின்றனர் இந்நாட்டு முன்னோர்கள்.

ஒருவனுக்கு அனுசரிக்கின்ற தர்மம், மற்றொருவனுக்கு எந்த விதத்திலும் இடையூறாக இருக்கக்கூடாது. ஒருவனுடைய வளர்ச்சி மற்றொருவனை குன்றச்செய்யக்கூடாது. ஒருவன் பெற்றிருக்கின்ற அறிவோ, அடைந்திருக்கின்ற பொருளோ, மேற்கொண்டிருக்கின்ற உழைப்போ, எதுவும் சமுதாயத்தின் கட்டுக்கோப்பைக் குலைப்பதாயிருக்கக்கூடாது. சமுதாயத்தைக் கட்டுக்கோப்பை குலையாமல் வாழ வைத்துக்கொண்டிருப்பதே நாட்டின் நோக்கமாயிருக்க வேண்டும்.

அம்பலகாரர்கள் தேர்வு செய்தல்

வெள்ளலூர் நாட்டில் கள்ளர் பிரிவினரில் 11 கரைகள் உருவாக்கப்பட்டன. அவை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தப்பட்டன.

1. மூண்டவாசி
2. வேங்கைப்புலி
3. சமட்டி
4. நய்க்கான்
5. சாயும்படைதாங்கி
6. வெக்காலி
7. சலுப்புலி
8. திருமான்
9. செம்புலி
10. நண்டன்- கோப்பன்
11. பூலான்- மழவராயன்

ஒவ்வொரு கரைப்பிரிவுக்கும் ஒரு அம்பலகாரர். சுழற்சி முறையில் அம்பலகாரர்கள் கரைப்பிரிவினராலேயே நாட்டுக்குத்தேர்வு செய்து அனுப்ப வேண்டும். பின்னாளில் ஒவ்வொரு கரைப்பிரிவுக்கும் இரண்டு அம்பலகாரர்கள் தேர்வு செய்வது, நாட்டாரால் விதிகளில் மாற்றம் செய்யப்ட்டன. அம்பலகாரர் எப்படி தேர்வு செய்ய வேண்டும் என மூல நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்மாய், கரை, குளம், கோவில், காத்திருந்தவனுக்குத்தான் முதல் உரிமை என்ற பழமொழி உள்ளது என்பதை நினைவு கூறத்தக்கது.

தகுதிகள்

1. வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த கள்ளராக இருக்கவேண்டும்.
2. வெள்ளலூர் நாட்டிற்குட்பட்ட பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. நாட்டு வரிகள் செலுத்தியிருக்க வேண்டும்.
4. உடல் ஊனமுற்றவராக இருக்கக்கூடாது.
5. நோயற்றவராக இருக்க வேண்டும். (தீர்க்க முடியாத நோயற்றவர்)
6. கூர்மையான அறிவு பெற்றவர்கள்.
7. செயலாற்றும் திறமை.
8. ஒழுக்கத்தில் சிறந்தவர்கள்
9. சேர்க்கை தோசத்தினால் ஏற்படக்கூடிய குறைபாடற்றவர்கள்
10. நீதி, நேர்மை, சத்தியம், ஆகியவைகளை கடைபிடிக்ககூடியவர்கள்
11. கர்வமற்றவர்கள்
12. கரை மக்களால் விருப்பப்பட்டவராகவும், மதிக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
13. இந்நாட்டின் பிரஜை கொண்ட பெண் மனைவியுள்ளவராக இருக்கவேண்டும்.
14. அனைவரையும் அரவணைத்துச் செல்பவர்.
15. நம்பிக்கை வைக்கத் தகுந்தவர்கள்
16. சுயமுயற்சி உடையவர்கள்.
17. நாட்டின் மேல் விசுவாசமுடையவர்கள்
18. பொருளுக்கோ, புகழுக்கோ ஆசைப்பட்டு ஒரு காரியத்தை செய்யாதவர்கள்.
19. தைரியமுடையவர்களாயிருக்க வேண்டும்.
20. பிறருடைய மனோபாவங்களை எளிதிலே உணர்ந்து கொள்ளக்கூடியவர்கள்.
21. நாட்டு ரகசியத்தை காப்பாற்றக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
22. தன்னலமற்ற உண்மை பேசக்கூடியவர்களாகவும் அதை தைரியமாக வெளியிடக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
23. பணக்காரர்கள், ஏழைகள் என்று வித்தியாசம் பாராட்டாமல், நியாயத்தை சொல்பவர்களாகவும், செய்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
24. சிறுபான்மையினரை அரவணைத்துக் காப்பவர்களாகயிருக்க வேண்டும்.
25. சபையின் முடிவுகளை ஏற்று அதனை செயல்படுத்துபவர்களாகயிருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தகுதியுள்ளவர்களால் தான் நாட்டின் நிர்வாகம் செவ்வனே நடைபெறும். இவர்களால்தான் நாட்டின் நன்மைக்குகந்தது எது என்பதை நன்கு அறிய முடியும். அப்படிப்பட்டவர்கள்தான் நாட்டின் நிர்வாகப்பொறுப்பை ஏற்று நடத்த முடியும் என உணர்ந்து மூல நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரிய அம்பலகாரர் தேர்வு

வெள்ளலூர் நாட்டு மக்கள் ஆறுபேர் மக்கள் எனவும் நாலு பேர் மக்கள் எனவும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இரு பிரிவுகளிலிருந்து சுழற்சி முறையில் மாறி மாறி பெரிய அம்பலகாரர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்தச்சபையிலேயே பிரமாணம் எடுத்துக்கொள்வார். பிரமாணம் எடுத்துக் கொண்டதும், பெரிய அம்பலகாரர், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, இப்படி வரிசைக்கிராமமாக நான்கு திசைகளை நோக்கி வணங்கி நிற்க வைக்கப்படுவார். அப்போது நாட்டுத்தெய்வங்கள், அனைத்து மக்களை நோக்கி பெரிய அம்பலகாரராக தேர்ந்தெடுக்கப்பட்டவரை 'பொக்கிசமாகக்' கருதிக் காப்பாற்றுங்கள் என்ற கருத்தடங்கிய மந்திரங்களை நாட்டுத் தெய்வங்களால் சொல்லப்படுவதாக ஐதீகம். அதாவது சமுதாயம் அனைத்துக்குமே இவர் அரசனாகிறார். ஒரு வகுப்பினருக்கோ ஒரு பிரிவினருக்கோ அல்ல. இவருடைய ஆளுகைக்குட்பட்டிருப்பதும், அந்த ஆளுகையை நலம் பெறச் செய்வதும் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருடைய கடமையாகும் என்பதை உணர்த்தப்படுகிறது. பிரமாணம் எடுத்துக்கொண்டபின் பெரிய அம்பலகாரர் புதிய பிறவி எடுக்கிறார் என்பதே அர்த்தம். அவருடைய முகமே மாறுதல் அடைகிறது. ராஜகளையென்று சொல்கிறார்களே அது உண்டாகிறது.

பெரிய அம்பலகாரராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தனது நாட்டில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், பணக்காரர்கள் ஏழைகள் என்ற வித்தியாசம் பாரபட்சமில்லாமல் எல்லா மக்களையும் சரி சமமாக கருதவேண்டும் பெரிய அம்பலகாரர், அம்பலகாரர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள். எல்லோருடைய சம்மதத்தின் மீதுதான் பதவியை ஏற்றுக்கொள்கிறார்கள்.எல்லோருடைய ஒத்துழைப்பும் அவர்களுக்கு கிடைப்பது உறுதி என்பவைகளை அறிவுறுத்துவதற்கேயாம்.

பிரமாணம்:

அம்பலகாரர்கள் பொறுப்பேற்கும்போது எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி:

வெள்ளலூர் நாட்டைபொறுத்தவரை மக்கள் சபையில் நாட்டுத் தெய்வங்களின் முன்னால் வணங்கி அமர்வது. நான் இந்த நாட்டைத் தெய்வமாகக்கருதி, அதிலுள்ள சகலமானவற்றின் வளர்ச்சிக்காக எப்போதும் பாடுபடுவேன். தர்மத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும், நாட்டிற்கு நன்மையான காரியங்களையும் உறுதியுடன் செய்வேன் மற்றும் தன்னிச்சையாக நடக்க மாட்டேன். நான் மக்களின் நன்மைக்கு விரோதமாக நடப்பேனாகில், பிறந்தது முதல் இறக்கிற வரை என்னென்ன புண்ணிய காரியங்களைச் செய்திருக்கிறேனோ, அவையனைத்தையும் எனது இவ்வுலக வாழ்க்கையிலும், பரலோக வாழ்க்கையிலும் இழந்து விடுவேனாகவும் என்பதே சாராம்சம். இதனை அவர்கள் சிரத்தையோடு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறப்படுகிறது.

எவர் தன் கடமைகளை உணர்ந்து ஒழுங்காகச்செய்து வந்தாரோ. அவர், அந்த அம்பலகாரர் தெய்வாம்சங்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்ட ஒருவராகத் தெய்வம் போன்று போற்றப்பட்டாரென்றால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? தெய்வம் போன்ற அரசரை தெய்வமாகவே சில நூல்கள் வர்ணித்திருக்கின்றனவேயென்றால் அதனை உபசார வழக்காகவே கொள்ள வேண்டும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். - குறள்-388

இங்கு தவறு நடக்காது, தலைவர் நடக்கவிடமாட்டார், மீறி நடந்துவிட்டால் நீதி செய்வார் என மக்கள் எண்ணும்படி நடந்து கொள்ளவேண்டியது தலைவரின் தலையாய கடமை. அவரை இறைவனாகவே மக்கள் வைத்து பார்ப்பார்கள்.

ஆனால் இப்படி வர்ணித்திருப்பதிலும் அர்த்தம் இல்லாமல் இல்லை. உட்கருத்துக்கள் பல உண்டு. கடவுள் தன்மை என்றானவர் என்று சொல்லிவிட்டால் இவர்களுடைய செயல்பாடுகளில் அவநம்பிக்கை ஏற்படாது.அவ நம்பிக்கை உள்ள இடத்தில் அதிருப்தி தோன்றுமல்லவா? அதிருப்தி தோன்றினால் அமைதிக்கு இடமேது? நாட்டில் அமைதி நிலவியிருக்க வேண்டுமென்ற அடிப்படையைக் கருதித்தான், ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு தெய்வத்தின் தொழிலையும், ஒவ்வொரு விதமாக சொல்லி அந்த தொழிலையும் நாட்டைக்காப்பவன் கடமையிலேற்றிருக்கின்றது. இதை கற்பனை என்று நினைக்கலாம். அந்தக்கற்பனையின் நோக்கமே நாட்டின் தலைவனை (பெரிய அம்பலகாரர், அம்பலக்காரர்கள்) கடவுளோடு தொடர்பு படுத்தி வைத்தனர் இம்மக்கள்.

கடவுள் நம்பிக்கை நிறைந்த வெள்ளலூர் நாட்டில், கடவுளுக்கு விரோதமாகவோ எண்ணுவதோ பேசுவதோ, செய்வதோ பாவமென்று கருதப்பட்டு வந்திருக்கிறது. கடவுளோடு இவர்களை இணைத்துவிட்டால் நாட்டில் இவர்களுக்கு விரோதமாக எண்ணவோ, பேசவோ, செய்யவோ, மக்கள் துணிய மாட்டார்கள் துணிந்தால் பாவமாகி விடுமல்லவா? இதைக்காட்டிலும் சிறந்த முறை வேறு என்ன இருக்கிறது. இதையறிந்துதான் அந்நாளைய அம்பலகாரர்கள் தெய்வத்துக்கும், மக்களுக்கும் பயந்து நடந்தார்கள். அதை இன்றைய பொறுப்பிலுள்ளவர்கள் உணர்ந்து செயல்பட முயற்சிக்க வேண்டும். முன்னோர்கள் நடந்து சென்ற பாதையை விட்டு விலகினால், அவ்வப்பொழுது பிறப்பிக்கும் உத்தரவுகள் வழக்குகளின் தீர்ப்புக்கள் ஆகியவைகளைப்பற்றி மக்கள் விமர்சனம் செய்யத் தொடங்குவார்கள். தொடங்கினால் அதற்கு முடிவே இராது. ஒவ்வொன்றின் மீதும் வாதப்பிரதிவாதங்கள் கட்சி கட்சியாக எழுந்து கொண்டிருக்கும். அதனால் பொறுப்பில் உள்ளவர்களால் நாட்டுக்கூட்டங்களில் எடுக்கும் முடிவுகள், உத்தரவுகள் தீர்ப்புகளுக்கோ மதிப்பில்லாமல் போய் விடும். நிர்வாக யந்திரம் ஒழுங்காக ஓடாது. எந்த விவகாரமும் நிலையற்ற தன்மையாகிவிடும். இதைக்கவனங் கொள்ள வேண்டும். குற்றங் குறைகள் எங்கும் உண்டு. எதிலும் உண்டு. அவைகளை மட்டும் எப்போதும் விவாதித்துக்கொண்டிருந்தால், நல்லவைகளை காண்கின்ற பேசுகின்ற தன்மையே மழுங்கிப்போய், நாளடைவில் நமது நல்ல மரபுகள், விதிகள், எண்ணங்கள், செயல்கள் மறைந்து போகும். இதனால் மக்களும் விரக்தியடைந்து அவரவர் இஷ்டப்படி நமது நாட்டு மரபுகளை, பழக்க வழக்கங்களை மீற ஆரம்பித்து விடுவார்கள்.

இதனால் மக்கள் குற்றங் குறைகள் நிறைந்தவர்களாகி விடுவார்கள். இந்த நிலைமைக்கு இடந்தராதிருக்க வேண்டுமென்பதற்காக குற்றங்குறைகளற்ற கடவுள் நிலையில் அம்பலகாரர்களை வைத்துப் பேசினார்களென்று சொல்லலாம். இங்கு தான் நமது முன்னோர்களின் அனுபவம் அறிவு நன்கு வெளிப்படுகிறது. அம்பலகாரர்கள் மக்களுக்கு மேம்பட்டவர்கள்தான், ஆனால் தர்மத்திற்கு கீழ்ப்பட்டவர்கள், தர்மத்தை அனுசரித்து நடக்கிற வரையில் தான் அவர்கள் தலைவர்கள். எந்த நிமிடத்திலிருந்து தழுவி விடுகிறார்களோ, அப்போதே தன் நிலை தாழ்ந்து விடுகிறார்கள். அவர்களை மக்கள் மதிப்பதில்லை. தர்மத்தினின்று தவறிய தலைவர்களை மக்கள் ஒதுக்கி விடுவார்கள். அது தான் மனுதர்ம முறை.

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லன்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. - குறள்-635

நீதிநெறிகளைத்தெரிந்து, பொருள் நிரம்பிய சொல்லை உடையவனாய், எப்போதும் செயலாற்றும் திறனை நன்கு அறிந்தவனாய் இருப்பவனே, நல்ல அமைச்சன்.

வெள்ளலூர் நாட்டிற்கு தலைவராக இருப்பவர் பெரிய அம்பலகாரர் ஆவார். பெரிய அம்பலகாரரை நல் வழியில் நடத்திச் செல்பவர்கள் அம்பலகாரர்கள். இந்நாடும், இந்நாட்டு மக்களும் எல்லா வகையிலும் வளர்ச்சியடைவதற்கு இவர்களுடைய வசத்தில் தான் உள்ளது. இவர்கள் நாட்டுக் கூட்டத்தில் நல்ல ஆலோசனைகள் வழங்கி நாட்டை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லும் அணிகலன்களே. மற்றும் இளங்கச்சி அம்பலங்கள் வழக்காளிகள், இளைஞர்கள், சான்றோர்கள் ஆகியவர்களுடைய ஆலோசனையும் பெற்று நிர்வாகத்தை திறம்பட நடத்துவதன் பயனாகவே நாடு, பல வகையிலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது. இப்பெருமை மிக்க வெள்ளலூர் நாட்டின் மரபு காத்து, நெறி பிறழாமல், பழம்பெருமை காப்பார்கள் இம்மக்கள் எந்நாளுமே!

சபை நடவடிக்கை முறை

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கல்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. - குறள்-127

எவற்றைக் காக்காதவராயினும் தன் நாவைத் தவறாமல் காக்க வேண்டும். காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்பம் அடைவர்.

சபையில் எந்தவிரு பிரட்சினையும் தீர்மானரூபமாகக் கொண்டு வரப்பட்டது. இத்தீர்மானம் நல்லது என்றால் ஏற்பவர்கள் ஆதரித்து அமைதியாயிருப்பார்கள். பாதமாயிருக்கும் என நினைக்கிறவர்கள் சபையில் பேசினார்கள். இது ஒரு நியதியாக கடைப்பிடிக்கப்பட்டு வந்ததென்று சொல்லலாம். கருத்து வேற்றுமைகளுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்பட்டு வந்ததென்று இதனால் நன்கு புலனாகும். ஆனால் நமக்கு பிடிக்காதவர்கள் கொண்டு வந்தால் எதிர்ப்பதே வழக்கமாயிருந்ததில்லை. மற்றும் சபையில் யாரும் கண்டபடி பேசுவதற்கு இடங்கொடுக்கப் படவில்லை. தீர்மானத்தையொட்டியே பேச வேண்டுமென்பது கட்டாய விதியாயிருந்தது.

சபைத்தலைவர் இதை வெகு கவனமாகக் கண்காணித்து வருவார். பின், தீர்மானம் எல்லோரும் அங்கீகரிக்கிற முறையில் இருக்குமானால் அதைப்பற்றி விமர்சனம் இராது. அப்படியின்றி அபிப்ராய வேற்றுமை இருக்குமானால் சபையின் பெரும்பான்மை விருப்பத்திற்கு விடப்படும். அதாவது தற்கால முறைப்படி ஓட்டுக்கு விடப்படுவது போல். பெரும்பான்மையினரின் அபிப்ராயப்படி சபையில் எல்லா காரியங்களும் நடைபெற்று வந்துள்ளன.

எந்த அடிப்படையின் மீது வெள்ளலூர் நாடு தோன்றியதோ அந்த சத்தியம், நீதி, நேர்மை சுழற்சி முறை கைவிடப்படாமல் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இது நமது முன்னோர்களிடம் காணப்பட்ட அரிய பண்பு. அவர்கள் நல்லதொன்றை வளர்த்து வருகையில் எந்த வேரிலிருந்து அது வளர ஆரம்பித்ததோ அந்த வேரிலிருந்து அந்த வேரை அறுத்துவிடவில்லை. அதனைப் போற்றிக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் நீந்திக் கடந்திருக்கின்ற பல்வேறு துறைகளிலும், இந்த நியதியைக் கடைபிடித்து வந்திருக்கிறார்கள். இதை இன்றைய பொறுப்பிலுள்ளவர்கள் நினைவு கூர்ந்து வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச்செல்லும் வகையில் செல்வது காலச்சிறந்த வழியாகும் என நினைத்து எடுத்துச்செல்வார்கள் என்று நம்பிக்கை கொள்வோம்!

கட்டடத்தை எழுப்பியவன் ஒருவன் ஆக இருந்தாலும், அவன் மட்டுமே சொந்தக்காரனாக முடியாது. அதற்குத் தேவையான நிலம், தளவாடச் சாமான்கள், உழைப்பு பிறருடையதாயிருக்கும் பொழுது அவன் எப்படிச் சொந்தம் கொண்டாட முடியும். கட்டடம் இன்னும் மென்மேலும் பொலிவு பெற வேண்டிய தளவாடச்சாமான்கள் நமது மக்களிடம் அவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ பொதிந்து கிடக்கிறது. அதை வெளிக்கொணர இன்றைய இளைஞர்கள் முயற்சி செய்து சமுதாய வளர்சிக்கு வித்திட வேண்டுமென்பதே அவா!

சூத்திரதாரிகள் திரைக்கு முன் எப்போதும் ஆடுவதில்லை. ஆட்சிப்பொறுப்புக்கும் ஆசைப்படுவதில்லை. தங்கள் மதி நுட்பத்தால் மற்றவர்களை ஆட்டிப்படைக்கிறோம் என்ற பெருமிதமே அவர்களுக்கு போதுமானது. பொம்மலாட்டம் போல் பின்னிருந்து இயக்குவதில் அவர்களுக்கு தனி மகிழ்ச்சி. அக்கினிக்குத் தெரியுமா? பெரியவன், சிறியவன், வலியவன், மெலிந்தவனென்று? அதன் கோரப்பசிக்கு முன் அனைவரும் சமம்தான். சரித்திரத்தின் பிரவாகத்துக்கு எதிராகப் போராடித் தோற்றவன் அக்கினியிடம் தோற்றுப்போவான்.

கடவுள்கள் எல்லோரும் சாந்தமாகவே இருக்க வேண்டும். என்று ஆன்மீகத்தில் சட்டமில்லை. இரத்தப்பலி கேட்கும் கடவுள் கோரமாய்த்தான் இருக்கும் சில இடங்களில். ஏன், சாந்தமாய் இருக்கும் கடவுள்களின் துவாரபாலகர்கள் கூட வெளி நீட்டிய பல்லுடனும், வெளித்தள்ளிய நாக்குடனும், கோரமுகம் கொண்டுதானிருப்பார்கள். அதுபோல அய்யனாரும் ஊர் எல்லையில் பெரிய வாளுடன் இருப்பார். தீய சக்திகள் காலடி வைக்காமல் பார்த்துகொள்வார். அறிவு சார்ந்த அதிகாரம் தேவை. ஆணவம் நிறைந்த அதிகாரம் தேவையில்லை. சிறிய செடிகள் தாய்மரத்தின் மடியில் வளர்வதில்லை.

அது பாசமென்று நினைத்துப் பரவி வைக்கும். நிழலே, அது ஈன்ற வழித் தோன்றல்களைக் கொன்றுவிடும். ஒரு விதத்தில் பாசமும், ஆலகால விஷத்தைப்போலத்தான். அதனால் தான் மரங்களின் விதைகளை விலங்குகளும், பறவைகளும் உண்டு வெகு தூரத்தில் விதைத்து விடுகின்றன. இனப்பெருக்கத்துக்கு உதவி செய்யவே அந்தத்தித்திக்கும் பழம் அந்தப் பிராணிகளுக்குப் பரிசு போலும். இயற்கையைப் பார்க்கும்போது இறைவனைக் காண முடியும். குறைந்த அறிவைப் பெற்றிருந்த செடிகொடிகள் தெரிந்து வைத்திருக்கும். இந்த ரகசியத்தை நன்கு புரிந்து கொண்டு செயல்பட்ட பெற்றோருக்கு வெற்றி உண்டு.

கிளர்ச்சியில் தவறான பக்கத்தில் இருப்பவரின் பதவியும், வேலையும் முடிவுக்கு வருவது சரித்திரத்தின் நியதி. மனிதனைக் கெட்டவன் என்றோ கோழை என்றோ சொன்னால் கூட பொறுத்துக் கொள்வான். ஆனால் மடையன் என்றால் எவருக்கும் கோபம் வரும். தனது மதிநுட்பத்தின் மீது ஒவ்வொருவருக்கும் அவ்வளவு நம்பிக்கை. அஸ்திவாரமும் ஆணிவேரும் என்றைக்கும் தெரியாது. ஒரு நிலத்திலிருக்கும் மரக்கன்றை இன்னொரு நிலத்தில் ஊன்றி வளர்த்தால், இரு நிலத்தின் சுவையும் ஒரு சேர கிடைக்கும். வாழுகிற காலத்தில் ஒரு மனுசன் எல்லாத்தையும் தெரிஞ்சு வைக்கணும். அப்பதான் அவன் வாழுகிறதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். விதி என்பதற்கு உருவமில்லை என்பார்கள் அறிஞர்கள். அப்படி உருவம் இருந்தால் அது சக்கரம் போலச் சுழல்வதாகத்தான் நிச்சயம் இருக்கும். அதன் சரித்திரத்தில் தனக்கு இடமுண்டு என சிலர் சந்தேகமற உணர்ந்துள்ளனர்.

வீரன் மனத்தைக் கலங்க விடக்கூடாது என்ற எழுதாத சட்டம் உள்ளதோ? ஆனால் வீரனும் மனிதன் தானே? மனதைக் கல்லாகச் செய்துகொண்டு விட முடியவில்லையே? அணுவளவாவது மனம் மலையைப் போல் அசையாமல் நிற்க முடியுமா? விதியின் சூழ்ச்சிகள் என்றுமே வீண்போவதில்லை, சத்தியமான நிரந்தரமான வெற்றிவேந்தன் விதிதான். அவனுடன் போராடுவது எப்போதும் வீண்தான். இந்த உலகில் பிறந்தவர்க்கு வாழ்க்கையே புதிர். விதியின் இரகசியங்களை மானிடர் அறிவது கடினம். அதை அறிந்தாலும் புரிந்து கொள்வதென்பது மிகவும் கடினம். வரப்பிரசாதம் போல் வந்தது பெரும் தொல்லையாகிப்போகும்.

அக்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த பெரிய சமயங்களுக்கு பக்த கோடிகள் தங்கள் ஈடுபாட்டை அர்ப்பணம் செய்திருந்தார்கள். சிவபெருமானையும் பார்வதிதேவியையும் கும்பிடும் மக்கள் இருந்தனர். திருமாலும் திருமகளும் பிரதான தெய்வங்கள் என்று சொல்லும் மக்களும் இருந்தனர். புத்தர் பெருமானையும் சமண சமயத்தை ஸ்தாபித்தவர்மான மகா வீரரையும் கூட மக்கள் வழிபட்டனர். ஆனால் எல்லோருடையச் சமய சார்புக்கும் அப்பாற்பட்டு கிராம தேவதைகளின் வழிபாடும் முக்கியத்துவம் வாய்ந்ததாகத்தான் இருந்தது.

மற்ற எல்லாக் கோயில் விழாக்களுக்கும் இந்தக்கிராம தேவதைகளின் ஒத்துழைப்பை நாடி, பலி கொடுப்பதும். பொங்கல் இடுவதும் பரவலாக நடந்து வந்தது. அது போலத்தான் திருவிழா நடைபெறும் பொழுது சிறப்பாக நடந்தேறவும், நடந்தேறியபின் வேண்டுதலை நிறைவேற்றவும் முற்பட்டுள்ளனர். காலமும் கடவுளும் ஆறுதல் தர முடியும். எல்லாம் நாட்டின் நன்மைக்கே. உனக்குச் சரித்திரம் செய்த துரோகம், இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து யாருக்கும் நேர்ந்திராது.

எல்லோரும் சேர்ந்து தனது நேர்மைக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறார்கள் என ஆரம்பித்தாலும் விதியின் விரல் கோலமிட்டுக் கொண்டிருந்ததை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. தலை நிமிர்ந்தபடி இறைவனிடம் வேண்டி நம்பிக்கையுடன் நாட்டின் நலன் கருதி புறப்பட்டார். இதனால் தனது குலமும் உயர்ந்து வரும் வருவது மட்டுமல்ல. நாடு பெரிய புகழ் நிலைக்கு வளரும். எங்கே இறைவனிடம்? யார் அவர்? அவர் தான் வெள்ளலூர் நாட்டு சிற்பி என போற்றப்படும் வீரணன் அம்பலகாரரே!

அம்பலகாரர்கள் நடந்து கொள்வது

வெள்ளலூர் நாட்டு அம்பலகாரர்கள் கலந்தாய்வுக்கூட்டம் பெரிய அம்பலகாரர் வீரணனம்பலகாரர் முன்னிலையில் ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவிலில் நடைபெறுகிறது.

அதில் எடுக்கப்பட்ட அம்சங்கள் :

ரொம்ப நெருங்காதே அளவுடன் பழகு. நாம் குளிர்காயும் நெருப்பிலிருந்து, அதிகம் நெருங்காமலும் அதிகம் விலகிச்செல்லாமலும், இருப்பது போல் இருக்கவேண்டும் உண்மைதானே, நெருங்கினால் நெருப்பு சுட்டுவிடும் அம்பலகாரர்களும் அப்படித்தான். அதிக நெருக்கம் அதிகத் தொந்தரவையே தரும். தள்ளிபோனாலோ நெருப்பில் குளிர் காயமுடியாது.

விலகிப்போனால் அம்பலகாரர்களை மக்களும், மக்களை அம்பலகாரர்களும் மறந்து விடுவர். நிஜ வாழ்க்கையில் பலரும் செய்யும் தவறு. தலைவனின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்க அவர் மேலே விழுந்து பழகுவதுதான். உடனே அவர்கள் அதை மலிவாக எடுத்துக்கொண்டு, சுரண்ட ஆரம்பித்து விடுவர். வேறு சிலரோதலைவனை எதிரிபோல் பாவித்து அவரைக் கண்டு கொள்வது இல்லை. ரொம்ப விலகிப் போய்விடுவார்கள். அவரும் அந்த மாதிரி ஆட்களைத் தவிர்த்து விடுவார். அதை பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார் ஓர் இடத்தில். வள்ளுவர் கூற்றுப்படி தலைவன் மக்களிடமும் மக்கள் தலைவனிடமும் சரியான அளவில், தூரத்தில் வைத்துப்பார்க்க வேண்டும். சொற்சுவையும், பொருட்சுவையும் மிக்க அந்தக்குறளைப் பார்ப்போமா!

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் - குறள் 70-வது

இதில் பாசைப்பற்றிச் சொல்லியிருக்கும் (தலைவனை) கருத்துக்கள் அவரை காக்காயப்பிடிப்பதற்காக அல்ல. ஒரு நல்ல குடி மகனாக இருந்து நல்ல பெயர் வாங்கி முன்னேறுவதற்காகத்தான். சிங்கத்துடன் நடைபயில்வது கடினம்தான். ஆனால் தேவையிருந்தால் (தலைவனும் மக்களும்) அதையும் பழகிக்கொள்ளத்தானே வேண்டும்.

அதன் பின் அம்பலகாரர்கள் தொடர்ந்து கூட்டங்களுக்கு வராமலிருந்தால் என்ன செய்வது? என்ற வினா எழுந்தது.

மக்களின் பிரதிநிதியாக அம்பலகாரர்கள் உள்ளனர். எந்தக்கரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதோ, நியமனம் செய்யப்படும் அம்பலகாரர்கள். அந்தக்கரை சம்பந்தப்பட்ட பிரட்சினைகளுக்கும் நாட்டில் ஏற்படுகின்ற பிரட்சனைக்கும் தீர்வு காண வேண்டுமென்பதே அவர்களின் தலையாய கடமை.

அப்படிப்பட்ட பொறுப்பிலுள்ளவர்கள் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொள்ளாமலோ, பகிஷ்கரித்தோலோ பெரிய தவறாகும் என்ற கோணங்களிலும் விவாதம் நடைபெற்றது. இறுதியில் எந்த அம்பலகாரரும், இளங்கச்சி அம்பலங்களும் தொடர்ந்து இவ்வாறு செய்து வந்தால் அவரவர் கரைகளுக்கும், நாட்டுக்கும் அவர்களது சேவை இல்லாமல் இழப்பு ஏற்படும். ஆகையால் எவர் வராமல் பகிஷ்கரிக்கிராறோ அவர் சம்பந்தப்பட்ட கரைக்குத் தெரியப்படுத்தி கரையினராலே, தகுந்த ஆலோசனைகள் வழங்கி அவர்களை பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். மேலும் ஏதாவது பிரட்சினை என்றால் அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து விதிகளுக்குட்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க கரைகாரர்களுக்கு நெருக்குதல் கொடுக்கவேண்டும்.

அப்படியும் முடிவுக்கு வரவில்லையென்றால் பல வாய்ப்புக்கள் தந்தும் தனது பொறுப்பை கடமையை உணராதவர் அப்பதவியிலிருக்க வேண்டியதில்லை எனவும் எனக் கொண்டு கரைகாரர்களால் அவருடைய அம்பலப்பதவியை திரும்பப்பெறவேண்டும். கரை மக்களுக்கு ஏற்படும் பிரதிநிதித்துவ இழப்பை இப்படித்தான் செய்ய முடியும் என்று முடிவெடுக்கப்பட்டது. அப்பொழுதுதான் தகுந்த தகுதி உள்ளவர்கள் அம்பலப் பட்டத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்றைய ஜனநாயக அரசியலில், மக்களின் பிரதிநிதி சரியாக செயல்படாவிட்டால், அவரை மக்கள் ஏன் திரும்ப அழைத்துக் கொள்ளக்கூடாது? என்ற கேள்வி விவாதக்கருத்தாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதை அன்றே உணர்ந்த நாட்டார்கள் சரியாகச் செயல்படாதவர்கள் நாட்டு விதிகளுக்கு பழக்க வழக்கங்களுக்கும் முரணாக தொடர்ந்து செயல்படுவார்கள் என நினைத்து பதவியிலிருந்து மக்களால் திரும்பி அழைக்க வேண்டுமென்று வெள்ளலூர் நாட்டு விதிகளில் திருத்தம் கொண்டு வந்ததை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும்.

மேலும் நாம் ஒரு புண்ணிய பூமியை உருவாக்க பயணிக்க விருக்கிறோம். அம்பலகாரர்களாகிய நாம் சத்தியம், நேர்மை, நீதி காத்து, அதன்பிரகாரம் நடந்து, இப்பூமியின் பெருமையை உலகம் அறிவதற்காக முயலவேண்டும். அதில் வெற்றி பெறவேண்டும். அதன்படி இம்மண்ணில் காலம் காலமாக பின்பற்றி நடந்தால், இம்மக்கள் நல்வழியில் சென்று உலகிற்கு முன்னுதாரணமாகச் செல்வர். நமது முன்னோர்களின் லட்சியமும் அதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும். என்றென்றும் தெய்வங்கள் நமது சந்ததியினரை காத்து நல்வழி நடத்துவார்கள் என்று நம்பிக்கையுடன் செயல்படுவோம்!

பெரிய அம்பலகாரரர் பட்டம் கட்டியவர்கள்

1. தெய்வத்திரு.**வீரணன் அம்பலகாரர்** அவர்கள்
அம்பலகாரன்பட்டி, சாயும்படைதாங்கி கரை


வெள்ளலூர் நாட்டின்
சிற்பி திரு.வீரணன்அம்பலகாரர்
திருவுருவச் சிலை

2. தெய்வத்திரு.**பெரியகருப்பணன் அம்பலகாரர்** அவர்கள்
கூலிபட்டி, மூண்டவாசி கரை

3. தெய்வத்திரு.**அழகு அம்பலகாரர்** அவர்கள்
ஆலம்பட்டி, பூலான் கரை

4. தெய்வத்திரு.**பெரியமுத்தணன் அம்பலகாரர்** அவர்கள்
புலிமலைப்பட்டி, நய்க்கான் கரை


தெய்வத்திரு. பெரியமுத்தணணம்பலகாரர்
நினைவிடம் : சூரத்தூர்பட்டி

5. தெய்வத்திரு.**வெள்ளையனன் அம்பலகாரர்** அவர்கள்
அழகிச்சிப்பட்டி, சலுப்புலி கரை

6. தெய்வத்திரு.**வெள்ளைபிச்சன் அம்பலகாரர்** அவர்கள்
வெள்ளலூர், சாயும்படைதாங்கி கரை

7. தெய்வத்திரு.**வெள்ளைச்சாமி அம்பலகாரர்** அவர்கள்
நயத்தான்பட்டி, வேங்கைப்புலி கரை

8. தெய்வத்திரு.**வீரணன் அம்பலகாரர்** அவர்கள்
கோட்டநத்தம்பட்டி, சமட்டி கரை

9. தெய்வத்திரு.**சிவ.சு.மு.சிவராமன் அம்பலகாரர்** அவர்கள்
வெள்ளலூர், செம்புலி கரை





தெய்வத்திரு சிவ.சு.மு.சிவராமன்அம்பலகாரர் MLA
வெள்ளலூர்




10. தெய்வத்திரு.**க.கந்தசாமி அம்பலகாரர்** அவர்கள்
கோட்டநத்தம்பட்டி, சமட்டி கரை


தெய்வத்திரு. க.கந்தசாமிஅம்பலகாரர்
கோட்டநத்தம்பட்டி

11. உயர்திரு.**மந்தையன் அம்பலகாரர்** அவர்கள்
கன்னிமார்ட்டி, வெக்காலி கரை


பெரி.மந்தையன்அம்பலகாரர்
கன்னிமார்பட்டி

இன்றைய அம்பலகாரர்கள் (2015)	 [illegible]	
[illegible] கரை	 [illegible]	 [illegible]
[illegible] கரை	 [illegible]	 [illegible]
[illegible] கரை	 [illegible]	 [illegible]
[illegible] கரை	 [illegible]	 [illegible]
[illegible] கரை	 [illegible]	 [illegible]

வெள்ளாளி கரை	 திரு.[illegible] [illegible]	 திரு.[illegible] [illegible]
சருப்புலி கரை	 திரு.[illegible] [illegible]	[illegible]
திருமான் கரை	 திரு.[illegible] [illegible]	 திரு.[illegible] [illegible]
செம்புலி கரை	 திரு.[illegible] [illegible]	 திரு.[illegible] [illegible]
நல்லடையன்-சோப்பன் கரை	 திரு.[illegible] [illegible]	 திரு.[illegible] [illegible]
பூச்சான்-பழுவேராடன் கரை	 திரு.[illegible] [illegible]	 திரு.வெ.கருப்பையா அம்பலகாரர் பொ.ஒக்கப்பட்டி

அனைவருக்கும் வாய்ப்பு

ஒவ்வொரு கரை உட்பிரிவுகளை ஆய்வு செய்யும் போது, சில கரைகளில் உள்ள உட்பிரிவுகளில், சுழற்சி முறைக்கு மாறாக தேர்வு செய்யப்பட்டு வந்துள்ளது. தெரிய வருகிறது. அந்தந்த கரையைப்பற்றி ஒரு சிலரிடம் வினவும்போது, வலுத்தவன் வாழ்ந்தான், இளைத்தவன் பதவி இழந்தான், என்ற பழமொழி தான் ஞாபகம் வருகிறது. ஒரிஜினல், டூப்ளிகேட், ஒட்டுக்கரையைச் சார்ந்தவர்கள் என்று அந்தக்கரையினரின் ஒரு சிலர் சொல்வது வருந்தத்தக்கது. அவர்களுக்கு சுழற்சிமுறையில் வாய்ப்புக்கள் கொடுத்தால் தெய்வக்குற்றம் வந்துவிடும் என்பது வலுவற்ற வாதம். யாரோ ஒருவர் தவறு செய்திருந்தாலும், பிற்கால சந்ததியினருக்கு வாய்ப்பு மறுக்கக்கூடாது. நாம் நாகரீகமானவர்கள், உயர் பண்பாடு கொண்டவர்கள். மறுக்கப்படும் வாய்ப்பு உரிமை அடிப்படை விதிகளின்படி தவறாக காணப்படுகிறது. இப்பிரச்சனைக்கு உடனடியாக கரைகாரர்களும், நாட்டார்களும் நல்லதொரு சுழற்சி முறையை இணைந்து செயல்படுத்தாவிடில் நாட்டின் அடிப்படையே ஆட்டங்காண ஆரம்பித்துவிடும். இப்பொழுதே நீண்ட காலங்களாக புரையோடியிருக்கும் இப்பிரட்சனைக்கு உடனடியாக முடிவு காண முயற்சிக்க வேண்டும். நமது கலாச்சாரம் பண்பாட்டு நீதி, நேர்மை, சத்தியத்தின் மேல் மற்றவர்கள் சந்தேகங்கொள்ள ஆரம்பிப்பர். நய்க்கான் கரைப்பிரிவினருக்கு இம்மாதிரி சூழ்நிலை வந்தபோது அம்பலம் இளங்கச்சி பட்டத்துக்கு அவர்களுக்குள் நல்ல முடிவு கண்டு செயல்படுத்தியுள்ளனர். அதே மாதிரி இப்பிரட்சனை உள்ள கரைகாரர்கள் எளிதில் தீர்வு காண முயற்சிக்கலாம். விட்டுக்கொடுத்தவன் கெட்டுப்போனதாக சரித்திரம் இல்லை. நாட்டை நிர்வாகம் பண்ணுபவர்கள் இப்பிரட்சனைக்கு முக்கியம் கொடுத்து, சுழற்சி முறையை, முறையாக கடைப்பிடிக்க கரைப்பிரிவினர்களுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

மந்திராலோசனை

வெள்ளலூர் நாட்டுக்கூட்டம் பெரிய அம்பலகாரர், வீரணன் அம்பலகாரர் தலைமையில் ஒரு வெள்ளிக்கிழமையன்று, ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோயிலில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாட்டுக்கூட்டம் முறையாக அழைப்பு விடுத்து அனைத்து அம்பலகாரர்கள் இளங்கச்சி அம்பலங்கள், பூஜாரிகள், கிடாவெட்டி, நாட்டுக்கணக்குப்பிள்ளை, நாட்டுப்பண்டாரம், வழக்காளிகள், மற்றும் பொதுமக்களும் கலந்து கொள்கிறார்கள்.

அன்றைய கூட்டத்தில் கட்டக்காளை அம்பலகாரர் அவர்கள் நாட்டு மக்களின் சுகாதார நிலையை காக்கும்பொருட்டு சில மருத்துவர்களை அழைத்து வந்து, அவர்களை குடிவைக்க அனுமதிப்பது தான் முன்னுரிமை. ஏனென்றால் பெரியம்பலகாரர் தனது தனிப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களை நாட்டுக்குள்ளே தங்க வைத்து மக்களுக்கு பணிபுரிய முன் அனுமதி அளித்துள்ளார். அந்த முன் அனுமதி நாட்டுக்கூட்டத்தில் பின் அனுமதி, (Post facto approval) மற்றும் அவர்களுக்கு அங்கீகாரம் பெறுவதற்கான கூட்டம்தான். இது இந்த மாதிரி அவசர சூழ்நிலையில் அதற்கேற்ப எப்பொழுதாவது பின் அனுமதி வாங்குவது நடைமுறை மரபு.

மற்ற சாதாரண பிரட்சினை நீண்டகாலத்திட்டங்கள் போன்றவைகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு கலந்தாலோசனை செய்து சபையின் முடிவின் படி செயல்படுத்தப்படும்.

பெரிய அம்பலகாரர் அவர்களுக்கு. மற்ற நிர்வாகிகளுக்கும் என்ன என்ன அதிகாரம்? எப்படி செயல்படுத்துவது? என்பது வெள்ளலூர் நாட்டு நிர்வாக மேலாண்மையை உயர்த்திக் காட்டுகிறது. மனம் போன போக்கில் நம் இஷ்டப்படி காரியம் நடத்தி விடுவது, பின் அதனால் ஏற்படும் விளைவால் சிக்கித் தவிக்ககூடாது. கூட்டத்தில் மருத்துவர்கள் தங்கி, மக்களுக்கு சேவை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. பின் மக்களின் பிரட்சினை, மனநிலை, சுகாதாரம், சாலை அமைப்பது, பராமரிப்பது, இதர வகுப்பினர் நலம் அவர்களுக்கு உரிய மரியாதை, காரணம் உதவி மற்றும் நாட்டுக்கோயில்கள் சீரமைப்புபற்றி விவாதிக்கப்பட்டது. சில முடிவுகளும் எடுக்கப்பட்டது.

பின் எல்லைப்பகுதிகளில் மற்ற பகுதிக்காரர்களால் எல்லை மீறுவது, நமது பகுதிகளுக்கு வந்து களவு செய்வது பற்றி பேச்சு எழுந்தது. நமக்கு அமைதி தான் தேவை நாட்டின் எல்லை விரிவடைவதை நாம் விரும்பவில்லை. நமது குறிக்கோளும் கொள்கையும் அது இல்லை. நமது மக்களின் பாதுகாப்புக்கு, நாம் உத்தரவாதம், ஏற்படுத்த வேண்டும். நதி எங்கே பாயும்? பள்ளத்தை நோக்கித்தான். அதுபோல் மக்கள் தங்களை பாதுகாப்பவர்களைத்தான் தலைவர்களாக ஏற்றுக்கொள்வார்கள். பாதுகாப்பு மிக முக்கியம். சபையோர் அனைவரும் ஒருமித்தமாக இது சம்பந்தமாக ஒற்றர்களை (நோட்டக்காரர்கள்) நியமிப்பது மேலும் நாட்டின் எல்லைப்பகுதிகளில் பிரட்சனை உள்ள இடங்களில், சிறு சிறு படைகளை நிறுத்துவது என முடிவு செய்து, தளபதி கட்டக்காளை அம்பலகாரரிடம் அந்தப் பணியை ஒப்படைத்தார்கள். கட்டக்காளை அம்பலகாரர் அவர்களை மல்லாக்கோட்டை எல்லைப் பகுதியான தர்மாசனப்பட்டி அருகே சில ஒற்றர்களை அழைத்து வந்து, வசதி செய்து கொடுத்து தங்க வைத்தார். அவர்கள் தான் தர்மாசனப்பட்டியில் வாழும் நோட்டக்காரர் வகையறாவைச் சார்ந்தவர்கள் மேலும் தமராக்கி கொட்டக்குடி எல்கையில் சிறு படையை நிறுத்தி வைத்தார். அங்கு நடந்த போரில் வெற்றி பெற்றவுடன் அந்த எல்லைப்பகுதியில் அய்யனார் கோயிலை கட்டினார். தனது போர்ப்படைக்கு உதவிய யாதவர்கள், மூப்பனார்கள், தாழ்த்தப்பட்டோர், மருத்துவர்கள் ஆகியோரிடம் அந்த கோயிலை ஒப்படைத்தார். இன்றும் கட்டக்காளை வகையறாவுக்கு அய்யனார் கோயிலில் காரண மரியாதை உண்டு.

பிறகு வழக்குகள் சம்பந்தபட்டவை விவாதிக்கப்பட்டது. அப்பொழுது பெரிய அம்பலகாரர் வீரணனம்பலகாரர் அவர்கள் பொதுவான நீதி சம்பந்தப்பட்டவைகளை எடுத்துரைத்தார். பிரட்சனையில் உள்ளவர்களுக்கு உடனே தீர்வு காணாமலிருந்தாலோ, பிரட்சினைகளுக்கு நல்ல முடிவு கண்டாலோ, ஏன் அப்போதே சொல்லவில்லை என்று குறை கூறுவார்கள். பிரட்சினை தீர்ந்தாலும், தீராவிட்டாலும் குற்றம் காண்பவர்கள் குறை சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். இது மனித இயல்பு. பிரட்சினைகளுக்குள்ளே போராட விடவேண்டும். பல வழிகளில் பிரட்சினை தீர அவர்கள் முயற்சி செய்யும் வரை, நாமாக தலையிடக்கூடாது. பிறகு நம்மிடம் வந்தால் தீர விசாரித்து அதன் முடிவு எப்படியிருக்கும் என்பதை உணர்ந்து, கோரிக்கைகளில் நியாயம், நேர்மை இருந்தால் நம்மால் எதை அறிவுறுத்தி, எதை நிலை நிறுத்த முடியுமோ, சத்தியம், நீதி, நேர்மை தவறாமல் மன உறுதியுடன் நீதியை காக்கவேண்டும். எவ்விதம் இருந்தாலும் யாராவது ஒருவர் குறை சொல்லிக் கொண்டேயிருப்பார்கள் இதுவும் மனித இயல்பு தான். அவர்களை நமது தெய்வங்கள் பார்த்துக்கொள்ளும்.

யாரிடமும் எந்த சூழ்நிலையலும் கோபம் கொள்ளக்கூடாது. கோபத்தின் எல்லை துன்பம்.

பொறுமையின் எல்லை இன்பம். கோபப்படுவர்களைவிட, பொறுமை காப்பவர்களின் வாழ்வில் வெற்றி கிட்டும் என்று நல்லுரையினை வழங்கினார்.

பிறகு நாட்டுக்கணக்குப்பிள்ளையை அழைத்து நிதி நிலைமையை கேட்டுத்தெரிந்து கொண்டார். அதை சபையறிய கூறச் சொன்னார். அப்பொழுது சபையில் இருந்தவர், ஒரு சீராய்வு வழக்கின் வாய்தா பற்றி சபைக்கு ஞாபகப்படுத்தினார். வழக்கின் இரு சாரர்களும் வந்துள்ளனரா? என வினவினார். ஒரு சாரர் வரவில்லை என அறிந்ததும், மற்றொரு தேதியைக் குறிப்பிட்டு வாய்தா சொல்லிவிட்டு சபையை நோக்கினார். அவரது நோக்கத்தை உணர்ந்து, அம்பலகாரர்கள் சிலர் கூட்டத்தைப்பெருக்கலாமே, என்று கூறி ஒரு சேர எழுந்து சபையையும், தெய்வங்களையும் வணங்கி அவரவர்கள் புறப்பட ஆயத்தமானார்கள்.

உடம்பில் ஒளிந்திருக்கும் ஆச்சரியங்கள்

நமது படையைப் பெருக்குவதற்கு வீரர்களைத் திரட்டும் நோக்கத்துடன் வெள்ளலூர் நாட்டின் தளபதியான கட்டக்காளை அம்பலகாரர் மற்ற பகுதியில் உள்ள பல ஊர்களுக்குச் சென்று தகுந்த வீரர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து படைபலத்தை குறையாமல் வைக்க அடிக்கடி வெளியூர் செல்வது வழக்கம். அதில் எல்லா வகை வகுப்பினரையும் அழைத்து வந்து, அவரவர் வேலைத் தன்மையையொட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து நாட்டில் பல பகுதிகளில் குடி அமர்த்துவது அவரது வழக்கமான பணியாக இருந்து வந்தது. இதன்மூலம் நாட்டில் மக்கள் தொகை குறையாமல் பார்த்துக்கொள்ளப்பட்டது. அப்படி வந்தவர்கள் கள்ளர்களாக இருப்பின் குறைவான மக்கள் தொகை கரைப்பிரிவில் அவர்களை இணைத்து, அவர்களுக்குரிய காரணம் மரியாதைகள், அம்பலத்தனம், பூஜாரித்தனம் வழங்கப்பட்டது. மற்ற வகுப்பினராயிருந்தால், அந்த அந்த வகுப்பினரோடு இணைத்து முறையான வாழ்க்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

அவ்வாறு சிவகங்கை அருகில் உள்ள சோழபுரம் ஊருக்கு அவர் சென்றபோது அங்கிருந்த தலைமை வைத்தியர் தமது சீடர்களுக்கு மனிதன் உடலின் இயக்கங்கள் உறுப்புக்களின் அமைப்புக்கள், சக்திகளைப்பற்றி பாடம் நடத்தி கொண்டிருந்தார். அந்த ஊர் மந்தையில் கட்டக்காளை அம்பலகாரர் அவர்கள் சற்று ஓய்வெடுக்க, உட்கார்ந்திருக்கும் வேளையில், தலைமை வைத்தியர் இடைக்காட்டூர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் உபதேசங்களை கேட்க ஆரம்பித்தார்.

அவர் ஏடுமூலம் பாடம் நடத்தியவை

1. உலகிலேயே ஏன் பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களிலேயே, மனித மூளைதான் மிகவும் புத்தி கூர்மை கொண்டது. மனிதர்களின் வாழ்க்கையில் இரண்டு வயதில் தான், மூளை செல்கள் அதிகபட்சமாக இருக்கின்றன. அதே நேரம் மனித மூளை முதிர்ச்சி அடைய செல்கள் தேவைப்படுகின்றன.

2. கருவரையில் வளரும் குழந்தையின் மூளையில், ஒவ்வொரு விநாடியும் நூற்றுக்கணக்கான புதிய மூளைச்செல்கள் வளர்கின்றன. பிறந்த சிலமணி நேரத்திலேயே தாயின் முகத்தைக் கண்டுணர்ந்து கொள்ளும் திறன் பிறக்கும் குழந்தைகளுக்கு உண்டு.

3. நமது மூளை எல்லா நேரமும் வேலை செய்து கொண்டே இருக்கிறது. ஒரு மனித மூளைக்குள் ஒரு நாளில் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் ஓடுகின்றன. உண்மையில் தூங்கும் போதுதான் மூளை அதிக மாக வேளை செய்கிறதாம். கனவும் அதன் ஒரு பகுதிதான்.

4. நமது மூளையில் 60 விழுக்காடுகள் (சதவீதம்) கொழுப்பு இருக்கிறது என்றாலும், அது கடுமையாக வேலை செய்கிறது. மூளை ஓரளவு ஒளி வெள்ளம் கொண்ட சக்தியை தயாரிக்க முடியும்.

5. மனித மூளை என்ற உறுப்புக்கு நேராக வலிமை அறியும் உணர்வு இல்லை. அதனால் ஒரு மனிதர் விழித்திருக்கும் போது அவரது மூளையில் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.

6. மனித உடலில் உள்ள உறுப்புகளிலேயே கடுமையா உழைக்கும் தசை இதயம் தான் ஒரு பெரிய பாரம் நிறைந்த வண்டியை (லாரி) 30 மைல் வரை ஓடத்தேவையான சக்தியை ஒரு நாளில் உருவாக்குகிறது. நமது வாழ் நாளில் அது உருவாக்கும் சக்தியைக் கொண்டு ஆயிரக்கணக்கான மைல்கள் சென்று வரலாம். சந்திரனுக்கும் சென்று வரலாம்.

7. நமக்கு உள்ள உணர்வுகளிலே பழமையானது முகர்ந்து பார்க்கும் உணர்வு, பார்த்தல் கேட்டல் தொடுதல் ஆகிய உணர்களுக்கு முன்னதாகவே, தங்களைச் சுற்றியுள்ள வாசம் வேதிப்பொட்களின் மணங்களுக்கு ஏற்பவே உயிரினங்கள் செயல்படுகின்றன. மூளையால் 50.000 மாறுபட்ட மணங்களை நினைவு வைத்துக்கொள்ள முடியும்,

8. நமது ஒற்றைத் தும்மலின் வேகம் எவ்வளவு தெரியுமா? மணிக்கு 64 மைல் அதாவது ஒரு புலி ஓடும் வேகம்.

9. நமது நாக்கில் 10.000 சுவை உணரும் மொட்டுக்கள் உள்ளன. நாக்கில் சின்ன சின்ன மேடாக இருப்பவைதான் இந்த மொட்டுக்கள். சுவையை அறிய முகர்ந்து பார்க்கும் திறனும் அவசியம். உணவின் சுவை எப்படி இருந்தது? என்று யோசித்துப்பாருங்கள்.

10. தொடுதல், கேட்டலுக்கு ஏற்ப, எதிர்வினை ஆற்றும் வகையில் பார்வையற்றவர்களின் கண் மேலூரை மாறிவிடுகிறது. இதனால் தான் பார்வையற்றவர்கள் குச்சிகளைக் கொண்டும் தொட்டுப் பார்த்தும் பயணிக்க முடிகிறது.

11. நம் தலையில் உள்ள ஒவ்வொரு முடியும் ஒவ்வெரு மாதத்துக்கும் அரை அங்குலத்துக்கு ஏறத்தாழ வளரும். இப்படியே 6 ஆண்டுகள் வளர்ந்த பின், அதற்கு வயதாகி விடும். அதனால் அந்த முடி விழுந்துவிட்டு அதே இடத்தில் புதிய முடி முளைக்க ஆரம்பிக்கும்.

12. ஒரு நபரின் தமனி, சிரை ரத்த குழாய்கள் ஆகியவற்றை அடுத்தடுத்து ஓட்டவைத்தால் அது மட்டுமே 1.00.000 (ஒரு லட்சம்) மைல் நீளத்திற்கு வரும். இதைக்கொண்டு பூமியைச்சுற்றினால் இரண்டரைச்சுற்று சுற்றலாம் அவ்வளவு நீளம்.

13. நாம் பிறக்கும் போது 300 எலும்புகளுடன் பிறக்கிறோம். ஆனால், மனிதனாக வளர்ந்த பிறகு 206 எலும்புகளே இருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், சில எலும்புகளே இருக்கின்றன. சில எலும்புகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து விடுவதுதான்.

14. நம் நினைப்பதற்கு மாறாக தோல்தான் நம் உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பு தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டிருக்கும் உறுப்பும் கூட, நமது தோல் ஒரு நிமிடத்துக்கு 50.000 செல்களை இழக்கிறது. நமது வாழ்நாளில் வளரும் மொத்தத்தோலின் எடை 18 வீசை (கிலோ).

இயற்கையின் படைப்புக்கள் ஒவ்வொன்றிலும் பல ஆச்சரியங்கள் பொதிந்துள்ளன அதிலும் மனித உடலோ, அதிசயங்கள் நிரம்பிய ஒன்று கடுமையாக உழைக்கும். இதயம் முதல் நம்பவே முடியாத மூளைவரை நமது உடலைப்பற்றி வியக்க வைக்கும் தகவல்களை தலைமை வைத்தியர் தனது சீடர்களுக்கு மனித உடலைப்பற்றிய பாடம் நடத்தியதைக் கேட்டதிலிருந்து கட்டக்காளை அம்பலகாரர் அவர்கள் ஆச்சரியமான தகவல்களை நினைத்துக்கொண்டு கிளம்ப ஆயத்தமானார்.

அப்பொழுது தலைமை மருத்துவரான இடைக்காட்டூர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், கட்டக்காளை அம்பலகாரரைப்பற்றி அவரிடமே விசாரித்தார். தான் யார்? என்று கூறியதும் ஏற்கனவே பெயரறிந்தாகவும் கூறி மிக மரியாதையாக தங்களுக்கு ஏதாவது உதவி தேவையா? என்னால் முடிந்ததை செய்து கொடுக்கிறேன் என்றார்.

எனது நாட்டிற்கு மருத்துவசேவை செய்ய சிறந்த மருத்துவர்கள் கண்டிப்பாக தேவை என இப்பொழுது உணர்ந்துள்ளேன் என்றார். அதற்கு சில பெயர்களைச் சொல்லி ஊர் விலாசம் விபரங்களை எடுத்துச்சொல்லி அனுப்பி வைத்தார்.

அவர்களை தேடிக்கண்டுபிடித்து அழைத்து வந்து ஒக்கப்பட்டியிலும், பனையூர்ப்பட்டியிலும் தங்கவைத்து, வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து வெள்ளலூர் நாட்டு மக்களுக்கு மருத்துவ சேவை செய்யப் பணித்தார். அவர்கள் கட்டக்காளையின் போர்ப்படையில் போர் வீரர்களாகவும், மருத்துவர்களாகவும், பணிபுரிந்தார்கள் என்று அறியப்படுகிறது.

அதனால்தான் என்னவோ உறங்கான்பட்டியில் தனது இருப்பிடத்திற்கருகில் மருத்துவர்களுக்கு இடம் கொடுத்து அவர்கள் இன்றும் மருத்துவச்சேவை புரிந்து வருகிறார்கள் என்ற காரணத்தை அறிய முடிகிறது,

நண்டன் வம்சம்

வெள்ளலூர் கிழக்குப்பகுதியில் காராள வெள்ளாளன் என்ற சமூகம் வலுவாக வாழ்ந்து வந்துள்ளார்கள். நண்டன் வகையறாவைச்சார்ந்தவர்கள் வாழ்ந்த இடங்களில் காராள வெள்ளாளன் ஆதிக்கம் அதிகமாகவே, இருந்து வந்துள்ளது. நண்டன் காராள வெள்ளாளனை எதிர்க்க ஆரம்பித்தான். அப்பகுதியை ஆண்டு வந்த அழகேந்திர மன்னனிடம் காராள வெள்ளாளன் மிக நெருக்கமாக இருந்தான். இச்சூழ்நிலையில் நண்டனை ஒழித்து விட எண்ணி, தன் வயலில் கருது அருக்கும் போது தன் குழந்தையை கழுத்தறுத்து கருதுக்கட்டில் வைத்துக்கட்டி, இதை அவர்கள் இந்தப்பகுதியை ஆண்டு வந்த அழகேந்திர மன்னனிடம் நண்டனுக்கு எதிராக பொய்யான புகார் தெரிவிக்கிறார்கள்.

மன்னன் கடுங்கோபம் கொண்டு சரியாக விசாரிக்காமல், உண்மையை அறியாமல், நண்டன் என்ற வம்சம் இல்லாமல் அழிக்கும்படி தனது தளபதிக்கு உத்தரவிடுகிறான். படைகள் நண்டன் வம்சத்தை அழிக்க, ஒரு கர்ப்பஸ்திரி மட்டும் தப்பித்து திருகம்பட்டியில் வலையரிடம் அடைக்கலம் அடைகிறாள், அப்பெண்ணுக்கு ஒரு ஆண் மகன் பிறந்து, அந்த வலையரே வளர்த்து வருகிறார். இச்சூழ்நிலையில் நாட்டின் அம்பலகாரர்களால் கரைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதையறிந்து அந்த வலையர் நாட்டுத்தலைவரிடம் கூற தாயும் பிள்ளையையும் கூட்டி வருகிறார்கள்.

அடடா, நாட்டிற்கு பல போர்களில் சாதனை செய்தவன் நண்டன் என்றும் மற்றும் அவன் ஆதிக்கள்ளன் ஆவான். அவனுக்கு கரைப்பிரிவு, காரணம், மரியாதை அளிக்காவிட்டால் பெரிய சரித்திரப் பிழை வந்து விடும் என்று அஞ்சி, நண்டனுக்கு ஒரு கரையும் நாட்டு எருதுக்கட்டில் நாச்சியா காளைக்கு நண்டன் கட்டுவது என்றும். ஆதிதிராவிடர் கடம்பனுக்கு (நாட்டு எல்கையை ஓடி எடுத்ததால்) வடம் வெட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டது. காராள வெள்ளாளன் கழுத்தறுத்த பாவத்திற்கு ஆளாவன் என்று இப்பகுதியில் கூறுகிறார்கள். (மறைமாடும், கருத்தமாடும் நிறம் கொண்ட பசுக்கள் வளர்க்க மாட்டார்கள்) (நாட்டு எருது கட்டு மூன்று நாள் விழா, சோழர்களில் வழித்தோன்றலான வெள்ளலூர் நாட்டார் மறவாது, தமது முன்னோர்கள் வணங்கிய ஐயனார் தெய்வங்களை வணங்குவது என முடிவு எடுக்கப்பட்டது முதல் திருவிழாவான நாட்டு எருதுகட்டு விழா இதற்காகவே நடத்துகிறார்கள் என்று குறிப்பிடத்தக்கது.

சோழமண்டலத்தில் கடம்பூர் ஐயனார், செம்பூர் ஐயனார், பெரம்பூர் ஐயனார் என்று மூன்று ஐயனார் தெய்வங்கள் சோழ மக்களால் வணங்கப்பட்டு வந்துள்ளது. கல்கியின் ‘பொன்னியின் செல்வன்‘ என்ற நூலில் வீர நாராயணபுரம் என்ற வீராணம் ஏரி என்ற ஏரிக்கு அருகில் அக்கோவில்கள் இருந்ததாக சுட்டிகாட்டப்பட்டுள்ளது.)

வேங்கைப்புலி மட்டியான் - இரண்டு அம்பலம் உருவாக்காரணம்

சிவகங்கை மன்னருக்கு மெய்க்காப்பாளராக மட்டியான் என்ற கள்ளர் பிரிவினர் பணி புரிந்து வந்துள்ளனர். இவர்களின் சேவையை மெச்சி சிவகங்கை மன்னன் உங்களுக்கு என்ன வேண்டுமோ

கேளுங்கள், தருகிறேன் என்று கூற, மட்டியானும் மன்னனிடம் மிகப்பணிவாக அரசே, வெள்ளலூர் நாட்டில் எங்களுக்கு அம்பலப்பட்டம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். அதற்கென்ன நான் ஏற்பாடு செய்கிறேன் என்று உறுதி கூறுகின்றார்.

பாரிவேட்டை செல்வதற்கு முன், சிவகங்கை மன்னரின் கட்டுப்பாட்டில் உள்ள காரமலை, கல்லல், அரண்மனைச் சிறுவயல் பகுதியில் வேட்டையாட அனுமதிக்க வேண்டி அரண்மனையில் ஆடு கட்டி முன் அனுமதிக்கு விண்ணப்பிக்கிறார்கள். மன்னன், உத்தரவு தருகிறேன் ஆனால் எனது மெய்க்காப்பாளனான மட்டியான் வகையறாவுக்கு உங்களது நாட்டில் அம்பலப்பட்டம் கொடுக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கிறார். மன்னன் சொல்லை மீற முடியாமல் சரி என்று கூறி ஆடு கட்ட வந்தவர்கள் நாட்டுத்தலைவரிடம் நடந்ததைக் கூறுகிறார்கள்.

நாட்டுத் தலைவர், நாட்டுக்கூட்டம் கூட்டி விபரங்களைத் தெரிவிக்கிறார். இறுதியில் நாட்டார் மன்னரின் கோரிக்கையை ஏற்று மட்டியான் பிரிவை, வேங்கைப் புலிகரையில் இணைத்து அம்பலம் கொடுப்பது என தீர்மானிக்கபட்டும். இனிமேல் ஒவ்வொரு கரைக்கும் மேலும் ஒரு அம்பலகாரர் இரண்டு அம்பலப்பட்டம் என்று விதியில் மாற்றம் செய்து, நாட்டின் நிர்வாகம் நலம் கருதி முடிவெடுக்கப்படுகிறது.

சேமங்குதிரை

ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி கோவிலிலுள்ள சவுக்கைக்கு தெற்கு, பக்கமாக சேமங்குதிரை வடக்கு பார்த்த முகமாக நிற்கின்றது. பெரிய அம்பலகாரராக, வீரணன் அம்பலகாரர் பதவியிலிருந்த காலத்தில் கோவில் வழியாக வந்த வெள்ளைக்கார அதிகாரி ஒருவன் குதிரையில் வந்து கோவிலுக்குள் இறங்கினான். அப்போது அங்கிருந்த பெரிய அம்பலகாரர் அவர்கள் எங்களுடைய நாட்டுத்தெய்வமான, ஸ்ரீ வல்லடிகாரருடைய வாகனமாக குதிரை அமைந்திருப்பதால், எங்கள் நாட்டில் அந்நியர் யாரும் குதிரையில் பயணம் செய்யக்கூடாது என்று அந்த வெள்ளை அதிகாரியிடம் கூறியுள்ளார். அதற்கு வெள்ளைக்கார அதிகாரி ஆணவத்துடன் ஏளனமாக, அவரைப் பார்த்து அந்த அதிகாரி, நீங்கள் மண்குதிரையை வைத்துக்கொண்டு வீரமாகப்பேசுகிறீர்கள், உங்கள் குதிரை கனைக்குமா? புல் தின்னுமா? என்று வினாத் தொடுக்கவே அதற்கு வீரணன் அம்பலகாரர் அவர்கள் அவ்விரண்டு வேலைகளையும் எங்கள் தெய்வக் குதிரை செய்யும் என்று பதிலளித்துள்ளார்.

எங்கே பார்ப்போம் என்று அவன் கூறியதும் வீரணன் அம்பலகாரரர் அவர்கள் அருகில் இருந்தவரிடம் அந்த செம்புலி நிலத்தில் புல்லைப் பிடுங்கி வா என உத்தரவிடுகிறார். புல் வந்தவுடன் அந்த வெள்ளைக்கார அதிகாரி உங்கள் குதிரையைக் கனைக்கச் சொல்லுங்கள், புல் தின்னச் சொல்லுங்கள் என்று ஏளனமாக கூறிட முனைந்தான். உடனே பெரிய அம்பலகாரர் புல்லைக் கொண்டு வந்து மண் குதிரையின் முன் போட்டதாகவும், தெய்வக்குதிரை அப்பகுதி முழுவதும் அதிர கனைத்து கோபமாக புல்லைத்தின்றதாகவும் மரபு வழிக் கதைமூலம் அறிய வருகிறது. பின் அந்த வெள்ளைக்கார அதிகாரி பயந்துபோய் உடனே மிரட்சியுடன் பயணம் செய்யும்போது கோவிலுக்கும் கோட்டநத்தம் பட்டிக்கும் இடையில் உள்ள கண்மாய் கரையில் தடுக்கி விழுந்து, குதிரையும் அந்த வெள்ளைக்காரனும் இறந்ததாக மரபுவழி கதை தெரிவிக்கின்றது.

அந்த வெள்ளைக்கார அதிகாரிக்கு ஏற்பட்ட அகந்தையும், ஆணவமும் அழிந்ததை நினைவூட்டும் விதமாக அந்தக்கண்மாய்க்கு வெள்ளைக்கண்மாய் என்று நாட்டார்கள் அழைத்து வருகிறார்கள். அந்த இடத்தில் வருடந்தோறும் வெள்ளக்கண்மாய் மஞ்சுவிரட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

குட(ல்) கழுவி ஊரணி

தொடக்க காலத்தில் குட(ல்) கழுவி ஊருணி இருந்ததில்லை. வல்லடிகாரர் என்ற பெயருடைய சுயம்புலிங்கம் உருவாகி அதை தெய்வமாக வணங்கிய பின்னர்தான் இவ்வூருணியை நய்க்கான் கரைக்காரர்கள் தங்களது சொந்தச் செலவில் வெட்டிக் கட்டியதாக வரலாறு. நாய்க்கான் கரை வளர்ச்சிக்கு முதற்காரணமாயிருந்தவர் நய்க்கான் என்பவர் ஆவார். அவருக்கு வாரிசு இல்லை. மகப்பேறு அடையக்கூடிய பருவத்தைக் கடந்த நிலையிலிருந்த தன் மனைவியை நினைத்து வருந்தினார். நய்க்கான் கரையை வளர்க்க வாரிசு இல்லை என்று கணவன் மனைவி இருவருமே வருந்தினர். ஒரு நாள் இரவில் நய்க்கானும் அவருடைய மனைவியும் உறங்கும்போது ஸ்ரீ வல்லடிகார தெய்வம், நய்க்கான் கனவில் தோன்றிப்பிள்ளை வரம் தருவதாகக் கூறி மறைந்தது. இக்கனவு பின்வருமாறு:

காலையில் இருவரும் சென்று என் சன்னதி முன் வடக்குப் பக்கம் கையைப் பின்புறமாகக் கட்டி, காலால் மண்ணைக் கிளறி அம்மண்ணை இருவரும் மண்டியிட்டு வாயால் அள்ளிய பின்பு, அப்பள்ளத்தில் மழை பெய்து நீர் நிரம்பிய பின்னர் ஆடு, மாடுகள் அல்லது பறவைகளில் ஏதாவதொன்று தண்ணீர் குடித்தால் உங்களுக்கு குழந்தைப் பேறு பெறும் பாக்கியம் ஏற்படும் என்று ஸ்ரீ வல்லடிகாரர் கூறிச் சென்றுள்ளார்.

நய்க்கானும் அவருடைய மனைவியும் சேர்ந்து ஸ்ரீ வல்லடிகாரர் கனவில் கூறியபடியே, மண்ணைத் தோண்டிக் கொண்டிருக்கும் போது நண்பகல் ஆகிவிட்டது. நய்க்கான் அவருடைய மனைவியை சாப்பாடு போட அழைக்கும்போது, குழந்தைப் பேறு பெறமுடியாத வயதில் இருந்த அவருடைய மனைவி நான் வீட்டுக்குப் போகக்கூடாது (தூரமாகி விட்டேன்) என்று கூறினாள். உடனே அவ்விருவரும் வீடு திரும்பினர். அன்று மாலைப் பொழுதில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்து அவர்கள் தோண்டிய பள்ளத்தில் நீர் நிரம்பியது. பறவைகளில் ஒன்று நீர் அருந்தியது. அன்றிலிருந்து நய்க்கான் மனைவி கருத்தரித்ததாக வரலாறு.

குழந்தைப்பேறு அடையும் வயதைக் கடந்த பெண் மீண்டும் குழந்தைப்பேறு பெறும் வாய்ப்பு அமைந்த காரணத்தால் குட(ல்) கழுவி என்பது கருப்பையை சுத்தம் செய்து குழந்தை பெற தகுதியடைய வைத்த தீர்த்தங்கள் உள்ள குளத்திற்கு தீர்த்தக்கரை என்பதாலும், அவ்வூரணிக்கு குடல் கழுவி ஊருணி என்று அழைக்கப்பட்டது. தனக்கு வாரிசு உருவாக்க, வரம் தந்த ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமிக்கு வேண்டுதலாக, நய்க்கான் கரைகாரரால் இவ்வூரணி வெட்டிக் கட்டியதால் நய்க்கான் கரைக் காரர்களுக்கு உரிமையுடையதாக இருந்து வருகிறது. இந்த ஊருணியை அமைப்பதற்கும், ஊருணியை சீர் செய்து புனரமைத்து கொள்வதற்கும் நய்க்கான் கரைகாரர்களுக்கு நாட்டாரால் அனுமதி தரப்பட்டுள்ளது. இவ்வூருணியின் மேற்கில் நாற்கால் மண்டபம் கல்லால் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வூருணி நய்க்கான் கரைக்காரர்களால் சில வருடங்களுக்கு முன் புதுப்பிக்கப்பட்டதாக, அங்கேயுள்ள கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. கடந்த 2014-ல் இவ்வூருணி நய்க்கான் கரைகாரர்களால் மீண்டும் சீர் செய்து

பூஜைகள் செய்து, யாகம் நடத்தி, எப்பொழுதுமே பக்தர்களின் பயன்பாட்டிற்காக, இவ்வூருணிக்கு நீர் கிடைக்க ஆழ் கிணறு போர் போட்டு, பம்பு செட்டு அமைத்தது குறிப்பிடத்தக்கது.

அழகர் கோவில் தேர் வடம் பின்பக்கம் கட்டி வைக்க காரணம்

ஸ்ரீ கள்ளழகர் கோவிலுக்கு ஒரு புதிய தேர் செய்ய நிர்வாகஸ்தர்கள் முடிவு செய்தார்கள். தமிழகத்திலுள்ள தேர் செய்யும் நிபுணர்களை அழைத்து வந்து, தேர் செய்வதற்கு உகந்த மரப்பொருட்கள் மற்றும் அதற்குண்டான செலவுகள் எல்லா நாட்டு கள்ளர்களிடமும், பொது மக்களிடமும் நன் கொடையாகப் பெற்று செய்யப்பட்டது. முறையாகத் தேர் செய்தபின், தேரை தேர் வீதியில் ஓட்டுவதற்கு நாள் குறிக்கப்பட்டன.

மதுரையை சுற்றியுள்ள பாண்டி மண்டலத்திலுள்ள அனைத்து நாட்டு கள்ளர் தலைவர்களையும், பொதுமக்களையும் அவ்விழாவிற்கு அழைக்கிறார்கள். தேரை முதன் முதலாக கள்ளர் நாட்டுத்தலைவர் ஒருவர் தான் ஓட்டவேண்டும் என்று முடிவு செய்து, எந்த நாட்டுத் தலைவரை ஓட்டச் செய்வது என்பது ஒருமித்த முடிவு எடுக்க முடியவில்லை. எனவே ஒவ்வொரு தலைவருக்கும் தேரை ஓட்டுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தேரை ஓட்ட முடியாதவர்களை மொட்டையடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி தேரைச் சுற்ற வைப்பதும், தேர் ஓட்டியவர்களுக்கு தகுந்த மரியாதை கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு நாட்டுத்தலைவரும் அவருடைய வாய்ப்பின்போது தேரை ஓட்ட முயற்சி செய்து ஓட்ட முடியாமல் தோல்வியடைகிறார்கள். வெள்ளலூர் நாட்டு முறை வரும்போது சாயும்படைதாங்கி வீரணன் அம்பலகாரர் அவர்கள் ஸ்ரீ மாயாவுதரன், பதினெட்டாம்படி கருப்பனையும், வெள்ளலூர் நாட்டுத் தெய்வங்களையும் வணங்கி தேரை ஓட்ட முயற்சி செய்யும் போது தேர் நகரவில்லை. நிபந்தனைப் பிரகாரம் மொட்டையடிப்பதற்கு, தேரின் அருகில் உட்கார வைக்கும் போது, வீரணன் அம்பலகாரர் அவர்கள் தேர்ச் சக்கரத்தை குனிந்த நிலையில் உற்றுப்பார்க்கும் போது, சக்கரம் சுழலுவதை தடுக்கும் வகையில் ஒரு மரச்சக்கையுடன் கூடிய விசை ஒன்று இருப்பதைக் கவனிக்கிறார். அவர் உடனடியாக எழுந்து தேரைச்சுற்றி வணங்கி வருவது போல், சடாரென்று தேர்ச்சக்கரம் அருகே குனிந்து சென்று, அந்த சிறு விசையை இயக்கி மரச்சக்கையை எடுக்கிறார்.

பின் அனைவரிடம் மீண்டும் வேண்டிக்கொண்டு தெய்வங்களை வணங்கி தேரின் மேல் ஏறி தேரை ஓட்டுகிறார். தேர் மெதுவாக அசைந்து அசைந்து குலுங்கி ஓடுகிறது. மக்களனைவரும் மகிழ்ச்சியடைகிறார்கள். அந்த மரவிசை சக்கையை யார் எதற்கு வைத்தார்கள்? என்ற இடத்திற்கு நாம் செல்ல வேண்டாம், எது எப்படியோ? தேர் நன்றாக ஓடியது. பிறகு அங்கு நடந்த சூழ்ச்சிகளை உணர்ந்து, அதைக்காட்டாமல், தான் தேரை முதலாவதாக ஓட்ட முற்பட்டு தோல்வியடைந்தவுடன், மறுபடியும் வாய்ப்புக் கொடுப்பதற்கு முன் மொட்டையடிச்சு, கரும்புள்ளி செம்புள்ளி குத்த முயன்றீர்களே என்று கடுங்கோபத்துடன் கர்ஜித்தார். அனைவரும் என்ன செய்வது? என்ன பதில் சொல்வது என தெரியாது திகைத்து நின்றனர். அப்பொழுது வீரணனம்பலகாரரர் மிக கோபத்துடன் என்னுடைய வெள்ளலூர் நாட்டு மக்கள் இனித்தேரை இழுக்க வர மாட்டார்கள் என்றும் எங்களது நாட்டுத் தேர் வடத்தை, தேரின் பின்பக்கமாக சுற்றச் சொன்னார். ஆனால் எனது நாட்டுமக்கள், எனது சபதம்

அறியாமலே தங்களை மறந்து தேரை வணங்கி, மீதமுள்ள தேர்வடங்களை இழுக்கவோ அல்லது தொட்டுக் கொடுத்தால் தான் இந்தத் தேர் ஓடும் என்று அனைவரின் முன் ஸ்ரீ மாயாவுதரனை வணங்கி சபதம் செய்து விட்டு வந்ததாக செவிவழிச் செய்தி. பின் அழகர்கோவில் தேரை ஓட விடாமல் செய்ததை சதி அறிந்து, எதிர்வாகஸ்தாரர்கள் மிக வருத்தமடைந்து வெள்ளலூர் நாட்டுத் தலைவரை அழைத்து சமாதானம் செய்தார்கள். பின் வெள்ளலூர் நாட்டுக்கென்று, சில மரியாதைகள் காரணங்கள் செய்து அதைத் தங்கப்பட்டயமாக கொடுத்ததாக அறியப்படுகிறது. அந்தப்பட்டயம், அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள், வெள்ளலூர் நாட்டில் யாரிடம் இருக்கிறதோ அல்லது காலப்போக்கில் அழிந்து விட்டதோ என்பதை அறிய முடியவில்லை. இதே போல் நமது முன்னோர்கள் வைத்திருந்த, அவர்களுக்கு கிடைத்த ஆவணங்களை சரிவர பராமரிக்காமலோ, கவனிக்காமலோ, காலப்போக்கில் மறைந்ததை மிகவும் வருத்தப்பட வேண்டியதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

நாட்டு அபராதம்

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - குறள்-561

ஒருவனுடைய குற்றத்தைத் தகுந்த வழிகளாலே ஆராய்ந்து மீண்டும் அதைச் செய்யாதபடி, குற்றத்திற்கு தகுந்தபடி அளவோடு தண்டிப்பதே வேந்தன் கடமையாகும்,

முன்னர் கிராமக்கூட்டங்களிலோ, மாகாணக் கூட்டங்களிலோ, நாட்டுக் கூட்டங்களிலோ, வழக்குகளில் தண்டனைகள் கடுமையாக இருந்துவந்துள்ளன. இதனால் அபராதத்தை கட்ட முடியாதவர்களை, ஊரிலிருந்தோ. நாட்டிலிருந்து தள்ளியோ, விலக்கி வைப்பதாக இருந்து வந்துள்ளது.

மக்கள் வெளியேறுவதை தடுக்கும் பொருட்டு, கஷ்டங்களை உணர்ந்து நாட்டார்கள் அபராதத்தை குறைக்கும் முடிவு, செய்தார்கள். நீண்ட நாள் விவாதத்திற்கு பின் நல்ல முடிவு எடுத்து, அதிகபட்சமாக ரூ.96ம், குறைந்தபட்சமாக ரூ.48ம் என்று தீர்மானித்தார்கள். சில சமயங்களில் குற்றம் சாட்டப்பட்டவரின் வேண்டுகோளுக்கு கருணையின் அடிப்படையில் சபையினர் அபராதத்தை 24-12-6 என்றும் முடிவு செய்யலாம். இருந்தாலும் தீர்ப்பு சொல்லும் போது சபையை வணங்கி நாட்டு அபராதம் ரூ.48-க்கு குறையாமல் வைக்கவும் என சபையினர் உத்தரவிடலாம்.

நாட்டு அபராதம் ரூ.48-க்கு விளக்கம் :

27 நட்சத்திரம் + 12 ராசி + 9 நவக்கிரகங்கள் = 48

என்ற அறிவார்ந்த ஆன்மீக சிந்தனையுடன் இறைநம்பிக்கை அடிப்படையில் எடுக்கப்பட்டது. பின்னர் வழக்கின் தீர்ப்பு தன்மைக்கேற்ப அதன் பெருமைகள் புகழ் நீதி கூறிய சபைக்கு சேருவது சரி என என்று நாட்டார்கள் உணர்ந்து அதன் காரணத்தை மாற்றியமைத்ததாக செவி வழிச்செய்தி.

அதன்படி விளக்கம் :

22 அம்பலகாரர்கள் + 22 இளங்கச்சி அம்பலம் + பூசாரி + பெரிய மது எடுப்பவர் +

நாட்டுக்கணக்குப்பிள்ளை + நாட்டுப்பண்டாரம் = 48

வழக்கின் வாதத்தின் அடிப்படையில் ஏற்படும் முடிவு சபையின் பெரும்பாலோரின் முடிவு என்ற எண்ணத்தில் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுதுதான் வழக்கின் சாராம்சத்தை நன்கு ஆராய்ந்து நல்ல தீர்ப்பினை வழங்கவேண்டும் என்ற எண்ணத்தில் எடுக்கப்பட்டது. விசாரணை செய்யும் அம்பலகாரர்கள் மற்றும் இளங்கச்சிகள், வழக்காளிகள் மனசாட்சிக்கும், தெய்வத்துக்கும் பயந்து நல்லதீர்ப்பினை வழங்குவார்கள் என நம்பப்பட்டது. அபராதம் என்பது பெரிதாகவோ, சிறிதாகவோ இருந்தாலும், விதிக்கப்பட்டவர் காலங்காலமாக கூனிக்குறுகி, அவமானப்பட்டோ, மீண்டும் தவறு செய்யக்கூடாது என்ற எண்ணம் மேலோங்க வேண்டும் என்ற நீதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

பாடியப்பன்மார்கள்

அன்று சோழநாட்டிலிருந்து நமது குலக்கொழுந்தும், அவரது தாயார் மற்றும் அவர்தம் சார்ந்தவர்கள் தவிர தன்னுடன் அழைத்து வந்த பிற வகுப்பினரை மறவாது அவர்களை பாதுகாக்கும் பொருட்டு, பாடியப்பன் என்ற பெயர் உருவானதாக வரலாறு. பாடியப்பன் என்றவர் பாதுகாப்பவன் என்று பொருள். எல்லா வகுப்பினருக்கும் நிலபுலங்கள் கொடுத்து பாதுகாத்து வந்துள்ளனர். அந்தப்பிரிவினர்களும் தமது கள்ளர்களுடன் நல்லது, கெட்டது அனைத்திலும் கலந்து கொண்டு ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர். வெள்ளலூர் நாட்டு கள்ளர்கள் தங்களது பாடியப்ப வகுப்பினரை, பங்காளி போல் உறவுமுறை கொண்டாடுவதும், அந்தந்த பாடியப்ப வகுப்பினரும், தங்களது பாடியப்ப கள்ளர்களை பங்காளிகள் போல உறவுமுறை கொண்டாடி வருவதும் இன்றுவரை உள்ளது. திருமான்கரை பாடியப்பராகிய செட்டியார்கள் வழக்கே இதற்கு உதாரணம், இந்த வழக்கு வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே கூறப்படுகிறது.

வெள்ளலூர் நாட்டார்கள் தங்களது பாடியப்பன்மார்களை எவ்வளவு கவனமாக பாதுகாத்து வருகிறார்கள் என்பது புலனாகிறது. பிறநாட்டு நாட்டார்களை காட்டிலும் சற்று கூடுதலாக பிறவகுப்பினர்களுக்கு மிகவும் பாதுகாப்பாளர்களாகவும், நல்லுறவுடன் வாழ்ந்து வருவதாகவே தெரிய வருகிறது. வகுப்பு ஒற்றுமைக்கு வெள்ளலூர் நாட்டார்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஏழு கன்னிமார் பிள்ளைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழுகன்னிமார் பிள்ளைகள் அம்மனாக வணங்கப்படுகிறார்கள் ஏழு கன்னிமார் பிள்ளை தேர்ந்தெடுப்பது ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் திருவிழாவின் அங்கமாக இருப்பதற்கான காரணம் பின்வருமாறு; வெள்ளலூர் நாட்டில் கள்ளர் பிரிவைச் சார்ந்த, ஒவ்வொருப் பிரிவினருக்கும் சிறுபான்மை இனத்தைச்சேர்ந்தவர்கள் பாடியப்பனாக வாழ்ந்து வருகிறார்கள். பாடியப்பன் என்றால் பதுகாப்பவன் என்று பொருள் அந்தந்த இனங்களுக்கு கள்ளர்கள், பாடியப்பன் என்ற பாதுகாப் பவனாக இருந்து வருகிறார்கள் இந்தச் சிறுபான்மை இனங்களை பாதுகாப்பது அந்தந்த கள்ளர் பிரிவுக்கு கடமை, உரிமைகள் உண்டு. இவர்களுக்கு ஏதாவது பாதிப்போ குறையோ ஏற்பட்டால், கிராமத்து கூட்டத்திலோ, நாட்டுக்கூட்டத்திலோ, பாடியப்ப கள்ளர்கள்தான் வணங்கி வழக்குத் தொடுத்து உரிய

நியாயம் பெற்றுத்தர வேண்டும். இந்த முறை சிறுபான்மை பிரிவினரை காக்கும் எண்ணத்தில் உருவாக்கப்பட்டு காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. திருமான் கரைக்கு பாத்தியப்பட்ட பாடியப்ப செட்டியார் ஒருவரை தன் கரைக்கு மாற்றி விடமென்று நினைத்து, அப்பொழுது பெரிய அம்பலகாரராக இருந்த சாயும் படைதாங்கி வீரணன் அம்பலகாரர் அவர்கள் செயல்பட்டார் அதற்கு அந்த பாடியப்ப செட்டியாருக்கும் விருப்பமில்லை. பெரிய அம்பலகாரர் என்பதால் பயந்து மறுக்கவும் இயலவில்லை. மற்றவர்களும் கேட்கவில்லை.

இந்நிலையில் தனது பாடியப்ப உரிமையை காக்கவும், நிலை நாட்டும் பொருட்டு திருமான் கரைகாரர் வழக்குத்தொடுத்தார். ஒவ்வொரு கட்டமாக கடந்து இறுதியில் நாட்டுக்கூட்டத்துக்கு வழக்கு வந்தது. நீண்ட நாளாக நடந்து வருகிறது. பெரிய அம்பலகாரர் சம்பந்தப்பட்டிருப்பதால் நாடு சரியான தீர்வு காண்பதற்கு விவாதங்கள் விளக்கங்கள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திருமான் கரை காரர்நாட்டுத் தெய்வமான ஸ்ரீ ஏழைகாத்த அம்மனிடம் வேண்டுகிறார். புலம்புகிறார். இறுதியில் தீர்க்கமான முடிவு எடுத்து ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவில் முன், தன் வகையில் பிறந்த ஏழு பெண் குழந்தைகளை நீதி நியாயம் கிடைக்க வேண்டி அந்தப்பெண் குழந்தைகளை கருதடிப்பதுபோல் பலியடிக்கிறார். அம்மன் அவரைத் தடுத்து நிறுத்தி ஒவ்வொரு இரவும் திருமான் கரைகாரரை அழைத்துக்கொண்டு, பெரிய அம்பலகாரர் இல்லத்துக்கு அழைத்துச்சென்று, அவர் உறங்கும் தோரணையைக் காட்டுகிறது. அவரைச் சுற்றி ஜெகஜோதியான விளக்குகளும், செந்நாய்களும் காவல் காக்கிறது. தேவதைகள் அவருக்கு வெண்சாமரை வீசுவது போல் தெரிகிறது.

தன் ஆணவம், அகங்காரத்தால் தொடர்ந்து பல தவறுகள் செய்து வருகிறார். அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது. ஒவ்வொரு நாளும் விளக்குகளும், காவல்காக்கும் செந்நாய்களும், சாமரம் வீசும் தேவதைகளும் மறையும். கடைசியாக அவர் மரணத்தை அவருக்குத் தெரிவிப்பேன் என்று அம்மன் கூறி மறைகிறது. அப்பொழுது பெரிய அம்பலகாரர் மைத்துனரான கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரும் நய்க்கான் கரைப்பிரிவில் அம்பலகாரராக இருந்து வந்துள்ளார். வழக்கின் தீவிரத்தை உணர்ந்தும், பெரியம்பலகாரரான தனது மைத்துனர் செய்துள்ள தவறையும் சுட்டிக்காட்டியும் கூட்டத்திலுள்ள மற்ற அம்பலகாரர்கள் நீதிக்கு புறம்பாக பேசுவதும், செயல்படுவதும் கண்டு நியாயம் கிடைக்க வாதிடுகிறார். வழக்கு பல வாய்தாக்கள் காண்கிறது.

பெரிய அம்பலகாரான வீரணன் அம்பலகாரர் தனது மனைவியிடம், உன் தம்பி மட்டும்தான் நாட்டுக்கூட்டத்தில் என்னை எதிர்த்து பேசி என் எண்ணத்துக்கு தடை போடுகிறான். அதற்கு அவர் மனைவி அடுத்த வாய்தாவுக்கு முன் தனது தம்பியான கட்டக்காளை அம்பலகாரரை வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கச் சொல்கிறார். விருந்து நடைபெறும் வேளையில், தம்பி மச்சானை நாட்டுக் கூட்டத்தில் எதிர்க்காதே, அனுசரித்தும் போ என்று கூறி தனது தம்பியின் கையில் நாழிப்பால் ஊற்றி மச்சானுக்காக அனுசரனையாக பேசுவேன் எனக் கூறி சத்தியம் செய்யச் சொன்னாராம். அதற்கு அக்கா, நாழிப்பால் ஊற்றினாலும் கட்டக்காளை நடுச்சொல்வான், களப்பால் ஊற்றினாலும் கண்ட நியாயம் சொல்வான் எனக்கூறி எழுந்தாராம்.

அன்றைய வழக்கின்போது இந்நாடு, சரியான நீதி வழங்காவிடில் ஆறுபேர் மக்களாலும் நாலு பேர் மக்களாலும் ஆளப்பட்டுவரும் வெள்ளலூர் நாடு இரண்டாக உடைந்து போய் விடும் என்ற அர்த்தத்தில் ஆறு ஆறுதான்! நாலு நாலுதான் என்று கூட்டத்தில் கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர் கர்ஜித்தாராம். அவ்வழக்கின் தீர்ப்பு எதிரொலியாக திரு.வீரணன்பலகாரர் மரணம் சம்பவிக்கிறார்.

ஏற்கனவே ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் உன் கன்னத்தில் கட்டி புறப்படும் அன்றிருந்தில் 48வது நாள் மரணம் சம்பவிப்பாய் என பெரியம்பலகாரரிடமே கூறி உள்ளது. இதை நாட்டாரிடம் பெரிய அம்பலகாரர் தெரிவிக்கிறார். மரணத்தை முன்னமையே அறிந்த0 மாபெரும் மனிதர் என்று காலங் காலமாக அவரை பற்றி பேசப்பட்டு வருகிறது. பலியடிக்கப்பட்ட ஏழுகன்னிமார் குழந்தைகளை நினைவு கூர்ந்து, பெருமைப்படுத்தும் பொருட்டு தகுந்த பெண் குழந்தைகளை ஏழுகன்னிமார் பெண்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களை அம்மனைப்போல் பாவித்து விழா நடத்த வேண்டும் என்று உயிர் பிரியும் தருவாயில் வீரணனம்பலகாரர் நாட்டாரிடம் வேண்டுகிறார். அதன் படி, பின் நாளில் திருவிழாவின் அங்கமாக ஏழுகன்னிமார் பெண்களை நாட்டார்கள் இணைத்தார்கள் என்பதே உண்மை.

இது தவிர ஏழுகன்னிமார் சம்பந்தப்பட்டு வேறு ஒரு காரணமும் கூறப்பட்டு வருகிறது. அக்காள் தங்கை வாழ்ந்து வந்ததாகவும், அக்காளுக்கு குழந்தை இல்லை என்றும் தங்கைக்கு ஏழு பெண் குழந்தைகள். அக்குழந்தைகள் அக்காளின் மேல் மிகப்பிரியமாக இருந்து வந்துள்ளனர். இதனால் தங்கை பொறாமையடைந்து, அக்காள் வீட்டிற்கு வரும்போது குழந்தைகளை பஞ்சாரக்கூடையில் வைத்து மறைத்து விட்டார். இதையறிந்து அக்காள் மனமுடைந்து இறைவனிடம் வேண்டியதால் குழந்தைகள் அனைவரும் கல்லாகிவிட்டார்கள். அதன் நினைவாகத்தான் ஏழு கன்னிமார் விழா எடுக்கிறார்கள் என்று சிலரால் கூறப்படுகிறது. இது தவறு. வெள்ளலூர் நாடும் அதன் மக்களும் நீதி, நியாயம், நேர்மை, சத்தியம், இவைகளை கடைப்பிடிப்பதே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு வழக்கின் முடிவே மக்களின் மனத்தில் பதிந்து, அதை நிகழ்வாகவோ, விழாவாகவோ கடைப்பிடித்து கொண்டாடி வருகிறார்கள். இடைப்பட்ட காலத்தில் அக்காள் தங்கை கதை செருகப்பட்டதாகவே தெரிய வருகிறது. தவறாக வேறு பகுதியில் நடந்த இக்கதையை இங்கு உலவ விடுகிறார்கள்.

வெள்ளலூர் நாட்டுச் சிற்பியான வீரணன் அம்பலகாரருக்கு திருமான்கரை பாடியப்ப செட்டியார் வழக்கின் முடிவு, போற்றிப்புகழும் அவரது பெருமைக்கு சிறுமை ஏற்படுத்திவிடுமோ என்ற எண்ணத்தினாலும் பரப்பப்பட்டிருக்கலாம்.

பலியடிக்கப்பட்ட ஏழு பெண் குழந்தைகள் நினைவாக விழா எடுக்க வேண்டுமென்று அவர் இறக்கும் தருவாயின் போது நாட்டார்களிடம் வேண்டிக்கேட்டுக் கொண்டுள்ளார் வீரணனம்பலகாரர். இதன் மூலம் தனது தவறை உணர்ந்து வருந்தியிருக்கிறார். பொறுப்பில் உள்ளவர்கள் எந்த தவறும் செய்யக்கூடாது என்ற எண்ணம். அப்படிப்பட்ட ஒரு வழக்கின் தீர்ப்புக்குப்பின், அதனால் ஏற்பட்ட விளைவை உணர்ந்து மக்களாலும் நாட்டாராலும் கொண்டு வரப்பட்டதே ஏழு கன்னிமார் விழா. அதை ஸ்ரீ ஏழைகாத்த அம்மனின் திருவிழாவின் ஒரு அங்கமாகவே நடத்தப்பட்டு வருகிறது.

நீதிக்குப் புறம்பாக நடந்து கொள்ளக்கூடாது, என்று வருங்கால சந்ததியினருக்கு உணர்த்துவதே ஏழு கன்னிமார்கள் விழா என்பதே நினைவுகொள்ளத்தக்கது. இன்றளவும் திருமான் கரைகாரரால் நீதி கேட்டு ஏழு பெண் குழந்தைகளை பலியடிக்கப்பட்ட கல் ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவில் முன் பகுதியில்

உள்ள சவுக்கைக்கு முன் பதித்தபடியே செங்குத்தாக உள்ளது. சில காலங்களுக்குப் பின் கோவில் விரிவாக்கத்தின் போது, அந்தப்பலி அடிக்கப்பட்ட கல் வேறு இடத்தில் மாற்றி வைக்க திருமான் கரை காரர்களிடம், நாட்டார்கள கேட்டுக்கொள்ள அதற்கு, காலங்கலமாக இந்தக் கல் பேசப்படவேண்டுமென்றும், பாடியப்பன்மார்களுக்காக எவ்வளவு எத்தணை நாட்கள் போராடினோம்? எங்கள் குழந்தைகளை இழந்து எவ்வளவு துயறுற்றோம்? என நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என நாட்டார்களிடம் வேண்ட அக்கோரிக்கையில் உள்ள சரித்திர முக்கியத்துவத்தை உணர்ந்து நாட்டார்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வெகுகாலமாக அந்த சவுக்கையில் யாரும் உட்காரமாட்டார்கள், தெரியாமல் உட்கார்ந்த ஆதினிப்பட்டி அம்பலகாரர் ஒருவர், பின் இதன் விபரமரிந்து, மனம் பேதழித்து, உடல் நலம் குன்றி மரணம் சம்பவித்தார் என்று கூறப்படுகிறது. இதன் மகத்துவம் தெரியாமல்தான் இப்போது சிலர் உட்கார்ந்து ஓய்வெடுக்கிறார்கள். சவுக்கை ஒரு புனித இடம் என்பதை யாரும் மறக்க வேண்டாம். அதனால் தான் ஒவ்வொரு வளவிலும், ஒவ்வொரு ஊரிலும் சவுக்கை புனித இடமாக கருதப்பட்டது.

நாடு வாழ நாடும் உள்ளம்

தன் உயிர் போகும் தருவாயிலும் வீரணன் அம்பலகாரர் அவர்கள் அனைத்து அம்பல காரர்களையும் இளங்கச்சி அம்பலங்கள் முக்கிய பிரமுகர்களையும் தன் இல்லத்துக்கு வரவழைத்தார்.

தன் உயிர் போவதையும் பற்றி கவலை கொள்ளாதவர். வெள்ளலூர் திருநாடு வாழவேண்டும். நாம் உருவாக்கிய கொள்கைகளை கடைப்பிடிக்க முயற்சி செய்யுங்கள். காலத்திற்கேற்றாற் போல் ஒன்று கூடி மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

நமது நாட்டுத்தெய்வங்களான ஸ்ரீ ஏழைகாத்தாள், ஸ்ரீ வல்லடியார், ஸ்ரீ கருங்கல் மந்தைச்சுவாமி, மற்ற தெய்வங்களுக்கு முறையாக தொடர்ந்து சிறப்பாக விழாவெடுக்கும்படி வணங்கிக்கேட்டுக்கொண்டார். நாம் உருவாக்கிய வெள்ளலூர் நாட்டில் அனைத்துப் பிரிவினரையும் அரவணைத்துச் சென்று வாழ்ந்து வந்தோமானால், நமது சரித்திரம் காலம் காலமாக பேசப்படும். பண்பாடு, கலாச்சாரம் நம்மை நல்வழிப்பாதையில் அழைத்துச் செல்லும் என்று கூறி, அவரது விழிகள் நீரைச் சிந்தின. பின் அனைவரையும் வணங்கி தனது மைத்துனன் கட்டக்காளை பெரிய கருப்பனம்பலகாரரை அழைக்கிறார்.

அவர் காதருகில் நாட்டு நலம் கருதி, நீ சொன்னதை நான் கேட்கவில்லை. என்னை மன்னித்துவிடு. நீதி எப்பொழுதும் தலை நிமிர்ந்து நடக்க உன் பங்கு மகத்தானதாயிருக்கும் என்று கூறி மைத்துனர் மடியிலேயே கண்ணை மூடி இறைவனடி சேர்ந்தார். அவர் மனத்தில் ஓர் இன்ப உணர்வு. அவரது முகம் வாடாத மலர் போல் நிறைவில் திகழ்ந்தது.

ஓர் ஏழைக்கும் வசதி படைத்த அதிகாரம் உள்ளவனுக்கும் இடையே ஏதேனும் வழக்கு நடைபெற்றால் ஏழையின் நீதி காப்பாற்றப்படுவதை விடுத்து ஆணவத்துடன் அந்த ஏழைக்கு தவறான தீர்ப்பு தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் வழங்கப்படக்கூடாது. சிறுபான்மை செட்டியார் வழக்கில் நான் தெரிந்தே தவறான தீர்ப்பு அளித்தேன். ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவில் முன் தனது ஏழு குழந்தைகளை கருது அடிப்பது போல் அடித்து, நியாயம் கேட்ட அந்த திருமான்கரை,

சார்ந்த அமரர்களான 7 பெண் குழந்தைகளையும் சிறப்பித்து பெருமை சேர்க்க வேண்டும். அம்மன் திருவிழாவின் போது வெள்ளலூர் நாட்டிலுள்ள அனைத்து கரைகளில் உள்ள ருதுவாகாத 7 சிறு பெண்களை முறையாக தேர்ந்தெடுத்து, நாள் குறித்த நாளிலிருந்து அம்மன் விழா முடிவடையும் வரை அம்மனாக பாவித்து நாடு முழுவதும் வலம் வர வைத்து அவர்களை, மக்கள் மரியாதை செலுத்தி வணங்க வேண்டும் என்று நாட்டார்களை வேண்டிக் கேட்டுக்கொண்டார் என்று அறியப்படுகிறது.

இதனால் தான் நாட்டார்கள்முன், இறுதிக்காலத்தில் உயிர் பிரியும் தருவாயில் ஏழு கன்னிமார் பெண்களுக்கு விழாவெடுக்க கூறி தன் தவறையும் உணர்ந்து, நாட்டை எவ்வழி நடத்திச் செல்லவேண்டும் என்றும் கூறினார். தனது மைத்துனர் கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரிடமும் உன் பேச்சைக்கேட்டிருந்தால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது என்றுரைத்து மன்னித்துவிடு என்று இயம்புகிறார்.

ஏழு கன்னிமார் பெண்களின் விழா, ஏழைகாத்த அம்மன் திருவிழாவின் போது அங்கமாக தொடர்ந்து நடைபெற்று வெள்ளலூர் நாட்டின் மக்களின் ஆன்மீக நம்பிக்கையுடன் இணைந்து பண்பாட்டு வாழ்வியல் அடையாளமாக திகழ்ந்து வருவது பெருமைப்படும் விஷயமாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

மாவீரன் கட்டக்காளை அம்பலகாரர் (நய்க்கான் கரை)

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினயால் நீளும் குடி - குறள்-1022

முயற்சியும், நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையும் உடைய, இடைவிடாத கருமச்செயலால் ஒருவனது குடிப்பெருமை தானே உயர்வு அடையும்.

வெள்ளலூர் நாடு நய்க்கான் கரையில், நய்க்கான் தேவனின் நான்காவது மகனாக பிறந்தவர் தான் கட்டக்காளை அம்பலகாரர். மாபெரும் வீரர். சிறந்த நிர்வாகி. மதியூகி இரக்க குணம் கொண்டவர் எதிரிக்கு சிம்மசொப்பனமானவர். வெள்ளலூர் நாட்டில் இன்றைய உறங்கான்பட்டி கிராமத்தை கட்டக்காளைப்பட்டி பெயரில் அன்று உருவாக்கியர். உறங்கான்பட்டியின் ஊர்கட்டி என்ற பட்டமும் அதற்கான காரண மரியாதைகளும் இன்றும், என்றும் உண்டு. 'வந்தாரை வாழ வைத்தவர்' என்ற பெயர் காலம் உள்ளவரை நிலைக்கும்.

திருமோகூர் பகுதியிலிருந்த தன்னிடம் அடைக்கலமாக வந்தவர்களுக்கு இடம் கொடுத்து வாழவைத்து, வயல், வரப்பு, கண்மாய்கள் தந்து வெள்ளலூர் நாட்டுக்கரையில் தனது அதிகாரத்தால் இணைத்து சலுப்புலி கரையில் சேர்த்துள்ளார்.

இவர்கள் சலுப்புலி கரையில் மொந்தை உறங்கான் உட்பிரிவில் உள்ளனர். இவர்கள் உறங்கான்பட்டி கொட்டாணிப்பட்டி, அழகிச்சிப்பட்டியிலும் நாட்டின் பல பகுதிகளிலும் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள். தனது பெண் வாரிசுகளை திருமணம் செய்து கொடுத்து, அக்குடும்பங்களுக்கு நிலம் இடம் கொடுத்து உறங்கான்பட்டியிலேயே வாழ வைத்துள்ள பாசம் நிறைந்தவர். அவர்கள் 1. கருத்தவல்லான் (வேங்கைப்புலி) 2. அழகிச்சி (செம்புலி) 3. பெரிய ஆண்டி (சின்ன சமட்டி)

வெள்ளலூர் நாட்டின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் பல அரிய சேவைகளை செய்துள்ளார். வெள்ளலூர் நாட்டின் தலைமைப் படைத்தளபதியாக சிறப்பாக பணியாற்றி வந்துள்ளார். வெள்ளலூர் நாட்டுச்சிற்பி வீரணனம்பலகாரருடைய மைத்துனர் ஆவார். வெள்ளலூர் நாடு உள்ளவரை சரித்திரத்தில் இவரும் பேசப்படுவார்.

வீரத்தின் மகன் என்று விழி சொல்லுமே,
வேதத்தின் மகன் என்று நடை சொல்லுமே,
நிலையான மனிதன் என பேர் சொல்லுமே,
நீதானே அசல் என்று ஊர் சொல்லுமே,
எப்போதும் தோற்காது உன் சேனைதான்
இருந்தாலும் இறந்தாலும் நீ யானைதான்
தலைமுறைகள் கழிந்தாலும் உன் பேச்சுதான்
தந்தைபாட்டன் எனும் மந்திரமே எங்கள் மூச்சுதான்.

1. அழகர்கோவில் ஆண்டார்

கி.பி.15ம் நூற்றாண்டு முற்பகுதியில் அழகர்கோவில் ஆண்டாரை, ராமநாதபுரம் மறவர்கள் ஆடித்திருவிழா நடத்தவிடாமல், தூக்கி சென்றதால் கட்டக்காளை (தான்சான்) தலைமையில் கள்ள நாயகன், மன்னன் கெட்டி, குழுவன, குருக்கள், கொண்டி கோமாளி ஒன்று சேர்ந்து படையெடுத்து ஆண்டாரை மீட்டு வந்து விழா நடத்தியதால் ஏழு பேருக்கும் அழகர்கோவிலில் பல பட்டயமும், மரியாதைகளும் பெற்றதாக அறிய வருகிறது. பட்டயமும், மரியாதைகளும் வாங்கிக் கொண்டு ஒத்தையடிப்பாதையில் ஊருக்கு வெற்றியுடன் திரும்பி வரும்போது படைத்தலைவர் கட்டக்காளையை, மறைத்திருந்த மறவர்கள், ஒரு மருத்துவன் உதவியோடு குத்திக்கொன்றதால், கட்டக்காளை வகையறாவைச் சார்ந்தவர்கள் அழகர்கோவில் ஆடித்திருவிழா சென்று வரும்போது, அவர்களது பாட்டன் மறைந்த வழுக்குப்பாறைக்கு அருகில் சிங்காரதோப்பில் (அ.வல்லாளபட்டி - சண்முகநாதபுரம் தெற்கே) அவர் ஞாபகார்த்தமாக கிடாய் வெட்டி போர்படை எடுத்து. திரைகட்டி பட்டசுவாமி கும்பிடுவது இன்றும் தொடர்ந்து இவ்விழா நடைபெற்றுவருகிறது.

2. வந்தாரை வாழவைத்தவர்

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள. - குறள்-223

ஒருவன் தன்னிடம் அடைக்கலம் தேடி வந்தவனிடம், அவர் தன் துன்பத்தையும் நிலையும் சொல்லும் முன்பாகவே, அவனுக்கு உதவும் தன்மை உயர்ந்த குடிப்பிறப்பாளனிடம் உண்டு.

அதே காலத்தில் திருமொகூரில் வாழ்ந்து வந்த காசிக்கடம்பி என்ற காசியம்மாள் என்ற கைம்பெண் தனது குலதெய்வத்துக்கு மொந்தயன் என்ற ஒரே மகனை (பள்ளிச்சிறுவன்) பலி கொடுக்க மறுத்து கோவிலாளிக்கு தெரியாமல், ஒரு சிலரோடு கட்டக்காளை வாழ்ந்த கட்டக்காளைப்பட்டிக்கு

(இன்றைய உறங்கான்பட்டிக்கு) கூட்டி வந்தாள். கட்டக்காளை அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து சகோதரியாகப் பாவித்து அவர்களுக்கு இடம் கொடுத்தும் வெள்ளலூர் நாட்டிலுள்ள கள்ளர் பிரிவில் சலுப்புலி கரையில் சேர்த்தும் தனது அதிகாரத்தால் இணைத்தும், அதை உறுதிப்படுத்தும் வகையில் மொந்தயன் வழிவந்த உறங்கானுக்காக தனது கட்டக்காளைபட்டி என்ற ஊர் பெயரையே உறங்கான்பட்டி என்று மாற்றிக்கொடுத்து தெய்வத்திடம் கூறிய வாக்குப்படி இன்றும் மாமன் மச்சான் உறவுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறார்கள். இதை இன்றைய சந்ததியினர்கள் அவரின் பெருந்தன்மையை நினைவு கொள்ள வேண்டும்.

3. போர்வீரர்கள், பாடியப்பமார்கள்

தெற்கு பகுதியில் மறவர்களுக்கும் கட்டக்காளை படைக்கும் போர் நடந்து, அதில் கட்டக்காளை அவர்கள் வெற்றி பெற்று தான் அப்போது வணங்கிய அய்யனார் தெய்வத்தை தூக்கி வந்து வெள்ளலூர், கொட்டகுடி மற்றும் தமறாக்கி நாடுகளுக்கிடையே உள்ள எல்கையில் மத்தியிலே வைத்து, இன்னும் சில கரைகாரர்களையும் சேர்த்து, காரணம் மரியாதை உண்டுபண்ணி, அய்யனார் வழிபாடு செய்து வந்த போதிலும், பின் தனக்குரிய காரணங்களை பாடியப்ப கோனார், ஆதிதிராவிடர் வசம் ஒப்படைத்து வந்திருக்கிறார்கள். இன்றும் அங்கு நடக்கும் விழாக்காலங்களில் கட்டக்காளை வகையறா சிறுவர் போனாலும் அந்த மரியாதைகளை பெற்றுக் கொள்கிறார்கள், பனையூர்ப்பட்டியிலும், ஒக்கப்பட்டியிலும் கட்டக்காளைப் படைக்குப்போர் வீரர்களாகவும், மருத்துவர்களாகவும் அவர்கள் துணையாக பணிபுரிந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, இன்றும் அவர்கள் அவ்வூர்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

4. நாடோடி பாட்டு

அவர்கள் காலத்தில் ஒரு நாடோடிப்பாட்டு ஒன்று :

காளை கருத்தக்காளை கண்ணாடி மயிலைக்காளை
வீரன் சூரன் காளைகளை விரட்டிப்பிடிக்க வேணும்,
கொம்பிலே கொலுசு மாட்டி கோபாலன் கடுக்கன்மாட்டி
வட்டாரம் சிட்டம்பட்டியாம், அந்த மாடு இரண்டும்
கிடாரிப்பட்டியார் காளையை திறந்து விட
கட்டக்காளை அம்பலம் பிடிக்க வேண்டும்
வெள்ளலூர் நாட்டு இளவட்டங்கள்
கொம்பு ரெண்டும் பிடிச்சாச்சு குடலை சரித்து விடும்.

என்று பாடுவர்

5. பாடியப்ப பிள்ளை

தன் அண்ணனுக்கு பாடியப்பனாக இருந்தும், தான் அழைத்து வந்து தன் குடிகளோ ராமசாமிப்பிள்ளை கந்தசாமிப்பிள்ளை வகையறாவையும் குடியமர்த்தி அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை கட்டக்காளை வகையறாவோடு அண்ணன் தம்பியாகவும், பாதுகாப்பானாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

6.வரிகொடாப்போர்

கி.பி.18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அழகேந்திரன் என்ற குறுநில மன்னன் அழகநாச்சியாபுரத்திற்கு தெற்கே அரண்மனை கட்டி ஆட்சி செய்து வந்தான். வெள்ளலூர் நாட்டு மக்கள் அழகேந்திரமன்னனுக்கு வரி செலுத்திவந்தார்கள். அம்மன்னன் ஆற்காட்டு நவாப்பிற்கு கப்பம் கட்டி வந்தான். அந்தநிலையில் ஆங்கிலேயர்கள் போரில் நவாப்பை வென்று, அவனையும், அழகேந்திரனையும் கைது செய்தார்கள். வரி ஏடுகளைப் பார்க்கும்போது பல வருடங்களாக பஞ்சம்போய் வெள்ளலூர் நாடுவரி செலுத்தவில்லை. அப்போது கும்பினியார்கள் (ஆங்கிலேயர்கள்) சாயும்படைதாங்கி வீரணம்பலகாரரையும், கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரையும் கைது செய்து, இருவரையும் நாட்டு வரிகட்டாததற்கு சிறையிலடைத்தார்கள். கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர் அவர்கள், நாட்டுப் பாடலிலே இடம் பெற்ற எனது ஊத்தஞ்செய்யும், எனது பாடியப்பன்மார்களும், எனது காரண மரியாதையும் நீங்கலாக எனது சொத்தை எதை வேண்டுமானாலும் விற்று, வெள்ளலூர் நாட்டு வரிப்பாக்கிகளை கட்டி எங்கள் இருவரையும் மீட்கும்படி தனது மக்களுக்கு உத்தரவு இட்டான். ஆனால் வரிபாக்கியை கட்டவேண்டாம் என ரகசியமாக மக்களுக்கு தெரிவித்தார் மேலும் வரிகொடாப்போர் தொடர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. கட்டக்காளையின் மக்கள் அரசு அதிகாரிகளின் மூலமாக உத்தரவை பெற்றுக் கொண்டு வரி கட்டுகிறோம் என்று ஆங்கிலேய அதிகாரிகளுக்கு பொய்யான வாக்குறுதி அளித்தனர்.

இந்த வாக்குறுதியை நம்பி வெள்ளையர்கள் இருவரையும் சமாதானமாக சிறையிலிருந்து விடுவித்தனர், வெளியில் வந்ததும் தலைவர்களை மக்கள் தப்பிக்க வைத்து மறைத்து வைத்தனர். ஆனால் வரி செலுத்த மறுத்ததோடு வரி வசூல் செய்ய வந்த ஆங்கிலேய அரசு உதவியாளர் 10 பேரை கொலை செய்து பதிலடி கொடுத்தனர். ஆங்கிலேயர் படைகள் தலைவர்களை பிடிக்க உறங்கான்பட்டிக்கு தென்கிழக்கே சுமார் 2-மைல் தூரத்தில் காட்டில் முகாமிட்டிருந்தார்கள் அந்த இடத்திற்கு வெள்ளையன் காடு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அதன் அருகில்தான் கட்டக்காளை அம்பலகாரரின் வண்ணாத்தி வயல் நிலங்கள் உள்ளன. மக்களின் கடும் எதிர்ப்பும் போராட்டத்தினாலும் வெள்ளையர்களால் தலைவர்களை கைதுபண்ண முடியவில்லை. எனவே மறுபடியும் அடக்கமுடியா கோபம் கொண்டு, கேப்டன் ரூம்ளே கண்மூடித்தனமாக மக்களை காக்கை குருவியைப்போல் சுட்டு சுமார் மேலும் 2000 பேரை மேலூர், வெள்ளலூர் மக்களை கொலைசெய்தான். இவ்வாறு மொத்தம் 5000 பேரை மேலூர், வெள்ளலூர் நாட்டுக் கள்ளர்களைக் படுகொலை செய்து, ஒரு இனப்படுகொலையை அரங்கேற்றினான் என்று திரு.சுந்தரவைத்திதேவன் தனது பிறமலைக்கள்ளர் வாழ்வும் வாழ்வியலும் என்ற வரலாற்று நூலில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார். மேலும் ஜாலியன்வாலாபாக் படுகொலையைவிட படுமோசமான என தெரியப்படுத்துகிறார். இப்படிப்பட்ட இனப்படுகொலையை மறைப்பதற்காகத்தான் இம்மக்களின்

சுதந்திர போராட்டங்களை அதிகார வர்க்கத்தாலும், ஆதிக்கசக்தியினாலும் திட்டமிட்டே சுதந்திர போராட்ட வரலாற்றில் மறைக்கப்பட்டுள்ளது என தெள்ளத் தெளிவாகிறது.

7.கும்மிப்பாட்டு

ஊத்தஞ்செய்யிலே கருது அறுத்து கட்டுகட்டி
கட்டுக்கடங்காத கட்டக்காளை காரியம் பேசுகிறான் கேளுங்கடி,
புளி இலைபோல் பொட்டு வைத்து பொன்னுவுருளுமாம் குஞ்சமிட்டு
ஆளுக்குள்ளே வர்ர கட்டக்காளை அம்பலம் அழகத்தான் பாருங்களேன்.

-

அவரது வயல் பெருமையயை சொல்லும் பாட்டு
வண்ணாத்தி வயலிருக்க
வரிக்கடையான் சோறிருக்க
ஏழுபசு தயிர் இருக்க
ஏண்டா போறே ரெங்கோனுக்கும் கொழும்புக்கும்

-

பூப்பூக்கும் வண்ணாத்தி கரை
பொன்னழகு நடந்த பாதை
தாழை பூக்கும் வண்ணாத்திகரை
தர்மராஜா நடந்த பாதை

8.திருமான்கரை வழக்கு

திருமான்கரை பாடியப்பன் செட்டியார் வழக்கிலே தனது மைத்துனர் சாயும்படைதாங்கி வீரணன் அம்பலகாரர்க்கும், கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர்க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் தனது அக்காளும் மைத்துனர் வீரணன் அம்பலகாரரும் விருந்துக்கு அழைத்தார்கள். விருந்து அருந்தியபோது கடைசியில் இலையில் தம்பிக்கு கொஞ்சம் சாதம் வைத்து, தம்பி நாட்டுக்கூட்டத்தில் உன் மச்சான் பேச்சை எதிர்த்து பேசாதே என்று பாலை ஊற்றி பிரமானம் பண்ணி கேட்க அக்கா, நாழி பால் ஊற்றினாலும் கட்டக்காளை நடு சொல்வான், களப்பால் ஊற்றினாலும் கண்ட நியாயம்தான் சொல்வான் உன் தம்பி என்று எழுந்தாராம். இந்த வழக்கின் முடிவு வெள்ளலூர் நாட்டிற்கு திருப்புமுனையாக அமைந்து நாட்டின் பெருமையையும் நீதியினையும் உயர்த்தியது.

9.பட்டத்துக்குதிரை

சிவகங்கையை ஆண்ட மன்னன் முத்து வடுகநாதனுக்கும் கட்டக்காளை முத்துச்சாமிக்கும் ஏதோ ஒரு பிரச்சினையில் வாக்குவாதம் ஏற்பட்டதில் இன்று இரவு நடுநிசியில் உமது பட்டத்து

குதிரையைத்தான் கொண்டு செல்வேன் என்று சபதம் செய்து அதன்படி எப்படியோ காவலர்கள் உதவியுடன் குதிரையைப் பிடித்து வந்து, தனது வயலான வண்ணாத்தி கரையில் உள்ள ஆலமரத்தில் கட்டிவிட்டார், அதையறிந்து அரசனுடைய அழைப்பின்பேரில் குதிரையுடன் அரண்மனை சென்று அரசனே அவருடையத்திறமையைப் பாரட்டி விருந்து உபசாரம் செய்து செப்பு பட்டயம் மற்றும் சில மரியாதைகளும் கொடுத்துள்ளார்.

10.பாடியப்ப கணக்கர்

வெள்ளிக்குறிச்சியில் களைப்பற்றிருந்தவர்களை (சோர்ந்திருந்தவர்கள்) கொங்கேஸ்வரர் உதவியுடன் கூட்டி வந்து ஊர் சேரியில் கல்யாணம் முடித்து வைத்து, அவர்களை குடியமர்த்தி ஆடு, மாடு, நிலங்கள், புஞ்சை இன்னும் சில சீர்வரிசையும் கொடுத்து தனக்கு கணக்காளியாகவும், நாட்டுக்கு கணக்கராகவும் இருந்து வாழ்ந்து கொண்டிருந்த வம்சத்தார்கள் உறங்கான்பட்டியிலும், அழகிச்சிபட்டியிலும் வாழும்

தெய்வகண்ணியாபிள்ளை, முத்து வீரப்பிள்ளை வகையறாக்கள்.

11.உளவுத்துறை

ஓமந்தூர் பகுதியிலிருந்து வந்து திருப்புவனம் பக்கம் குடியமர்த்தி திகைத்து இருக்கும் காலத்தில். கட்டக்காளை தனக்கு பக்கபலமாக அதிவீர தைரியசாலியை தேடிக்கண்டுபிடித்து கூட்டி வந்து திருடர்கள் அதிகமுள்ள பெரியகோட்டை மலையை ஒட்டி வெள்ளலூர் நாடு, மல்லாக்கோட்டை நாடு எல்லையில் குடியமர்த்தி மிகபலமாக நின்று திருடர்களை எதிர்த்து இறங்கவிடாது, பாதுகாத்தும் நோட்டம் பார்த்தும் வந்தவர்கள்தான் தர்மாசனப்பட்டியில் வாழும் நோட்டக்கார வம்சத்தார்கள்.

12.பாடியப்ப கோனார்கள்

இன்னும் இடமூலி வம்சத்தார் (யாதவர்கள்) ஆதியான் வம்சத்தார்கள் திருமலையிலும் அழகிச்சிப்பட்டியிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எல்லாம் போர் நடக்கும் காலத்தில் கட்டக்காளைக்கு ஒத்துழைப்பு தந்தவர்கள், மேற்குறிப்பிட்ட அனைவரும் கட்டக்காளையின் பாடியப்பன்மார்கள்.

13.தேரை நிலைநாட்டியவர்

திருக்கோஷ்டியூர் தேர்த்திருவிழாவின் போது தேர் நிலைக்கு இழுத்து செல்ல முடியாமல் பல பகுதிகளுக்கும் பறை சாற்றி, பின்பு கட்டக்காளை தனது படையுடன் சென்று தேரை இழுத்து நிலைக்கு கொண்டு நிலையத்தில் அமர்த்தியதால் கட்டக்காளை பெயரில் ஒரு வடமும் ஒரு காரணமும் உண்டு.

14.உதவும் உயர்ந்த உள்ளம்

அண்டி வந்தவர்களை இடம் கொடுத்து, வாழவைத்து, அவர்களுக்காக கட்டக்காளை பெயரிலிருந்த ஊர் பெயரையை மாற்றிவிட்டாயே? என்று அவர் வம்சத்தில் மூத்தவராக இருந்தவர் ஒருவர் கோபமாக

சண்டை போட்டு ஊரை விட்டு வெளியேறினார். அவரை சமாதானப்படுத்தி, சாமி என் கனவில் என்ன கூறியதோ அதை ஏற்று செய்வதாக சாமியிடமே சத்தியம் செய்து கொடுத்துள்ளேன். அதன்படிதான் அவர்களை ஆதரித்தேன் எனக் கூறினார். தன் மூத்த அண்ணனுக்காக அழகிச்சிப்பட்டி என்ற ஊரை உருவாக்கி நிலம் கொடுத்து கண்மாய்கள் வெட்டி, அவர் வாழ வேண்டியதற்கு அனைத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். அவர்களும் மகிழ்ந்து உறங்கான்பட்டியில் தங்களது (கம்பையை பிரிக்காமலே) உரிமையை எடுத்து செல்லாமல் சென்றனர். இன்றளவும் உறங்கான்பட்டியில் கட்டக்காளைப் பிரிவில் மூத்த வாரிசு என்ற மரியாதையை பெரும்பூஜை விழாவிலும், மற்ற நல்லது கெட்டது ஆகியவைகளிலும் அவர்களுக்கு தரப்படுகிறது. அவ்வாறு பிறருக்கு உதவியும் அண்டினோரையும் ஆதரித்தும்,அவர்களுக்கு நல் வாழ்க்கையை இன்முகத்துடனும், பாசத்துடன் தந்த உயர்ந்த மனப்பான்மை கொண்டவர்கள் கட்டகாளை வகையறா என்பதை இன்றைய சந்ததியினரும், மற்றவர்களும் உணர்ந்து அவர் வழி நடக்க முயற்சிப்போம்! கட்டக்காளை வழிவந்தவர்கள் உறங்கான்பட்டி, அழகிச்சிப்பட்டி, குப்பச்சிப்பட்டி, காடமுத்தான்பட்டி, மேலச்சீமை அய்யம்பட்டி, தர்மத்துப்பட்டி, சீர்காழி மற்றும் நாட்டின் பல பகுதிகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். தனது பாட்டனின் புகழை நினைவுகூர்ந்து என்றும் காப்பார்கள். பங்கமில்லாமல், சிதைவுறாமலும், நேர்மை, நீதி, சத்தியம் தவறாமல் என நம்பிக்கை கொள்வோம்! கட்டக்காளைப் புகழ் ஓங்குக.....


தெய்வத்திரு.கட்டக்காளை க.சோ.வேலாயுதம் இளங்கச்சி அம்பலம், உறங்கான்பட்டி

1994-ல் கட்டக்காளை வகையறா நடத்திய பெரும்பூஜை விழாவின் போது மேலே கூறப்பட்டயாவும் தெய்வத்திரு.கட்டக்காளைக.சோ.வேலாயுதம் இளங்கச்சி அம்பலம் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் ஆசிரியருக்கு வெள்ளலூர் நாடு பற்றி கதை எழுத சிறு வயதிலிருந்தே ஆர்வம் உண்டாக்கியதே தெய்வத்திரு. க.சோ.வேலாயுதம் இளங்கச்சி அம்பலம் அவர்களே. அதன் தாக்கம்தான் வெள்ளலூர் நாடு வரலாற்று நூல்.

ஆறுகள் தமக்காக ஓடுவதில்லை
மரத்தில் பழங்கள் தமக்காக பழுப்பதில்லை
தலைமைகள் தமக்காக வாழ்வதில்லை
வாழ்வது ஒரு முறை
வாழ்த்துவது பல தலைமுறை.

கோவில்களும் மக்கள் வாழ்வும்

கோவில்கள் இன்று பெரும்பாலும் சமய வழிபாட்டின் சின்னங்களாகவே அறியப்படுகின்றன. கடவுளை வழிபடுவற்கு கோவில்களில் வானுயர்ந்த கோபுரங்களும் அரண் போன்ற பாதுகாப்பு கோட்டை சுவர்களும் விசாலமான மண்டபங்களும் தேவையில்லை என்பதை முன்னோர்கள் உணராமல் இல்லை.

முற்காலத்தில் மரத்தினாலும், களிமண் மற்றும் சுடுமண் கலவையாலும் கோவில்கள் கட்டப்பட்டன. பிற்காலத்தில் கோவில் கட்டும் கலை வளர்ச்சியுற்று கருங்கல்லால் திருப்பணி செய்யப்பட்டு பழமை மறைக்கப்பட்டு புதுமையாக மாற்றியமைக்கப்பட்டது. அவ்வாறு மாற்றியமைத்தபோது கோவில்களை வழிபாட்டு மையமாக மட்டுமின்றி சமுதாய தேவைகளுக்கான சமூக நலமன்றங்களாகவே முன்னோர்கள் வடிவமைத்தனர். நமது கலாசாரம் என்ற கூற்று கோயிலுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த சமூகத்தொடர்பை விளக்குகிறது.

கோவில்களின் தோற்றம்

வெள்ளலூர் நாட்டுக் கோவில்கள் நமது முன்னோர்களின் வாழ்வின் அடிப்படையிலேயே தோன்றின. அவர்கள் தமது மக்களுக்கு ஆற்றிய சேவைகள் பல, அவற்றின் நிகழ்வுகளால் மக்களால் உணரப்பட்ட பக்திப்பெருக்கால் கோவில்கள் கட்டப்பட்டன. அப்படி மக்களுக்கு நல்லது செய்து அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து மக்களை பல்வகையிலும் பாதுகாத்து வந்த முன்னோர்களையே தெய்வப்பிறவி என்றும் தங்கள் வாழ்வோடு இணைந்து வருவதாக கருதி, உருவங்களை சிலையாக வடித்தெடுத்து தெய்வங்களாக வணங்க வழிபட்டு வந்தார்கள். நாளடைவில் இதிகாசங்களின் அடிப்படையில் கோவில்களை உருவாகி மக்கள் வழிபாட்டு வருகிறார்கள். கோவில்களில் நமது வரலாறு புதைந்து கிடைக்கிறது.

நாட்டின் கருவூலம்

நாட்டு மக்கள் வரியாக செலுத்திய பணம் மற்றும் தானியங்கள் கோவில் கருவூலத்தில் சேமித்து வைக்கப்பட்டன. இறைபக்தி காரணமாக பக்தர்கள் தானமாக வழங்கிய நிலங்களும், இடங்களும் கருவூலக்கணக்கில் வரவு வைத்து நிர்வகிக்கப்பட்டன. விலை உயர்ந்த பொருட்கள் நகைகள் கருவூலங்களில் நிரம்பிவழிந்தன.

பள்ளிகள்

இறையருள் வேண்டி, அன்றாடம் கடவுளுக்கு பூஜை செய்தவர்கள் மற்றும் பெரிய அம்பலகாரர், அம்பலகாரர்கள் பெரியோர்கள் தங்களால் அறியப்பட்ட புராண இதிகாசங்களில் இருந்து விஷேச நாட்களில் கதை சொல்ல ஆரம்பித்தனர். நமது முன்னோர்களின் வரலாறுகளை நல்ல விசயங்களை சந்ததியினருக்கு அறிய வைத்தனர். ஒவ்வொரு கோவிலின் வரலாற்றையும் மிகுந்த சுவையுடன் சொல்லமுடியும் எழுத முடியும். கோவிலின் வரலாற்றுடன் அது இருக்கும் நிலத்தின் பண்பு பின்னிப் பிணைந்திருப்பதை அறியமுடியும். நமது முன்னோர்களின் வரலாறுகளை, நல்ல விஷயங்களை, சந்ததியினருக்கு அறிய வைத்தனர். நமது முன்னோர்களின் கலாசாரத்தை காட்டும் கண்ணாடியாக, திருவிழாக்காலங்களில் கோவிலில் நடத்தப்படும். நாடகம், கலை நிகழ்ச்சிகள் இருந்தன.

சமுதாயக்கூடம்

புயல் மற்றும் மழைக்காலங்களில் மக்கள் வீடுகளை இழந்து தவிக்கும்போது கோவில்களிலேயே தங்க வைக்கப்பட்டனர். கோவில் வளாகத்திலே இருந்த மடப்பள்ளியில் (கோவில் சமையலறை) இருந்து உணவு சமைத்து வழங்கப்பட்டது. துயர் காலங்களில் அடைக்கலம் தரும் இடமாக கோவில்கள் இருந்ததால்தான் 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி உருவானது.

கோபுரமும் அதன் உச்சியில் உள்ள கலசமும் இடியை தாங்க வல்ல சக்தியாக இருந்து மக்களை காத்ததினால் மக்கள் கோபுரங்களை கடவுளாகவே வணங்கி வந்துள்ளனர். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற பழமொழி இதனை உணர்த்துவதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

மழைக்காலம் முடிந்தவுடன் விவசாயப்பணிகளைத் தொடங்க கோவில்களில் பாதுகாத்து வைக்கப்பட்ட விதைகள் உழவர்களுக்கு உதவின. இதனால் விவசாயப்பணிகள் தடையின்றி நடந்தது.

கிராமக்கூட்டம், மகாணக்கூட்டம், நாட்டுக்கூட்டம், ஆகியவை கோவில்களிலேயே நடைபெற்றுவருகிறது. இவை தவிர்த்து திருமண நிகழ்வுகள் விருந்து நிகழ்வுகள் என பெரும்பாலான சமூக நிகழ்வுகள் வெள்ளலூர் நாட்டுக்கோவில்களை மையமாக வைத்தே நடைபெற்று வந்துள்ளது.

இவ்வாறு நமது முன்னோர்களின் வாழ்வில் மட்டுமில்ல கலாச்சார பண்பாட்டு அமைப்பில் இரண்டற கலந்து, இன்றைய பெருமையாக நிமிர்ந்து நிற்கின்றன கோவில்கள் அவற்றைப் பாதுகாப்போம் அதன் பழம் பெருமையை சிதைக்காமல்!

கனவு தேசம்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு - குறள்-731

நாட்டு மக்களின் தேவைக்கு குறையாத விளைபொருளும் தகுதியுடைய சான்றோர்களும் தாழ்வில்லாத செல்வத்தை உடையவரும் ஒன்று சேர்ந்திருப்பதே நல்ல நாடாகும்.

தனலாய்த் தகிக்கும் வெப்பத்தில் சுமக்க வேண்டிய பாரத்தை இடுப்பிலும், தலையிலும் சுமந்து கொண்டு நடந்தார்கள். வெயிலின் தாக்கம் வருத்தாமல் பெண்களும் முக்காட்டை தலைமேல் இழுத்துவிட்டுக்கொண்டு நகர்ந்தார்கள். இயற்கையுடன் போராடாமல் சிலர் வெயில் தணியட்டும் எனப் பொறுமையாய் வெகுநேரம் வரை மர நிழலில் காத்து நின்றிருந்தார்கள்.

பதைபதைக்கிற வெய்யிலிலே ஓய்வெடுத்துக் கொள்ள நினைப்பவர்களுக்கு ஏதுவாக ஆங்காங்கே நட்டு வைத்த குடைகள் போல புளியமரங்களும், வேப்ப மரங்களும் இருந்தன. சுமைகளை இறக்கி வைக்க நிழல்களுக்கிடையில் சுமைதாங்கிக் கற்பலகைகள் ஆங்காங்கே காணப்பட்டன. ஓரிரு ஆல மற்றும் அரச மரங்களின் நிழலின் பரப்பளவு ஒரு கிராமமே அதன் நிழலின் பரப்பளவு. ஒரு சோலையைப்போலவே இருந்தது. ஒரு கிராமமே அதன் நிழலில் களைப்பாறாலாம். அதன் கிளைகள் சதா காற்றில் சிலிர்த்தன. அதனால் மரத்தினடியில் எவ்வளவு சுகமாக இருக்கும் என வெய்யிலில்

சென்றவருக்கு யூகிக்க முடிந்தது. அந்த நிழலைக் கண்டவுடன் யாருக்கும் நின்று சற்றே மூச்சு வாங்கலாம் எனத்தோன்றும். அதுபோலவே ஒவ்வொரு மரத்தின் அடியிலும் யாரேனும் களைப்பாறிக்கொண்டுதான் இருந்தார்கள். காற்றில்லாமல் இறுகும் சூழலில் கூட பயணிப்பவர்கள் குழுமையாக அனுபவிக்கமுடியும்.

நாட்டார்களின் வாய்மொழி உத்தரவுக்கு மதிப்புக் கொடுத்தும் ஏற்றுக்கொண்டும் அதற்கேற்ப மக்கள் செயல்பட்டு வந்துள்ளனர். வெள்ளலூர் நாட்டு நிர்வாகம் சாலை விஸ்தரிப்பாலும் பராமரிப்பாலும் அதிகக் கவனம் செலுத்தினர். சாலைகள் இருமருங்கிலும், ஆங்காங்கே மரம் வளர்த்து பராமரித்து வந்ததைக் கவனிக்கும் போது அதன் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தார்கள்.

நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிக்கு ஓய்வெடுக்க மற்றும் இரவைக்கழிக்க கட்டுக்காவல் கூடிய சத்திரங்களும் அவற்றின் அருகே குளங்களும் செய்வித்திருந்தனர். முக்கியமாகக் பயணிகளின் உயிருக்கும், உடமைக்கும் ஒரு தீங்கும் வராமலும், காவலிலும் தவறு செய்பவர்களுக்குப் பொது இடங்களில் கடிய தண்டனையும் கொடுத்துப் பயணிக்கும் மக்களின் நம்பிக்கையை வளர்த்தார்கள். நாட்டார்களின் வாய்மொழி உத்தரவுக்கு மதிப்பு கொடுத்தும், ஏற்றுக்கொண்டும் அதற்கேற்ப மக்கள் செயல்பட்டு வந்தனர். இது இப்படி இருக்க, பொதுமக்கள் ஆலயங்களுக்குச் செல்ல நல்ல சாலைகளும் அமைத்து நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது.

தனிமையில் நடப்பதற்கு ஓர் அருமையான இரவு. இயற்கைக்கு முன் எல்லாரும் எவ்வளவு சாதாரணமானவர்கள் என்று காட்டிய இரவு. இயற்கை என்ன? சில மனிதர்களுக்கு முன்னால் கூட எல்லாரும் சாதாரணமானவர்கள் என்று வேலன் என்ற பயணியர் புரிந்து கொண்ட இரவு. இந்த வேலன் வெள்ளலூர் நாட்டைப்போன்று ஒரு நாட்டின் துணைத்தளபதி அந்தஸ்தில் உள்ளவன். கள்ளழகரை தரிசிக்க தனது குடும்ப உறுப்பினர்களுடன், வெள்ளலூர் நாட்டின் வழியாக, அழகர் கோவிலுக்குப் பயணித்துக் கொண்டிருந்த வேளை அது. தலைக்கு மேல் முடிவே தெரியாத இரவில் தோய்ந்த வானம். பெரிய மேகத்தின் திரள் வானத்தின் ஓர் எல்லையில் இருந்தது. அதன் பின் மாட்டிக்கொண்டது என்பது மேகத்திரளின் ஓரங்கள் வெள்ளியில் (நட்சத்திரங்கள்) வடிவெடுத்ததனால். புரிந்தது. அது வெளிவர வெகு நேரமாகும். அப்போதைக்கு பூமியை வெளிச்சப்படுத்தியது நட்சத்திரங்களின் ஒளிதான். ஏதோ வைரம் வைத்திருந்த கிண்ணம் கைதவறிக் கீழே விழுந்தது போல வானம் ஆங்காங்கே சுடர்விட்டது.

வானில் தெரிந்த நகரம், பெரும் ஜனத்தொகை கொண்ட ஒளிமயமான ஒரு நாடு போலவும் பூமியில் தனக்கு முன்னே இருந்தது வெள்ளலூர் நாடு. அது அமைதியான நாடு. நான்தான் பெரியவன், நான் செய்வது தான் சரி என்ற குரல்களே வரவில்லை. ஒவ்வொரு வீட்டிலிருந்து ஒரு விளக்கு எரிவது போல வேலவனுக்குத் தோன்றியது.

தனக்கு மேலிருந்து, தன் சாதனைகளைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளாத நாடு. அதுபோல் தன்னை வெகு சிறியவன் போல் காட்டிய கனவுப்பிரதேசம் என எண்ணி வேலன் சாலையில் நடந்தபோது சுற்றிலும் அமைதி, சாலையிலும் அமைதி, எங்கும் அமைதி. ஒன்று மட்டும் நிச்சயம். வெள்ளலூர் நாட்டின் வெற்றிக்கு அவர்களுடைய பலமும் வீரமும், நேர்மையும், நீதியும், ஒழுக்கமும் மட்டும் காரணமல்ல. பெற்றோர்கள் பாசத்துடன் பண்புகளையும், நல்வழிக்கதைகளையும், வீரம் செறிந்த கதைகளையும், ஆன்மீகக் கதைகளையும் ஊட்டி, அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதும்

ஒரு காரணம் என்று தன்னோட வந்தவர்களிடம் வேலன் கூறிக்கொண்டே நடந்தான்.

வழியிலிருந்த வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரத்தில் (கோவில்களுக்கு முன் உள்ள அரங்கம்) குடும்பத்தினருடன் ஓய்வெடுத்து விட்டு, காலையில் சாலை வழியாகச் செல்லும்போது குடிநீர் ஊருணி, மழைக்காலங்களில் ஓடிவரும் நீரை சேமித்து விவசாயத்துக்கு பயன்படுத்தும் கண்மாய்கள்,கோவில்கள். இவைகளைப் பார்த்துக்கொண்டே சந்தோசக் களை கொண்ட மக்களையும் கண்டு மகிழ்ந்து, வெள்ளலூர் நாட்டின் மேற்கு எல்லையை அடைந்தான்.

எல்லையைக் கடக்கும்போது திரும்பிப்பார்த்து, உலகத்தை படைத்த கடவுள், தான் படைத்த உலகம் எப்படி உள்ளது? என்று காண வந்தால் இந்நாட்டைக் கண்டு மகிழ்ந்து தான் கனவு கண்ட தேசம் தன் முன்னே நனவாகி, நல்ல நடை போடுகிறது என்று இம்மக்களுக்கு நல்லாசி செய்வார் என்ற நினைவுடன், ஒரு புதிய சக்தியுடன் அழகர்கோவிலை நோக்கிப் பயனமானான்.

சுதந்திர வேட்கை

நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிகளையும், உண்மைகளையும் தங்களது மன எண்ணங்களையும் அந்தக்கூட்டத்தில் வீரணனம்பலகாரரும் கட்டக்காளை அம்பலகாரரும் தங்களது அறிக்கையின் மூலம் வெளியிட்டார்கள்.

வரலாற்று ஏட்டிலே சுடர்மிக்க வார்த்தைகள்

சதி வழிகளில் நாட்டைத்தங்கள் கைவசம் ஆக்குவது ஆங்கிலேயர்களின் பரம்பரைப் பழக்கம். இங்குள்ள ஆலயங்களின் திருப்பணிகளை நிறுத்தி விடுவார்கள். அறவழிபாடுகள் இல்லாமல் செய்து விடுவர். மக்களது சுதந்திர பயிரை கவ்விச்சிதைப்பார்கள். வெள்ளையர்கள் உப்பு முதல் அத்தனை விளைபொருட்களுக்கும் வரி விதிப்பார்கள், இந்நாட்டுச்செல்வ செழிப்பை வறட்சியாக்குவார்கள் மற்ற இடங்களையும் விளை நிலங்களையும் தங்கள் கைவசமாக்கி தமக்கே பயன்படுத்திக்கொள்ள முயல்வர். நிலவரி, வீட்டுவரி, தண்ணீர்வரி, பங்குவரி என்றும் பல்வேறு வரிகளை விதித்து மக்கள் எலும்புகளை பொடிகளாக்கி சூரணமாக்குவர். சிறு பிழைக்கு கொடுந்தண்டனை விதித்து மக்களை கொடுமைக்கு ஆளாக்குவார்கள், இன்னும் மனத்தில் தோன்றிய அட்டூழியங்கள் அனைத்தையும் தயங்காது செய்வார்கள்.

எனவே இத்தகைய அட்டூழியங்கள் எதுவும் நடக்காதபடிக்கும் இந்நாட்டின் மதிப்பையும் மானத்தையும் காப்பாற்றுவதற்கும் மனித முயற்சியின் எல்லைக்கோட்டில் நின்று ஆவன எல்லாம் செய்வதற்கு நாங்கள் தயாராய் உள்ளோம். இங்கு வாணிபத்துக்காக வந்த நாடோடிக்கூட்டம் இப்போது நம்மையே மிரட்டி அதிகாரம் செலுத்துகிறது. வலுவாக ஆதிக்கத்தை ஊன்றி சுரண்டல் தன்மையை வளர்த்து வந்த இவர்கள் அதிகாரம் காட்டி மக்களைகசக்கிப்பிழியத் தூண்டும் அளவுக்கு ஆகிவிட்டார்கள். இந்த நாடு மண்ணோடு மண்ணாய் போனாலும் அவர்களுக்கு வேண்டியது வரிப்பணம். அது கொடுக்கப்படாவிட்டால் நாட்டை கபளீகரம் பண்ணுவது என்று வெறி கொண்டு அலைகிறார்கள். அவர்களின் அதிகார சூழ்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் தயாராக வேண்டும்.

மேற்கண்டவாறு அறிவித்த அம்பலகாரர்கள் பின்னும் மக்களுக்கு தெரிவித்தது. இந்நாடு புராதனப்பெருமை கொண்டது. கலையும், கதைகளும் வளர்ந்து செழித்து பரிமளித்த நாடு இது. பக்தியின் விளை நிலம். இதற்கெல்லாம் மேலாக இங்கே வீரம் விளையாடி குதித்தது. ஆண்மை ஆனந்த நடைபோட்டது. இங்குள்ள தகர்ந்த கொத்தளங்களும், சிதைந்த இல்லங்களும் தூர்ந்தகுளம் குட்டைகளும் நம் மரபின் வீரக்கதைகளை விளக்கம் செய்யும். மான உணர்ச்சியோடு பகைவரை எதிர்த்து மார்பில் ஆழப்புண்ணேற்று மடிந்த வீரர்களது குருதியின் அணுக்களும் மண்டையோட்டின் பொடிச்சிதறல்களும் இங்குள்ள புழுதி மண்ணிலே, கலந்து வீர கீதம் இசைக்கின்றன. இத்தனை மாண்பு நிறைந்த மண்ணில்தான் நாம் பிறந்துள்ளோம். இத்தகைய அருமை பெருமை நிறைந்த வெள்ளலூர் நாட்டிற்கு இப்போது சோதனைநேர்ந்துள்ளது. ஒண்டிப்பிழைக்க வந்த கூட்டம், இப்போது ஓடத்துரத்துகிறது. நம்மை அழித்து தொலைக்க ஆர்ப்பரிக்கின்றது. இந்த நீசர்களை அடியோடு நாசமாக்க வேண்டும். இது இங்கு தோன்றிய ஆண் மக்களின் பிறவிக்கடனே என்றனர். இதைக்கேட்ட மக்கள் ஆத்திரமுற்றனர். சின வேங்கைகளாகவும் மதம் பிடித்த யானையாகவும்மாறி பொருமிச்சாடினர், புகைந்து சீறினர். பொங்கித்துடித்தனர்.

இனப்படுகொலை

18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் நாயக்கராட்சி முடிவுக்கு வந்தது. இந்நிலையில் ஆற்காட்டு நவாப்பு ஆட்சி ஏற்பட்டது.

அப்போது முகமது அலியும் (ஆற்காட்டு நவாபு) சந்தாசாகிப் (ஆங்கிலப்பிரதிநிதி இருவரும்) வரி வசூல் செய்தனர். பின் தன்னாட்சி வரி வசூல் உரிமையை நவாப்பிடமிருந்து ஆங்கிலேயர்கள் பெற்றனர். அப்பொழுது வெள்ளலூர் நாட்டில் வரி வசூல் செய்ய முயற்சி செய்யும்போது, நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள் மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிகள் நாங்கள் எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டமாட்டோம். ஒரு சல்லிக்காசுகூட வரி என்ற பெயரில் கப்பம் கட்ட முடியாது என்று வெள்ளலூர் நாட்டு அம்பலகாரர்கள் முழங்கினர் என்றும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வரிகொடாப்போர் நடத்தினர் என்று தெரியவருகிறது.

இதனால் வெகுண்டெழுந்த கேப்டன் ரூம்லே என்ற ஆங்கிலப் படைத்தளபதி மேலூர், வெள்ளலூர் நாட்டுக்கள்ளர்களைத் தாக்கி வரி வசூல் செய்ய முயற்சித்ததாகும், வெள்ளலூர் நாட்டு மக்கள் வரி செலுத்த மறுத்ததையும், ஆங்கிலேயோ் எதிரிகளாக சித்தரிக்கப்பட்ட சுதந்திர வேட்கை கொண்ட அரசுக்கு ஆதரவாக செயல்பட்டதனையும் மனதில் கொண்டு மேலூர் வெள்ளலூர் நாட்டுப்பகுதியிலிருந்த கள்ளர் கிராமங்களைத்தாக்கி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சுமார் 3000 பேரை ஒரே நாளில் கொடூரமாக கொலை செய்தான்.

சில நாட்கள் கழித்து குறிப்பட்ட தலைவர்களை (அம்பலகாரர்கள்) கைது செய்தனர். அப்போது கும்பினியார்கள் (ஆங்கிலேயர்கள்) சாயும்படைதாங்கி வீரணம்பலகாரரையும், கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரையும் கைது செய்து, இருவரையும் வரிகட்டாததற்கு சிறையிலடைத்தார்கள். கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர் அவர்கள், நாட்டுப் பாடலிலே இடம்பெற்ற எனது ஊத்தஞ் செய்யும், எனது பாடியப்பான்மார்களும் எனது காரண மரியாதையும் நீங்கலாக எனது சொத்தை

எதை வேண்டுமானாலும் விற்று வெள்ளலூர் நாட்டு வரிப் பாக்கிகளை கட்டி எங்கள் இருவரையும் மீட்கும்படி தனது மக்களுக்கு உத்தரவு இட்டான். ஆனால் வரிபாக்கியை கட்டவேண்டாம் என ரகசியமாக மக்களுக்கு தெரிவித்தார் மேலும் வரிகொடாப்போர் தொடர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. கட்டக்காளையின் மக்கள் அரசு அதிகாரிகளின் மூலமாக உத்தரவை பெற்றுக்கொண்டு வரி கட்டுகிறோம் என்று ஆங்கிலேய அதிகாரிகளுக்கு பொய்யான வாக்குறுதி அளித்தனர். இந்த வாக்குறுதியை நம்பி வெள்ளையர்கள் இருவரையும் சமாதானமாக சிறையிலிருந்து விடுவித்தனர், வெளியில் வந்ததும் தலைவர்களை மக்கள் தப்பிக்க வைத்து மறைத்து வைத்தனர். ஆனால் வரி செலுத்த மறுத்ததோடு வரி வசூல் செய்ய வந்த ஆங்கிலேய அரசு உதவியாளர் 10 பேரை கொலை செய்து பதிலடி கொடுத்தனர். ஆங்கிலேயர் படைகள் தலைவர்களை பிடிக்க உறங்கான்பட்டி கிழக்கே சுமார் 2-மைல் தூரத்தில் காட்டில் முகாமிட்டிருந்தார்கள் அந்த இடத்திற்கு வெள்ளையன் காடு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அதன் அருகில்தான் கட்டக்காளை அம்பலகாரரின் வண்ணாத்தி வயல் நிலங்கள் உள்ளன. மக்களின் கடும் எதிர்ப்பும் போராட்டத்தினாலும் வெள்ளையர்களால் தலைவர்களை கைதுபண்ண முடியவில்லை. எனவே மறுபடியும் அடக்கமுடியா கோபம் கொண்டு, கேப்டன் ரூம்ளே கண்மூடித்தனமாக மக்களை காக்கை குருவியைப்போல் சுட்டு சுமார் 2000 பேரை மேலூர், வெள்ளலூர் மக்களை கொலைசெய்தான். இவ்வாறு மொத்தம் 5000 பேரை மேலூர், வெள்ளலூர் நாட்டுக் கள்ளர்களைக் படுகொலை செய்து, ஒரு இனப்படுகொலையை அரங்கேற்றினான் என்று திரு.சுந்தரவைத்திதேவன் தனது பிறமலைக்கள்ளர் வாழ்வும் வாழ்வியலும் என்ற வரலாற்று நூலில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார்.

வரி செலுத்த மறுத்து தூக்கிலிடப்பட்ட, கட்டபொம்மன் வரலாற்றில் நிற்கின்றார். எதனால் அதேபோல் வரி செலுத்த மறுத்து, கொல்லப்பட்ட 5000 பேர்களை வரலாறு மறந்துவிட்டது. ஏனென்றால் கட்ட பொம்மன் மன்னன். இந்த 5000 பேரும் சாதாரன (போர்) குடிகள்தானே சுதந்திரத்தை அடைய இங்கிருந்த மக்களும் தன்னாட்சி செய்த சிற்றரசர்களும் போரிட்டமை ஒரு மாபெரும் போராட்டமாகும் அதை சாதாரணக்கலகம் என்று சிலர் எழுதி உண்மையான வரலாற்றை மறைத்தனர் சூழ்ச்சியால் சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் தமிழனின் வீரத்தை மறைக்க வேண்டுமென்று எழுதினார்கள் அதை இன்று சரித்திரமாக படித்து வருகிறோம், என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குறிப்பிடுகிறார்.

சாதிச்சண்டைகள் போடுவதற்கே, தமிழர்களுக்கு நேரம் கிடைக்காததால் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகள் இந்த உண்மையை எடுத்துச் சொன்னால் கிடைத்த பதவியும் போய்விடுமோ என அஞ்சினர். சரித்திர உண்மை அறிந்தவர்கள் கூறிய, தமிழகத்தில் நடந்த மானமும், வீரமுமிக்க போராட்டங்களுக்கு தக்க மரியாதை கிடைக்கவில்லை அதை எடுத்துச் சொல்லும் துணிவு இங்குள்ள தமிழர்களுக்கு கிடையாது.

இந்திய விடுதலைப்போராட்ட வரலாற்றில் தமிழன் கொடுத்த முதல் குரலையே எடுத்துச்சொல்ல நாதியில்லாமல் இருக்கும் நேரத்தில் இந்திய விடுதலைப்போருக்கு முதல் குரல் கொடுத்தது யார்? என்று கேட்பதை விடுத்து தமிழகத்தில், நடந்த விடுதலைப்போரில் முதல் குரல் கொடுத்துயார்? என்னும் விவாதத்தை ஏற்படுத்தினர். இத்தகைய நிலை தமிழகத்தின் இருந்ததால், தமிழகத்தின் விடுதலைப்போர் தன்னுடைய முதன்மையை இழந்து பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

வரலாறு முறையாக எழுதப் பெறாமையே இதற்கு முதன்மையான காரணமாகும். அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறெல்லாம் வரலாறுகளை எழுதினர்.

சமீபத்தில் ஒரு தின இதழில் தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப்பட்டதேன்? எனும் கட்டுரையை வெளியிட்டது. அதில் விடுதலை போராட்ட வீரர்களை கொள்ளைக்காரர்களென்று என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் விடுதலைப் போராட்டத்தின் முதல் முழக்கம் முழுங்கிய தமிழனின் செயல்பாடு மறைக்கப்பட்டதால், தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப்பட்டதனால் அதன் முதன்மையை இழந்தது.

அரசியல் சொல்வாக்குப் பெற்றவர்கள் எழுதியுள்ள வரலாற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டியோ அல்லது மறுத்து, உண்மை அறிந்தோர் உண்மை நிலையை எடுத்துரைத்து நூல் வெளியிட்டால், அந்த எழுத்தாளர் எழுதிய முதல் நூலும் கடைசி நூலும் அதுவாகத்தான் இருக்க முடியும். இதனால் சுயநலம் படைத்தோர் தமிழகத்தின் விடுதலைப்போரை மறைத்தும் தங்களுக்கு வேண்டியவர்களை அறிமுகம் படுத்தியும், முன்னுக்கு கொண்டு வந்தும் வரலாற்றையே திசை திருப்பி எழுதியுள்ளனர்.

சுதந்திரத்தாகம்

வேதனையில் பொழுதுகள் விடிந்தாலும்,
எம் தேசத்தின் விடுதலையே, என் உயிரினும்
மேலானது என்று களமாடிய மறவர்களின்
வீரத்தால் வயப்பட்டது சுதந்திரம்!

எத்தனை உயிர்கள் மண்ணில் புதைந்திருக்கும்,
எத்தனை பெண்களின் கூக்குரல் விண்ணை பிளந்திருக்கும்,
எத்தனை குழந்தைகளின் அழுகுரல் கண்ணீரில் நனைந்திருக்கும்,
இன்னும் எத்தனை, எத்தனை துயரங்கள் மறைக்கப்பட்டிருக்கும்,
மண்ணில் கலந்த, கரைந்த பல தியாக வீரர்களின் ரத்தத்தின் மீதும்
கண்ணீர் ஆற்றிலும் பெறப்பட்டது சுதந்திரம்!

பத்து மாதம் சுமந்த தாயை விட
இறப்புக்கும் பின்னும் சுமக்கும் தேசத்தை உயிராக எண்ணி
இந்திய தேசத்தின் சுதந்திரக்கதவுகளை திறந்து வைத்தவிட்டு,
மண்ணுக்குள் புதைத்துக்கொண்ட உங்களை
எப்படி மறப்போம்? மறந்தால் எப்படி இந்தியனாவோம்?

எழுந்து வா இந்தியனே, அடிமைப்பட்டிருந்த தேசத்தின்
வளர்ச்சியைக்கண்டு அகிலமும் நடுங்கட்டும்!
இந்தியன் என்ற பெயரைக்கேட்டால் அண்டமும் அதிரட்டும்!
வாழ்வது ஒருமுறை, சாவதும் ஒருமுறை,
நம் தாயகம் காப்பது நெறிமுறை,
என்றுணர்ந்து இந்தியன் என்று பயணிப்போம்!

எப்படி மறப்போம், மறந்தால்
எப்படி இந்தியனாவோம்!

உங்கள் தன்னலமற்ற தியாகத்திற்கும்,
தாயகம் காத்த உணர்வுகளுக்கும்
நாடே தலை வணங்குகிறது!

- ஒரு கவிஞனின் தாகம்

நீதியின் நிலையான துடிப்பு

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார் - குறள்-722

'கற்றவர்களுள்' கற்றவர் என்று புகழப்படுகின்றவர்கள், கற்றவர் அவையின் முன், தாம் கற்றதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு எடுத்துச் சொல்லக்கூடியவர்களே ஆவர். வாழ்வில் கடந்த காலம் என்பது முடிந்தவை. நிகழ்காலம் என்பது நடப்பவை. எதிர்காலம் என்பது கனவு. கடந்த காலங்களில் நடந்தவைகளில் அனுபவம் பெற்று நிகழ்காலத்தில் சத்தியம், நேர்மை, நீதி பிறழாமல் முறையாக வாழ்ந்தால் எதிர்கால வாழ்வின் கனவு நனவாகும்.

நமது சந்ததியினருக்கு அன்பு, ஆஸ்தி, ராஜ்யம் தவிர பகுத்தறியும் கொண்ட அறிவும் வழங்கவேண்டும்.

அனைத்தையும் பெற்ற மானிடரை சந்தித்தீர்களா? இல்லை. உருவான குறையை சாமர்த்தியத்தோடு மதி கொண்டு வென்று வாழ்பவன் உலகால் மதிக்கப்படுகிறான். சமூக தர்மத்தை எவனொருவன் கடைப்பிடிக்கிறானோ, விதைக்கிறானோ அவனது இதயத்தில் நீதி தேவதை குடி கொண்டிருப்பாள்.

வெள்ளலூர் நாட்டைச்சுற்றி பல கள்ளர் நாடுகள் இருந்து வருகிறது. இந்த நாடுகளில் ஏதாவது வழக்கு, அந்த நாட்டு நடைமுறைச்சட்டம் பிரகாரம் தீர்க்கமுடியாத பட்சத்தில், வழக்கிற்கு சரியான நீதி கிடைக்க மேல் முறையீட்டு என்ற வகையில், மற்ற கள்ளர் நாட்டு அம்பலகாரர்கள் தலைமைக்கு முறையிடப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

அந்தப்பிரகாரம், மயில்ராயன் கோட்டை நாடு சம்பந்தமான வழக்கு ஒன்று. மற்ற நாட்டுத்தலைமை அம்பலகாரர்களுக்கு ஓலை அனுப்பப்படுகிறது. மயில்ராயன்கோட்டை அம்பலகாரர் சம்பந்தப்பட்ட சொந்த சொத்து வழக்கு. இதில் அவரே தான் தீர்ப்பு சொல்வது சரியாகாது என்று முடிவெடுக்கிறார். தனக்கும், தன் அண்ணன் மகனுக்கும் உள்ள குடும்பச் சொத்து பாகம் சம்பந்தமாக இருப்பதால், ஒவ்வொரு நாட்டு அம்பலகாரர்கள் தனது குழுவினருடன் எங்களது நாட்டுக்கு வந்து நீதி வழங்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள். தனித்தனியாக தேதிகள் ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பிடப்படுகிறது.

அந்த அந்த நாட்டு அம்பலகாரர்கள் அவர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் மயில்ராயன் கோட்டை நாட்டு எல்கைக்கு வருகிறார்கள். அவர்களை மயில்ராயன்கோட்டை அம்பலகாரர் முறைப்படி மேளதாளம் வைத்து கொம்பூதி, குடைப்பிடித்து ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள். பெரிய அம்பலகாரர் வீட்டில் அனைவருக்கும் விருந்து அளிக்கப்படுகிறது. விருந்தில் ஆடு, கோழி, சமைத்து குடிப்பதற்கும் கள்ளும் பரிமாறப்படுகிறது. பெரிய அம்பலகாரர் ஏற்பாட்டின் படி நடப்பதால் மறுக்கமுடியாமல் அனைவரும் மகிழ்ச்சியுடன் நன்றாக உண்டு, பிறகு ஓய்வெடுத்து விட்டு வழக்கை நடத்தாமல் சென்று விடுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாட்டு முறையின்போதும் நடக்கின்றது. வழக்கே நடக்கவில்லை. கடைசியாக வெள்ளலூர் நாட்டுக்கு குறிப்பிட்ட தேதி வருகின்றது.

அப்பொழுது வெள்ளலூர் நாட்டில் பெரிய முத்தணன் அம்பலகாரர் என்பவர் பெரிய அம்பலகாரராக இருந்து வந்துள்ளார். இவர் நய்க்கான் கரைப் பிரிவைச் சார்ந்தவர். அவர் இவ்வழக்கிற்கு தனது குழுவினருடன் மயில்ராயன் கோட்டையின் எல்லைக்கு வந்துள்ளார்.

வழக்கம்போல் மேளதாளம், கொம்பு, குடைசகிதம் பிடிக்கப்பட்டது. இவை யாவையும் உடனடியாக நிறுத்தச்சொல்லி, தனது குழுவினரை மட்டும் அழைத்துக்கொண்டு, மயில்ராயன் கோட்டை ஊருக்கு சென்றார். அப்போது அந்நாட்டு அம்பலகாரர் வரவேற்று, விருந்திற்கு தனது இல்லத்திற்கு அழைக்கவே, வெள்ளலூர் நாட்டு பெரிய அம்பலகாரர் அவர்கள், வழக்குச்சொல்லவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். மேளதாளம் தாரைதம்பட்டம் குடை, விருந்து எதற்கு? நாங்கள் தனிப்பட்ட முறையில் வரவில்லை என்பதை நினைவூட்டி, பொது மந்தைதிடலில் உள்ள சவுக்கைக்கு அழைத்துச் செல்ல உத்தரவிட்டார்.

அப்பொழுது அதைக்கேட்ட ஒரு மூதாட்டி இன்னும் நீதி வாழ்ந்து கொண்டிருக்கிறது. வெள்ளலூர் நாட்டால்தான் நமக்கு சரியான தீர்ப்பு வழங்க முடியும் என்று கூறினாளாம். நாட்டின் தலைமையை ஏற்றவர்கள், நல்ல நடத்தையும், நல்லொழுக்கம் சத்தியம் தவறாத நீதி நேர்மையும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். நெறிபிறழா ஆட்சியின் மூலமே மக்களின் நெஞ்சங்களை வெல்லுகின்ற தலைவனாக, அனைத்து மனங்களையும் கவர்ந்து ஞானத்தின் திருவுருவமாக வாழ முயற்சிக்க வேண்டும். இதைத் தொடர முடியாதவர்கள், இருப்பதற்கென்றே வாழ்வார்கள். ஆனால் இல்லாமல் போய்விடுவார்கள். சரித்திரத்தில் வாழ்வின் தன்மையின் பிரதிபலிப்பே வரலாறு இந்த நல்லுலகுக்கு நமது சீரிய, சிறந்த வரலாற்றை செதுக்க முயற்சிப்போம்!

சங்கமாமுனி ஆலமரம்

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - குறள்-544

குடிகளை அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்தும் மாநிலத்து வேந்தனின் அடிகளைத் தழுவி இவ்வுலகத்து வாழ்வும் நிலைபெறுவதாகும்.

காலத்தின் சுழற்சியில் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக்கள் வரும். அந்த வாய்ப்புக்களை சரிவர நல்ல காரியங்களுக்கும், நல்ல விஷயங்களுக்கும் பயன்படுத்துபவனே வெற்றியாளன். அவனே நியாயத்தை நிலை நாட்டும்போது சுயநலமற்று, நீதி, நேர்மை, சத்தியத்துடன் செயல்படுவான். தன்னை முன்னிறுத்துவதில் உண்மையுடனும் தெளிவுடனும் செயல்பட வேண்டும். தன்னைத்தானே முன்னிருத்துப்படுபவனை விட மக்களால் முன்னிருத்தப்படுபவனின் செயல் நாட்டுக்கு நன்மை பயக்கும். அடிப்படைக்குணமின்றி வேர்களை விட்டு மறந்து பிரிந்து செல்கின்ற பாதை, உண்மையில் தொடர்ந்து பலப்படுவதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு தனக்கான வாழ்க்கை இருக்கிறதா? என்பதே கேள்விக்குறி? வேரின்றி மரமில்லை. அதுபோல் பழமையின்றி புதுமையில்லை. எனவே பழமையை திரும்பிப் பார்ப்பதில் பயனில்லையென்று சொல்வதில் அர்த்தமில்லை. பழமையின் தொடர்ச்சி தான் புதுமை. பழமையை விட்ட புதுமைக்கு வாழ்வில்லை, வளர்ச்சியேது? பெருமைதான் எப்படி உண்டாகும்? சென்ற காலத்தவரிடமிருந்து நாம் எவ்விதப் பாடத்தையும் கற்றுக்கொள்ள மறந்து விட்டோமானால் வருங்கால சந்ததியினருக்கு நம்மால் என்ன பாடத்தைக் கற்பிக்க முடியும்? நம் முன்னோர்களை பற்றி நாம் தெரிந்து கொள்ளாத வரையில், நமது அறிவிலே ஒரு பகுதி பூர்த்தியடையாமலிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

'சென்ற காலத்தில் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளாமலிருப்பது அறிவில் குழந்தைப் பருவத்தில் இருந்த கொண்டிருக்கிறமாதிரி' என்றான் ஒரு அறிஞன். உண்மையான வாக்கு இது. வெள்ளலூர் நாட்டில் கிழக்குப்பகுதியில் ஒட்டி வெள்ள மலை என்ற மேட்டுப்பாங்கான பகுதி. உள்ளது. அம்மலையில் அரிய மூலிகைகள் இருந்து வந்ததாகவும் அறியப்படுகிறது. மழைக்காலங்களில் அம்மலையிலிருந்து ஓடி வரும் மூலிகைக் குணம் கொண்ட நீர் வீணாகிப் போய் விடாமல் பயன்படும் வகையில் அ.கோவில்பட்டி அருகில் உள்ள ஊருணிக்கு நீர் வரத்து வரும்படி செய்யப்பட்டது.

அந்த ஊருணி 'சேங்கை ஊருணி' என அழைக்கப்படுகிறது. நோய் நீக்கும் தன்மை கொண்டதால், அந்த நீர் சேரும், கங்கை நீர் போன்று என்பதால், ஓடி வருகின்ற என்பதால் ஓடி வந்து சேர்ந்த ஊருணிக்கு சேரும் கங்கை என்பதே நாளடைவில் சேங்கை ஊருணி என்றழைக்கப்பட்டது. ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் திருவிழாவில் மூன்றாம் நாளன்று, அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும். தலைநகர் வெள்ளலூரிலிருந்து முதல் நாள் திருவிழா அன்று புறப்பட்டு மதுப்பொட்டலில் சிறிது நேரம் தமது பக்தர்களுடன் ஓய்வெடுத்து கோட்டநத்தம்பட்டி, நயித்தான்பட்டி விலக்கு, முருகன்பட்டி, கோவில்பட்டி வழியாக தனது கோவிலுக்கு ஊர்வலமாக வந்து சேருகிறார். மறுநாள் தோரோட்டம் மூன்றாம் நாள் மஞ்சள் நீராட்டு விழா சிறப்பாக நடைபெறும். அம்மனுக்கு களைப்பு நீங்கவும்

புனிதப்படுத்தவும் இந்நீராட்டு விழா சேங்கை ஊருணியில் நடைபெறும்.

சேங்கை ஊருணி வெள்ளலூர் நாட்டிலுள்ள ஒரு கரைப்பிரிவினருக்கு சொந்தமாக இருந்து வந்தது. ஏதோ ஒரு காரணத்தால் சேங்கை ஊருணியை நாட்டுக்கு கொடுக்க விரும்பவில்லை. பின் இந்தப்பிரட்சினை நாட்டுக்கூட்டத்தில் பொது வழக்காகத் தொடுக்கப்பட்டது. பல வாய்தாக்கள் முடிந்தும் முடிவு காணப்படவில்லை. கரைகாரர்களும் ஒரு சில நிபந்தனைகள் கூறியதாகவும் தெரியவருகிறது. அச்சமயம் வெள்ளலூர் நாட்டுப்பெரிய அம்பலகாரராக திரு.அழகுஅம்பலகாரர் என்பவர் இருந்து வந்துள்ளார் அவர் பூலான் கரைப் பிரிவை சேர்ந்தவர். அவர் ஒரு சிறந்த நீதிமான், தெளிவானவர், தெய்வ நம்பிக்கை அதிகம் கொண்டவர். நமது முன்னோர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆம், நிறையக் கொண்டிருந்தார்கள் அதற்காக தன்னம்பிக்கை இழந்து விடவில்லை. விதி விதியென்று சொல்லி வந்தார்கள். ஆனால் அந்த விதியில் நம்பிக்கை வைத்து, மதியை இழந்து விடவில்லை அது மட்டுமல்ல, அந்த விதியை மதியால் வெல்லவும் செய்தார்கள், அறிஞர்கள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே, ஆபத்தான நிலைமைகளைக் கடக்கிறார்கள். விதியை நம்பிக்கொண்டிருப்பதில்லை. விதியை எப்பொழுதும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் அறம், பொருள், இன்பம், மூன்றையும் இழந்து விடுகிறார்கள். உண்மையில் தங்களுக்கு தாங்களே சத்துருக்கிளாகியிருக்கிறார்கள். எல்லாம் விதி வசம் என்று நம்பிக்கொண்டிருக்கும் மூடர்கள் அடியோடு அழிந்து விடுகிறார்கள் ‘முயற்சி திருவினையாக்கும்‘. விதியொன்பது ஆறுதலளிப்பதற்கான ஓர் உபாயமே தவிர எனக் கூறுவார்கள் சிலர். உண்மையில் இல்லவே, இல்லை என கூறுவரும் உண்டு. நிகழ்வுகளின் அடிப்படையில், இல்லை என்பது தவறான கருத்தாகும் என எண்ணத் தோன்றுகிறது. இந்த ஆராய்ச்சி நமக்குத்தேவையில்லை. இன்னும் நமது முன்னோர்கள் வானுலகைப்பார்த்துக்கொண்டு, பூவுலகில் அடி சறுக்கி விழவில்லை. பூவுலகில் கால்களை நன்றாக ஊன்ற வைத்துக்கொண்டுதான் வானுலகைப்பார்த்தார்கள். கடவுள் ராஜ்யத்தை இந்நிலவுலகில் நிலைநாட்டவே பாடுபட்டார்கள். லட்சியவாதிகளாக இருந்தனர். ஆனால் பிரத்தியட்ச வாதிகளாகவும் இருந்தார்கள்.

நமது முன்னோர்கள் இவ்வுலக வாழ்வை இழிவாக கருதியது கிடையாது. அதற்கு மாறாக மனிதன் இவ்வுலகில் நன்றாக வாழவேண்டும் என்றும், இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். இவ்வுலகில் மனிதனின் நல்வாழ்வு நடைபெறுவதற்கு எவை எவை தேவையோ? எவை எவை சாதனங்களாயிருக்கின்றவோ? அவை அனைத்தையும் பற்றியும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

பிற பகுதிகளில் மக்களின் தலைவர்களை, அக்காலத்தில் அவர்களுடைய சக்திக்கோ, அதிகாரங்களுக்கோ, எல்லையில்லை என்று நம்பினர். ஆனால் வெள்ளலூர் நாட்டில் பெரிய அம்பலகாரர் மற்றும் அம்பலகாரர்களுக்கும், அவர்களுக்குரிய சக்திகளுக்கும், அதிகாரங்களுக்கும் வரம்பு கட்டி வைத்தனர். இறுதியில் எந்த முடியாத வழக்கும், முடியும் இடமான சங்கமாமுனி குடி கொண்ட ஆலமரத்தில் கீழ் விவாதித்து, வழக்கு இறுதி தீர்ப்பு வழங்குவது என நாட்டாரால் முடிவு செய்யப்பட்டது.

தீர்ப்பு தவறாக இருந்தால் தீர்ப்பு சொன்னவரின் தலையிலேயே சங்கமாமுனி ஆலமரக் கிளை ஒடிந்து விழுந்து பாதிப்பு ஏற்படுத்தும். அல்லது அவர் உடனடியாக உடல் நிலைய பாதித்தே செல்வாக்கும்

சொல்வாக்கும் சரிந்து, சமுதாயத்திலிருந்து காணாமல் போய்விடுவார்கள் என்பது ஐதீகம். இந்த வழக்கில் ஒரு கரைப்பிரிவினருக்கு சொந்தமான சேங்கை ஊருணியை எப்படியாவது நாட்டுடமையாக்க வேண்டும். என்பதே நாட்டார்களின் முடிவு. அந்த கரைகாரர்கள் நாட்டார்கள் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பதாக தெரியவில்லை. நாட்டார்களின் நெருக்குதலுக்குத் தள்ளப்பட்டார் பெரிய அம்பலகாரராக இருந்த அழகு அம்பலகாரர். தீர்ப்பு நாளான்று பெரிய அம்பலகாரர் தன் தாயாரிடம் ஆசிபெற்று இல்லத்தை விட்டு கிளம்பும்போது தாயே திரும்பி வந்தால், உனது மகனாக, நீதிமானாக வருவேன். இல்லையேல் பெரிய அம்பலகாரராக நாட்டிற்கு தீர்ப்பு அளித்து விட்டு அங்கேயே மரணத்தை தழுவுவேன் என்று கூறுகிறார். பின் சங்கமாமுனி ஆலமரத்தினடியில் நாட்டுக்கூட்டத்தில் சேங்கை ஊருணி நாட்டுப் பொது நலன் கருதி நாட்டுடைமையாக்கப்பட்டது என தீர்ப்புச்சொன்ன பெரிய அம்பலகாரர் மேல் சங்கமாமுனி ஆலமரக் கிளை ஒடிந்த விழுந்தது. பின் தலை, கை, கால்கள் பாதிக்கப்பட்டு மரணம் சம்பவிக்கிறார். எந்த ஒன்றையும் இரும்புச்சட்டம் போட்டு இறுக்கிவிடவில்லை நமது முன்னோர்கள். நாட்டின் நன்மையை முன்னிட்டு சமுதாயத்தின் கட்டுக்கோப்பு குலையாமலிருக்கும் பொருட்டு தங்களது உயிரையும் கொடுத்துள்ளார்கள். சுயநலம் காணாத பொது நலம் எக்காலத்திலும் பேசப்படும். சில நேரம் உண்மைகள் மறைக்கப்படலாம். நல்ல எண்ணத்துடன் நல்ல காரியம் செய்தால் இறைவன் ஏற்பார். அச்செயல் வரலாற்றில் நிலை நிறுத்தப்படும். உறுதி கொள்வோம்! அவரது நீதியை நினைவுகொள்வோம்! காப்போம் கலங்கமில்லாமல்!

மக்களின் பிரதிநிதி

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல் - குறள்-644

கேட்பவரது மனப்பான்மையை அறிந்தே எந்தச் சொல்லையும் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதைவிட மேலான அறமும் பொருளும் யாதும் இல்லை.



தெய்வத்திரு.
சிவ.சு.மு.சிவராமன்அம்பலகாரர்
MLA வெள்ளலூர்

ஒருவர் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தனித்தன்மை அவசியம். சுதந்திரத்திற்குபின் வெள்ளலூர் நாட்டிற்கு பெரிய அம்பலகாரர் ஆக இருந்தவர் திரு.சிவராமனம்பலகாரர் அவர்கள் ஆவார். இவர் செம்புலி கரைப்பிரிவைச் சார்ந்தவர். மேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராய், தமிழக சட்டமன்றத்தில் MLA யாக பணியாற்றியவர்.

தமிழக அளவில் வெள்ளலூர் நாடு பிரசித்து பெயர் பெற்றதே அண்மைக்காலத்தில் இவரால் தான். வேறுயாரும் அரசியலில் பெரிய அளவில் வரவில்லை. தமிழ்நாட்டுக்குள்ளேயே வெள்ளலூர் என்ற ஒரு நாடு இருப்பதை உலகிற்கு தெரிய வைத்தவர் திரு.சிவராமனம்பலகாரர் அவர்கள். மேலூர் தொகுதி MLA என்பதை விட, வெள்ளலூர் நாட்டு பெரிய அம்பலகாரர் என்று மரியாதை கொடுத்து அழைப்பதையே அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், பொதுமக்களும் விரும்பினர். அசைக்க முடியாத தனித்தன்மை, சுயமாகச்சிந்திக்கும் துணிவு தனக்கென்று தனிப்பட்ட பாணியை வகுத்துக் கொள்ளும் திறமை, சுயத்தை இழக்காமல் இருக்கும் தைரியம். யாரோ ஒருவரின் முகமூடியாக மாறாமல் இருந்தது, இவைதான் இவருக்கு வெற்றிதேடித் தந்தவை.

உடை, நடை, செயல் என அனைத்திலும் தனித்தன்மையோடு இருந்ததால்தான் மக்கள், அவரை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர். தலையில் துண்டு அணிந்து தும்பைப்பூவைப்போல் தூய வெள்ளை உடையுடன் இறுதிவரை காட்சியளித்தார். அவர் எங்கே சென்றாலும் இந்தப்பாணியில்தான் செல்வது வழக்கம். இதன் மூலம் மக்களை எளிதில் கவர்ந்தார். ஒரு தலைவனின் மதிப்பை உயர்த்துவது என்பது, அவர்களை முழுமையாக நம்புவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில்தான் இருக்கின்றது என்பதை தெளிவாக திரு.சிவராமனம்பலகாரர் அவர்கள் புரிந்து வைத்திருந்தார். கிடைக்கும் வாய்ப்பை முழுமையாக தனது தலைமைப்பண்பை வெளிக்காட்டும் விதத்தில் அமைத்துக்கொள்வதில் தவறுவதில்லை. இதனால் இவரது உள்ளத்தில் உள்ளே ஒளிந்திருந்த தலைமைப் பண்பு வெளிக்கொணரப்பட்டு மிளிர ஆரம்பித்தது.

இவர் காலத்தில் வெள்ளலூர் நாட்டுக்கூட்டத்தில் வழக்கு ஒன்று, ஒரு புதிய கோணத்தில் முடிவு கண்டதாக சொல்வார்கள். தம்பதியினர் வழக்கு சபைக்கு வந்தது. விவாகரத்து கோரும் கணவனின். வாதம் தன் மனைவிக்கு குழந்தை இல்லை. தான் ஏற்கனவே திருமணத்துக்கு முன் வேறு ஒரு பெண்ணை விரும்பினேன். உறவினர்களின் வற்புறுத்தலால்தான் என் மனைவியை திருமணம் செய்துகொண்டேன். ஆனாலும் என்னால் காதலியை மறந்து, என் மனம் மனைவியுடன் லயித்து வாழ முடியவில்லை. எனவே எனக்கு விவாகரத்து வேண்டும் என்று கூறினார். சபையினர் இருவரையும் விசாரிக்கின்றனர். எந்த குறையும் காண இயலவில்லை. கணவன், தன் காதலியையும் அடுத்த வாய்தாவிற்கு அழைத்து வர, அவரின்றி வேறு யாரையும் மணமுடிப்பதில்லை எனத் தெளிவான வாக்குமூலம் காதலியும் சொல்கிறாள்.

பல வாய்தாக்கள் நடந்தேறுகிறது. முடிவு காண முடிவில்லை. தலைவனாய் மாற முதலில் தலைவனைப்போல் சிந்திக்க வேண்டும். தாம் எந்த மாதிரியான தலைமைப் பண்புகளைக் கொண்டு திகழ வேண்டும் என்பதைச் சிந்தித்து மனதில் உருவேற்றிடவேண்டும். அந்தச் சிந்தனை விளைவால் பெற்ற எண்ணங்களை தம்முடன் பணியாற்றும் பிற நிர்வாகிகள் புரிந்து கொள்ளும் நிலையை தமது யோசனைகளால் அவர்கள் ஈர்க்கப்படவேண்டும். இது மட்டுமல்ல நல்ல தலைவர்கள் அடுத்தவர்கள் சொல்வதை காது கொடுத்துக்கேட்கவும், மற்றவர்களிடமிருந்து நல்ல விஷயங்களை கற்றுக்கொள்ளவும் தெரிந்து வைத்திருக்கவேண்டும். இதை நன்கு உணர்ந்து கடைப்பிடித்தவர் திரு.சிவராமணம்பலகாரர் அவர்கள். இந்தக்காலக்கட்டத்தில் அச்சபையில் மலம்பட்டி திரு.மு.கிருஷ்ணன் (மூண்டவாசி கரை) அம்பலகாரர் அவர்களும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தம் பேச்சைக் கேட்பவர்கள் எந்த விதமான எதிர்பார்ப்புடன் சபையில் இருப்பார்கள் என விரல் நுனியில் வைத்திருப்பதில் கெட்டிக்காரர் எனக்கூறுவர். அவரின் பேச்சின் ஆரம்பமே என்னமாய்ப் பேசுகின்றார் என நினைக்க வைத்து கூர்ந்து கேட்கத் தூண்டுவதாய் அமைந்திருக்கும்.

தலைசிறந்த தலைவர்கள் எந்த வார்த்தையை எங்கு உபயோகப்படுத்துகின்றோம் என்பதை மிகத்தெளிவாக வைத்திருப்பார்கள். வார்த்தைகளை மிகவும் திட்டமிட்டு செதுக்கி செப்பனிட்டு தங்களுடைய பேச்சில் இணைப்பார்கள். பெரியம்பலகாரர் அவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் எடுத்துச்செல்லும் வாகனமாய் இருந்தார் என்றால் மிகையாது.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் - குறள்-648

கருத்தை நிரல்படக் கோத்து, இனிய முறையில் சொல்வதற்கு வல்லவர்களைப்பெற்றால், இவ்வுலகம் அவர்கள் ஏவியதைக் கேட்டு, விரைந்து தொழில் செய்யும்.

திருமணமான தனது காதலனை கணவனாக அடைய விரும்புகிறாள் ஒருத்தி. மனைவி தனது கணவனை விட்டுப் பிரிய முடியாது என்கிறாள். கணவனோ என் மனைவியினால் என் வாரிசு தரமுடியவில்லை. மனைவியை விவகாரத்து செய்து விட்டு, காதலியை மணக்க அனுமதி கேட்கிறான், இந்நிலையில் சபை இறுதி முடிவெடுக்கத் தள்ளப்படுகிறது.

இறுதியில் விவாகரத்து கொடுத்து, மனைவிக்கு ஜீவகாருண்யம் வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. வழக்கின் இறுதியில் வெற்றிலை வழக்குப்பணம் வைத்து சபையை வணங்குவது மரபு வெற்றிலை வழக்குப் பணமே வெற்றி வழக்குப் பணம் என்று கூறப்படுகிறது. அதை சபையில் கணவன் வைத்து வணங்க வரும்பொழுது, மனைவியானவள், தனது கணவனின் வருங்கால மனைவியிடம், அவர் இளம் பசிகாரர் பசிதாங்கமாட்டார். வெள்ளனவே சமைத்து சாப்பாடு போடு என்று வணங்கி, அழுது கொண்டே கூறினாளாம். சபையினர் இதைக்கேட்டவுடன் அதிர்ச்சியடைந்தனர். அக்கணவனும் வருங்கால மனைவியும் கூட அதிர்ச்சியடைந்தார்களாம். சபை உடனே வழக்கின் முடிவை நிறுத்தி வைத்து இப்படிப்பட்ட மனைவியை இழக்கலாமா, என்று அறிவுரைகள் கூறி சமுதாயத்திற்கு, இவளால் பெருமை சேரும். ஈகை கொண்ட இப்புண்ணியவதியுடன் வாழ்வதுதான் உனக்கும் பெருமை, உன் குலத்துக்கும் பெருமை எனக்கூறி இருவரையும் இணைத்து வைத்தார்களாம். இருந்தாலும் அம்மனைவி கணவனின் காதலியை தன் கணவனுக்கு மணமுடித்து அக்காள் தங்கைபோல் வாழ்ந்து சீரும் சிறப்பும் பெற்றார்களாம்.


தெய்வத்திரு.
மு.கிருஷ்ணன் அம்பலகாரர்,
மூண்டவாசி கரை வெ.மலம்பட்டி

வெள்ளமலை மலம்பட்டி திரு.கிருஷ்ணன் அம்பலகாரர் சிறந்த ஞானம் கொண்ட மதியூகி என்பர். இவர் காலத்தில் வெள்ளலூர் நாட்டின் நான்கு மாகாணமாக இருந்ததை, நாட்டின் நிர்வாகம் நலம் கருதி ஐந்து மாகாணமாகவும் பிரிக்கப்பட்டது. பெரிய அம்பலகாரர் சிவராமனம்பலகாரர் அவர்களை, அதிகாரம் நிறைந்த தலைவனாக திகழவும், தேவையானதை உதவவும், கிருஷ்ணன் அம்பலகாரரின் பேச்சுத்திறனே!

பணிவு எனும் பண்பு

மனிதன் உயிர் போய்விட்டால், அவனது வெற்றுடம்பு கால் காசுக்கு கூட பெறாது. இலவசமாகக்கூட இதையாரும் தொடமாட்டார்கள். வாங்க மாட்டார்கள். இருந்தாலும் இந்த உடம்பு உயிர் உள்ள போது என்ன ஆட்டம் ஆடுகிறது. செத்தபிறகு நமக்கு மதிப்பிருக்காது என்பது அனைவருக்கும் தெரியும். தெரிந்தாலும் ஆசை, அகங்காரம், வெறி, கோபம், பகை, பழி, தீர்த்தல் ஆகியவைகளில் ஆடு, ஆடு என ஆடி எவரையும், ஏன் இறைவனைக் கூட மதிப்பதில்லை.

உடலில் உயிர் இருக்கும் போதே நம்மிடம் எதுவும் இல்லை நம்மால் எதுவும் நடப்பதில்லை என்று உணர்ந்தவர்கள்தான் ஞானிகள். அத்தகையப் பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கி ஆசி பெறுவதில் என்ன தவறு இருக்கிறது? உண்மையை எவனொருவன் எடுத்துரைக்கிறானோ, அது தான் அவனுக்கு ஞானம் வருவதற்கான முதல்படி. அதுவே பணிவு எனும் உயர் பண்பை அவனிடம் அடையாளம் காட்டும்.

மனித அறிவு

மனித அறிவுக்கு எட்டாதது உலகத்தில் எதுவும் இல்லை. ஆனால் அந்த அறிவைப் பயன்படுத்த பக்குவம் தேவை. அந்தப் பக்குவத்தை அளிக்கிறது. சாஸ்திர ஞானம். அத்தகைய பக்குவம் விஷயங்களைப் பாகுபாடு செய்து பார்க்கும் பகுத்தறிவு ஏற்பட்டுவிட்டால், எதையும் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். இரண்டுடன் இரண்டைச்சேர்த்தால் நாலு என்று சொல்ல பெரும் திறமை வேண்டியதில்லை. ஆனால் எண்களின் தன்மை, எண்களின் தொகுப்பு முறை இவை தெரியவேண்டும். அரசியலும் அப்படித்தான் அதுவும் ஒரு பெரிய கணித சாஸ்திரம்தான். அதில் கணக்குப்போடுவதும், கணக்குத்தீர்ப்பதும் நமக்குள்ள சரித்திர அறிவைப் பொறுத்தவை. அப்படி விளையாடப்படும் அரசியல் சதுரங்கத்தில் கணக்கு சிறிது பிசகினால் கூட பெரிய பின்னடைவு ஏற்படும். அறிவை சரியான முறையில் பயன்படுத்தினால் எந்தச் சிக்கல்களையும் அவிழ்க்கும்!

பகலும் இரவும்

மனித அறிவு எத்தனை எத்தனை ஆச்சரியங்களையோ உருவாக்குகிறது. காலத்தின் வேகத்தைப்பற்றிய நிர்ணயமும் அந்த ஆச்சரியங்களில் ஒன்று. காலம் ஒரே சீராகத்தான் ஓடுகிறது. இத்தனை மாத்திரைகளை கொண்டது ஒரு நாழிகை. இத்தனை நாழிகைகள் கொண்டது ஒரு நாள் என்று கதிரவன் உதித்து, மறைந்து மீண்டும் உதிக்கும் வரையில் உள்ள நேரம் ஒரே ஒழுங்காகத்தான் அமைந்திருக்கிறது. யாரும் அறிய இயலாத மாபெரும் சக்தி ஒன்றால் வானவெளியில் சுழன்றும் நிலைத்தும் நிற்கும்,எண்ணிக்கையற்ற மண்டலங்களும் கூட, இந்தப்பூமண்டலத்தின் காலகதியை அதிகமாகப் பாதிக்கவில்லை. இத்தகைய நாழிகைத் தொகுப்பில் பொதுவாகப் பகலும், இரவும் சரிபாதி நேரத்தையே பெற்றிருக்கின்றன. இந்த உண்மையை வலியுறுத்தித்தான் கவிஞர் ஒருவரும் பாதியும் உறங்கிப்போகும் என்று இரவை நாளின் ஒரு பாதியாகக் கணக்கெடுத்திருக்கிறார்.

காலகதியில் பாதிநேரம் பகல், பாதிநேரம் இரவு தான். அவை வேகமாகவும் ஓடுவதில்லை. அடியோடு ஆமை நடையும் போடுவதில்லை. ஆனால் மனித அறிவு இந்த இயற்கை நிலையையும் பல சமயங்களில் மாற்றிவிடுகிறது. சிந்தனையில் சுழலும் எண்ணங்களுக்குத் தக்கபடி நேரம் வேகமாக ஓடுவது போலவும், ஆமை வேகத்தில் நகருவதும் போலவும் பிரமை மனிதனுக்கு உண்டாகிறது. சந்தித்தால் ஏற்படும் மகிழ்ச்சி, வேதனை, கவலை ஆகிய உணர்ச்சிகளுக்குத் தகுந்தபடி காலமும் வேகமாகவோ, மெதுவாகவோ நகருவதாக நினைக்கிறோம். வெறும் பிரமைதான் இருந்தாலும் அந்தப் பிரமையிலிருந்து தப்பியவர் யாரும் இல்லை.

1. நாம் வாழ வேண்டும் என்பது முக்கியமல்ல, வாழ்க்கைக்கு அப்பால் நம் பெயர் பொறிக்கப்பட

வேண்டும் அது தான் முக்கியம்.

2. நம்பிக்கை என்ற தங்கச்சாவியை எப்போதும் இதயத்தில் அணியுங்கள், புன்னகை அதை வெளிக்காட்டும்.

3. பொறுமையில்லாத மகிழ்ச்சியில்லை.

ஆசிரியர்கள்

தன்னிடம் படிக்கும் மாணவர்களை சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் மனிதனாக மாற்ற வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. மாணவனுக்கு சமூகத்தில் கிடைக்கும் வெற்றிதான் கற்பித்த ஆசிரியரின் வெற்றி. இதனால் தான் இந்தியாவில் மாதா, பிதாவுக்கு அடுத்தபடியாக இடம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் தலை விதி வகுப்பறையில் தான் தீர்மானிக்கப்படுகிறது என்பது தான் உண்மை. ஆசிரியர்களாக பணிபுரிவதை விட ஆசிரியர்களாக வாழ வேண்டும். இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. குழந்தைகளின் உலகத்தை அவர்களின் உலகத்துக்குள் சென்று பார்த்தால் மட்டுமே உணர முடியும். அதற்கு அர்ப்பணிப்பு தேவை.

மாணவர்கள் புதிது புதிதாக எதையாவது நினைத்தும் செயல்படுவார்கள். அவர்களிடமே நிறைய சிறு சிறு நல்ல விஷயங்களை ஆசிரியர்கள் கற்றுக்கொள்ளலாம். சில வேளையில் அவர்களது செயல்களால் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் ஆகிறார்கள். குழந்தைகள் காலம்தோறும் மாறக்கூடியவர்கள, பெரியவர்களுக்கான தேவைகள் ஒரே நேர்கோட்டில் எப்போதும் நிற்கும். அதனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் முழுமையாக புரிந்தால் மட்டுமே சாத்தியம்.அவர்களின் இன்றைய காலகட்ட மொழி, பழக்க வழக்கங்கள், இதை எல்லாம் கூர்ந்து கவனித்தால், புதிய புதிய இலக்கியங்கள் உருவாக சாத்தியமாகலாம்.

அடிப்படைக் கல்வி கோட்பாட்டில் நிறைய சிக்கல் உள்ளது. நவீன அடிமைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக பள்ளிகள் மாறிவிட்டன. தேர்வுக்கான மதிப்பெண் அடிப்படையில் கல்வி முறை இருப்பதால் இயந்திரமாகவே மாணவன் மாறிவிடுகிறான். இதில் ஜாதியும், மதமும் அந்த கல்வி முறை என்ற இயந்திரத்தில் பிணைக்கப்பட்ட சிறு பாகங்கள். இந்த அடிப்படை மாறினால் மாணவர்கள் ஜாதிக்கான, மதத்துக்கான கயிறுகள் கட்டி வரும் கலாச்சாரம் அனைத்தும் மாறிவிடும், பொது அறிவைக் காண முடியும்.

கார்ட்டூன் சேனல்கள், தமிழக குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் கொண்டவை அல்ல. அவை அமெரிக்க நிகழ்ச்சிகளின் மொழி பெயர்ப்புக்கள். இப்படிப்பட்ட சேனல்களால் நமது கலாச்சாரத்திற்கு எதிராகவும், வன்முறைக்கு தூண்டிவிடும் வகையில் குழந்தைகள் மனதை மாற்றுகிறது. இது அடிப்படையிலேயே சிக்கலை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமின்றி, இன்றைய வணிக உலகில் தனித்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில் குழந்தைகள் மனம் பெரிதுபட பாதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு நல்வழிச் சிறுகதைகள், நல்ல காமிக்ஸ் புத்தகங்கள் படிக்க வைத்து, பல வண்ணங்களில் ஓவியம் வரைதல் ஆகியவைகளால் மன இறுக்கங்களை குறைக்க செய்தால், குழந்தைகளின் எண்ணம் பெரும் வலுப்பெறும்.

மரணபயம்

மனித வாழ்வின் மரணபயம் சதா இருந்துகொண்டே இருக்கிறது. ஆயுட்கால அளவை ஒரே சீராக வைத்துக்கொண்டு, அல்லும் பகலும் ஓய்வின்றி இடைவிடாது இயங்கி வரும் இதய யந்திரம் எந்த வினாடியும் நின்றுவிடலாம். அப்படி அதுவாக நிற்காவிட்டாலும் அதை நிற்க வைக்கக்கூடிய வியாதிகளும் விஷப்பூச்சிகளும் நிலத்திலும் நீரிலும், காற்றிலும் ஏராளமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன.

இவை தவிர, உயிரை மாய்த்துக்கொள்ளும் வசதிகள் பலவும் ஏற்பட்டு அந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய கோணல் புத்தியும் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஆற்றிலும், குளத்திலும், கிணற்றிலும் கேணியிலும் விழுந்து பிராணனை விடப் பிரயத்தனம் செய்யும் மேதாவிகள் உண்டு. முழம் கயிற்றை நாடும் முட்டாள்களும் உண்டு. இத்தனையும் போதாதென்றாலும் மனிதன் விரோதத்தை வளர்த்துக்கொண்டு பரஸ்பர அழிவுக்கான சாதனங்களை தானாகவே சிருஷ்டித்துக் கொள்கிறான். மனித சமூகம் வளர வளர இந்த அழிவு சாதனங்களும் வளர்ந்து வருவதால், எந்த நிமிஷத்திலும் அழிந்து போகக்கூடிய நிலையிலேயே மனிதன் இருந்து வருகிறான். 'மின்னின் நிலையில் மன்னுயிராக்கைகள்' எனச்செந்தமிழ் கவிவாணர் சுட்டிக் காட்டியதும் இந்த பெரிய உண்மையைத்தான்.

இத்தனை ஆபத்துக்கள் சூழ்ந்து கிடந்தாலும், மரண சந்தர்ப்பங்கள் மண்டிக்கிடந்தாலும், வேளை வந்தாலொழிய உயிர் உடலை விட்டுப் பிரிவதில்லை. மனிதன் சிந்தனைக்கும் மீறிய மர்மத்தால் வாழ்க்கை இயக்கப்படுவதால் இஷ்டப்படி எதையும் சாதிக்க மனிதனால் முடிவதில்லை. இறப்பதும் இருப்பதும் இறைவன் திருவுளப்படியே நடந்தேறுகிறது. இதன் காரணமாகத்தான் கழுத்தில் கயிற்றைக்கட்டிக்கொண்டு தொங்கிய பிறகு, கயிறு சரியாக வேலை செய்யாமல் பலர் தப்பித் தண்டனைக்கு ஆளாகிறார்கள். கடலில் இறங்கிய பலர் அக்கம் பக்கத்திலிருப்பவர்களால் கரை சேர்க்கப்பட்டு, சாக முடியாததால் ஏற்பட்ட அவமானத்தாலும் தண்டனையாலும் தத்தளிக்கிறார்கள். விஷத்தைக் குடிப்பவர்கள் கூட விஷம் வேலை செய்யுமுன்பாகவே வைத்தியரிடம் சேர்க்கப்படுகிறார்கள் வேளை வந்தாலொழிய மனிதன் தானாகவும் சாக முடிவதில்லை. பிறராலும் அவனைச் சாகடிக்க முடிவதில்லை. இறுதிக்காலம் வராத வரையில் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் சிக்கினாலும் மனிதன் மயிரிழையில் தப்புகிறான். இது இயற்கையின் நியதி.

மாயை உலகம்

கடவுளின் மாயை அற்புதமானது. உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் தோற்றமளிக்கச்செய்ய வல்லது. தினசரி கணக்கற்ற மக்கள் கண்ணுக்கெதிரே மடிந்து மயானம் செல்வதைக்கண்டாலும், தன் வாழ்வு மட்டும் நிரந்தரம் என நினைத்து, மனிதன் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை போன்ற பேராசை ஆட்கொண்டு திண்டாடக்கூடிய மனோ நிலையை உருவாக்கக்கூடிய மாயையின் வலிமையை வர்ணிக்கமுடியாது.

மனிதனுடைய கண்ணுக்கும், உண்மைக்கும் இடையே சட்டென்று திரை போடக்கூடிய இப்பேர்பட்ட மாயையை பெரியவர்கள் பெண் இனத்தில் சேர்ந்திருக்கிறார்கள், எந்த

உண்மையையும் நிமிஷ நேரத்தில் மறைத்து ஆண்கள் கண்ணில் மண்ணைப்போடுவதும் திறமை பெண்களுக்கு உண்டு என்பது பெரியோர்களின் சித்தாந்தம். எப்பேர்பட்ட அசந்தர்ப்பமான நிலையிலிருந்து பெண்கள் சுலபமாகத்தங்களை விடுவித்துக்கொண்டு ஆண்களை தங்கள நிரந்தர அடிமைகளாக வைத்துக்கொள்கிறார்கள்.

குடும்பம் (மனைவியின் பங்கு)

யாருக்குத்தான் பிரட்சினைகள் இல்லை? படைத்தவனுக்கே ஆயிரம் பிரட்சனைகள்! இதில் கிளைப்பாறும் நமக்குப்பிரட்சனைகள் இருக்காதா? எப்போது உறவுகளையும், உணர்வுகளையும் சங்கீதமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

சங்கீதம் தான் சந்தோசத்தைக்கொடுக்கும், சந்தேகம் எல்லோருக்கும் தோசமாக இருக்கும்.

நல்ல கருத்துக்களை கூறினாலும், அதை ஏற்று கொண்டு அதன்படி நடப்பதாலும், எதையும் விட்டுக்கொடுக்கலாம். உனக்கு கீழே உள்ளவர் கோடி என்பதை எண்ணி நிம்மதி நாடு, மயக்கமா கலக்கமா என்பது தான் நினைவுக்கு வருகிறது. புன்னகை, சந்தோசம், புரிதல், பக்குவம், ஏற்புடைமை இருந்தாலே போதும் வாழ்க்கையில் எல்லாம் கிட்டும் விட்டுக் கொடுப்பவர்கள் கொட்டுப்போவதில்லை. கூட்டுக்குடும்பமானது ஒரு அழகான மணமிக்க மல்லிகை சரம் போன்றது. அந்த மல்லிகை சரத்தை எப்படி ஒரு நூலானது ஒவ்வொரு உதிரிப்பூக்களையும் கோர்த்து வைத்து மணத்துடன் அழகு சேர்ப்பதும் எப்படியோ, அப்படிதான் ஒரு பெண் ஆனவள் அந்த நூலைப் போலத்தான்... உதிரிப்பூக்களுக்கும் மணம் உண்டு, ஆனால் மல்லிகைச் சரம்தான் மாலையாகிறது.

மல்லிகைச்சரம் கோர்க்கும்போது, எந்தெந்த உதிரியை எங்கு வைத்தால் அதன் அழகும் மணமும் வாடாமல் இருக்குமோ, அந்தமாதிரிதான் நூல் போன்ற பெண் குடும்பத்தை நல்ல பாங்குடனும் பண்பாட்டுடனும் நடத்தி வெற்றி பெறுகிறாள். வற்றாத அன்பும் கருணையுமே கடவுளை நினைவுபடுத்துபவை. அது வடிவமற்றது. உருவமற்றது. அப்படிப்பட்ட அன்பையும் கருணையையும் அள்ளிப் பருக முடியாது. ஆத்மார்த்தத்துடன் அனுபவிக்க வேண்டும். மன நிறைவு பெறவேண்டும்.

மனிதனின் வரலாற்றில் பதவி மோகம் மனிதனின் மதியை மழுங்கடிச்சு, அவனை வீழ்ச்சியடையச் செய்கிறது. குழப்பத்திலிருக்கும்போது எடுக்கப்படும் அவசர முடிவு விபரீதத்தில் முடியும்.

ஆற்றில் போட்டாலும் அளந்து தான்

நமது வாழ்க்கையை அளவுகள் பற்றியதுதான் தாளத்தின் அளவு தப்பிவிட்டால், இசை கர்ண கடூரமாகிவிடும். சமையலில் அளவு இல்லையென்றால், வாயில் வைக்க விளங்காது. ஒரு அழகான தமிழ் செய்யுளில் ஒரு வார்த்தை கூட இருந்தாலும், குறைந்து இருந்தாலும் அழகு கெட்டுவிடும். ‘ஆற்றில் போட்டாலும் அளந்து போடு‘ எனும் பழமொழிக்கு இணையாக வேறு மொழிகளில், பழமொழி இருப்பதாக தெரியவில்லை. அளவோடு பேசினால்தான் எல்லோருக்கும் பிடிக்கும். அறிவுரை சொல்ல வேண்டுமானாலும் நாலேவார்த்தையில் சொல்லி விட வேண்டும். நாளெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் ஒரு வார்த்தை கூட மண்டையில் ஏறாமல் போய்விடும்.

பக்கம் பக்கமாக அறிவுரை சொல்லிய நூல்கள் இன்று பழக்கத்தில் இல்லை. எவ்வளவு பெரிய விஷயம் இருந்தாலும் ஒன்றே முக்கால் அடியில் நச் என சொல்லும் திருக்குறள், காலம் காலமாக பொதுமறையாக இருந்து வருகிறது.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றக் கெடும் - குறள்

பொருளின் அளவறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை,பல வளமும் இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து விடும். பெண்கள் சாம்பாருக்கு உப்பு போடுவதைப்பார்த்திருக்கிறீர்களா? தங்கத்தை நிறுப்பது போல் நிறுத்துப்போடுவார்கள்.

வாழ்க்கை

வாழ்க்கை, ஆற்றுப்பிரவாகத்தைப்போன்றது. உத்தேசப்படி அது ஓட முடிவதில்லை. சின்னஞ்சிறு அருவியாக பயணத்தைத் துவங்கும் ஆறு, அது அடைய உத்தேசிக்கும் இடம் ஆழ்கடல்தான். ஆனால் நேராக ஒரே சீராக ஓடிச்சென்று கடலில் கலந்து விடுவதில்லை. இடையே அதன் பாதையை தடைசெய்து திசை மாற்றித் திருப்பி விடும். மலைப்பாறைகள் எத்தனை? அதன் நீருக்குச் சுவையும், குணமும் ஊட்டும், மூலிகைகள் எத்தனை? அதன் நீரைப் பாழாக அடிக்கும் துவர் நிலங்கள் எத்தனை? இப்படியாக இத்தனையிலும் தட்டுத்தடுமாறி லட்சியத்தை எட்டு முன், இல்லாத கஷ்டமெல்லாம் பட்டுத் திசை மாறி மாறிப் பல முறை வளைந்து செல்லும் ஆற்றின் பிரவாகத்தைப் போன்றதுதான் மனித வாழ்க்கை. மனித வாழ்க்கையிலும் எத்தனையோ தடங்கல்கள் உண்டு, தெரியாத திருப்பங்களும் உண்டு. எந்த இடத்தில் நமது வாழ்க்கை எப்படித்திருப்பப்படும் என்பதை நாம் அறியும் முன்பே நாம் வேறொரு மார்க்கத்தில் அடித்துச் செல்லப்படுவோம். அருவியைத் திருப்ப ஆங்காங்கு கிடக்கும் சின்னஞ்சிறு பாறைகளைப்போல் எத்தனையோ இடைஞ்சல்களை இறைவன் வாழ்க்கைப்பாதையிலும் அமைந்திருக்கிறான்.

அவையெல்லாம் பௌதிகப் பொருட்கள் அல்லாதலால், புறக்கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் அத்தகைய இடைஞ்சல்கள் ஏற்படும்போது உள்ளம் உணர்கிறது.

அப்படி உணரும்போது ஆற்றின் படிப்பினையை உணர்ந்து கொண்டு, சற்று வளைந்து கொடுத்துச்செல்லும் மனிதன், லட்சிய வெற்றி கிடைகிறான். அப்படி வளைந்து கொடுக்காத மனிதன், வறண்ட நிலத்தில் பாய்ந்த நீரைப்போல உள்ளே இழுக்கப்பட்டு இருந்த சுவடே தெரியாமல் மறைந்து போகிறான். அறிவாளியான மனிதர்கள் வளைந்து கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். மனிதனின் வரலாற்றில் பதவி மோகம் மனிதனின் மதியை மழுங்கி அவனை வீழ்ச்சியடையச் செய்கிறது. குழப்பத்திலிருக்கும் போது எடுக்கப்படும் அவசர முடிவு விபரீதத்தில் முடியும்.

சந்தர்ப்பங்கள் லேசாக மாறுபட்டாலும் மனிதர்களின் வார்த்தைகளின் எத்தனை மாறுபட்ட அர்த்தங்கள் தொனிக்கின்றன. இது மனிதனின் விசித்திரகுணம். உணர்ச்சி, நெறி, அறிவு இம்மூ ன்றையும் விளக்கின் சுடர், திரி, எண்ணெய் ஆகிய மூன்றுக்கும் ஒப்பிடலாம். எண்ணெய் போதிய அளவு இருக்கும் வரையில் தான் சுடர் விளக்கின் முகப்பிலேயே அடங்கி நின்று தன் பணியை

ஒழுங்காகச்செய்கிறது. உணர்ச்சிகளின் தன்மையும் இப்படித்தான். அறிவாகிற எண்ணெய் நெறியாகிற திரியின் ஊடே பாய்ந்து நிற்கும் வரையில் தான் உணர்ச்சியாகிற சுடரும் கட்டுக்கடங்கி நிற்கிறது. மனித எண்ண விளக்கில் உணர்ச்சி சுடர் வற்றிவிட்டால் உணர்ச்சி சுடர் பெரிதாகக் கிளம்பி கட்டுமீறிப் பின் நோக்கிப்பாய்ந்து படர்ந்து எரிந்து நெறியென்னும் திரியைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடுகிறது. ஆகவே எந்த சந்தர்ப்பத்திலும் நெறியுள்ளவர்கள் அறிவுப் பக்கமாகத் திரும்பி அதை அடியோடு வற்றவிடாமல் பார்த்துக்கொள்கிறார்கள். உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பவன் அறிவை அடியோடு வற்ற விட்டு நெறியையும் உணர்ச்சிகளுக்குப் பலி கொடுத்து விடுகிறான்.

இந்தக்காரணத்தினால் தான் பழைய நீதி நூல்களில் நெறியுள்ளவர்களைத் தூங்காவிளக்குக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். மேலிருந்து சதா சர்வகாலம் எண்ணெய் பாய்ந்து கொண்டிருக்கும் தூங்காவிளக்கை ப்போலவே நெறியுள்ளவர்களும் எப்பேர்ப்பட்ட இக்கட்டான சமயத்திலும் அறிவைப் பயன்படுத்தி நெறியைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இது பெரிய விசித்திரம்தான். ஆனால் அத்தகைய விசித்திரங்கள் மனித சரித்திரத்தில் எண்ணற்ற முறைகள் ஏற்பட்டிருக்கின்றன.

திருவடி நிழல்

இறைவன் திருவடி நிழலை அடைய விரும்புவதாக அநேகம் பேர் சொல்கிறார்கள். வாழ்க்கையில் அலுப்புத்தட்டும் சமயங்களில், ஆண்டவா என்னை ஏன் இன்னும் இந்த உலகத்தில் வைத்திருக்கிறாய்? உன் திருவடிகளில் சேர்த்துக்கொள்ளக்கூடாதா? என்று இறைஞ்சுகிறார்கள்.

ஆண்டவன் உண்மையாகவே, அவர்களிடம் கருணை கூர்ந்து அவர்களைத் தன்னிடம் சேர்த்துக் கொள்ளப் பிரியப்பட்டு மரணத்துக்கு காரணமாக உடல் உபாதையைக் கொடுக்க ஆரம்பித்தானால் வேண்டுகோளின் தன்மை அடியோடு மாறிவிடுகிறது. கொஞ்சம் உடல்நலம் மெலிந்து தள்ளாட்டம் ஏற்பட்டு, இறைவன் திருவடியின் கட்டைவிரல் கண்ணுக்குத் தெரிந்தவுடனேயே, தங்களை எப்படியாவது அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றி விட இறைவனை வேண்டுகிறார்கள்.

இறைவன் திருவடிகளிலிருந்து தப்பிச் சில காலமாவது இந்த உலகில் வசிப்பவதற்காக அவனிடமே சரணடைகிறார்கள். இறைவனுக்கு அபிசேகம், அர்ச்சனைகள் நடக்கின்றன. தாங்கள் தப்புவதற்காக தாயையும் தாரத்தையும் விரதமிருக்கச் சொல்பவர்களுமுண்டு. ஏனென்றால் இறைவன் திருவடிக்கு மனிதன் ஆசைப்படுவதெல்லாம் வெறும் பாசாங்கே தவிர, வேறில்லை, யாரும் மரணத்தை விரும்புவதில்லை.

இந்த உலகம் வெறும் நரகம் என்று போதனை செய்பவர்களும், கேட்பவர்களும், சகலபேருமே இந்த நரகத்தில் எத்தனை நாள் வாழ முடியுமோ, அத்தனை நாள் எப்படியாவது வாழ ஆசைப்படுகிறார்கள். மனிதனுக்கு உயிர் வெல்லம். அதைக்கொடுத்த ஆண்டவனிடம் திரும்பிக்கொடுக்க எந்த மனிதனுக்கும் இஷ்டம் கிடையாது. இது சம்பந்தப்பட்ட வரையில் சாதாரண மனிதனும் துறவியும் ஒரே ரகம்தான்.

இந்த உலக வாழ்க்கையை வெறுத்து துறவறத்தை மேற்கொள்பவர்கள் கூட மடங்கள் சிஷ்யர்கள் போன்ற உலக பந்தங்களை அமைத்துக்கொண்டு சுகமாகவே வாழ ஆசைப்படுகிறார்கள். மரணபயம்

வரும்போது எப்பேற்பட்ட துறவியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஆசைப்பட்டு, அதற்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராவது இயற்கை. அந்த இயற்கைக்கு சாதாரண மனிதனும் முற்றும் துறந்த முனிவரும் மாறுபட்டவரல்ல.

நம்பிக்கைகள் வீணாவதில்லை

1871-ல் நாட்டில் ஐந்து வருடம் மழையின்மையால், கடுமையான வறட்சி ஏற்பட்டு, கடுமையான பஞ்சம் தலைவிரித்து ஆடியது. அப்போது உழவன் மழை பெய்யும் என்று நம்பிக்கையில் உருவான கவிதை.

நெல்லு விளைவிக்க நீர் ஆதாரம் இல்லை,
எள்ளு விதைத்தாவது பிழைத்து விடுவோம்
என என் மைந்தன் நினைக்கின்றான்,
இறைவனிடம் கையேந்துகிறான் மழைக்காக

தெற்கே சிறுமேகம் கருமேகமாக திரள
வடக்கே சிறுகாற்றாக அழைத்து வரஇங்கே,
வானத்து மின்னலும், இடியும் முழங்கி வர
சிறுசிறு நீர்த்திவலைகள் திசைமாறி விழ

வைத்த கண்ணை எடுக்காமல் பார்க்கிற உழவன்
எலிப்புகளுக்கையுடன் எள்ளும் காய்ந்திடுமோ?
எண்ணமுடன் ஏங்கினான் ஏழை மகன்
மழையே மண்ணில் விழ உனக்கென்ன பயமோ?
பட்டென விழுந்தது சடவென பெய்தது
சற்றே மகிழ்வுடன் சரியாக விழுந்தது
பத்து நிமிடம் விழுந்து பத்தாமல் சென்றது
இருந்தாலும் அவன் நம்பிக்கை வீணாவதில்லை!

முற்றத்தில் விழும்நீர் முற்றிலும் வீணாகாமல்,
அண்டா குண்டா எடுத்துவைத்து அதைப்பிடித்து
ஆனாலும் பத்தவில்லை அவையாவும் நிரம்பவில்லை
இருந்தாலும் நம்பிக்கை வீணாவதில்லை!...

- என நம்பிக்கையுடன் வாழுகிறோம்

அகக்கண்

புறக்கண் மூடும்போது அகக்கண் விழித்துக்கொள்கிறது. அந்த கண் நம் சித்தத்திற்கு முன்னே எழும்பும் சித்திரங்கள் பல ஊனக்கண்ணால் பார்க்க முடியாத கோளங்களையும் பிண்டங்களையும் சிந்தனைப்பீடத்தில் கொண்டு வந்து நிறுத்தும் சக்தி அகக் கண்ணுக்கு உண்டு. புறக்கண் விழிப்பினால் உலக மாயையில் அறிவு சிக்கி விடுவதால், தெளிவாகச் சிந்திக்கும் சக்தியைச் சித்தம் இழந்து விடுகிறது. ஆனால் புறக்கண் மூடியதும் ஒரு விநாடி சிந்தனையில் இருள் சூழ்ந்து பிறகு அகக்கண் விழித்து அறிவுப்பொறிகளையும் ஒளிகளையும் வீசும்போது சிந்தனையில் எத்தனையோ மின்னல்கள், எத்தனை எத்தனையோ உண்மைகள், எத்தனை எத்தனையோ இந்திர ஜாலங்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைந்து எழுந்து தாண்டவமாடுகின்றன. ஆகையால் உண்மையை அறியக் கண்களை மூடி தியானத்தில் உட்கார் என்று அறிஞர்கள் பணித்தார்கள். அந்த உபதேசத்தில் தான் எத்தனை உண்மை. உயிர் நிலையற்றது ஆனால் புகழ் நிலையானது. ஒன்றை விரும்புவன் இன்னொன்றின் மீது அதிகம் பற்றுதல் வைக்கக்கூடாது. அபாயம் எங்கில்லை? மனிதனைக் குவலயத்தில் சூழ்ந்திருப்பது பூராவும் அபாயங்களே. அபாயத்திற்கு பயந்தால் வாழ்வில் நிலை கொள்ள முடியாது.

நஞ்சு

எரிமலை வெடிக்கும் முன் தீப்பிழம்புகளைக் கக்கி சில நாட்கள் எச்சரிக்கை செய்யும் அதிலிருந்து தப்பியோட மக்களுக்கு சில சமயங்களில் அவகாசமிருக்கும் தப்ப முயற்சியாவது செய்யலாம். ஆனால், புல்லில் மறைந்து கிடக்கும் பாம்பு, நாம் அயர்ந்திருக்கும்போது நம் பக்கத்திலேயே, நமக்குத் தெரியாமலேயே வளைந்து வளைந்து வந்து கடித்து விடும். நாம் வளர்க்கும் புல்லிலேயே வாழும். நாம் பால் ஊற்றும் புற்றிலேயே வாழும். அந்தப் பாலுக்குப் பதில் நமக்கு நஞ்சையே அளிக்கிறது. பால் வெண்மையானது. வெள்ளை மனத்துடன் நாம் பிறருக்கு அளிக்கும் நம்பிக்கையும் அப்பேற்பட்டது தான். அதற்குப்பதில் பலர் நம் வாழ்க்கையில் நஞ்சைக் கலக்குகிறார்கள்.

தாயின் கைகள்

உலகத்திலேயே இரண்டு கைகளுக்குத்தான் அமர சக்தி உண்டு. ஒன்று பத்து மாதகாலம் தாங்கிய தாயின் ரத்தம் ஓடும் கை. இன்னொன்று கட்டி வாழும் மனையாளின் கை. ஆண் மகன் நோயுற்ற காலங்களில் இந்தக் கைகள் பட்ட மாத்திரத்தில் பெரும் சாந்தியுண்டு. ஆனால் அந்தக் கைகளின் அமரத்துவம் சாந்தியுண்டு. அந்தக் கைகளின் அமரத்துவம், சாந்தி தரும் தன்மை எத்தனை பெரிது? என்பதை நீண்ட காலம் கழித்து தன் தாயார் என்பதை அறியும் நேரத்தில், தாயின் கைகள் தோள்களில் பட்டு பாசத்துடன் அணைக்கும் போது உடல் பூராவும், ஆனந்த வெள்ளம் பாய்ந்து கரை புரண்டோடும்.

அம்மா என்ற சொல்லைக்கேட்க எத்தனை ஆண்டுகளாக காத்திருக்கும் துடித்துக் கொண்டிருக்கும் தாய். அம்மா என்றால் மூன்றெழுத்துக்கள் தான். ஆனால் அவற்றில் அத்தனை பெரிய அமுத வெள்ளமாதோய்ந்து கிடக்க முடியும்? பிரணவ சப்தத்திலும் மூன்றே எழுத்துக்கள்தான் இருக்கின்றன. அ.உ.ம் என்ற இந்த எழுத்துக்கள்தான் காலத்துக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட ஓம் என்ற பிரணவ சப்தமாக மாறியிருக்கின்றன. அலையெழும் கடலின் இரைச்சலில் சூறாவளியின் கூச்சலில்

பிரணவ சப்தத்தை கேட்கிறோம். ஆனால், அதைவிட சிறந்த மந்திரச் சொல்லான அம்மா எனும் மூன்று எழுத்துக்களில் அடிக்கும் தென்றலில்தான் எத்தனை எத்தனை இனிமை.

எத்தனையோ பேர் ஒரு தாயை அம்மா என்று அழைத்தாலும், தான் பெற்ற மகன் நீண்ட நாள் கழித்து அழைக்கும் போது அந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. தாயின் ஆனந்தக்கண்ணீர் புனித நீரை விட சக்தியானது. எத்தனையோ பேர் ஒருவனை மகனே, என்று அழைத்தாலும், அந்த அழைப்புக்கள் வேறு தாயின் கர்ப்பகத்திலிருந்து கிளம்பும் ஆசைக்குரல் வேறு. அது எத்தனை இனிமையானது? என்று மகனால்தான் அறியமுடியும்.

அம்மா என்ற சொல் பிறர் சொல்லி அறிய வேண்டிய உறவா? சூரியனுக்கும் தாமரைக்கும் உள்ள உறவை பிறரா சொல்லிக்கொடுக்கிறார்கள்? சந்திரனுக்கும் அல்லிக்கும் உறவை விளக்க ஆசிரியர் ஒருவர் தேவையா? மாட்டுக்கும் கன்றுக்கும் உறவை விளக்க உபாத்தியாயரை அமர்த்துகிறார்களா? இயற்கையே இந்த உறவைக்கற்பிக்கிறது. அந்த இயற்கை மனிதனுக்கு மட்டும் கற்பிப்பதில்லை. உலக ஜீவராசிகள் அனைத்துக்கும் கற்பிக்கிறது.

வதந்தி

ரகசியத்தில் அறிவதில், மனிதனுக்குள்ள ஆசை ஒரு தீப்பொறி. ஊகம் என்ற காற்றினால் அது வீசப்படும்போது வதந்தி என்ற பெயரால் சமூகத்தில் வேகமாகப் பரவிவிடுகிறது. அப்படிப்பரவும்போது, அது யார் நலன்களைச் சுடும், யார் யாரை விட்டுவைக்கும் என்பதை நிர்ணயிக்கமுடியாது. எப்பேர்ப்பட்ட திறமை சாலியையும் திணற வைக்கும் நிலையை வதந்தி படைத்து விடுகிறது.

விதி

வாழ்க்கையே பூமியின் மண்ணைப்போல், ஓர் இடத்திலிருந்து மண்ணை வெட்டினால் இன்னோர் இடத்தில்தானே அதைப்போட வேண்டும். விதிவசத்தால் பொருட்கள் அழிவதில்லை, ஓர் இடத்திலிருந்து அகன்றால் இன்னோர் இடத்தில் குவியத்தான் செய்யும். அழிவு என்று நாம் கருதுவதற்கு நம் அறிவீனமே காரணம். ஆண்டவன் படைப்பில் எதுவுமே அழிவதில்லை. உணர்ச்சிகளுக்கு கூட இந்த விதிதான்! ஒருவன் மகிழ்ச்சி இன்னொருவனுக்குத் துன்பம். ஒருவன் வெற்றி இன்னொருவனுக்குத் தோல்வி. இந்த நியதியிலிருந்து யாரும் தப்பமுடியாது.

உலகம் மிகப் பெரியது என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் உண்மையில் மிகச் சிறியது. ஏனென்றால் நம்மையும் அறியாமலே நாம் எண்ணாத இடங்களுக்குப் போகிறோம். மனத்தாலும் சிந்திக்காத மனிதர்களைச் சந்திக்கிறோம். சொப்பனத்திலும் எழாத நிகழ்ச்சிகளில் சிக்கிக்கொள்கிறோம். ஆகவே, ஆண்டவன் படைப்பில் இந்தப் பரந்த உலகமே மிகச்சிறிய சிகரம் தான். அதன் நியதியால் வாழ்க்கையின் அலைகளில் எடுத்து வீசப்படும் நாம் இந்தக்கிரகத்தின் எந்தப்பாகத்தையும் அடைகிறோம். எதிர்பாராத விசித்திரச் சம்பவங்களில் அகப்பட்டுக்கொள்கிறோம். அப்படி அகப்பட்டுக்கொள்ளும் போது ஆயுளில் அறியாத முக்கிய உண்மைகளையும் அறிகிறோம். சில நேரங்களில் விதியின் விளையாட்டால் மனித எண்ணங்களுக்கு எத்தனை சுலபத்தில் ஏமாற்றமும் கிடைக்கிறது என்று எண்ணிப்பார்த்தால் வியப்பாகவே இருக்கிறது.

விதி என்னும் ராஜபாட்டையில் வாழ்வெனும் தேர் ஓடுகிறது. கர்மவினைப் பிரகாரம் தேர் நன்றாகவும் ஓடும். சில நேரங்களில் தடம் புரளத்தான் செய்யும். மதியின் வலிமையால் சில நேரங்களில் தப்பிக்கலாம். ஒரு செயலுக்கும் மற்றொரு செயலுக்கும் சங்கிலித்தொடர் உண்டு. இறுதியில் அந்த செயல் இறுதி வடிவம் பெறும். அதில் நல்லவை கெட்டவை அவனவன் கர்மவினையைப் பொறுத்தே அமையும்.

விநாயகர்

விநாயகர் மட்டுமே அனைவரும் அணுகும் விதத்தில் எளியராக இருக்கிறார். மற்ற தெய்வங்களை தரிசிக்க வேண்டுமென்றால் காலநேரம் பார்த்து நீராடிவிட்டு பூஜைக்குரிய சாமான்கள் வாங்கிக்கொண்டு கோயிலுக்கு போகவேண்டியிருக்கும், அதுவும் பிரகாரத்தைச்சுற்றிக்கொண்டு சென்றாலும் சுவாமிக்குப் பக்கத்தில் செல்ல முடியாது. கொஞ்சம் தள்ளியே நிற்கும்படி இருக்கும். ஆனால் விநாயகர் தன்னை நாடி வரும் யாரையும் மறுப்பதில்லை. சாலை ஓரத்திலோ மரத்தடியிலோ வீற்றிருந்து பள்ளிக்கூடம், அலுவலகம், கடைத்தெரு என்று போகிறவழியிலேயே நிமிர்ந்து பார்த்தால் போதும் என மகிழ்ச்சியோடு காட்சிதருவார். இவருக்கு தோப்புக்கரணம் போடுவது சிறந்த உடற்பயிற்சி என்று விஞ்ஞானம் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. விநாயகர் முழு முதற்கடவுள் அவரே. சங்கடங்களையும் தடைகளையும் நீக்க வல்லவர். எந்த நல்ல செயல்பாட்டையும் தொடங்கும் முன் அவரை வணங்கிய பின்னரே தொடங்கவேண்டும். இதன் மூலம் அந்தச் செயலை செய்தற்குரிய வல்லமை மனோதிட உண்டாகும். யானை முகத்தவனாகிய விநாயகப்பெருமான் தன்னைச் சரணடைந்தவர்களுக்கு நல்ல புத்தியை வழங்குவதோடு எங்கும், எதிலும் வெற்றியை வழங்கி அருள்புரிவார்.

சிதறு தேங்காய் உடைக்கிற வழக்கம் தமிழகத்திற்கே உரிய தனி வழிபாட்டு முறை. விநாயகர் வழிபாட்டு மிகவும் பிரசித்தமாக இருக்கிறது. அவருக்கு சிதறு தேங்காய் உடைக்கும் போது, சிதறுகிற துண்டுகளை எடுக்கும் உரிமை யாருக்கு? என்று கேட்டால் குழந்தைகளுக்குத்தான். எந்தக் கோவிலிலும், அந்த ஸ்தலத்திற்குரிய விநாயகர் (தல விநாயகர்) நிருதி மூலை என்னும் தென்மேற்கில் வீற்றிருப்பார். தல விநாயகருக்கே அன்றாட பூஜையில் முதன்மை வழங்கப்படும், ராஜ கோபுரத்தில் இருப்பவர் கோபுர விநாயகர் என்றும், கொடிமரத்தில் வீற்றிருப்பவர் கொடிமரத்துப் பிள்ளையார், என்றும் சிவன் சந்நதியில் வலப்புறம் இருப்பவர் துவார விநாயகர் எனவும், கோயிலின் தென்கிழக்கில் உள்ளவர் அக்னி விநாயகர், தென்மேற்கில் கன்னிமூலை கணபதி, வட மேற்கில் கூரண கணபதி, வட கிழக்கில் ஈசான்ய கணபதி என அழைக்கப்பட்டு அருள் புரிகிறார்கள்.

விநாயகர் வழிபாட்டில் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. பக்தரை எதிர்பார்த்து வீதியெங்கும் வீற்றிருப்பார். எளிய அருகம்புல் எருக்கம் பூவைச் சாத்தி வழிபட்டால் கூட போதும். பரம சந்தோசத்துடன் அருளை வாரி வழங்கி விடுவார். யானை வடிவம் கொண்டவர் விநாயகர். இவர் எலி வகையைச் சேர்ந்த மூஞ்சிறுவை வாகனமாகக்கொண்டவர். பெரிய யானையை சிறிய எலி ஏற்றிச் செல்வது என்பது ஏன்? இதன் தத்துவம் தான் என்ன? என்பது நம் மனதில் எழும் கேள்வி,

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு வாகனம் உண்டு. அந்த வாகனம் அந்தத் தெய்வத்தின் தனித் தன்மையை விளக்குகிறது. விநாயகரை மூஞ்சிறு வாகனன் என்று சொல்லுகிறோம். ஒரு எலி

மீது யானை ஏறிச்செல்வது என்பது நகைச்சுவைக்குரிய விஷயமாகத் தோன்றலாம். யானையின் காலடியின் ஒரு துளி பகுதி பட்டாலே எலி நசுங்கிப்போகும். ஆனால் அந்த எலியே ஒரு யானையைத் தாங்கி செல்கிறது. என்றால் அதற்குள் ஒரு தத்துவம் இருக்கிறது. மனிதனுக்கு கஷ்டம் வரத்தான் செய்யும். அது உயிரே போகுமளவு தாங்க முடியாத துன்பத்தைக் கொடுக்கும். அந்த சமயத்தில் அதைப் பொறுமையுடன் ஏற்க வேண்டும். அந்தச் சோதனையிலிருந்து மீள முயற்சிக்க வேண்டும் என்பதே இதன் தத்துவம்.

ஆத்மாவைப்பற்றிய உண்மை ஒன்று உண்டு. பெரியதில் எல்லாம் பெரியது ஆத்மா. அதேபோல் சிறியதில் எல்லாம் சிறியதும் அதுவே. ஜீவாத்மாக்கள் உடலில் இயங்கும்போது சிறிய ஆத்மா என்றும் பெரிய உடலில் இயங்குவது பேராத்மா என்று எண்ணக்கூடாது. பெரிது வடிவங்களுக்குள் அது கட்டுப்படுவதில்லை. அதாவது அதற்கு ஒரு அளவைக்காட்டமுடியாது. ஆத்மா பிரிந்து விட்டால், உடல் பயனற்று சாய்ந்து விடுகிறது.

நம் கண்முன் காணும் பொருட்களுக்கு எடை அளவு உண்டு. ஆனால் அறிவுப் பொருள்களுக்கு இப்படி அளவீடு தரமுடியாது. அறிவு வளர்வதால் மூளைக்கோ, உடலுக்கோ பாரம் ஏற்படாது. அது போல் சிறியவர்களான நாம் இறைவனைக் குறித்த பேரறிவை வளர்த்து, அவனை அடைய வேண்டும் என்பதை இந்த வாகனத்தத்துவம் உணர்த்துகிறது. அதாவது எலி என்பது மனிதன், யானை என்பது அறிவு சிறியவனான மனிதன் மிகப்பெரிய அறிவைப் பெறவேண்டும் என்பதை மூஷிக வாகனன் நமக்கு எடுத்துச் சொல்கிறார்.

மழைக்காலத்தை வரவேற்க, நீர் நிலை தூர்வாரப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் ஆவணி மாதத்தில் வரும் விநாயகசதுர்த்தியை முன்னிட்டு, மழை வருவதற்கு முன், நீர் நிலைகளான கண்மாய், குளம் போன்ற இடங்களில் எடுக்கப்படும் களிமண்ணால் செய்யப்படும் விநாயகர் உருவங்கள் வணங்கப்பட்டன. இந்தக்களிமண் எடுப்பதால் கிராமப்புற நீர் நிலைகளில் இயல்பான தூர் வாருதலும் நடந்து வந்துள்ளது. விநாயகர் சதுர்த்தி விழா முடிந்த பின், களி மண்ணால் செய்த சிலைகளை இந்த நீர்நிலைகளில் கரைப்பார்கள். சிறுவர்கள் நன்றாக மிதித்து களிமண்ணை கரைப்பார்கள். மழை பெய்த பொழுது மழை நீருடன் ஓடி வந்த மணல் இந்த களி மண்ணுடன் கலந்து களி மண்ணாகி நீரின் அடியில் தங்கிவிடுவதால், நீர் நிலைகளில் இருக்கும் நீர் சீக்கிரம் மண்ணுக்குள் கீழ் செல்லாமலும் உறியப்படாமலும் நீண்ட நாள் நீர் நிலைகளில் தேங்கும் எண்ணத்தில் கிராம மக்கள் அறிவியல் பூர்வமாக வணங்கி செயல்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்தச் செயல் சுற்றுச்சூழல் பாகாப்புக்கும் காரணமாக அமைந்து வருகிறது என்றால் மிகையாகாது.

நம் முன்னோரைப்போல் விபரமறிந்த விஞ்ஞானிகள் உலகில் எங்கும் இல்லை. விநாயகரை வணங்கும் போது வாழைப்பழம், கொலுக்கட்டை, அப்பம், அவல், பொரி, சுண்டல், போன்றவற்றைப் படைக்கிறார்கள். இதில் எதுவுமே வயிற்றுக்கு கேடு விளைவிக்காதது. இதன் மூலம் உணவே மருந்து என்ற தத்துவத்தை அன்றே உருவாக்கியுள்ளனர். அது மட்டும் மல்ல இந்த உணவுகள் மிகவும் சத்துள்ளவை. சத்துள்ள உணவு மனிதனை ஆரோக்கியமாக வாழ வைக்கும். யார் நல்ல உடல்நிலையுடன் இருக்கிறாரோ அவரது செயல்பாடுகளில் தடைகள் ஏதும் இருக்காது.

அவர்கள் வெற்றியை நோக்கி விரைந்து செல்வார்கள். இதனால் தான் விக்னங்களை (தடைகளை) நீக்கும் விநாயகரை விக்னேஸ்வரன் என்று அழைக்கிறார்கள். விநாயகருக்கு படைத்த இவ்வகைப் பொருட்களைக் கொடுப்பதில் குழந்தைகளுக்கே முன்னுரிமை வழங்கவேண்டும். பகுத்து (பங்கிட்டு) உண்ணும் பண்பாடு இளமையிலேயே குழந்தைகள் மனதில் வளரும் என்பதால் விநாயகர் சதுர்த்தி நன்னாலில் ஆனை முகத்தான் நமக்கு நல்ல அறிவையையும், நல்ல ஆரோக்கியத்தையும் அளிக்கட்டும்.

நுணுக்கமான நீதி

நாம் சத்தியத்தை பின்பற்றினால் நம்முடைய நற்பண்புகள் காப்பாற்றப்படும் அறிவைத்தொடர்ந்து பயன்படுத்தினால் அது குறையாமல் நிலைத்து நிற்கும். நன்மையும், தீமையும், சத்தியமும், அசத்தியமும், தர்மமும், அதர்மமும் போராடுகின்ற நெருக்கடியான சந்தர்ப்பங்கள் உலக வாழ்வில் அடிக்கடி வருகின்றன சத்தியம் தோற்று விடுமோ? என்ற பயம் இம்மாதிரி நேரங்களில் காண்போர்க்கு ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் நன்மை, சத்தியம், தர்மம், முதலிய இவைகள் யாவும் பொறுத்து ஆற அமரவே வெற்றி பெறுகின்றன. வேகமாகச் செல்லும் நீர் வேகமாகவே வடிந்து விடுவது போல், தீமையும், அசத்தியமும், தர்மமும்,வேகமாக வளர்வது போலவே வேகமாகவும் அழிந்து விடுகின்றன. மாறாகச்சூழ்ச்சி செய்யும் மனிதர்கள் அவர்களுடைய சூழ்ச்சிகள் ஆகியாவும் விரைவாக முன்னேறி வெற்றியை நெருங்குவது போலத்தோன்றுவது இயற்கைதான் ஆனால் முடிவில் அழியும் தோல்வியும் இவர்களுக்கே ஏற்பட போவது உறுதி உலக வாழ்வின் மிக நுணுக்கமான உண்மை இது.

தர்மம்

நெருப்பைத் தொட்டவர்களுக்குத்தான் அது சுடுகிறது. நெருப்புக்குச்சுடுவதில்லை. தர்மமும் இப்படி ஒரு நெருப்புத்தான். அறியாமையினாலோ அல்லது அறிந்து கொண்டே செருக்கின் காரணமாகவோ தர்மத்தை அழிக்க எண்ணி மிதிக்கிறவர்கள் அநதத் தர்மத்தாலேயே சுடப்பட்டு அழிக்கப்படுகிறார்கள். தண்ணீரில் உப்பு விழுந்தால் தண்ணீரா கரைகிறது. உப்புத்தானே கரைகிறது. நன்மையைத் தீமை நெருக்கினால் நன்மை அழிவதில்லை தீமைதான் அழிகிறது.

தர்மத்துத்தான் வெற்றி
சத்தியத்துக்குத்தான் வெற்றி
நேர்மைக்குத்தான் வெற்றி
நியாயத்துக்குத்தான் வெற்றி
நம்புவதில்தான் எல்லாம் இருக்கிறது.
நம்பாததில் எதுவும் இல்லை
நல்லதைச்சொல்லுவது எதுவோ நல்லவர்களின்
வெற்றியைக்கூறுவது எதுவோ அது நல்லது
நாமும் நம்புவோம் நம்பி வாழ்வோம்.

மனம் விந்தையானது, போட்டி, பொறாமை, வஞ்சகம் முதலிய உணர்வுகள் புக முடியாத நல்ல மனத்திலும் சூழ்நிலை காரணமாக புகுந்து விடுவது உண்டு. பாதுகாப்பு நிறைந்த வீட்டிலும் அஜாக்கிரதையாக கதவுகளை திறந்து வைத்து விட்டாலும் நாய்கள், திருடர்கள் நுழையும்படி நேர்ந்து விடுகிறது. அல்லவா? மனத்தின் அஜாக்கிரதையினால் இப்படிப்பட்ட தீய குணாங்களும் ஏற்பட்டுவிடும்.

தோற்றுவாய்

உலகம் என்ற ஒன்று தோன்றிய நாளிலிருந்து அறம், மறம் என்னும் இரண்டு மாறுபட்ட பேருணர்ச்சிகளும் தோன்றிய போராடித்தான் வருகின்றன. காலந்தோறும் வாழ்க்கை தோறும் தர்ம அதர்ம யுத்தம் என்கிற சத்திய அகத்தியப்போர் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

நாகரீக வளர்ச்சியோ இதயப்பண்பாடோ அல்லது சமூக முன்னேற்றமோ எந்த ஒரு புதுமையின் முயற்சியாலும் உலகின் அழியாப் போராகிய, இந்தப்போரை நிறுத்த முடியவில்லை. மண்ணும், விண்ணும், மண்ணையும், விண்ணையும், கொண்டு வாழும் உயிரினங்களும் உள்ளவரை இந்தப் போரும் நித்தியமாக நிலைத்து நின்று நிகழும் என்பதை மறுக்க முடியாது. இதை வற்புறுத்துவது போலக் காலமும் கவிகளின் உள்ளமுமாக இணைந்து கொடுத்த எண்ணற்ற பல காவியங்களின் தொகுதி கண் முன்னே விரிந்து கிடக்கின்றது.

காவியங்களைக் கற்கும்போது இது என்றோ நடந்தது அல்லது கற்பனைச்செய்யப்பட்டது. அப்படி எழுகின்ற நினைவு நமக்கு எழலாம் உண்மைதான். அப்படி எழுகின்ற நினைவு மனித மனத்திற்கு இயற்கையே.

ஆனால் கால முற்பாடும் கற்பனையே? என்ற நினைவும் காவியங்களில் அறப்பண் புகழும் மறப்பண்புகளும் மோதுகின்றன. இறுதியில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுகின்றது என்ற நமக்குத் தேவையான உண்மையைச் சிறிதளவும் பாதிக்க முடியாதல்லவா?

உண்மைக்கும் வாய்மைக்கும் நிகழ்ந்த போர் அரிச்சந்திரன் கதையாக நிலவுகிறது. விதிக்கும் தனி மனிதனுக்கும் நடந்த போர் சிலப்பதிகார கதையாகத் திகழ்கின்றது. கடமையைக்காக்க வேண்டுமென்று நேர்மைக்காக போராடி கொடுமையை அழித்த கடவுள் பிறப்பின் கதை இராமவதாரமாகக்காட்சி தருகின்றது. கட்டியங்காரன் என்ற ஒருவனின் மனத்தில் முளைத்த தீமை வித்து மெல்லக் கருகி அழிந்து சீவகன் என்ற திறமையாளனின் நல்மணம் நல்லன எண்ணி நல்லன செய்து நன்மை பெறும் மேன்மையைச்சீவக சிந்தாமணி தெரிவிக்கின்றது. இன்னும் வளர்ப்பானேன்? வாழ்க்கையில் மட்டுமல்ல, வாழ்க்கையை ஆதாரமாகக் கெண்டிருக்கும் காவியம், கலை, கற்பனை ஆகிய இவைகளிலும் கூட அறவுணர்ச்சிகளும் வந்து கலகம் இடுகின்றன. மென்மையும், வின்மையுமான இந்த நேர்மாறான இருதுருவங்கள் போன்ற உணர்ச்சிகள் கொடிய முறையில் காக்கும் போது எளிய முறையில் மென்மையாக இயற்றப்படவேண்டிய காவியங்களின் தாய்ச்சரக்கு என்னும் மூலப் பொருள் கிடைக்கிறது. உலகின் நாற்றிசைகளிலுமுள்ள உயிரினம் முழுவதுமே அறச்சார்புடையதாய் நேர்மை ஒன்றே நோக்கமாக வாழும் வழி எப்போதோ எப்படியோ ஏற்பட்டு விடுவது என்று வைத்துக் கொள்வோம். அன்று தொடங்கிய உலக வாழ்க்கையில் தான் சுவை ஆர்வம் விரைவு என்ற அவசியமான

அம்சங்கள் செத்துப்போகும். கலை, கற்பனை, காவியம் இவைகளும் மூலப்பொருளான தாய்ச்சரக்கு இல்லாமல் ஏங்கி நிற்க வேண்டியது தான். எனவே அறத்தின் பெருமை என்ற இந்த மாபெரும் ஒளி விளக்கமுற்று இயங்குவதற்கு வாழ்க்கையிலும் சரி, காவியத்திலும் சரி, மறத்தின் தீமை என்ற புலையிருள் பொதிந்திருக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

காவியப்பண்பு

அறுசுவையில் கசப்பு என்ற ஒன்று பெரும்பான்மையாக ஏன் முற்றிலும்கூட உலகில் யாராலும் விரும்பப்படுவதில்லை. அதற்காக அந்தச் சுவையிலும் அதைச்சார்ந்த பொருள்களிலும் நாம் வெறுப்புக்கொண்டு அழித்து விடுவா செய்கிறோம்? அவைகளாகவே அழிந்து விடத்தான் செய்கின்றனவா? இரண்டும் இல்லையே? வாழ்க்கையிலும் மறத்திற்கும் இத்தகைய விலக்க இயலாத ஓர் இடம் ஏற்பட்டு இருக்கின்றது. கசப்பின் என்றோர் சுவை இருப்பதால் தானே இனிப்பின் பெருமை விளங்குகின்றது. அது போல மறம், பாவம், தீமை என்ற இந்த விலக்கப்பட்ட குணங்களுக்கும் வாழ்வில் நிற்குமிடம் நிலைத்தவையாய் இருக்கின்ற காரணத்தினால் தான் அறம், ஒழுக்கம், நேர்மை, என்ற விதிக்கப்பட்ட குணங்களுக்கு உலக வாழ்வில் ஒளியும் பெருமையும் நிலைத்திருக்கின்றன.

கைகேயின் இரக்கமின்மையாலேயே இராமனுடைய பரந்த புகழ் என்னும் அமுதம் உலகுக்கு பருகக்கிடைத்ததாக கம்பன் கூறுகின்றான். பகைப்புலனாக நிற்க வல்ல எதிர்மறைப்பண்பு ஒன்றினால்தான் காவிய குணமாகிய உடன்பாட்டு பண்பை நிலை நிறுத்திக்காட்டுவதற்கு இயலும். இதிகாச காவியங்களாகிய இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றின் கதைப்போக்கில் பகைப்புலனின் பண்பாலேயே காவியம் கூறக் கருதும் பொருளை வற்புறுத்தும் நிலையைக்காணலாம்.

காவியத்தில் எந்தச் சில பாத்திரங்களின் சார்பாக அவற்றின் வெற்றி நோக்கிக் கதையாகச் சித்தரித்துச் சொல்லப்படுகின்றதோ, அந்தச்சில பாத்திரங்களின் வாழ்வே அந்தக்காவியம் முழுவது ஊடுருவி நிற்கின்றது எனக்கொள்ளலாம். இதிகாச காவியங்களைப்பொறுத்த வரையிலோ இது பெரிதும் பொருத்தமான உண்மையாகத் தோன்றுகிறது.

1. ஒரு பொருள் இல்லாமல் போகும்போது தான் அதனுடைய தேவை, மதிப்பு எவ்வளவு என்பதை அப்போதுதான் நாம் உணர முடியும்.

அழுதாலும் உழுது கொண்டு இரு

நான் பணியிலிருக்கும் போது எங்களது இலாகா கபாடி விளையாட்டு அணியில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் மும்பையில் ஒரு அகில இந்திய கபாடிப்போட்டிக்கு, விளையாட்டு வீரனாக கலந்து கொள்ளச் சென்றிருந்தேன். ஓய்வு நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து ஏ.கூ.ரயில் நிலையம் அருகில் உள்ள மார்க்கட்டுக்கு ஏதாவது பொருட்கள் வாங்க அனைவரும் சென்றிருந்தோம். என் நண்பர் ஒருவர் தனக்குப் பிடித்தமான புதிய மாடல் செருப்பை வாங்கி அதை அணிந்து கொண்டும், அவரவர் விருப்பப்பட்ட பொருள்களை வாங்கிக்கொண்டும் மின்சார ரயிலில் செல்ல ரயில் நிலையத்திற்கு வந்தோம். நடைமேடையில் பயணிகள் கூட்டம் மிக அதிகமிருந்தது. கூட்டத்தில் ரயில் வந்தவுடன் இடித்துக்கொண்டு அணியன் பாதிப்பேர்தான் ஏறினர். மீதிப்பேர் அடுத்த வண்டியில்

வரமுடிவு செய்தோம். ரயில் சென்றவுடன் ஒரு புதிய செருப்பு நடைமேடையில் கிடந்தது. எங்களது நண்பர் ஒருவர் கவனித்து நமது சக வீரரின் புதிய செருப்பல்லவா என்று எடுத்து தன்னிடம் உள்ள பையில் போட்டுக்கொண்டார்.

ஒரு செருப்பை இழந்த நண்பர் கூட்டத்தில் தேடமுடியாமல் அந்த ஒரு செருப்புடன் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கியவுடன் கூட வந்த நண்பர் ஒரு செருப்பை தொலைத்து விட்டு ஒரு செருப்பால் என்ன செய்யமுடியும் என்று கூறி நண்பரிடம் கூறி தண்டவாளத்தில் எறிந்து விட்டு அறைக்கு வந்துவிட்டார். அடுத்த ரயிலில் மீதி நாங்களனைவரும் விட்டு வந்த செருப்புடன் அறைக்குள் நுழைந்தோம் நண்பர் நொந்து போய்விட்டார். வாழ்க்கை எனும் ரயில் பயணத்தை துவங்கும் போது இரண்டு செருப்புகள் பத்திரமாக இருக்கின்றன. ஒரு செருப்பு அதிர்ஷ்டம் மற்றொன்று உழைப்பு. அதிர்ஷ்டம் என்ற செருப்பைக் காணவில்லை, அதனால் உழைப்பு என்கிற செருப்பை வீசி விடுகிறோம். வெந்ததை தின்று விதி வந்தால் சாவோம் என்ற கொள்கையுடன் பயணத்தைத் தொடர்கிறோம் வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்கு செல்லும்போது ஒரு உண்மை பளீரிடுகிறது. தொலைந்துவிட்டதாக நினைத்த அதிர்ஷ்டம் எனும் செருப்பு பத்திரமாக இருப்பது தெரிகிறது. ஆனால் உழைப்பைத் தூக்கி எறிந்து விட்டோமே, இப்போது வெறும் அதிர்ஷ்டத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

எனக்குத் தெரிந்த இருவர் எப்படியாவது டாக்டராகிவிடவேண்டு என கனவு கண்டார்கள் இருவருக்கும் எம்.பி.பி.எஸ். சிட் கிடைக்கவில்லை. ஒருவருக்கு பி.எஸ்.சீட் கிடைக்கவில்லை, மற்ற ஒருவர் பி.எஸ்சி. படித்துவிட்டு எங்கோ ஒரு தனியார் நிறுவனத்தில் குமாஸ்தாவாக உள்ளார். இன்னொருவருக்கு பி.எஸ்சி சீட் கூட கிடைக்கவில்லை எனவே பி.ஏ. பொருளாதாரம் படித்தார். அவருக்கு உழைக்க வேண்டும் என்ற உற்சாகம் இருந்தது.

உழைப்பு என்ற செருப்பை அவர் கடாசவில்லை. பி.ஏ.முடித்ததும் சி.ஏ. படிப்பில் சேர்ந்து கடுமையாக உழைத்து இன்று பெரிய ஆடிட்டராக ஜொலித்துக்கொண்டிருக்கிறார். அவர் வயதொத்த டாக்டர்களை விட அதிகம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார். அவரிடம் உழைப்பு அதிர்ஷ்டம் என்ற செருப்புக்கள் புதுக்கருக்கு அழியாமல் இருக்கின்றன.

அதிர்ஷ்டம் இல்லையே என உழைப்பை தூக்கி எறிந்து விடாதீர்கள். அதைத்திருப்பி எடுப்பது கடினம். கிராமங்களின் ஒரு பழமொழி உண்டு ‘அழுதுகிட்டு இருந்தாலும் உழுதுகிட்டு இரு‘ என்பார்கள். அதிர்ஷ்டம் என்பது மழையைப்போல் வரும்போது வரட்டும், அதுவரை உழுது கொண்டே இருப்போம். திடீரென்று ஒரு நாள் மழை வரும்போது வளமான வாழ்க்கை கிடைக்கும். அதிர்ஷ்ட செருப்பை காணவில்லை என அங்கும் இங்கும் தேடாதீர்கள்.

இப்போதைக்கு உழைப்பைச்செருப்பை அணிந்து கொள்ளுங்கள். உரிய காலத்தில் அதிர்ஷ்ட செருப்பு கண்ணில் படும். அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிருங்கள். வளமான வாழ்க்கைக்கு அது தான் அஸ்திவாரம்.

சரியான படிப்பை தேர்ந்தெடுத்து முறையாகப் பயில்பவனும், நியாயமான காரணத்திற்காக வீரமாக போராடுபவனும் எப்போதும் நற்செயல்களையே செய்பவனும், கடமைகளை தவம் போல் உறுதியாகச்செய்பவனும், தங்கள் முயற்சியின் முடிவில் வளமாக வாழ்வார்.

சூது

ஒரு மனிதனின் எல்லாவிதமான சிறப்புகளும் அழிவதற்குச் சூது காரணமாக அமைய முடியும். அறிவு, சத்தியம், ஆண்மை முதலிய உயரிய குணநலன்கலெள்ளாம் சூதாடத் தொடங்கிறவனிடமிருந்து ஒவ்வொன்றாக நழுவி விடுகின்றன. கள், காமம், சூது என்று இவை மூன்றையும் விலக்கப்படவேண்டிய குணங்களாக அறிஞர்கள் கூறுவார்கள்.

இந்த மூன்றிலும் கூட இறுதியிலுள்ள சூது மிகவும் பயங்கரமான ஒன்றாகும். எத்தனையோ மன்னாதி மன்னர்களையும் நற்குடிப் பிறந்தவர்களையும் கெட்டழிந்து போகச்செய்திருக்கிறது இந்தச்சூது

கள்ளும், காமமும், மனிதனுடைய உடலைப் பேரளவிலும் அறிவைச்சிற்றளவிலும் தான் பாதிக்கின்றன. ஆனால் சூதோ மனிதனுடைய ஒழுக்கம், சத்தியம், அறிவு எல்லாவற்றையுமே பாதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. சத்தியம், தருமம் எனும் இவை இரண்டை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் தர்மனையே பாதிக்கும்படி செய்துவிட்டது. சூதாட்டத்தினால் தருமபுத்திரனுடைய வாழ்க்கையில் மிகப்பெரியதோர் களங்கம் புகுந்துவிட்டது. தர்மன் தவிர்க்க முயன்றான். உலகில் நாமெல்லாம் எண்ணுகின்ற எண்ணங்களைக்காட்டிலும் விதியின் வண்ணம் வலிமை வாய்ந்ததாக இருக்கின்றது. நம் எண்ணப்டி விதி நம்மை வாழவிடுவதில்லை. விதியின் எண்ணத்தையோ நம்மால் அறிந்து கொள்ள முடியாது.

தீய எண்ணங்களும், அவற்றின் விளைவுகளும் எப்போதுமே அசாத்திய வேகத்தோடே வளர்கிறது. ஆனால் வேகமான வளர்ச்சிக்கு எல்லாம் வேகமான அழிவும் தொடர்கிறது. இது தான் நிதர்சனம்.

மாயாவுதாரனே, எங்களையும் எங்கள் நலனையும் காப்பாற்றுவதற்கே நீ அழகர்கோவிலில் கள்ளழகர் அவதாரம் எடுத்ததாய் போலிருக்கிறது. இன்று வரை நீ எங்களுக்குச் செய்திருக்கும் ஆசி செய்து வந்து வருவதை எவ்வாறு அளவிட்டு எண்ணுவது எங்களுடைய சகல சுகதுக்கங்களையும் நீ ஒருவனே தாங்குகிறாய். எல்லா வகைகளிலும் நாங்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வருவதற்கு உன்னுடைய கருணையே காரணம் என்றால் மிகையாது. முடிகிற காரியமோ, முடியாத காரியமோ எல்லாவற்றையும் முடித்து வைப்பவன் எங்களது கள்ளழகரே.

பாச மாயை

பந்த பாசங்களும், உறவு முறைகளும் மாயையினால் ஏற்படுகின்றவை மனைவி, மக்கள், தாய், தந்தை, சுற்றம் எல்லாம் பொய் மயக்கம், தோன்றுமிடமும் சேருமிடமும் பரமாத்மாவின் திருவடியே இன்பமும், துன்பமும் வெறும் அவஸ்தைகளே. மெய்ஞ்ஞானமுள்ளவர்கள் துயரங்களைக்கண்டு வருந்திக் கதறக்கூடாது. இது இந்த பூத உலகத்தின் இயற்கை என்று எண்ணித் தெளிவு பெற வேண்டும். இறப்பதும், பிறப்பதும் இவ்வுலகில் புதுமை இல்லை நடந்ததை மறந்து நடக்கவிருப்பதை எண்ணி வாழ்வை சரியாக அமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

பிறவி

பிறவி எப்படி நேருகிறது எதற்காக நேர்கிறது? ஏன் நேருகிறது? மாயா கர்ப்பத்தின் விளைவே பிறவி. அந்தப்பிறவி தன் மனம் பிறவியே. மாயையின் வசத்தாலோ அவசத்தோலோ நிகழ்கிறது. பிறவியின் சிந்தையோ முற்றிலும் மாயையிலோ மூழ்கித்தோய்ந்து பிறந்தது. மாயையில் மூழ்கிய மனம் மெய்யறிவை மறப்பதும் பயனற்ற ஆசைகளிலும் மயங்குவதும் இயல்பு. ஆசையையும், பாசத்தையும் மறந்து கடமையைச் செய்வதுதான் ஆத்மாவின் இலட்சியம் இந்த இலட்சியத்துக்கும் பகை வேறு எங்கும் இல்லை. அதன் சரீரத்துக்குள்ளேயே இருக்கிறது. ஐம்பொறிகளும் அவைகளுக்குப் புலனாகும் காரணங்களும் அனுபவங்களும் அவற்றை அடக்கியாள்கின்ற மனமும் தான். அந்தப்பகைகள் புலன்கள் விழிப்பும் கொட்டமும் ஒடுங்காதவரை ஆன்மா உறங்கிக்கொண்டு தான் இருக்கும். ஆன்மா விழிப்படைந்து மெய்ப்பொருளை உணரவேண்டுமானால் புலன்கள் செயல் ஓய்ந்து உறங்கவேண்டும் புலன்களின் அஜாக்கிரதையால் பாச பந்தங்களைப்போக்கி நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் நிறைவேறும்படி செய்து கொள்ளவேண்டும். அதுதான் பிறப்பின் மாபெரும் குறிக்கோள். .ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்குரிய ஞானமாக ஒவ்வொரு ஆன்மாவிலும் பரம்பொருள் நிறைந்திருக்கின்றது. பாலிலே நெய்போல மறைந்து நிற்கும் பரம ஞானத்தைப் பயன்படுத்தி கொள்ள வேண்டும். விருப்பு, வெறுப்பற்ற, பாசபந்தமில்லாத நிலையை அடைவதற்கு இந்த ஞானம் அவசியம். உடல் பஞ்ச பூதங்களிலிருந்து உண்டானது. அழிந்தபின் பஞ்ச பூதங்களோடு கலந்து விடும். ஞானத்தையே சரீரமாகக்கொண்டுள்ள பரம்பொருளின் சக்தியால் வெறும் பூதசரீரமாகிய உடல் இயங்குகிறதே ஒழியத் தானாக இயங்கவில்லை. உறவு, பாசம், ஆசையெல்லாம் வெளிவேஷங்கள், அவற்றால் ஏற்படும் மனத்தளர்ச்சியை உதறி எறிந்து விட்டு நாம் ஆற்ற வேண்டும். அப்போது தான் நீதி நேர்மை, மனிநேயம், சத்தியம் ஆகியவைகளின் மக்களின்பால் ஈர்க்கப்படும்.

இனவெறி, மதவெறி ஆகியவை ஒழிக்கப்பட்டு, வேற்றுமையில் ஒற்றுமை காண முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கு இந்த நல்ல எண்ணங்கள் உருவாகி ஒழுக்கமான வாழ்க்கை வாழ வழி வகுக்கும். அதுவே உலகுக்கு உடனடி தேவை. உண்மை என்பதற்காக பிறருக்குத்துன்பம் தரும் விஷயங்களை கண்மூடித்தனமாகச் சொல்வது இரக்கமற்ற மனிதர்களின் செயல். உலகிலேயே மிகப்பெரிய அறிவு தன்னைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதுதான் அதாவது தன்னையும் தன் குடும்பம், தன் சமூகம், தன் பண்பாடு, தன் நாடு போன்றவற்றையும் தெரிந்து வைத்திருப்பது தான். நமது நாட்டார்கள் பல நூறு வருட வாழ்க்கையைத் தங்கள் மூளையில் இன்னும் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது வியப்பாக இருக்கிறது. சமூகத்தின் அங்கம் தான் சாதி அது ஒரு தனித்த அமைப்பல்ல. ஒவ்வொரு சாதிக்கும் சில தனித்தன்மைகள் இருந்தாலும், அந்த சாதி மட்டும் சமூகத்தில் தனித்து இயங்க இயலாது. அதனால் தமிழ்ச் சமூகத்தைப்பற்றி ஒரு பொதுவான தெளிவு இல்லாமலும், யாராலும் அவர்களின் சொந்த சாதியைப்பற்றி புரிந்து கொள்ள இயலாது என்பதை உணர்ந்து தமிழ்ச்சமூகத்தின் பொது வரலாற்றிலிருந்து தனது இனவரைவுகளுக்குள் உள்ளே செல்ல முடியும்.

ஒரு சமூகத்தின் அரசியல் வரலாற்றை எழுதாமல், அதன் பண்பாட்டை மட்டும் விளக்குவதென்பது அடித்தளம் இல்லாமல் கட்டிடம் கட்டுவது போலாகும். நமது வெள்ளலூர் நாட்டிற்கு

ஒரு தனித்தன்மை அரசியல் கொண்டதாகும். இம்மக்கள் தனித்தன்மை கொண்ட சாதியாக இருப்பதால் இவர்களுக்கென்று ஒரு நெடிய அரசியல் வரலாறு உள்ளது.

காலத்தின் அருமை

காலத்தின் அருமை தெரியாதவர்கள் வாழ்விலுள்ள ஒவ்வொரு நொடிப்பொழுதும் எவ்வளவு விலை மிக்கது. குறுகிய கால வரம்பில் மனிதன் சாதித்து தன்னைப்பயனாக செய்து கொள்வதற்கு எத்தனையோ செயல்கள் உள்ளன. அறிவற்ற கபோதிகளுக்கு இது எங்கே புரியப்போகிறது? சாவு வந்து அழைக்கும் போது ஒரு விநாடி கழித்து வருகிறேன் என்றால் கேட்கவா செய்யும்? அந்நேரத்திலுந்தான் இந்த அசடர்கள் பொழுதின் அருமையை உணரும் பக்குவத்திலா இருப்பார்கள்.

திருவிழாக்கள்

வெள்ளலூர் நாட்டிலுள்ள அனைத்து கிராமங்கள், மாகாணங்களிலும் ஏதேனும் ஒரு தெய்வம் இருக்கும். அத் தெய்வத்தின் திருவிழாவிற்காக கிராமக்கூட்டம், மாகாணக்கூட்டங்கள் நடைபெறுவதுண்டு. அப்பொழுது அத்தெய்வத்திற்காக காப்புகட்டி, திருவிழாவிற்கு நாள் வைப்பது பழக்கம். இதன் காரணமாக நாட்டுத் தெய்வங்களுக்கும் திருவிழா நடத்துவதற்கும் நாட்டுக்கூட்டம் நடைபெறும். திருவிழாவிற்கு நாள் குறித்த நாளிலிருந்தே இட்லி, தோசைக்கோ மற்ற பதார்த்தங்களுக்கோமாவரைக்க கூடாது. ஆடு, கோழியோ எந்த விதாமான அசைவ உணவோ சமைக்க கூடாது. இந்த பழக்க வழக்கத்தை நாட்டு குடிமக்கள் யாவரும் மீறாமல் விரதம் இருந்து வருகிறார்கள். மீறியவர்கள் தெய்வ குற்றத்திற்கு ஆளாவார்கள். மற்றும் இந்தக்காலங்களில் எந்த நற்காரியமும் செய்யப்படலாகாது. வெளியூர், வெளி மாநிலம், வெளிநாடுகளில் வெள்ளலூர் நாட்டு குடிமக்கள் வாழ்ந்து வருபவர்களும் இந்தப்பழக்க வழக்கங்களை தவறாது கடைபிடித்து வருகிறார்கள்.

கிராமக்கூட்டங்கள் நாட்டுக்கூட்டங்களில் எப்படி அமர்ந்து கூடுவது, விவாதிப்பது என்பது சீரிய மரபு உள்ளது. பெரிய அம்பலகாரர் 6 + 4 அம்பலகாரர்கள். (தலையில் மற்றும் இடுப்பில்துண்டு) கிழக்கு நோக்கி, மேற்கில் அமர்ந்து இளங்கச்சிகள், பூசாரி, நாட்டுக்கணக்குப்பிள்ளை, வழக்காளிகள் மற்றும் குடிகள், வடக்கு தெற்கு பக்கத்தில் யாவரும் மேல்சட்டையில்லாமல் தலையில் தலைப்பாகை அணிந்து, கூட்டத்தில் அமரும் முன்பு சபையை வணங்கி அவரவர் பக்கம் அமரவேண்டும். கிழக்குப் பக்கம் யாரும் அமரக்கூடாது. கூட்டம் கூடும்போதும், விவாதிக்கும்போதும், முடியும்போதும் சில விதிகள் உண்டு அதைக்கண்டிப்பாக யாவரும் கடைபிடிக்க வேண்டும்.

அதை மீறினாலோ ஒழுக்க, மின்றி நடந்தாலோ அப்பொழுதே அதற்குரிய தண்டனை வழங்கப்படும். ஏனென்றால் கூட்ட நடவடிக்கைகளை நாட்டுத்தெய்வங்கள் கிழக்கிலிருந்து கவனித்து வருவதாக ஐதீகம். அதனால்தான் கிழக்குப்பக்கம் யாரும் அமரக்கூடாது. நாட்டுப்பழக்க வழக்கங்களை துச்சமாக மதித்து, பேசினாலோ நடந்து கொண்டாலோ, அச்செயல் செய்தவர், அவர்தம் வாரிசுகள் பாதிக்கப்படுவார்கள் என்று நாட்டு மக்கள் பயப்படுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களும் உண்டு என்று கூறுகின்றனர்.

பொதுவாகக் கோவில் திருவிழாக்கள் பல்வேறு சமூக இனத்தவர்களிடையே சுமூகமான நல்லுறவுகளை ஏற்படுத்தி வளர்ப்பதற்கும், பல்வேறு சமூக மக்களுடைய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பழம் மரபுகள், பண்பாடுகள் ஆகியவற்றைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றன. கோவில் திருவிழாக்கள் பற்றி கலைக்களஞ்சியம் பின்வருமாறு கூறுகின்றது.

சந்திரனுடைய திதிகள் பருவகால மாறுதல்களுக்குட்பட்டவை.

அந்த காலத்தில் சமூக இனத்தவர்கள் அனைவரையும் ஒன்றுபடச் செய்பவை கோவில் திருவிழாக்களும் சமய விழாக்களும்

(கலைக்களஞ்சியம் தொகுதி 9 ப.418)

பொதுவழிபாட்டு முறை

வெள்ளலூர் நாட்டு மக்களல்லாது அனைத்து பகுதி மக்களும் நாட்டுக்கோவில் திருவிழாவில் கலந்து கொண்டு பால், பழம், தேங்காய், சூடம், சாம்பிராணி, இளநீர், பஞ்சாமிர்தம் போன்ற பொருட்களால் நாட்டுத் தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்வதை பொது வழிபாட்டு முறை எனலாம். இது வெள்ளலூர் நாட்டு கோவில்களுக்கு மட்டுமல்லாது இந்து சமயத்தின் ஆணி வேராகக் கருதப்படுகின்ற சைவ, வைணவப் பெருந்தெய்வ வழிபாட்டிற்கு பொதுவான வழிபாட்டு பொருள்களாகவும், வழிபாட்டு முறைகளாகவும் அமைந்திருப்பதனால் பொதுவழிபாட்டு முறை என்று அழைக்கப்படுகின்றனர்.

மென்முறை வழிபாடு

இதனை வடமொழியில் நித்திய உற்சவம் என்பர், நாள்தோறும் இறைவனைப் பூஜையில் இருக்கையில் இருத்தி நீராட்டி, மலர்தூவி முறையே கண்ணுக்குப் புலப்படுகின்ற, கண்ணால் காண முடியாத நுண்வடிவங்கொண்ட சில வழிபாடாக வணங்குதல் நாள் விழாவாகும், இதனை மென்முறை வழிபாடு என்கிறார்கள்.

நமது நாட்டு கோவில்களில் சாதாரண நாட்களில் நடைபெறும் வழிபாட்டு முறையை மென்முறை வழிபாடு என்பர். பாலாபிஷேகம், பூமாலை சாற்றுதல், சந்தன அபிஷேகம், தேங்காய் பழம் உடைத்து, பஞ்சாமிர்தம் அபிஷேகம் செய்தல் ஆகியன மென்முறை வழிபாடாகும். மென் முறை வழிபாட்டில் உயிர்பலியிடுல் கிடையாது.

பலியீட்டு முறை வழிபாடு

கடவுள் பிரார்த்தனை பலியிடுதல் முதலான சமயப்பொருள் யாவும் மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாகியிருப்பதாக கூறப்படுகிறது.

(பிராய்டு, கலைக்களஞ்சியம் தொகுதி - 4 பக்கம் 448)

ஆனால் பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து, சிறுதெய்வங்களைப் பிரித்துக் காட்டுவதே உயிர்பலியிடுதல் முறையைக் கொண்டுதான் என்பதை சிறுதெய்வ வழிபாடுகள் பற்றிய தமிழ் அறிஞர்களின் ஆய்வு

முடிவுகள் புலப்படுத்துகின்றன என்பதை இவ்விடத்தில் நினைவு கூறல் பொருத்தமாகும்.

கோவில்கள் வளர்ச்சி

ஒரு நாட்டிலமைந்துள்ள ஒரு சிறுதெய்வம் பெரிய அளவில் வளர்ந்ததற்கு காரணம் அங்கு வாழும் மக்களுடைய வழிபாட்டு நம்பிக்கைகளும், நேர்த்திக்கடன்களுமேயாகும். வெள்ளலூர் நாட்டிலுள்ள கோவில்களுக்கு என்று நிரந்தரமான வருமானம் கிடையாது. எந்த வகையான கோவில் சொத்தும் மானிய நிலங்களும் கிடையாது, இருப்பினும் வெள்ளலூர் நாட்டு மக்களால் நாட்டு தெய்வங்கள் சக்தி வாய்ந்த தெய்வங்களாக கருதி வழிபட்டு வருவதை காண முடிகின்றது. வெள்ளலூர் நாட்டு மக்களுடைய நம்பிக்கைகள், நேர்த்திக்கடன்கள், வழிபாட்டு முறைகள், வெள்ளலூர் நாட்டு நிலவியல் அமைப்பு, நாட்டுச்சட்டங்கள், சமூகத் தொடர்புகள், தெய்வங்களைப் பற்றிய தொன்மைக் கதைகள். செவிவழிக்கதைகள், மரபுசார்ந்த வழக்காறுகள் ஆகியன நாட்டுக் கோவில்கள் வளர்ச்சிக்கு பெரிதும் காரணங்களாக அமைந்திருக்கின்றன. வெள்ளலூர் நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் திருவிழாவிற்கென்று வரி வசூல் நாட்டார்கள், செய்வார்கள். இந்த வரி வசூல் புள்ளி அடிப்படையில் (தலைக்கட்டு) நடைபெறும். ஒரு புள்ளி என்பது திருமணமானவர் சார்ந்த குடும்பம், புள்ளி வரியாக பணமும், அரிசியும் பெறப்படும்.

கோவில் மற்றும் அதன் சார்ந்த கட்டிடங்கள் யாவும் புள்ளிவரிகள் நேர்த்திக்கடன் வருவாய், காணிக்கை நன்கொடைகள் மூலமாகவும் கட்டப்பட்டிருக்கின்றன கட்டப்படுகின்றன.

ஆரம்ப தெய்வவழிபாடு

இந்தியாவில் இந்து சமய வழிபாட்டில் பெருந்தெய்வநெறி, சிறுந்தெய்வநெறி என இருபிரிவுகள் நிலவுகின்றன. தமிழகத்தில் பெருநகரங்களை காட்டிலும் சிற்றூர்களே மிகுதியாக உள்ளன. இச்சிற்றூர்களில் வாழும் கிராம மக்களிடையே சிறுதெய்வ வழிபாடே மிகுதியாகக் காணப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாட்டுமுறை இந்தியாவில் தொன்மைக் காலந்தொட்டு வழக்கில் இருந்து வந்திருக்கின்றது, வருகின்றது. சமூக இலக்கியத்தில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆட்டுக்குட்டியின் கழுத்தை வெட்டி குருதி கலந்ததினையைப் பலிபொருளாக வைத்து வழிபட்டு வந்ததை குறுந்தொகை காட்டுகிறது. (குறுந்தொகை பாட்டு எண் 263). பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு ஆகிய சொற்கள் வழக்கத்தில் இருப்பதால் அவற்றை நடைமுறையில் அடையாளமாகப் பயன்படுத்தி வருகின்றோமேயொழிய, அவற்றை மேலானது கீழானது என்ற பொருளில் அல்ல. அவையிரண்டும் தனித்தனி வழிபாட்டு நெறிமுறைகள் உடையன. சிற்றூர்களில் நடைபெற்று வருகின்ற தொன்மைமிக்க சிறுதெய்வ வழிபாட்டுமுறைகள், அங்கு வாழுகின்ற நாட்டுப்புற மக்கள், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கைமுறை சமுதாய அமைப்பு, நாட்டு நிர்வாகம் ஆகியவற்றை புலப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் வழக்காற்றிலுள்ள சிறுதெய்வ வழிபாடுகள் என்பது அந்தந்த வட்டாரங்களில் வாழும் மக்களோடும் சாதிப்பிரிவுகளோடும் பின்னிப் பிணைந்துள்ளன. வெள்ளலூர் நாட்டு தெய்வங்களான ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி, ஸ்ரீ ஏழைகாத்தம்மன் ஸ்ரீ கருங்கல் மந்தைச்சாமி மற்றும் இதர தெய்வங்கள்,

கடந்தகால வரலாறு, நிகழ்கால வரலாறு மற்றும் எதிர்காலத் தமிழக வரலாற்றுக்கு அடிப்படைச்சான்றாக அமையுமென்று கூறினால் மிகையாகாது.

நாடு விளக்கம்

தற்காலத்தில் மிகப்பெரிய நிலப்பரப்பு மட்டுமே நாடு என அழைக்கப்படுகின்றது. அக்காலத்தில் இருபது அல்லது இருபத்தைந்து கிராமங்களை உள்ளடக்கிய சிறிய நிலப்பரப்பு பகுதிகளையும் நாடு என்ற பெயரால் அழைத்துள்ளனர். முக்கால் நாடு முதலான சிறிய நாட்டுப்பிரிவுகள் சங்க இலக்கியத்தில் (புறநானூறு பாடல் எண் : 80, துறைக்குறிப்பு 242) காணப்படுகின்றன். முதலாம் ராஜராஜன் காலத்தில் சோழநாடு ஒன்பது சிறிய மண்டலமாக பிரிக்கப்பட்டிருந்தது என வரலாற்றில் அறிந்து கொள்ளமுடிகிறது. (சோழநாடு - தி.வை. சதாசிவ பண்டாரத்தார்) வெள்ளலூர் நாடு என்பதும் இதைப் போன்றதொரு நிலப்பரப்பேயாகும்.

திருவிழாக் கட்டுப்பாடு

திருவிழாவிற்கு நாள் குறித்து நாள் சாற்றிவிட்டால் அன்றிலிருந்து திருவிழா வரை இட்லி, தோசைக்கு மாவரைக்கூடாது, உணவில் எண்ணெய் தாளிக்கமாட்டார்கள். புலால் உணவு சாப்பிடமாட்டார்கள், அனைவரும் விரதம் இருப்பார்கள். நாட்டின் எல்லைக்குள் ஆடு, கோழிகளோ வெட்டக்கூடாது. மண்சாந்து கட்டிட வேலைகள நடக்காது. நல்லகாரியம் எதுவும் நடத்தலாகாது. பச்சைமரம் வெட்டக்கூடாது. மரணம் சம்பவித்தால் எந்தவித கொட்டும் கலவையும் இல்லாமல், கேதம் காணாமல் (துக்கம் விசாரித்தல்) வழக்கமான முறைகளைத் தவிர்த்து, இறந்தவரை அடக்கம் செய்து விடுவார்கள். திருவிழாவிற்குப் பின்தான் பழக்க வழக்கங்கள் நடைமுறைக்கு வரும். வெள்ளலூர் நாட்டுக்குடி மக்கள் வெளியூரிலோ, வெளிநாடுகளிலிருந்தாலும் இந்த பழக்கம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கள்ளர் வாரிசுச்சட்டம்

ஓர் குடும்பத்தில் ஆண்வாரிசு இல்லாமல் பெண்கள் மட்டுமே இருந்தால், அக்குடும்பத்தின் அனைத்துச் சொத்துக்களும் அப்பெண் மக்களுக்கே உரியது. ஒரு குடும்பத்தில் பிள்ளைப்பேறு இல்லாமல் தத்து எடுத்துக் கொள்வதாக இருந்தாலும் அவர்களது வாரிசாகவும், அவர்களுடைய சொத்திற்கு, பங்காளி வகையிலிருந்து மட்டுமே தத்துப்பிள்ளை எடுத்துக்கொள்ளவில்லையானால் அவர்களுடைய காலத்திற்கு பின் அக்குடும்பச் சொத்துக்கள் உடன் பங்காளிகளால் பிரித்துக் கொள்ளப்படுகிறது.

மாட்டுச்சட்டம்

வெள்ளலூர் நாட்டில் பசுவை உழவுத்தொழிலில் பயன்படுத்துவதில்லை. வெள்ளலூர் நாடு உருவாக்கப்பட்டதிலிருந்து முதல் இன்று வரை பசுவை உழவுத்தொழிலில் பயன்படுத்தியதில்லை.

பன்றிச்சட்டம்

வெள்ளலூர் நாட்டு வழக்கப்படி யாரும் பன்றிகளை வளர்ப்பதில்லை. பன்றி வளர்ப்பு நாட்டிற்கு உகந்ததல்ல என்பது முன்னோர்களின் நம்பிக்கை.

மக்கள் ஒற்றுமை

வெள்ளலூர் நாட்டில் கள்ளர்களோடு இதர இனத்தவர்களும் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகிறார்கள். இம்மக்கள் பன்னெடுங்காலமாக வெள்ளலூர் நாட்டு மரபுகளை பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். வெள்ளலூர் நாட்டுப் பழக்க வழக்கங்கள், நாட்டு விதிமுறைகள், கிராமிய பண்பாடு முதலானவற்றை மரபாகக் கடைபிடித்து வருகின்றனர். சாதி, இன வேற்றுமைகளின்றி மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். சமயப் பூசல்கள், சாதிவேறுபாடுகள் ஆகியவற்றை வெள்ளலூர் நாட்டு மக்களிடம் காணமுடியாது.

கருங்கல் தெய்வம்

கிராமம், நாட்டு வழக்குகள் பொதுவான இடங்களில் நடைபெறுவது வழக்கம். அதற்கு மந்தைத்திடல் என்றழைக்கப்படுகின்றது. மந்தை என்பது மொத்தமாக ஓரிடத்தில் கூடுவது என்பது அர்த்தம். நமது நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களில் அமைந்திருக்கும் கோவில்களுக்கு முன்பாக மந்தைத்திடல்கள் உள்ளது. பழையூர்பட்டியில் மட்டும் இரு மந்தைத்திடல் உள்ளது. ஒன்று நாட்டு மந்தை. மற்றொன்று கிராம மந்தை. அதேபோல் வெள்ளலூரில் அமைந்துள்ள மந்தைக்கோவிலில் கருங்கல் பீடம் உள்ளது. அந்த பீடத்தைத் தான் தெய்வமாக வணங்கிவருகிறார்கள். அதற்கு முன்பாகத்தான் ஒரு கருங்கல் உள்ளது. அதற்கு சத்தியக்கல் என்ற பெயரும் உண்டு. அது காரணப் பெயர்.

வழக்குகள் நடக்கும் போது வாதி, பிரதிவாதிகள் வாக்குமூலம் சொல்லும்போது மூன்று தெய்வங்கள் (வல்லவன், ஏழைகாத்த அம்மன், கருங்கல்) மீது சத்தியம் பிரமானம் செய்வதென்பது வழக்கு. அதனால்தான் அந்த சத்திய கல்லிற்கு, கருங்கல் தெய்வம் பெயர் ஏற்பட்டு, நாட்டுத் தெய்வங்களில் ஒன்றாக சேர்ந்தது என்பது மரபு வழி செய்தி.

நாட்டு எருதுகட்டு (புரவி எடுப்பு) சிவல் ஊரணித்திருவிழா

வேங்கைப்புலி கரைப் பிரிவைச்சேர்ந்த ஒரு பிரிவினர் சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் சுவாமியை குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். அப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் சிங்கம்புணரிக்கு சென்ற பொழுது அங்கு கோவிலில் பணி புரிந்துவந்த பூசாரி வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால், வந்திருந்த வெள்ளலூர் நாட்டு வேங்கைப்புலிக் கரைப்பிரிவைச் சார்ந்தவரிடம், தான் வெளியூர் சென்று வரும் வரை கோவிலில் சுவாமிக்கு பூஜை காரியங்களை செய்யுமாறு வேண்டிக்கொண்டாராம். அதன்படி பூஜை செய்து வரும்போது நாட்டுத்தெய்வம் அவருடைய தாய் உருவில் வந்து, சாமியின் நகையைக் கேட்டதாகவும், அவர் கொடுக்க மறுத்ததாகவும், சாமியே நேரடியாக அவரிடம் உன்தாயாரிடம் நகையை எடுத்துக்கொடு என்று கூற, சாமியின் உத்தரவை தட்டமுடியாமல் நகையை கொடுத்து விடுகிறார்.

பூசாரி வெளியூர் சென்று திரும்பியதும் பொறுப்பேற்கும் நேரத்தில், நகை ஒன்று குறைவதாக அறிந்து கோவில் பொறுப்பாளரிடம் புகார் தெரிவிக்க, வந்தவர் சாமியின் உத்தரவை மீறமுடியாமல் நகையைத் தான் மறைக்கவில்லை என்று கூறுகிறார். அவருடைய வாக்குமூலத்தை கூட்டத்தில் ஏற்க மறுத்து, கொழுவை நெருப்பில் காய வைத்து இரு கைகளில் ஏந்தி சத்தியம் செய்து உண்மையைக்

கூறும்படி உத்தரவிட, சாமியை வேண்டி நினைத்து தனது இரு கைகளிலும் காய்ச்சிய கொழுவை ஏந்தி அப்படியே வெள்ளலூர் மந்தைக் கோவிலுக்கு வந்து, அதனருகில் பாறையின் மேல் வைக்கிறார். அந்தப் பாறையில் கோடுகள் விழுந்து பிளவு ஏற்பட்டு சுனை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அச்சுனையிலுள்ள நீர் நிறைய நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்தியதாக ஐதீகம். இன்னும் சில நோய்களுக்கும் சுனை நீரை அருந்துகிறார்கள்.

சிங்கம்புணரியில் வந்த தெய்வசக்திக்கு பொங்கல் வைத்து பூஜிக்க விரும்புகிறார் அந்த வேங்கை புலிக்கரைகாரர். வெள்ளலூருக்கு அருகில் உள்ள சிவல் ஊருணியில் பொங்கல் வைக்கிறார். அப்பொழுது அருகாமையில் செம்புலிக்கரைப் பிரிவைச் சார்ந்தவர்கள், தங்களது நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் வலது மாடுகள் படுத்துவிடுகிறது. என்ன காரணம் என்று புரியாமல் எதிரே உள்ள ஊருணியை கவனிக்கிறார். அப்பொழுது அங்கே புகை வருகிறது. என்ன ஏது என்று அங்கு வந்து பார்கும்போது யார் நீ, இங்கே ஏன் பொங்கல் வைக்கிறாய்? என்றே வினவ, வேங்கைப்புலி கரைக்காரர் நடந்த விபரங்களை கூற, அப்பொழுது படுத்திருந்த மாடுகள் எல்லாம் எழுந்திருக்கிறது. கேட்டவையையும், பார்த்தவையையும் கண்டு எல்லோரும் அதிசயிக்கிறார்கள். அனைவரும் கலந்து கொண்டு பய பக்தியுடன் சாமி கும்பிடுகிறார்கள். அதன்பின் பின்னாளில் எங்கு மஞ்சு விரட்டு நடந்தாலும் சிங்கம்புணரி கோயில் மாட்டுத்தொழுவு மாடுகள்தான் முதலாவதாக திறப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

வெள்ளலூர் நாட்டு எல்லைப் பிரச்சினைகள் சுமூகமாக முடிந்து, வெள்ளலூர் நாட்டுக்கு சாதகமாக அமைந்ததால் சாயும்படைதாங்கி வீரணம்பலகாரர் அவர்கள் நாட்டுத்திருவிழாக்கள் நடத்துவது என முடிவெடுத்த பின், முதல் நாட்டுத்திருவிழாவாக சிவல் ஊரணி சேவுகப்பெருமாள் அய்யனார் கோவில் நாட்டு எருதுகட்டு, புரவி எடுப்பு திருவிழா நடத்துவது முடிவெடுக்கப்பட்டது. அதன்படி வெள்ளலூர் நாட்டு எல்கையினை ஓடி எடுத்த ஆதிதிராவிடர் கடம்பன் வகையறாவுக்கு முதல் மரியாதை கொடுத்து கௌரவப்படுத்துவது என்றும் அவர்கள் முதல் குதிரை எடுப்பதும், இரண்டாவது வெள்ளலூர நாட்டுக்குதிரை எடுப்பதும் என்று முடிவு செய்யப்பட்டது.

சிங்கம்புணரி கோவிலிலிருந்து தெய்வ சக்தியுடன் காய்ச்சிய கொழுவை ஏந்திவந்த வேங்கைப்புலிகாரர்களுக்கே உரிய சிவல் ஊருணி திருவிழா என்று நாட்டு எருதுகட்டு புரவி எடுப்பு என்றழைக்கப்படுகிறது. இந்தத் திருவிழாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதல் மரியாதை கொடுப்பது வெள்ளலூர் நாட்டுமக்கள், இதர சிறுபான்மை பிரிவினருக்கும் தகுந்த மரியாதை கொடுப்பது பரந்தமனப்பான்மையுடன் அனைத்து வகுப்பினரையும் அரவணைத்து, பிறநாட்டு பெரும்பான்மை வகுப்பினருக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள் என்று இன்றளவும் போற்றப்படுகிறார்கள்.

தமிழ் ஆண்டு தொடக்க சர்ச்சைகள்

சித்திரையா, தையா எது தமிழ் ஆண்டின் தொடக்கம் என்ற சர்ச்சைக்கு சித்திரைதான் என தீர்வு காணப்பட்டது. ஆனால் தொல்காப்பியத்தின் படி ஆண்டு என்பது ஆனியில் தொடங்கி ஆடியில் முடிவது என உள்ளது. இதனால்தான் இன்று கடைகளில் ஆடிக்கழிவு வந்ததோ?

தமிழ் ஆண்டின் தொடக்கமாக ஆவணியை கூறுகின்றனர். கார் காலத்தின் தொடக்கம், ஆண்டின் தொடக்கமாக வைத்தால் வளம் சேரும் என்ற நம்பிக்கையில் ஆவணி மாதம் தொடக்கமாக இருந்தது. ஆவணி, புரட்டாசியை கார்காலம் என்கிறார் தொல்காப்பியர்.

வெள்ளலூர் நாட்டை வளமாக வைத்துக் காப்பேன் என்று கூறிய ஸ்ரீ ஏழைகாத்த அம்மனுக்கு திருவிழா புரட்டாசி மாதத்தில் விழா எடுக்கிறார்களோ? என எண்ணத் தோன்றுகிறது.

ஸ்ரீ ஏழைகாத்தம்மன்

பூதலூருக்கு தெற்கில் வளம் நிறைந்த பகுதியில் ஆட்சி செய்து வந்த கள்ளர் குலத்தவனாகிய வில்லவராயன் என்பவன் திருவானைக்காவலிலுள்ள எம்பெருமான் கோவிலில் இடங்கை நாயகரென்று எழுந்தருளுவித்த இடப வாகன தேவர்க்கும் நம்பிராட்டியர்க்கும் என்று வருதலால், வில்லவராயன் பிரதிஷ்டை திருப்பணி செய்கிறான். என்று திருவானைக்காவல் கல்வெட்டு கூறுவதாக இருக்கிறது. (தென்னிந்திய சாசன புத்தகம் தொகுதி 3, பகுதி 2 பக்கம் 168) நம் பிராட்டியார் என்பது கள்ளர்களின் பெண்தெய்வம் என்று புலப்படுகிறது. முஸ்லிம்கள் படையெடுப்பின்போது ஸ்ரீரங்கம், திருவானைக் கோவிலில் இருந்த விக்கிரகங்கள் பாதுகாப்பாக பல இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. (அரங்கன் உலா என்னும் நூலில்) ஆச்சார்யமான வீடுகளில் பூஜித்து வருகிறார்கள்.

நாளடைவில் சிற்சில குறைபாடுகள் ஏற்பட்டு பெருங்கோபத்துடன் இன்றைய திருச்சிக்கு அருகிலிருந்து, தெற்கே நோக்கி புறப்பட்டுவந்து இன்றைய கோவில் அமைந்திருக்கும் இடத்தில் கல்லாய் சமைந்ததாகவும், அப்பொழுது அங்கிருந்த வயதான தாய் பூஜித்து வந்ததாகவும் வரலாறு. அந்தப் புண்ணியத்தாய் வணங்கி பூஜித்து வந்த தெய்வம்தான் அருள்மிகு ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் குறிச்சிப்பட்டி மேற்கே அம்மன்பட்டியில் கோயில் அமைந்துள்ளது.

வளமான வெள்ளலூர் நாட்டைக்காக்க வந்த ஏழைகுடிகாத்த அம்மனுக்கு விழா வெடுக்க வேண்டி நாட்டார்கள் முடிவெடுக்க ஒரு பெண்மூலம் அருள்வந்து இவ்வுலகம் உள்ளவரை நான் இந்நாட்டிலிருந்து இயற்கை வளங்களை பெருக்கி, மக்களைக் காத்து வருவேனென்று, நாட்டுத்தலைவரிடம் வாக்குறுதி கொடுத்ததாக செவி வழிச்செய்தி.

நாட்டார்கள் ஒன்றுகூடி புரட்டாசி திங்களில் விழாவெடுக்க முடிவெடுக்கிறார்கள்.

நாள் வைத்தல் (திருவிழாவிற்கான நாள் குறித்தல்)

ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் வெள்ளலூர் நாட்டு தலைமை ஊரான வெள்ளலூரில், பெரிய அம்பலகாரர், அம்பலகாரர்கள், இளங்கச்சிகள், பொதுமக்களனைவரும் ஒன்றுகூடி பூஜைகள் செய்து நாள்வைத்தல் நிகழ்ச்சி நடைபெறும், மக்கள் அனைவரும் ஒரு கட்டுப்பாட்டை கடைபிடிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். வெள்ளலூரில் உள்ள ஏழைகாத்த அம்மன்கோவிலில் அம்மனை வணங்கி ஏழு நல்ல பானைகளில் நாழி நிறைய நெல்லையளந்து அத்துடன் தீர்த்தமிட்டு போடப்படுகிறது. அப்பொழுது பெரிய அம்பலகாரர் கச்சைகட்டி சாமியாடி பெண்கள் குலவையிட்டு, அம்மனைப் போற்றிப்பாடி, பூஜைகள் செய்து காரணங்கள் பிடித்து விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிறது.

வெள்ளலூர் நாட்டின் முதல் தெய்வமான ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் திருவிழாவிற்கான நாள் நிகழ்ச்ச ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் நாள் வைத்த தினத்திலிருந்து திருவிழா நடக்கும் வரை பதினைந்து நாட்கள் இந்நாட்டு மக்கள் சில கட்டுப்பாடுகளை தவறாமல் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்த காலங்களில் அசைவ உணவு சமையல் செய்வதும் இல்லை. உட்கொள்வதும் இல்லை. பலகாரங்களுக்கான இட்லி, தேசை, வடை போன்றவற்றிக்கு மாவரைப்பதும் இல்லை. சுடுவதும் இல்லை. எண்ணையை பயன்படுத்தி தாளிப்பதும் இல்லை. பெரும்பாலும் எண்ணை பயன்படுத்துவதை தவிர்த்து விடுகிறார்கள். கொழுப்பு, ரத்தகொதிப்பு சம்பந்தப்பட்ட உணவு வகைளை தவிர்த்து விடுகிறார்கள். எளிய உணவு, எளிதில் செரிக்கும் உணவுகளை இயற்கை உணவுகளை உட்கொண்டு விரதம் கொள்வார்கள். குறிப்பிட்ட விரதக்காலங்களில் இவ்வாறு உணவு எடுத்துக்கொள்வது உடலுக்கும், மனதுக்கும் மிக நல்லது என இன்றைய ஆராய்ச்சியாளர்களும் மருத்துவர்களும் கூறுகிறார்கள். இதை உணர்ந்து தான் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த நல்ல பழக்க வழக்கங்களை இன்றளவும் செயல்படுத்தி வருகிறார்கள். மரண நிகழ்வுகள் ஏற்பட்டாலோ கேதம் மட்டும் கண்டு (துக்கம் விசாரிப்பது) கொட்டு, குலவை ஏதும் இல்லாமல் இறுதி மரியாதைகள் செய்து வருகிறார்கள். ஏனென்றால் உற்றார்களைத்தவிர பொதுவாக மற்றவர்கள் திருவிழாக்காலங்களில் கலந்து கொள்ளமாட்டார்கள். விழா முடிந்த பின்தான் சம்பிரதாயங்கள் நிறைவேற்றப்படும். பொதுவாக சுப நிகழ்ச்சிகள், துக்க அனுஷ்டிப்பு தவிர்க்கப்படும்.

இந்த காலங்களில் புதிய தொழில் தொடங்குவதில்லை. வெளியூர் செல்வதைத் தவிர்த்து அப்படியே சென்றாலும் திருவிழாவுக்குள் தங்களது ஊர்களுக்கு வந்து விடுவார்கள். பச்சை மரம் வெட்டப்படமாட்டாது. பச்சை மரத்தில் பட்டை உரிக்கமாட்டார்கள். இதற்கெல்லாம் நாள்தடை என்று கூறுவர்.

கட்டுப்பாடு

திருவிழாவுக்கு நாள் குறித்தது முதல் வெள்ளலூர் நாட்டு மக்கள் வெளியூர்களில் இரவுநேரங்களில் தங்குவதில்லை. நாள் வைத்தப்பின் மக்கள் புதிய தொழில்களில் ஈடுபடுவதும், கொடுக்கல், வாங்கல் நடத்துவது இல்லை. நிலம், வீடு, சொத்து வாங்குதல், திருமணம் போன்ற சுபகாரியங்களும் செய்வதில்லை. நாள் வைத்த பின், பிற தெய்வ வழிபாட்டிற்கென மக்கள் செல்வதில்லை. வெள்ளலூர் நாட்டின் ஏனைய தெய்வங்களுக்கும் பூஜை செய்வதில்லை. வீடுகள் புதிதாக கட்டுவதில்லை. மரங்கள் வெட்டுவதில்லை. வீடுகளில் உணவு வகைகள் எண்ணெய்யில் தாளிப்பது இல்லை, இளநீர் வெட்டுவதில்லை, தேங்காய் உடைப்பதில்லை. வீடுகளில் பலகாரம், மாமிசம் முதலான (மீன் தவிர) அசைவ உணவுகளை சமைப்பதும் இல்லை. மரணங்கள் நேர்ந்தால் செத்தவர்களுக்காக அழுவதில்லை, இறந்தவர்களை கொட்டு இல்லாமல், பூ இல்லாமல், வானவேட்டுப் போடாமல் அடக்கம் செய்து வருகின்றனர். மக்கள் பச்சை நெல்லை அரைப்பதில்லை, மண், சிமெண்ட் குலைக்கமாட்டார்கள், புத்தாடை அணியமாட்டார்கள், திருமணம் நிச்சயம் செய்யமாட்டார்கள், உறவினர்களோ, நண்பர்களோ தங்களது இல்லங்களுக்கு வந்தாலும் தனிவகை உணவுகளோ, விருந்துகளோ கொடுப்பதில்லை. அவர்களை தங்களுடைய வீட்டில் இரவு நேரங்களில் தங்க வைப்பதும் இல்லை.

ஏழுகன்னிமார் பிள்ளைகள்

நாள் வைத்தலுக்கு முந்தின நாள் வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த பதினொரு கரைகளிலிருந்த பருவவயதை அடையாத ஏழு பெண்களை பெரிய மது எடுப்பவர் தேர்ந்தெடுப்பார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழுகன்னிமார் பிள்ளைகள் அம்மனாக வணங்கப்படுகிறார்கள். ஏழுகன்னிமார் பிள்ளை தேர்ந்தெடுப்பது ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் திருவிழாவின் அங்கமாக இருப்பதற்கான காரணம் பின்வருமாறு:

வெள்ளலூர் நாட்டில் கள்ளர் பிரிவைச் சார்நத, ஒவ்வொருப் பிரிவினருக்கும் சிறுபான்மை இனத்தைச்சேர்ந்தவர்கள் பாடியப்பனாக வாழ்ந்து வருகிறார்கள். பாடியப்பன் என்றால் பாதுகாப்பவன் என்று பொருள் அந்தந்த இனங்களுக்கு கள்ளர்கள், பாடியப்பன் என்ற பாதுகாப்பவனாக இருந்து வருகிறார்கள் இந்தச் சிறுபான்மை இனங்களை பாதுகாப்பது அந்தந்த கள்ளர் பிரிவுக்கு கடமை, உரிமைகள் உண்டு. இவர்களுக்கு ஏதாவது பாதிப்போ குறையோ ஏற்பட்டால், கிராமத்து கூட்டத்திலோ, நாட்டுக்கூட்டத்திலோ, பாடியப்ப கள்ளர்கள்தான் வணங்கி வழக்குத் தொடுத்து உரிய நியாயம் பெற்றுத்தரவேண்டும். இந்த முறை சிறுபான்மை பிரிவினரை காக்கும் எண்ணத்தில் உருவாக்கப்பட்டு காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. திருமான் கரைக்கு பாத்தியப்பட்ட பாடியப்ப செட்டியார் ஒருவரை தன் கரைக்கு மாற்றி விடமென்று நினைத்து, அப்பொழுது பெரிய அம்பலகாரராக இருந்த, சாயும் படைதாங்கி வீரணன் அம்பலகாரர் அவர்கள் செயல்பட்டார். அதற்கு அந்த பாடியப்ப செட்டியாருக்கும் விருப்பமில்லை. பெரிய அம்பலகாரர் என்பதால் பயந்து மறுக்கவும் இயலவில்லை. மற்றவர்களும் கேட்கவில்லை.

இந்நிலையில் தனது பாடியப்ப உரிமையை காக்கவும், நிலை நாட்டும் பொருட்டு திருமான் கரைகாரர் வழக்குத்தொடுத்தார். ஒவ்வொரு கட்டமாக கடந்து, இறுதியில் நாட்டுக்கூட்டத்துக்கு வழக்கு வந்தது. நீண்ட நாளாக நடந்து வருகிறது. பெரிய அம்பலகாரர் சம்பந்தப்பட்டிருப்பதால் நாடு, சரியான தீர்வு காண்பதற்கு விவாதங்கள் விளக்கங்கள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திருமான் கரை காரர்நாட்டுத் தெய்வமான ஸ்ரீ ஏழைகாத்த அம்மனிடம் வேண்டுகிறார். புலம்புகிறார். இறுதியில் தீர்க்கமான முடிவு எடுத்து ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவில் முன், தன் வகையில் பிறந்த ஏழுபெண்குழந்தைகளை நீதி நியாயம் கிடைக்க வேண்டி அந்தப்பெண் குழந்தைகளை கருதடிப்பதுபோல் ஒவ்வொரு இரவில் பலியடிக்கிறார். அம்மன் அவரைத் தடுத்து நிறுத்தி ஒவ்வொரு இரவும் திருமான் கரைகாரரை அழைத்துக்கொண்டு, பெரிய அம்பலகாரர் இல்லத்துக்கு அழைத்துச்சென்று, அவர் உறங்கும் தோரணையைக் காட்டுகிறது. அவரைச் சுற்றி ஜெகஜோதியான விளக்குகளும், செந்நாய்களும் காவல் காக்கிறது. தேவதைகள் அவருக்கு வெண்சாமரை வீசுவது போல் தெரிகிறது.

தன் ஆணவம், அகங்காரத்தால் தொடர்ந்து பல தவறுகள் செய்து வருகிறார். அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது. ஒவ்வொரு நாளும் விளக்குகளும், காவல்காக்கும் செந்நாய்களும், சாமரம் வீசும் தேவதைகளும் மறையும். கடைசியாக அவர் மரணத்தை அவருக்குத் தெரிவிப்பேன் என்று அம்மன் கூறி மறைகிறது.

அப்பொழுது பெரிய அம்பலகாரர் மைத்துனரான கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரரும் நய்க்கான் கரைப்பிரிவில் அம்பலகாரராக இருந்து வந்துள்ளார். வழக்கின் தீவிரத்தை உணர்ந்தும், பெரியம்பலகாரரான தனது மைத்துனர் வீரணனம்பலகாரர் செய்துள்ள தவறையும் சுட்டிக்காட்டியும்,

கூட்டத்திலுள்ள மற்ற அம்பலகாரர்கள் நீதிக்கு புறம்பாக பேசுவதும், செயல்படுவதும் கண்டு நியாயம் கிடைக்க வாதிடுகிறார். வழக்கு பல வாய்தாக்கள் காண்கிறது.

பெரிய அம்பலகாரான வீரணன் அம்பலகாரர் தனது மனைவியிடம், உன் தம்பி மட்டும் நாட்டுக்கூட்டத்தில் என்னை எதிர்த்து பேசி என் எண்ணத்துக்கு தடை போடுகிறான். அதற்கு, அவர் மனைவி, அடுத்த வாய்தாவுக்கு முன் தனது தம்பியான கட்டக்காளை அம்பலகாரரை வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கச் சொல்கிறார். விருந்து நடைபெறும் வேளையில் தம்பி, மச்சானை நாட்டுக் கூட்டத்தில் எதிர்க்காதே, அனுசரித்தும் போ என்று கூறி தனது தம்பியின் கையில் நாழிப்பால் ஊற்றி மச்சானுக்காக அனுசரனையாக பேசுவேன் எனக் கூறி சத்தியம் செய்யச் சொன்னாராம். அதற்கு அக்கா, நாழிப்பால் ஊற்றினாலும் கட்டக்காளை நடுச்சொல்வான், களப்பால் ஊற்றினாலும் கண்ட நியாயம் சொல்வான் எனக்கூறி எழுந்தாராம்.

உள்ளம் உடைமை உடமை பொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும் - குறள்

ஊக்கம் உடைமையே ஒருவனது நிலையான செல்வம் ஆகும். மற்றைய செல்வங்கள் எல்லாம் நிலைத்திருக்காமல் ஒரு காலத்தில் நீங்கிப்போய் விடும்.

அன்றைய வழக்கின்போதும் இந்நாடு, சரியான நீதி வழங்காவிடில் ஆறுபேர் மக்களாலும் நாலு பேர் மக்களாலும் ஆளப்பட்டுவரும் வெள்ளலூர் நாடு இரண்டாக உடைந்து போய் விடும் என்ற அர்த்தத்தில் ஆறு ஆறுதான்! நாலு நாலுதான் என்ற அர்த்தத்தில் கூட்டத்தில் கட்டக்காளை பெரியகருப்பனம்பலகாரர் கர்ஜித்தாராம். அவ்வழக்கின் தீர்ப்பு எதிரொலியாக திரு.வீரணனம்பலகாரர் மரணம் சம்பவிக்கிறார். ஏற்கனவே ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் உன் கன்னத்தில் கட்டி புறப்படும். அன்றிருந்தில் 48-வது நாள் மரணம் சம்பவிப்பாய் என பெரியம்பலகாரரிடமே கூறி உள்ளது. இதை நாட்டாரிடம் பெரிய அம்பலகாரர் தெரிவிக்கிறார். மரணத்தை முன்னமையே அறிந்த மாபெரும் மனிதர் என்று காலங் காலமாக அவரை பற்றி பேசப்பட்டு வருகிறது. பலியடிக்கப்பட்ட ஏழுகன்னிமார் குழந்தைகளை நினைவு கூர்ந்து, பெருமைப்படுத்தும் பொருட்டு தகுந்த பெண் குழந்தைகளை ஏழுகன்னிமார் பெண்களை தேர்ந்தெடுத்து, அவர்களை அம்மனைப்போல் பாவித்து விழா நடத்த வேண்டும் என்று உயிர் பிரியும் தருவாயில் வீரணனம்பலகாரர் நாட்டாரிடம் வேண்டுகிறார். அதன் படி பின்நாளில் திருவிழாவின் அங்கமாக ஏழுகன்னிமார் பெண்களை நாட்டார்கள் இணைத்தார்கள் என்பதே உண்மை.

இது தவிர ஏழுகன்னிமார் சம்பந்தப்பட்டு வேறு ஒரு காரணமும் கூறப்பட்டு வருகிறது. அக்காள் தங்கை இருந்து வந்ததாகவும், அக்காளுக்கு குழந்தை இல்லை என்றும் தங்கைக்கு ஏழு பெண் குழந்தைகள். அக்குழந்தைகள் அக்காளின் மேல் மிகப்பிரியமாக இருந்து வந்துள்ளனர். இதனால் தங்கை பொறாமையடைந்து, அக்காள் வீட்டிற்கு வரும்போது குழந்தைகளை பஞ்சாரக்கூடையில் வைத்து மறைத்து விட்டார். இதையறிந்து அக்காள் மனமுடைந்து இறைவனிடம் வேண்டியதால் குழந்தைகள் அனைவரும் கல்லாகிவிட்டார்கள். அதன் நினைவாகத்தான் ஏழு கன்னிமார் விழா எடுக்கிறார்கள் என்று சிலரால் கூறப்படுகிறது. இது தவறு. வெள்ளலூர் நாடும் அதன் மக்களும் நீதி, நியாயம், நேர்மை, சத்தியம், இவைகளை கடைப்பிடிப்பதே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு

வழக்கின் முடிவே மக்களின் மனத்தில் பதிந்து, அதை நிகழ்வாகவோ, விழாவாகவோ கடைப்பிடித்து கொண்டாடி வருகிறார்கள். இடைப்பட்ட காலத்தில் அக்காள் தங்கை கதை செருகப்பட்டதாகவே தெரிய வருகிறது. தவறாக வேறு பகுதியில் நடந்த இது கதையை இங்கு உலவவிடுகிறார்கள்.

வெள்ளலூர் நாட்டுச்சிற்பியான வீரணன் அம்பலகாரருக்கு திருமான்கரை பாடியப்ப செட்டியார் வழக்கின் முடிவு, போற்றிப்புகழும் அவரது பெருமைக்கு சிறுமை ஏற்படுத்திவிடுமோ என்ற எண்ணத்தினாலும் பரப்பப்பட்டிருக்கலாம். பலியடிக்கப்பட்ட ஏழு பெண் குழந்தைகள் நினைவாக விழா எடுக்க வேண்டுமென்று அவர் இறக்கும் தருவாயின் போது நாட்டார்களிடம் வேண்டிக்கேட்டுக் கொண்டுள்ளார் வீரணனம்பலகாரர். இதன் மூலம் தனது தவறை உணர்ந்து வருந்தியிருக்கிறார். பொறுப்பில் உள்ளவர்கள் எந்த தவறும் செய்யக்கூடாது என்று எண்ணம். அப்படிப்பட்ட ஒரு வழக்கின் தீர்ப்புக்குப்பின், அதனால் ஏற்பட்ட விளைவை உணர்ந்து மக்களாலும் நாட்டாராலும் கொண்டு வரப்பட்டதே ஏழு கன்னிமார் விழா. அதை ஸ்ரீ ஏழைகாத்த அம்மனின் திருவிழாவின் ஒரு அங்கமாகவே நடத்தப்பட்டு வருகிறது.

நீதிக்குப் புறம்பாக நடந்து கொள்ளக்கூடாது, என்று வருங்கால சந்ததியினருக்கு உணர்த்துவதே ஏழு கன்னிமார்கள் விழா என்பதே நினைவுகொள்ளத்தக்கது. இன்றளவும் திருமான கரைகாரரால் நீதி கேட்டு ஏழு பெண் குழுந்தைகளை பலியடிக்கப்பட்ட கல் ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவில் முன் பகுதியில் உள்ள சவுக்கைக்கு முன் பதித்தபடியே செங்குத்தாக உள்ளது.

சில காலங்களுக்குப் பின் கோவில் விரிவாக்கத்தின் போது, அந்தப்பலி அடிக்கப்பட்ட கல் வேறு இடத்தில் மாற்றி வைக்க திருமான் கரைகாரர்களிடம், நாட்டார்கள் வேண்டினார்கள். அதற்கு, காலங்கலமாக இந்தக் கல் பேசப்படவேண்டுமென்றும், பாடிப்பன்மார்களுக்காக எவ்வளவு நாங்கள் போராடினோம்? எங்கள் குழந்தைகளை இழந்து எவ்வளவு துயறுற்றோம்? என நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என நாட்டார்களிடம் வேண்ட அக்கோரிக்கையில் உள்ள சரித்திர முக்கியத்துவத்தை உணர்ந்து நாட்டார்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வெகுகாலமாக அந்த சவுக்கையில் யாரும் உட்காரமாட்டார்கள், தெரியாமல் உட்கார்ந்த ஆதினிப்பட்டி அம்பலகாரர் ஒருவர், பின் இதன் விபரமரிந்து, மனம் பேதழித்து, உடல் நலம் குன்றி மரணம் சம்பவித்தார் என்று கூறப்படுகிறது. இதன் மகத்துவம் தெரியாமல்தான் இப்போழுது சிலர் உட்கார்ந்து ஓய்வெடுக்கிறார்கள். சவுக்கை ஒரு புனித இடம் என்பதை யாரும் மறக்க வேண்டாம். அதனால் தான் ஒவ்வொரு வளவிலும், ஒவ்வொரு ஊரிலும் சவுக்கை புனித இடமாக கருதப்பட்டது.

அமுது

எட்டாம் நாள் நல்ல நெல்போட்ட பானைகளிலிருந்து வளர்ந்த முளைப்பாரியை ஏழு கன்னிமார்ப் பெண்களும் எடுத்துக் கொண்டு சுனை அருவிப்பாறைக்கு வந்து நன்றாக முளைத்ததனை உலர்த்தி, அதைக் கொண்டு வந்து கள்ளமுது சேர்க்கிறார்கள். அதை அம்மனுக்குப் படைத்து பூஜை செய்கிறார்கள்

.

அம்பலச்சோறு

அதற்கடுத்த ஐந்தாம்நாள், அந்த வார முதல்நாள் ஞாயிற்றுக்கிழமையன்று மலட்டாடு (ஈனாத ஆட்டுக்குட்டி) தனை பக்தியுடன் பூசாரி அவர்கள் சமைத்து அம்மனுக்கு படைத்தப்பின் இருபத்திரண்டு அம்பலகாரர்கள், இளங்கச்சிகள் காரணப்பிரகாரம் அமரவைத்து பரிமாறப்படுகிறது.

நாட்டுகோவில்களில் உற்சவர் உலா வருதல்

முதல் நாள் விழா

கற்பக விருட்ச வாகனம்

சிம்ம வாகனம்

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல்

அருளல் என்னும் ஐந்தொழிலைப்புரிகிறார். இதில் கற்பக மரம் படைத்தல் தத்துவத்தைக் குறிப்பதாகும். ஒரு மரத்திற்கு வேர் ஆதாரமாகவும், இலைகள் நரம்புகள் கிளைகள் பரவியும் உள்ளன. அதுபோல் உலகத்திற்கு இறைவன் ஆதாரமாக இருக்கிறார். அவரைச்சார்ந்து 84 லட்சம் வகை உயிரினங்கள் எங்கும் பரவியிருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. மனித மனத்தில் கோபம், அகங்காரம் பேராசை தற்பெருமை உள்ளிட்ட எத்தனையோ அசுர குணங்கள் உள்ளன.

இவற்றை அடக்கி நல் வழியில் மனதைத் திருப்பினால் வாழ்வு உயர்வு பெறும் நல்ல விஷயங்களில் மனம் ஈடுபடவேண்டுமானால் இறைவனின் திருவருள் பெற வேண்டும். கற்பக விருட்சம் கேட்டதெல்லாம் கொடுக்கும் குணம் கொண்டது. கேட்டதெல்லாம் கிடைத்து விட்டால் தான் என்ற ஆணவம் வந்து விடும். ஆணவத்தைப் போக்குவதற்காகவே இறைவன் அவ்வப்போது பல வகைகளில் வாகனங்களில் மீதேறி உலா வந்து, எல்லாம் கிடைத்து விட்டது என ஆட்டம் போடாதே கவனமாய் இரு என்று எச்சரித்து நம்மை நல்வழிப்படுத்துகிறான். இந்த அரிய தத்துவத்தை உணர்ந்து அம்மனை வணங்கி நல்லதைப்பெறுவோம். நல்லதற்கே பயன்படுத்துவோம்.

இரண்டாம் நாள் திருவிழா

பூதம் அன்னவாகனம்

அவரவர் செய்த நல்வினை, தீவினைகளால் பிறப்பு ஏற்படுகிறது. அவ்வாறு பிறந்த ஒவ்வொருவரையும் இன்பம் துன்பம் காலம் ஆகிய பூதங்கள் பயமுறுத்துகின்றன. அந்த பூதங்களை அடக்கி முக்தியளிக்க இறைவன் பவனி வருகிறார். அன்னவாகனத்தில் அன்னை பவனி வருகிறார். அன்னத்தின் நிறம் வெண்மை. நம் உள்ளம் வெள்ளையாய் இருக்க வேண்டும். பாலும், நீரும் கலந்து வைத்தாலும் பாலை மட்டும் அன்னம் பருகும். அதுபோல் நல்லதும் கெட்டதும் கலந்த இவ்வுலகத்தில் நல்லதில் மட்டுமே நம் மனம் செல்ல வேண்டும் என்று அன்னத்தில் பவனி வரும் அன்னை நமக்கு தத்துவப்பாடம் நடத்துகிறார்.

மூன்றாம் நாள் திருவிழா வாகனம்

காம தேனு வாகனம்

மூன்றாம் நாளில் அம்மன் காமதேனு வாகனத்தில் பவனி வருகின்றார். மனிதன் நல்ல குணம், மூர்க்க குணம், மந்த குணங்கள் கொண்டவனாக உள்ளான். மண், பெண், பொன் ஆகிய ஆசைகளில் சிக்கித்தவிக்கிறான். தேவலோகத்தில் இருக்கும் தெய்வப்பசு காம தேனு. அது கேட்கும் வரம் தரும். அம்மனும் கேட்ட வரம் தருபவளாக காமதேனு வாகனத்தில் பவனி வருகிறாள். பசு தன் ரத்தத்தைப் பாலாக்கி உயிர்களுக்கு அளிக்கிறது. அது போல் மனிதனும் பேராசை சுயநலத்தை விடுத்து பொதுநலம் பேண வேண்டும் என்பதை காமதேனு வாகனம் உணர்த்துகின்றது.

நான்காம் நாள் விழா

தங்கப்பல்லக்கு

நல்வினை, தீவினைகளைச்செய்தால் பூமியில் மனிதனாக பிறப்பெடுத்திருக்கிறோம். எதிர்காலம் எப்படியும் அமையும் என்பதை யாராலும் அறுதியிட்டுக்கூறமுடியாது. அதை அறிந்தவன் இறைவன் ஒருவனே. ஒருவர் எதிர்காலத்தில் நன்மை மட்டுமே நடக்கும் என்று தெரிந்துவிட்டால் ஒரேயடியாக ஆட ஆரம்பித்துவிடுவார், துன்பம் மட்டுமே நடக்கும் என்று தெரிந்துவிட்டால் கவலைப்படத் துவங்கிவிடுவார். எல்லாம் முன்கூட்டியே தெரிந்து விட்டால் வாழ்வில் சுவாராஸ்யம் இருக்காது.

நன்மை, தீமை இரண்டில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்னும் நிலை இருந்தால் தான் நன்மையை மட்டுமே பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கும். செயல்களில் உற்சாகம் பிறக்கும். எப்படியும் வெற்றி அடைந்தே தீர வேண்டும் என்ற குறிக்கோள் உண்டாகும்.

எனவே கடமையைச் செய்யுங்கள், பலனை நாங்கள் தருவோம் என அம்மன் தத்துவப்பல்லக்கில் பவனி வந்து உணர்த்துகிறார்.

ஐந்தாம் நாள் விழா

குதிரை வாகனம்

ஐந்தாம் நாளில் அம்மன் குதிரை வாகனத்தில் பவனி வருகின்றார்.

அறம், பொருள், இன்பம், வீடு பேறு (மோட்சம்) என்பவை குதிரையின் நான்கு கால்களைக் குறிக்கின்றது. தர்மப்படி தொழில் செய்து இறைவன் திருவடியை அடைவான் என்பது இதன் பொருள், திறமை படைத்த வீரன் செலுத்தும் குதிரை குறிக்கோளை சென்றடைவது போல, நம் மனக்குதிரையை அடக்கி சரியான வழியில் செலுத்துபவன் இறைவன் என்பதையும் இந்த வாகனம் உணர்த்துகிறது.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதே குதிரை வாகனத்தில் இறைவன் வருவதே கல்கி அவதாரத்தை நினைவூட்டுகிறது.

ஆறாம் நாள் விழா

ரிஷப வாகனம்

ஆறாம் நாள் விழாவில் அம்மன் ரிஷப வாகனத்தில் பவனி வருகிறார்.

திருஞான சம்பந்தர் மூன்று வயது பாலகனாக இருந்தபோது அவரது தந்தை கோயிலுக்கு அழைத்துச்சென்றார். குழந்தையை கோயிலில் உள்ள குளக்கரையில் அமர்த்திவிட்டு நீராடக்கிளம்பினார். நேரமானதால் பசியால் வாடிய சம்பந்தர், அம்மா என்று அழத்தொடங்கினார். இறைவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தான் மட்டும் வராமல் அம்மா என்று அழைத்ததால் பார்வதியையும் அழைத்து வந்தார். அம்பிகை சம்பந்தரைக் கையில் வாரி எடுத்து பொற்கிண்ணத்தில் ஞானப்பால் கொடுத்து மறைந்தாள். கறையேறிய சம்பந்தரின் தந்தை பால் சிந்திய வாயோடு நின்றிருந்த சம்பந்தரிடம் கோபம் கொண்டார். குச்சி ஒன்றை எடுத்து மிரட்டி, உனக்கு பாலூட்டியது யார்? என்று கேட்க குழந்தை ஞானத்தமிழால் பாடத்தொடங்கியது. தோடுடைய செவியின் என்ற முதல் தேவாரப்பாடல் அக்குளக் கரையிலே அரங்கேறியது. அப்போது அம்மையும், அப்பனும் ரிஷப வாகனத்தில் காட்சியளித்தார். சம்பந்தர் பெற்ற ஞானக்காட்சியை நாமும் பெற வேண்டும் என்பதற்காக அம்மன் ரிஷப வாகனத்தில் பவனி வருகிறார். ரிஷப வாகன தரிசனம் மிகுந்த புண்ணியம் தரும். இதனால் மனநிறைவும், செல்வவளமும் வாழ்வில் உண்டாகும்.

ஏழாம் நாள் விழா

யாளி வாகனம்

ஏழாம் நாள் அம்மன் யாளி வாகனத்தில் பவனி வருகின்றார். இத்தரிசனத்தை காண்பவர்களின் செயல்கள் தடையின்றி நிறைவேறும் முன்ஜென்ம பாவம் நீங்கும்.

அன்னை பவனி வரும் யாளி வாகனம் யானையும், சிங்கமும் கலந்த உருவமாகும். மதம் பிடித்து அடங்காமல் திரியும் யானையும், தற்பெருமை கோபம் கொண்டு அலையும் சிங்கமும் அருள் சக்தியான அன்னையின் முன் அடங்கி ஒடுங்கி விடுவது போல, ஆணவம், தற்பெருமை போன்ற கீழான எண்ணங்கள் கொண்ட மனிதனும் அன்னையின் முன்னே கட்டுப்பட்டே தீரவேண்டும் என்பதை இந்த யாளி வாகனம் உணர்த்துகிது.

திருவிழா காலத்தில் வலம் வரும் முறை

திருவிழா காலத்தில் சுவாமி வீதியில் பவனி வரும்போது மூலவரின் எல்லா சக்தியையும் எடுத்துச்செல்வதாக ஐதீகம். அந்த சமயத்தில் மூலவருக்கு அர்ச்சனை செய்தல், வலம் வருதல் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது. ஏனெனில் கோயிலுக்குள் மூலவரும் உற்சவரும் (பவனி வரும் சுவாமி) ஒன்றாக இருக்கும் சமயத்தில் மட்டுமே வலம் வரவேண்டும். என்பது மரபு. இந்த நடைமுறை கொடிமரம், உற்சவர் அமைந்துள்ள கோயில்களுக்கு மட்டுமே பொருந்தும்.

அம்மனின் திருநாள்

பதினைந்தாம் நாள் செவ்வாய்க்கிழமையன்று 22 கரை அம்பலகாரர்கள், இளங்கச்சிகள், வெள்ளலூர் நாட்டுமக்களும், பிறநாட்டு மக்களும் வெள்ளலூரில் உள்ள ஏழைகாத்தம்மன் கோவில் முன் கூடுவார்கள். பகல் உச்சிப் பொழுதாகும் போது சிவல் ஊருணித்தீர்த்தம் கொண்டு வரப்பட்டு தீர்த்தாபிஷேகம் செய்து மாத்துக்கள் விரித்து வைத்து, மதுவையும் எடுத்து வைத்து, பூஜைகள் செய்து அம்மனுக்கு மகுடம் சூட்டப்படுகிறது.

பின் பெரிய அம்பலகாரர் அருளுடன் பெரிய மதுவை தூக்கி, பூசாரி சிரசில் வைத்து ஏழைகாத்த அம்மன் (பெண்கள் குலவையிட) தன் இருப்பிடமான அம்மன் கோவில்பட்டிக்கு அருகில் உள்ள கோவிலுக்கு கிளம்ப ஆரம்பிக்கிறார். பெரியமதுவுடன், ஏழு கன்னிமார்ப்பெண்கள், பெரிய அம்பலகாரர், மற்ற அம்பலகாரர்கள் மது எடுப்போர்கள், பிரிசுற்றுபவர்கள், பூக்கடை எடுப்போர் மற்ற வேண்டுதல் வேண்டிக்கொண்டோர், பொதுமக்கள் அனைவரும் வெள்ளலூர் ஸ்ரீ மந்தக்கருப்பணசுவாமியை வணங்கி வலம் வந்து, அங்கேயுள்ள கருங்கல் கருப்புத் தெய்வத்திற்கு பூஜை பல செய்து, புள்ளிகளும் கொடுத்து ஸ்ரீ ஏழைகாத்தாள் தன் இருப்பிடம் நோக்கி புறப்படுகிறார். வெள்ளலூரை அடுத்த சித்திரை உடைப்பு கண்மாயில் பூஜை செய்து பின் மேலவளசை அடுத்து செட்டி உருணிக்கு அருகில் மதுப்பொட்டலில் பெரிய மது, ஆயிரக்கனக்கான ஆன்மீகப்பக்தர்கள் தங்கள் கொண்டுவந்த மதுக்கலையங்களை இறக்கி வைப்பார்கள்.

பின் சிலை எடுப்போர் சிலைகளையும், பிரி சுற்றுபவர், பூக்குடை எடுப்பவர்கள், மற்ற வேண்டுதல் வேண்டிக்கொண்ட பக்தர்களுடன் முறைப்படி பூஜைகள் பல செய்து பின் பெரிய மதுவை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டும், மற்ற சிலை எடுப்போர் சிலைகளைத் தாங்கிக் கொண்டும், மதுக்கலையம் எடுப்போர், மதுக்கலையங்களைத் தாங்கிக் கொண்டும், மற்ற ஆன்மீகப்பக்தர்கள் அந்த மதுப்பொட்டலை ஒரு சுற்று சுற்றி கோட்டநத்தம்பட்டி ஊரிலுள்ள பழையூர்பட்டி விலக்கில் பூஜைகள் செய்து. புள்ளி கொடுத்து அதன்பின் வெள்ளக்கண்மாய்க்கு அருகில் பூஜை, புள்ளி கொடுத்து நாயத்தான்பட்டி விலக்கில் பூஜை புள்ளி கொடுத்தும், ஸ்ரீ வல்லடிகாரர், கம்பக்குடி முத்தையனை. ஏழைகாத்தாள் வணங்கி கிழக்கு முகமாக நாரணன் கரை. சேங்கைக்கரையோரம் வழியாக அம்மன் பட்டியில் பூஜை, புள்ளிகள் கொடுத்தும், தேரடி வீதிவழியாக கோவிலின் வடக்கு கோபுரம் வழியாக கோவிலுக்கு சென்று அம்மனுக்கு பூஜை செய்வர். அம்பாள் மடியிலே பெரிய மதுவை எடுத்துக்கொண்டு வைத்து பூஜை செய்வர். மற்ற மதுக்கலையங்கள் கொடிமரம் அருகிலுள்ள பீடத்திலும் சிலைகள் மூலஸ்தானத்திற்கு தெற்கே வைக்கப்படும். மற்ற பக்தர்கள் கோவிலைச்சுற்றியும், பூக்குடை பிடிப்போர் தெப்பத்தை ஒரு சுற்று சுற்றி வடபுற வழியாக கோவிலுக்குச் சென்று அம்மனைத் தரிசித்து பூஜை செய்து, காணிக்கைகள், மற்ற வேண்டுதல்களை நிறைவேற்றி கிழக்குபுறம் வழியாக வெளியேறுவர்.

ஏழுகன்னிமார்ப்பிள்ளைகள் கோவிலில் வடகிழக்கில் அமைந்துள்ள விடுதிக்கு வடக்கே பூஜைகள் செய்து அம்மனருளுடன் தனது இல்லங்களுக்கு மகிழ்ந்து செல்வர். அன்று மாலை முதல் இரவு முழுவதும் அம்மனை தரிசிக்க பக்தர்கள் வந்து கொண்டிருப்பார்கள். வான வேடிக்கைகள், பூக்கடைகள். பொம்மைக்கடைகள், இனிப்புக்கடைகள். பொறிக்கடைகள். ராட்டினங்கள், தேரோடும் வீதியிலும் மக்கள்

திரள்திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். மறுநாள் தேர்த்திருவிழா மற்றும் தேரோட்டம் நடைபெறும் அதைத்தொடர்ந்து மறுநாள் அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு விழாவும், மறுநாள் வெள்ளகிழமை உற்சவ சாந்தி பூஜை செய்து கொடி மரத்திலிருந்து கொடி இறக்கி திருவிழா இனிதே முடியும்.

ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி

இத்தெய்வம் சுயம்புலிங்கமாக கூகைகுத்தி மரத்தின் அடியில் உருவானதாக செவிவழி செய்தி. வெள்ளலூர் நாட்டின் தெய்வமான ஏழைகாத்த அம்மனுக்கு பக்தர்கள் கொண்டு வரும் பூஜைப்பொருட்களை கூகைகுத்தி மரவேர் அடியில் இருக்கும் கல் தட்டிவிட்டு பூஜைப்பொருட்கள் தொடர்ந்து கீழே மண்ணில் விழுகிறது. அதைத் தொடர்ந்து பக்தர்கள் அம்மனிடம் முறையிட அம்மன் பெருங்கோபம் கொண்டு யார் அந்த வல்லவன்? எனது எல்லையில் இந்தத் தவறுகளை செய்வது என்று நீ யார்? எங்கிருந்து வந்தாய்? என்று அம்மன் வினவ. காரியாபட்டி அருகில் தெய்வமாக அம்மக்களுக்கு அருள்புரிந்து வந்தேன். நாளடைவில் மக்கள் என்னை மறந்து சரியாக பூஜிக்காததால் கோபமாக புறப்பட்டு இங்கு வந்தேன். இங்கு உன் அதிகாரத்திற்குட்பட்ட எல்லையில் உன்னை சந்தித்து என் குறைகளை கூறி இங்கே தங்க விரும்பினேன். ஆனால் உன் மிகைப்பட்ட சக்தி முன்னால் நிற்க முடியவில்லை. சந்திக்கவும் முடியவில்லை வேறு வழியில்லாமல் உன்னை காண்பதற்காக உனக்கு வரும் பூஜைபொருட்களை தட்டி விட்டேன் என்று கூறியதும் அம்மனுக்கு கோபம் குறைந்தது. அப்பொழுது அம்மன் அவரை உற்று நோக்கும்போது, இறைவனின் அம்சம் என்று உணர்ந்து, பரஸ்பரம் அறிந்து நாம் இருவரும் இந்த நாட்டை காப்போம் என்று முடிவெடுக்கிறார்கள்.

‘கருவரையில் காப்பது என் கடமை

கருவரைக்கு வெளியில் இம்மக்கள் எங்கிருந்தாலும் காப்பது உன் கடமை‘ என்று இருவரும் இம்மக்களுக்கு தொடர்ந்து ஸ்ரீ ஏழைகாத்த அம்மனாகவும், ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமியாகவும் உலகிற்கு அருள்பாலித்து வருகிறார்கள்.

நாட்டுத்தெய்வமான வல்லடிகார சுவாமிகள் (கள்ளர் சரித்திரம் பக்கம் 125ல் வல்லடியார் என்ற பெயர் வருகிறது. கவனிக்க) ஸ்ரீ பெரியகருப்பர் என்ற பெயரில் மக்கள் வணங்கி வருவதால் நமது மூதாதையர்களை வணங்கிவரும் கள்ளர் (சோழர்) பழக்கம் என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமி கோவில்

கோவில் தோன்றிய காலத்தில் முதன்முதலில் பண்டாரம் பூசாரியாக இருந்து வந்ததாக கூறப்பட்டு வருகிறது. பண்டாரத்தின் கோவில் பணிகள் சிறப்பாக அமையாததால் செம்புலி கரைக் காரர்களுக்கு பூசாரி உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. இந்த கரைகாரர்களுக்கு சொந்தமான இடத்திலேயேதான் கோவில் அமைந்துள்ளது. செம்புலிக்கரை காரர்களுக்குச் சொந்தமான இடத்தில் கோவில் அமைந்திருப்பதாலும் அவர்கள் பூர்வீகக் கரைக்காரர்களுள் ஒருவராக விளங்குவதாலும் பூசாரி உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது.

செம்புலிக்கரைக்காரர்கள் தங்களுடைய சம்பந்தகாரர்களான மூண்டவாசிக்கரைக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு வருடந்தோறும் பொங்கல் வைத்து மற்ற பூஜைகள் செய்து

வந்துள்ளனர். நாளடைவில் மூண்டவாசிக்கரைக்காரர்கள் பொறுப்பாக பூசாரி வேலையை மேற்கொண்டு பார்த்து வந்ததால் பூசாரி உரிமை மூண்டவாசிக் கரைக்காரர்களிடம் இருந்து வந்துள்ளது. மீண்டும் செம்புலிகரைக்காரர்கள் பூசாரி உரிமையைப் பெற பொங்கல் வைக்க முன்வந்ததாகவும், பொங்கல் பொங்கியவுடன் பொங்கலை கிண்டும் துடுப்பை மறந்துவிட்டு வந்தாகவும், துடுப்பை எடுத்து வருவதற்குள் மூண்டவாசிக்கரைக்காரர் ஒருவர் மேல்சாமி வரப்பெற்று துடுப்பிற்கு பதிலாக தன்னுடைய கையை விட்டுக் கிண்டியதாகவும். சாமி அருள்பெற்று பொங்கலைக் கைகளால் கிண்டியதால் மூண்டவாசி கரைக்காரர்களுக்கு கோவில் பூசாரி உரிமை நிரந்தரமாக விட்டுக் கொடுக்கப்பட்டதாகவும் அக்கதை வழங்கியுள்ளது.

வல்லடிகார சுவாமிகள் கோவில் பூசாரி உரிமையைப் பெற மூண்டவாசிக் கரைக்காரருக்கு மங்கான். பரிவு, பைத்தியக்கார குப்பன், பெருவாச்சி என்ற நான்கு மகன்கள் இருந்தனர். அவர்களுள் முதல் மூன்று பேர்களுடைய வாரிசுகளுக்கு மட்டுமே பூசாரியாக பூஜை செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளனன. சுழற்சி முறையில் இம்மூன்றுபேர்களுடைய வாரிசுகளும் பூசாரி உரிமையை அனுபவித்து வருகின்றனர்.

பாரிவேட்டை

தமிழகத்தில், தமிழர்கள் மாசிமாதத்தில் பாரி வேட்டையாடுவது சங்ககாலம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்படி நாட்டின் கிழக்குப்பகுதியில் சுமார் 13 மைல் தொலைவில் அமைந்துள்ள காரமலையைச் சுற்றியுள்ள பகுதிக்கு நாட்டார்கள் பாரிவேட்டைக்கு செல்வது என முடிவெடுப்பர்.

அந்த குறிப்பிட்ட மகா சிவராத்திரிக்கு மறுநாள் அதிகாலை நாட்டு மக்களில் ஆண்கள் அனைவரும் காரமலையில் ஒன்றுகூடி தெய்வத்தை வணங்கி காரமலை காட்டைச்சுற்றியுள்ள காடுகளில் வேட்டையாடுவதற்கு ஏதுவாக கல்லல் வழியாக அரண்மனை சிறுவயலை அடைவது முடிவெடுக்கபட்டது.

பாரிவேட்டை - காரமலை - அரண்மனைச் சிறுவயல் மகான்கண்ட ஊருணி

முன்னொரு காலத்தில் சாதாரணமாக வேட்டைக்கு சென்ற வீரர் ஒருவர் அரண்மனைச்சிறுவயல் அருகில் வேட்டையாடி மகிழ்ந்து அங்குள்ள அடர்ந்த சோலைகளின் அழகைக் கண்டு மயங்கி அங்கேயே தங்கி விடுகிறார். ஒருநாள் வேட்டையாடும் போது மானை விரட்டி ஓடிவந்து மயங்கி விழுகின்றனர். மயங்கிய நிலையில் அங்கு அருகில் வாழ்ந்த வலையர்களிடம் தான் வெள்ளலூர் நாட்டைச்சார்நதவர் என்றும், நான் இறந்தவுடன், இறந்த செய்தியை வெள்ளலூர் நாட்டுக்குத் தெரிய வைக்கவும் என்று கூறி இறைவனடி சேருகிறார். அவர் நிகழ்த்திய அதிசயங்கள், போதனைகள் நல்லுறைகளை உணர்ந்து அந்நாட்டவர், வெள்ளலூர் நாட்டுக்குத் தெரிவிக்கிறார்கள், அதைத் தெரிந்தவுடன் அப்பொழுது நாட்டிலுள்ள பெரியவர் ஒருவருக்கு சாமி வந்து நான் கருப்பனாக அரண்மனைச் சிறுவயல் அருகில் சோலைவனத்தில் இருக்கிறேன்.

வெள்ளலூர் நாட்டு மக்கள் இங்கு வந்து வணங்கி என் இடத்தில் வைத்து பிடி மண் எடுத்து வந்து வணங்கி வந்தால் வெள்ளலூர் நாட்டை நல்லபடியாக காப்பேன் என்று கூறுகிறார். அப்பொழுது நாட்டுத்தெய்வமான வல்லடிகாரர் சுவாமிக்கு விழா எடுக்க முடிவெடுத்து நாள் வைக்கும்முன் பாரி

வேட்டைக்குச் செல்லும் போது மதகுபட்டிக்கு அருகில் உள்ள காரமலையில் கூட்டம் கூடி அனைத்து மகாண மக்கள், அம்பலகாரர்கள்.

தாரை தப்பட்டை கொம்புடன் ஆதிதிராவிடர்கள் வந்துள்ளனரா என வினவி அதையெல்லாம் பார்த்து நாட்டார்கள், அரண்மனைச்சிறுவயலில் கருப்பராக வீற்றிருக்கும் (வெள்ளலூர் நாட்டைச் சார்ந்த கல்லாகச் சமைந்த பெரியவரை) வணங்கிச் செல்வோம் என்று முடிவெடுத்து காரமலையிலிருந்து வேட்டையாடி, சொக்கநாதபுரம் கல்லல் வழியாக அரண்மனைச் சிறுவயலை அடைகிறார்கள். அங்குள்ள லிங்கத்துக்கு வல்லடி கருப்பர் என்று பெயர் வைத்து அழைத்து வணங்கி பூஜைகள் செய்து அங்கிருந்து பிடி மண் எடுத்து கிளம்பி வேட்டையாடி வரும்போது வெயிலில் தாகம் ஏற்பட்டு, தாகத்தை தீர்க்க வல்லவனிடம் வேண்ட, அவர் மகானாக தோன்றி காட்சியளித்து, தாகத்தை தீர்க்க பூமியில் சுனை ஏற்படுத்தி தாகத்தை தீர்த்து வைக்கிறார். அந்த இடத்தில் மகானைக் கண்டதால் பின்னர் மகான் கண்ட ஊருணியாக அழைக்கப்பட்டது.

பின்னர் சில ஆண்டு கழித்து அவ்வூர் மக்கள் மகான் கண்ட ஊருணி குடிநீர் என்பதால் இவ்வூருணியில் குளிக்கக்கூடாது. என்று தடுத்ததாலும், காட்டில் வேட்டையாடக் கூடாது என்ற கூறிய கருத்தாலும் அவ்வருடம் வெள்ளலூர் நாட்டு மக்கள் ஊருணியில் குளிக்காமல், வேட்டையாடாமல் வந்து விடுகிறார்கள். அந்த வருடம் குடி தண்ணீர் ஊருணியான மகான் கண்ட ஊருணியில் புழு, பூச்சி உண்டாகி நீர் குடிக்க லாயக்கற்றதாகி விட்டது. அந்தக்காட்டில் மழை இல்லாத காரணத்தால் காடு தீப்பிடித்து மிருகங்களும் அடர்ந்த சோலை வனங்களும் அழிந்து விடுகின்றன.

உடனே அந்நாட்டு மக்கள் தங்களது தவறை உணர்ந்து, தெய்வக்குற்றம் ஏற்பட்டுவிட்டதே என மனம் பதைத்து வெள்ளலூர் நாட்டாரிடம் வந்து தாங்கள் மீண்டும் பாரிவேட்டையாடி, எங்களது தெய்வங்களுக்கு பூஜைகள் செய்து, மகான்கண்ட ஊருணியில் நீராடி தீப்பிடித்த தீப்பாச்சாங்காட்டில் வேட்டையாடி இந்தப் பூமியில் தங்களின் பாதங்கள் பட்டு இப்பூமியை புனிதப்படுத்தி செல்லவேண்டும் என வேண்டிக்கேட்டுக் கொள்ளவே, ஸ்ரீ வல்லடிகாரர் சுவாமியின் உத்தரவு கிடைத்தது. வரும் வருடத்தில் தீர்த்தம் ஆடுவதுபோல் குளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது,

மீண்டும் வேட்டையாடச் செல்வது முடிவெடுத்து முறைப்படி சென்றதாக தெரியவருகிறது. இப்பகுதியில் சிவகங்கை மன்னர் அனுமதி பெற்றுத்தான் வேட்டையாடவேண்டும். மன்னரின் உத்தரவுக்காக அரண்மனைச்சிறுவயலில் உள்ள அரண்மனையில் வெள்ளலூர் நாட்டின் சார்பாக ஒரு ஆட்டுக்கிடாயை அங்கு கட்டிபின், மன்னரின் அனுமதி பெற்றுத்தான் வேட்டையாடி வந்ததாக வரலாறு. அன்று தொன்றுதொட்ட பழக்கம் இன்றளவு வரை பாரிவேட்டைத் திருவிழா நிகழ்ச்சியாக, நாட்டு மக்கள் காரமலையில் கூட்டம் கூட்டி அங்குள்ள முனியாண்டி தெய்வத்தை வணங்கிப் பூஜை செய்து அங்கிருந்து அரண்மனைச் சிறுவயல் ஸ்ரீவளநாச்சியம்மனை வணங்கி ஸ்ரீகருப்பர், வல்லவரை வணங்கி வருகிறார்கள். கோவிலுக்கு கிழக்குப்பகுதியில் சுமார் ஒரு ஏக்கர் இடம் அரண்மனைச் சிறுவயலில் நகரத்து செட்டியார் ஒருவர் நாட்டுக்கு தானமாக வழங்கிய இடத்தில் கூட்டம் கூடி, நாட்டுப் பழக்கவழக்கங்களை கடைப்படித்து, ஆதிதிராவிடர்கள் கொட்டு கொட்டி தாரை தப்பட்டை அடித்து கொம்பூதி நடனமாடி பின் அரண்மனைச் சிறுவயல் மக்களின் மரியாதையை ஏற்று அவர்களுக்கு ஆசியும் வழங்கி, உணவருந்தி

களைப்பாறி பின் மகான் கண்ட ஊருணியில் நீராடி, தீப்பாச்சாங்காட்டில் வேட்டையாடி இனிதே நாடு திரும்புவது என இன்றளவும் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது.

பாரதம் படித்தல்

மறுநாள் மாலையில் வெள்ளலூர் நாட்டின் தலைமை ஊரான வெள்ளலூரில் பெரிய அம்பலகாரர், அம்பலகாரர்கள், இளங்கச்சிகள் பொதுமக்கள் அனைவரும் கூட்டம் கூடி பாரதம் படிப்பது வழக்கம். பாரதம் பின் வருமாறு தொடங்குகின்றது. (பாரதம் எழுதிப் படித்துவருபவர்கள் சூத்தை பிரிவு நய்க்கான்கரையைச் சார்ந்தவர்கள்).

நல்லதொரு சூத்தை தன்னை ஏர்கையுள்ள பாரதத்தை
எடுத்துரையுமென்ற சொல்லி அப்போது அவர் மகிழ்ந்து
அனைவரையும் போற்றி செய்து செப்பமுள்ள பாரதத்தை
செல்வமுடன் தானுத்தார் உரைத்த மொழிதான் கேட்டு
உகந்த நன்றாய் அவையோரும் சுக்கிரநாள் வாரமதில்
சூழ்ந்த வெள்ளிக்கிழமை தன்னில் முக்கிய நாளுரைத்து.......

என்று தொடர்கிறது.

பாரதம் என்பது கோவில் வரலாறு எழுதப்பெற்ற ஏடு ஆகும். இது மூன்றுமணி நேரம் படிக்கப்படுகிறது. இதைப்படித்து முடிந்தவுடன் வெள்ளலூர் நாட்டு மக்களனைவரும் திருவிழாவிற்கு நாள் வைத்துவிட்டார்கள் என ஒரு கட்டுப்பாட்டில் ஒழுகுகின்றனர். பாரதம் படிக்கும் போது பூசாரி என்ற உச்சரிக்கப்பட்டவுடன் பெரிய அம்பலகாரர் பூசாரிக்கு மாலை மரியாதை செய்து கோவிலுக்கு பணி செய்ய அனுப்பி வைக்கின்றனர். கோவில் திருவிழாக்கள் பற்றி கலைக்களஞ்சியம் பின் சுட்டுகின்றது. சந்திரனுடைய திதிகள் பருவகால மாறுதல்களுக்குட்பட்டவை, அந்த காலத்தில் சமூக இனத்தவர்கள் அனைவரையும் ஒன்று கூடச்செய்வது கோவில் திருவிழாக்களும், சமய விழாக்களும். (கலைக்களஞ்சியம் தொகுதி 9)

காப்பு கட்டுதல்

ஸ்ரீ வல்லடிகார கோவில் திருவிழாவில் காப்பு கட்டுதல் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது. வெள்ளலூர் நாட்டு மக்கள் ஸ்ரீ வல்லடிகாரர் கோவிலுக்கு நாள் வைத்தல். எட்டாம் நாள் காப்புக் கட்டுதலாகும். காப்புக்கட்டுபவர்களை தீட்டுக்கள் அண்டாது என்பது மக்களுடைய நம்பிக்கை. கோவில் ஈசன் மூலை (ஈசானிய - சனி மூலை) யாகம் வளரக்கப்படுகிறது. இதனை யாகசாலை என்று கூறுகின்றனர். இதற்குத் திருவிழா முடியும் வரை தினமும் காலையும் மாலையும் அர்ச்சனை செய்யப்படுகிறது.

திருவிழாச் சடங்குகள்

கோவில் உள் வடக்கு கோபுரம் முன் கொடிமரம் இருக்கிறது. அதில் நாணல்புல், மா இலை, பத்துமீட்டர் காடாதுணியில் கணேசர்படம் சூலாயுதம் ஆகியன வரையப்பட்டு கொடி மரத்தில் ஏற்றுகின்றனர். கொடி மரத்தில் எண்ணெய் இளநீர், பஞ்சாமிர்தம். பால் இவைகளை ஒவ்வொன்றாக வரிசையாக அபிஷேகம் செய்கின்றனர். தண்ணீரால் கழுவி. தேங்காய், பழம், பூ. சந்தனம், பத்தி வைத்து அர்ச்சனை செய்யப்படுகிறது. காப்புக் கட்டியவுடன் அன்றிலிருந்து திருவிழா வரை ஸ்ரீ வல்லடிகாரர் சப்பரத்தில் உற்சவ மூர்த்தியாக இரவில் பத்துமணிக்கு மேல் உலாவருவார்.

அஷ்டதிக்கு பாலகர்கள்

காப்பு கட்டுதல் அன்று கோவிலைச் சுற்றியுள்ள தேரோடும் வீதியில் பலிபீடம் என்னும் அஷ்டதிக்கு பாலகர்கள் என்று அழைக்கப்படுகின்ற எட்டுக் கல்லுக்கும் எட்டு மூலையில் பலி பூஜை செய்து வைக்கப்படுகின்றது.

எட்டு பாலகர்கள் பெயர் பின்வருமாறு,

1.. இந்திரன் (கிழக்கு)

2. அக்கினி (தென் கிழக்கு)

3. எமன் (தெற்கு)

4. நிருதி - சூரியன் (தென்மேற்கு)

5. வருணன் (மேற்கு)

6. வாயு (வட மேற்கு)

7. குபேரன் (வடக்கு)

8. ஈசானன் (வட கிழக்கு)

ஒவ்வொரு நாள் இரவிலும் ஸ்ரீ வல்லடிகாரர் உலா வரும்போது எட்டுப்பீடத்திலும் ஒரு வெல்லமும், வாழைப்பழமும், பூவும் வைத்து கற்பூரம் காட்டுகின்றனர். திருவிழா முடிந்தபின் முறைப்படி பூஜை செய்து அக்கற்களை எடுக்கின்றனர்.

முளைப்பாரி

காப்புக் கட்டும் அன்று மண்ணால் செய்யப்பட்ட கிண்ணம் போன்ற வடிவுடைய பாத்திரத்தில் பலவகையான பயறு வகைகளை முளைக்கப் போடுகிறார்கள். அதைக் கடைசி நாளன்று திருவிழா முடிந்தபின் அம் முளைப்பாரியை முக்கியமாக பெரியோர்களுக்கு ஒவ்வொரு பயிராக எடுத்துக் கொடுக்கின்றார். முளைப்பாரி வளர்ப்பு பண்டைத் தமிழகத்தில் மிகவும் பரவலாக இருந்ததை அறியலாம். புகார் நகரத்தை அழகுபடுத்தப் பயன்படுத்திய பொருட்களில் பூரணகும்பம் பொலம்பாலிகைகளும், இடம் பெற்றதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. முளைக்குடந் தூபநற்றீபம் வைம்பின் என திருவாசகத்தில் கூறப்படுகிறது.

மைந்தானம் அடித்தல் (வைதாளி)

கோவிலுக்கு நாள் வைத்தவுடன் வெள்ளலூர் நாட்டிலுள்ள கிராமங்களிலும் கோவிலிலும் ஆண்கள் மைந்தானம் அடிப்பதும் பெண்கள் கொட்டுவான் கொட்டுதலும் ஒரு மரபாகக்கடைப் பிடிக்கப்படுகின்றது.

கதைப்பாடல் வாய்மொழியாக இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். கதையொன்றை உள்ளடக்கியதாகக் கொண்டு, மக்கள் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுப் பரம்பரை பரம்பரை வாய்மொழியாக பாடப்பாட்டு வருவது கதைப்பாடலாகும். ஒவ்வொரு ஊரிலும் இரவு எட்டு மணியளவில் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் சுமார் இரண்டு மணி நேரம் ஸ்ரீ வல்லடிகாரரை வாழ்த்திப்பாடுவர். நாள் வைத்ததிலிருந்து வேட்டைக்குச் செல்வது. திருவிழா நடைமுறை வல்லடிகாரர் சிறப்பு என்று ஸ்ரீ வல்லடிகாரரை வாழ்த்திப்பாடுவர்.

கோவில் திருவிழா

காப்புக்கட்டியதிலிருந்து ஏழாம் நாள் திருவிழா அன்று மஞ்சுவிரட்டு நடைபெறுகிறது. அதன்பின் அன்று மாலை சரியாக ஐந்து மணியளவில் கோவிலில் ஸ்ரீ வல்லடிகாரருக்கும் அவர்தம் இருமனைவியர் பூரணி, புஷ்பம் (பொற்கலை) திருக்கல்யாணம் நடைபெறுகிறது. எட்டாம் நாள் நண்பகல் சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு கோவில் பூசாரி பொங்கல் வைத்து, சேமங்குதிரையின் முன்னர் வைத்து யாதவர் ஒருவர் பிடித்த கிடாயை பெரிய அம்பலகாரர்கள் முன்பாக வெக்காலி கரையைச் சார்ந்த கிடா வெட்டி என்ற பட்டம் பெற்றவர் கிடா வெட்டுகின்றார்.

இதனை உச்சிப்பொங்கல் என்பர். எட்டாவது நாள் திருவிழாவான உச்சிப்பொங்கலை மிகப்பிரதான விழாவைத் தொடர்ந்து இரவு பன்னிரெண்டு மணிவரை நேர்த்திக் கடன்கள். பாற்குடம் எடுத்தல், சந்தனக்குடம் எடுத்தல், முடியெடுத்தல், காவடியெடுத்தல், மாவிளக்கு வைத்தல், கரும்புத் தொட்டில் மற்றும் அங்கப்பிரதட்சணம் ஆகிய நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவார்கள். தெய்வ வழிபாட்டால் எண்ணிய காரியங்களிலே எளிதில் வெற்றி பெறலாம் என்று நம்பினர். வேண்டுவோர் வேண்டியவற்றை அளிக்கும் ஆற்றல், தெய்வத்திற்கு உண்டு என்று உறுதியாக எண்ணினர். தெய்வ வழிபாடு துன்புற்றவர்களின் துயரங்களைப் போக்கும் அவர்களை இன்புற்று வாழச் செய்யும். நீ இது செய்தால் நான் இது செய்வேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நேர்த்திக் கடன்கள் அமைகின்றன. (சாமி சிதம்பரனார் பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும் பக்கம் - 43)

ஆறு.இராமநாதன் நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் பக்கம் 212.

எட்டாம் நாள் திருவிழாவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதால் திருவிழாவினைக் காணவந்த பிறநாட்டு மக்கள், வெள்ளலூர் நாட்டுத் திருவிழாவினையும், மக்களையும், கண்வைத்து விடுதல் கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஒன்பதாம் நாள் திருவிழாவில் முதல் நிகழ்ச்சியாக காலை ஆறு மணிக்கு திஷ்டிவிழா பூஜைகள் நடைபெறுகின்றது.

தேரோடுது சீராக

ஊர் கூடித்தேர் இழுத்தது போல என்னும் சொல் வழக்கு நம் மண்ணில் காலம் காலமாக

வழங்கி வருகிறது. சமூகத்தில் மக்கள் அனைவரும் ஒன்று கூடி இழுத்தால்தான் தேர்பவனி சிறப்பாக நடக்கும். ஒற்றுமையை வலியுறுத்தும் இவ்விழா நம் பண்பாட்டுக் கலைகளின் அடையாளமாகத் திகழ்கிறது. நாட்டை ஆளும் தலைவன் நகரை வலம் வருவது போல் இறைவனும், இறைவியும் பவனி வருகின்றனர்.அதன்பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து ஸ்ரீ வல்லடிகாரர் கோவில் தேரை இழுக்கிறார்கள். இதற்கு தேர்த்திருவிழா அல்லது தேரோட்டம் என்பர். பத்தாம் நாள் திருவிழா கடைசி நாள் திருவிழாவாகும். ஸ்ரீ வல்லடிகாரர் தம் இரு மனைவிகளுடன் சேங்காய் ஊரணியில் நீராடுவதோடு, பூசாரியும் நீர் ஆடுவர். அதன்பின்னர் சுவாமி உலா வருகிறார். கொடி இறக்கி அத்துடன் திருவிழா முடிகிறது.

ஸ்ரீ வல்லடிகாரர் கோவிலமைப்பில் மொத்தம் மூன்று கோபுரங்கள் அமைந்துள்ளன. முதலில் அமைந்துள்ள இராஜகோபுரம் ஐம்பது அடி உயரம். இரண்டாவது கோபுரம் கருப்பர் கோபுரம் நாற்பதடி. மூன்றாவது கோபுரம் வடக்கு புறமாக அமைந்துள்ள. வல்லடிகாரர் கோபுரம் சுமார் நாற்பதடி உள்ளது. கோபுரங்கள் அனைத்தும் சுதையால் கட்டப்பட்டிருக்கின்றன. மூன்று கோபுரங்களிலும் சிறிய சிறிய சிலைகள் எண்ணிக்கையில் அதிகமாகப் பொருத்தப்பட்டு கோபுரங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அன்மையில் ஸ்ரீ வல்லடிகார சுவாமி கோவிலுக்கு திருப்பணி சிறப்பாக நாட்டார்களால் நடத்திவைக்கப்பட்டதாக திருப்பணிக்குழுவில் கணக்குப்பிள்ளையாக பணியாற்றிய திரு.ஆண்டப்பன் ராஜேந்திரன், (செம்புலி கரை) தலைவர், விவசாய கூட்டுறவு வங்கி, உறங்கான்பட்டி அவர்கள் மூலம் அறியப்படுகிறது மேலும் கோவில் சம்பந்தப்பட்ட விபரங்களை அவர் கூறியதை இந்நூலில் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

லிங்கம் ஆகிய வல்லடிகாரர்

வல்லடிகார கோவிலின் மேற்கு வாயிலிலிருந்து சுமார் எழுபது அடி தூரத்தில் சுயம்புலிங்க வடிவக்கல் இருக்கிறது. இத்னை மூலவர் என்று மக்கள் அழைக்கின்றனர், முதன்முதலில் வல்லடிகாரர் சுயம்புலிங்கத்தை ஆயர் சிறுவர் கண்டு சொன்னதாக வரலாறு. லிங்கம் கிழக்குப் பார்த்த முகமாக அமைந்துள்ளது. லிங்கத்தின் இரு பக்கங்களிலும் வடக்கு தெற்கு இரண்டு கூகை மரங்கள் உள்ளன, அந்தக் கூகை மரத்தில் குழந்தைப்பேறு வேண்டிய பெண்கள் தங்களுடைய முந்தானைகளை கிழித்து அதில் ஒரு சிறிய கல் ஒன்றை இட்டு தொட்டில் கட்டியுள்ளனர். லிங்கம் பிறந்த இடத்தில் கோவில் கட்டக்கூடாது என்று கோடாங்கிகுறி சொல்லிய காரணத்தால் நாட்டார்கள் கிழக்காகக் கோவிலைக் கட்டியுள்ளனர். லிங்கத்தை சுற்றி மதில்சுவர் மட்டும் கட்டப்பட்டுள்ளது.

கோவிலுக்கு செல்வதனால் பயன் என்ன?

உலகிலேயே மிக அமைதியான, நிம்மதியான இடம் எதுவென்று கேட்டால் அம்மாவின் மடி காதலின் அருகாமை என்று கவிஞர்கள் பாடலே இயற்றிவிடுவர் ஆனால், உண்மையில் நிம்மதியான இடம் கோயில்தான். நம் கோவில்கள் அமைந்திருக்கும் இடம் அமைப்பு, உள் கட்டமைப்பு, கதவுகள் கொடிமரம் மூலஸ்தானம் கோபுர கலசங்கள் உள்பிரகார பாதை என ஒவ்வொன்றும் அறிவியல் மருத்துவம் விஞ்ஞானம் தொடர்புடையவை.

பொதுவாக ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்கள், மலை ஸ்தலங்கள், மலை சூழ்ந்த இடங்கள் தான் கோவில் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும். இங்குதான் காந்த அலைகள் நேர்மறையான எண்ண

அலைகள் அதிகமாகப் பரவியிருக்கும். வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களின் போது மக்கள் பாதுகாப்பாக இருக்க பிரமாண்டமான கோவில்கள் பயன்பட்டன. பல நல்ல விஷயங்களை கற்பிக்கும் இடமாகவும் கோவில்கள் இருந்தன.

மிக மிக அதிகமான காந்த அலைகள் பரவியிருக்கும் இடத்தில் செப்பு தகடுகளைப்பதித்து அதன் மீது சிலையை அமைத்து மூலஸ்தானம் உருவாகும். அதன்பின்தான் கோவில் கட்டப்படும் அந்த செப்புத்தகடுகளின் தன்மை, பல நல்ல அலைகளை கிரகித்து அதை பல மடங்காக அந்தச்சிலை மூலம் வெளிக்கொணரும். எல்லாக்கோவில்களிலும் மூலஸ்தானம் மூன்று பக்கமும் மூடி, வாசல் மட்டும் திறந்திருக்கும் அளவிற்கு கதவுகள் அமைந்திருக்கும். அந்த நேர்மறை அலைகள் ஒருமித்து கிடைக்க இது வழி வகுக்கும்.

இதே போல் மூலஸ்தானத்தில் அணையா விளக்கு ஒன்று எப்போதும் இருக்கும். அதைச்சுற்றி கண்ணாடியும் இருக்கும். அந்த எனர்ஜியை பரவச்செய்யும் ஒரு நுட்பமான செயல்தான் கண்ணாடி வைத்திருப்பதன் நோக்கம். வேண்டுதலின்படி மாங்கல்யம், சாவி, பேனா புது நகைகள் போன்றவற்றை இங்கு வைத்து எடுத்தால், இந்த உலோகங்கள் அங்குள்ள எனர்ஜியை (சக்தி) அப்படியே பற்றிக்கொள்ளும்.

அதனால் தான் கோவிலுக்கு தங்கத்தினால் ஆன நகைகளை அணிந்து போவது நல்லது எனக்கூறப்படுகிறது. இப்போது திருட்டு பயம் காணப்படுவதால் நகை அணிவதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

கதவுகள் மரத்தினாலானதாக இருக்கும் மரம் எல்லா உயர் அழுத்த மின்காந்த அலைகளையும், சமன் செய்து விடும் சிறப்புப்பொருள். கொடி மரத்திற்கும் மூலஸ்தானத்திற்கு நேரடித்தொடர்பு உண்டு. உச்சியில் இருக்கும் கலசம் இரிடியமாக மாறுவதும் அறிவியல்தான். கீழ் இருந்து கிளம்பும் மின்காந்த அலைகள் மற்றும் இடியின் தாக்கம் தான் சாதாரணமான கலசத்தையும் இரிடியமாக மாற்றுகிறது.

சுற்றுப்பிரகார பாதை முழுவதும் கருங்கல் பதித்துதான் பண்டைய கோவில்கள் இருக்கும் வெறும் கால்களுடன் கருங்கல்மீது பதிய நடக்கும்போது நம் கீழ் பாதத்திலுள்ள வர்ம புள்ளிகளுக்கு அழுத்தம் கிடைக்கும். நம் அனைத்து உடல் உறுப்புகளுக்கும், நிவாரணம் தரக்கூடிய எல்லாப் புள்ளிகளும் பாதத்தில் இருக்கிறது. அக்குபஞ்சர் டாக்டரிடம் கேட்டால் இதனால் என்ன மாதிரியான நோய்கள் தடுக்கப்படுகின்றன. என்று ஒரு பட்டியலே தருவார். அதனால் தான் கோவிலை வலம் வருவது கிரி வலம் வருவது போன்றவைகள் காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப்படி ஒவ்வொரு விஷ யமாக பார்த்து பார்த்து அமைந்திருக்கும் கோவிலுக்கு தினம் சென்று இறைவனை வணங்கிவருவது நமது உடலுக்கும் மனதுக்கும் நல்லது என்று பெரியோர்கள் எடுத்துரைத்துள்ளனர். நாம் தினம் செல்ல முடியாவிட்டாலும் வாரம் ஒரு முறையாவது சென்று பலனடைவோம்.

வெள்ளிப்பூஜை

இந்து மதத்தில் வெள்ளிக்கிழமை புனிதமான நாள் என்று நம்பப்படுகிறது. வெள்ளிக்கிழமை விரதம், வெள்ளிக்கிழமை கோயிலுக்கு சென்று இறைவனை வணங்கினால், வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் நல்லபடியாக நடந்தேறும் என்று கூறுவார்கள். வானத்தில் மின்னல் கீற்றை உருவாக்கி வெள்ளியைப்போல் ஒளிகளை உலகுக்கு வழங்கி ஜீவராசிகளை வாழவைக்கின்றது. அதனால்தான் நட்சத்திரங்களுக்கு வெள்ளி என்று பெயர் சூட்டி அழைக்கின்றனர். வெள்ளிக்கிழமை விடியும் வேலை வாசலில் கோலமிட்டேன், வள்ளிக்கணவன் பேரை நினைத்து கூந்தலில் பூ முடித்தேன் என்று தமிழ்கடவுளான முருகனை குடும்பத்தலைவி வணங்குவதாக ஒரு கவிஞன் பாடுகிறான். இறைவன் திருவிழாக் காலங்களில் வெள்ளிக்குதிரையில் பவனிவருவதற்கு வெள்ளிக்கிழமையின் மகத்துவத்தை உணர்த்துவதற்குத்தான் வெள்ளலூர் நாட்டில் உள்ள கோவில்களில் வெள்ளிக்கிழமையன்று வெள்ளிப்பூஜை காலம் காலமாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. அன்றைய தினம் மக்களனைவரும் ஒன்றுகூடி கோயில்களில் கூடி கடந்தவார நிகழ்வுகள், எதிர்வாரம் வரப்போகும் காரியங்கள், பிரச்சனைகள் பற்றி ஒன்று கூடி விவாதிக்கின்றனர். ஏதாவது வழக்குகள் இருந்தால் விவாதித்து அதற்கு முடிவு காண்கின்றனர். பெரியவர்கள் தங்களுக்கு தெரிந்த நல்ல விஷயங்கள் கருத்துக்கள், ஆன்மீகம் ஆகியவைகளை பற்றி குடிமக்கள், இளையவர்கள் அனைவருக்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருங்காலச்சந்ததியினருக்காக வரலாறுகளை பதிவு செய்கிறார்கள். இப்படிப்பட்ட செவி வழிச்செய்திகள் மூலம் நமது வரலாறு வழி வழியாக அறிய முடிந்தது. என்று கூறினால் மிகையாகாது. பின் அனைவரும் முறைப்படி பூஜைகளில் கலந்து கொண்டு இறைவனை வணங்கி பிரசாதங்கள் பெற்று மன அழுத்தத்தை குறைத்து, மன நிறைவு பெறுகின்றனர். மேலும் புள்ளிப்படி வரிசைக்கிரமமாக காரணம் மரியாதை காலாஞ்சிகள் பெற்று இறைவன்முன் உறவுகளுடன் மனம் திறந்து உரையாடி வாரம் ஒரு முறை உறவுகளை புதுப்பித்து புத்துணர்ச்சி பெற்று மகிழ்வுடன் இல்லங்களுக்கு செல்கின்றனர்.

வரலாற்றை பதிவு செய்வதில் தவறுகிறோம்

நம் நாட்டில் பெருமைகள் பலவற்றை நாம் பதிவு செய்யத் தவறிவிட்டதால், அதன் வரலாறுகளை இழந்திருக்கிறோம். மற்றவர்களுக்கு உழைப்பதற்கான வாழ்க்கை மனித வாழ்க்கை. சிலர் சுயநலவாதிகளாக இருந்தாலும் தம் மனைவி, மக்களுக்காக அதிகம் உழைப்பவர்களாக இருப்பார்கள். எந்தத் தொழிலாக இருந்தாலும் அதில் வரலாறு படைப்பது மகிழ்ச்சியானது ஆகும்.பல சம்பவங்களை பதிவு செய்யாமல் விட்டுவிட்டதால் நம் நாட்டின் அருமை பெருமைகளை வரலாற்றை தொலைத்திருக்கிறோம். நம்மவர்கள் வரலாறு படைப்பதில் வல்லவர்கள் ஆனால் பதிவு செய்வதில் மோசமானவர்கள் பதிவு செய்யாமல் விட்டு விடுகிறார்கள். வருங்கால தலைமுறையினருக்கு நாம் விட்டுச் செல்லும் ஒரே சொத்து வரலாறு என்பதை நாம் இனிமேலாவது உணர்ந்து செயல்படுவோம்.

கல்கி கூறுகிறார்

சத்திய சக்திகள்

தெய்வசக்திகளும்,அசுர சக்திகளும்,ஓயாமல் போராடி வருகின்றன. சில சமயம் அசுர சக்திகளி ன் கை ஓங்குவது போல் காணப்படுகிறது. அவையே உலகை என்றென்றைக்கும் ஆளும் என்று தோன்றுகிறது.

ஆகையால் அசுர சக்திகள் மேலோங்குவதைக் கண்டு மாந்தர்கள் மனச்சோர்வு அடைந்து விடக்கூடாது. தெய்வ சக்திகள் முடிவில் வெற்றி கொள்ளும் என்று நம்பித் தர்மத்திலும், சத்தியத்திலும் நின்று போராடவேண்டும். அப்படி போராடுகிறவர்களுக்கு தெய்வமும் நிச்சயம் துணை செய்யும். அசுர சக்திகள் இரண்டு வகையானவை 1. மௌடீக அசுர சக்திகள் 2. மதி நுட்பம் வாய்ந்த அசுர சக்திகள்.

மௌடீக அசுர சக்திகள்

காட்டு எருமையைப்போல் வலிமை கொண்டது. மௌடீகம் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி நடத்தத் தொடங்கி விடுகிறது. மௌடீகத்தோடு அகந்தையும், மூர்க்கத்தனமும் சேர்ந்து நாட்டை சின்னா பின்னமாக்க முயற்சி செய்வார்கள். அத்தகைய கதி நம் நாட்டுக்கு நேராதிருக்கட்டும். அப்படி நேர்வதாயிருந்தால் வீர மறக்குலத்தில் பிறந்த இம்மக்கள் போராடச் சித்தாமயிருக்க வேண்டும்.

மதிநுட்ப அசுர சக்திகள்

அறிவு கூர்மையுள்ளவர்கள் அந்த அறிவினால், அகந்தையினால் கெட்ட காரியங்களுக்கு பயன்படுத்தத் தயங்கமாட்டார்கள். அவர்கள் கெட்ட காரியங்களுக்கே பயன்படுத்துவார்கள். இத்தகைய சூழ்ச்சி திறமை வாய்ந்த அசுர சக்திகளை உங்களது அந்தராத்மா மூலம் போராடி மக்களைக் காப்பது, அறிவு சார்ந்த நல்ல இளைஞர்களிடம் தான் உள்ளது. அதைப்பயன் படுத்தி தெய்வத்தின் துணையுடன் வெற்றி கொள்ளுவார்கள்.

மனிதனுடைய வாழ்கையை நல்வழிப்படுத்துவதில் இரண்டு இதிகாசங்கள் தோன்றியுள்ளன. அவைதான் இராமாயணம், மகாபாரதம் இவ்விரண்டு நூல்களுமே தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு வந்த நூல்கள்

இராமாயணம்

மனிதன் எப்படி வாழவேண்டும் என்று தர்மத்தை மாத்திரமே அதிகம் வலியுறுத்திருக்கிறது. இராமாயணம் நடத்தியும் காட்டியிருக்கிறது. அறம், பொருள், இன்பம் என்பவற்றில் அறத்தை இராமரும், பொருள் இன்பங்களை இராவணனும் தங்கள் இலட்சியமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இராவணன் கடுந்தவம் புரிந்து தேவர்களையும் தலை மிதித்து நிற்கும் ஆட்சிப்பேற்றை வரமாகப்பெறுகின்றான். இராமரோ தன் வாழ்க்கையையே ஒரு பெரும் தவமாகச் செய்து அறத்தைக் கடைப்பிடிக்கின்றார். இராமருக்கும் சீதைக்கும் இடையே உள்ள அன்பே தருமத்தின் அரணாகிறது. இராமகதையில் வரும் மற்ற மாந்தர்களும் உயர்ந்து சிறந்து நிற்கிறார்கள். அண்ணனுக்கு பணிவிடை செய்வதில் நிகரற்று விளங்கும்

இலக்குவன். அண்ணன் சொல்லைச் சட்டமாக ஏற்றுச்செயல்படும் பரதன். தாயன்பே உருவான கோசலை, ஞானியான சுமத்திரை, செருக்கு வாய்ந்த கைகேயி, சற்றே காமத்தால் ஏமாந்த, தருமத்தால் கட்டுண்டு நடக்கும் தசரதன். தூய்மை உள்ளத்தில் குடிகொண்ட இராமபக்தியால் செயற்கரிய செயல்களைச் செய்த அனுமன். இணையற்ற தோழனான சுக்கிரீவன். நெறியற்ற வழியில் சென்ற இராவணைத் துறந்து, இராமனைச் சார்ந்த விபூஷணன். தவறென்று தெரிந்தும் அண்ணன் என்ற பாசத்துக்கு கட்டுப்பட்டு உயர் துறந்த கும்பகர்ணன் ஆகிய இவர்கள் போன்ற எண்ணற்ற பாத்திரங்களை மறக்கவொன்னா வகையில் தோற்றுவித்துள்ள கம்பர். இத்தகைய மாந்தர் வாயிலாக கம்பர் உலகப்போக்கையும் அழிவில்லாத தர்மத்தையும் ஒருங்கே விளக்குகிறார்.

மகாபாரதம்

வேதங்களில் சொல்லப்படும் கருத்துக்கள் அனைத்தையும் இதில் இடம் பெறுவதால் இத்தகையது ஐந்தாம் வேதம் என்பர். நூற்றுக்கணக்கான மாந்தர்கள் உலாவரும் சுவர்ண மாளிகை போன்றது மகாபாரதம். ஏராளமான கிளைக்கதைகளை கொண்ட ஆலவிருட்சம் நள தமயந்தி வரலாறு, சத்தியவான் சாவித்திரி வரலாறு போன்றவை. புகழ் வாய்ந்தவை. அரிச்சந்திரன், குசேலன், கந்தப்பெருமான், பரசுராமர் போன்றோர் இதில் இடம் பெற்றுள்ளனர். மனித வாழ்க்கையை நெறிப்படுத்த எழுந்த இக்கதை, அறவழியில் நடக்க மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. இன்பமும் துன்பமும் மூடரைத்தான் பற்றும். அறிவாளிகளை அவை நெருங்கா. பயன்களையும் பாராது கடமையைச்செய்ய வேண்டும் என்பதன் போன்ற தத்துவங்களை உலகுக்கு பறை சாற்றுகிறது. பாரதம் மகாபாரதத்தை படிப்பவர் கேட்பவர் நெஞ்சில் ஓர் அமைதி ஏற்படும். உலோபம், பொறாமை, கோபம், தீங்குணங்கள் நீங்கும். தியானம், அமைதி, அன்பு போன்ற நற்குணங்கள் துலங்கும்.

யுகங்கள் மாறும் ஆனால் தர்மம் என்றும் மாறாது. தர்மத்தின் அடிப்படைச் சான்றுகளாய் இருப்பவைகள்தான் நம்முடைய புராணங்களும் இதிகாசங்களும்

சித்திரை வெற்றிலை பிடித்தல் (பிரித்தல்) விழா

இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி) கார்காலம் (ஆவணி, புரட்டாசி) கூதிர் காலம் (ஐப்பசி, கார்த்திகை) முன்பனிக்காலம் (மார்கழி, தை) பின் பனிக்காலம் (மாசி, பங்குனி) என தமிழர்கள் கால நிலையை வரையறுத்துள்ளனர். சித்திரை வேனிற்காலத்தின் துவக்கம் கிராமங்களில் விவசாய வேலையின்றி நஞ்சை புஞ்சை காய்ந்து கிடக்கும் சித்திரை முதல் நாளில் நாளேரு (நல்ல நாளில் பூட்டப்படும் நாள் ஏர்)) பூட்டி நஞ்சை, புஞ்சையில் உழுவர். இதனால் ஆண்டு முழுவதும் விவசாயம் செழிக்கும் என்பது நம்பிக்கை.

வாழ்வாதாரமான ஆடு மாடுகளை சித்திரை முதல் நாள் கண்மாய்களிலோ, கிணறுகளிலோ தண்ணீர் ஊற்றி குளிப்பாட்டி அழகுபடுத்துவர். கலப்பை, நேக்கால், மாட்டுவண்டிகளை நீரால் சுத்தப்படுத்துவர். அனைவரும் ஊர் பொது இடமான மந்தையில் கூடி பின் கோயிலில் பூஜைகள் செய்து தெய்வ வழிபாடு நடத்துவர். பின்னர் ஏர் பூட்டிய மாடுகளுடன் விவசாயிகள் தமது புஞ்சை, நஞ்சைகளில் ஈசான மூலையில் (வடக்கு,கிழக்கு சந்திக்கும்) பகுதியில் ஏர் பூட்டி வட்டமாக

உழுவர். அதில் நெல், கம்பு, சோளம் போன்ற தானியங்களை விதைப்பர். பின் வீட்டிற்கு வந்து சாமி கும்பிட்டபின், ஊர் மந்தையில் அனைவரும் கலந்து ஊர் கூட்டம் நடைபெறும் அந்த பகுதிற்கான கண்மாய் மீன். மரம், ஏலம் விடுதல் ஆடு, மாடு, கோழி, நவதானிய விற்பனை என ஊரை விட்டும் வெளியேறும் பொருட்களுக்கு மகமை (வரி) நிர்ணயித்தல், வசூலித்தல என கிராமத்திற்கு பொது வருவாயைப் பெருக்குவது பற்றி விவாதிப்பர்.

ஓராண்டிற்கான வரவு, செலவை ஊர் கணக்குப்பிள்ளை வாசிப்பார், அப்போது ஏதாவது குறைகள் ஏற்பட்டாலோ அதை நிவர்த்தி செய்வதற்க்காகவும், சட்டசபை, மக்களவைப்போல் காரசாரமாக விவாதங்களில் அனல் பறக்கும். பின் சபை முடிவிற்கேற்ப முடிவுகள் எடுத்து கூட்டங்களை பெருக்குவர்.

நமது வெள்ளலூர் நாட்டில் சித்திரை முதல் தேதி வெற்றிலை பிடித்தல் விழா வெகு விமரிசையாக நடைபெறும். அனைத்து மாகாணத்தைச்சார்ந்த அம்பலகாரர்களும், குடிகளும் தலைமை ஊரான வெள்ளலூரில் உள்ள கோயிலின் முன்னே கூடுவர். தெய்வ பூஜைகள் செய்து முடித்தவுடன் அனைவருக்கும் நாட்டார்கள் முறைப்படி வெற்றிலை வழங்கி கௌரவிப்பார்கள். முதலில் யாதவர்களுக்கும் கரை அம்பலகாரர் 22 பேருக்கும், இளங்கச்சிகளுக்கும், மாகாணவாரியாக வெற்றிலை ஒவ்வொரு மாகாணத்திற்கு வழங்குவது முறை.

சித்திரை முதல் நாளன்று யாதவர்கள் நிலத்தை தங்கத்தினால் ஆன ஏரால் முற்காலத்தில் உழுதார்களாம். அவர்களுக்கு முதல் வெற்றிலை கொடுத்து நாட்டார்கள் கௌரவப்படுத்துவது. குடிகள் தங்களது அம்பலகாரரிடமிருந்தும், தங்களது மாகாணத்திலிருந்து வெற்றிலை மரியாதை பெற்றுக்கொண்டு தங்களது மந்தைக்கு வந்து தெய்வவழிபாடு செய்து, முறையாக வெற்றிலையை பிடித்துக்கொண்டு (பிரித்துக்கொண்டு) தங்களது இல்லங்களுக்கு சென்று தங்களது குலதெய்வங்களை வணங்கி, தங்களது வீட்டில் சமைத்த கொழுக்கட்டை பொங்கல் ஆகியவைகளை உண்பர், பின் வயலுக்கு ஏரிடுவர். இது பழக்கம்

இந்த வெற்றிலை பிடிக்கும் (பிரிக்கும்) விழா எதற்க்காக வந்தது என்று எண்ணினால் சற்று பின்னோக்கி செல்வோம் வெள்ளலூர் நாடு உருவாகி, கரைகளை பிரித்த காலத்தில் உருவானது என்று கூறினால் சரியாக இருக்கும் என்று எண்ணத்தோன்றுகிறது.

சாயும்படைதாங்கி வீரணம்பலகாரர் தலைமையில் அனைத்து அம்பலக்காரர்களும் அறிஞர் பெருமக்களும் வாகாய் கரை பிரித்து நாட்டில் நலனுக்காச் சில வழிகளை (விழாக்கள்) உருவாக்கினர். அப்பொழுது மக்கள் எப்படி வாழ்கிறார்கள் மக்கள் தொகை கூடியிருக்கிறதா கரைகளில் ஏதேனும் குறையிருக்கிறதா என்பதை அறியவே வெற்றிலை பிடித்தல் விழா நடைபெற்றதாக அறியப்படுகிறது.

போர்க்காலங்களில் விதிகளை மீறி குற்றம் செய்பவர்களை தண்டிப்பதற்க்காக கடுமையான அபாரத்தை கட்ட முடியாது ஓடி விடுவதும் வழக்கமாக இருந்து வந்தள்ளது. இதையறியவே மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காகவே வெற்றிலை பிடித்தல் (பிரித்தல்) விழா நடைபெற்றது. நாட்டை விட்டு ஓடியவர்களை மீண்டும் கொண்டு வந்து அவர்களுக்கு வேண்டியவைகளை செய்து மக்கள் தொகை குறையாமல் பார்த்துக் கொள்வது மன்னனின் கடமையல்லவா? மேலும் உற்றார் உறவினரும்

அனைவரும் கலந்து கொண்டு சேம நலம் விசாரிப்பதற்க்கும், பெரியவர்களிடம் ஆசி பெறுவதற்க்கும், விசாரிப்பதற்க்கும் வருடத்தின் முதல் நாள் அனைவரும் ஒற்றுமையுடன் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காகவே, இந்த வெற்றிலைப் பிடித்தல் (பிரித்தல்) விழா நடைபெற்று வருவதாக பெரியவர்கள் கூறுகிறார்கள்.

இன்று விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சி விவசாயிகளிடமிருந்து கால் நடைகள் கலப்பைகள் விதைகளைப் பிரித்துவிட்டது. இருந்தாலும் இன்று நாளேரு என்று ஏரிடதல் பூட்டுகின்றனர். வெள்ளலூர் நாட்டில் வெற்றிலை பிடித்தல் (பிரித்தல்) விழா இன்றும் நடைபெற்று வருகிறது. இனிமேலும் தொடர்ந்து நடைபெறும் மண்ணை நேசிக்கும் மாண்புடன்.

ஆடி மாதம்

பொங்கும் புதுப்புனல் எங்கும் உற்சாகம் ஆடி மாதம் கொண்டு வருவது காற்றையும் நீர்ப்பெருக்கையும் மட்டுமல்ல. உற்சாகத்தையும் உழைப்பதற்கான ஊக்கத்தையும் அது கொண்டு வருகிறது. ஆறுமாத காலம் காத்திருந்த விவசாயப்பெருமக்கள் மீண்டும் நிலத்தில் இறங்கும் தருணம் இது. எங்கும் புத்துணர்ச்சி புதிய நம்பிக்கை இது தான் ஆடி. இந்த மாதத்தில் உற்சாகத்திற்கு மட்டும் தள்ளுபடி இல்லை. தமிழர்களின் வாழ்வோடு கலந்த மாதம் இது சமயம், சமுதாயம், பண்பாடு எனப் பல கோணங்களிலும் தமிழர்களின் ஒரு பகுதியாக மாறிவிட்ட மாதம். இது கடவுளரைக்கொண்டாடும் மாதம். உழைப்பை ஆராதிக்கும் மாதம். உறவுகளைப்போற்றும் மாதம். எந்தப்பண்டிகை காலத்தையும் போலவே ஆடி மாதமும் தமிழர்கள் வாழ்வில் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கிறது. ஆன்மீகம், கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் வேளாண்மை, வியாபாரம் எனப்பல்வேறு கோணங்களில் ஆடியில் முக்கியத்துவம் விரிகிறது.

ஆடிப்பெருக்கு பல்வேறு ஊர்களில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இது நீர் நிலைகளைப் பெருமைப்படுத்தும் ஒரு நிகழ்வு. இங்கே வழிபடப்படுவது உயிருக்கு ஆதாரமான நீர் இந்த நீர் வழிபாட்டைப்பொறுத்து வழிபாடு, அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு நடைபெற்று வருகிறது.

ஆடிபிறந்து விட்டாலே அம்மன்கோயில்கள் களைகட்டத்தொடங்கிவிடும். கூழ்வார்த்தல் தீ மிதித்தல் , பூச்சொரிதல் முளைப்பாரி ஊர்வலம் என ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதியாக பக்தர்கள் கொண்டாடுகிறார்கள். ஆடிக்கும் புராணங்களுக்கும் இடையே உள்ள ஆழமான சில நம்பிக்கை களுக்கும், சடங்குகளும் மக்கள் மனதில் ஊறிப்போனவை. மண்ணின் மணமும் பாரம்பரியமும் இழையோடும் எத்தனையோ சம்பிரதாயங்கள் தமிழகமெங்கும் கடைபிடிக்கப்படுகின்றன. புதுமணத் தம்பதிகளுக்கு தரப்படும் ஆடிச்சீர், ஆடு விருந்து பழமை மாறாமல் கலாச்சாரப்பெருமை என நினைத்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆடிப்பட்டத்தில் தேடி விதைக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதனால் சித்திரை, வைகாசி மாதங்களில் நிலத்தைப் பண்படுத்திக்கொண்டு ஆடிப்பட்டத்தில் விதைத்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும். மானாவாரிப் பயிர்கள். காய்கறிகள் ஆகியவை பயிரிடப்படும். பயிர்களில் நோய்தாக்குதல் பூச்சி தாக்குதல் போன்றவை அதிகமாக இருக்காது என்று கூறுவார்கள். இதனால் விவசயிகளுக்கு எதிர்பார்த்ததைவிட நல்ல லாபம் கிடைக்கும். நிலங்களில் தானியங்களை ஒன்றாகக்கலந்து விதைக்கலாம். என்று

முன்னோர்கள் சொன்னார்கள். கோடைக்காலத்தில் காத்தடிச்சா அது வெம்மைக்காத்தாக இருக்கும். அதுலேயே மிஞ்சி ஆடிக்காத்து அடிச்சு அடை மழை பெய்யும் என்று சொல்லுவாங்க. ஆடி அடை மழை காத்து கோடைக்காத்தைவிட பயங்கரமாயிருக்கும். சில காலங்களில் ஆடி மாதத்தில் அடை மழை பெய்யாமல் காற்று மட்டுமே வீசும் அதை ஆடி வேடை என்று சொல்வார்கள். ஆடி மாத அடைமழைக்கு ஊர்க்கிணறு, ஊருணி கண்மாய், குளம், குட்டை எல்லாம் ஊறுவதோட நிலத்தடி நீரும் உயரும். அதுவே ஆடி வேடையில் அடிக்கிற காற்று நிலத்தடியிலே இருக்கிற தண்ணியையெல்லாம் காய வச்சிடும். அதனாலே நிலத்தடி நீர் வெகு ஆழத்துக்குப்போய் விடும். இதனால் சில காலங்களில் கடும் வறட்சி, பஞ்சம் பட்டினி ஏற்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்பொழுதெல்லாம் மழை பொய்ப்பதால் ஆழ்குழாய் கிணறுகள் ஆயிரம் அடிக்கும் போர் போட்டு தண்ணீர் கிடைக்கவில்லை.

இந்த நிலைமாற பொதுமக்களும், அரசாங்கமும் மழைநீர் சேகரிப்பு, கண்மாய், குளம், குட்டை ஆகியவற்றை ஆழப்படுத்த அக்கறை காட்டினால்தான் தமிழகம் பாலைவனம் ஆகாமல் தடுக்க முடியும். மக்களுக்கு போதிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவேண்டும். ஆடி மாதத்தில் தமிழ் மண்ணுக்கே உரிய விழாக்கள் ஒவ்வொரு பகுதியிலும் களைகட்டுகின்றன. அந்தந்த மண் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் பண்பாடு மற்றும் சமயம் சார்ந்து நடத்தப்படும் இந்த விழாக்களால் ஆடி மாதம் மேலும் அழகு பெறுகிறது. இந்த ஆடி மாதத்தில்தால் வெள்ளலூர் நாட்டு மக்கள், தங்களது தெய்வானை கள்ளழகரை வழிபட ஆடிப்பௌர்ணமியன்று நடைபெறும். கள்ளழகர் ஆடித்திருவிழாவுக்கு தங்களது ஊர்களிலிருந்து வண்டிகட்டி, வேன், கார் லாரிகள் மூலம் அழகர்கோயில் செல்வார்கள். நூபரகங்கைத்தீர்த்ததில் நீராடி, ராக்காயி அம்மன் பழமுதிர்ச்சோலை முருகன், பதினெட்டாம்படி கருப்பன், கள்ளழகரான ஸ்ரீ மாயாவுதரனை தரிசித்து மகிழ்வார்கள். தங்களது நிலங்களில் விளைந்த தானியங்களின் ஒரு பகுதியை தனியாக எடுத்துவைத்திருந்து அன்றையதினம் கள்ளழகர் கோயிலில் உள்ள திருக்கோயில் தானியக்கிடங்கில் பயபக்தியுடன் சேர்த்து இறைவனுக்கு நன்றியாக அந்தத் தானியங்களை காணிக்கையாக்குவார்கள். மறுநாள் பௌர்னமியன்று தேரோட்டம் நடைபெறும்.

அதற்கு முன் வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த பூஜாரிகள், சாமியாடிகள் அழகர்கோயில் கோட்டைக்கு வெளியே மேலூர் சாலையில் உள்ள கச்சைகட்டி பள்ளத்தில் கச்சைகட்டி சாமியாடி, அழகர்கோயில் பதினெட்டாம்படி கருப்பனைத் தரிசிக்க கருப்பனாக சாமியாடிவருவார்கள். வெள்ளலூர் நாட்டில் யார் யாருக்கு எந்த வகையறாவுக்கு சாமியாடிவர பட்டயங்கள், முறி அனுமதிகள் உள்ளதோ, அவர்கள் கச்சை என்ற ஆடைகளை அணிந்து சாமி வருந்தியழைத்து சாட்டையால் அடித்துக்கொண்டும் வரும் வழியில் பக்தர்களுக்கு ஆசிகள், கேள்விக்குப்பதில் சொல்லி விபூதி கொடுப்பார்கள். இந்த கச்சைகட்டிப்பள்ளம் வெள்ளலூர் நாட்டைச்சார்ந்த கட்டக்காளை, கள்ள நாயகன், மன்னன் கெட்டி, குழுவன, குருக்கள், கொண்டி, கோமாளி அவர்களுக்கு கச்சைகட்டி ஆட அழகர்கோயில் நிர்வாகிகளால் பட்டயங்கள் தந்ததாக அறியப்படுகிறது. மேலேகுறிப்பிடப்பட்ட வகையைச்சார்ந்தவர்கள் கச்சைக்கட்டி பள்ளத்திலிருந்து, கச்சைக்கட்டி சாமியாடி பதினெட்டாம்படி வரும்போது அங்குள்ள பட்டருக்கு காணிக்கை தருவதில்லை. ஆனால் பட்டர் விபூதி அளித்து இவர்களை பெருமைபடுத்துவார். காரணம் அழகர்கோவில் ஆண்டாரை கி.பி. 15-வது நூற்றாண்டில் ராமநாதபுரம் மறவர்கள் விழா நடத்தவிடாமல் தூக்கிச்சென்று விட்டார்கள். கட்டக்காளை தலைமையில் இந்த ஏழுபேரும் மறவர்களை போரிட்டு வென்று ஆண்டாரை அழகர்கோவிலுக்கு கொண்டு வந்து விழா நடத்த உதவியதால் இவர்களுக்கு காரண மரியாதைகள்

கோவில் நிர்வாகத்தால் தரப்பட்டன. எனவே மேற்படி ஏழுபேருக்கும் காணிக்கை செலுத்தாமலே மரியாதைகள் வழங்கப்பட்டுவருகிறது.

துன்பத்திற்குள் இன்பம்

கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானால் அவர் கருணா மூர்த்தி என்பதும் உண்மையானால் உலகத்தில் ஏன் இத்தனை துன்பங்களை வைத்திருக்கிறார்? மனிதவர்க்கம் ஏன் இத்தனை கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது? இந்தக்கேள்விகள் ஆதிகாலந்தொட்டு கேட்கப்பட்டு வருகின்றன. உள்ளத்தில் உண்மை ஒளிகொண்ட மகான்கள் மேற்படி கேள்விகளுக்கு விடையும் சொல்லி வந்திருக்கிறார்கள். மனிதர்கள் துன்பம் என்று நினைப்பது உண்மையில் துன்பம் அல்ல. சூரியனை மேகம் மூடுவது போல் நமது அறிவை மூடியிருக்கும் மாயை காரணமாகச் சில விஷயங்களைத் துன்பம் என்று நாம் கருதுகிறோம். உண்மையில் துன்பமும் ஒரு வித இன்பமேயாகும். ஆனால், அன்பு வடிவான ஜகன்மாதா ஆனந்தத்தின் எல்லையற்ற பொய்கையான அன்னை பராசக்தி ஏன் தன் மக்களுக்குத் துன்பம் இழைக்கிறாள் ஏன் கஷ்டங்களை இழைக்கிறாள்?

துன்பம் என்றும் கஷ்டம் என்றும் நாம் எண்ணிக்கொள்கிறோமே தவிர, உண்மையில் அவை துன்பங்களுமல்ல, கஷ்டங்களுமல்ல. அறிவுத்தெளிவோடு பார்த்தால் நாம் துன்பம் என்று நினைப்பதும் இன்பந்தான். கஷ்டம் என்று கருதியதும் சுகந்தான். இந்த தத்துவத்தை நம்புவது சுலமான காரியமல்ல. துன்பத்திலே இன்பமாவது கஷ்டத்திலே சுகமாவது? என்ற அவநம்பிக்கை உண்டாகத்தான் செய்யும்.

ஆயினும் நமது வாழ்க்கை அனுபவத்திலேயே சில விஷயங்களை ஆலோசித்துப் பார்த்தால் மேற்படி தத்துவத்தில் உண்மை உண்டு என அறியலாம். சோகரசமுள்ள கதைகள், காவியங்களைப் படிக்கிறோம். சோகமயமான நாடகங்களைப் பார்க்கிறோம். சோகத்தை ஊட்டும் கீதங்களைப்பாடுகிறோம், கேட்கிறோம்.

இப்படியெல்லாம் துன்பத்தை நாமாகத்தானே தேடி அனுபவிக்கிறோம்? எதற்காக? அந்தத் துன்பங்களிலேயெல்லாம் உள்ளுக்குள்ளே இன்பம் பொதிந்திருப்பதாலேதான். நமது வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கிறோம். அனுபவிக்கும் போது கஷ்டமாக இருக்கிறது. இது சகிக்க முடியாத கஷ்டம் என்று தோன்றுகிறது. இந்த வாழ்க்கையே வேண்டாம் என்று தீர்மானிக்கிறது.எல்லாக் கஷ்டங்களையும் எப்படியோ சகித்துக்கொள்கிறோம். அப்படி நாம் அனுபவித்த சகிக்க முடியாத கஷ்டங்களை சில வருடகாலம் கழித்து நினைத்துப்பார்க்கும் போது ஒரு வகை அபூர்வ இன்பம் ஏற்படுகிறது. பழைய கஷ்டங்களை நினைத்துப்பார்ப்பதிலும் அவற்றைக் குறித்துப் பேசுவதிலும் பிரமிப்புடன் கலந்த ஒருவகை சந்தோசமே அடைகிறோம்.

சீதாதேவி வனவாசத்தின் போது அனுபவித்த துன்பங்களுக்கு எல்லையேயில்லை. அவ்வளவு துன்பங்களைப் பெண்ணாய்ப்பிறந்த யாரும் அனுபவித்திருக்க முடியாது. ஆயினும் அயோத்தியில் ஸ்ரீ ராமபிரானுடைய பட்டத்து ராணியாகச் சீதை வாழ்ந்த காலத்திலும், அதிலும் கர்ப்பம் தரித்திருந்த சமயத்தில் உனக்கு எதிலாவது ஆசையுண்டா? என்று ராமபிரான் கேட்டபோது சீதாதேவி என்ன சொன்னாள்? மறுபடியும் காட்டுக்குப்போய் அங்கே நான் கஷ்டப்பட்ட இடங்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்று

ஆசையாயிருக்கிறது என்றாள். துன்பம் என்பது உண்மையில் துன்பம் அல்ல. அவ்விதம் நினைக்கச்செய்வது மாயையின் காரியம். துன்பத்திற்குள்ளேயும் இன்பந்தான் இருக்கிறது என்று சொல்லும் வேதாந்த உண்மையை சீதையின் கோரிக்கை நன்கு நிரூபத்திருக்கிறதல்லவா? எனவே துன்பத்திலும் இன்பம் உண்டு என வாழ்க்கைத்தத்துவம் நன்கு விளங்குகிறது.

கார்காலத்தைபோற்றுவோம்

மீன் பூத்த வானம் தரைக்கு வந்தது போல் ஜொலிக்கும் கார்த்திகையைப்போற்றுவோம். புது நெல்லின் வரவு தைப்பொங்கல் புது நெல்லுக்கு முதலாக இருந்த விதை நெல்லின் மிஞ்சியது கார்த்திகையில் அவிலாகிப்பொரியாகும். இப்படி நெல்லின் மிச்சமும் அதன் புது வரவும் விழாக்களைக் கோர்க்கும் சரடாக இருப்பது நெல் கலாச்சாரம். ஐப்பசியில் அடைமழை என்றால் கார்த்திகையில் கருத்த இடமெல்லாம் மழை துண்டு துண்டாகக்கருத்து வரும் மேகங்கள் விட்டு விட்டுப்பெய்து கொண்டே போகும். வானம் மூடி மூடித்திறக்கும், அப்போது வெளிவாங்கி காட்டும். வடகிழக்கிலிருந்து வீசும் வாடைக்காற்று சற்று வலுத்துக் குளிர்தட்டியிருக்கும். மழைக்காலத்தின் தோழமையோடு வரும் கார்த்திகையில் ஆடம்பரத்துக்கு இடமில்லை. ஆரவாரம் செல்லுபடியாகாது மண் அகலின் திரி நுனியில் தொற்றிக்கொண்டு நிதானமாக எரியும் ஒளிப்பொட்டுக்குப் பரபரப்புத்தான். வாழும் இல்லத்தை மையப்படுத்தி பெண்கள் கொண்டாடுவது இந்தக்கார்காலத் திருவிழா.

பெரியகார்த்திகை

சிவன் ஜோதி ரூபமாக காட்சி தரும் நாளாகவும், முருகனுக்கு உரிய நட்சத்திர விரதமாகவும் விளங்குகிறது. கார்த்திகை மாத பவுர்ணமியில் வரும் கார்த்திகையைப் பெரியகார்த்திகை என்பார்கள் மழைக்கால முழு நிலவின் ஒளி வார்த்தைகளால் விவரிக்க முடியாத வான் ஜொலித்தபடி இருக்கும். அந்த ஜொலிப்பில் ஆயிரக்கணக்கான ஒளிப்பொட்டுகளாக அகல் விளக்குகள் வீடு வீடாக தெருத்தெருவாக முடிவில்லாமல் நீண்டு கொண்டேயிருக்கும்.

இல்லங்களிலும், திண்ணையிலும், வாசலிலும் பெண்கள் அகல் விளக்குகளை ஏற்றிவைப்பார்கள். நிறை நிறையாக ஒளிரும் அகல்கள். மீன்கள் பூத்த வானம் தரைக்கு வந்தது போல் இருக்கும். முன்னிருட்டுக்காலம் கார்த்திகை பொழுது சாயும் நேரத்தில் வீட்டில் விளக்கேற்றிப் பழம், பாக்கு, வெற்றிலை, வைத்து தேங்காய் உடைத்துச் சாமி கும்பிடுவார்கள். அங்கிருந்து அகல் விளக்குகளை ஏற்றிவிட்டு நிலைப்படிகளில் இருபக்கமும் வைத்திருப்பார்கள். திண்ணைகளும் தெருவாசலும் அலங்கரித்திருக்கும். அடுப்பு, அரிசிப்பானை, உப்புமரவை தவிட்டுக்கூண்டு மாட்டுக்கொட்டில் கிணற்றடி குப்பைக்குழி இவற்றிலும் தவறாமல் ஒரு அகல் விளக்கு எரியும்.

அன்று வீட்டுக்கு வரும் லெட்சுமி இங்கெல்லாம் தங்கித்துலங்க வேண்டுமென்று பெண்கள் வேண்டிக்கொள்ளும் மரபு. உப்பும், தவிடும், குப்பையும் கூட திருமகள் தங்குமிடமாகப்பார்க்கும் கலாச்சாரத்தின் தன்மையை முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும். உப்பும், தவிடும், அரிசியும் தண்ணீரும் புது வீடு குடிபோகும் போது உடன் கொண்டு செல்லும்போது பொருட்களாக இருப்பதை நினைத்துக்கொள்ள வேண்டும். குடிபுகுவதற்கு கார்த்திகை மாதத்திற்காக காத்திருப்பார்கள். அவ்வாறே

வீட்டில் புது அடுப்பு கட்டுவதும் இந்த மாதத்தில் தான். கார்த்திகை அன்று மலைக்கோயிலுக்கு சென்று சுவாமியை வழிபட்டு மலையை வலம் வரலாம். கோவில்களில் தீபாராதனை முடிந்தவுடன் அனைவரும் வெளியில் சொக்கப்பன் கட்டியிருக்கும் இடத்துக்கு வந்து தீபராதனை செய்ய தீபத்தைக்கொண்டு பனைமட்டைகளை வெட்டி காயவைத்து கூம்பாக கட்டியிருக்கும் சொக்கப்பனை கொழுத்துவார்கள். பனை மட்டைகள் சடசடத்து எரியும் போது சாம்பல் பறக்கும். அதைத் தாவிப்பிடித்து நெருப்பில் எரிந்தும் எரியாமலும் இருந்த கம்புகளை அதில் போட்டு மீண்டும் எரிந்து போன கம்புகளை அதில் போட்டு மீண்டும் எடுத்து சென்று, அதன் கரி சாம்பலை தங்களது நிலத்தில் தெளிப்பார்கள். தெய்வங்களின் அருளால் நம் வாழ்வில் என்றும் ஒளி வீசும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

நமது வெள்ளலூர் நாட்டில் புலிமலைப்பட்டி அருகில் உள்ள புலிமலையில் வீற்றிருக்கும் ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ முனிக்கோவிலில் கார்த்திகை விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெள்ளலூர் நாட்டில் எங்கும் இது போன்ற குன்று இல்லாததால் இங்கு பொது மக்கள் காலையிலிருந்து மாலை வரை பாலமுருகனை தரிசித்து கிரிவலம் வந்து ஆயிரக்கணக்கான மக்கள் அன்று அருள் பெறுகிறார்கள். மேலும் புலிமலைப்பட்டி கிராமத்தார்கள் பெரிய கார்த்திகையன்று காலையிலிருந்து மாலை வரை ஸ்ரீ பாலமுருகனை தரிசிக்க வரும் அனைத்து பக்தர்களுக்கும் சர்க்கரைப்பொங்கல், சுண்டல், பிரசாதம் ஆகியவை வழங்கி, தங்களது ஆன்மீக உணர்வை வெளிப்படுத்தி, இறைவனுக்கு செய்யும் தொண்டாக மகிழ்வுடன் செய்து வருகிறார்கள்.

நாட்டுத்தெய்வங்களான ஸ்ரீ ஏழைகாத்த அம்மன், ஸ்ரீ வல்லடிகார சுவாமி, ஸ்ரீ கருங்கல் மந்தைச்சாமி மற்ற அனைத்துத்தெய்வங்களின் ஆலயங்களிலும் விமரிசையாக நடைபெறுகிறது. ஸ்ரீ வல்லடிகாரர் கோவிலில் பெரிய கார்த்திகையன்று நாட்டார்கள் சார்பில் காலாஞ்சி மரியாதைகள் பலருக்கு தரப்பட்டுவருகிறது. முதலில் மண்காரணம் 11 கரைகளில் 22 பிரிவுகளுக்கும் பூசாரி இரண்டு பேருக்கும் கிடாவெட்டி வளவுத்தலசிகள் (நய்க்கான், சமட்டி, சலுப்புலி) நாட்டுக்கணக்குப்பிள்ளை ஐந்து மாகாணத்துக்கும் தலா ஒன்று செட்டியார்கள் பட்டரைக்கரை நாட்டுப்பண்டாரம் ஆகியவர்களுக்கும் காலங்காலமாக கொடுத்து பெருமைப்படுத்தி வருகிறார்கள்.

இதேபோல் ஸ்ரீ ஏழைகாத்த அம்மன்விழா நாட்களிலும் ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் கோவிலிருந்து நாட்டார்கள் காலங்காலமாக மரியாதை செய்து வருகிறார்கள் என்று அறியப்படுகிறது.

ஸ்ரீ வல்லடிகாரசுவாமிக்கு நாள் சாட்டும்முன், நாட்டு முதல் தெய்வமான ஸ்ரீ ஏழைகாத்த அம்மனுக்கு திருவிழா முடியும் நாட்களிலும் இந்நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டுவருகிறது.

இயற்கையின் அதிகாலை - மார்கழி

மனிதர்கள் உடம்பெடுத்துப் பிறந்ததன் பயனைத் தங்கள் மேனியில் உணரும் மாதம் மார்கழி. வெயிலிலும் பனிக்காற்றும் ஒன்றையொன்று இதமாக்கி கொண்டிருக்கும். நிலம் தெரியாத காலையில் குளிக்கச் செல்பவர்கள் குளிருக்கு அஞ்சி கரையிலேயே நிற்பார்கள். குளத்திலோ, கண்மாயில் இறங்கிவிட்டால் நீரின் கதகதப்பு கரையேறவிடாது. பனி மூட்டத்தை ஊடலுக்கு வரும் ஆதவனின் கதிர்களில் சிறுவர்கள் வெயில் காய்வார்கள். விடிவதற்கு முன் வீட்டுக்கூடத்தில் கிடைப்பதைக் கொளுத்திக்

கை கால்களைக் காய்ச்சிக்கொள்வார்கள். உடம்பில் உணரும் இந்த உணக்கைதான் மார்கழியை மாதங்களில் சிறந்ததாக ஆக்குகிறதோ?

இயற்கையிலும் கலாச்சாரக் களத்திலும் மார்கழி விட்டுச்செல்லும் தடயங்கள் நமது கண்களுக்குத்தெரியவில்லை. கிராமங்களில் வெள்ளி முளைப்பதற்கு முன்பே தாதர் சேமக்கலம் வாசித்து சங்கு ஊதுவார். அப்போது இறைவனின் கீர்த்தனைகள் சிலவும் அவர்கள் பாடுவதுண்டு தாதர்கள் குறைந்து விட்டதால் சங்கு ஊதப்படுவதும் இப்போது இல்லை.

மவுனம் காக்கும் மார்கழி

நீர்ப்பரப்பிலிருந்து பனிப்புகை துணிப்படலமாக எழும்பிக்கொண்டிருக்கும் சலனமில்லாத அமைதி. வெள்ளையும் சிகப்புமாக அல்லிப்பூத்துக்கு கிடக்கும் குளம், குட்டை, ஓடை, வாய்க்கால் எல்லாம் நிறைகுடமாக மவுனம் காக்கும்.

ஒவ்வொன்று ஓடிக்கொண்டிருந்த தண்ணீர் மெலிந்து ஓசையில்லாமல் இறங்கித் தவழும் வயல்களிலிருந்து வடியும் நீரை வாங்கி வாய்க்கால் மெதுவாக கடத்திக்கொண்டிருக்கும். அங்கொன்றும், இங்கொன்றும் மீன் துள்ளுவதுதான் சலனம். இந்தச்சலனங்களும் மவுனத்தின் ஆழத்தைக்காட்டும் பேசிப்பகிர்ந்து கொள்ளாத இலக்கை நோக்கிப் பயணிக்கும் நிறைபாரமான வண்டியாக இயற்கை நகரும் ஓசை தனது இருப்பை அமைதியிலிருந்து பெறுவது அப்போதுதான் நமக்குப் புலனாகும். தைப்பொங்கலை இலக்காகக்கொண்டு காலத்தை பத்தாம் நாள் ஒன்பதாம் நாள் என்று இறங்கு வரிசையில் கணக்கிட்டு வருவார்கள். வேலையின் தீவிரத்தில் விளையும் மவுனத்தில் ஒரு பெரும் எதிர்பார்ப்பு.

மார்கழி

மாதங்களின் நான் மார்கழி என்று கிருஷ்ண பரமாத்மாவே கூறுகிறார். அந்த அளவுக்கு புனிதமானது மார்கழி மாதம்.

மார்கழியில் வீசும் பனிக்காற்றில் ஏராளமான சக்திகள் நிறைந்திருக்கின்றன. உடலில் உள்ள வாத, பித்த நோய்களை போக்கி, ஆரோக்கியத்துடன் ஆற்றல் அந்தச் சக்திகளுக்கும் உண்டு. சூரியன் உதித்ததும் அவையெல்லாம் மறைந்து விடும். எனவேதான் விடியற்காலை 4 மணிக்குள் எழுந்து காலைக்கடன்களை முடித்து பச்சைத்தண்ணீரில் குளித்து பெண்கள் வாசலில் சாணம் தெளித்து மாக்கோலமிட்டு, சாணம் பிடித்து வைத்து அதன் மீது பரங்கிப்பூ அல்லது பூசணிப்பூ வைத்து பின் ஆண் பெண் அனைவரும் கோவிலுக்கு நடந்து சென்று இறைவனைத்தரிசித்து அந்த நாள் முழுவதும் புத்துணர்ச்சியோடு இருப்பார்கள்.

பூப்போடும் வாய்க்கால்கள் மடைகள்

ஏறத்தாழ மார்கழி நடுவில் கருப்போட்ட காலம் துவங்கும் ஈசானியத்திலிருந்து பொதுப்பொதியாக வெண்மேகங்களின் பயணம் மாத இறுதிவரை ஓயாது. நாணல் பூத்து வாய்க்கால்களுக்குப் புருவங்கள் கட்டியிருக்கும். பாளை உடைந்ததாக வில்வளைவாக இப்படிப்பல கட்படங்களில் நெல்லைக் காணலாம் மரகதப்போர்வைக்குள் முகம் புதைந்த பொன்மணிச்சரங்களாக இருக்கும் மாலை வெயிலில் மஞ்சள்

பட்டாகவும் விரிந்திருக்கும். வாய்க்கால்களில் கண்ணாடியாகத் தெளிந்திருக்கும் தண்ணிர் பளிச்சென்ற வெண்மையில் கொக்கும், இவை பத்தி பிடித்து தோரணமாக வானில் பறக்கும். மஞ்சள் பூக்களை வாரியிறைத்துக்கொண்டு செடிகளில் படர்ந்திருக்கும் காட்டுப்பீர்க்கு வீட்டுக்கூரை, மாட்டுக்கொட்டகை, வைக்கோல் படப்பு இவைகளில் விண்மீனாகப்பூத்திருக்கும் பரங்கி சுரை. கோவைக்கொடி படிகமணிகளாகப் பனித்துளிகள் திரண்டு மின்னிக்கொண்டிருக்கும் சேம்பை இலை.

தண்ணீர் கண்ட இடமெல்லாம் செருமிக்கிடக்கும் மீன்கள். அறுத்துக் காயவைத்துக் கட்டுகளாகத் தலைச்சுமையாகவே சந்தைக்கு வரும் பாய்க்கோரை வரப்பு வாய்க்கால்களில் சீந்துவாரில்லாமல் நிற்கும் முண்டாசுக்கோரை. இவையெல்லாம் இயற்கையில் நிகழும் சலனங்கள். வயல் வரப்பில் உழவர்கள் ஒருவகைக் களைகளை அரிந்து காலில் படாமல் நெற்கதிரை ஒதுங்கி விடுவார்கள். அறுவடைக்கு முன் சில்லரை வேலைகளாகக் கொல்லையில் மரங்களைக் கழித்து வேலி கட்டுவார்கள்.

அறிவிக்காத போட்டியாக மாதம் முழுவதும் பெண்கள் வாசலில் கோலம் போடுவார்கள். வெள்ளிக்கோடுகளாகத் தீட்டியிருக்கும் கோலத்தில் பரங்கியின் மஞ்சள் பூக்களையும் சாண உருண்டையில் செருகிவைப்பார்கள். நிலைப்படி அருகில் அகல் விளக்கு ஏற்றியிருக்கும். வைக்கோலை எரித்து சாணமும் வண்டலும் கலந்து வீட்டில் தரையை மெழுகித்தீத்துவார்கள் தரையை வழவழப்பாகத் தீத்துவதற்குக் தீத்தாங்கல் என்ற கை கொள்ளும் அளவில் ஒரு கல் புழங்கியது. தீத்திய தரையின் கருப்புப் பிண்ணனியில் மாக்கோலம் கண்ணைப்பறிக்கும். அப்போது நெய்த கோரைப்பாய் புதிதாகத்தோர்த்த அகப்பை, பிரிமனை, மூங்கில், கூடைகள், தென்னந்தட்டிகள், ஒட்டடைக்குச்சி சந்தைக்கு வரும் தெருத்தெருவாகவும் கூவி விற்பார்கள். மாடுகளுக்கு கொம்பி சீவி விடுவார்கள். தலைக்கயிறு கழுத்துகயிறு நூல் கயிராகவே மூக்குக்கயிறு கழுத்துச்சலங்கை நெட்டி மாலை மும்முரமாக விற்கும். அப்போது செங்கரும்பும் விற்பனைக்கு வரும்.

கோவில்களில் காலையில் திருப்பாவை திருவெம்பாவை பாடுவது வழக்கம். வெள்ளலூர் நாட்டுக்கோவில்களில் மார்கழி மாத திருப்பள்ளியெழுச்சி பாடுவது நடைபெறும். அப்போது குழந்தைகளுக்கும் பள்ளிக்கு வெளியில் நல்ல தமிழ் பயிற்சியாக இருந்தது. அபிசேகம் முடிந்தவுடன் பக்தர்களுக்கும், சிறுவர்களுக்கும் சர்க்கரைப் பொங்கல் சுண்டல் பிரசாதங்கள் வழங்கப்படும். பருவங்களின் சுழற்சியை ஒட்டிய பொருளாதாரக் காரணிகளும் அவற்றால் விளையும் பண்பாட்டு வழக்கங்களும் மார்கழியில் தெளிவாகத்தெரியும். அவ்வாறே பண்பாட்டு வழக்கங்களால் பிறக்கும் பொருளாதார நிகழ்வுகளும் இம்மாதத்தின் மற்றொரு பக்கம்.

ஆரோக்கிய பொங்கல்

மார்கழி பனி முடிந்து தை பிறக்கும் போது குளிர்கால சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களால் நம் சுற்றுப்புறத்தில் பல்லுயிர் பெருக்கம் காணப்படும். விலங்குகளும் பூச்சிகளும் குளிர்காலத்தில் இணைந்து இனவிருத்தி செய்து அதனைத்தொடர்ந்து மரம், செடி, கொடிகள் என எங்கெங்கும் பல்வேறு புழுக்களும், பூச்சிகளும் அதிகரிக்கின்றன. இந்தப் பூச்சிகளில் பெரும்பாலானவை நன்மை செய்பவைகளாக இருந்த போதும் கூட இனப்பெருக்க மாற்றத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் வேறுபாட்டால் பல்வேறு தொற்று நோயகளின் ஆதிக்கமும் அதிகரிக்கிறது. வீடுகளை நோக்கிப்படையெடுத்து வரும் பூச்சிகளை

கட்டுப்படுத்தாவிட்டால் மனித இனத்திற்கு பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உண்டாகிறது. இதனை தவிர்க்கவே முனனோர் போகிப்பண்டிகை கொண்டாடினார்.

வீட்டில் வேண்டாத பொருட்களை சுத்தம் செய்து எரித்து அழிப்பதையே போகித்திரு நாளாக கொண்டாடுகிறோம். தங்கள் வீட்டிலுள்ள பழைய பொருட்களை அழித்து காரத்தன்மை மிகுந்த சுண்ணாம்பு பை பூசுவதால் வீடு சுத்தமாகிறது. வெளியில் இருந்து வீட்டை நோக்கிப் படையெடுக்கும் பூச்சிகள், வீட்டிற்கு நுழையவிடாமல் தடுப்பதற்கு வீடுமுன் கட்டப்படும் கூரைப்பூ உதவுகிறது. கண்ணுப்பீளைச்செடி, ஆவாரம்பூ, மாவிலை சேர்த்து விட்டுமுன் சொருகுவதில் பயன் உள்ளது. இலை உலர்ந்து கீழே விழும்போது அதைத் தாண்டி பூச்சிகள் வீட்டிற்குள் நுழையாது. காப்புக்கட்டும் செடியின் நாற்றம் கொசு பூச்சிகள் பெருக்கத்தை தடுக்கும். ஆவாரம் பூ, மாவிலைகள் ஆக்சிஜன் (பிராண வாயு) செரிவை அதிகரிக்கிறது. தைக்குப்பின் வெப்பம் சார்ந்த நோய்கள் உருவாகும். அதைத்தவிர்க்க உளுந்து, பயிறு, பசும்பால் , நெய், சர்க்கரை போன்ற குளிர்ச்சியான உணவுகளை உட்கொள்ளலாம். அதன் அடிப்படையில் தான் பொங்கலென்று அதிகாலையில் எழுந்து குளித்து சூரியனை வணங்கி பொங்கல் வைத்து வழிபடுகிறோம்.தடுப்பு மருந்துகள் வழங்க உகந்த மாதமும் தை மாதமும் ஒன்று. அதனால்தான் தை மாதத்தில் நாடு முழுவதும் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது. பொங்கல் நாளில் இஞ்சி மற்றும் மஞ்சள் கிழங்கு முக்கியமான வழிபாட்டு பொருட்களாக விளங்குகிறது. வைரஸ் கிருமிகளை இஞ்சி மற்றும் மஞ்சள் கிழங்கு அழிக்கும் என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டள்ளது. மஞ்சள் காமாலை, அம்மை போன்ற நோய்களை தடுக்க இவை உதவும். கோடையில தோன்றும் நுண்கிருமிகளின் வளர்ச்சியைத் தடுக்கவும் குடலில் ஏற்படும் தொற்றினால் ஒவ்வாமை ஏற்படுவதைத் தடுக்கவும் பனங்கிழங்கு, வெற்றிலை, வாழைப்பழம், தேங்காய் போன்ற வழிபாட்டுப்பொருட்களை அன்றைய தினம் நம் உணவிலும் சேர்த்துக்கொள்கிறோம்.

வெயில் காலத்தில் தோன்றும் காமாலை மற்றும் சிறுநீரகக் கற்களை தடுக்க கரும்பு பெரிதும் உதவுகிறது. கரும்பினால் உடல் எரிச்சல் குறைவதுடன் பற்கரை நீங்கி சுத்தமடைகிறது. நன்கு மென்று தின்பத்திற்கு ஏற்றவாறு பற்களின் பலமும் அதிகரிக்கிறது. வாயு அதிகரிக்க கூடியதாக இருந்தாலும் புரதச்சத்து நோய் எதிர்ப்பு சக்தியைத்தரக்கூடிய பச்சை மொச்சை பொங்கலென்று உணவில் சேர்த்துக்கொள்வதால் உடலில் வலிமை அதிகரிக்கிறது. மண்பானையில் செய்த பொங்கல் விரைவில் கெட்டுப்போவதில்லை. இப்படி இயல்பாகவே ஆரோக்கிய பொங்கலாக அமைந்துவிடுகிறது.

சூரியன் மகர ராசியில் நுழையும் மாதத்தையே தை என்கிறோம். இது பேச்சு வழக்கில் சங்கராந்தி என இருந்தாலும் சங்கிராந்தி என்பதே சரியானது. கிராந்தி என்றால் மாறுதல். இதில் சம் அடைமொழி இணையும்போது நல்ல மாறுதல் என்று பொருள்படும். சூரியன் இல்லா விட்டால் உலகம் இல்லை. அவரே உலக உயிர்களுக்கு உணவு தருகிறார். விளைச்சலுக்கு காரணமாகிறார். ஒவ்வொரு விவசாயின் வீட்டிலும் நல்ல மாறுதலை உருவாக்குகிறார். விவசாயிகள் மட்டுமல்ல அவர்களிடமிருந்து பொருளைப்பெறும் எல்லா மக்களுமே தங்களுக்கு உணவளித்த சூரியனுக்கு நன்றி சொல்லும் நன்னாளாக மகர சங்கராந்தி அமைகிறது. அன்பை வெளிப்படுத்தும் நாளும் அதுவே, சம்பந்திகள் இந்நாளில் தங்களுக்குள் பொருட்களை பரிமாறிக்கொள்கிறார்கள்.

நம்மைச்சுற்றிலும், இயற்கை வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் முதல் காட்டில் பூக்கும் மலர்கள் வரையில் ஒவ்வொன்றிலும் தனது சேவை உணர்ச்சியைக்காட்டுகிறது. வான்மழை பெய்யும் போதும் சூரியன் ஒளியைத்தரும்போதும் மரங்கள் கனியைத் தரும்போதும் பிரதிபலனாக எதையுமே எதிர்ப்பார்ப்பதில்லை தங்களால் இயன்ற அளவு பலனை முழுமையாகத் தருவதில் திருப்தி அடைகின்றன். ஆனால் பதிலுக்கு நாம் இன்று என்ன செய்தோம். விண்வெளியை வணங்குகிறமோ? வாழ்த்துகிறோமோ? இல்லையே, மிருகங்களும் பறவைகளும் கூட இயற்கையை ஒட்டியே வாழ்கின்றன. அது தந்த செல்வத்தை நன்றிப்பெருக்குடன் ஏற்று வணங்கி வாழ்த்துகின்றன. எனவே தான் நமது முன்னோர்கள் இயற்கையை பஞ்சபூதங்களாக நினைத்து வழிபட்டு வந்தார்கள் 12 மாதத்திற்கும் இயற்கையோடு இணைந்த விழா எடுத்து வணங்கி வழிபட்டார்கள். சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் மாதமாக அறுவடை முடிந்து கையோடு தனது நன்றியைத்தெரிவிக்க பொங்கல் வைத்து கதிரவனை உழவன் வணங்கிவந்துள்ளான். உழவுக்கு உதவிய மாட்டுக்கும் பொங்கல் வைத்து மகிழ்ந்தான். சுற்றத்தார்களை மகிழ்வுடன் காணும் திருவிழாவினை காணும் பொங்கல் என்று கொண்டாடிக்களித்தான்.

ஆனால் பகுத்தறிவுள்ள மனிதன் மட்டும், இன்றையநாளில் தனது ஆணவத்தால் இயற்கையை அலட்சியம் செய்கிறான். அதன் தூய்மையைக்கெடுக்கிறான். அதை வணங்க மறுக்கிறான். சுற்றம் சொந்தங்களை மறக்கிறான். அதனால், இயற்கையும் அவனிடம் பாராமுகமாய் இருக்கிறது. அவன் அதை வணங்கினால் வெயிலும் மழையும் பனியும் அளவாக இருந்து பசுமை வளத்தை அள்ளித்தரும். எனவே நாம் இயற்கை யை வழிபடுவது அவசியம். இயற்கையைப் பேணுவோம் இனிமேலாவது!

முளைப்பாரி

விவசாயிகள் தாங்கள் சேகரித்து வைத்திருக்கும் விதைகளின் முளைப்புத் திறனைப் பரிசோதிப்பதிற்காக கிராமங்களில் உள்ள அம்மன் கோயில்களில் முளைப்பாரித் திருவிழா நடத்தப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் விளையும் தானியங்களில் வீட்டு உபயோகம் அடுத்த ஆண்டுக்கான விதை இவற்றைத்தவிர எஞ்சியவற்றைத்தான் விவசாயிகள் விற்பர். விதைப்புக்காலங்களில் சேமித்து வைத்த விதைகள் அல்லாமல் வேறு ரகத்தை விரும்பினால் பண்டமாற்று முறையில் விதைகளை விவசாயிகள் பரிமாறிக்கொள்வர்.பண்டைக்காலங்களில் சான்றிட்ட விதைகள் பயன்பாட்டில் அவ்வளவு எளிதாகக்கிடைக்காமல் இருந்ததால் வீட்டில் சேமித்துள்ள தானியங்களை மட்டுமே பயன்படுத்திவந்தனர். அந்த வகையில் கடந்த ஆண்டு சேகரித்து வைத்த விதை இந்த ஆண்டு முளைக்குமா? என்பதற்காக முளைப்புத்திறனை பரிசோதிக்கவும், போதிய அளவு மழை பெய்து விளைச்சல் அதிகமாக இருக்க வேண்டுமென்பதற்காகவும் அம்மன் கோயில்களில் முளைப்பாரித் திருவிழா நடத்துவதை மரபாக இன்றுவரை மக்கள் பின்பற்றுகின்றனர்.

இதற்காக கிராமங்களில் உள்ள கோயில்களில் முளைப்பாரித் திருவிழா நடத்துவதற்கு கிராமத்தார்கள் கோயிலில் அமர்ந்து ஒரு நாள் தேதி குறிப்பிடுவர். அதற்கு முன்பாக எப்போது தானியங்களை விதைப்பது என்றும் அன்றே நாள் குறிக்கப்படும். அவ்வாறு குறிப்பிட்ட நாளில் அனைவரது வீடுகளில் விரதம் இருந்து ரகத்துக்கேற்ப தனித்தனியாக புதிய மண்சட்டிகளில் (பானை ஓடு) வளமான மண் குப்பை உரம் இட்டு அதில் வீட்டில் உள்ளதானியங்களைப் பயபக்தியோடு விதைப்பர். அதற்குத்தினமும் தண்ணீர்

தெளித்து பாதுகாப்பாக பராமரிப்பர். பின்னர் முளைப்பாரித் திருநாளில் நல்ல நேரத்தில் நன்கு வளர்த்த முளைப்பாரிச் சட்டிகளை மலர்களால் அலங்கரித்து அதைப்பெண்கள் சுமந்து சென்று பொதுவான ஓரிடத்தில் குழுமியிருப்பர். (அந்தந்த ஊர்க்கோயில்) அங்கு கிராமத்தில் உள்ள அனைவரும் வந்து சேரும் வரை முளைப்பாரிகளைத் தரையில் இறக்கி வைத்து கும்மி அடிப்பர். (சில கிராமங்களில் முளைப்பாரி போட்டதிலிருந்தே மாலை நேரங்களில் அந்த அந்த கோயில்களில் கும்மி அடிப்பர்). அனைவரும் வந்து சேர்ந்தும் மீண்டும் முளைப்பாரிகளை ஒற்றுமையாக சுமந்து சென்று அம்மன் கோவிலை வலம் வந்து அம்மனை வழிபடுவர். பின்னர் சுமந்து சென்று முளைப்பாரிகளை அருகேயுள்ள குறிப்பிட்ட நீர் நிலைகளில் இட்டுச்செல்வர்.

மஞ்சுவிரட்டு என்ற ஜல்லிக்கட்டு

பல நூற்றாண்டுகளாக தமிழர்களின் உணர்வோடு கலந்துவிட்ட ஒன்று ஜல்லிக்கட்டு திருவிழா உலக அளவில் அரிய நிகழ்வாக தமிழகத்தில் நடக்கும் இந்தத்திருவிழாவை காண பல நாடுகளிலிருந்து மதுரையில் குவிவதை இதற்கு உதாரணமாகச்சொல்லலாம்.

தமிழகத்தில் மதுரை, சிவகங்கை ராமநாதபுரம் புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம் என 20க்கு மேற்பட்ட மாவட்டங்களில் பல்வேறு பெயர்களில் நடத்தப்பட்டாலும், மதுரை மாவட்டம், பாலமேடு அலங்காநல்லூர், உறங்கான்பட்டி அவனியாபுரம், சிவகங்கை மாவட்டம் கண்டிப்பட்டி, அரளிப்பாறை, சிராவயல் ஆகிய ஊர்களில் நடக்கும் ஜல்லிக்கட்டுக்கு தனிச்சிறப்பு உண்டு. தமிழர்கள் திருநாளான பொங்கல் பண்டிகையொட்டி நடத்தப்படும். இந்தத் திருவிழாக்கள் தொடர்ந்து பல மாதங்கள் நடந்து, இந்துக்களின் மத நம்பிக்கையோடு ஊறிப்போனவை.

தமிழர்களின் உயிரோடு கலந்துவிட்ட உணர்வுத் திருவிழா ஜல்லிக்கட்டையும், காளைகளையும் தமிழர்களையும் எப்போதும் பிரித்துப் பார்க்க முடியாது. காளைகளை தெய்வமாக வழிபட்டும் சொந்தப் பிள்ளைகளை நினைத்து வருபவர்கள் ஜல்லிக்கட்டுக்கும் மட்டுமேயன்றி, அதைத்தாண்டி அந்தக்காளைகளை மற்ற வேலைகளுக்கு ஈடுபடுத்துவதில்லை. ஜல்லிக்கட்டிற்கென்றே காளைகளை புஷ்டியாக வளர்த்து வருவார்கள்.

வெள்ளலூர் நாட்டில் தைப் பொங்கல் அன்று பொங்கல் வைத்து தனது உழவுத்தொழிலுக்கு துணை செய்த மாட்டுக்கு விருதுகள், மாலைகள் கொம்புகளில் வண்ணம்தடவி, உடம்புகளில் வண்ணப்பொடியிட்டு கௌரவப்படுத்தி சிறப்பிப்பார்கள். கிராமக் கோயில்களில் அனைவரும் பூஜைகள் செய்து அந்த ஊர் அம்பலகாரர் தலைமையில் இளங்கச்சி அம்பலம் பெரியோர்கள் பொதுமக்களனைவரும் முறைப்படி ஒவ்வொரு வீட்டுத்தொழுவிற்கு வந்து இல்லத்தார்கள், கிராமத்தார்களுக்கு மரியாதைகள் செய்து மஞ்சுவிரட்டு மாடுகளை தொழுவிலிருந்து திறந்துவிடுவார்கள், மாடுகளை இளைஞர்கள் பிடிப்பதற்கு போட்டா போட்டி நடைபெறும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் கிடைக்கும்.

பின் நாட்டுத்திருவிழாவான ஸ்ரீ வல்லடிகார சுவாமிகள் திருவிழாவை முன்னிட்டும் மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. அதன்பின் புகழ்பெற்ற உறங்கான்பட்டி மஞ்சுவிரட்டு முறையாக சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்தது. வெள்ளலூர் நாட்டிலுள்ள அனைத்துக்கிராமங்களிலும் அந்தந்த திருவிழாவில்

மஞ்சுவிரட்டு தவறாது விமரிசையாக நடைபெற்று வருகிறது. காளையை அடக்கினால்தான் பெண் என்று சங்க காலத்திலிருந்து இளைஞர்களுக்குள் கடும்போட்டி நடந்து வந்துள்ளது. தமிழர்களின் வீரத்தை அடையாளம் காட்டிய ஜல்லிக்கட்டு சீரும் சிறப்புமாக தமிழர்கள் வாழும் இடங்களில் தொடர்ந்து நடக்கும் என நம்புவோம்!

முன்னோர் அருள் கிடைக்க

பிதுர் கடன் செய்வது அமாவசையன்று பிதுர் தேவதைகள் மூலம் நாம் அன்புடன் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் அளிக்கும் பிண்டம் நம் முன்னோர்களை போய்ச்சேர்கிறது. இவ்வாறு உணவு பெறும் நம் முன்னோர் நாம் நல்லபிள்ளையைப் பெற்றோம் நம் வம்சத்தவன் வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்வதைக்கேட்டு கடைப்பிடிக்கிறான் என நம்மை வாழ்த்துவர்.

அந்த வாழ்த்து நம் குலத்தை வாழையடி வாழையாகத் தழைக்கச் செய்யும். நமக்கு ஆபத்து வரும் காலத்தில் அரண்போல் நின்று காப்பாற்றும். இவ்வுலக வாழ்வுக்கு வேண்டிய செல்வத்தைத் தரும். அதுமட்டும்மல்ல பிதுர் தேவதைகளை ஆராதித்தால் விஷ்ணுவையே ஆராதிப்பதற்கு சமம் என்ற கருத்தும் உண்டு. அந்த லட்சுமி நாராயணனின் திவ்ய அருள் நமக்கு பூரணமாக கிடைக்கும்.

ஆடி அமாவசையன்று, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, தன்னையும் புனிதமாக்கிக்கொண்டு முன்னோர்க்கு தர்ப்பணம் கொடுத்து அவர்கள் ஆசியைப்பெருங்கள்.

மரம்

மனிதர்களுக்காகவும், ஜீவப்பிராணிகளுக்காகவும் இரக்கப்படும் உலகத்தில் பலர் உண்டு. மரங்களுக்காகக் கண்ணீர் விடுகிறவரை எத்தனையோ பேரை உலகம் கண்டிருக்கிறது.

மனிதர்களின் வாழ்க்கை பெரிதும் மரங்களைத்தான் நம்பியிருக்கிறது. பசுமையான மரங்கள் செழித்து வளர்ந்த பிரதேசங்களிலே மழை அதிகமாகப்பெய்யும் மழை பெய்தால் ஏரி. கண்மாய், குளம், நிரம்பும், நதியில் பிரவாகம் வரும் நீர் வளம் செழிக்கும். மக்களும் சுபிட்சமாய் வாழ்வார்கள். ஒரு நாட்டிலுள்ள மரங்களையெல்லாம் அழித்து விட்டால் அங்கே மழை குன்றும் கொஞ்சநாளில் கொடிய பஞ்சம் தோன்றும்

பிரேசில் நாடு ஒரு எடுத்துக்காட்டு. உலகில் பெரிய நதியும் அடர்த்தியான காடுகளும் இருந்தன. மக்கள் தங்களிஷ்டப்படி மரங்களை வெட்டித்தீர்த்தார்கள். ஏற்றுமதி செய்து சம்பாதித்தார்கள். அரசும் கண்டு கொள்ளவில்லை. அதன் விளைவு, ஒரு சில வருடங்களுக்கு பிறகு மழை காலம் மாறிப் பொழிந்தது. நதி தடம் மாறி ஓடியது. மண் வளம் கனிம வளம் பல வழிகளில் வீணானது. மழை சிறிது சிறிதாக குறைந்து சில வருடங்கள் தாண்டி வறட்சியின் உச்சக்கட்டத்திற்கு போன பின்தான் அரசு விழித்துக்கொண்டது. உலகில் பெரிய நதியான அமேசான் நதியும் அங்குதான் உள்ளது. மிஞ்சியிருந்ததை அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து காடுகளை காத்தது. வீட்டிற்கு ஐந்து மரம் வளர்க்க வேண்டும் என சட்டம் கொண்டுவந்து மரத்தின் மகத்துவத்தை மக்களுக்கு புரிய வைக்க பல திட்டங்கள் தீட்டி செயல் படுத்தியது. பல ஆண்டுகளுக்குப்பின்தான் பிரேசில் பழைய நிலையை அடைந்தது.

நாம் இதை எப்பொழுது உணரப்போகிறோமோ? இறைவனுக்குத்தான் வெளிச்சம்!

மக்களின் ஆவணம் வரலாறு இல்லையா?

நம்முடைய பெரும்பாலான வரலாறுகள் களத்தில் தலைநகரங்களில் சௌகரியமான இடங்களில் உட்கார்ந்திருப்பவர்களால் உருவாக்கப்படுகின்றன. அரசின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பதிவுகளைத்தொகுப்பவர்கள் மக்களிடம் உள்ள பதிவுகளைச் சீந்துவதில்லை. பதிவு செய்யப்படாத எவ்வளவு பெரிய உண்மையும் வரலாறு ஆவதில்லை இது மாற்றப்படவேண்டும். கிராமங்களில் வயதானவர்கள் விபரம் தெரிந்தவர்கள் அவர்கள் மூலம் செவிவழிச்செய்திகளையும், பழக்க வழக்கங்களையும் உண்மை நிலையை உலகுக்குத்தெரிய வைக்கவேண்டும். வரலாறு வாழ்க்கைக்கு தேவையானதை போதிக்கிறது. எனவே வரலாறு காப்பதில் தவறினாலோ அதன் கருவை உணர்ந்து கடைப்பிடிக்காவிடில் வரலாறு தண்டித்து விடும்.

காவல்காரர்கள்

அதிகாரத்தால் உருவாக்குகின்ற நியாயங்களின் அடிப்படையிலேயே குற்றங்களையும் ஆங்கிலேயர்கள் உருவாக்கினர். குற்றங்களை உருவாக்கும் நியாயங்கள் பின்னால் குற்றங்களாக உணரப்படுவதும் அன்றைய நியாயங்களால் குற்றங்களாக்கப்பட்ட குற்றங்கள் பின்னால் நியாயங்களாகப் உணரப்படுவதும்

அதிகாரத்தின் பார்வையைப் பொறுத்தது, குற்றம், சிறை, தண்டனை எல்லாவற்றிலும் ஓடுவது அதிகாரத்தின் ரத்தமே. 1872 - ல் தொடர்ந்து அடுத்த 4 ஆண்டுகள் தாது வருட பஞ்சம் : வெள்ளாமை முற்றிலும் பாழ்பட்டுபோனது. கிராமங்களில் மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்பட்டனர். ஆடு மாடுகளைக் காப்பாற்றி விட முடியும் என்ற நம்பிக்கையும் நாளுக்கு நாள் இழந்து வருகின்றனர் கடும் வறட்சியால் இரண்டு ஆண்டுகளாக வெள்ளாமை பொய்த்து விட்டது.

இந்தப்பஞ்ச காலத்தில் களவும் வழிப்பறியும் அதிகமாகிவிட்டது. இந்நிலையில் சிவகங்கை சமஸ்தானத்துக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளைகளை தடுப்பதற்காக காவல் அமைப்பு ஒன்றை நிறுவ சிவகங்கை மன்னர் விரும்பினார். பஞ்சகாலம் என்பதால் வெள்ளலூர் நாட்டிலும் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். மன்னர் வெள்ளலூர் நாட்டு பெரியஅம்பலகாரர் அவர்களுக்கு சிறந்த முறையில் காவல் காக்கும் வலியையுள்ளவர்களை அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அவர்களுக்கு வேண்டிய காவல் பணம் மானியம் மற்றும் இடங்கள் அளிக்கப்படும் என்று உறுதியளித்ததால் பலர் குடும்பம் குடும்பாக சமஸ்தானத்திற்கு உட்பட்ட பகுதிகளில் காவல்காரர்களாகவும், அரண்மனையில் பணியாளர்களாகவும் பணிபுரிந்து வந்துள்ளனர். அர்களின் திறமையை மெச்சி அந்தந்த பகுதிகளில் இருந்து கொள்ள அனுமதித்தும் வாழ்வாதாரத்திற்கு நலங்களையும் அளித்துள்ளார். அப்படிச்சென்றவர்கள் சிவகங்கை சஸ்தானத்தில் பல பகுதிகளில் நல்ல நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு காவக்கார பட்டமும் ஊர்களிலும் கோவில்களிலும் காரண மரியாதைகள் வழங்கப்பட்டு வருகின்றனர். இன்னும் இம்மக்கள் வெள்ளலூர் நாட்டு குடிமக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பெரியாறு அணை உருவானது

1875-ல் மதுரை திரு.கலெக்டர் வில்லியம் காரே அவர்கள் அனைத்து அதிகாரிகள் கூட்டத்தை கூட்டினார். அதில் மாவட்டத்தின் நீர்ப்பாசன ஏற்பாடுகள் கடும் வறட்சியால் உருவாகியுள்ள சூழ்நிலை மக்களின் இடப்பெயர்வு புதிய புதிய நோய்கள் பரவி வருவது என்பது விவாதத்திற்கான குறிப்புகள் இருந்தன. இம்மாவட்டத்தின் நீர்த்தேவையானது வைகை நதியை மட்டுமே இருக்கிறது. ஆனால் வைகையில் மழைக்காலங்களில் கூட விவசாயத்திற்கான தேவைகளைப்பூர்த்தி செய்யுமளவிற்கு நீர் கிடைப்பதில்லை. வைகையின் குறுக்கே சிறிய பெரிய தடுப்பானைகள் எதுவும் கட்டப்படாத நிலையில் உள்ளது. நமது மாவட்டத்தில தாலுக்காக்களின் அடிப்படையில் எத்தனை கண்மாய்கள் உள்ளன? அவற்றினால் பாசனத்திற்கு எவ்வளவு நீர் அளிக்கப்படுகிறது. இந்தப்பகுதிகளில் சராசரி மழையளவு என்ன என்ற புள்ளி விபரங்களை அறிக்கையின் இறுதிப்பகுதியல் இணைந்திருந்தார்.

இம்மாவட்ட விவசாயமான வைகை நதியை மட்டுமே நம்பியுள்ளது. ஆனால் வைகையை இப்பொழுது உள்ளதை விட அதிக நீர்வரத்து உள்ள நதியாக மாற்றினால் தான், இப்பகுதி விவசாயத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று முடிவு செய்து, திருவாங்கூர் நாட்டிலிருந்து (கேரளா) பெரியாறு நீரை வைகை நதிக்குத் திருப்பி விடுகின்ற மாபெரும் திட்டம் உருவானது (திட்டத்தை உருவாக்கிய நீர்பாசன பொறியாளர் திரு.ஏ.மார்க்கெத்திற்கு தலை வணங்கி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.) திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் மூன்று வற்றாத நதிகள் மேற்கு நோக்கி ஓடி அரபிக்கடலில் வீணாகக் கலக்கின்றன.

வைகை உருவாகும் மலைப்பகுதிகளுக்கு சற்று உயரத்தில் ஓடும் இந்த நதிகளின் குறுக்கே தடுப்புக்களை உருவாக்கி அணைகளைக்கட்டி கிழக்குப்பக்கம் கூடலூர் வழியாகத் திசை திருப்பி சுருளி நதியுடன் சேர்த்துவிட்டால் அது வைகையில் வந்து கலந்துவிடும். அதனால் மேற்குக்கடலில் பயனற்று கலக்கும் தண்ணீர் இம்மாவட்டத்தின் உயிர்நாடியாக மாறும்.

இவ்வகைத் திட்டத்தை நடமுறைப்படுத்த இரண்டு நூற்றாண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1798 - ல் ராமநாதபுர சமஸ்தான வல்லுநர் முத்து இருளப்பபிள்ளை பெரியாற்றுத்தணணீரை கம்பம் பள்ளத்தாக்கிற்கு திருப்பி விடுவதாக ஆய்வு செய்துள்ளதை நாம் அறிய வந்துள்ளோம். அவர்தான் இத்திட்டத்தின் முன்னோடி என்றே கூறலாம். பின்னர் பிரிட்டிஷ் அரசு சில முயற்சிகள் எடுத்துள்ளது. ஆனால் முக்கியமாக 1807 - ல் மதுரைக் கலெக்டர் திரு.பொீஸ் வைகை நதிநீரைப் பெருக்க திருவிதாங்கூர் மலைப்பகுதியில் ஏதாவது செய்ய இயலும் எனக்கண்டறிய அவரே அடர்ந்த காடுகளுக்குள் பலநாட்கள் சென்று ஆய்வு செய்துள்ளார்.மேற்குறிப்பிட்ட திட்ட நகல் சம்பந்தமாக மேலும் தெளிவும் விளக்கமும் அரசாங்கத்திற்கு தேவைப்பட்டதால் கேப்டன் ஸ்மித், கேப்டன் பென்னிகுக் இருவரிடமும் இப்பணி மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கொஞ்சம் மாறுபட்ட மதிப்பீடு மற்றும் செயல்முறை சம்பந்தமாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அதன்படி பென்னிகுக் தனது பணியினை அடர்ந்த காட்டுப்பகுதியில் கொடிய விலங்குகளுக்கு நடுவில் பிரமாண்டமாக கட்டுகிற மிகச்சவாலான நிறைந்த வேலையில் பென்னிகுக் தலைமையிலான பொறியாளர்கள் ஈடுபட்டு அணை கட்டுவதற்கு பூர்வாங்க பணிகளை மேற்கொண்டனர்.

மனித நடமாட்டமே இல்லாத அந்த மலையுச்சி காட்டுப்பகுதியில் நதியைக் குறுக்காகப் பிளந்து தடுப்புஅணை கட்டுவதற்கு ஆரம்பப்பணிகளை துவங்கினர். காற்றுக்கூட உள்ளே நுழைய முடியாதபடி பசுமையால் மூடியிருந்த கானகத்திற்குள் மனிதன் ஊடுருவி உயர்ந்த மரங்களையும் செடிகொடிகளையும் வெட்டி அழித்து, பொறியாளர்கள் குறியிடப்பட்ட அந்த இடத்தில் நதியின் இரண்டு பக்கமிருந்த மலைப்பாறைகளை உடைத்து எடுக்கும் பணி துவங்கியது.

அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் நதியின் ரகசிய மொன்றைக் கண்டறிந்த சொன்னவர்கள் வன மைந்தர்களான பளியர்களே. அவர்கள் தான் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ராமநாதபுரம் சமஸ்தான அமைச்சர் முத்து இருளப்பபிள்ளைக்கு இந்த இடத்தைக் காட்டினார்கள். வைகையின் ஊற்று வறண்டு கிடந்த கோடைக்காலத்தில் இந்த மலையிலிருந்து தண்ணீர் பெற எதுவும் செய்ய முடியாதா? என்று அவர் இறைஞ்சிக் கேட்டபோது, வருஷநாட்டுப் பளியர்கள்தான் உச்சி மலையில் தண்ணீர் ஓடும் இந்த இடத்தைக் காட்டினார்கள். தெற்குச்சீமையின் தாகம் தணிக்க அவர் பலயோசனைகள் செய்து திட்டம் போட்டார். காலம் நதியில் உருளும் கூழாங்கல்லாய் உருண்டு ஓடியது போல் எதுவும் நடந்தேறவில்லை.

1871-ல் அணை கட்டப்படும் இடத்தில் நிகழும் அளவற்ற மரணம் பெரும் அதிர்ச்சி தருகிறது. கடும் நோய்களினாலும் மிருகங்கள் காட்டு விஷப்பூச்சிகள் மழையினால் நிமோனியா, மலேரியா ஆகியவையினால் நூற்றுக்கணக்கானோர் இறந்தனர்.

இந்த வனாந்திரத்தில் இருந்து போராட யாரும் முன்வரவில்லை எனவே சீப் இஞ்சினியர் முறைப்படி ஆவணங்களில் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணங்களைப்பதிவு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதாக பாதர் ஜேம்ஸ் தேக்கடியிலிருந்து செப்டம்பர் 3-ம் தேதி வருட் 1875 அன்று கடிதம் மூலமாக அறியவருகிறது. கொடிய பஞ்சங்களும், கணக்கற்ற மரணங்களும் இந்த மண்ணை விட்டு அவ்வளவு எளிதில் அகலப்போவதில்லை.

பென்னி குயிக்

அடுத்த பத்தாண்டுகளில் பெரும்பஞ்சம் ஏற்படவில்லை. பென்னிகுயிக் மீண்டும் அரசிடம் பெரியாறு அணைகட்ட அனுமதி கோரினார். அனுமதியும் கிடைக்கவில்லை. ஆனால் தானே சொந்த செலவில் செய்வதாக அரசிடம் அனுமதி வாங்கி இங்கிலாந்து சென்று தனக்குன்டான சொத்தையெல்லாம் விற்று அதன்மூலம் முல்லைப்பெரியாற்றில் தடுப்பணை கட்டும் பணி கடும் இன்னல்களுக்கிடையில் நடந்தேறி வந்தது. மன்னனே மறைந்தாலும் தெய்வங்கள் மறையாதது. அதன் கட்டுப்பாட்டுக்குள் இருந்து மனிதர்கள் ஒரு போதும் வெளியே வரமுடியாது. கூரையைப்பிய்த்துக்கொண்டு கொடுக்கும் தெய்வம் போல் பென்னிகுயிக் இருந்தார். அரசே முடியாது என்ற அணைத்திட்டத்தை தனது விடாமுயற்சியால் போராடி மக்களின் பலம் உயிர்த்தியாகம் போன்றவற்றால் உருவானது என்றால் இம்மக்களிடையே கடவுளின் ஆசியாக பென்னிகுயிக் இருந்தார்.

மதுரை மாவட்டத்தில் பெரியார் நீர்

பெரியாறு அணை கட்டி முடியும் தறுவாயில் இருந்தது. அடுத்த ஆண்டிற்குள் தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற நிலையில் எந்தெந்த பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் அளிப்பது என்பதைப்பற்றி மாவட்ட நிர்வாகம் கடந்த இரண்டாண்டுகளாகப் பல்வேறு ஆய்வுகளைச் செய்து முடிவெடுத்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான நிலங்களில் வளம் பெருகும்.

எந்த நூற்றுக்கணக்கான கிராமங்கள்? என்ற கேள்விக்கு மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பில் ஒரு பட்டியல் இருந்தது. அந்த வேலையை படுமும்முரமாக செய்து கொண்டிருந்தனர். இந்தியர்களை விட எல்லாவிதத்திலும் தந்திரமிக்கவர்களாகவே ஆங்கிலேயர்கள் இருந்தனர். அவர்கள் தான் முதலில் பெரியாற்று நீரை வைகையின் தென்பகுதிக்கு கொண்டு செல்வதா, அல்லது வடபகுதிக்கு கொண்டு செல்வதா என்பதைத் தீர்மானித்தார்கள். தென்பகுதிக்கு ஒருசொட்டு நீர் கூட போய்விடாமல் முழுக்க வட பகுதிக்கு கொண்டு செல்ல தீர்மானித்தனர்.

இது நாள் வரை அரசாங்க சட்டத்திட்டத்துக்குக் கட்டுப்படாமல் முறையாக வரி கட்டாமல் நிர்வாகத்திற்கு எந்த ஒத்துழைப்பும் தராமல் இருந்த மேலூர் வெள்ளலூர் பகுதிகளை நோக்கி பெரியாற்று நீரை கொண்டு சொல்ல முடிவு செய்தனர். அடர்ந்த காடாய்க் கிடந்தமேலூர் வெள்ளலூர் பகுதியில் இருந்த மனிதர்கள் ஒவவொருவராய் வெளியேறிவந்தனர். ஏற்கனவே ஆங்கிலேய அரசு இம்மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியின் படி முறையாக வரிக்கட்டுவோம். திருட்டு உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவோரை நாங்களே பிடித்து தருவோம் என்று தீர்மானம் நிறைவேற்றி தருகின்ற பகுதிகளுக்கு பாசனப் பகுதியாக சேர்க்கப்பட்டன.

இதன்படி மேலூர் வெள்ளலூர் பகுதிகள் பெரியாறு பாசனப் பகுதிகளாக சேர்க்கப்பட்டன. பொறியாளர் ஹென்றி விச்சும் சக அதிகாரிகளும் அந்தந்த பகுதிகளுக்கு நில அளவினை அறிந்து வாய்க்கால் வெட்டுவதற்கு வரைபடங்களைத் தயார் செய்தனர். பல ஆண்டுகளாக ஐரோப்பிய நிர்வாகத்திற்கு எதிராக நின்று கொண்டிருந்த இம்மக்களின் வெறுப்பைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முடியுமென்று கலெக்டர் வின்ஸ்லோவும், இஞ்சினியர் ஹென்றி விச்சும் கணித்தது சரியாக நிறைவேறிக் கொண்டிருந்தது. விவசாயத்திற்கான முழுப்பகுதியும் தீர்மானிக்கப்பட்டபின் வாய்க்கால்கள் வெட்டும் பணி மும்முரமாக நடைபெற்றது. வடகரை முழுவதும் அகில் ஈடுபட்டனர்.

கூலிக்காக மட்டும் வேலையாக அது இல்லை பெரிய வாய்க்காலிருந்து கிராமத்து கண்மாய்க்கு வரும் துணை வாய்க்காலினை ஒரு ஊர், ஒரே இரவில் வெட்டிகொண்டுபோனதெல்லாம் கலந்த வேலையாக அது நடந்தது. பெரும் பெரும் வாய்க்கால்களை மக்கள் இரவு பகலாக தோண்டிச்சென்றனர். அது நம்பிக்கை குரல்கள் கிராமத்து மந்தைகளில் ஒலிக்கத்தான் செய்தன. ஆனால் அதையும் தாண்டி வாய்க்கால்கள் கண்மாய்களை வந்தடைந்தன.

சென்ற நூற்றாண்டில் யூசுப்கானும், கேப்டன் ரூம்ளேயும் மதுரை மாவட்டத்தில் எண்ணிலடங்கா மக்களை கொன்று குவித்தனர். பெரியாற்று நீர் தேங்கிக்கிடந்த கிராமங்கள் அரசின் கட்டமைப்புக்குள் கச்சிதமாய் பொருத்த இளகிக்கொடுத்தன. கணன்று எரிந்த நெருப்பை அரபிக்கடலில் கலக்க

வேண்டியதண்ணீர் வந்து அணைத்தது. அந்த ரத்த வரலாற்றை பெரியாற்று நீர் வேண்டிய மட்டும் உள்ளே போய் கழுவித் தீர்த்தது. சம்சாரித்தனம் மிகுந்த இப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் அரசு நிர்வாகத்திற்கு நம்பிக்கையை கொடுத்து நூற்றாண்டாக இருந்த சட்டம் ஒழுங்குப் பிரச்சனையையே மாறியதே எனக்கூறலாம். கொழும்பு, ரங்கூடனுக்கு வேலைக்குப்போன மக்கள் அனைவரும் ஊருக்கு திரும்பி வர ஏற்பாடு செய்ய வேண்டும் சாணத்தை வயலுக்கு உரமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

எருவாட்டி தட்டி எரிக்கக்கூடாது என்று நாட்டுக்கூட்டங்களில் முடிவு எடுக்கப்பட்டன. (ஆசிரியர் சு.வெங்கடேசன், காவல்கோட்டம் என்ற நூலிலிருந்து) ஊரின் கதை தெரியாதவனுக்கு ஊர்ப்புத்தி வராது. ஊர்ப்புத்தி வராதவனுக்கு மனித புத்தி வராது. இந்த ஊரைத் தெரியவேண்டுமென்றால் தலைமுறை தலைமுறையாக இருக்கும் கதைகளைப் புரிந்து கொண்டால் மட்டுமே முடியும். சில மனிதர்கள் பதராகப்போய்விடுகின்றனர், சிலர் கொத்துக் கொத்தாக விளைந்து நிற்கின்றனர்.

கதைதான். இந்தக்கதை அறுந்து போனால் ஊர் அறுந்து போகும், ஊரும் கதையும் வேறல்ல. கதையும் உயிரும் வேறல்ல, கதை மறந்த பொழுது உயிர்களெல்லாம் அழிந்ததால் கதையே உயிரென்றானது. கதை மண்ணிலிருந்து துவங்குகிறது. மண்ணைப்பற்றியே பேசுகிறது. மண்ணும் கதையும் பிரிக்க முடியாத உருவாகக் கொண்ட கருவில் பிறந்தவர்கள்தான் வெள்ளலூர் நாட்டார்கள்.

நமது பயணம்

மண் சார்ந்து, மக்கள் சார்ந்து, மக்களது பண்பாடு , கலை, இலக்கியம், சார்ந்து நமது பயணம் பயணிக்க வேண்டும். ஒரு சம்பவம் நடந்தால் அதன் பின்னனி என்ன?

நிகழ்கால சம்பவத்துக் காரணம் என்ன? எதிர்காலத்தில் அதனால் ஏற்படும் தாக்கங்கள் என்ன? என்பதையெல்லாம் ஆராய்ந்து விவாதித்து மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய கடமை நமது பயணத்தில் உள்ளது. மக்களது முன்னேற்றத்துக்கான சுயநலம் தவிர்த்து பொது நலம் கொண்ட அர்ப்பணிப்பு உணர்வு தேவை என தமது பயணம் எடுத்துரைக்கவேண்டும்.

சொல்லத்தோனுது

தமிழர்கள் அடையாளத்தை இழந்து வருவது போலவே திருமண அழைப்பிதழ்களும் அதன் தோற்றத்தை இழந்து கொண்டு வருகின்றன. ஒரு சாதாரண மஞ்சள்தாளில் அச்சடித்திருந்த அந்த பழைய அழைப்பிதழ்களில் இருந்த உயிரும் நெருக்கமும் புதிதில் இல்லை. பழைய அழைப்பிதழ்கள் நடைபெறவிருந்த திருமணத்தை மட்டும் நினைவுபடுத்தின. புதிய அழைப்பிதழ்கள் நமக்குத் தொடர்பில்லாத ஆடம்பர விழாவுக்கு அழைப்பது போலவே தோன்றுகின்றன. வரவேற்பு எனும் பெயரில் நடக்கும் நிகழ்வுகள் சினிமாத்தனம் போலவே தோன்றுகிறது. மகிழ்ச்சியோடு பேசி உறவாடும் நிலையில்லாமல் போய் வாசலில் நிற்கிற முன்பின் தெரியாதவர்களிடமும் குழந்தைகளிடமும் பொய்ச்சிரிப்பை உதிர்த்துவிட்டு சந்தனத்தை எடுத்து வைத்து கொள்வதிலிருந்து திருமண கூடத்தை விட்டு வெளியேறும் வரை எல்லாமும் செயற்கையாய் நடந்தேறுகிறது.

இசைக்கச்சேரி எனும் பெயரில் நடத்தப்படுகிற அந்தக் கொடுமையான பாட்டையும் சத்தத்தையும் எப்படி இந்த மக்கள் ரசிக்கிறார்கள்? நாம் யாரைப்பார்க்கப் போகிறோமோ அவர் மணமக்களின் பக்கத்தில் நின்று கொண்டு விடியோ கேமராவுக்கும் புகைப்பட கேமராவுக்கும் ஒத்துழைப்பு கொடுத்து மணமக்களிடம் விருந்தினர்களை அறிமுகப்படுத்திக்கொண்டே இருப்பார். போட்டோவுக்கு பேசாமல் முறைத்துக்கொண்டிருப்பது போலவே வீடியோ கேமராவுக்கும் நிற்கிற நம் மக்களின் முகத்தைப்பார்க்கிறபோது பரிதாபமாக இருக்கும். இயல்பான நிகழ்வுகளை படம் பிடிக்கத்தெரியாதவர்களையும் இயல்பாக கேமரா முன் இருக்கத்தெரியாத நம் மக்களையும் எவ்வளவு காலமாற்றம் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தாலும் மாற்றவே முடியாது. பாட்டுக்காரர்கள் போடுகிற சத்தத்தில் யார் பேசுவதும் யாருக்கும் கேட்பதில்லை. ஒரு சிலரைத்தவிர எவரும் மணமக்களை வாழ்த்துவதும் இல்லை வாக்குச்சாவடியில் வரிசையாக நிற்கிறமாதிரி நின்று மொய் உறையைக்கொடுத்து விட்டு கேமராவைப்பார்த்து முறைத்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள் பளபளப்புத்தாள் சுற்ற மலர்க்கொத்தைக் கொடுப்பதும் வாங்கிய வேகத்திலேயே மணமக்கள் அடுத்த விருந்தினருக்குத் தயாராவதையும் பார்க்கும்போது எதற்காக இதனை எல்லாம் நடத்திக்காட்ட வேண்டும் என கேள்வி எழுகிறது.

இவை முடிந்து சாப்பிடப்போனால் ஹோட்டலுக்குத்தான் சாப்பிட வந்திருக்கிறாமோ என்பது போலவே கூலிக்கு அமர்த்தப்பட்ட முன்பின் தெரியாதவர்கள் சமைத்த உணவுப்பண்டங்களை இலையில் வைத்துக்கொண்டே போவார்கள்.

பின் அவற்றில் பாதிக்கு மேல் குப்பையில் கொண்டு போய்க்கொட்டுவதும் சகித்துக்கொள்ளமுடியாதது. வந்த விருந்தினர்களுக்கு விருந்த படைப்பது அவசியம்தான். அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராக வந்து கொட்டி வீணாக்கப்படுகிற உணவுப்பண்டங்களைப்பற்றி யாராவது நினைத்துப்பார்க்கிறார்களா? பரிமாறப்படும் உணவுப்பண்டங்களின் பெயர்களே நம் மக்களில் பாதிப்பேருக்குத்தெரியாது.

இந்தப்பண்டங்கள் இந்த இலைக்கு எவற்றையெல்லாம் கடந்து வந்திருக்கிறது எனத்தெரியுமா? உழவுக்கு முன்னும் பின்னும் நிலம், காத்துக்கிடக்கின்ற காலம், பின் விதைப்பு, நடவு களையெடுப்பு இரவு பகலாக பாம்பு, பூச்சி மருந்து தெளிப்பது அதன்பின் அறுவடை இதோடு முடிந்து விடுவதில்லை. சுத்தப்படுத்தி உணவுக்கு ஏற்றதாக்கி பல கைகளுக்கு மாற்றப்பட்டு எவ்வளவோ கணக்கற்ற உழைப்புகளுக்குப்பின் பக்குவமாக சமைத்து பரிமாறப்படும் உணவுப் பண்டங்களை ஒரு நொடி கூட சிந்திக்காமல் மூடி வைத்து விட்டு வந்து விடுகிறோமே, இது குற்றச்செயல் இல்லையா? இப்படிப்பட்ட விருந்துகளில் வீணாக்கப்படும் உணவுப்பண்டங்களை மிச்சப்படுத்தினாலே கோடிக்கணக்கான மனிதர்கள் உயிர் வாழ முடியுமே! பகட்டுத்தனத்துக்காக உணவுப்பண்டங்களை வீணாக்குபவர்கள் யாரும் படிக்காதவர்கள் இல்லை. தங்கள் பணபலத்தை காண்பிப்பதற்காகவே இன்றைக்கு படித்தவர்களின், வசதியானவர்களின் திருமணங்கள் அரங்கேறுகின்றன. படிக்காத மற்றும் ஏழை எளிய மக்களின் திருமணங்கள்தான் சுற்றத்தோடும் ரத்த உறவுகளோடும் எளிய முறையில் நடந்தேறுகின்றன. உண்மையான அன்பையும் நெருக்கத்தையும் மனமகிழ்ச்சியையும் அந்த வியர்வை வழியும் மக்களிடம்தான் கவனிக்க முடிகிறது. நம் கலாச்சாரத்தில் இல்லாத கேரளக்காரர்களின் செண்டை மேளம் இல்லை. காதைப்பிளக்கும் கச்சேரி இல்லை. கண்கள் கூசும் விளக்கொளிகள் இல்லை. சாப்பிட முடியாமல் மூடி வைத்துவிட்டுப்போகும் அளவுக்கு விருந்தோம்பல்

இல்லை. ஆனால் அந்த எளிய மஞ்சள் பத்திரிகை மாதிரி உண்மையான திருமணமாக இருக்கிறது.

இயற்கை

ஆச்சார்யா வினோபா அவர்கள் ஒரு தடவை ரயிலில் பயணித்த பொழுது கங்கையை வணங்கி காணிக்கையாக காசுகளை போட்டார். அவருடன் பயணித்த வெளிநாட்டு நபர் ஒருவர் வினோபாவிடம் தாங்கள் இந்த தண்ணீரில் காசைப்போடுவதற்கு பதில் பிச்சைகாரர்களுக்குப்போட்டால் நல்லதே என்று கூறினார். அதற்கு வினோபா அவர்கள் வரும் வழியில் பிச்சைகாரர்களுக்கு பிச்சை போட்டுத்தான் வந்தேன். ஆனால் கங்கையில் காசு காணிக்கையாக்குவதற்கும் பிச்சைகாரர்களுக்கு பிச்சைபோடுவதற்கும் வித்தியாசம் உண்டு. கங்கை நீர் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் சாதாரண நீர் அல்ல. புனித நீரான கங்கை எங்கள் நாட்டில் நிலங்களில் பாய்ந்து விவசாயம் செழிக்க வைக்கிறது. புனித நீரான கங்கையை கடவுளுக்கு சமமாக வைத்து வணங்கி வருகிறோம் என்றார். எனவே நன்றியைத்தான் இவ்வாறு தெரிவிக்கிறோம் என்றார் வினோபா. இயற்கையோடு சமநிலையைப் பராமரிப்பதன் மூலமே நாம் வாழ முடியும். மனித இனத்துக்கு நேரக்கூடிய ஆபத்தை உணர்ந்து நிலம், நீர், காடு, மலை போன்றவைகளை உயிர்ச்சங்கிலியின் பிணைப்பு என்பர். ஒன்று அழிவது மற்றவற்றுக்கு நல்லதல்ல என்ற உண்மையை எப்போது உணரப்போகிறார்களோ? மனிதர்கள் தன் விரோதிகளை அழிப்பது போல், இயற்கைக்கு விரோதமாக மனிதன் நடக்கும்போது இயற்கை மனிதனை அழித்து விடும்.

மனப்பயணம்

காஞ்சிப்பெரியவர் அவர்களிடம் ஒரு வெளிநாட்டுப்பயணி கடவுளின் கருணை, அன்பு ஆகியவைதான் காணவேண்டும். ஆனால் இந்துக்கடவுள்கள் சில ஆயுதங்கள் வைத்துள்ளதை காணும்போது ஒரு பய உணர்வு ஏற்படுகிறது ஏன்? என்று வினவினர்.

நாட்டை பாதுகாப்பதற்காக வீரர்கள் ஆயுதங்கள் வைத்துள்ளார்கள். அவர்கள் எல்லைகளை காத்து நம்மை நிம்மதியாக வாழ வைக்கிறார்கள். அவர்களை எல்லை காக்கும் தெய்வங்களாகப் பார்க்கிறோம். அதுபோல் நமது ஊரைக்காக்கும் தெய்வங்கள் ஆயுதங்களை கொண்டு இருப்பது நமது நாட்டுப்பற்றையும் ஆன்மீக எண்ணத்தையும் மேலோங்கி காட்டுகிறது என்று பதிலளித்தார். இறைவன் கருணை உள்ளவன். அளவற்ற அன்பு கொண்டவன் என்றால் அன்றாடம் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் ஒன்று கருப்பாகவும். சிவப்பாகவும் ஒன்று ஏழையாகவும் மற்றொன்று பணக்காரனாகவும் பிறப்பது ஏன்? இந்து மதத்தில் மறு பிறவி நம்பிக்கை உண்டு.

கர்மவினைப்படி ஒவ்வொரு பிறவியிலும் அதற்கேற்றார் போல் மனிதன் பிறவி எடுக்கிறான். அதனால் இப்பிறவி அமைகிறது. நாம்தான் இறைவனிடம் வேண்டினோமே. நமது பாவத்தை இறைவன் மன்னித்துவிட்டான் என்று நம்புவது மனித இயல்பு. அது தப்பு. அவனவன் செய்த செயல்களுக்கு ஏற்ற பாவத்தை தொலைத்து நற்செயல் புரிய மீண்டும் பிறக்க இறைவன் வாய்ப்பு தருகிறான். சமநிலையில் தான் உலகம் சீரடையும், இல்லாவிடில் பூமி அழிந்துவிடும். இப்புவியை காப்பதற்குத்தான் ஏற்ற இறக்க ஏற்படும்போது இறைவன் அவதாரங்கள் எடுக்கிறான்.

ராணுவம் போல் நம்மைக் காக்கவும் நீதி, நேர்மை, தர்மம் தழைத்தோங்க இறைவன்

பல்வேறு காலகட்டத்தில் அவதரித்து, நம்மையெல்லாம் காக்கிறான். இறைவன் கொண்டுள்ள வேல் நமக்கு ஞானத்தை வழங்கவல்லது. அவனிடம் உள்ள சக்கரம் இச்சமுதாயத்தின் குறியீடு. ஒவ்வொரு ஆயுதத்திற்கும் காரணங்கள் உண்டு. ஒவ்வொரு காலகட்டத்திலும் மனித வடிவில் உலகத்திற்கு வந்து உலகத்தை உய்விக்கிறான். அதனால் நாம் இறைவனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால், அவன் நம்மை நோக்கி இரண்டடி எடுத்து வைக்கிறான். எது அடங்கினாலும், மனம் மட்டும் அடங்க மறுக்கிறது. மனம் அடங்க மறுப்பதால் நம் மன அகங்காரங்கள் எல்லாம் ஆட்டம் போடத்துவங்கிவிடுகிறது. அதனால் தான் மனதை அடக்குபவனே வாழ்வில் வெற்றிபெற்று உலக வாழ்வுக்கு உதாரண புருஷனாக விளங்குகிறார்கள்.

மனிதனுக்கு தான் என்ற ஆணவம் அவனது கஷ்ட காலத்தில் அடங்குகிறதே தவிர, அந்தக் கஷ்டம் நீங்கியதும் மீண்டும் தலை தூக்கி விடுகிறது. பாவத்தால் மட்டுமே விளைவுகளை அனுபவிக்கிறோம் என்பதில்லை. புண்ணியம் செய்யும்போது நம் மனதில் ஏற்படும், நான் செய்கிறேன் என்ற ஆணவத்தாலும் சில பாவங்கள் நம்மைத் தொற்றிக் கொள்வதுண்டு. அதனால் நாம் தானம் செய்தோமே பிறரிடம் கருணையுடன் நடந்து கொண்டோமே, இதனால் நமக்கு புண்ணியம் சேர்ந்திருக்குமே என்றெல்லாம் எண்ணக்கூடாது. அந்தப்புண்ணியத்தின் பலனையும் யாரொருவன் கடவுளுக்கு சமர்ப்பணம் செய்கிறானோ, அவனே இறைவனுடன் கலக்க முடியும். மகாபாரதத்தில் ஒரு காட்சியில் தர்மரிடம், யட்சன் உலகத்திலேயே அதிசயமானது எது? என்று கேட்டான்.

அதற்கு ஒருவன் இறந்து போனவனை பார்க்கும் இன்னொருவன் தானும் ஒரு நாள் இறந்து போவோம் என்பதை நம்ப மறுப்பதுதான் என்று தர்மர் கூறினார். இந்த உலக வாழ்வு நிலையென்று நினைக்கும் அறியாமையை கொடுக்கும் மாயை. நாம் சம்பாதித்த வீடு, வாசல், மனைவி, மக்கள், கணவன், பிற சொத்துக்கள் எதுவும் நிச்சயமில்லை மரணம் மட்டுமே நிச்சயம். அப்படியிருந்தும் மனிதன் ஆட்டம் போடுகிறான். இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மனதை அடக்கி தியானம் செய்ய வேண்டும். அந்த மன அடக்கப்பயிற்சியே சபரிமலை யாத்திரை, பழநிமலை யாத்திரை மற்றும் மற்ற இடங்களில் வீற்றிருந்து அருள்பாளிக்கும் இறைவனை காணச்செல்லும் ஆன்மீக யாத்திரைகள் போன்றவை. அதிகாலை எழுவது குளிர்ந்த நீரில் நீராடுவது பிரம்மச்சாரியத்தை கடைபிடிப்பது எளிய உணவுகளை உண்பது போன்ற பயிற்சிகள் மனதை அடக்குவதற்கான முதல் காரணி, காலை, மாலை அல்லது தூங்கப்போகும் நேரத்தில் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை நினைத்து தியானம் செய்து நமது அகங்கார எண்ணங்களை அவனிடம் ஒப்படைக்க முயற்சி செய்யவேண்டும். அந்த எண்ணம் நமக்கு வந்து விட்டாலே ஆணவம் உங்களிடம் தலைதூக்காது. பார்த்துக்கொள்கிற மன நிலையில் வாழ ஆரம்பித்து விடுவீர்கள். நம் உடல், மனம் லேசாகிவிடும். வாழ்வு எளிதாகிவிடும்.

வாழ்க்கை நிலை

வீரத்திலும், விவேகத்திலும், மானத்திலும், சிறந்து விளங்கிய இம்மக்கள் தாங்கள் வாழ்ந்த பகுதியில் வளமான வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த இல்லங்கள் செம்மண்களால் வலுவாக கட்டப்பட்டு சுற்றுக்கட்டும் நடுவில் முற்றம் அமைந்தவையாகவே இருந்து வந்துள்ளன. வீட்டில் நடுவே விழும் மழை நீர் வெளியே வரும் வகையில் தூர்ப்பாய் குழாய் என்ற அமைப்பும் இருந்ததாக தெரிய

வருகிறது. ஒவ்வொரு வகைப்பிரிவினருக்கும் பொது வீடு என்றும், சாமி வீடு என்றும் இருந்துள்ளது. அதன் நடுவே சவுக்கை என்ற புனித இடமும் இருந்துவந்துள்ளது. இன்றளவும் பொதுச்சவுக்கைகள் உள்ளன. நான்கு புறமும் சுவரில்லாமல் மேற்புறத்தில் கூரை வேய்ந்தும் பெரியவர்கள் உட்கார்ந்து பொது விஷயங்களை விவாதிப்பதும், முடிவெடுக்கும் புனிதமான இடம் தான் சவுக்கை இங்ஙனம் வீடுகள் சிறியனவாகவும் எளியனவாகவும் இருந்துள்ளது.

உழுவார் உலகத்திற்கு ஆணி என்பதை அறிந்தவர்கள் தமிழர்கள். பசியைப்போக்கி பாரினை வாழ வைப்பது வேளாண்மை அல்லவா? எனவே இப்பெருமக்கள் வேளாண்மைத்தொழிலை விரும்பி மேற்கொண்டொழுகினர். உழவுத்தொழிலின் உயர்வையும் முக்கியத்துவத்தையும் அறிந்து அதன் மேம்பாட்டில் அக்கறை செலுத்தினர்.

நிலங்களின் தன்மை, நீராதாரம் ஆகியவற்றைக்கணக்கில் கொண்டு புதிய கண்மாய்களையும் நீர் வரத்துக் கால்வாய்களையும் அமைத்து விவசாயம் செய்து வறட்சிக்காலங்களில் பயிர்களுக்குப்பயன் படுத்துவதற்காக குளங்களை வெட்டியுள்ளனர். குடிநீர் ஊருணி வெட்டிப்பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு ஊரைச்சுற்றியும் பல ஊருணிகளை வெட்டி ஓடி வரும் மழை நீரைத்தேக்கி ஊரின் தேவைகளுக்குப்பயன்படுத்தினர். ஒவ்வொரு மயானக்கரையிலும் குளமோ கண்மாயோ அமைத்து பயன்படுத்தினர். இதனால் மரங்கள் செழிப்புடன் வளர்ந்து இயற்கை வளங்களை மக்களுக்குத் தந்தன.

ஒவ்வொரு ஊருக்கும் தொடர்பு கொள்ள நல்ல சாலை வசதிக்கட்டமைப்பு ஏற்படுத்தினர். கண்மாய், கலுங்கு போன்ற இடங்களில் பாசனத்திற்குரிய நீரை ஒழுங்குபடுத்தவும் நீராணி என்ற ஒருவரை நியமித்தனர். விளைந்த நெற்கதிர்களை கொண்டு வந்து போடுவதற்கு களத்து மேடு சொந்தமாகவும், பொது இடமாகவும் வைத்துள்ளனர். நெற்கதிரை அடித்து பொலிதூற்றி வைக்கோல் புனையல் அடிப்பதற்கும் குழுவாக சேர்ந்து செயல்பட்டு வந்துள்ளனர். பொலிதூற்றிய நெல்லை நன்கு களத்தில் காய வைத்து தங்களது வீட்டில் மச்சிலோ பொது மச்சிலோ இட்டு பாதுகாத்து தேவையான போது பயன்படுத்தி வந்துள்ளனர். பொதுவாகவே மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

பருவ காலங்களில் விளைநிலங்களில் பொன்னேர் இட்டு முதல் ஏரைத்துவக்கத்தற்குரிய நாள், விதை விதைக்கும் நாள், நாற்று நடும் நன்நாள் அறுவடைநாள் சிறு தெய்வ வழிபாட்டுச்சிறப்பு நாட்கள், பாசனத்திற்கு திறந்து விடும் நாள் ஆகியவற்றை நன்கு கணித்து தத்தம் பணிகளை சிறப்பாக செய்து வந்துள்ளனர். கோவில் நிர்வாகங்களை சிறப்பாக நடத்திட தலைவர்களாக பெரிய அம்பலகாரர், அம்பலகாரர்கள் இளங்கட்சி அம்பலங்கள் ஆகியோர்கள் திருக்கோவில்களில் வழிபாடு முறையைச்செயல்படுத்தவும் வேளார்கள் வழிவழியாக பூஜை செய்து வந்துள்ளனர். மக்களின் பிரட்சினைகளை தீர்க்க பெரிய அம்பலகாரர் தலைமையில் அம்பலகாரர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களே நாட்டில் ஏற்படும் பொதுப்பிரச்சனைகள் விதிப்படி முறையாக தீர்த்து நடத்தி வருகிறார்கள்.

பண்பாடு

பண்படுதல் என்னும் சொல்லை அடிப்படையாகக்கொண்டதே பண்பாடேயாகும். இதற்கு இணையான ஆங்கிலச்சொல் Culture என்பதாகும் Cultivate என்பதற்குப் பண்படுத்து, பயிர் விளைவித்தல் என்று பொருள். பக்குவமற்ற, கரடுமுரடான நிலத்தைச் செம்மைப் படுத்தி சீராக்கி வேளான் தொழிலுக்கு ஏற்றதாக மாற்றுவதே பண்படுத்துதல், பண்ணுதல் என்னும் சொல் ஆளப்படும் பல இடங்களையும் தேவநேயப்பாவாணர் சுட்டிக்காட்டுகிறார். பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு (செப்பம்) செய்யப்பட்ட இடம் நன்செய் ஆகும். அதுபோல் மனிதனின் உள்ளத்தைப் பயன்படுத்துவது பண்பாடு ஆகும். நிலத்திற்கும் உள்ளத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்மையை அறிந்த தமிழர்கள் இரண்டையும் புலன் என்ற சொல்லாள் குறித்தனர். நிலபுலன் என்று இணைத்து வழங்குதலுமுண்டு. பண்பாடு உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது. சிறந்த வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். உள்ளப்பாங்கின் வெளிப்பாடே பண்பாடாகும். அதாவது அறிவியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டும் விழுமியங்களின் தொகுப்பே பண்பாடேயாகும். உண்மை ஒழுக்கம், நட்பு, நேர்மை, பிறர்மனை நோக்காமை, பெரியார் பேணுதல், அன்பு, காதல், மனிதநேயம், பணிவு, மதித்தல் போன்றவையே விழுமியங்கள் ஆகும்.ஆங்கில கவிஞரும் திறனாய்வாளருமான மாத்யு, ஆர்னால்டு என்பவரும்

ஒருவன் தன் குணநலன்களை
நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த
சமுதாயத்தின் நலன்களைப்பேணுவதிலும்
பேரவாக் கொண்டிருக்கும் நிலை.

பண்பாடாகு என்கிறார். பண்பாடு என்பது ஓரிரு ஆண்டுகளில் உருவானதல்ல. ஒரு சமுதாயத்தின் அடித்தளமாய் ஆணிவேராய் வழிவழியாய் பரம்பரை பரம்பரையாக மக்கள் உள்ளங்களில் மலர்ந்து மணம் பரப்பி ஒளி வீசுவதே பண்பாடாகும். தன் பெண்டு தன் பிள்ளை என்றில்லாமல், ஊருக்கும், உலகிற்கும் உழைக்கும் நல்ல உள்ளம் உடையவர்களைப் பண்பாடுடையவர்கள் எனக்கூறலாம். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கும் உள்ளமே உயர்ந்த உள்ளம். பிறர் துன்பத்தைப்போக்க முயலும் உள்ளமே பெரிய உள்ளம் ஆகும். பிறர் நிலையறிந்த ஒழுகுதலே பண்பாடாகும். இதனைப்பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல் எனக் கலித்தொகை கூறுகிறது. தனி மனிதனின் சிறப்பைப் பண்பு எனக்கூறுகிறோம். நாட்டின் சிறப்பைப் பண்பாடு என்கிறோம். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என வள்ளுவமும் கூறுகிறது.

பண்பாட்டின் தன்மை

பண்பாடு எத்தகையது, அதன் தன்மையினை அறிதல் எங்ஙனம்? மக்கள் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவாறுள்ளே சிறந்தவற்றாலும், நாம் பண்பாட்டின் தன்மையினை அறிந்து கொள்ள முடியும் என மாத்யு ஆர்னால்டு கூறுகிறார். உயர்ந்த சிந்தனை சிறந்த செயல் ஆகியவற்றின் வெளிப்பாடேயாகும்.

நிலத்தின் இயல்பை அதில் முளைத்த முளை காட்டும். அதுபோல் குலத்தின் இயல்பை அதில்

பிறந்தவருடைய வாய்ச்சொற்கள் புலப்படுத்தும்.

ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தேசத்து மக்களின் பொதுமையை நிலத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். முளையானது நிலத்தின் இயல்பைக்காட்டுதல் போல, ஆசிரியனது இலக்கியத்தால் விளங்குகின்ற அவனது பண்பாடு, அவன் பிறந்த சமுதாயத்தின் பண்பாட்டையும் உணர்த்தும். மக்கள் பயன்படுத்திய கருவிகள் அவர்களது பழக்க வழக்கங்கள் நம்பிக்கை சமயம் ஆகியவற்றை பண்பாட்டுக்கூறுகளாக இனவரைவியலாளர் கூறுகின்றனர். மக்களின் அறிவு பெருகி ஒழுக்கம் உயர்ந்து கொள்கைகள் சிறந்து பண்பு வளர்ந்து, வாழ்க்கை வளமுற்று, மென்மேலும் திருந்திய நிலையே பண்பாடு எனலாம்.

இவ்வாறு திருந்தி வரும் பண்பாட்டினால் ஒருவனது ஆன்மா இயற்கையில் கனிவும் இனிமையும் மிகும்.உள்ளொளி பெருகும் உயிர்த்தத்துவம் மிளிரும். பிறர்மீது அன்பும் அருளும் மிகும். ஓர் இனத்தின் பண்பாடு, அதன் இலக்கியம் நடையுடை மொழி, கலைகள் குறிக்கோள் சமயக்கொள்கை சமயம்பொறை, அரசியற்கொள்கை அரசியல் வரலாறு, சமுதாய நிலை, பெண்களின் நிலை முதலியவை மூலம் விளக்கமுறுகிறது. இதுகாறும் கண்டறிந்த பண்பாட்டுக்கூறுகள் இம்மக்களிடமும் பல தலைவர்களிடமும பொதிந்து கிடக்கிறது.

சடங்கும் விழாவும்

சடங்குகளே விழாக்களுக்கு அடிப்படை. இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தவையே விழாக்கள் அறிவூட்டுவதாயும், சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த தன்மைகளை உள்ளடக்கியதாகவும் கருதப்படுகின்றன. சடங்குகள் மரபு வழிப்பட்ட செயல்முறைகளை அடிப்டையாகக்கொண்டு அமையக்காண்கிறோம். அத்துடன் அவற்றின் எல்லைகளை நம்மால் வரையறுக்க இயலுவதில்லை.

மக்களின் சோர்வைப்போக்கி புத்துணர்ச்சியையும், புதுத்தன்மையும் ஊட்டுவன விழாக்கள். ஆண்டு முழுவதும் அயராது பாடுபட்டு அலுத்துச்சலித்த மக்களுக்கு அயர்வைப்போக்கி அக மகிழ்ச்சியை அளிப்பன விழாக்கள். மக்களை ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்தக் கூடியவை விழாக்கள். நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவை கொண்டாடப்பட்டு வருகின்றன. ஒரு சமுதாயத்தின் எண்ணத்திற்கும், இயல்புக்கும் தக்கவாறே விழாக்கள் அமைகின்றன. எனவே அவை அச்சமுதாயத்தின் பண்பை அறிந்து கொள்ள உதவுகின்றன.

திருமண விழா

மணப்பெண் வீட்டிலேயே திருமணம் நிகழ்த்துவதையே பண்டைத் தமிழர்கள் வழக்கமாகக்கொண்டிருந்தனர் என்பதனை ஐங்குறு நூற்றில் ஓதலாந்தையார் என்ற கவிஞர் பாடிச்சென்றுள்ளார். பெண்ணின் இல்லத்திலேயே பெரும்பாலும் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. பழந்தமிழரின் திருமண முறையில் இன்றியமையாக் கூறாக, பெண்ணை கையால் பற்றிப்பெண்ணின் பெற்றோர் மணமகன் கையில் தருதலாகும் என அகநானூற்றுப்பாடலில் (அகம்-140) குறிப்புகள் தெரிவிக்கின்றன. கிராமப்புறங்களில் இன்றைய நடைமுறையில் பெற்றோர் தமது பெண்ணுக்குத்திருமணம் செய்ய வேண்டும், என்பதனைக்குறிக்கும் வகையில் அவளை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் நிம்மதி என்று இன்றும் கூறுவதை கேட்கலாம். திருமணத்தைக் கிராமப்புறங்களில்

பெரும்பாலோர் கல்யாணம் என்றே குறிப்பிடுகின்றனர்.

இவ்வகுப்பினர் தங்களது திருமணங்களை தனது கரையைத் தவிர்த்து (பிரிவு) பிற கரைகளில் செய்து கொள்வார்கள். (ஏனைய ஏதாவது ஒரு கரைகளுக்குள்) பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பெற்று குல தெய்வங்களை, முன்னோர்களை வணங்கி திருமண நாளன்று அதிகாலையில், மஞ்சளரிசி அள்ளிப்போடு வைபவம் மணமகள் வீட்டில் நடைபெறும். இந்த மஞ்சளரிசி (முகூர்த்த அரிசி) தான் மணமகன் திருமாங்கல்யம் பூட்டும் போது தூவி மணமக்களை வாழ்த்துகிறார்கள். மங்களச் சங்கு எல்லா வைபவங்களுக்கும் பயன்படுகிறது. மஞ்சளரிசி மங்களப்பானையில் போடும் போது சங்கு ஒலிக்கப்படுகிறது. பின் மாப்பிள்ளை வீட்டார்கள் தன் இல்லத்தை விட்டு கிளம்பும்போது சங்கு ஒலித்து, தட்டுகளில் மஞ்சள், வெற்றிலை, பழங்கள், தேங்காய், வட்டுக்கருப்பட்டி காய்கறிகள், உப்பு மற்றும் பேழைப்பட்டியுடன் ஊர்வலமாக சென்று பெண் வீட்டை அடைவார்கள்.

பெண்வீட்டில் பங்காளிகளும், உறவினரும் மாப்பிள்ளையையும், மாப்பிள்ளை வீட்டினரையும் ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள் (பெண் வீட்டில் வாக்கப்பட்ட மாப்பிள்ளையின் சகோதரியோ. பங்காளி பெண்களோ ஆரத்தி எடுப்பார்கள்). ஆரத்தி எடுக்கும் தனது சகோதரிகளுக்கு மாப்பிள்ளை வீட்டார்கள் ஆரத்திப்பணம் ஆரத்தித்தட்டில் போடுவது பழக்கம். ஆரத்தி எடுக்கும் பெண்கள் தனது சகோதரர்களுக்கும் தனது பங்காளிகளுக்கும் திருநீறு அணிவிப்பதும், அப்பெண்களுக்கு பெருமகிழ்ச்சியோடும் தனது பிறந்த வீட்டார்களை வரவேற்பார்கள், நாங்கள் இந்த வீட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறோம். அதுபோல், நீங்கள் மணம் செய்யப்போகும் பெண்ணை எங்களைப்போல் மகிழச்சியாய் வாழ வைக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் எடுப்பதுதான் ஆரத்தி எடுத்து வரவேற்பது.

உறவுகள் புதுப்பிப்பதோடும் சொந்தங்கள் ஒன்று சேர மிக மகிழ்ச்சி பொங்கும். பின் மாப்பிள்ளையும், அவர் சகோதரரோடு, வந்து இருவரும் சபையை வணங்கி பெரியவர்களிடம் வெற்றிலை பெற்று வாழ்த்துக்கள் பெற்று மணமேடையில் மணமகன் அமர்வார். அதேவேளையில் மணமகள் உடைகள். மாங்கல்யம் ஆகியவைகளை சபையிலுள்ளோர் ஆசீர்வாதம் செய்வர். பின் மாப்பிள்ளை வீட்டுப்பெண்கள் சபையை வணங்கி, மணமகளுக்கான மங்களகரமான சேலை மற்றும் உடைகளை பெற்று சென்று, பின் மணமகளுக்கு தாலிச்சேலையை அணிந்து, சபைக்கு அழைத்து வந்து வணங்கி மணமகளை மணமகன் பக்கத்தில் அமரவைப்பார்கள். பெரியயோர் ஒருவர் மாங்கல்யத்தை எடுத்து கொடுக்க மணமகன் எழுந்து அதைப்பெற்று நாட்டோரே தாலி கட்டலாமா என்று கேட்பார். சபையிலுள்ள அனைவரும் கட்டுங்கள் என்று குரலாக அனுமதி தருவார்கள். மாப்பிள்ளை ஒரு முடிச்சு போட மற்ற இரு முடிச்சுகளும் மாப்பிள்ளையின் சகோதரி போட திருமணவிழா மங்களகரமாக நடைபெறுகிறது. பின் மணமக்கள் இருவரும் சபையை வணங்கி வாழ்த்துக்கள் பெறுவர்.

இன்றைய சுயமரியாதை திருமணங்களை அன்றே, எளிய பழக்கவழக்கத்துடன் தொடங்கி இன்றளவும் நடைபெற்று வருகிறது. ஒரு பெண்ணிற்கு திருமணம் செய்யவேண்டுமென்றால் தாய்மாமனின் ஒப்புதல் பெறவேண்டும். பெண்ணின் விருப்பமும், மாப்பிள்ளையின் விருப்பமும் ஒருமித்த பின்னர்தான் திருமணம் நடைபெறுகின்றது. இந்த திருமணமுறைச்சட்டம் வெள்ளலூர் நாட்டு கள்ளர்களுக்கு உரியது என்று பெருமைப்படவைக்கிறது. இச்சமூகத்தில் விவாகரத்து கொண்ட ஆணும், பெண்ணும் மறு மணம்

செயது கொள்ளலாம். கணவனோ, மனைவியோ இறந்துவிட்டால் அவர்களும் மறுமணம் செய்து கொள்வது அவரவரின் விருப்பத்தின்படி பழக்கமாக கொள்ளப்படுகிறது.

திருமணத்தில் வேதியர்கள் மந்திரங்கள் சொல்வதில்லை. இப்படிப்பட்ட பகுத்தறிவு புரட்சிகளை அன்றே வெள்ளலூர் நாட்டார்கள் செயல்படுத்தியுள்ளார்கள் என்றால் மிகையாது.

தாலாட்டு

தமிழர் வாழ்வில் தாலாட்டு மிகவும் சிறப்பான இடம் வகித்ததை இடைக்காலத் தமிழ் இலக்கியங்களும், பிற்கால நாட்டுப்புறப்பாடல்களும் வெளிப்படுத்துகின்றன. தால்+ஆட்டு எனப்பிரித்து நாவை அசைத்துத்தொட்டிலை ஆட்டிப்பாடும் பாட்டு எனப்பொருள்தரும். பிள்ளைப்பேற்றின் அருமையை உணர்ந்த தமிழ் மக்கள் கிடைத்த பிள்ளை அழுவதைக்கூட சகிக்காமல், ஓடோடிச்சென்று உடனே தாலாட்டி அழுகையை அமர்த்துவர். குழந்தைப்பேற்றின் சிறப்பினை உணர்ந்தே செந்தமிழ் புலவர்கள் பிள்ளைத்தமிழ் பாடினார். அந்தப் பிள்ளைத்தமிழும் தாலாட்டுக்கென்று தனியொரு பகுதியைத் தந்தனர். அதுவே தாலாட்டுபருவம் ஆகும். எதுகையும் மோனையும் அமைந்து இனிய ஓசையும் பொருளும் தந்து எல்லாருடைய இதயத்தைதொடக்கூடிய வலிமை தாலாட்டுக்கு உண்டு.

ஆ……ரா…….ரோ………ராகம்
வைத்தால் பயிராகும், வாழை வைத்தால் தோப்பாகும்,
இஞ்சிக்குப் பாய்ந்து, எலுமிச்சைக்கும் வேரோடி
மஞ்சளுக்கு பாய்ந்து, மாதுளைக்கு வேரோடி
அவரைக்கொடி படர்ந்து அம்பூன்றிக் காய் காய்த்து
கொடி அவரை பிஞ்சுவிடக் குடிதுலங்க வந்தாயோ
பொலி அவரை பிஞ்சிறங்க, முடிசூட்ட வந்தாயோ

பிள்ளை உறங்கிவிட்டான். அம்மா இன்னும் நிறுத்த வில்லை.

இது கற்பனைப்பாடலா, இல்லை காலங்காலமாய் நம் வீட்டில் கற்றுத்தரும் நீர் மேலாண்மைப் பாடம். வயல்களில் நாற்று நட்டுக்கொண்டே அன்னையர் பாடுவது.

அழுத கண்ணீரு
ஆறாய்ப் பெருகிவந்து
ஆனை குளிப்பாட்ட
ஏரி பெருகி வந்து
எருமை குளிப்பாட்ட
என்று நீண்டு போகும்………

காலங்காலமாய்த் தன்னையும், சூழலையும் கண்ணின் மணியெனக் கருதிக் காக்கும்

பெண்மையின் உண்மை வடிவம் தாய்மை என்னும் தூய்மை என்பதை மீண்டும் சொல்லும் அன்னையின் தாலாட்டுப்பாடல் தன் பிள்ளையைத் தூங்கச்செய்வது. தாலாட்டுப்பாடல்கள் அவை பாடப்படும் வட்டாரத்தின் சிறப்பியல்புகளையும் சமூக நிலைகளையும் வெளிப்படுத்தும் செட்டிநாட்டு தாலாட்டில் செல்வ வளம் செழித்துக்காணப்படும். ஏழை மக்களின் தாலாட்டில் தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய உணர்வுகளும் ஆசைக்கனவுகளும் நிரம்பி வழியும். பிறந்த இடத்தின் பெருமை பெரிதாகப் பேசப்படுவதையும், தாய்மாமன் சீரும், அவன் வளமும் பாடப்படுவதைக் காணலாம். தந்தையின் சிறப்பையும் தகப்பன் வழிப்பாட்டனாரின் பெருமையையும் பாடுவதைக்கேட்கலாம். இப்பெருமக்களின் அன்னையர் பாடும் தாலாட்டுப்பாடல்களில் ஆண்மையையும் வீரத்தையையும் ஆளப்பிறந்தவன் என்னும் உணர்வையும் காணலாம்.

கட்டிக் கரும்போ கனியோகற்கண்டே

பெருந்தேனோ துஷ்டர்குலம் வேரறுக்க

வந்த வீரக் குலந்தானே

எனத் தாலாட்டுகிறாள் தொட்டிலில் கிடக்கும்போதே துஷ்டர்களை அழிக்கவல்ல வீரத்தையும் வேகத்தையும், தன் மகனுக்கு மறக்குலத்தாய் ஊட்டுகிறாள். தன் மகனை வீரப்பரம்பரையைச் சேர்ந்தவனாக கற்பனை செய்கிறாள்.

மற்றுமொரு தாய் மலடி, மலடி என்று வையகத்தார் ஏசும் வசை மொழியை மாற்றித்தாயென்ற பெருமை தன்னைத் தனக்களித்த மகனை கவலை தெளியவைத்த அவதரிக்க வந்த கண்ணுமகனே, நீ கண்வளராய். (அயர்வாய்) என்று தாலாட்டிக் கண்வளரச்செய்கிறாள்.

அவன் கண்ணயரும் முன்னம் அவன் காதுகளில் ஒலிக்கும்படி எனக்கு அருள்புரிந்த சிவனே, மாயவனே, கருப்பனே, வல்லவனே எனக்குப்பிள்ளையாகி வந்தானோ? இவன் தந்தை இழந்தையெல்லாம் ஈட்டு நாட்டை ஆளப்பிறந்தவனோ? உலகையே ஆளப்பிறந்தவனோ?

என்றெல்லாம் ஒரு தாய் பாடுகிறாள் தன் மகன் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையினைச்செவ்வையுற ஆற்ற வேண்டுமென்பதில் அவளுக்குள்ள சமுதாய அக்கறையையும் அவளுடைய தாலாட்டுப்பாடலால் உணரமுடியும். ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே என்று பாடிச்சமுதாய பொறுப்புகளை சுட்டிக்காட்டிய புறநானூற்றுத்தாயை இத்தாயுடன் எண்ணிப்பார்த்து பெருமிதமடையலாம். இத்தகைய தாய்மார்கள் தமது கலைப்பண்பாட்டுக்குப் பெருமையூட்டும் பண்பாட்டுக்கூறுகளை உலகிற்கு உணர்த்தக்கூடிய தாலாட்டுப்பாடல்களை பாடியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. உலகத்தில் உள்ள உயர்ந்த பொருட்களாகத் தன்மகனை உருவகப்படுத்திப்பார்க்கிறது தாயுள்ளம். மாசிப்பிறை, வைகாசி, மாங்கனி தேசப்பிறை, தெவிட்டாத தீங்கனி, வானத்துத்தேவர், முனிவன், மாயவன், தேவன், மண்ணை உண்ட மாதவன் என்றெல்லாம் தன் மகனை எண்ணிப்பெருமை அடைகிறாள் தொடர்ந்து தன் கணவரின் குலப்பெருமையும் தாலாட்டில் கூறுகிறாள். மேலே சொன்னவையெல்லாம் இக்காலத்தாயார்களிடம் காணமுடியுமா கேள்விக்குறி?

மொட்டையிட்டுக் காது குத்துதல்

பிறந்த குழந்தைக்கு 30 நாள் கழித்து பிறந்த முடி வீட்டில் எடுத்து பின் ஓராண்டு முடியுந்தருவாயில் குலதெய்வக்கோவிலில் மொட்டையடித்து காது குத்தும் பழக்கம் இந்த சமுதாயத்தில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. மூன்றாம் மாதத்திலும் மூன்று வயதிலும் இதைச்செய்யலாம் தாம் வழிபடும் தெய்வத்திற்கு முடியைக் காணிக்கையாக்கி அதன் சன்னதியல் காதுகுத்திக் கொள்வது மரபு.

மூன்று நல்ல வயதினிலே

மொட்டையிட்டு காதுகுத்தி

வளர்ந்து வரும் நாளையிலே

என்று கதைப்பாடல் கூறுகிறது. சில இடங்களில் கிடாய்வெட்டிப் பொங்கலிட்டு காது குத்துவது வழக்கம். இப்பொழுது வயது முன்ன பின்ன ஆகி காது குத்துகிறார்கள். தங்கள் வசதிப்படி இதனைத் தற்போது காதணிவிழா என்றும் அழைக்கின்றனர்.

பள்ளியும் பயின்ற வித்தைகளும்

அந்நாளில் ஆறு வயதினிலே பாலகரைப்பள்ளிக்கு அனுப்பும் பழக்கம் இருந்தது. தற்போது போல் இல்லையெனினும் வாழ்க்கைக்கு தேவையான அடிப்படைக்கல்வி கற்பிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி எண்சுவடி குழிப்பெருக்கம் போன்ற கணிதப்பாடங்களும் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களும், பசுக்கதை, பாரதம், இராமாயணம், பதினென்புராணம் போன்ற இதிகாச புராணக்கதைகளும் ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் போன்ற கணிதப்பாடங்களும் கற்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. பன்னிரண்டு வயதிற்குள் இவை அனைத்தையும் சொல்லி கொடுத்து விடுவார்கள்.

ஆறு வயதில் பள்ளியில் சேர்க்கப்படுதல். ஏழு வயதில் எழுத்தோலை வாசித்தல் பன்னிரண்டு வயதில் பள்ளிப்படிப்பை முடித்து பள்ளியை விட்டு வெளியேறுதல் என்ற நிலை இருந்தது.

எண்ணும் எழுத்தும் கற்றபின் வாழ்வியலுக்குத் தேவையான சிலம்பம் வில்வித்தை வாட்போர் மல்யுத்தம் போன்ற பல்வேறு வித்தைகளையும் கற்றுக்கொடுத்தனர் என அறிகிறோம்.

வீர விளையாட்டு

உடம்பை முறையாக வளர்க்கும் உபாயம் அறிந்தவர்கள் தமிழர்கள் பண்டைக்காலத்திலேயே உடல் வலிமைக்கும் வளத்திற்கும் முக்கியம் கொடுத்திருந்தனர். சடு, குடு (கபடி) மல்யுத்தம் இளவட்டக்கல் தூக்குவது, சிலம்பம் போன்ற வீரவிளையாட்டுகள் சிறப்பாக நாடுதோறும் நடைபெற்று வந்துள்ளது. உடல் வலிமையால் தான் சமுதாயத்தில் பெருமையுடனும் சிறப்புடனும் வளத்துடனும் வாழ முடியும் என்ற நிலை இருந்துள்ளது.

ஜல்லிக்கட்டு என்றும் மஞ்சுவிரட்டு என்றும் தமிழகத்தில் அழைக்கப்படுவது தமிழர்களின் வீரவிளையாட்டில் ஒன்று, அச்சமூட்டத்தக்க இந்த மஞ்சுவிரட்டு இன்றும் மேலை நாடுகளில் நடைபெறுவதாக அறிகிறோம். இதனை காளைப்போர் (Bull fight) என்றழைக்கின்றனர் ஸ்பெயின் நாட்டில் ஏப்ரல், நவம்பர் மாதங்களில் இது நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெருவிழாவாக இது நடைபெற்று வருகிறது. மெக்ஸிகோவில் பிளவர் என்ற இடத்தில் நடக்கும் மெட்டடோர்

காளைச்சண்டை உலகப்புகழ் பெற்றது என்பத குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய உலகப்புகழ் காளைச்சண்டையை தமிழகத்தில் மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்றழைக்கிறோம். மரபு வழி வந்த காளையை அடக்கும் வீரம் அவ்வீரனின் வீரத்தை, சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி பெருமைப்படுத்துகிறது. உயிருக்கு ஊறு விளைவிக்கும் விளையாட்டு என்று கூறினாலும் தொடர்ந்து நடைபெறுவதற்கு தமிழர்கள் தங்கள் பண்பாட்டையும் பழ மரபினையும் காப்பதில் உள்ள ஆர்வம்தான் என்றால் மிகையாகாது.

எண்ணெய் தேய்த்துக்குளித்தல்

கதிரவனின் வெப்பத் தாக்குதலால் உடலின் தோல் நைந்துவிடாவண்ணம் காப்பதற்காக, உடல் முழுவதும் எண்ணெய் பூசி ஊறவைத்துக் குளிப்பது நல்லது. இது சங்க காலத்தில் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளோடு இணைந்த ஒரு வகைப்பழக்கமாக இருந்துள்ளது. தொடர்ந்து இன்றளவும் தமிழக மக்களிடையே நீடித்து வருகிறது. பண்டைக் காலத்தில் நாகரீகத்தில் சிறந்து விளங்கிய கிரேக்கர்களும் ரோமானியர்களும் எண்ணெய் (ஆலிவ்) தேய்த்துக்குளிக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர் எனத்தெரியவருகிறது.

தமிழ் மக்களிடையே எண்ணெய் தேய்த்துக்குளிக்கும் பழக்கம் இருந்தது என்பதையும், அவ்விதம் செய்துவிட்டு இறைவழிபாடு செய்தனர் என தேவாரப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. கிராமப்புறங்களில் சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்துக் குளித்து இறைச்சி சமைத்து உண்டு என்ற பழக்கம் அண்மைக்காலம் வரை இருந்தது. சனி நீராடு என்ற பழமொழியும் உள்ளது.

அறிவியல் ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் எண்ணெய் தேய்த்து குளிப்பதில் ஏற்படும் பலனில் மாறுபட்ட கருத்தும் உள்ளது. இருப்பினும் காலவிரைவு காரணமாகவும் பொறுமையின்மை காரணமாகவும் இப்பழக்கம் மக்களிடையே அருகி வருகிறது.

பூப்புச்சடங்கு (பூப்புனித நீராட்டு விழா)

பெண் பிறந்து வளர்ந்து பதினாலு பதினைந்து வயதில் பருவமடைகிறாள். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவங்களை ஒரு பெண் கடக்க வேண்டியவளாகிறாள் இத பெதும்பைப்பருவம் என்பது ஒரு பெண் பூப்படையும் பருவமாகும் இது எந்த வயதில் நிகழும் என்பதை உறுதியாகக்கூற இயலாது.

அவள் பூச்செடி அருகே சென்றால் அச்செடியே வாடி வதங்கி விடுமென்றும், வீட்டுக்கு விலக்கமாகிய கலந்தொடா மகளிர் பற்றி கி.பி. முதல் நூற்றண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த மேலை நாட்டு பயணி பிளி (கி.பி.23-79) என்பவர் கருத்துக்கள் அக்காலத் தமிழக மக்களின் நம்பிக்கையை புலப்படுத்துகின்றன. பூப்பெய்தியவள் கையால் தொட்ட தானியம் முளைக்கும் தன்மையை விடுமென்றும், கண்ணாடி பார்த்தால் அழுக்குப்படிந்தது போல் ஆகிவிடுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக பிளி பற்றிய நூலில் வி.எஸ்.வி.ராகவன் என்பவர் கூறுகிறார். இத்தகைய நம்பிக்கைகள் இன்றும் இம்மக்களிடம் நிலவி வருவது வியக்கத்தக்கதாக உள்ளன. பூப்பு நாட்களில் பூவையர் பூ வைத்துக்கெள்வதில்லை

என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பூப்படைந்தவுடன் தாய்மாமனுக்கு சொல்லி அனுப்புவார்கள். தாய்மாமன் தனது உறவினருடன் உரிய சீர் பொருட்களுடன் வந்து குச்சுக்கட்டி அப்பெண்ணை அக்குச்சில் உட்கார வைப்பார்கள். அதற்கு தாய்மாமன் குச்சிகட்டுவது என்று கூறுவார்கள்.

கிராமப்புறங்களில் பெண் பருவமடைந்து விட்டால் அவள் பூத்திட்டாள் என்றும் புஷ்பவதியாகி விட்டாள் என்றும் கூறுவர். பூப்படைந்த பெண்ணை தீட்டுப்பட்டவள் என்று தனிமைப்படுத்துவர். அவள் கலந்தொடா மகளிராகிறாள். அவளைப் பேய் பிசாசு அண்டாதிருக்கும் பொருட்டு அவளருகே இரும்புத்துண்டை வைத்திருப்பர். விஞ்ஞானப்பூர்வமாகவும் அத்தகையோர் தனிமைப்படுத்துவதே சிறந்ததெனக் கண்டறிந்துள்ளனர்.

பதினாறாம் நாளன்றோ, ஒரு குறிப்பிட்ட நாளன்றோ, வசதியான நல்ல நாளன்றோ இத்தீட்டைப் போக்கிப் புனிதப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெறும். இதற்கு பூப்புனித நீராட்டு விழா என்றழைக்கப்படுகிறது.

தாய்மாமன் சீருடன் வர உற்றார் உறவினர் கூடி பூப்புச்சடங்கை நடத்துவதை வெள்ளளூர் நாட்டு கள்ளர் இல்லங்களில் இன்றும் பின்பற்றுகின்றனர்.

நகர்புறங்களில் நாகரீகம் காரணமாக, இது மெல்ல மெல்ல குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. பெண் ருது பூப்படைதல், பெரிய மனுசி என்றழைக்கப்படும். இச்செய்தியை இப்பெருமக்கள் பிறர்க்கு அறிவிக்கும் நிகழ்ச்சியாகவே கருதி வந்ததாகச் சமுதாய பெரியவர்களின் கூற்றுக்களின் மூலம் தெரிய வருகிறது.

மரண நிகழ்வு சடங்குகள்

ஒருவர் இறைவனடி சேர்ந்த பின் அந்த வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு கேதம் காண்பது துக்கம் விசாரிப்பது எனப்படும். இறந்தவுடன் அன்னாரது உடலை அவரது வீட்டில் தெற்கு திசையில் தலையை வைத்து கிடத்துவார்கள். உடலின் பின்பக்கம் நாழிநெல்லும், அகல் விளக்கும் வைப்பார்கள். பிறகு உடனடியாக பங்காளிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, அடுத்து சேலை, லேஞ்சி காரர்களுக்கும் மற்றும் அனைத்து உறவினர்கள் மற்ற தரப்பினருக்கும் தெரிய படுத்துவர். அதற்குள் உடன் பங்காளிகள் அனைவரும் மேல்சட்டையின்றி இடுப்பில் துண்டுகட்டி ஒன்று சேர்ந்து இறந்தவரை வணங்கி, ஆண்கள் வீட்டிற்கு வெளியே சுற்றி நின்று கேதம் காண்பார்கள். செய்தி தெரிந்தவுடன் அனைவரும் துக்கம் விசாரிக்க வர ஆரம்பிப்பார்கள். பங்காளிகள் ஆண்கள் அனைவரும் மேல்சட்டையின்றி இடுப்பில் துண்டுகட்டி எழுந்து வரிசையாக நிற்பார்கள். கேதம்காண வருபவர்கள் அவர்களும் இவர்களைப்போல் மேல்சட்டையின்றி இடுப்பில் துண்டுகட்டி வந்து கைகளைத் தொடுவது கேதம் விசாரிப்பது என்ற பொருள். பெண்கள் நேரடியாக வீட்டிற்குள் சென்று இறந்தவரை சுற்றி உட்கார்ந்து அழும் பெண்களைகட்டி அழுவார்கள். அப்பொழுது இறந்தவரின் அருமை பெருமைகளை பெண்கள் ஒப்பாரி மூலம் தெரிவித்து அழுவார்கள்.

ஒப்பாரி

இறப்பில் ஒப்பாரி பாட்டு ஒலிக்கிறது.

மனிதன் பிறப்பில் தாலாட்டுப்பாட்டு தாய்மையின் பாசமும், பிரிவும், கொப்பளிக்கும் இடங்கள் தாலாட்டும் ஒப்பாரியாகும். இது பெண்மைக்கு கிடைத்த வரப்பிரதாசமாகும். தமிழில் பிலாக்கணம், பிணக்கணம், கையறுநிலை, புலம்பல், இறங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு, என்னும் பல்வேறு பெயர்களில் ஒப்பாரி வழங்கப்பட்டு வந்தது.

சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் 1956-ல் வெளியிடப்பட்ட தமிழ் அகராதி ஒப்ப + ஆரி என்பது பிரித்து அழுகைப்பாட்டு என்று பொருள் கூறுகிறது. மற்றோர் தமிழ் ஆங்கில அகராதி ஒப்பாரிக்கு ஒப்புச்சொல்லி அழுதல் என்று பொருள் கூறுகிறது அதோடு பெண்களால் பாடப்படுவது என்றும் இறந்தவர்க்கும் அடுத்த பிற பொருட்களுக்கும் ஒப்புச்சொல்லிப் பாடுவது என்றும் கூறுகின்றது.

தன்னால் மிகவும் விருப்பப்படும் பொருளையோ வேண்டிய (நெருக்கமான உறவினர்) ஒருவரையோ இழக்கும் போது ஏற்படுவது அழுகை. அவ்வழுகையினால் அரற்றுவதையும், ஆற்றாது புலம்புவதையும் காண்கிறோம்.

ஆங்கிலத்தில ஒப்பாரியை Elegy, Dirge, Death, Lament, Moming song என்ற சொற்கள் சுட்டுகின்றன. எல்லாமே சாவுக்காக பாடப்படுவது என்றாலும் இவற்றில் நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. சங்க இலக்கியத்தில் கையறு நிலைப்பாடல்கள் பல உள்ளன. பாரி இறந்ததும் அவன் மகளிர் இருவரும் அவனுக்காகப் பாடுகின்றனர் பெற்ற தந்தைக்காகப்பெண் மக்கள் பாடும் ஒப்பாரி போன்றது இது.

அதியமான் இறந்தபோது ஔவையார் பாடிய பாடல் உற்ற நண்பர்க்காக உயிர்த்தோழரும் மன்னனுக்காக மக்கள் வைக்கும் ஒப்பாரி போன்றது.

இராவணன் மாண்டபோது மண்டோதரி அரற்றிய புலம்பல் ஒப்பாரியும் வாலி இராமனின் அம்புபட்டு மாண்டு கிடக்கும் போது தாரை அழுது புலம்புவதும் தங்களது அன்புக் கணவருக்கு ஒப்பாரி வைத்து புலம்புகிறார்கள். அண்ணனுக்காக வீடணனும் தந்தைக்காக. அங்கதனும் புலம்புவது ஆண்களும் ஒப்பாரி வைத்து பாடுவர் என்பதற்கு எடுத்துக்காட்டுகள். அரிச்சந்திர புராணத்தில் சந்திமரமதி மயான காண்டத்தில் புலம்புவது மகனுக்காகத்தாய் வைக்கும் ஒப்பாரியாகும். இச்சமுதாயத்தில் ஒப்பாரியால் இறந்தவரின் பெருமையை எண்ணிப்புலம்புவது வழக்கமாக இருந்ததென்பதும் அறியப்படுகிறது.

சேலைக்காரர்கள்

இறந்தவரின் சம்பந்தியோ அவருக்கு பெண் கொடுத்தவரோ சேலைக்காரர்கள் அவர்கள், துக்க வீட்டிற்கு சேலை கொண்டு வர இவர்களுக்குத்தான் உரிமையுண்டு. அவர்கள் பங்காளிகள் அனைவரும் (ஆண்கள் பெண்கள்) வருவதை கொட்டு கொட்டி, நாங்கள் உங்கள் துக்கத்திலும் பங்கெடுக்க வருகிறோம் என்று துக்க வீட்டாருக்கும் அந்த ஊருக்கும் உணர்த்துவதே, பறை அறிவிப்பவர் மூலம் கொட்டுவது கொட்டு, பறை அறிவிப்பவர் முன்னே வர சேலையை ஒரு கம்பு மூலம் கொண்டு வர அதைத் தொடர்ந்து பெண்கள் அழுதுபுரண்டு வர, அதைத் தொடர்ந்து ஆண்கள் வந்து துக்கம் விசாரிப்பார்கள்.

லேஞ்சிக்காரர்கள்

அந்த வீட்டிலிருந்து மணமுடித்துக் கொடுத்த பெண் தனது புகுந்த வீட்டிலிருந்து துக்கம் விசாரிக்க வரும் தனது கணவர், பங்காளிகள் லேஞ்சிக்காரர் ஆவர். இவர்களும் முறைப்படி சேலை வேட்டி கொண்டுவருவார்கள்.

நீர்மாலை

பாத்தியப்பட்ட அனைவரும் வந்தவுடன் ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் அருகில் நீர்மாலை எடுப்பதற்காக அருகில் உள்ள பொதுக்கிணற்றுக்கு வந்து இறந்தவருக்கு காரியம் செய்யும் வாரிசுகளை குளிக்க வைத்து மாமன், மைத்துனர்கள் அவர்களுக்கு திருநீறு பட்டை அணியவைத்து, மாலையிட்டும் பெண் வாரிசுகள், அந்த வீட்டிற்கு வாக்கப்பட்டு வந்தவர்கள் அனைவரும் குடங்களில் நீர் நிரப்பி அங்கேயிருந்து துக்க வீட்டிற்கு அழைத்து வருவார்கள். கொண்டு வந்த நீரை இறந்தவரின் உடலை குளிப்பாட்டி செய்ய வேண்டிய காரியங்கள் செய்து வீட்டிற்கு வெளியே வாசலில் இறந்தவரின் தலையை தென்பகுதியில் கிடத்துவார்கள். அப்போது வாரிசுகள் அனைவரும் சுற்றிவந்து வணங்குவர்.

சுத்தமான ஏற்கனவே பசு மாட்டுச்சாணத்தை ராட்டி போல் தட்டி அதில் நவதானியங்களை அழுத்தி அந்த இறந்தவரை நினைத்து ஏற்கனவே வீட்டினுள் அவரைக்கிடத்தியிருந்த தெற்குச் சுவரில் அந்த சாண ராட்டியை ஈரப்பதத்துடன் ஒட்டி விடுவார்கள். இந்த நிகழ்ச்சிக்கு சீதேவி வாங்குவது என்று பெயர். அந்த சாண ராட்டியில் தினமும் காலை, மாலை தண்ணீர் தெளித்து வந்தால் தானியங்கள் முளைகட்டும் அதனால் அந்த வீடு சுபீட்சமாகும் என்பது ஐதீகம்.

இறுதி ஊர்வலம்

இறந்தவர் ஆணாயிருந்தால், அவரது பங்காளிகள் ஏற்கனவே செய்து வைத்திருந்த பாடையில் கிடத்துவார்கள். பெண்ணாயிருந்தால் தான் பிறந்த வீட்டிலிருந்து வந்து சேலைக்காரராகிய தனது அண்ணன், தம்பி பங்காளிகள் இறந்தவரது உடலை பெற்றுக்கொண்டு பாடையில் கிடத்துவார்கள். இனிமேல் சேலைக்காரர்களின் பொறுப்பிலேயே மயானத்தில் நல்லடக்கமோ, தகனமோ செய்யும் வரை கொண்டு செல்லப்படும். ஆணாயிருந்தால் அவரது பங்காளிகளையே சார்ந்தது. பின் பாடையை உரியவர்கள் தாங்க கொள்ளி வைப்பவர் மற்றும் ஈம கிரியைகள் செய்பவர் மாலையிட்டு கொள்ளிச்சட்டி தூக்கி மற்றவர்கள் பின் தொடர, கொட்டு குலவையுடன் இறந்தவரின் தலை வீட்டை நோக்கிப் பார்க்க கொள்ளிக்குடம் உடைக்கும் வரை ஊர்வலம் செல்லும். அந்த இடத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் செய்தபின் ஒரு சுற்றுசுற்றி தலை மயானம் நோக்கி ஊர்வலமாக செல்லும், கொள்ளிப்பானை உடைத்தபின் பெண்கள் அப்படியே திரும்பி வீட்டிற்கு வருவார்கள்.

மயானத்திற்கு வந்தவுடன் ஏற்கனவே வெட்டி வைத்துள்ள குழிக்கருகே சடலத்தை கிடத்தி, மயானத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் செய்து தாய்க்கு தலைமகன், தகப்பனுக்கு இளையமகன் முறையில் முடி எடுத்து உடன் பங்காளிகள் முகச்சவரம் செய்து மீசை எடுத்து மற்ற கிரியை காரியங்களில் முறைப்படி செய்து சுமந்து வந்தவர்களில் உரியவர்கள் இருவர் ஒரே நேரத்தில் குழியில் வடக்கு பக்கம் தெற்குபக்கம் இறங்க உடலை குழியில் கிடத்தி இருவரும் ஒரே நேரத்தில் வெளியேறுவர். அதன்பின் வாய்க்கரிசி அவருக்குப் பிடித்தமான பொருட்களை இட்டு சம்பிரதாயப்பிரகாரம் குழியை வெட்டியான்

மூடி தண்ணீர் விட்டு பூசி முழுகி அதன்மேல் குச்சிகுத்தி தானியங்களை பதிப்பார்கள். பின் இதுநேரம் வரை அனைத்துக்கிரியை காரியங்களை செய்த பண்டாரம், வண்ணான், நாவிதன் மற்றும் வெட்டியான் போன்றோர்கள் நாட்டுப்பழக்கம் பிரகாரம் பெறவேண்டிய பணம், பொருட்கள் பெற்றுச் செல்வார்கள்.

பின் நிகழ்வுகள்

உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அருகிலுள்ள குளத்திலோ, கிணற்றிலோ குளித்து ஈர ஆடைகளை உலர்த்தி வரிசையாக துக்க வீட்டிற்கு வருவார்கள். அதற்குள் பெண்கள் வீட்டைக்கழுவி சுத்தம் செய்து வாசலில் மர உலக்கையை குறுக்காக போட்டு வைப்பார்கள். காலை நீர் ஊற்றி கழுவிவிட்டு அந்த மர உலக்கையைத்தாண்டி வீட்டிற்குள் சென்று சாமிகும்பிட்டு இறந்தவரை சாமியாக நினைத்து வணங்கிவெளியில் வந்து அமர்வார்கள்.

பந்தல் பிடுங்கல்

வீட்டிற்கு முன் காரியங்கள் செய்பவர்களும் சம்பந்திகளும் மற்றும் உறவினர்களும் வண்ணான் மாத்து விரித்த இடத்தில் உட்காருவர். பெரியோர்கள் சொல்ல பந்தல் பிடுங்கல் நிகழ்ச்சி ஆரம்பமாகும். பநதல் என்பது சுமார் 3 அடி சதுர வடிவுள்ள வெள்ளை வேட்டியை நான்கு முனையையும் குச்சியை வைத்து கட்டி (2 அடி உயரமான) கிழக்கு மேற்கில் சேலைக்காரர் ஈமக்கிரியை செய்தவர் வடக்கு தெற்கில் லேஞ்சிக்காரர் துக்க வீட்டுக்காரர் ஒருவர் முறையே அமருவர்.

இந்நிகழ்ச்சிக்காக சமைத்த உணவை இலைகளில் அவர்களுக்கு போட்டு வைப்பார்கள். சேலைக்காரரும், ஈமைக்கிரியை செய்தவரும் ஒவ்வொருக்கொருவர் பந்தல், துணிக்கு கீழே ஒரு கைப்பிடி பிசைந்த உணவை பரிமாறிய பின் நால்வரும் உணவு உண்டு, இலையை பந்தலில் மேல் போட்டு நால்வரும் ஒன்றாக எழுந்து பந்தலை அப்படியே நான்கு குச்சிகளை பிடித்துக் கொண்டு கொள்ளி உடைத்த இடத்தில் போட்டு விட்டு திரும்பி பார்க்காமல் வந்து விடுவர். பின் லேஞ்சிக்காரர், முடி எடுத்தவர்களுக்கு லேஞ்சிகட்டும் நிகழ்ச்சி நடைபெறும். பின் அனைவரும் கலந்தாலோசித்து கருமந்திரம் என்ற இறுதி ஈமகிரியை செய்ய நாள் குறித்து அதன் பிரகாரம் செய்யவும் பங்காளிகள், உறவினர்கள் அனைவரும் அந்தக்குடும்பத்தைக்காத்து உதவும்படி பெரியவர்கள் கூற, பின் சேலைக்காரர், லேஞ்சிக்காரர்களுக்கு குருணி நெல், முக்குருணி நெல் முறையே கொடுத்து அவரவர்கள் தங்களது இல்லங்களுக்கு செல்வர்.

பிரச்சனைக்கு தீர்வு

பயணங்கள் எல்லோருக்கும் இனிமையானதாக அமைந்து விடுவதில்லை. ஏதேனும் பிரட்சினையில் என்று நம்மில் பெரும்பாலோர் அடுத்த வேலையைப்பார்க்க போய் விடுவார்கள். நாம் சந்தித்த பிரட்சினை, இனி மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாது என்று நினைத்து அதற்கு தீர்வு காண

முனைவோர் வெகுச்சிலரே.அவ்விதம் பிரட்சினைகளுக்கு தீர்வு காண யோசித்து வாழ்க்கையை நல்லவிதமாக அமைத்துக்கொண்டவர்களின் ஆலோசனையே சாலச்சிறந்தது.

தவறு செய்யாதவர் யார்?

எந்த ரிஸ்க்கும் எடுக்காமல் முன்னேற முடியாது. தவறு செய்து விட்டோமோ என்று பயந்து கொண்டு சிலர் எதைச்செய்யவும் பயப்படுவார்கள். தவறே செய்யாதவர்கள் இரண்டு பேர்தான். ஒருவர் இன்னும் பிறக்கவே இல்லை. இன்னொருவர் எந்த வேலையுமே செய்யாதவர் என்பார்கள்.

கொடை

உலக வாழ்க்கைக்கு பொருள் தேவைதான், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்கிறார் வள்ளுவர். ஆனால் பொருள் ஆசை, எல்லை மீறும்போது எஞ்சுவது துன்பமே. ஆசைக்கு ஒரு அளவில்லை என்பார் தாயுமானவர். வரம்பு மீறிய ஆசை ஒருவனை ஒழுக்க வரம்பையும் மீறச்செய்யும், பிறரைக் கெடுத்தாவது தான் முன்னேற வேண்டும் என்று நினைக்க வைத்து நேர்மை கோட்டை தாண்டச் செய்யும். அப்படியெல்லாம் அவன் சேர்த்த பொருள் அவனுக்கு உண்மையான இன்பத்தை தந்து விடுமா?

ஈத்துவக்கும் இன்பம்

ஈகை ஒருவனுக்கு உண்மையான இன்பத்தைக் கொடுக்கும். கை பெற்றதன் பயன் ஈகை செய்வதே. நம்மிடம் வரும் ஏழை, எளியோருக்கு இல்லை எனக்கூறாது கொடுக்க வேண்டும் என்பர். கொடுப்பவருக்கும் இன்பம், பெறுபவருக்கும் இன்பம்.

இதனை ஈத்துவக்கும் இன்பம் எனப்பேசுவார் நக்கீரர். ஈகை என்றும், தானம் என்றும், கொடை என்றும் பல சொற்களால் கூறப்படும் சொல் உண்மையில் இன்பம் தரும் செயலாகும், பொருளை கொடுப்பது மட்டும் தானமா? துன்பத்தில் சேர்ந்த ஒருவனிடம் ஆறுதல் வார்த்தை பேசுவதும் தானமே, மேலும் பிறருக்காக உழைப்பதும் தானமே.

நம்பிக்கை தளராத செந்தில் குமார், தம்பட்டமலைப்பட்டி

பிறவியிலேயே கால்கள் சூம்பிப்போய் செயலிழந்து முடங்கி போன இவரால் கைகளால் மட்டும் தவழ்ந்து நடந்து வரமுடியும். ஆனாலும் இமயத்தை தொட்டுவிடும் தன்னம்பிக்கையுடன் வாழ்கிறார். உறங்கான்பட்டி, தம்பட்டமலைப்பட்டியைச் சேர்ந்தவர் செந்தில்குமார். சிறுவயதில் பெற்றோரின் நிழலில் தவழ்ந்து திரிந்த செந்தில் சுறு சுறுப்புடன் செயல்பட்டு படித்து வரும் வேளையில் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்துள்ளார்.

தனது பெற்றோர்கள் கடன் தொல்லையால் அவமானப்பட்டு இருந்த கொஞ்ச நஞ்ச சொத்துக்களையும் கடன் கொடுத்தவர்கள் எடுத்துக்கொள்ள பெற்றோர்கள் செந்திலை விடடு விட்டு எங்கே கண்காணாத தொலைவிற்கு பிழைக்கச்சென்று விட்டார்கள். ஆதரவற்று நின்ற செந்திலுக்கும் நல்ல உள்ளங்கள் உதவி செய்ய உறங்கான்பட்டியில் உள்ள பலசரக்குக்கடையில் சிறு சிறு வேலைகள் செய்து அவர்கள் தரும்

சம்பளத்தில் காலத்தை கடத்தினார். ஆனால் தன் மனதில் ஏற்பட்ட வேதனையைத் தாங்கிக்கொண்டு வைராக்கியத்துடன் வேலை செய்து டி.வி.எஸ் 50 ஓட்டக்கற்றுக்கொண்டு தனது முதலாளியின் பலசரக்கு கடைக்கு வேண்டிய சாமான்களை மதுரை, மேலூர் சென்று ஆர்டர் கொடுத்து வர துவங்கினார். இதில் வரும் வருமானத்தில் சிறுக சிறுக சேர்த்து கடனையெல்லாம் அடைத்து சொத்துக்களை மீட்க ஆரம்பித்தார்.

இந்நிலையில் தாய்தந்தையர் பொள்ளாச்சியில் இருப்பதாக அறிந்த தாய் தந்தையரைக்காணவேண்டுமென்ற பாச மிகுதியில் சுமார் 250 கிலோ மீட்டர் டி.வி.எஸ் 50 வண்டியிலே சென்று அவர்களை சந்தித்து எல்லையில்லா ஆனந்தம் கண்டார். அந்த ஆனந்தத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. பின் அவர்களை சொந்த ஊருக்கு அழைத்து வந்து தன்னுடனே இருக்கவைத்து மகிழ்ச்சியடைகிறார். இந்நிலையில் மதுரை சென்று வரும்போது மதுரையில் இவரை ஓர் பெண் காதலிக்க ஆரம்பித்துள்ளாள். மாற்றுத்திறனாளி என்பது அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. சற்று லேசாக சூம்பிபோன காலுடன் வண்டியிலிருந்தே தாங்கி நிற்கும் போது இவரது அயராத உழைப்பு சுறு சுறுப்பு களையான முகம் ஆகியவைகளைப்பார்த்து அப்பெண் மையல் கொள்ள ஆரம்பித்தாள். பெண்ணின் வீட்டிற்கு தெரிய வரவே அவன் மாற்றுத்திறனாளி உன்னை எப்படிக்காப்பாற்றுவான் என்று கூற அப்பொழுது தான் அப்பெண்ணுக்கு உண்மை நிலையறிய, இருந்தாலும் நான் அவரையே மணப்பேன் என்று பிடிவாதம் பிடிக்க அப்பெண் வீட்டார்கள் பெண்ணை அழைத்துக்கொண்டு சொந்த ஊருக்கே சென்றுவிட்டார்கள்.

நமது கதை நாயகன் செந்தில் மனந்தளராமல் மணந்தால் அப்பெண்ணையே மணப்பேன் என்று இங்கிருந்து வாடகைக்கார் எடுத்து சென்று பெண் வீட்டை கண்டுபிடித்துள்ளார்.

அப்பொழுது வாடகைக்கார் டிரைவரிடம் நான் இன்னும் அரை மணி நேரத்தில் அப்பெண்ணுடன் வராவிட்டால் நீ காரை எடுத்துக்கொண்டு ஊருக்குச்சென்றுவிடு என்று கூறி பெண் வீட்டிற்கு சென்றுள்ளார். எண்ணத்தின் வலிமை அதிகரிக்க அதிகரிக்க மனிதனிடம் இருக்கும் சக்தியும், அளவும் அதிகரிக்கும். மனிதனாகப்பிறந்தவன் ஒவ்வொருவரும் எந்தவொரு நொடியிலும் தன்னம்பிக்கையை இழந்துவிடக்கூடாது என்பதை அந்த கார் டிரைவர் புரிந்து கொள்கிறார். பெண் வீட்டில் உன்னை நம்பி எங்கள் பெண்ணை அனுப்பமுடியாது என்று தரக்குறைவாகப் பேசியும் இழித்தும் கூற முற்படுகிறார்கள் அப்பொழுது அங்கிருந்த ஒரு பெரியவர் செந்திலிடம் இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்? யாருடனும் வந்தாயா? என்று வினவ நான் மட்டும்தான் வந்தேன் என்று கூறிய மறுகணமே அந்த பெரியவர் இவனை நம்பி நமது பெண்னை கல்யாணம் பண்ணிக்கொடுக்கலாம். எப்படியும் நமது பிள்ளையை காப்பாற்றுவான் என்று கூறி அனைவரையும் சமாதானம் பண்ணி சம்மதிக்க வைத்துள்ளார். பின் கார் டிரைவருக்கு செல்போனில் தெரிவித்து, பெண்ணை அழைத்துக்கொண்டு தனது ஊருக்கு அழைத்து வருகிறார்.

வாழ்க்கையின் வெற்றியே போராட்டத்தில்தான் இருக்கிறது. முயற்சி செய்ய வேண்டியது, இருந்தாலும் இறைவனை நினைத்துச்செயல்படுங்கள். அவன் துணை நின்று வெற்றியைப் பெற்றுத்தருவான் என்ற வார்த்தை செந்திலின் வாழ்வில் வலுச்சேர்க்கிறது. தன்னம்பிக்கை தவிர எளியோருக்கு எந்த

மருந்தும் கிடையாது. இது செந்திலின் வாழ்க்கையில் கண்ட நிதர்சனம். உடல்தான் சுகம், அழகு என்றில்லை மனம் தான் எல்லாவற்றிருக்கும். செந்திலின் காதல் சங்க காலத்தையும் மிஞ்சிய இலக்கிய காதல் என்றால் மிகையாகாது.

கற்புநெறி தவறா தமிழச்சியை போற்றுவோம். மாற்றுத்திறனாளி என்று தெரிந்தவுடன் தன் காதலை மாற்ற வில்லை. மறக்கவில்லை அவனையே அடைவேன் இல்லையேல் எதுவுமில்லை என்று கூறிய அந்தப்பெண்ணின் மனம், எண்ணம் அன்பின் உச்சத்திற்குச்சென்றுவிட்டது. இருவரும் திருமணம் புரிந்து நல்லறம் கொண்டு இல்லற இலக்கணத்துக்கு எடுத்துக்காடடாக வாழ்கிறார்கள் அந்தப் பெண்ணும் நன்கு படித்த பெண், உறங்கான்பட்டி துவக்கப்பள்ளியில் யோகா பகுதிநேர ஆசிரியையாக பணிபுரிகிறார் இவரிடம் யோகா கற்ற மாணவச்செல்வங்கள் பத்து பேர் மாவட்ட அளவில் பல பரிசுகள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மாற்றுத்திறனாளி செந்தில்குமார் இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். ஈரம் இருந்தால் இலைகள் உதிர்வதில்லை, நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை தோற்பதில்லை. நிச்சயமாய் சமுதாயத்தில் பெரிய மனுசனாய் பவனி வருவாய் வாழ்த்துக்கள்.

என்றும் உன் நலம் விரும்பும் ஒருவனான இந்நூல் ஆசிரியன்.

தற்கால நிலைமை

வெள்ளலூர் நாட்டு மக்கள் பெரும்பாலும் நிலச்சுவான்தாரர்களாகவும் , உழவுத்தொழிலில் மிக்க கருத்தும் ஊக்கமும் உடையவராக வாழ்ந்து வருகிறார்கள். 'மேழிச்செல்வம் கோழைபடாது' என்பது அமுத வாக்கன்றோ? என்றதாலேயே, இது தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லாதவர்களாகவே பெரும்பாலோர் வாழ்ந்து வருகின்றனர். ஒரு பெரிய சமூகம் இவ்வாறு இருப்பது சிறிதும் சரியன்று. இது நாட்டின் நலத்தையே தடைப்படுத்தக்கூடியது. ஏதாவது ஒரு தொழிலை இம்மக்கள் கற்றுத் தேறவேண்டும்.

முன்னர் இலங்கை, மியான்மர், மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் நன்றாக சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர் என்றும் கூறப்படுகிறது. இப்பொழுது மத்திய கிழக்கு நாடுகள் (துபாய், குவைத், சவுதி அரெபியா, கத்தார், மஸ்கட் போன்ற அரபு நாடுகள்) அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, புருனை மற்றும் சில நாடுகளில் பணி நிமித்தமாக வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதாரமும் ஓரளவு உயர்ந்து வருவதற்கு மகிழ்ச்சியளிக்கிறது. இப்பொழுது இளைஞர்கள் நன்கு படித்து வருவது பெருமகிழ்ச்சியளிக்கிறது. அதேபோல் பெண்குழந்தைகளும் படித்தால் தான் ஒரு சமூகம் சீராக மென்மேலும் வளரும் பெண் கல்வி விழிப்புணர்ச்சி இக்காலக்கட்டத்திற்கு மிக முக்கியம் என்பதை மறக்கலாகாது.

இளைஞர்கள், மத்திய மாநில அரசுகள் நடத்தும் வேலைவாய்ப்பு தேர்வுகளில் கவனமாக படித்து வெற்றிபெற்று நல்ல உயர் பதவிகளை அடைய முயற்சி செய்ய வேண்டும். அது போல் விளையாட்டு துறைகளிலும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விளையாட்டு வீரர்கள் உருவாக முயற்சிக்க வேண்டும். திருமணம், திருவிழாக்கள் முதலியவற்றில் அளவின்றிச் செய்யப்படும் செலவுகளை குறைத்து சிறிதளவாவது சேமித்து அதிலும் கல்விக்கென்று சேமித்து வைப்பது மிகுந்த நன்மை பயக்கும்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வருபவர்கள் வெள்ளலூர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவரவர்

பகுதியில் ஏதாவது ஒரு தொழில் செய்ய முனைந்தால் பிற்காலத்தில் இப்பகுதி பொருளாதார வளர்ச்சி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மாற்றங்கள் தவிர்க்க முடியாதது. நமது மூதாதையர்கள் மற்ற ஒருசில கள்ளர் பிரிவினருடன் ஒன்றறக் கலந்து பல இடங்கள் புலம் பெயர்ந்து, இன்றைய சூழ்நிலையில் வளர்ந்த பண்பட்ட சமுதாயமாக உயர்ந்து வந்திருக்கிறார்கள். நாம் எல்லோரையும் அரவணைத்து வழி நடத்திச்சென்றால், இன்னும் மென்மேலும் உயரும் என்பதில் எந்தவித மாற்றுச்சிந்தனையும் கிடையாது.

எதனால் நாம் முன்னேறவில்லை?
என்ற பழைய கேள்வியை விட்டு விட்டு
ஏன் நாம் முன்னேற வேண்டும்?
என்று கேடடுப்பாருங்கள்! ஏதாவது வழி கிட்டும்!

வளர் உரை

கதை ஒன்று இருந்தால் முடிவு ஒன்று இருக்குமல்லவா? கதைக்குத்தான். வரலாற்றிற்கு முற்றுப்புள்ளி கிடையாது. முற்றுப்புள்ளியானால் உலகில் நாகரீகம், புதிய கண்டுப்பிடிப்புக்கள் உருவாக வாய்ப்பிருந்திருக்காது. இவ்வரலாற்றினையே காலங்காலமாக இம்மக்கள் கூறி வந்துள்ள செவி வழிச்செய்தி, ஓலை முறி வாயிலாக, கல்வெட்டுக்கள் மூலமாக, ஏற்கனவே கூறிய படி வரலாற்றாசிரியர்களின் பதிவுகளாகிய நூல்களின் அடிப்படையில் அவர்களது மனஓட்டத்திற்கு ஏற்ப அவர்களது எழுத்துக்களையே மாற்றாமல் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் கொண்டு வரப்படும்..... அவர்களுக்கும் மீண்டும் இது நன்றியுரை

நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி
அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்
கையில் பணமில்லையே........உடலில் வலுவில்லையே......
உதவி செய்ய நண்பர்கள் இல்லையே....
என்றெல்லாம் யோசித்து, நேரத்தை வீணாக்காதே,
எதற்கும் பயப்படாதே.... தயங்காதே,
இலக்கை நோக்கி அடி எடுத்து வை
தொடர்ந்து முன்னேறு,
சோதனைகள் விலகும் பாதை தெளிவாகும்
நோக்கத்தை அடைந்தே தீருவாய்
இதை யாராலும் தடுக்க முடியாது.

இது விவேகானந்தரின் பொன்மொழி எங்கேயோ, எப்போதோ மதுரையில் உள்ள ஒரு கடையின் சுவற்றில் ஒட்டப்பட்டிருந்தது. பிரபல நிறுவனத்தின் விளம்பரப் பகுதியில் பார்த்ததாக ஞாபகம். அது என் கண்முன் காட்சியாக விரிந்தது. இது வரலாற்றின் ஆய்வின் ஆரம்பக்கட்டத்திலிருந்தே என்

காதில் ஒளித்துக்கொண்டேயிருக்கிறது. என் வாழ்க்கையின் ஊன்றுகோலே அதுதான். அந்நிறுவனத்தின் நோக்கம் எதுவோ, மக்களை நோக்கிச்செல்கிறது. அடைகிறது. மனவலிமைதான் எந்தவொரு இலக்கையும் அடைய முடியும்என முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் தலை மேற்கொண்டு தொடர்ந்து செல்கிறேன்............. நன்றி.

முன்னோர்கள் மூத்தவர்கள்
முன்வந்து வாழ்த்தட்டும்
தெய்வங்கள் தேவதைகள்
தேன்மாரி பொழியிட்டும்
வாத்தியங்கள் வாழ்த்தொழிகள்
வான்வரைக்கும் கேட்கட்டும்.
சுற்றமே, நட்பினமே
சூழ்ந்திருந்து வாழ்த்துங்கள்.

குறிப்பு :

இந்நூலில் உள்ள அனைத்துப் பாடல்களும் ஆசிரியர் கட்டக்காளை மு.ராதாகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது.

ஸ்ரீ கடம்பூர் அய்யனார் ஸ்ரீ பெரம்பூர் அய்யனார்

ஸ்ரீ செம்பூர் அய்யனார்

காலமெல்லாம் எங்களைக் காக்கும் கடம்பூர் அய்யனாரே!
ஞாலமெல்லாம் போற்றும் எங்கள் செம்பூர் அய்யனாரே
நாளெல்லாம் நாங்கள் வணங்கும் பெரம்பூர் அய்யனாரே!
காப்பியத்தில் போற்றப்படும் காலமறியா தெய்வங்களே!
காவியத்தின் நாயகனால் கண்டுதொழுத முன்னோடிகளே!
மூன்றுகாலம் உணர்த்திட்ட முப்பெரும் மன்னர்களே!
எத்தனையோ, சறுக்கல்கள் இந்நாட்டில் வந்தாலும்
அத்தனை சறுக்கல்களையும் ஏணியாக மாற்றியவர்களே!
பொன்னான நாட்டின் புதல்வர்களின் ஆட்சிதனை
மண்ணுலகம் அறியவைத்த மாபெரும் சக்திகளே!
இவ்வுலகம் உள்ளவரை நாங்கள் உனைமறவோம்
சரணங்கள் பல சாற்றிடுவோம் தங்கள் பாதங்களில்
சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ தொண்ணுத்தொட்டான் சாமி

எட்டுத்திக்கிலும் எட்டாப்புகழ் தொண்ணுத்தொட்டான் சாமியே!
எவ்வாறு கஷ்டம்நஷ்டம் வந்தாலும் கட்டி களைத்தெறிபவனே!
அன்புசெலுத்தும் அன்பர்களுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளித்தருபவனே!
பண்போடுவாழ பலநல்வழி அருளாசி தந்தவனே!
மூத்தவனே முன்வந்து வணங்குபவர்களின் முழு முதற்கடவுளே!
மூலவனே காலனை விரட்டி காலமெல்லாம் காப்பவனே!
நாள் அவனதுஎன நாம்தொழுதால் நல்லநாளை நாள்தவறா நல்குபவனே!
நான்என்பதை மறந்து நாம்என்றால் சரித்திர்புகழும்என நமக்குணர்த்தியபவனே!
வாழும்காலத்திலே நாளும்நல்லதைச்செய்ய நாட்டம் கொள்ளவைத்தவனே!
வேலும் வாளும் கொண்ட எம்மக்களை வீரத்திலகமாக்கியவனே!
சொல்லுக்கு நீதிதந்து நாட்டில் நல்லாட்சிபுரிய வைத்தவனே!
மனது உள்ளுக்குள்வாழும் வரலாறை உரைநடையில்
உன்பக்தனுக்கு தந்திடுவாய் உன் திருவடி
சரணம், சரணம், சரணம்.

ஸ்ரீ உலகநாத சுவாமி

உலகையளந்த உலகுநாத சுவாமியே!
உள்ளத்தை மகிழ்விக்கும் உயர்ந்துள்ளம் உள்ளவனே!
தொல்லைகள் யார்தந்தாலும் இல்லை எனஆக்கிய எங்களது இறைவனே!
பிள்ளைநல்ல பிள்ளைகளை தந்துனது பேர்சொல்ல வைத்தவனே!
பிறந்த நாட்டையும் பேசும் மொழியையும் உன்தெய்வம் என்றவனே!
நிறைந்துள்ளம் கொண்ட நின்மக்கள் வாழவைத்தவனே!
மறந்தும் உனை நாங்களிருந்தாலும் மறவாதுநல் மாற்றங்கள் தந்தவனே!
பூவுலகில் எங்களை உயர்த்தி புவிபோற்ற வைத்தவனே!
மெய்யுலகில் நாங்கள் மேம்பட மென்மேலும் வழிசொன்னவனே!
இதுகாறும் இயம்பிய என்நாவால் எந்நாட்டை இதமாகபாடவை
நல்சரிதம் கண்ட இந்நாட்டை உயர்சரித்திரமாய் பேசவை
நான் உன் திருவடி சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ சேவுகப்பெருமாள் அய்யனார்

வில்வமரக்காட்டில் விளையாடிய சிங்கங்கள்
சிற்பரூபமாய் சிவலிங்கமாய் தோன்றிற்றே!
நீதிசொல் நாணார் நேர்மையிற்குன்றார் சிங்கைநகர்
கோதையில் பயிர்தொழில் கொண்டுய்யும்
பூரணபுஷ்கலை மணாலன்புரத்திலே இரண்டுதாமரை சிரிக்கும்
தறுவடையப்பெருமாள், ஐயனார்தமக்கு ஆன்றமைந்த ஆலயம்
சிவனுக்கும், அரனுக்கும் பிறந்த சேவுகப்பெருமாள் ஐயனாரே!
சிங்கவாகனம் கொண்ட பிடாரிஅம்மனால், சிங்கம்பிடாரி ஆனஉனதூரே!
ஜல்லிக்கட்டில் ஓடிவரும் சந்தோஷக்காளைகளே!
வீரர்களின் வீரத்தில் விளையாடும் காளைகளே!
உன் காளை வந்தபின் உற்சாகம் ஜல்லிக்கட்டில்
மண் மீது வீரத்தை மழையாய் பொழிந்தவனே!
மாதவன் மகனாகி மக்களைக் காத்தவனே!
சிவனின் மகனாகி சிறப்பிக்க வந்தவனே!
சீருடைய இந்நாட்டின் சிறப்பான கதைதந்து
பேருபெற எங்கள் பெருமைசொல்ல வைத்துடனும்
பெருமாள் அய்யனாரே இச்சிறுவன் வணங்குகிறேன்.
உன் காலடி சரணம், சரணம் சரணம்

ஸ்ரீ நல்லுச்சாமி

நலம் பலதந்த எங்கள்நல்லுச்சாமி ஐயனே!
குலம் நலம்காத்த கோமகனே மூலவனே!
களம்பலம் காண முன்னின்று நடத்தியவனே!
பலம் எங்கள்பலம் எனஉலகிற்கு பறைசாற்றியவனே!
வானகமும், வையகமும் புகழ்பாடவைத்தவனே!
எக்காலமும் எங்களது என இனியகானம் பாடவைத்தவனே!
வீணானவர் எங்கள் குலத்திலில்லை என விழிப்புணர்வை விழித்தவனே!
எண்சாண் உடம்பில் வீரத்தை எப்பொழுதும் விதைத்தவனே!
கரைகளில் நாங்கள் உயர்காண கரையை உயர்த்திவனே!
குறைகளேதுமின்றி வாழ நிறைவாழ்வில் நின்றவனே!
இறைஎண்ணம் என்னென்றும் எம்மனதிலிருக்க ஈகையானவனே!
முறையோடு நாங்கள் வாழ்ந்திட வழிமுன் செல்பவனே!
உன் நடையெல்லாம் நாங்கள் நாள்தவறா நடக்க
நின்னடி சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் துணை

ஆயிரம் கண்கொண்டு ஆழிசூழ் உலகைக்காப்பவளே!
பா ஆயிரம் பாடினாலும் பத்தாது உன்புகழ்பாட
கண்ஆயிரம் இருந்தாலும் காணாது உன்னழகைக்காண
நன்ஆயிரம் சேதிகள் சேவிக்க நாவிற்கு வலிமைகொடு
பூவுலகம் காக்கவந்த பொன்னான பூமாதேவியே!
ஏழுலகம் காக்கவந்த ஈசனின் துணைவியே,
நல்லுகம் கூறும் நல்நாட்டின்கதை எழுத
இவ்வுலகம் உள்ளவரை எல்லோரும்அறிந்திட இப்பொழுதே தந்துவிடு
நாடாளும் அரசனுக்கு நாட்டரசன் கோட்டை தந்தவளே!
வீடாளும் மங்கையற்கு இல்வாழ்வுநெறி வகுத்தவளே!
பாடாளும் வித்தையை நான்படித்தெழுத பார்வையாலே காட்டிடு.
யாராலும் எழுதாதை நானறியநயமாக நன்றாகஎழுதவிடு
அம்மனே ஆயிரம் கண்கண்டவளே கொண்டவளே
ஆத்தா உன்னடி சரணம், சரணம், சரணம்!

ஸ்ரீ ஆரம்மாள்

அருட்பெருந்தேவியே ஆரம்மாள் அன்னையே!
அண்டியோரை ஆதரித்து அகமகிழ்பவளே!
அன்னை பராசக்தி அம்சம் நிறைந்தவளே!
உன்னருகே வராதவர்களையும் உளமகிழ்ந்துகாப்பவளே!
ஆரம்மா, கோபம் ஆரம்மா என்ற
ஆளும் உலகின் ஈசனின் பக்தையே
ஆடுகின்றவர்கள் ஆணவத்தை அடக்கியவளே!
தேடுகின்றவர்களை தேடிச்சென்று அருள்பவளே!
அசோகச் சக்கரத்தில் ஆரமாய் அமர்ந்தவளே!
அறுவரோடு கண்ணகியை இணைத்து
ஏழு தெய்வமாகி சீரிய சிலப்பதிகாரத்தில்
செழுமையை எக்காலமும் தெளித்தவளே!
தலை சிறந்த காப்பியத்தின் நாயகியே!
சத்தியம்கொண்ட மக்களுக்கு நற்கருணை தந்தவளே!
எல்லையில்லா ஆனந்தம் எப்போதும் உனைக்கண்டால்
உனைக்காணாத என்னை மன்னித்து காலமெல்லாம் காத்திரு!
காலமெல்லாம் போற்றும் எங்களதுகாதையை கனிவுடன் தந்துவிடு!
திகட்டாத வரலாற்றை தினம் தினம் தந்திடு!
தெளிந்த மொழியில் நான்பாட தெளிவாக தந்திடு!
அறிந்தவர்களும், அறிஞர்களும் கூறாசேதியை தந்திடு!
அன்னையே, ஆதிபராசக்தியே அடியேன்
உன்பாதம் சரணடைந்தேன் சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ செய்யாமுத்து அய்யனார்

எண்ணெய் இல்லா தீபஒளி தந்த
எங்கள் செய்யாமுத்து அய்யனாரே!
எங்கள் இதயத்தில் எப்போதும் வாழ்பவனே!
எங்கள் திருநாட்டின் எல்லைக் காவலனே!
சாற்றிய மாலையிலே தர்மத்தை தந்தவனே!
ஏற்றிய தீபத்திலே ஏழையை வாழவைப்பவனே!
ஆற்றிய நற்செயல்களுக்கு அருள்கொடை தருபவனே!
உனைப்பற்றிய பக்தர்களை ஒளியாக காப்பவனே!
கானகத்தில் ஆட்சி செய்யும் கைலங்கிரிநாதனே!
வனகத்தோர்க்கும் வாழ்த்துக்கூறும் வாய்மைநிறைந்தவனே!
நான் உன்அகம் பற்ற நாள்தோறும் காட்சிதா!
என்நாட்டின் கதையை எக்குறையின்றி எழுதவை
சத்தியமாய்ச் சொல்கிறேன் உன்னருளால் சரியான கதைதருவேன்
நித்திய உண்மையை நித்தம் நித்தம் எனக்கருள்வாய்
பத்தியமாய் நானிருக்க பவித்ரமாய் வழிநடத்து
எத்தனையோ பேர்செய்யா, இக்கதையை இப்போதே எழுதவை!
ஈசனே உன் பாதம் சரணடைந்தேன்
சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ நாட்டார்மூர்த்தி அய்யனார்

நாடு முந்திய நாட்டார்மூர்த்தி அய்யனாரே!
நடுநாயகம் பொருந்திய நய்க்கான்கரை தெய்வமே!
நய்க்கான் தேவன் கனகதேவன் மக்களின்நாயகனே!
நாயக்கர்கெங்கை வெட்டிய நாயக்கருக்கு வாரிசு தந்தவனே!
நாமெல்லாம் ஒற்றுமை காக்க நாட்டைக்காத்தவனே!
நல்லவர்களை வாழவைக்கும் நாநிலம்போற்றும் அய்யனாரே
நாங்களனைவரும் உன்னடி சரணம்! சரணம்! சரணம்!

ஸ்ரீ முத்துபிடாரி அம்மன்

முத்தமிழ் போற்றிடும் எங்கள் முத்து பிடாரி அம்மனே!
நற்றமிழ் கற்ற நய்க்கான் தேவன் கனகதேவன் அன்னையே!
கொற்றவன் போற்றிடும் கோபாலன் தங்கையே !
ஏற்றமிகு வாழ்க்கையை எங்களுக்கு தந்து ஈன்றெடுத்த தாயே !
இல்லாது என்பதையே இல்லாததாக்கி எங்கள் இல்லத்தை காத்தவளே !
எழில்மிகு இந்நாட்டின் ஏழைகளை என்றென்றும் காத்தவளே !
எங்கள் குலதெய்வமே ஈசனுடன் வந்து எங்களை என்றென்றும் காப்பாயாக.

ஸ்ரீ ஆண்டிச்சாமி

அழகுடனே ஆடிவரும் ஆண்டிச்சாமி ஐயனே!
அருளுடனே பாடிவரும் நெடியுயரம் கொண்டவனே!
அளவற்ற வலிமையுள்ள பாதங்களை வணங்குகிறோம்
ஆசி நல்லாசி அருளிஅன்புடனே ஆதரி
வைகை வடகரையில் வசமான உன் பாதக்குரடால்
பலகாத தூரம்வந்து உன்பக்தர்களை காத்திடுக!
சேர்த்திடுக எங்கள்வாழ்வு செழிப்புடனே நடைபோட
பார்த்திடுக பார்வையால் பரிவுடனே பாசமாக பாடிவிடு
வாழுகிறோம் நாங்கள் வற்றாத வளத்துடன் நாடுகிறோம்
நாளெள்ளாம் உனைப்பாடி நாங்கள் வரும்வேளையில்
மாறாத என்னென்றும் எளியவர்கள் எங்களை
இறை அவனாகி வாழ்த்து உன்மக்களை
என்றென்றும் உன் பாதம் சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ கடம்பங்குடி அய்யனார்

கடம்பமரம் கொண்ட கடம்பக்குடி அய்யனாரே!
கண்மாயக்கரை தனிவாழும் கரைகண்ட அய்யனாரே!
கள்வனையும் மாற்றிய கனிந்தஉள்ளம் கொண்டவனே!
களம் பலகண்ட வீரர்களின் வெற்றியை வெகுவாகத்தந்தவனே!
வில்லங்கம் செய்பவர்களை வேரோடு அழிப்பவனே!
காலமெங்கும் செய்பவனை கருவோடு என்றும் அறுத்தவனே!
காலமெல்லாம் உன்னைப்பற்றியவர்களுக்கு நல்வாழ்வு கொடுத்தவனே!
நாளெல்லாம் நானிருக்கேன் என் நம்பிக்கை நாயகனே!
கற்றோரும், மற்றோரும், கவிப்பெற்றோரும் உனை நாடி
சற்றேதும், தயங்காமல் தன்னிடம் மயங்கியதும்
உற்றாரும், உறவினரும், உலகோரும் இன்புற
உன்புகழ்பாடி உள்ளபடி உரைத்திட
ஏங்கி நின்ற எளியவனின் நிலை இறங்கி
தாங்கி நின்ற தலைவனின் அருள்பெருக
தன் நாட்டின் நிலையான புகழுரைக்க
உன் புதல்வன் வணங்குகிறேன் ஒளியாகத் ஒலித்திடு!
சரணம், உன் திருவடி சரணம், சரணம்

ஸ்ரீ சுகந்தவன ஈஸ்வரன்

வானவருக்கும் வையவருக்கும் வழிகாட்டிய ஐயனே!

கானகத்தை காத்த அரும்பெரும் சுகந்தவன ஈஸ்வரனே!

பெரும் சீர்தந்து பெருமையுடன் பெருச்சியூரில் வாழ்பவனே!

சீர் சிறப்புடன்வாழ எங்களை புலிமலைக்கு அழைத்துவந்தவனே!

முந்திய பாண்டியனால் முழுமுதற் இல்லம் அடைந்தவனே!

எந்தையும் தாயும் தன்குலமும் வழிபட எங்கள்

இல்லங்கள் யாவையும் எந்நாளும் காப்பவனே!

ஈசனே நேசனே இனிய உன்மக்களை என்றென்றும் காத்திடு!

வணிகனுக்கு சாட்சி நீதிகூறி வன்னிமரம் கண்டவனே!

வளமான மதுரைவாழும் அன்னைமீனாட்சிக்கு வன்னிமரம்வளர்த்தவனே!

சாயும்படைதாங்கி ஆதரிக்க புலிமலையூருக்கு அழைத்து வந்தவனே!

சமபலம் அடைய தன் மக்களை சாவடங்கியுடன் இணைத்தவனே!

வீரமிகு வெள்ளலூர் வீரர்கள் படையில்

தீரமிகு சாகசம்செய்து தெவிட்டாத வெற்றிகண்டு

சோர்வடைந்த வீரர்கள் தொய்வில்லாமல் போர்புரிய

புதிய புதிய யுக்திகளும் தந்துபொன்னான காவியம் படைத்தவனே!

ஈசனே, மாசிலா குழந்தைகள் உன்சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ மங்கச்சி அய்யனார்

வெள்ளமலை காக்கும் வீரமங்கச்சி அய்யனே!

வெக்காலி தலைவனே வெயிலுக்குகந்த அய்யனாரே !

எல்லைகளை காத்திடும் எங்கள்காவல் தெய்வமே!

ஈடில்லா வரம் தரும், எங்களின் இறைவனே!

மாசுமருவற்ற மணிகண்டனின் தெய்வமே!

மாதவம் புரிந்த மாமதுரை நாயகனே!

நீ பெற்ற தவப்பலனை, எங்களுக்கு எந்நாளும் அருளியவனே!

நிலையற்ற வாழ்வுதனில் நிம்மதி தந்தவனே!

இயற்கையின் சக்தியை எங்களுக்கு ஈட்டியவனே!

இயற்கையாற்றலே எங்களுக்கு உணர்த்தியவனே!

செயற்கையாய் நாங்கள் செய்தபாவத்தினை

இடக்கையால் புறந்தள்ளி, வலக்கையால் ஆசீர்தா-

மண்ணின் மணம் தெரியா, மாந்தர்களின் மனம் மாற்று

எண்ணம் நல்லோங்க என்றென்றும் வழிகாட்டு

அன்னம் அருந்தும் அழகை அன்பர்களுக்கு எடுத்துக்காட்டு

இன்னம் உனைபற்ற எப்போதும் கலங்கரைவிளக்காய்

ஐயனே உன் பாதம் சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ காளமேகப்பெருமாள்

(இந்நூல் ஆசிரியர் தாயின் குலதெய்வம்)

சீரோடும் சிறப்போடும் ஆசிதரும்
திருமோகூர் பெருமாளே!
சீர்மிகு சிறப்புப்பலி தாரா தன்மகனை
காக்க காசிக்கடம்பியின் தெய்வமகனே!
கீழ்வானில் வந்து மேல்வானில் மறையும்முன்
கிழக்கே செல் கிடைப்பான் உனைகாப்பவன்!
தாயுள்ளம் கொண்டவனே அத்தாய்க்கும்
மகனுக்கும் வழிகாட்டிய தங்கமகனே!
கண்ணனே! கார்மேக வண்ணனே காளமேகப்பெருமாளே!
கட்டக்காளை கனவில் வந்து அச்சந்ததியைக் காத்தவனே!
கோபாலன் சேதியை செயலாற்றிய காளை
கட்டக்காளைக்கு அருள்தந்தவனே!
வளமான நாட்டில் வாகாய்க்கரையில் சேர்த்தவனே!
எங்கள் நாட்டுத்தெய்வமாகிய ஏழைகாத்த அம்மனை
எல்லோராலும் ஏற்கவைத்தவனே!
எங்களது இதயக்கோவிந்தனே!
கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!

ஸ்ரீ ராக்காயி அம்மன்

கங்கை நீராடிவர காலமதிகமாகுமன்று

கங்கை நீரை கொண்டுவந்த கங்காதேவியே!

புனிதநீராடிய எங்களை புனிதமாக்கிய புனிதவதியே!

புவியில் புகழோங்கவைத்த எங்கள் பூமாதேவியே!

வேங்கைப்புலி அழைத்து வந்த வீரமகாசக்தியே!

உறங்காது உறங்கான்பட்டியை காக்கின்ற உறங்காதேவியே!

சலுப்புலிஉறங்கான் தன்தெய்வமாய் வணங்கும் தவப்புதல்வியே!

மழைவேண்டி முளைப்பாரி விழாவெடுத்தால் மழைதந்த ஆகாயகங்கையே!

கருப்பருடன் துணயிருந்து காலமெல்லாம்காக்கும் ராக்காயிஅம்மனே!

கணநேரம்உனை நினைத்தாலும் துணைநிற்கும் எங்கள் ராக்காயிஅம்மனே!

கவலைகளை களையெடுத்து காலமெல்லாம்காக்கும் கருணாதேவியே!

ராஜராஜேஸ்வரியே, ராக்காயிஅம்மனே ராப்பகலாய் உனைநினைக்கும்

நாநிலத்து மக்களை காத்தருள்வாய் என வேண்டி

நாங்கள் உன்காலடியில் சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ வெள்ளிப் பூஜைக்காரன்

வெடித்தெழுந்து வருவான் வெள்ளிப்பூஜைக்காரன் அவன்
இடித்தெழுந்து வருவான் இன்னல்களை விரட்டுபவன்
துடித்தெழுந்து வருவான் துயரங்களை துரத்துபவன்
நொடிப்பொழுது வருவான் நோய்களை தீர்ப்பவன்
கரியநிறம் கொண்டவனே கள்ளழகர் காவலனே!
உரியது உண்டென்றால் உலகுக்கு கூறுபவனே!
சிறியது என்றாலும் சேவகன்முன் சிரித்து ஏற்றுக்கொள்பவனே!
அரியது எதுவோ அதைஎங்களுக்கு ஈந்தஅன்பு நிறைந்தவனே
மந்திரமும்தந்திரமும் மாந்தரிடம் இல்லைஎன மகாசக்தி அடைந்தவனே!
எந்திரனாய் ஏழைகளை காக்க, எப்போதும் உழைப்பவனே!
சூரியனாய் வந்து எங்கள் சந்ததிக்கு வழி வகுத்தவனே!
பிந்திவழி வந்தாலும் அவைமுந்திருக்க வைத்தவனே!
என்னிடம் ஏதுமில்லை எதைஎழுதிப்பாடுவது
உன்னிடம் எல்லாமுண்டு எனைஏற்றி எழுதவை
தன்னிடம் வந்த பக்தனை தர்மநீதி கூறவை
பண்சிறக்க வாழ்த்தி வரம்தா, பலகோடி
சரணம், உன் காலடி சரணம், சரணம்

ஸ்ரீ தாழைமுத்து கருப்பையா

தாழம்பூ காட்டில் தனிமையில் அருட்தவம் புரிந்தவனே!
காலமெல்லாம் எமைகாக்க ஆதினிகம்மாகரை தந்தவனே!
நாளெல்லாம் நமதாக்கிய ஞாயத்தின் அதிபதியே!
வேறெல்லாம் இல்லையென ஆணிவேராய் குலம்காத்தவனே!
அருள்வேண்டி வருவோர்க்கு நல்லாசி தருபவனே!
ஆதினிக்கரையிலே ஆட்சிசெய்து வருபவனே!
இந்நாளும், எந்நாளும் பொந்நாளாய்த் தந்தவனே!
ஈடில்லா ஈகைகுணம் எப்போதும் உள்ளவனே!
வழிதெரியா தவித்தோர்க்கு வாசலுக்கு வந்தவனே!
வாழும்மக்கள் இல்லத்தில் வாசம் செய்பவனே!
உள்ளோரும் இல்லாரும் ஒன்றாகப் பார்ப்பவனே!
ஒருபொழுதும் தூங்கா ஓங்காரமானவனே!
உற்றாரும் பெற்றாரும் உதறி எறிந்தாலும்
ஊக்கமதைதந்து, ஏக்கமதை, இறக்கி,
எப்போதும் என்னருகில் இருப்பவனே!
பாடுகிறேன் உனை நானறிந்த பைந்தமிழால்
தேடுகின்ற காவியத்தைத் தினந்தோறும் தந்துவிடு !
தினந்தினம் சரணம், திருவடி சரணம், சரணம்

ஸ்ரீ திருவேஸ்வரி அம்மன்

திக்கெட்டும் காக்கும் திருவுள்ளம்கொண்ட திருவேஸ்வரி அம்மனே

திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட திருக்கண்ணனின் தங்கையே

ஆதிக்கள்ளர் செம்புலியின் புகழ்காத்த அருந்தவ அன்னையே

ஆடிவந்தும் தேடிவந்தும் ஓடிவந்தும் அன்புடன் காப்பவளே

சீரும் சிறப்புடைய இந்நாட்டை உலகுக்கு தெளிவாகக் காட்டிய

சிவராமனம்பலகாரரின் குலதெய்வமே, சிறியவன் வணங்குகிறேன்

சீரியகதை படைக்க தெவிட்டாததெள்ளு தமிழை தாஎனக்கு

மண்டியிட்டு வணங்கி மன்றாடுகிறேன் மாசற்ற தெய்வமே

என்மன ஓட்டத்திற்கு ஏற்ற கருவைத்தா மாசியிலும்,

பங்குனியிலும் விழாவந்தாலும் மாதந்தவறாது

உன்மகிமை உண்டு நானறிவேன்

தெய்வமணம் கமிழும் தெய்வத்திருநாட்டை தினம் தினம்

காக்கவேண்டும் உன்திருவடி சரணம், ஆனாலும் வேண்டுகிறேன்

அறியா மைந்தர்களின் தெரியாத்தவறுகளை புறந்தள்ளி ஆசிகள்வேண்டி

சரணம், சரணம், உன் திருவடி சரணம்.

ஸ்ரீ காத்து வெட்டி கருப்பு

காற்றினை நிறுத்தி கணமழைபொழியவைத்த காத்துவெட்டி கருப்பே!

சோற்றில் நாம்கைவைக்க, சேற்றில் உழவன் கால்வைக்க

ஆற்றுநீர் கொண்டுவந்த ஆயிரம்கை கொண்டவனே!

காட்டில் பொழிந்த மழைதனை மாற்றி

நாட்டில் பொழிய வைத்த நற்கருணை நாயகனே!

திசைமாறிய காத்தினை செம்மையுடன்

தென்றலாக தவழ வைத்தவனே!

ஏட்டினில் இருப்பதையும் இல்லாததையும்

பாட்டினில் நானேற்ற பவித்ரமாய் எனக்கு தந்துவிடு!

இந்நாட்டின் நற்கதையை எளியோரும் புரியும்படி

பண் ஆற்றல் பலம்பெற பாதையிலே பதித்துவிடு!

வாசி வாசி என வானுயர்ந்த பண்புதனை

சிவா, சிவா என சிந்தனையில் ஏற்றிவிடு!

புல் அவன்தான் பூ அவன்தான் எனபுதிய

புதிய சேதிகளை பூலோகம் போற்றிட

பொன்னெழுத்தால் பொறிக்க வை

பூ மகனின், நின்னடி சரணம்

நாள்தோறும் சரணம், சரணம்

ஸ்ரீ சங்கமா முனியன்

தேரோட்டிய திருமகனுக்கு தெளிவான வழிசொன்னவனே!

ஏரோட்டிய உழவனுக்கு, ஏற்றத்தை காணவைத்தவனே!

கார்காலம் முழுவதும் மழைபொழிந்து எங்கள்வளம் காப்பவனே!

நேர்வழி காண்பித்து நெறிமுறைவகுத்து நியாயத்திற்கு நிலைநின்றவனே!

வெள்ள மலையில் ஓடிவரும் தீர்த்தத்தை வீணாகமல் இருக்கவைத்தவனே!

சேருகின்ற நீரை தேக்கிவைக்க சேங்கைஊருணி கண்டவனே!

எங்களன்னை மஞ்சள்நீராட சேங்கை நீரை

கங்கையாக்கி புனிதம் புண்ணியம் சேர்த்தவனே!

எந்தவொரு வழக்கும் உன்சந்நதி முன்வந்தால்

ஏற்கின்ற தீர்ப்பினை உறுதிகொண்டு இறுதியாக்கியவனே!

சேங்கை ஊருணி, நாட்டாரின் தந்நியாய தீர்ப்பு

தான் தெரிந்தும் வழங்கிய, தர்மத்தின் தலைவனை தண்டித்தவனே!

மங்காப்புகழ் கொண்ட மங்காமுனியனே!

சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ செல்லாயி பருவதம்மாள்

செல்லமாய் வளர்ந்து எங்கள் செல்லாயி பருவதம்மா

ராக்காயி காத்த எங்களது அருவதம்மா

சொல்லாயி பக்தர்களை சொல்லவைத்த சூளுரைத்தம்மா

கல்லாயிருந்து கொண்டு நில்லாமல் காத்துவரும் நிலம்காத்த அம்மா

வாடுகிறது பயிர்என்றால் தேடும்மழை பொழிந்திடுவாய் பாடுகிறதுகுயில்

என்றால் பண்பலவும் காத்திடுவாய்

தேடுவது பக்தனென்றால் நாடும் நலமும் நல்கிடுவாய்

ஏரிடுதல் மாதம்முன் விளையும் விதை விதைத்துடுவாய்

மறுகணமே மனமாறியிருந்தால் இக்கணமே என இயம்பியவளே

எக்கணமே ஆனாலும் இடமறிந்து இயக்கியவளே

அக்கணமே சரிஎன்று அவர்தன் தலைக்கணத்தை ஒழித்தவளே

ஆறாத மனத்திற்கு அருமருந்துதந்து அடியவர்களை ஆதரித்தவளே

தாயே, உனதடி சரணம், சரணம், சரணம்

ஸ்ரீ பச்சையம்மன்

ஆற்றலை கொடுக்கும் அன்னையே

பேராற்றலை கொடுக்கும் பெரிய சக்தியம்மனே

தீரா ஆற்றல் கொடுக்கும் மகாசக்தி பச்சையம்மனே

நீறாற்றல் தந்து நிலங்கள் வளமாக்கியவளே

போர் ஆற்றல்தந்து புவியை வெற்றி கண்டவளே

அறிவாற்றல் தந்து இல்லங்களை செழுமையாக்கியவளே

நீர் (உன்) ஆற்றல் நான் பெற்று நிலையான கதை எழுத

திருவாற்றல் பெற்று நின் திருவடியை வணங்கி

நேர் ஆற்றல்கொண்ட உன் திருநாட்டை தேடிட

ஏர்(று) ஆற்றல் பெற்று இயங்குகிறேன் உன்னருளால்

வணங்குகிறேன் தாயே, உன்பாதம்

சரணம், சரணம், சரணம்

நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு கருங்கல் மந்தைசுவாமி கோவில், வெள்ளலூர்.



அருள்மிகு ஏழைகாத்த அம்மன் கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு ஏழைகாத்த அம்மன் குடியிருப்பு, வெள்ளலூர்.



அருள்மிகு வல்லடிகாரர் சுவாமி கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு சிவலூரணி அய்யனார் கோவில், வெள்ளலூர்



அருள்மிகு தொண்ணுத்தொட்டான் சுவாமி கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு உலகநாதன் சுவாமி கோவில், கூலிப்பட்டி



அருள்மிகு சேவுகமூர்த்தி அய்யனார், சிங்கம்புணரி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு சேவுகப்பெருமாள் சுவாமி கோவில், தேவன்பெருமாள்பட்டி



அருள்மிகு ஆரம்மாள் அம்மன் கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு செய்யாமுத்தையா அய்யனார் சுவாமி கோவில்



அருள்மிகு நாட்டார்மூர்த்தி அய்யனார் சுவாமி கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு முத்துபிடாரி அம்மன் கோவில்



அருள்மிகு கடம்பங்குடி அய்யனார் சுவாமி கோவில், புலிமலைப்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு சுகந்தவனேஸ்வரர் சுவாமி கோவில், பெரிச்சி கோவில், பெரிச்சியூர்



அருள்மிகு மங்கச்சி அய்யனார் சுவாமி கோவில், வெள்ளமலை



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு வெள்ளிப்பூசைக்காரன் சுவாமி கோவில்



அருள்மிகு தாழமடை கருப்பு கோவில், கள்ளராதினிபட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு திருவேஸ்வரமுடையார், ஸ்ரீ திருவேஸ்வரி அம்மன் கோவில்



அருள்மிகு பச்சை அம்மன் கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு மந்தைக்கருப்பண்ண சுவாமி கோவில், உறங்கான்பட்டி





அருள்மிகு ஆதிஅய்யனார் கோவில், கள்ளராதினிபட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு மந்தைக்கருப்பண்ண சுவாமி கோவில், குறிச்சிப்பட்டி



அருள்மிகு மந்தைக்கருப்பண்ண சுவாமி கோவில், அம்பலகாரன்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு மந்தைக்கருப்பண்ண சுவாமி கோவில், மலம்பட்டி



அருள்மிகு அடைக்கலம்காத்த பெரிய குளத்து அய்யனார் கோவில்



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு உசிலங்குளத்து அய்யனார் சுவாமி கோவில், வெள்ளகண்மாய்



அருள்மிகு ஏழு கன்னிமார்கள், கன்னிமார்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு காக்கனை சுவாமி கோவில், உ.புதுப்பட்டி



அருள்மிகு காஞ்சிவனம் சுவாமி கோவில், வெ.மலம்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு கிழாத்தொட்டு அய்யனார் சுவாமி கோவில்



அருள்மிகு வங்கொலைக்காரி அம்மன் கோவில் உச்சரிச்சான்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு புழுங்காவெட்டி முத்தையா சுவாமி கோவில்



அருள்மிகு முனிச்சாமி, முருகன் கோவில், புலிமலைப்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு சேங்கை ஊருணி கோவில் அ.கோவில்பட்டி



அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவில், நாட்டரசன்கோட்டை



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு காளமேகப்பெருமாள் அய்யனார் கோவில், உறங்கான்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

அருள்மிகு மந்தைச்சாமி கோவில், பழையூர்பட்டி



அருள்மிகு நாட்டு மந்தைகோவில், பழையூர்பட்டி



நாட்டு கோவில்களின் புகைப்படங்கள்

ஸ்ரீ ஏழைகாத்த அம்மனின் திருவிழா நிகழ்ச்சிகள்

பெரிய மது தூக்கி வருதல்





நாட்டின் முக்கிய இடங்களின் புகைப்படங்கள்

மது பொட்டல்



தலை மறை ஊத்து, பெரிய ஒக்கப்பட்டி



நாட்டின் முக்கிய இடங்களின் புகைப்படங்கள்

வெள்ளக்கண்மாய் கிடாவெட்டுமிடம்



முருகன்பட்டி மந்தை



நாட்டின் முக்கிய இடங்களின் புகைப்படங்கள்

வெள்ளமலை அருள்மிகு முனியாண்டி சுவாமி (நாட்டார் கூடுமிடம்)



வெள்ளலூர் நாட்டின் சிற்பி திரு.வீரணன் அம்பலகாரர் சமாதி



நாட்டின் நிகழ்வுகள்

ஸ்ரீ முனியாண்டி கோவில், காரமடை



காரமலையில் நாட்டுக்கூட்டம்



நாட்டின் நிகழ்வுகள்

ஸ்ரீ வளநாச்சியம்மன் கோவில், அரண்மனைசிறுவயல்



அரண்மனை சிறுவயலில் நாட்டுக்கூட்டம்



நாட்டின் நிகழ்வுகள்

அரண்மனை சிறுவயலில் நாட்டுக்கூட்டம்



அரண்மனை சிறுவயலில் நாட்டார்களுக்கு வரவேற்பு



நாட்டின் நிகழ்வுகள்

மகாண் கண்ட ஊருணியில் தீர்த்தமாடும் காட்சி





உ

சிவமயம்

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை

வையகதனிலேபெயர் கொண்டமகமாயி
மாதங்கி திருசூலிநீ
மனோன்மணிக்கெதிர் மாரியதிருப்பராசக்தி
வளர்கின்ற பரிபூரணி
தையலேஎன்னாளும் சத்தியம்தவறாத
தயாபரு கிருபாகரி
தரணிதனில்மழை இல்லாமல்வெகுஜனம்
தயங்கியே மயங்குறார்கள்
அய்யன்மநதையன் அரிகரன்புத்திரன்
அருள்வல்ல முத்தையனும்
எங்கும்நிறைந்த ஏகாபராசக்தியே
ஏகவல்லி தாயாரே
மெய்யானசக்தியே எங்கள்கலிதீரவே
எங்களைக் காத்தருளும்
மிகுதியாய் விளையவுங் கிருபைசெய்
ஏழைகாத்தம்மை யுமையே

ஸ்ரீ வல்லடி கார சுவாமி விருத்தம்

வீருயர்ந்த மெய்யனும் விமலபாலன்
வில்லம்பு வலைதடி வில்லிருப்புலக்கை
போர்உதவும் எரிஈட்டி வல்லயங்கள்
பொருந்துகின்றவாகன நற்புரவியேறி
காருலவும் வெள்ளமலை வேட்டையாடி
கனநாட்டார் அனைவோரும் கருணைகூர்ந்து
சீருலவும் வெள்ளலூர் அமர்ந்திலங்கும்
செல்வவல்லடி சிந்தைகொள்வோம்

ஸ்ரீ ஏழைகாத்தம்மன் மதுத்திருவிழாக்கும்மி

தன்னே நன்னே நானே நன்னே தன்னே நனனே நானே நன்னே
முந்தி முந்தி விநாயகரே தன்னே நன்னே நானே நன்னே
முருக நல்ல சரஸ்வதியே தன்னே நன்னே நானே நன்னே
கந்தருக்கு முன் பிறந்த தன்னே நன்னே நானே நன்னே
கணபதியே முன்னடவாய் தன்னே நன்னே நானே நன்னே
தொந்தி நல்ல வயிற்றோனே தன்னே நன்னே நானே நன்னே
தொப்பை நல்ல கணபதியே தன்னே நன்னே நானே நன்னே
காத்தருள வேணுமையா தன்னே நன்னே நானே நன்னே
கணபதியே காப்பாமே தன்னே நன்னே நானே நன்னே
பாடறியேன் படிப்பறியேன் தன்னே நன்னே நானே நன்னே
படிப்புவகை நானறியேன் தன்னே நன்னே நானே நன்னே
வாணிநல்ல சரஸ்வதியே தன்னே நன்னே நானே நன்னே
வாக்கில்நல்ல குடிஇருந்து தன்னே நன்னே நானே நன்னே
நாவில்நல்ல எழுதவேணும் தன்னே நன்னே நானே நன்னே
நற்றமிழைப் பாடுதற்கு தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்த அம்மையாரே தன்னே நன்னே நானே நன்னே
எங்கள்குல தேவியரே தன்னே நன்னே நானே நன்னே
என்னாவில்நல்ல குடிஇருக்க தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியே துணைஇருப்பாய் தன்னே நன்னே நானே நன்னே
முத்துநல்ல ராக்காயி தன்னே நன்னே நானே நன்னே
முத்தமிழை யுரைக்கவேணும் தன்னே நன்னே நானே நன்னே

பாடுகிறேன் உன்கதையை தன்னே நன்னே நானே நன்னே
பராசக்தி துணைஇருப்பாய் தன்னே நன்னே நானே நன்னே
பாரளந்தார் தங்கையரே தன்னே நன்னே நானே நன்னே
பக்கத்துணை இருந்து தன்னே நன்னே நானே நன்னே
சொல்பிழைகள் பொருள்குற்றம் தன்னே நன்னே நானே நன்னே
துலங்குகின்ற அட்சரமும் தன்னே நன்னே நானே நன்னே
என்னபிழை இருந்தாலும் தன்னே நன்னே நானே நன்னே
இசைஇணைத்து தந்திடுவாய் தன்னே நன்னே நானே நன்னே
அன்பு நல்லமனம்பொருத்து தன்னே நன்னே நானே நன்னே
ஆதரிக்க வேணுமம்மா தன்னே நன்னே நானே நன்னே
பாடநல்ல தொடங்குகிறனே் தன்னே நன்னே நானே நன்னே
பார்வதியே துணைஇருப்பாய் தன்னே நன்னே நானே நன்னே
கன்னி நல்லமக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
கைத்தாளம் போடுங்கள் தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி அம்பிகையே தன்னே நன்னே நானே நன்னே
சிந்தைதனில் துதித்துநீங்க தன்னே நன்னே நானே நன்னே
செல்வமகள் சுந்தரிக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஒற்றுமையாய் பாடுங்களே தன்னே நன்னே நானே நன்னே
உமையாள் அந்தஅம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
கோலகலமாகவே தான் தன்னே நன்னே நானே நன்னே
குலவையிட்டுப் பாடுங்களே தன்னே நன்னே நானே நன்னே
கும்மிநல்ல கொட்டுங்களே தன்னே நன்னே நானே நன்னே

குலமகளாய் தேவியற்கு தன்னே நன்னே நானே நன்னே
கதையெடுத்துப் பாடுகிறேன் தன்னே நன்னே நானே நன்னே
கனகவல்லி அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஏலே ஏலோ ஏலே ஏலோ ஏலே ஏலோ ஏலே ஏலோ
தெய்வலோகந்தனிலிருந்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஸ்ரீதேவி அம்பிகையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
புனர்ஜென்மம் எடுப்பதற்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
பூவையந்த யீஸ்வரியும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
புறப்பிட்டு வருகிறாளே ஏலே ஏலோ ஏலே ஏலோ
பொற்கொடியாள் மாதுமையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அங்கயர்க்கண் ஐயரிடம் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அன்னையரும் விடைபெற்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
பூலோகம் வந்துதித்தாள் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பூவையந்த பார்வதியும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அப்போது பாண்டியமன்னருமே ஏலே ஏலோ ஏலே ஏலோ
அருந்தவசு செய்திருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பிள்ளைவரம் வேணுமென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
பேரரசர் தவமிருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மைந்தன்வர வேணுமென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
மன்னரவர் தவசிருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
குழந்தைவரம் வேணுமென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
குலமகளே வேண்டியவர் ஏலே ஏலோ ஏலே ஏலோ

வேதியரை வரவழைத்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
வேண்டிமிக தவசியிருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அக்கினியைத்தான் வளர்த்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
அருந்தவசு செய்திருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அப்போது அம்பிகையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஆகாயமாக வந்துதித்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
மர்மமாக வந்துதித்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
மாதுநல்ல உமையவளும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அக்கினியில் பிறந்துதித்து ஆதிபராசக்தியரும்
ஆதி பராசக்தியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பிறந்ததொரு பிள்ளைதனை ஏலே ஏலோ ஏலே ஏலோ
பேரரசர் தானெடுத்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
பெரும்மகிழ்ச்சி யடைந்தவர் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பெயர் சூட்டவேணுமென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
பெருந்தேவி அம்பிகைக்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
மாணிக்கத் தொட்டிகட்டி ஏலே ஏலோ ஏலே ஏலோ
வயிரமணி தானணிந்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
வயிரமணி தொட்டியிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
வளர்மதியைத் தாலாட்டி ஏலே ஏலோ ஏலே ஏலோ
தெய்வமாய் பிறந்துவந்த ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஸ்ரீதேவி உமையவர்க்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
மீனாட்சியென்று பெயர்சூட்டி ஏலே ஏலோ ஏலே ஏலோ

மெல்லியந்த பார்வதிக்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
வளர்ந்து வரும் நாளையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
மாதுமையாள் பருவமாகி ஏலே ஏலோ ஏலே ஏலோ
சாந்திநல்ல முகூர்த்தங்களும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
சாம்பிராணி வாசகிக்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
நடத்திவைத்து மன்னருமே ஏலே ஏலோ ஏலே ஏலோ
நாயகனும் கொலுவிருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
கொலுவிருந்து மன்னவரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
கோபாலன் தங்கையற்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
மணிவண்ணன் தங்கையற்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
மணமுடிக்க வேணுமென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
மனதிலெண்ணி இருக்கையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
மணிவண்ணன் மைத்துனரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மாறுவேடம் தான்தரித்த ஏலே ஏலோ ஏலே ஏலோ
மதுரைநகர் வந்துதித்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
சொக்கநாத சுவாமியாக ஏலே ஏலோ ஏலே ஏலோ
சுந்தரரும் வந்துதித்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பார்த்துழந்த பாண்டியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பரவசமாய்தான் மகிழ்ந்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
வந்தவரை வரவழைத்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஆசனத்தில் அமரவைத்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
உபசரணைகள் செய்துமன்னர் ஏலே ஏலோ ஏலே ஏலோ

உண்மைசொல்லி பாண்டியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
திருமணம்தான் முடிக்க ஏலே ஏலோ ஏலே ஏலோ
இருவருமே சம்மதித்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
அந்ததிருமணத் தேதியையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
நிச்சயித்து இருவருமே ஏலே ஏலோ ஏலே ஏலோ
சித்திரை மாதத்திலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
சீரான பௌரணையில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தேவியந்த சுந்திரிக்கும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
திருச்சடையான சங்கருக்கும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
நடக்குதங்கே கல்யாணம் ஏலே ஏலோ ஏலே ஏலோ
நகராட்சிபெற்ற மதுரையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
மாமதுரைபட்டணத்தில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மன்னரந்த பாண்டியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மணமாலை சூட்டுகிறா ஏலே ஏலோ ஏலே ஏலோ
மீனாட்சி சொக்கருக்கும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மெல்லியந்த பார்வதிக்கும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மேகவர்ணன் மைத்துணரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மீனாட்சி அம்பிகையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அரசாளவேணு மென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
அரசரந்த பாண்டியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தொல்புவியை ஆள்வதற்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
துவக்கிவைத்தார் பாண்டிய மன்னவரும் ஏலோ ஏலே

மதுரைநகர் ஆண்டிருக்க ஏலே ஏலோ ஏலே ஏலோ
மீனாட்சி சொக்கருக்கும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மகுடமுடி சூட்டிவைத்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மன்னரந்த பாண்டியரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மனமகிழ்ந்து எல்லோரையும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
மகிழ்ச்சியுடன் வரவழைத்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
விருந்துண்க வாங்களென்று ஏலே ஏலோ ஏலே ஏலோ
வேண்டிமிக அழைத்திடவே ஏலே ஏலோ ஏலே ஏலோ
விருந்திணரைக் காணாமல் ஏலே ஏலோ ஏலே ஏலோ
விசனப்படு நிற்கையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
அப்போது குண்டோதரன் ஏலே ஏலோ ஏலே ஏலோ
நானிருக்கேன் விருந்தினருக்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
சமைத்து பலவகைகளெல்லாம் ஏலே ஏலோ ஏலே ஏலோ
படைத்தார்கள் விருந்தினருக்கு ஏலே ஏலோ ஏலே ஏலோ
பட்சமுடன் தான்புசித்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
தாகம்வெறி கொண்டுமவன் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தவிக்கின்ற வேளையில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஏரிகுளம் கிணறுகளில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
இருக்கின்ற தண்ணீரெல்லாம் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அருந்திவிட்டான் ஓர் நொடியில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அரக்கனந்த குண்டோதரன் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தாகமதுதீராமல் ஏலே ஏலோ ஏலே ஏலோ

தத்தளித்து ஓடிவந்தான் ஏலே ஏலோ ஏலே ஏலோ
அப்போது சிவனாரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
சிந்தைமிக நொந்துருகி ஏலே ஏலோ ஏலே ஏலோ
மதுரைநல்ல வடகரையில் ஏலே ஏலோ ஏலே ஏலோ
கையைவைத்தார் சிவனாரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
கடலாறு தான்பெருகி ஏலே ஏலோ ஏலே ஏலோ
கரைதிரண்டு வருகையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஆற்றுவெள்ளம் தான்பெருகி ஏலே ஏலோ ஏலே ஏலோ
அலைமோதி வருகையிலே ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஓடிவந்து குண்டோதரன் ஏலே ஏலோ ஏலே ஏலோ
பருகினான் நீர்அதனை ஏலே ஏலோ ஏலே ஏலோ
தாகந்தனை தீர்த்துமவன் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தவிப்பாறி வீற்றிருந்தான் ஏலே ஏலோ ஏலே ஏலோ
ஆறுதானே உண்டாக்கி ஏலே ஏலோ ஏலே ஏலோ
அரண்சிவனார் மனமகிழ்ந்து ஏலே ஏலோ ஏலே ஏலோ
வைகையென்று பெயர் சூட்டி ஏலே ஏலோ ஏலே ஏலோ
மதுரைநகர் வளம்பெறவே ஏலே ஏலோ ஏலே ஏலோ
மீனாட்சி பட்டணமாய் ஏலே ஏலோ ஏலே ஏலோ
சக்திநல்லாள் வாழ்ந்திருக்கு மாமதுரை ஏலே ஏலோ
திருச்சடையான் சங்கரரும் ஏலே ஏலோ ஏலே ஏலோ
தெய்வலோகம் சென்றேகி ஏலே ஏலோ ஏலே ஏலோ
சிறப்புடனே வாழ்ந்திருந்தார் ஏலே ஏலோ ஏலே ஏலோ
சிவபெருமான் அங்கயர்க்கண்ஏலே ஏலோ ஏலே ஏலோ

ஸ்ரீ ஏழைகாத்தம்மன் வரலாறு

தன்னே நன்னே நானே நன்னே தன்னே நன்னே நானே

அக்காள் தங்கை ஏழுபேரில் தன்னே நன்னே நானே

இளையவளாம் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே

ஆகாயமார்க்கமாக வந்து தன்னே நன்னே நானே

அங்கயர்க்கண் தேவியரும் தன்னே நன்னே நானே

வளர்மதியாள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே

வந்து கொண்டிருக்கையிலே தன்னே நன்னே நானே

வளமான நாட்டைக்காக்க தன்னே நன்னே நானே

வாழ்வரசி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே

வீரபாண்டிய நல்லூரான தன்னே நன்னே நானே

வெள்ளலூரைக்காக்க வென்று தன்னே நன்னே நானே

வேல்விழியாள் கண்ணழகி தன்னே நன்னே நானே

வீற்றிருந்தாள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே

மக்கள் குடிகாப்பதற்கு தன்னே நன்னே நானே

மாதுமையாள் வீற்றிருந்தாள் தன்னே நன்னே நானே

நாட்டிலுள்ள தலைவரிடம் தன்னே நன்னே நானே

நாயகியும் யேதுரைப்பாள் தன்னே நன்னே நானே

அருள்கொடுத்து அம்பிகையும் தன்னே நன்னே நானே

அனைவரிடம் உரைத்திடுவாள் தன்னே நன்னே நானே

ஈரேழுபாருளள மட்டும் தன்னே நன்னே நானே

இந்நாட்டில் நானிருந்து தன்னே நன்னே நானே

இயற்கைவளம் தான்பெருக்கி தன்னே நன்னே நானே

அங்கிருந்து காத்திடுவேன் தன்னே நன்னே நானே
தாரணியை ஆண்டிருந்து தன்னே நன்னே நானே
தகுந்த வரம் நான் தருவேன்னு தன்னே நன்னே நானே
என்னாளும் காத்திருப்பேனென்று தன்னே நன்னே நானே
வரங்கள்பல தான்கொடுத்து தன்னே நன்னே நானே
வாழையந்த ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே
வரிதிசொல்லி நாட்டார்க்கு தன்னே நன்னே நானே
வாக்குறுதி தான்கொடுத்து தன்னே நன்னே நானே
உறுதிசொல்லி உமையவளும் தன்னே நன்னே நானே
உத்தமியும் யேதுரைப்பாள் தன்னே நன்னே நானே
வருடத்தில் ஒருநாளில் தன்னே நன்னே நானே
வாகுடனே எநததனுக்கு தன்னே நன்னே நானே
கன்னி நல்லமாதத்திலே தன்னே நன்னே நானே
கனமங்கள வாரமதில் தன்னே நன்னே நானே
முதலாவது வாரத்திலே தன்னே நன்னே நானே
மூன்றுஐந்து நாளுமிட்டு தன்னே நன்னே நானே
மதுக்குடம் தானெடுத்து தன்னே நன்னே நானே
மாபெரும் மக்களெல்லாம் தன்னே நன்னே நானே
பெரியமது தானெடுத்து தன்னே நன்னே நானே
பேர்பெரிய நாட்டாரும் தன்னே நன்னே நானே
ஏழுமது தானெடுத்து தன்னே நன்னே நானே
எந்தன்பின்னால் வரவேணும் தன்னே நன்னே நானே
எண்ணவொண்ணாப் பெண்கள்மது தன்னே நன்னே நானே

எடுக்கவேணும் எந்தனுக்கு தன்னே நன்னே நானே
கொண்டு வந்து சேர்க்கவேணும் தன்னே நன்னே நானே
கோமகனே எந்தவனுக்கு தன்னே நன்னே நானே நன்னே
கூறிநல்ல மாதுமையும் தன்னே நன்னே நானே நன்னே
குடிஇருந்து காத்திருந்தாள் தன்னே நன்னே நானே நன்னே
இசைந்துகொண்டு நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்தவளே நமஸ்க்கரித்து தன்னே நன்னே நானே நன்னே
கன்னிநல்ல மாதத்திலே தன்னே நன்னே நானே நன்னே
கனமங்கள வாரமதில் தன்னே நன்னே நானே நன்னே
முதல்நல்ல வாரமதில் தன்னே நன்னே நானே நன்னே
முக்கியாய் நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்த அம்மனுக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரிக்கு நாளுமிட தன்னே நன்னே நானே நன்னே
வெள்ளலூர் நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
கரைக்கு இரண்டு அம்பலங்கள் தன்னே நன்னே நானே நன்னே
இருபத்திரண்டு அம்பலம் தன்னே நன்னே நானே நன்னே
இளங்கச்சிகள் அனைவர்களும் தன்னே நன்னே நானே நன்னே
ஏகபோக மாகவேதான் தன்னே நன்னே நானே நன்னே
இயங்கிவந்து நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
வெள்ளலூர் மந்தையிலே தன்னே நன்னே நானே நன்னே
வந்துநல்ல கூட்டமிட்டு தன்னே நன்னே நானே நன்னே
குலமகளே வேண்டிமிக தன்னே நன்னே நானே நன்னே
கூட்டங்கள் கூடிஅங்கே தன்னே நன்னே நானே நன்னே

அக்கினியில் பிறந்தவளே தன்னே நன்னே நானே நன்னே
ஆத்தாள் நல்லயீஸ்வரியை தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையை நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
அடிபணிந்து தெண்டநிட்டு தன்னே நன்னே நானே நன்னே
மணிவண்ணன் தங்கையரை தன்னே நன்னே நானே நன்னே
மாதாவைத்தான் வணங்கி தன்னே நன்னே நானே நன்னே
வாழையந்த ஏழைகாத்தவளே தன்னே நன்னே நானே நன்னே
வணங்கி நன்றாய்நாட்டார் தன்னே நன்னே நானே நன்னே
பட்டத்து அம்பலமும் தன்னே நன்னே நானே நன்னே
பதவி பெற்ற பெரிய அம்பலம் தன்னே நன்னே நானே நன்னே
பதினொரு கரைப்பேரும் தன்னே நன்னே நானே நன்னே
பலகுடிகள் மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
மண்டலத்தில் மூண்டவாசி தன்னே நன்னே நானே நன்னே
மகிழ்ந்திருக்கும் வேங்கைப்புலி தன்னே நன்னே நானே நன்னே
அன்புடையோர் சமட்டியும் தன்னே நன்னே நானே நன்னே
அடுத்திருக்க நய்க்கானும் தன்னே நன்னே நானே நன்னே
நாட்டிலுள்ள சாவடங்கி தன்னே நன்னே நானே நன்னே
நல்லதொரு வெக்காலி தன்னே நன்னே நானே நன்னே
தேட்டமுடன் சலுப்புலியும் தன்னே நன்னே நானே நன்னே
திருமானும் செம்புலியும் தன்னே நன்னே நானே நன்னே
நண்டனுடன் கோப்பனுமே தன்னே நன்னே நானே நன்னே
நல்லதொரு பூலான் மழவராயனும் தன்னே நன்னே நானே நன்னே
பட்டறைக் கரைப்பேரும் தன்னே நன்னே நானே நன்னே

பலகுடிகள் மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே

மந்தைதனில் கூட்டம் வைத்து தன்னே நன்னே நானே நன்னே

மகாஜனங்கள் அனைவர்களும் தன்னே நன்னே நானே நன்னே

மாதுநல்லாள் அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே

மங்களநாள் சூட்டுதற்கு தன்னே நன்னே நானே நன்னே

தாரணியை ஆண்டிருக்கும் தன்னே நன்னே நானே நன்னே

தங்கம்நல்லாள் சுந்தரிக்கு தன்னே நன்னே நானே நன்னே

நாட்டிலுள்ள சபையோர்க்கு தன்னே நன்னே நானே நன்னே

நாச்சியாரும் திருவருள்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே

நாட்டாரும் மனமகிழ்ந்து தன்னே நன்னே நானே நன்னே

நமஸ்க்கரித்து மாதுமையை தன்னே நன்னே நானே நன்னே

தாழ்பணிந்து அம்பிகையை தன்னே நன்னே நானே நன்னே

ஏழுநல்ல பானைவைத்து தன்னே நன்னே நானே நன்னே

எடுத்துவந்து நெல்லதனே தன்னே நன்னே நானே நன்னே

நிறைநாழி தானெடுத்து தன்னே நன்னே நானே நன்னே

ஆண்டாள்நல்லாள் அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே

ஆண்டவனைப் போற்றிசெய்து தன்னே நன்னே நானே நன்னே

அளந்துநல்ல போடுகிறார் தன்னே நன்னே நானே நன்னே

அதிகாரம்பெற்ற பெரியஅம்பலம் தன்னே நன்னே நானே நன்னே

கச்சைகட்டி சாமியாடி தன்னே நன்னே நானே நன்னே

கனகவல்லி அம்பிகையை தன்னே நன்னே நானே நன்னே

கும்பிட்டு குலவையிட்டு தன்னே நன்னே நானே நன்னே

குலமகளைப்போற்றி செய்த தன்னே நன்னே நானே நன்னே

கும்பலாக நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
கூட்டங்கள்கூடி அங்கே தன்னே நன்னே நானே நன்னே
தேவசபைக் கூட்டங்களும் தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவியுட சன்னதியில் தன்னே நன்னே நானே நன்னே
காரணங்கள் தான்பிடித்து தன்னே நன்னே நானே நன்னே
கனத்ததொரு நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியை நமஸ்க்கரித்து தன்னே நன்னே நானே நன்னே
மூன்றுஜந்து நாளுமிட்டு தன்னே நன்னே நானே நன்னே
முடிவணங்கித் தெண்டநிட்டு தன்னே நன்னே நானே நன்னே
எண்ணிப் பதினைந்துநாள் வரைக்கும் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைபங்கை போற்றிசெய்து தன்னே நன்னே நானே நன்னே
நாடிருக்கும் எல்லைஎங்கும் தன்னே நன்னே நானே நன்னே
நலமுடனே விரதம்பூண்டு தன்னே நன்னே நானே நன்னே
ஐந்துநல்ல மாகாணத்தில் தன்னே நன்னே நானே நன்னே
அடங்கியதோர் பட்டியெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகைக்கு விரதம்பூண்டு தன்னே நன்னே நானே நன்னே
அடிபணிந்து தினந்தினமும் தன்னே நன்னே நானே நன்னே
ஆடுகுட்டி அறுக்காமல் தன்னே நன்னே நானே நன்னே
ஐக்கியமாய் நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
பச்சைநெல்லுகள் குத்தாமல் தன்னே நன்னே நானே நன்னே
படியளந்தார் தங்கையற்கு தன்னே நன்னே நானே நன்னே
பக்தி விஸ்வாசமுடன் தன்னே நன்னே நானே நன்னே
பணிந்துமிக மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே

மாமிசங்கள் புசிக்காமல் தன்னே நன்னே நானே நன்னே
மகாஜனங்க ளெல்லோரும் தன்னே நன்னே நானே நன்னே
உற்சாகமாகவே தான் தன்னே நன்னே நானே நன்னே
உமயவளைப் போற்றி செய்து தன்னே நன்னே நானே நன்னே
ஒற்றுமையாய் எல்லோரும் தன்னே நன்னே நானே நன்னே
உகந்துமந்த நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
சக்திநல்லாள் ஈஸ்வரியை தன்னே நன்னே நானே நன்னே
சகலருமே போற்றி செய்து தன்னே நன்னே நானே நன்னே
சாம்பிராணி வாசகியை தன்னே நன்னே நானே நன்னே
தாழ்பணிந்து அம்பிகையை தன்னே நன்னே நானே நன்னே
எட்டாவது நாளதிலே தன்னே நன்னே நானே நன்னே
எடுத்துவந்து பானைகளை தன்னே நன்னே நானே நன்னே
போட்டதொரு நெல்லதனை தன்னே நன்னே நானே நன்னே
முளைப்பாரி தானெடுத்து தன்னே நன்னே நானே நன்னே
ஏழுநல்ல மதளைகளும் தன்னே நன்னே நானே நன்னே
எடுத்துக்கொண்டு வருகிறார்கள் தன்னே நன்னே நானே நன்னே
சுனை அருவிப்பாறையிலே தன்னே நன்னே நானே நன்னே
சூழ்ந்து வந்து நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
உலர்த்தி நன்றாய் முளைப்பதனை தன்னே நன்னே நானே நன்னே
உமையவர்க்கு கொண்டுவந்து தன்னே நன்னே நானே நன்னே
கள்ளுமது தனைச்சேர்க்க தன்னே நன்னே நானே நன்னே
கனத்ததொரு நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
சேர்த்து நல்லவைத்திருந்து தன்னே நன்னே நானே நன்னே

ஸ்ரீதேவி அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஆதித்த வாரமதில் தன்னே நன்னே நானே நன்னே
அம்பலச்சோறு ஆக்கிவைத்து தன்னே நன்னே நானே நன்னே
மலட்டாடு தானறுத்து தன்னே நன்னே நானே நன்னே
மாதங்கியாள் அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
பக்தியுடன் தான்படைத்து தன்னே நன்னே நானே நன்னே
பரமேஸ்வரி அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
இருபத்திரண்டு அம்பலமும் தன்னே நன்னே நானே நன்னே
இளங்கச்சிகள் அனைவர்களும் தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையாள் வாசலிலே தன்னே நன்னே நானே நன்னே
அனைவர்களும் வந்து கூடி தன்னே நன்னே நானே நன்னே
காரணப்பிரகாரம் தன்னே நன்னே நானே நன்னே
கனத்ததொரு பூஜாரியும் தன்னே நன்னே நானே நன்னே
பதினொரு கரைப்பேருக்கும் தன்னே நன்னே நானே நன்னே
பறிமாறுகிறார்பட்டரந்த பூசாரி தன்னே நன்னே நானே நன்னே
பாங்குடனே எல்லோருக்கும் தன்னே நன்னே நானே நன்னே
பறிமாறிதான் முடித்து தன்னே நன்னே நானே நன்னே
மூன்றாவது வாரமதில் தன்னே நன்னே நானே நன்னே
முக்கியமாய் நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
மங்கள வாரமதில் தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் ஈஸ்வரிக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்த அம்மனுக்கு தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரிக்கு திருநாளாம் தன்னே நன்னே நானே நன்னே

நடத்துதற்கு நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
நாதஸ்வர கச்சேரியும் தன்னே நன்னே நானே நன்னே
நாட்டியங்கள் சதுராட்டம் தன்னே நன்னே நானே நன்னே
தாயினத்து அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
இன்னிசை கச்சேரியும் தன்னே நன்னே நானே நன்னே
இசைகூவி முழக்கமிட தன்னே நன்னே நானே நன்னே
மேளம்தாளம் முழக்கங்களும் தன்னே நன்னே நானே நன்னே
மெல்லி ஏழைகாத்தாளுக்கு தன்னே நன்னே நானே நன்னே
சங்கீத முழக்கங்களும் தன்னே நன்னே நானே நன்னே
சக்திநல்லாள் யீஸ்வரிக்கு தன்னே நன்னே நானே நன்னே
தம்பூறாவீணைகளும் தன்னே நன்னே நானே நன்னே
சங்கரனார் தேவியற்கு தன்னே நன்னே நானே நன்னே
கொம்புதப்பு முழக்கங்களும் தன்னே நன்னே நானே நன்னே
கோபாலன் தங்கையற்கு தன்னே நன்னே நானே நன்னே
கூவிநல்ல முழக்கமிட தன்னே நன்னே நானே நன்னே
கோவிந்தனார் தங்கையற்கு தன்னே நன்னே நானே நன்னே
அதிர்வேட்டு புகை வேட்டு தன்னே நன்னே நானே நன்னே
அலறுதங்கே அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
அவுட்டு நல்லவானங்களும் தன்னே நன்னே நானே நன்னே
ஆகாயத்தில் முழங்கிடவே தன்னே நன்னே நானே நன்னே
மூஞ்சுறு வானங்களும் தன்னே நன்னே நானே நன்னே
முழங்குதங்கே அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
தோரண வானங்களும் தன்னே நன்னே நானே நன்னே

துலங்குதங்கே மாதுமைக்கு தன்னே நன்னே நானே நன்னே
மத்தாப்பு ஜோதிமின்ன தன்னே நன்னே நானே நன்னே
மாதங்கியாள் ஈஸ்வரிக்கு தன்னே நன்னே நானே நன்னே
இத்தணை வினோதங்களும் தன்னே நன்னே நானே நன்னே
இசைபாடி முழக்கமிட தன்னே நன்னே நானே நன்னே
அப்போது நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
அமர்ந்துபர்ண சாலையிலே தன்னே நன்னே நானே நன்னே
பர்ணசாலைக் குள்ளிருந்து தன்னே நன்னே நானே நன்னே
பாங்குடனே கூட்டமிட்டு தன்னே நன்னே நானே நன்னே
இருபத்திரண்டு அம்பலமும் தன்னே நன்னே நானே நன்னே
இளங்கச்சிகள் அனைவர்களும் தன்னே நன்னே நானே நன்னே
பட்டறைக் கரைப்பேரும் தன்னே நன்னே நானே நன்னே
பலகுடிகள் மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
வண்ணலெட்சம் மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
வந்துகூடி அனைவர்களும் தன்னே நன்னே நானே நன்னே
கோடாகோடி மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
கும்பலாக வந்துகூடி தன்னே நன்னே நானே நன்னே
பூக்கடைகள் பொறிக்கடையில் தன்னே நன்னே நானே நன்னே
குவிந்து கொண்டிருக்கையலே தன்னே நன்னே நானே நன்னே
மதுரைநல்ல மல்லிகைப்பூ தன்னே நன்னே நானே நன்னே
மணக்குதிங்கே மாதுமைக்கு தன்னே நன்னே நானே நன்னே
உச்சிநல்ல மதியமதில் தன்னே நன்னே நானே நன்னே
ஒருமணி ஆனவுடன் தன்னே நன்னே நானே நன்னே

சிவலூரணி தீர்த்தமதைக் தன்னே நன்னே நானே நன்னே
கொண்டுவர நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
செல்கிறார்கள் மதளைகளும் தன்னே நன்னே நானே நன்னே
கொண்டு வந்து தீர்த்தமதை தன்னே நன்னே நானே நன்னே
செப்புக்குடம் தனைநிறப்பி தன்னே நன்னே நானே நன்னே
சிறப்பித்து அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே
அப்போது நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையைத் துதித்தெழுந்து தன்னே நன்னே நானே நன்னே
எழுந்துவந்து நாட்டாரும் தன்னே நன்னே நானே நன்னே
ஏகவல்லி தாயார்க்கு தன்னே நன்னே நானே நன்னே
மாத்துகளும் தான்விரித்து தன்னே நன்னே நானே நன்னே
மதுவையும் எடுத்துவைத்து தன்னே நன்னே நானே நன்னே
அப்போது பெரியஅம்பலம் தன்னே நன்னே நானே நன்னே
அருள்களையும் கொண்டுமவர் தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் சுந்தரிக்கு தன்னே நன்னே நானே நன்னே
மகுடமுடி சூட்டிகிறார் தன்னே நன்னே நானே நன்னே
தூக்கிநல்ல சிரசில்வைக்க தன்னே நன்னே நானே நன்னே
துதித்தெழுந்து வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
துந்திமியாள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
துள்ளித்துள்ளி வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
துணைஇருந்து காப்பதற்கு தன்னே நன்னே நானே நன்னே
சொர்ணவல்லி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
ஏந்திழையாள் சிரசில்வைத்து தன்னே நன்னே நானே நன்னே

ஏந்திக்கொண்டு வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
ஏழு நல்லமதுக்காரி தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியாள் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
அன்னநடை நடந்து தன்னே நன்னே நானே நன்னே
அருங்கிளியாள் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
இமயம்நல்ல கிடுகிடென்ன தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்தாள் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
கோலாகல மாகவேதான் தன்னே நன்னே நானே நன்னே
கொஞ்சிக்கொஞ்சி வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
முத்துவர்ணப் பட்டுடுத்தி தன்னே நன்னே நானே நன்னே
முத்தம்மாளும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
மந்தைநல்ல வாசலுக்கு தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
மந்தைநல்ல கருப்பணணை தன்னே நன்னே நானே நன்னே
வலம்சுத்தி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
கருங்கல்லு கருப்பருக்கு தன்னே நன்னே நானே நன்னே
கருங்கிடாய்தான் கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே
அங்குபுள்ளிகளும் கொடுத்துமவள் தன்னே நன்னே நானே நன்னே
திசைநோக்கி செல்கிறாளே தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
பூவையந்த ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
எங்கும் நிறைந்தவளாம் தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி மாதுமையாள் தன்னே நன்னே நானே நன்னே

கோலாகல மாகவேதான் தன்னே நன்னே நானே நன்னே

குலவை இட்டுப்பாடுங்களே தன்னே நன்னே நானே நன்னே

கோடாகோடி மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே

கொண்டுவந்து மாலைகளை தன்னே நன்னே நானே நன்னே

எதிர்நோக்கி நிற்கிறார்கள் தன்னே நன்னே நானே நன்னே

ஈஸ்வரியாள் வருகிறதை தன்னே நன்னே நானே நன்னே

வழிநோக்கி வந்தவுடன் தன்னே நன்னே நானே நன்னே

வண்ண வண்ண மாலைகளை தன்னே நன்னே நானே நன்னே

மக்களுமே அம்பிகைக்கு தன்னே நன்னே நானே நன்னே

மலர்மாலை சூட்டிடவே தன்னே நன்னே நானே நன்னே

சூட்டிமிகத் தான்வணங்கி தன்னே நன்னே நானே நன்னே

சுந்தரியே காருமென்று தன்னே நன்னே நானே நன்னே

வாழ்த்தி நல்லவரங்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே

வாழ்வரசி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே

பிள்ளைஇல்லா மக்களுக்கு தன்னே நன்னே நானே நன்னே

பெறும்வரங்கள் தான்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே

மைந்தனில்லா மக்களுக்கு தன்னே நன்னே நானே நன்னே

மாதுமையாள் வரங்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே

குழந்தைஇல்லா மக்களுக்கு தன்னே நன்னே நானே நன்னே

குறைகளெல்லாம் தீர்த்துவைத்து தன்னே நன்னே நானே நன்னே

குலமகளும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே

கோபாலன் தங்கையரும் தன்னே நன்னே நானே நன்னே

ஆடிப்பாடி வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே

ஆதிசேடன் முடிநடுங்க தன்னே நன்னே நானே நன்னே
சித்தனுட கண்மாய்வழி தன்னே நன்னே நானே நன்னே
செல்வமகள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
சீரிச்சீரி வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி ஏழைபங்காள் தன்னே நன்னே நானே நன்னே
செட்டிநல்ல ஊரணியாம் தன்னே நன்னே நானே நன்னே
சேர்ந்ததொரு மதுப்பொட்டல் தன்னே நன்னே நானே நன்னே
தினகரனார் தங்கையவள் தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி வந்துநின்னு தன்னே நன்னே நானே நன்னே
எண்ணவொண்ணா மதுக்களையும் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்தாள் பார்வையிட்டு தன்னே நன்னே நானே நன்னே
கண்கொள்ளாம தளைகளை தன்னே நன்னே நானே நன்னே
கனகவல்லி பார்வையிட்டு தன்னே நன்னே நானே நன்னே
பூக்குடைகள் நிறைபுரிகள் தன்னே நன்னே நானே நன்னே
பூவையற்கு முன்னடக்க தன்னே நன்னே நானே நன்னே
பூரித்து வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
பொன்மாரி தான்பொழிய தன்னே நன்னே நானே நன்னே
கூட்டிக்கொண்டு வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
கோட்டநத்தம் வழியாக தன்னே நன்னே நானே நன்னே
கோட்டநத்தம் மண்டுவழி தன்னே நன்னே நானே நன்னே
குலவைபோட்டு ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
சிவகங்கை சாலைவழி தன்னே நன்னே நானே நன்னே
செல்வமகள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே

சிங்காரநடை நடந்து தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
வெள்ளக்கண்மாய் வழிதேடி தன்னே நன்னே நானே நன்னே
வீரம்மாளும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
வெள்ளநல்ல கண்மாய்க்குள்ளே தன்னே நன்னே நானே நன்னே
வெட்டுக்கிடாய் தான்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே
வேல்விழியாள் கண்ணழகி தன்னே நன்னே நானே நன்னே
வேல்சூலம் கைப்பிடித்து தன்னே நன்னே நானே நன்னே
மாயிநல்ல மகமாயி தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் ஏழைபங்கு தன்னே நன்னே நானே நன்னே
சொகுசான ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
சுந்தரியும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
பாளைநல்ல மதுக்காரி தன்னே நன்னே நானே நன்னே
பரமசிவன் தேவியரும் தன்னே நன்னே நானே நன்னே
பட்டத்து அரசியவர் தன்னே நன்னே நானே நன்னே
பராசக்தி ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
ஏழுநல்ல மதுக்காரி தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியாள் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
பாலுநல்ல மதுக்காரி தன்னே நன்னே நானே நன்னே
பரந்தாமன் தங்கையரும் தன்னே நன்னே நானே நன்னே
கள்ளுநல்ல மதுக்காரி தன்னே நன்னே நானே நன்னே
காரிகையாள் ஏழைபங்கு தன்னே நன்னே நானே நன்னே
ஒய்யார நடைநடந்து தன்னே நன்னே நானே நன்னே

உலகமாதா வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
அன்ன நடைநடந்து தன்னே நன்னே நானே நன்னே
அங்கயற்க்கண் தேவியரும் தன்னே நன்னே நானே நன்னே
ஆடிப்பாடி வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
ஆதிசேடன் முடிநடுங்க தன்னே நன்னே நானே நன்னே
ஆலவட்டம் தோரணமும் தன்னே நன்னே நானே நன்னே
அன்னையர்க்கு முன்னடக்க தன்னே நன்னே நானே நன்னே
சங்கீத மேளங்களும் தன்னே நன்னே நானே நன்னே
சதுராட்டம் முழங்கிடவே தன்னே நன்னே நானே நன்னே
பூக்குடைகள் நிறைபுரிகள் தன்னே நன்னே நானே நன்னே
பூவையர்க்கு முன்னேசெல்ல தன்னே நன்னே நானே நன்னே
பூரித்து வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
பொன்மாரி தான்பொழிய தன்னே நன்னே நானே நன்னே
நான்குசாலை எல்கையிலே தன்னே நன்னே நானே நன்னே
நாயகியும் வந்துநின்று தன்னே நன்னே நானே நன்னே
திருக்கண்ணு முன்புவந்து தன்னே நன்னே நானே நன்னே
ஸ்ரீதேவியந்த ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
மேற்கு முகமாகவேதான் தன்னே நன்னே நானே நன்னே
மெல்லியரும் தான்திரும்பி தன்னே நன்னே நானே நன்னே
மேகவர்ணப் புரவியரை தன்னே நன்னே நானே நன்னே
மெல்லி ஏழைகாத்தாள் வல்லடியை தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியாள் தான் வணங்கி தன்னே நன்னே நானே நன்னே
கம்பக்குடி முத்தையனை தன்னே நன்னே நானே நன்னே

கனகவல்லி நமஸ்கரித்து தன்னே நன்னே நானே நன்னே
கிழக்கு முகமாகதான் தன்னே நன்னே நானே நன்னே
கிழம்புகிறாளே ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
ஆங்காரவேல் சூலம் தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையும் கைப்பிடித்து தன்னே நன்னே நானே நன்னே
பூச்சக்கரகுடை மீதினிலே தன்னே நன்னே நானே நன்னே
வருகிறாரே பெரியம்பலம் தன்னே நன்னே நானே நன்னே
வாழ்வுநல்ல வரங்கொடுத்து தன்னே நன்னே நானே நன்னே
வளர்மதியும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
முருகன்பட்டி மண்டுவழி தன்னே நன்னே நானே நன்னே
முத்தம்மாளும் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
நாரணன் கரைவழியாய் தன்னே நன்னே நானே நன்னே
நாயகியும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
சேங்கைக்கரையோரம் தன்னே நன்னே நானே நன்னே
சிவகாமியவள் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
கோவில்பட்டி மண்டுக்குள்ளே தன்னே நன்னே நானே நன்னே
குலமகளும் வந்துவிட்டாள் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்தாள் எல்லைக்குள்ளே தன்னே நன்னே நானே நன்னே
ஈஸ்வரியும் வருகிறாளே தன்னே நன்னே நானே நன்னே
சுத்திநல்ல வலம்வந்து தன்னே நன்னே நானே நன்னே
சிவன்பாதம் தான்பணிந்து தன்னே நன்னே நானே நன்னே
சுத்து மதுக்கோட்டையையும் தன்னே நன்னே நானே நன்னே
சுற்றிவந்து ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே

வடக்குக்கோட்டை வாசல்வழி தன்னே நன்னே நானே நன்னே
வாழ்வரசி உள்புகுந்து தன்னே நன்னே நானே நன்னே
மூலஸ்தானம் உள்புகுந்து தன்னே நன்னே நானே நன்னே
முடிசூடிக்கொண்டு கொலுவிருந்தாள் தன்னே நன்னே நானே
யுக்திகெண்டு எழுதியவர் தன்னே நன்னே நானே நன்னே
முக்தி நல்ல பெறவேணும் தன்னே நன்னே நானே நன்னே
கிழக்குவானம் சூழ்ந்துவர தன்னே நன்னே நானே நன்னே
கிளம்புதங்கே மேகங்களும் தன்னே நன்னே நானே நன்னே
அரைநொடியில் மேகங்களும் தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையாள் வாசல்முன்பு தன்னே நன்னே நானே நன்னே
செவிட்டுநல்ல மேகங்களும் தன்னே நன்னே நானே நன்னே
செறியடித்து வருகுதங்கே தன்னே நன்னே நானே நன்னே
சக்திநல்லாள் வாசலிலே தன்னே நன்னே நானே நன்னே
சரமாரி பொழியுதங்கே தன்னே நன்னே நானே நன்னே
நாட்டிலுள்ள மக்களெல்லாம் தன்னே நன்னே நானே நன்னே
மனமகிழ்ந்து எல்லோரும் தன்னே நன்னே நானே நன்னே
உல்லாசமாகவே தான் தன்னே நன்னே நானே நன்னே
ஓடிவந்து வீற்றிருந்தார் தன்னே நன்னே நானே நன்னே
மீனாட்சி பட்டணமாம் தன்னே நன்னே நானே நன்னே
மாமதுரை மாநகரம் தன்னே நன்னே நானே நன்னே
ஏழைகாத்தாள் பட்டணமாம் தன்னே நன்னே நானே நன்னே
வீரபாண்டிய வெள்ளலூர் நாடு தன்னே நன்னே நானே நன்னே
அம்பிகையாள் ஆண்டிருக்கும் தன்னே நன்னே நானே நன்னே

அழகான வெள்ளலூர்நாடு தன்னே நன்னே நானே நன்னே
செல்வியவள் வாழ்ந்திருக்கும் தன்னே நன்னே நானே நன்னே
சிறப்பான வெள்ளலூர்நாடு தன்னே நன்னே நானே நன்னே
மாதமூன்று மழை பொழியும் தன்னே நன்னே நானே நன்னே
மகாராஜாக்கள் வாழும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
முப்போகம் விளையும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
மும்மூர்த்திகள் வாழும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
நீதிநெறியுள்ள நாடு தன்னே நன்னே நானே நன்னே
நியாயங்கள் வழங்கும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
சட்டதிட்டம் நிறைந்தநாடு தன்னே நன்னே நானே நன்னே
தாரணியில் மிகுந்தநாடு தன்னே நன்னே நானே நன்னே
அடைக்கலம் காத்தநாடு தன்னே நன்னே நானே நன்னே
அன்னைசக்தி வாழும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
வல்லடியான் வாழும்நாடு தன்னே நன்னே நானே நன்னே
வளமான வெள்ளலூர்நாடு தன்னே நன்னே நானே நன்னே
செல்வங்களின் நிறைந்தநாடு தன்னே நன்னே நானே நன்னே
சீருடைய வெள்ளலூர்நாடு தன்னே நன்னே நானே நன்னே
வீரணனம்பலம் ஆண்டிருந்த தன்னே நன்னே நானே நன்னே
வீரபாண்டிய வெள்ளலூர்நாடு தன்னே நன்னே நானே நன்னே
சிந்தையிலே நாம்துதித்து. தன்னே நன்னே நானே நன்னே
சிறப்புடனே வாழ்ந்திருப்போம். தன்னே நன்னே நானே நன்னே
மலையில் வாழும்மாயழகர் தன்னே நன்னே நானே நன்னே
மணிவண்ணன் வாழிவாழி தன்னே நன்னே நானே நன்னே

மதுரை வளர்மீனாட்சி தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் வாழிவாழி தன்னே நன்னே நானே நன்னே
மந்தைநல்ல கருப்பணனும் தன்னே நன்னே நானே நன்னே
மகாமுனிவர் வாழி வாழி தன்னே நன்னே நானே நன்னே
நாட்டைக்காக்கும் ஏழைகாத்தாள் தன்னே நன்னே நானே நன்னே
நாயகியும் வாழிவாழி தன்னே நன்னே நானே நன்னே
வள்ளலெனும் ஈஸ்வரனார் தன்னே நன்னே நானே நன்னே
வல்லடியார் வாழிவாழி தன்னே நன்னே நானே நன்னே
இசைசேர்த்து எழுதியவர் தன்னே நன்னே நானே நன்னே
என்னாளும் வாழிவாழி தன்னே நன்னே நானே நன்னே
ஆலதுபோல் தழைத்து தன்னே நன்னே நானே நன்னே
அருகதுபோல் வேரூன்றி தன்னே நன்னே நானே நன்னே
மூங்கில்போல் அன்னசுற்றம் தன்னே நன்னே நானே நன்னே
முசியாமல் வாழியவே தன்னே நன்னே நானே நன்னே
வாழிவாழி மகாவாழி தன்னே நன்னே நானே நன்னே
மாதுமையாள் தான்வாழி தன்னே நன்னே நானே நன்னே
சுபம்............... சுபம்............. சுபம்............

ஸ்ரீ ஏழைகாத்த அம்மன் துணை   ஸ்ரீ வல்லடிகார சுவாமி

வைந்தானை பாட்டு

முந்திமுந்தி விநாயகரே முருகநல்ல சரஸ்வதியே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய்
தொந்திநல்ல வயிற்றோனே தொப்பைநல்ல கணபதியே
அந்திமதி தனையனிந்த அரணார் தன்பாலகனே
பழிககிரங்கு சொக்கரோடே பாலகனே மால்மருகா
வழிக்கரையில் வீற்றிருக்கும் விநாயகனே
அத்திமுகவேதியனே அங்கையற்கண் புத்திரனே
சித்தி விநாயகனே சீர்பாதம் நான்மறவேன்.
மதுரை வளர்மீனாட்சி மலரடியை தான்நினைத்து
சிந்தைதனில் தான்துதிக்க செல்வம் வளர்ந்திடுமே
ஆதியந்த பரஞ்சோதி அடியேன்சொல் தான்கேட்டு
தீதில்லாமல் எந்நாளும் தீர்க்கமுடன் காத்தருள்வீர்
வாழையந்த ஏழைகாத்தாள் வாக்கிலேதான் அனுதினமும்
செல்வமுடன் எந்நாளும் செம்மையோடு காத்திருப்பாய்
வல்லடியான் பேர்தனிலே வாகன தமிழுரைக்க
எல்லோருந் துணையாக எந்நாளும் காத்திருப்பீர்
சொற்பிழைகள் பொருள்குற்றம் துலங்குமற்ற பிழைகளையும்
என்னபிழை இருந்தாலும் எல்லோரும் தான்பொருத்து
சிறியோன்நான் உரைக்கும்மொழி பெரியோர்கள் தான்பொறுத்து
சரியாக நான்உரைக்க சரஸ்வதியே நீயருள்வாய்
வடகலை வேள்விநாடு வீரபாண்டிய நல்லூராம்
நல்லூரிலிருந்து வந்து நல்லவெள்ளலூர் சேர்ந்ததுவும்

வெள்ளலூரில் வந்திருந்து விதம்நாலாறு பத்தாகி
வள்ளளெனும் ஏழைகாத்தாள் மகிழ்ந்து குடியேற்றிருக்க
தெள்ளுதமிழ் ஏழைபங்காள் சிந்தைதனில் வந்துநிக்க
எல்லோரும் தான்வணங்கி இருக்குமந்த நாளையிலே
வல்லடியான் பிறந்ததொரு வாதுகளும் நானுரைப்பேன்
வள்ளளெனும் ஈஸ்வரனும் மாதுநல்லாள் ஈஸ்வரியும்
வெள்ளிமலை வாசமதாய் வீற்றிருக்கும் நாளையிலே
அந்நாளில் பார்ப்பரிஷி அரியதவஞ் செய்யவென்று
தன்னாசிதன் சதையை தானருத்து அக்னியில்
போட்டுமந்த மாமுனியும் பெருந்தபசு செய்ததினால்
ஆட்டுக்கலை நடனஞ்செய்த அரன்சிவனார் பார்க்கவென்று
வந்துநின்று மாமுனியை உனக்கென்ன வரவேணுமென்றார்
நந்திதனில் ஏறுகின்ற நாரிபாகன் தான்கேட்க
தொட்டஇடம் எறியவென்று கெட்ட முனிதான்கேட்க
திட்டமுடன் கேட்டவரம் சிவனாரும் தான்கொடுத்தார்
வரம்வாங்கிய மாமுனியும் வகையறிய வேணுமென்று
பரமசிவன் சிரசில்வைக்க பார்ப்ப ரிஷிகையெடுக்க
வெறுமைகொண்டு ஈஸ்வரனார் மேலோகம் ஓடினாராம்
அருமைகெட்ட மாமுனியும் அவனுமங்கே பின்தொடர
ஓடியோடி இருவருமாய் லோகமெல்லாம் விசாரப்பட்டு
கோவிந்தன் மைத்துணரும் ஓடிவந்தார் பூலோகம்
ஆனையுரித் தானுமங்கே ஐவரளி செடிலொளிந்தார்
செய்வதினி என்னவென்று தேடயிலே மாமுனியும்
பண்டாரம் படும்பாட்டை பாரளந்தார் தானறிந்து

கன்றாலே விழாவெறிந்த காயாம்பு தானறிந்து
பார்ப்பரிஷி ஈஸ்வரனை பார்த்தோடும் வழிக்கெதிராய்
அற்புதமாய் மோகினிப்பெண் ஆகியந்த மாயவரும்
மாமுனிவன் தனக்கெதிராய் மோகினியாய் மாதவனும்
கோமுனிவன் ரதிதேவியோ கோபாலன் முன்னால்வந்து
இந்திராணி ரதிதேவியே ஈஸ்வரியோ லெட்சுமியோ
கந்தருடவள்ளி தெய்வானையோ கந்தர்வலோக கன்னிகையோ
இந்தஇடம் எழுந்தருள என்ன தவஞ்செய்தேனோ
சுந்தரியே உன்மேலே தொடுக்குதடி காமரசம்
சோடுடனே கூடிடவும் துலங்கி விளையாடிடவும்
காடுதனில் லீலைசெய்ய கனிவாக நீயுரைப்பாய்
நயந்துமுனி தானுரைக்க நல்லதொரு மாதுரைப்பாள்
ஜெயம்பொருந்தும் மாமுனியே செடிவனத்தில் நீதிரிந்து
காய்கிழங்கு சருகுவகை கறிபுசித்த புலால்நாற்றம்.
தெய்வத்துக் கங்கைதனில் தீர்த்தமாடி வாருமென்றாள்
பெண்ணுரைத்த மொழிப்படியே பேதைமுனி நீர்தேட
கண்ணெதிரே நீர்தானும் கறியமால் தான்மறைத்தார்
நொந்துருகி மாமுனியும் நோக்கியே மாதருகில்வந்து
சந்திரனே பழித்தபூவை கங்கையெங்கும் ஜலம் காணோமென்றார்
காமுமுற்ற முனியுரைக்க காமனையீன்ற பெண்ணுரைப்பாள்
கோமாவின் குளம்படிநீர் குளித்துநீராடி வாருமென்றாள்
செப்பிடவே மாமுனியும் மான்குளம்படி நீர்தான்தொட்டு
அப்பிடவே தன்முடிதனிலே அனலாகயெரிந்து சாம்பலானான்
எம்பெருமாள் தன்வடிவாகி ஈசனிடம் வந்தவாறே

உண்ணும்பிச்சை வாங்கியுண்ட உமையவள் தன்கணவரிடம்
பண்டாரமே பரதேசியே கண்டோர்கேட்ட வரம்கொடுக்கும்
அண்டரண்ட பிரம்மாண்ட ஆண்டியே வெளிவாருமென்றார்
தாதர்உரைத்த மொழிகேட்டு தாராளன் ஈஸ்வரனும்
பூபால மாதவனே பூதநாதன் தான்தழுவி
வரம்பெற்ற பார்ப்பரிஷி மடிந்தானென்றார் மாயவனால்
திரிபுர தகனஞ்செய்த சிவனாரும் மனமகிழ்ந்து
சகலமுமேளரிய வரம்பெற்ற சன்டாாளனமா முனியும்
சாம்பலாக எரிந்த விதம் புவனளந்தோன் நீயுரைப்பீர்
மான்மருகோன் தான்கேட்டு மாமுனிக்கு பெண்ணதுபோல்
ஆனந்தம் கொஞ்சுரதும் அழகுகள் மிஞ்சுறதும்
கண்டு மந்த அரனாரும் காமவெள்ளமே பெருகி
அண்டமதிலே விழுகவந்த ஆகிவரும் விந்துதனை
பஞ்சவர்க்கு தூதுசென்ற பச்சைமுகில் தானறிந்து
மைத்துனரின் விந்துதனே வலதுகையில் ஏந்தினாராம்
குந்தியுரல் கட்டுண்ட கோபாலன் கைதனிலே
கையனாராய் தான்பிறந்து கனகவரம் வாங்கினராம்
அய்யனாராய் வரம்வாங்கி வையகத்திலிருக்க வென்று
கம்பக்குடி வந்திறங்கி கணத்தவரம் வாங்கினாராம்
தெம்புடனே வேட்டையாட சிவபாலன் குதிரைஏறி
கந்தர்மலை தோகைமலை கைலைமலை விராலிமலை
சொந்தமென்ற அழகர்மலை சோலைமலை நாகமலை
விந்தகிரி கரந்தமலை மேருகிரி பிரான்மலையும்
அந்தவனத் திருமலையும் அன்புடனே வேட்டையாடி

எண்ணப்பட்ட மலைகள்வனம் எங்குமேதான் வேட்டையாடி
வண்ணமுள்ள வெள்ளமலை வந்துமே வேட்டையாடி
காடுவனம் நதிக்கரையும் காவனமும் பூஞ்சோலை
நாடிருக்கும் வளப்பமதை நன்றாகத்தான் பார்த்து
வேட்டையாட வந்தவிடம் வெள்ளலூரை காக்களன்று
அஸ்ட்டதிசை புகழும் அரன்பாலன் வீற்றிருந்தார்
வீற்றிருக்கும் வேலைதனில் மெல்லி ஏழைகாத்தாளுக்கு
பக்தர்கள்தான் மதுரைசென்று பழந்தேங்காய் பூகொண்டுவர
கெண்டுவந்த காவலரை குருக்கடியாய் தானடித்து
வன்டடெனும் வல்லடியான் வலுவந்தமாய் தான்பிடித்து
பிடுங்குமந்த வேலையிலே பின்தொடர்ந்த காவலர்கள்
அடங்காத மாயரூபி அம்பிகை ஏழைகாத்தாள்
தீவுநல்ல மதுரைசென்று சீக்கிரத்தில் பழம்வாங்கி
வாவென்று அனுப்பிவைக்க வலுவந்தமாய் பிடுங்கினீரே
ஆர் நீ தான் என்று கேட்க அப்போது வல்லடியான்
பேருமல்லோ வல்லடியான் போயுரையும் ஈஸ்வரிக்கு
தெளிவுடனே உரையுமென்று சீக்கிரத்தில் துரத்திவிட்டார்
வழிகூடி காவலர்கள் மாதங்கி ஈஸ்வரியை
அடிபணிந்து அழுதபடி அடியேன்சொல்லும் உரைகேளும்
படியளந்தார் தங்கையரே பாதைவழி வரும்போது
வல்லமையாய் பிடுங்கினீரே வல்லடியோ என்றுகேட்டோம்
வல்லடிதான் என்றுசொல்லி வழிமறித்து துரத்திவிட்டார்
கேட்டுமந்த மாதுமையால் கிலேசமெத்தப் பெரிதாகி
வாட்டுதல்போல் லோகமெலாம் மாதங்கியும் கோபமாகி

ஆங்காரமாய் வேல்சூலம் அம்பிகையும் கைபிடித்து
பாங்கான சேவுகரை பக்தர்களை வாருமென்று
சூலமும் கைசக்கரமும் தோகையரும் தூதருடன்
ஆலகாலம் பொங்கினாற்போல் அக்கினி சொரூபமுடன்
எரிதனலாய் வருகிரதை ஈஸ்வரனார்பாலன் கண்டு
சிரியோன்நான் செய்தபிழை பெரியோர்கள்தான் பொறுப்பீர்
பனிந்துமிகப் போற்றிநின்றார் பார்வதியை வல்லடியான்
அடைக்கலமாய் வந்தடைந்தேன் அம்பிகையே காருமென்றார்
சடைபிரம்மன் தேவி சொல்வாள் தயங்காதே என்பாலா
ஈரேழு பாருள்ளமட்டும் இந்தயிடம் நீஇருந்தால்
காக்கிறேனென்று வாக்களித்து கையோட கைதாருமென்றாள்
புஷம்நீட்டி கைபோட்டாள் பூவை ஏழைகாத்தவளும்
தாசாநீ வல்லடியான் தரும் வரங்களுந்தனுக்கு
மாசிநல்ல மாதத்திலே வரும் சுக்கிரவாரமதில்
தேசிகனே உந்தனுக்கு திருவிழா எனக்குமுந்தி
கன்னிநல்ல மாதத்திலே கனகமங்கள வாரமதில்
எண்ணவொண்ணா பெண்கள்வந்து எடுப்பார் மது எந்தனுக்கு
வானம்பூமி உள்ளமட்டும் மங்காமல் வெள்ளலூரை
நானும்நீயும் காப்போமென்று நடந்து கொலுவீற்றிருந்தார்
சத்தியம் தவறாமல் சாமியந்த வல்லடியான்
சிந்தைவைத்து வெள்ளலூரை சிறப்புடனே காக்கவென்று
நம்பியதோர் செம்புலியும் நல்ல திருமானுடனே
மாசிநல்ல மாதத்திலே வரும் சிவராத்திரியில்
தேசிகர்க்கு கலியாட்டம் சிறப்புடனே செய்யவென்று

எண்ணெய் கொதிநீராடி ஈஸ்வரருக்கு பூசைசெய்து
வெண்ணையுண்டோன் தனைநினைத்து வேட்டையாடவென்று கூறி
நாடுகளை தானெழுப்பி நாயனந்த வல்லடியான்
கூடவாரே நானுமென்று குலவைபோட்டு வேட்டையாடி
உரைத்திடவே வல்லடியான் உள்ளிட்ட நாடுகளும்
அரைக்கிசைந்த சல்லடமாம் ஆணகச்சை கங்கருவா
வளரிமரம் எரியீட்டி வாங்கு சமுதாடுடனே
களரிமெச்சும் அம்புவில்லும் கையில் பாதரட்கைகளும்
குத்தீட்டி குரட்டுக்கம்பு குண்டுடன் துப்பாக்கிகளும்
வெற்றிகொண்டு மீளுகின்ற வீர செந்நாய்களுடன்
பொரிமரைகள் புலிமரைகள் புள்ளிக்கரும் கோம்பைநாய்கள்
வாருகட்டு நாய்களங்கே வகைக்குவகை ஒருகோடி
வெண்டயங்கள் தானனிந்து வெள்ளிச்சலங்கை தான்பூட்டி
சுண்டுவிரல் கட்டமுது தூக்கியவ ரெல்லோரும்
ஆராறு கூட்டமென்று அகமகிழ்ந்து சொல்வேனான்
சீரான வெள்ளலூரை சேர்ந்ததொரு அம்பலங்கள்
மண்டலத்தில் மூண்டவாசி மகிழ்ந்ததொரு வேங்கைப்புலி
அண்டியதோர் சமட்டியும் அருகிருக்கும் நய்க்கானும்
நாட்டிலுள்ள சாவடங்கி நல்லதொரு வெக்காலி
தேட்டமுள்ள சலுப்புலியும் திருமானும் செம்புலியும்
நண்டனும் கோப்பனுமே நட்போடுபூலான் மழவராயனும்
கற்புடைய பலகுடிகள் கதித்த இளங்கச்சிகளும்
வெள்ளுமந்த புவனமெல்லாம் வீரர்வந்து கூடினாரே
எல்லோம் வாருமென்றார் ஈஸ்வரனார் தன்பாலன்

தங்கவில்லுக் காரர்களை தயவுவைத்து சேவுகரை
அங்கமுங்க புரவிதனை அலங்கரித்து வாருமென்றார்
அப்போது காவலர்கள் ஆனதொரு புரவிதனை
ஜெயமுள்ள குதிரைதனை சிங்காரித்த விதம்கேளும்
தங்கத்தாலே சேனம்செய்து தகட்டங்கி தான்பூட்டி
மங்காமல் எந்நாடும் வைரமணி தான்பூட்டி
முத்தாலே கொப்பிவைத்து முகவிலாசந் தங்கத்தாலே
விஸ்தாரமாகவே தான் மேகவர்ணம் புரவிக்கு
என்னாளும் விளங்கவென்று இங்கிதமாய் அலங்கரித்தார்
நாலுகாலும் வீரதண்டை நவரத்தின சுட்டிகட்டி
கோலாகல மாகவேதான் கொண்டு வந்துவிட்டார்கள்
ஆதரித்து வல்லடியான் ஆபரணந் தானனிந்தார்
தூக்கிவைக்கும் கால்களுக்கு தும்பைப்பூ சல்லடமாம்
மண்டியிடும் கால்களுக்கு மாதுளம்பூ சல்லடமாம்
தாங்கிவைக்கும் கால்களுக்கு தாழம்பூ சல்லடமாம்
கச்சைகட்டி வில்லெடுத்து கதாயுதம் கைபிடித்து
பச்சைவட பீதாம்பரம் பாங்கான வல்லவெட்டாம்
நெத்திநல்ல பிறைதனிலே நீரணிந்து பொட்டுமிட்டு
முத்துநல்ல குல்லாவணிந்து முருகுகளும் தானணிந்தார்
காதில் கடுக்கனிட்டு கனையாளி தான்பூண்டு
ஆதித்தன் ஒளியதுபோல் அவர்மார்பில் பதக்கமிட்டு
தாழம்பூ மல்லிகைப்பூ சன்பகப்பூ மாலையிட்டு
காளையெனும் வல்லடியான் கைவளரி கைபிடித்து
வட்டமிடும் குடைபிடித்து வையகத்தோர் போற்றிசெய்ய

துள்ளும் புரவிமேலே சிங்கமெனத் தாவினாராம்
ஏறினாராம் குதிரைமேலே எமலோகம் தத்தளிக்க
வாருமென்று வெள்ளலூரை மாகாணங்கள் எல்லோரையும்
காரமலை கூட்டமென்று ரன்பாலன் முன்னடக்க
சூரணந்த வல்லடியானை துயர்ந்தனவே நாடுகளும்
தோட்டமதாய் காரமலை திரளாகத் தான்கூடி
கூட்டமுடன் நாடுகளும் கும்பலாகத் தான்கூடி
கும்பிட்டு குலவையிட்டு கொற்றவனே போற்றிசெய்து
தெம்புடனே வேட்டையாட செடிவனத்தில் புகுந்தனரே
காட்டைகளைத்து முரசுகொட்டி கடிநாயை ஊசலிட்டு
வேட்டையாடி செடிவனத்தில் விருதுசொல்லி மான்மறையும்
உடும்புமுயல் மயிலுடனே ஊசலிடும் பன்றியுடன்
நடுங்குமந்த புவனமெலாம் நாய்கள்விட்டு குதிரைவிட
கொம்புகளின் சப்தமங்கே கேட்கும்ஓசை வானம்வரை
வாக்குகளின் சப்தமங்கை மறிகடல்போல் ஓசையிட
வெடிமுரசு சப்தமங்கே இடிமுழக்கம் போலாக
அடிபடுதாம் கொம்புதப்பு ஆதிசேஷன் முடிநடுங்க
தாயைபிள்ளை தேடாமல் தான்கலங்கி ஓடுகையில்
வாயுவேகமாய் நாயைவிட்டு வாகாகமான் பிடித்து
அரிராமர் மருகோனை அடிபணிந்து எல்லோரும்
திருமாலின் மருகோன தென்டனிட்டு அனைவோரும்
பிரியமுடன் அனைவோரும் பெருவனத்தில் போகையிலே
காடுவனம் எல்லாம்அலைந்து காளைகள் மெத்தப்பசியாகி
ஆடுபுணல் நீர்தேடி அனைவோரும் போகையிலே

மாங்குண்டான் தனைக்கண்டு மயக்க வெகுதாகமுடன்
இங்கு வாருமென்று சொல்லி எல்லோரும் வந்திரங்கி
கட்டமுது தானவிழ்த்து தின்றுமவர் களைத்தார
கும்பிட்டு குலவைசெய்து கொற்றவனை போற்றிசெய்து
திரும்பியந்த வனந்தினிலே தீப்பாஞ்சான் செடிபுகுந்து
குருந்தடியில் வான்கோழி கூட்டமதாய் ஓடுகையில்
கண்டெளும்பி ஓடுகையில் காடை புறா கதுவாளி
குண்டுபடத் தான்வதைத்து கொற்றவனும் வல்லடியான்
செங்கதிரோன் இறங்குதற்குள் திருமலையில் வேட்டையாடி
கெங்கை தனில்நீராடி கெம்பீரமாய் நாட்டாரும்
வீரமுள்ள வெள்ளலூரில் விதமுடனே வந்திரங்கி
சீருடனே மந்தைதனில் சிறப்பாக கூடினாரே
கொண்டுவந்த பன்றிமுயல் கோழிமுதல் மான்மரைகள்
துண்டுதுண்டாய் தானறுத்து துணிந்தவர்கள் கூறுமிட்டு
கண்டவர்க்கும் காணாதவர்க்கும் காரணத்தை தான்கொடுத்து
வண்டெனும் வல்லடியை மகிழ்ந்துமே கொண்டாட
வெள்ளலூர் மந்தைதனில் விதமுடனே கூட்டம்கூடி
கும்பிட்டு குலவையிட்டு கொம்புதப்பு வாத்தியங்கள்
துள்ளிதமாய் தான் முழங்க துதித்தவர்கள் கொண்டாட
வெற்றிலைகள் தானருந்தி வீற்றிருந்தார் நாடுகளும்
நய்க்கான் குலத்துதித்த நல்லதொரு சூத்தைதனை
முக்கியமாய் வரழைத்து முடிவணங்கி தெண்டனிட்டு
கமுகுவெத்திலை தான்கொடுத்து காரணமாய் அம்மானைதனை
சமூகமதிலே தான்உரைக்க நாடுகளும் தான்மகிழ்ந்து

சுக்கிர வாரந்தனில் சூழ்ந்த வெள்ளிக்கிழமையிலே
முக்கியமாய் நாள்சாற்றி மூணுஅஞ்சு நாள்வரைக்கும்
எண்னிப் பதினைந்துநாள் எமன்அணுகக் கூடாதென்று
எந்நாளும் மங்காமல் இன்பம்வைத்துக் காப்போமென்று
சந்ததங்கள் உண்டாக சாமியை சகலருமே
அன்னைதந்தை குழந்தைகளும் ஆனபல குடிகளெல்லாம்
ஆணும்பெண்ணும் சகலருமே அனைவோரும் ஒன்றாக
தேன்மொழிந்த மருகோனை சிந்தித்து போற்றிசெய்து
வண்ணமுள்ள நாட்டிலேதான் வைந்தானை அடிக்கவென்று
அண்ணமாரே தம்பிமாரே ஆனதொரு இளவட்டங்கால்
சத்திய கீர்த்தியனாம் சமர்த்தனெனும் வல்லடியான்
எத்தேச காலம்போலே எல்லோரும் வாழவென்று
கச்சைகட்டி சிலம்பனிந்து கையில்கம்பு தானெடுத்து
இச்சையுள்ள மந்தைதனில் எல்லோரும் போற்றிசெய்து
தானானே என்றுசொல்லி தானெடுத்து வயிந்தானை
நன்னானே என்றுசொல்லி நாடிருக்கும் மந்தையெல்லாம்
மந்தையனே காருமென்று ஏழைபங்கை தான்துதித்து
ஆடலும் பாடலுமாய் அடிபணிந்து தினந்தினமும்
நாடுகள் முழுவதுமே நன்றாகக் கொண்டாடி
வள்ளலுட கந்தனையும் மறவாமல் கொண்டாடி
வெள்ளலூரை சேர்ந்ததொரு விதமான பட்டியெல்லாம்
பக்திவசு வாசமதாய் பனிந்து பதினைந்துநாள்
சித்தம்வைத்து காருமென்று தினதினமும் சிறப்புடனே
எண்ணிப்பதினைந்தாம் நாள் ஏற்ற வெள்ளிக்கிழமைதனில்

வண்ணமுள்ள திருவிழாவாம் வகையுரைப்பேன் கேட்பீரே
இருக்குமய்ந்து மாகாணம் இதைச்சேர்ந்த ஊர்பலவும்
பதினோரு கரைதனிலே பார்த்தமைத்த அம்பலங்கள்
இருபத்தியிரண்டு அம்பலங்கள் இளங்கச்சிகள் பலகுடிகள்
பிறநாட்டார் எல்லோரும் பிரியமுடன் தான்கூடி
நாடுகளு மேலெழும்பி நல்லமேள தாளத்துடன்
ஆடும்சிவன் பாலன்வாசல் அனைவோரும் தான்கூடி
வம்பனூட வாசல்வந்து வல்லடியை போற்றிசெய்து
அம்பலங்கள் பலகுடிகள் ஆளான பெரியம்பலம்
மூண்டவாசி தனையழைத்து முக்கியமாயஒரு பானைவைத்து
ஆண்டவனைப் போற்றிசெய்து அனைவோரும் பணிந்து நிற்க
உச்சிநல்ல பானைபொங்கி ஒத்தக்கிடாய் தானும்வெட்டி
பச்சைகளும் தான்பரப்பி பழந்தேங்கய் தான்சாற்றி
கர்த்தனெனும் ஈஸ்வரனும் காளை பெரியகருப்பனையும்
சித்தனெறும் ஆண்டிஎனும் சீர்பெருகும் காசிஎனும்
மூவேழு இருபத்தொன்று மூர்க்கமுள்ள தெய்வத்திற்க்கும்
காவுடனே செம்புலியும் கனமாக பொங்கலிட்டு
பலவிதமாய் படையல்செய்து பணிந்தநின்று எல்லோரும்
தேவையான பேர்களெல்லாம் செல்வமுடன் பின்னாலே
ஆண்டவனார் வல்லடிக்கு அவரவர்க்கு தக்கதுபோல்
வேண்டியதாய் பொங்கலிட்டார் விதவிதமாய் பேர்கள்லட்சம்
பொங்கலுக்கு ஒருகுட்டி விறகாலே தானடித்து
வண்ண லட்சம் பொங்கலிட்டு வணங்குகிறார் எல்லோரும்
பொன்னான கதிரோனும் போய்மறைந்து நிலாவறிக்க

காளையார்கோவில் விளக்கெரிய கணகதப்பு தான்முழங்க
ஏழைகாத்தாள் வல்லடியான் ஏற்றதொரு தெய்வமெல்லாம்
கொட்டுநல்ல முழக்கமதை கூத்தாடும் மகத்துவத்தை
மெட்டாக வல்லடியான் மேகவர்ணப் புரவிஏறி
வைந்தானை அடிகின்ற மகத்துவத்தை வல்லடியான்
சயனித்து குதிரைமேல் சாய்ந்திருந்து பார்க்கிறாராம்
ஆகாச வானங்களும் அந்தரமாய் போய்ச்சுழல
ஏகச்சக்கர வானங்களும் இடிவானம் புதைவானம்
நட்சத்திர வானங்களும் நலமுடைய தேர்வானம்
உச்சிதப்பூ பொரிவானம் ஒளிமிகுந்த மத்தாப்பூ
நிலைச்சக்கரம் கலைசக்கரம் நேர்த்தியான மூஞ்சுருவானம்
பலதினுசாய் வெடிகோடி பானங்களும் விடுகிறதை
சாம்பசிவன் புத்திரனார் சாய்ந்திருந்து பார்க்கிறார்பார்
சாம்பிராணி வாசங்களும் சதங்கை கொஞ்சும்சத்தங்களும்
சிலம்புகச்சை ஓசைகளும் சீருடைய தண்ணீர்பந்தல்
சல சலவெனெ சப்தமிடும் தாங்காத உண்டியலும்
பூக்கடைகள் பொரிக்கடைகள் பூசும் நல்லவிபூதிக்கடை
எள்விழுந்தால் எடுக்கவொண்ணா எண்ணற்ற மானிடர்கள்
தள்ளுமுள்ளு நெருக்கமதாய் தான்துதிப்பர் ஒரு லட்சம்
கடலேறிப் போனவர்கள் காசுபணம் தான்தேடி
உடலோடு உயிரா வருக உதவிசெய்ய வேணுமென்று
மாதத்தில் மூன்றுமழை வருஷத்தில் முப்போகம்
தேசமதிலே விளைய திருவருள் செய்ய வேணும்
தலையிடியும் வயிற்றுவலி சளிதோஷம் குளிர்காய்ச்சல்

மல்லான பான்டிருமல் வரக்காசம் கொக்கிருமல்
பீனிசம்குட்டம் வெள்ளை பிள்ளியேவல் சூனியமும்
சன்னிமேக மூளைகாய்ச்சல் சயரோகம் நீரழிவு
கண்டமாலை கண்ணப்புற்று கண்திஸ்ட்டி நாவேறு
அண்டாதம் பலபிணிநோய் ஆண்டவனே உனைநினைத்து
வினைதீர்த்து ஆண்டருளும் வீரணனே நீவல்லடியான்
வழிவழி வம்சமதாய் வல்லடியே காருமென்று
தெளிவுடனே பல பேர்கள் சிந்திப்பார் கோடிலட்சம்
ஆங்காலன் புத்திரர்க்கு அபிஷேகம் ஆகுதுபார்
பால்பழமும் பள்ளயமாம் பசுவநெய் சர்க்கரையாம்
உடைத்து நல்லதேங்காயும் உற்றநீரும் தான்தெளித்து
அடுக்குமூனு அஞ்சேழு அகிலதீபம் பார்கிறார்பார்
சாம்பிராணி கற்பூரம் சாற்றுகிறார்பார் மூண்டவாசி
எம்பிரானே காருமென்று எல்லோரும் பணிந்துநிற்க
அன்றிரவு முடிந்துமங்கே அலேகதிரோன் வந்துதிக்க
சென்றுகூடி நாடுகளும் ஈராறு கரையுலுள்ளோர்
காலையது சனிக்கிழமை கணிதமுள்ள மணிபத்துதனில்
தேர்ஏறி பவனிவர சிறப்புடைய வல்லவர்க்கு
சட்டத்தேர் தான்செய்ய தானிணைந்து நாடுகளும்
சந்தனஇலப்பை மரத்திலே தான்செய்தார் தேர்ரதமும்
தேரினிலே ஜோடனைகள் சிங்காரமாய் அலங்கரித்து
இருபுரவி குதிரைகளும் இன்பமதாய் தானமைத்து
வண்ணமுள்ள தேரேறி வருகின்ரூர் பவனிசுற்றி
சிங்காரமாய் பவனிவந்து சிறப்புடனே கோவில்புகுந்து

அரகராஎன்று சொல்லி ஆராதானை பார்த்தபின்னே
பக்தியுடன்தான் வணங்கி பாலன்மைந்தன் சன்னதியில்
மண்காரணம் செம்புலிக்கு மதிப்பாகத்தான் கொடுத்து
கரைமாலின் படியேதான் கையில்தீர்த்தம் திருநீலு
சரமாலை சந்தனமும் தக்கதொரு பிரசாதம்
காரணங்கள் தான் வாங்கி கந்தனையும் போற்றிசெய்து
வண்ணலட்சம் பால்பொங்கல் வகைவகையாய் இட்டதெல்லாம்
எண்ணப்பட்ட பானையெல்லாம் எல்லோருந் தானெடுத்து
வல்லடியான் ஏழைகாத்தாள் மந்தை நல்லகருப்பனையும்
நல்லமழை பெய்யவேணும் நாடுகளும் செழிக்கவேணும்
சிந்தைதனில் எண்ணியவர் சேர்ந்தாரவர் இல்லமதில்
செந்தமிழை உரைக்கின்ற சிறுபாலகர்க்கு எந்நாளும்
கல்லாலே ஊழ்வினைதீர காத்தருளும் சிவ ஈஸ்வரியே
தோப்புலியை தான்படைத்த ஜோதிபராஸ்பரன் வாழியவே
ஆலிலைமேல் பள்ளிகெண்ட அச்சுதன் நான்முகனும்
வாழிவாழி என்றுசொல்லி வையகங்கள் ஈரேழும்
மந்தைநல்ல கருப்பணனும் மாமுனியும் வாழியவே
சுந்தரமாய் பாடுவார்கள் சூழ்ந்துகிளை வாழியவே
ஆலதுபோல் தான்தழைத்து அருகதுபோல் வேரோடி
மூங்கில்போல் தான்தழைத்து முசியாமல் தான்வாழி
வாழிவாழி என்றுசொல்லி வரமளித்தார் தான்வாழி

- திருச்சிற்றம்பலம் - சுபம்

பணமா? மனமா?

கொடுப்பதற்கு என்ன தேவை பணமா? மனமா? பணம் வேண்டும்தான். ஆனால் வசதி உள்ளவர்கள் எல்லாம் தானம் செய்வர் எனக்கூறமுடியாது. கொடுப்பதற்கு மனம் வேண்டும் அத்தகைய மனம் கொண்டவர்களை மனம் மகிழ்ந்து இவ்வுலகம் இசை பாடுகிறது.

அவ்வாறு வெள்ளலூர் நாடு சரித்திர நூல் அச்சிட்டு வெளியிட பணம் தானம் வழங்கிய வள்ளல் களை வாழ்த்துகிறோம் மற்றும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படி உதவிக்கரம் நீட்டிய உத்தமர்களின் உன்னதைப் பணியினாலேயை ஒப்பற்ற ஈகையாளராக என்றும் திகழ்கிறார்கள். அவர்களுக்கு, அவர்கள் செய்த தானம் மகிழ்ச்சியை மட்டுமா தருகிறது? மன நிறைவைத் தருகிறது: ஆத்ம திருப்தியைத்தருகிறது. மக்கள் மனதில் என்றும் வாழ்கிறார்கள். அப்படி நாமும் வாழ்வோம்!

நன்கொடை வழங்கிய நல்ல உள்ளங்கள்:

1. திரு.M.பெருமாள் அம்பலம் ரூ. 1.00.000/-
(நண்டன் கரை) கூட்டுறவு பட்டி
வல்லவன் செட்டிநாடு A/C ரெஸ்டாரண்ட் அரும்பாக்கம்
கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில், சென்னை
செல் : 98400 64586, போன் : 044 23634045, 23635827



2. திரு/திருமதி.M.ராஜேந்திரன் - லெட்சுமிராஜேந்திரன் ரூ.50.000/-
சிட்டன் வகையறா, சாயும்படைதாங்கி கரை, தம்பட்டமலைப்பட்டி
தலைவர் ஊராட்சிமன்றம், உறங்கான்பட்டி



3. திரு.AK.பூபதி அம்பலம் - ரூ.50.000/-
வேங்கைப்புலி கரை K.உசிலம்பட்டி,
V.மலம்பட்டி மாகாணம் (இ)தூத்துக்குடி





4. திரு,திருமதி.மா.ரகுபதி அம்பலம் - செல்வி ரூ.25.000/-
நரியன் வகையறா, செம்புலி கரை, குப்பச்சிப்பட்டி



5. திரு.P.M.நாராயணன் அம்பலம் - ரூ.25.000/-
திருமான் கரை, கள்ளராதினிப்பட்டி.

6. தெய்வத்திரு.மு.ம.மந்தக்காளை அம்பலம் - திருமதி.முத்தாயி அம்மாள் ரூ.25.000/-
குடும்பத்தினர், மகன்கள் மற்றும் பேரன், பேத்திகள்
சூறாவளி வகையறா, வேங்கைப்புலி கரை உறங்கான்பட்டி



7. திரு.க.பாண்டி ரூ.25.000/- (திருமான் கரை, கன்னிமார் பட்டி)
தலைமை நிர்வாக அதிகாரி (ஓய்வு) நீதித்துறை, தமிழக அரசு



8. திரு.பெ.மா.செல்வம் ரூ.25.000/-
செம்புலி கரை, சிவல்பட்டி, மலம்பட்டி மாகாணம்.
(இ) (திருச்சி மற்றும் மஸ்கட்)



9. திரு,திருமதி.சுடர்விழிசேதுபதி B.E., MBA., ரூ.25.000/-
திருமான் கரை, கன்னிமார்பட்டி (இ) துபாய்



10. திரு.P.ரவிச்சந்திரன் யாதவ் ரூ.25.000/-
த/பெ.பெருமாள் யாதவ் நயத்தான்பட்டி (இ) மதுரை
M/S.ராகுல் நோட்புக்ஸ், பள்ளி, கல்லூரி நோட்புக்ஸ்,
காலண்டர் தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள்
கொடிமங்கலம், திருமால்புரம் அஞ்சல், மதுரை - 14

11. திரு.வே.பார்த்திபன் B.Sc., ரூ.15.000/-
கட்டக்காளை வகையறா, நய்க்கான் கரை, உறங்கான்பட்டி



12. திரு.R.லோகநாதன் D.C.E., ரூ.10.000/-
வேங்கைப்புலி கரை, கூட்டுறவுபட்டி (இ) சிங்கப்பூர்



13. திரு.P.குமரேசன் B.E., ரூ.10.000/-
நண்டன் கரை, கூட்டுறவுபட்டி (இ) மஸ்கட்



14. திரு.R.V.முத்துகிருஷ்னன் B.E., ரூ.10.000/-
மூண்டவாசி கரை, தேவன்பெருமாள் பட்டி (இ) துபாய்



15. திரு.K.நீதிதயாளன் அம்பலம் (எ) ராஜா அம்பலம் ரூ.5.000/-
(மூண்டவாசி கரை) தலைமைக்காவலர் (ஓய்வு)
காவல்துறை ஏ.மலம்பட்டி

மகத்தான பங்களிப்பாளர்கள்

நிர்வாகிகள், வரலாற்று ஆய்வு மற்றும் பண்பாட்டு மையம், வெள்ளலூர் நாடு



ம.ராமையா அம்பலம்
உறங்கான்பட்டி,
வெள்ளலூர் நாடு



கி.கதிரவன் அம்பலம்
புலிமலைப்பட்டி,
வெள்ளலூர் நாடு



சுப.கிட்டு (எ) கிருஷ்ணன் அம்பலம்
குப்பச்சிப்பட்டி,
வெள்ளலூர் நாடு



நாட்டார்.
செ.வீ.ராஜ்குமார் அம்பலம்
கூட்டுறவுபட்டி, வெள்ளலூர் நாடு
செயலாளர், இராசராசன் கல்வி பண்பாட்டு கழகம்,
சிவகங்கை மாவட்டம்



கா.கந்தசாமி அம்பலம் BE.,
M/s Sakthi Erection &
Engineering Consultant,
உறங்கான்பட்டி, வெள்ளலூர் நாடு



இரா.மணிகண்டன் அம்பலம்
அல்லூர்,
ஆப்பிள் பிரிண்டர்ஸ்
மதுரை மற்றும் சிவகங்கை

வெள்ளலூர் நாடு வரலாறு நூல் சிறந்த முறையில் உருவாவதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும்தான் என்றால் மிகையாது. எப்படி எழுதப்போகிறேன் எவ்வாறு அச்சிட்டு வெளியிடப்போகிறோம் என்ற நிலையிலிருந்தவனை நாங்கள் இருக்கிறோம் என்ன உதவியோ, பணியோ நாங்கள் செய்து தருகிறோம் என்று ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு நம்பிக்கையை ஊட்டி என்னுடனே இவ்வரலாற்றுக்காக பயணம் செய்தவர்கள் என்று கூறி மட்டற்ற மகிழ்ச்சியடைந்து நன்றிகூறவும் அவர்களுக்கு காலங்காலமாக கடமைபட்டிருக்கிறேன்.



கட்டக்காளை மு. இராதாகிருஷ்ணன்
ஆசிரியர்